மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

தொலைநிலைக்கல்வி

பி.ஏ. (தமிழ்)

இரண்டாம் ஆண்டு

தாள் - III

இடைக்கால இலக்கியம்

DEC அங்கீகாரம் பெற்றது

w.w.w.mkudde.org

R 68

© பதிப்புரிமை : தொலைநிலைக்கல்வி

MKU C / 500 Copies - Sep. 2015

இளங்கலை இரண்டாம் ஆண்டு சிறப்புத் தமிழ்

தாள் : 3 இடைக்கால இலக்கியம்

பாடம் **பாடத்திட்ட விவரமும் பாடப் பகுப்பும்**

1. **தேவாரம் :** சுந்தரர் - திருவாரூர்ப் பதிகம், திருநொடித்தான் மலைப்பதிகம், திருப்புன் கூர்ப் பதிகம், திருநாகைக்கரோணம் பதிகம்.

2. **திவ்ய பிரபந்தம் :** குலசேகராழ்வர் - பெருமாள் திருமொழி

3. **சீவக சிந்தாமணி :** சுரமஞ்சரியார் இலம்பகம்

4. **கம்பராமாயணம் :** கும்பகர்ணவதைப் படலம்

5. **பெரிய புராணம் :** எறிபத்த நாயனார் புராணம்

6. **தேம்பாவணி :** வளன்சனித்த படலம்

7. **சீறாப்புராணம் :** நாட்டுப் படலம்

8. **நந்திக் கலம்பகம் :** முழுவதும்

9. **தமிழ் விடு தூது -** ”

10. **முக்கூடற் பள்ளு -** ”

[குறிப்பு: இடைக்கால இலக்கியம் என்ற இப்பகுதி ஏறத்தாழ கி.பி.6-ஆம் நூற்றாண்டு முதல் 18-ஆம் நூற்றாண்டு வரையிலான இலக்கியங்களை உள்ளடக்கியுள்ளது. இக்கால கட்டத்தில் எழுந்த முக்கிய இலக்கியங்களாகக் கொள்ளப்படுவன 1. பக்தி இலக்கியம் 2. காப்பிய இலக்கியம் 3. சிற்றிலக்கியம். இவ்வகையில் முதல் இரண்டு பாடங்கள் பக்தி இலக்கியம் பற்றியவை. அடுத்துள்ள பாடங்கள் சிற்றிலக்கியங்கள். இவ் இலக்கிய வரலாறு மிக நீண்டது ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல இங்குச் சில பகுதிகளே பாடத்திட்டத்தில் உள்ளன. இவை பற்றிய இலக்கிய வரலாற்றைக் கற்றால் இப்பாடப் பகுதியின் விரிவும் பரப்பும் விளங்கும்.]

பாடம் தொகுத்தவர் : **டாக்டர் இரா. காசிராசன்**
தமிழ்த்துறைத் தலைவர்

பாடம் எழுதியவர் : **டாக்டர் எபிநேசர்**
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி

1. சுந்தரர் தேவாரம்

நூற்குறிப்பும் ஆசிரியர் குறிப்பும்

நூற்குறிப்பு

தேவாரம் : தே+ஆரம் - தேவாரம், தே-தெய்வம், ஆரம்-மாலை. தெய்வத்திற்கு சூட்டப்படும் பாமாலை என்பது பொருள். தே+வாரம் - தேவாரம். தே-தெய்வம், வாரம் - இசைப்பாட்டு. தெய்வத்தின் மீது பாடப்படும் இசைப்பாட்டு. சைவத்திருமுறைகள் பன்னிரண்டு. அவற்றில் முதல் ஏழு திருமுறைகள் 'தேவாரம்' ஆகும். சிவபிராணை முழுமுதற்பொருளாகக் கருதி வழிபடுவோர் 'சிவனடியார்" எனப்படுவர். அங்ஙனம் வழிப்பட்டோரில் சிறப்புடையவர் அறுபத்து மூன்று நாயன்மார்களாவர். இவர்களிலும் தேமதுரத் தீஞ்சுவைத் தமிழ்ப்பாக்கள் பாடியோர் மேலும் சிறப்புக்குரியராவர். சமய குரவர்கள் நால்வர். அவர்கள் முறையே அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆவர். முன்னைய மூவரும் பாடிய பாக்களே தேவாரம்; மாணிக்க வாசகர் அருளியது 'திருவாசகம்'.

ஏழு திருமுறைகளைக் கொண்ட தேவாரத்தில், முதல் மூன்று திருமுறைகளை அருளிச் செய்தார். திருஞான சம்பந்தர். இவர் பாடிய பதிகங்கள் 16,000 என்றும், ஆனால் கிடைத்தவரை 384 மட்டுமே என்றும் கூறுவார் அறிஞர் (பத்துப்பாக்கள் கொண்டது ஒரு பதிகம் எனப்படும்) இவரது காலம் கி.பி. 7ம் நூற்றாண்டு.

4, 5, 6 - எனப்படும் மூன்று திருமுறைகளை அருளிச் செய்தவர் 'அப்பர்' என அழைக்கப்படும் திருநாவுக்கரசர். இவர் பாடிய பதிகங்கள் 4,900 என்றும் ஆனால் கிடைத்தவை 312 பதிகங்களே என்றும் கூறுவர் அறிஞர். இவரது காலமும், சம்பந்தர் காலமும் ஒன்றே (அஃதாவது கி.பி. 7-ம் நூற்றாண்டு).

ஏழாவது திருமுறையை அருளிச் செய்தவர் சுந்தர மூர்த்தி நாயனார் ஆவர். இவர் பாடிய பதிகங்கள் 38,000 என்றும், ஆனால் கிடைத்தவை 100 பதிகங்கள் மட்டுமே என்றும் கூறுவர் அறிஞர்.

தேவாரப்பாக்கள், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பெற்றவை. கல்நெஞ்சையும், கனிவிக்கும் தன்மை கொண்டவை. சிவபெருமானின் அருட்திறத்தை மட்டுமின்றி மக்கள் வாழ்வியலையும் எடுத்துக் கூறுபவை. இத்தேவாரப் பாக்களையும், திருவாசகம், திருமந்திரம் முதலானவற்றையும் திருமுறைகளாகத் தொகுப்பித்த பெருமை இராசராச சோழனுக்குரியது. அவனது வேண்டுகோட்கினங்க நம்பியாண்டார் நம்பி என்பார், சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' எனும் தேவாரத் திருத் தொண்டத் தொகையை அடிப்படையாகக் கொண்டு, திருமுறைகளைத் தொகுத்தருளினார். பின்னர்த் தெய்வச் சேக்கிழார் பாடிய 'திருத்தொண்டர் புராணம்' (பெரிய புராணம்) என்பதும் சேர்க்கப்பட்டுத் திருமுறை பன்னிரண்டாயின. சைவப் பெருமக்களால் நாள்தோறும் பாராயணம் செய்யப் பெற்று வருவன. இத் திருமுறைப்பாக்கள். சிவன் திருக்கோயில்களில் ஓதுவார்களால் பண்ணோடு இன்றும் பாடப்பெற்று வருவன!

ஆசிரியர் குறிப்பு

நமக்குப் பாடமாக வந்துள்ள பகுதி சுந்தரர் தேவாரம். அவரைப் பற்றிய குறி சுருக்கமாகக் காண்போம்.

திருக்கயிலாயத்தில் சிவபெருமானுடைய பிரதிபிம்பத்தினின்று தோன்றி, அப்பெருமானுக்கு திருத்தொண்டு செய்துவந்தார் ஆலால சுந்தரர். ஒரு நாள் மலா கொய்யச் சென்றபோது, உமாதேவிக்குத் திருத்தொண்டு செய்துவரும் அனிந்திதை, கமலினி எனும் இருவரைக் கண்டு காதல் மீக்கூந்தார். இதனை உணர்ந்த இறைவன், 'நீங்கள் மூவரும் தமிழகத்தில் தோன்றி இன்ப வாழ்வு மேற்கொண்டு பின்பு வருக' எனப்பணித்தனர். அவ்வாறே ஆலால சுந்தரர். நமது தமிழகத்தில் உள்ள திருமுனைப் பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவ அந்தணர் குலத்தில் சடையனாருக்கும் இசைஞானியார்க்கும் மகனாக அவதரித்தார். 'நம்பி ஆரூரன்' எனும் திருப்பெயர் தாங்கிய இவர், நரசிங்கமுனையரையர் என்னும் சிற்றரசரால் வளர்க்கப் பெற்றார்.

நம்பி ஆரூரக்கு உற்ற வயது வந்தது; புத்தூரில் வாழ்ந்த சடங்கவி சிவாசாரியார் என்பாரின் மகளை மணமுடித்து வைக்க ஏற்பாடு செய்யப்பெற்றது. திருமண நாள்! மணமேடையில் மணமக்கள் அமர்ந்திருந்த போது, ஆரூரரைத் தடுத்தாட்கொள்ளத் திருவுளம் கொண்ட இறைவன், ஒரு கிழவேதியராகத் தோன்றி, 'இந்த நம்பியாரூரன் எமக்கு அடிமை' என்று கூறி, அது குறித்த ஓலையும் தம்பால் உண்டு என்றான். அதனைப் பார்க்க அவ்வேதியன் பின்னே அனைவரும் சென்றனர். ஆனால் ஆண்டவனோ, கோயிலுக்குச் சென்று மறைந்து விட்டனன். பின்னர் இடபவாகனத்தில் ஆரூரருக்குக் காட்சி நல்கி, 'யாமே உன்னை தடுத்தாட்கொண்டோம். நம்மை வன்மை பேசியதனால் நீ இனி 'வன் தொண்டன்' ஆயினை! நமக்கு அருச்சனை பாட்டே யாதலால் தமிழ்ப் பதிகங்கள் பாடுக! எனப் பணித்தனன். உடனே இறைவனருளால் ஆரூரர், 'பித்தாபிறை சூடி' எனத் தொடங்கும் பதிகம் பாடினார். அதுமுதல் சிவன் உறையும் பல திருத்தலங்கட்கும் சென்று நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பி வரலானார்.

திருக்கைலையில் கமலினியாக இருந்தவர், திருவாரூரில், உருத்திர கணிகையர் புரிந்து வந்தார். அவரைக் கண்டு காதல் கொண்டு, திருமணம் செய்து கொண்டார். அவற்றே திருக்கைலையில் அனிந்திதையாக இருந்தவர், 'ஞாயிறு' என்ற ஊரில் வேளாளர் ஒருவரின் மகனாகச் 'சங்கிலியார்' எனும் பெயர் தாங்கி வாழ்ந்து வந்தார். இறைவன் திருவுளப்படிச் சங்கிலியாரைக் கண்டு காதல் கொண்ட நம்பியாரூரர் 'உன்னைப் பிரியேன்' என அப்பெருமாட்டிக்குச் சத்தியம் செய்து கொடுத்துத் திருமணம் செய்து கொண்டார். ஆனால் சத்தியத்தை மீறித் திருவாரூர் செல்லலானர். அதனால் கண்ணொளி இழந்து வருந்தலானார் சுந்தரர். இறைவன் அருளால் முதலில் ஊன்றுகோல் பெற்றார்; பின்பு காஞ்சீபுரத்தில், இடக்கண் ஒளி பெற்றார். பின்னர்த் திருவாரூர் சென்ற போது வலக்கண்ணொளியும் பெற்றார்.

நம்பியாரூரர், சங்கிலியாரை மணந்த செய்தி அறிந்த பரவையார், தம் கணவனை ஏற்க மறுத்து ஊடல் கொண்டார். வன்தொண்டர் வேண்டத் திருவாரூர் எம் பெருமான், பரவைபால் தூது சென்று ஊடலை நீக்கி இருவரையும் ஒன்று சேர்த்தார். இங்ஙனம் இறைவனையே ஏவல் கொண்டமை கேள்வியுற்ற ஏயர்கோன் கலிக்காம நாயனார்.

நம்பியாரூரர் மேல் சினங் கொண்டிருக்க, இவ்விருவரையும் நட்புக் கொள்ளச் செய்து ஆண்டவன் திருவுளம் கொண்டான். அதனால் கலிக்காமருக்குச் சூலைநோய் உண்டாயிற்று. அதனைத் தீர்க்க நம்பியாரூரர் வந்தார். 'இவரால் நோய் தீர்வதை விட இறப்பதே மேல்' என்று கருதிய கலிக்காமர் உடைவாளால் வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறந்தார். அது கண்ட நம்பியாரூரரும் வருந்தித் தமது உயிரையும் நீக்கத் துணிகையில் சிவபிரான், கலிக்காமருக்கு உயிர் தந்து இருவரையும் நட்புக் கொள்ளச் செய்தான்.

'முதலையுண்ட பாலகணைமீட்டது' முதலான பல அரிய செயல்களை இறையருளால் நிகழ்த்திச் சுந்தரர், இறுதியில் சேர வேந்தராகிய சேரமான் பெருமாள் நாயனாருடன் நட்புக் கொண்டு, திருவஞ்சைக் களத்தில் தங்கியிருந்தார். ஒரு நாள், திருவஞ்சைக் களத்துத் திருக்கோயிலில் சென்று, உலக வாழ்க்கையில் வெறுப்பு உண்டாயிற்று எனப் பதிகம் பாடினார். சிவபெருமான், சேவர்களோடு வெள்ளை யானை ஒன்றை அனுப்பித் திருக் கயிலாயத்திற்கு வரும்படி பணித்தான். வெள்ளை யானை மீதேறிச் சுந்தரர் செல்லச் சேரமான் பெருமாள் நாயனாரும் குதிரை மீது ஏறித் திருக்கயிலை சேர்ந்தார். பரவையாரும் சங்கிலியாரும் கைலை சென்று பண்டை நிலையில் தொண்டுகள் பூண்டொழுகினர்.

சுந்தரர் காலம் கி.பி. 8-ம் நூற்றாண்டு என்பர் அறிஞர். சுந்தர மூர்த்தி நாயனார் பாடிய பதிகங்களில் திருவாரூர்ப்பதிகம், திரு நொடித்தான் மலைப்பதிகம், திருப்புன்கூர்பதிகம், திருநாகைக் கரோணம் பதிகம் ஆகிய நான்கு பதிகங்களே இங்குப் பாடமாக அமைந்துள்ளது.

1. திருவாரூர்ப் பதிகம்

(கண்தாரீர் என வணங்கிப் பாடிய பதிகம்)

(குறிப்பு: சுந்தரமூர்த்தி நாயனார். திருத்துருத்தியிலிருந்து திருவாரூருக்கு எழுந்தருளிப் பரவையுண்மண்டளிப் பெருமானைப் பணிந்து, 'தூவாயா' எனத் தொடங்கும் திருப் பதிகம் பாடிப் பின்னர்த் திருமூலட்டானரை வணங்க அர்த்தயாம வழிபாட்டிற்குச் சென்றார். அப்போது, அடியார் கள் எதிரே வந்து தொழுதனர். ஆக்காலை 'குருகுபாய' எனும் திருப்பதிகம் பாடித் திருத்தேவாசிரியின் முன் வணங்கித் கோபுரத்தைக் கை தொழுது வணங்கினார். பின்பு, திருமூலட்டானம் சேர் பிஞ்ஞகனைக் கண்களாற் பருகுதற்கு 'மற்றைக் கண்தாரீர்' என வணங்கிப் பாடியருளியது இப்பதிகம்)

1. "மீளா அடிமை ..... வாழ்ந்து போதீரே!"

(பொ—ரை) திருவாரூரில் எழுந்தருளியுள்ள பெருமானிரே! உம்மையன்றிப் பிறரை விரும்பாமலே, உமக்கே என்றும் மீளாத அடிமை செய்கின்ற ஆட்களாகி, அந்நிலையினின்று சிறிதும் பிறழாதிருப்பர் அடியார்கள் அவர்கள், தாம்படும் துன்பத்தை வெளியே சொல்ல விரும்பாது, மூண்டெரியாது உள்ளேயே கனன்று கொண்டிருக்கும் நெருப்பைப் போல, மனத்திற்குள்ளேயே வெதும்பியிருப்பார். ஆனாலும் அவர்தம் வாட்டத்தை முகத்தின் மூலமாகவே ஏனையோர் அறிந்து விடுவர். அதன்பிறகும் அவர்களது துன்பம் ஒரு காலைக்கொருகால் மிகுந்து போகத் தாங்கமுடியாது. இறுதியாக உன்னிடம் வந்து வாய்திறந்து சொல்லிவிடுவர். அப்படிச் சொல்லியும் நீர் அதனைக் கேட்டும், கேளாதது போல் வாளாவிருப்பர்! இஃதே நும் இயல்பாயின், நீரே இனிதே வாழ்ந்து போமுன்!

குறிப்பு : இப்பதிகப் பாடல், தோறும், 'வாழ்ந்து போதீர்' என்று கூறியுள்ள தோழமை கருத்தக்கது.

2. "விற்றுக்கொள்வீர் ..... வாழ்ந்து போதீரே!"

[பொ—ரை] அடிகளே! நீர், என்னைப் பிறர்க்குவிற்கவும் உரிமையுடையீர்! ஏனெனில், யான் உமக்கு ஒற்றிக்கலம் [அடைமானம்] அல்லேன்! உம்மை விரும்பி உமக்கு ஒன்றும் ஆளாதல் தன்மையுட்பட்டேன். அன்றியும், யான் குற்றம் எதுவும் செய்ததில்லை. இப்படியிருந்தும் என்னை நீர் குருடனாக்கிவிட்டீர்! எதன் பொருட்டு என் கண்ணைப் பறித்துக் கொண்டீர்? அதனால் நீர் தாம் பழிக்கு ஆளானீர், எனக்குப் பழி எதுவுமில்லை. பலமுறை வேண்டிய பிறகு ஒரு கண்ணைத் தந்தீர். மற்றொரு கண்ணைத்தர உடன்படாவிட்டால், நீரே இனிது வாழ்ந்து போமின்!

3. "அன்றில் முட்டாது - வாழ்ந்து போதீரே!"

[பொ—ரை] அன்றிற் பறவைகள் நாள்தோறும் தவறாமல் வந்து சேரும் சோலைகள் சூழ்ந்த திருவாரூரில் எழுந்தருளியுள்ள பெருமானீரே! கன்றுகள் முட்டி உண்ணத்தொடங்கிய பிறப்பால் சுரக்கின்ற பசுக்களிடத்தில் பாலை உண்ணும் அக்கன்றுகள் போல, நாள்தோறும் தப்பாது பாடியே உம்மிடத்தும் பயன் பெறுகின்றனர் அடியார்கள். அத்தகையோர், பலநாள் பாடிய பிறகும் தங்கள் கண் காணப் பெறாது, குன்றின் மேல் முட்டிக் குழியினுள் வீழ்ந்து வருந்துவார்களாயின், நீரே இனிது வாழ்ந்து போமின்!.

4. "துருத்துயுறைவீர் ..... வாழ்ந்து போதீரே!"

[பொ—ரை] நீர் இருக்குமிடம் திருவாரூரே! எனினும், திருத்துருத்தி, திருப்பழனம் போன்றவற்றையும் ஊராகக் கொண்டு உறைகின்றீர். திருச்சோற்றுத் துறையையும் ஆட்சி செய்வீர்! ஆதலின் உமக்கு இடம் அடியவர்தம் மனம் எனல் பொருந்தாது. அதனால், உடம்பால் அன்புமிக்க அடியார்கள், தங்கள் துன்பத்தை உம்மிடம் வந்து சொன்னால் நீர்; அவர்கள் இப்பிறப்பில் வருந்துமாறு செய்வித்து, மறுபிறப்பில் தான் நன்மை செய்வீர் போலும், அப்படிச் செய்வதாயின், நீரே இனிது வாழ்ந்து போமின்.

5. "செந்தண் பவளம் ..... வாழ்ந்து போதீரே"

[பொ—ரை] எங்கள் தலைவரே! இது, செவ்விய, குளிர்ந்த பவளம் போலும் 'இந்திர கோபம்' எனும் வண்டுகள் தங்கும் சோலையையுடைய திருவாரூர்தானோ? [கண் ஒளி இழந்தமையால்] நன்கு காணமுடியாமல் தெளிவிலாதிருக்கின்றேன். உமக்கு அடிமைப்பட்டோர்க்குக் கிடைக்கும் பயன் இதுதானா? இசை வண்ணங்கள் பலவும் அமைந்த பாடல்களால் உம்மைப் பாடும் அடியார்கள், தங்கள் கண் காணப்பெறாது, உம்மிடம் வந்து, 'எம் பெருமானே! இது முறையோ? என்று சொல்லி நிற்றல் ஒன்று மட்டுமே இருக்குமானால், நீரே இனிது வாழ்ந்து போமின்!

6. “திணைத்தாள் அன்ன..... வாழ்ந்து போதீரே”!

[பொ—ரை] திணையின் தாள் போலும் சிவத்தக் கால்களையுடைய நாரைகள் திரண்டிருக்கும் திருவாரூரில் எழுத்தருளியிருக்கும் - முல்லை நிலத்தில் உள்ள கொன்றையினது மலரால் ஆகிய பொன்மாலை போலும் மாலையை அணிந்த திரிசடையுடையீரே! உம் அடியவர், தாம் பொருள் இல்லாமையால் மட்டுமின்றித் தங்கள் கண்காணப் பெறாது வருந்தி மனத்தினுள்ளே வாட்டமுற்றிருப்பதானால், நீரே இனிது வாழ்ந்து போமின்!

கருத்து: ‘பொருள் இல்லாமையால் வருந்தினும் பரவாயில்லை. கண்ணின்மையால் வருந்தும் வருத்தத்தைத் தீர்க்க வேண்டாவோ?” என்பதாம்.

7. “ஆயம் பேடை.....வாழ்ந்து போதீரே!”

[பொ-ரை] ஆண்பறவைகள், பெண் பறவைகளுடன் சேர்ந்து வாழும் சோலையையுடைய திருவாரூரில் எழுந்தருளியுள்ளவரே! எம் பெருமானே! உமக்கு அடிமைப்பட்டோருக்குக் கிடைக்கும்பயன் இதுதானோ? நீர், உம்மை மறவாத மனத்தை எனக்குக் கொடுத்தீர்; பின்பு ஒரு மாயத்தை உண்டாக்கி அது காரணமாகப் பிறவியில் செலுத்தி உடம்பைக் கொடுத்தீர். இப்படிச் செய்த நீர், இப்போது கண்ணை பறித்துக் கொண்டீர். நீரே இனிது வாழ்ந்து போமின்!.

8. “சுழியாய்க் கடலாய் ..... வாழ்ந்து போதீரே!”

[பொ-ரை] அடிகளே! யாம் இழிவில்லாத உயர்குலத்தில் பிறந்தோம்; ஆதலின் உம்மை ஒரு போதும் இகழாமல் ஏத்தித் துதிப்போம். கழியும், கடலும், மரக்கலனும், நிலமுமாய் இங்ஙனம் அனைத்திலும் கலந்து நிற்கும் உமது இயல்பைச் சொற்களாற் சொல்லிப் போற்றுவோம். அப்படியிருந்தும், எம்மை வருத்துவதாய் உமக்குப் பழி உண்டாதலை நினையீர். அதனால், உம்மைப் பாடும் அடியேமாகிய யாம், வழி தெரியாது அலைந்து வாழ்கிறோம். நீரே இனிது வாழ்ந்துபோமின்.

9. “பேயோடேனும் ..... வாழ்ந்து போதீரே!”

[பொ-ரை] திருவாரூரில் எழுந்தருளியுள்ள பெருமானிரே”! விரும்பப்பட்டது காயே என்றாலும், விரும்பிக்கைக் கொண்டால், அது கனிக்குச் சமமாகு மன்றோ? அதனால் உம்மைத் தவிரப் பிறரெல்லாம், பேயோடு நட்புக் கொண்டாலும், ‘பிரிவு’ என்பது துன்பம் தருவதே என்று சொல்லி அதனைப் பிரிய உடன்படார். ஆனால் நீரே, உமது திருவோலகத்தின் நடுவே நாய்போல முறையிட்டுத் திரிந்தாலும் உமக்கு ஆட்பட்ட அடியார்கட்கு வாய் திறந்து, ஒரு சொல் சொல்லமாட்டீர்! இதுரே உமது நட்புத் தன்மையாகுமானால் நீரே இனிது வாழ்ந்து போமின்!”

10. “செருத்தி செம்பொன் ..... வாழ்ந்து போதீரே!”

[பொ-ரை] திருமூலட்டானத்தைப் பொருந்தி இடமாகக் கொண்டவரே! இது, செருத்தி மரங்கள், தமது மலராகிய செம்பொன்னைச் சொரியும் திருவாரூர்தானோ?

இருத்தல், நிற்றல், கிடத்தல் முதலிய எல்லா நிலைகளிலும் உம்மை இகழாது துதிப்போமாகிய யாம், உம்மிடம் வருத்தமுற்று வந்து, ஒரு குறையை வாய்விட்டுச் சொன்னாலும், நீர் வாய் திறவாதிருப்பீராயின், நீரே இனிது வாழ்ந்து போமின்!

11. "காரூர் கண்டத்து ..... வாழ்ந்து போதீரே!"

[பொ-ரை] பலநூல்களும் ஆகிக் கருமை மிக்க கழுத்தையும், எட்டுத் தோள்களையும், மூன்று கண்களையும் உடைய, திருவாரூர்த் திருமூலட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் கச்சுப்பொருந்திய தனங்களையுடையவளாகிய உமாதேவியது பாகத்தைக் கொண்டவரே! இவ்வுலகில் உள்ள ஊரெல்லாம் அறியநீர், உமது திருவடிப் பெயரைப் பெற்ற நம்பியாரூரனாகிய எனது கண்ணைப் பறித்துக் கொண்டீர்! அதனால் நீர்தாம் பழியுட்பட்டீர். இனிநீர், இனிது வாழ்ந்து போமின்!.

2. திருநொடித் தான்மலைப் பதிகம்

(குறிப்பு: சுந்தரமூர்த்தி நாயனார், திருவஞ்சைக் களத்துப் பெருமானைப் பணிந்து, 'இவ்வுலக வாழ்வை நீக்குதல் வேண்டும்' என்று வேண்டினார். திருக்கயிலைப் பெருமான், 'நம் ஆரூரனை வெள்ளையானையில் ஏற்றிக் கொள்க' என்று அருளியவாறு தேவர்கள் திருவஞ்சைக் களம் வந்து நாயனாரை வணங்கி 'அருளிப்பாடு' எனப்போற்றி, 'ஏவல்' என்றனர். நாயனாரும் எதிரேற்றுச் சேரமான் பெருமான் நாயனாரை எண்ணியவாறே, வெள்ளானை மீதேறிச் செல்லச் சேரமானும் குதிரை மீதேறிவர வான் வழியே பாடிக் கொண்டே சென்று, திருக்கையிலையில் முடித்தருளிய பதிகம் இது. சுந்தரர் விரும்பிய படி, வருணனால் திருவஞ்சைக் களத்தில் இப்பதிகம் சேர்ப்பிக்கப் பெற்றது!)

1. "தானெனை முன்படைத்தான் ..... நொடித்தான்மலை உத்தமனே!"

(பொ-ரை) திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன், தானே முன்பு என்னை நிலவுகில் தோற்றுவித்தருளினன்; நோற்றுவித்த அத்திருக்குறிப்பினை உணர்ந்து அவனது பொன்போலும் திருவடிகளுக்கு அந்தோ, நான் எவ்வளவில் பாடல்கள் செய்தேன்! செய்யா தொழியவும் அப்புன்மை நோக்கி ஒழியாது என்னை அடியவர்களில் ஒருவனாக வைத்தெண்ணி வானவர்களும் வந்து எதிர்கொள்ளுமாறு பெரியதோர் யானை ஊர்தியை எனக்கு அளித்து எனது உடலோடு உயிரை உயர்வுபெறச் செய்தான் அவனது திருவருள் இருந்தவாறு என்னே!

2. "ஆனை உரித்தபகை ..... நொடித்தான் மலை உத்தமனே!"

(பொ-ரை) யான், கருவி கரணங்களை அறிவினால் அடக்கி, அறிவே வடிவாய் உள்ள தன்னை உள்கியிருந்ததலாகிய ஒன்றே செய்தேன்! அதற்கே, திருக்கைலை மலைக்கண் வீற்றிருந்தருளும் அம் முதல்வன் வானுலகத்தையே பெரிதாக மதித்துள்ள தேவர்கள் வந்து என்னை வலம்செய்து ஏற்றிச் செல்லுமாறு ஒரு யானை ஊர்தியை எனக்கு அளித்தருளினான். அஃது அவன் முன்பு யானையை உரித்ததனால் நிலைத்து நிற்கும் பகைமையை அடியேனால் நீங்கச் செய்து, அதற்கு அருள்பண்ணக் கருதியதனாலோ, அன்றி என்னிடத்து வைத்த பேரருளாலோ?

3. “மந்திரம் ஒன்றறியேன் ..... நொடித்தான் மலை உத்தமனே!”

(பொ-ரை) நெஞ்சே! அடியேன், மறைமொழிகளை ஓதுதல் செய்யாது, இல்வாழ்க்கையில் மயங்கி அடியவர் வேடத்தை மேற்கொள்ளாது அழகைத் தரும் வேடங்களைப் புனைந்து கொண்டு இவ்வாறெல்லாம் பொருந்தாதனவற்றையே செய்து வாழும் ஒரு தொண்டன்! எனக்கு திருக்கைலைமலைக்கண் வீற்றிருந்தாளும் முதல்வன் வெளியாகிய பரந்த வானத்திற் செல்லும் அழகுடைய யானை ஊர்தியை அளித்தருளியதும் என் தரத்ததோ?

4. “வாழ்வை உகந்த நெஞ்சே ..... நொடித்தான் மலை உத்தமனே!”

(பொ-ரை) உலக இன்பத்தை விரும்பிய மனமே!

பெண்டிரால் உண்டாகும் வலிய வினையாகிய குழியில் வீழ்ந்து அழுந்திக் கிடந்த என்னைத் திருக்கைலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன், அந்நிலையினின்றும் நீக்கித் தேவரெல்லாம் சூழ்ந்து அழைத்து வருமாறு ஆணையிட்டு என் நிலைக்குப் பெரிதும் மேம்பட்டதாகிய ஓர் யானை ஊர்தியை அருளித்து அருளினான். அவனது திருவருள் இருந்தவாறு என்னே!

5. “மன்னுலகிற் பிறந்து ..... நொடித்தான் மலைஉத்தமனே!”

(பொ-ரை) மண்ணுலகில் மக்களாய் பிறந்து நம்மைப் பாடும் பழவடியார் பின்பு பொன்னுலகத்தைப் பெறுதலாகிய உரையளவைப் பொருளை அடியேன் இன்று நேரிற் கண்டேன்’ என்று தன்பால் வந்து சொல்லுமாறு திருக்கலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன் தேவரும் கண்டு விருப்பம் கொள்ள ஓர் உடம்பை வெள்ளையானையின் மேல் காணச் செய்தான். அவனது திருவருள் இருந்தவாறு என்னே!

6. “அஞ்சினை ஒன்றி நின்று ..... நொடித்தான் மலை உத்தமனே!

(பொ-ரை) திருக்கைலை மலைக்கண் வீற்றிருந்தரும் முதல்வன் ஐம்புலன்களைப் பொருந்தி நின்று பூக்களைக் கொண்டு தனது திருவடியை அணுக அறியாத வஞ்சனையுடைத்தாகிய என் மனத்தின் கண்ணே வீற்றிருந்து எனக்கு இறப்பை நீக்கித் தேவர்களது கண்முன்னே என் நிலைக்குப் பெரிதும் மேம்பட்ட கொடியசினத்தையுடைய யானை ஊர்தியை அளித்தருளினான். அவனது திருவருள் இருந்தவாறு என்னே!

7. “நிலைகெட விண்ணெதிர ..... நொடித்தான் மலை உத்தமனே!”

(பொ-ரை) திருகைலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன். விண்ணுலகம் தனது நிலைகெடுமாறு அதிரவும், நிலவும் முழுதும் அதிரவும், மலையிடைத்திரியும் யானை மீது ஏறித் தனது திருமலையை அடையும் வழியே வருகின்ற எனக்கு எதிரே, அலைகடலுக்கு அரசனாகிய வருணன், பூக்களைக் கொண்டு யாவரினும் முற்பட்டு வந்து வணங்குமாறு, உடல் அழியாதே உயர்ந்து நிற்கும் ஒரு நிலையை எனக்கு அளித்தருளினன் அவனது திருவருள் இருந்தவாறு என்னே!

8. "அரவொலி ஆகமங்கள் ..... நொடித்தான் மனலை உத்தமனே!"

(பொ-ரை) 'அரகர' என்னும் ஒலியும், ஆகமங்களின் ஒலியும், அறிவுடையோர் அறிந்து பாடும் பாட்டுக்களின் ஒலியும், பல்வேறு வகையாகப் பொருந்திய வேதங்களின் ஒலியும், ஆகாயம் முழுதும் நிறைந்து வந்து, முன்னே வழிகாட்டிச் செல்லவும், ஏறத்தக்கதொரு முதன்மை நிறைந்த யானையைத், திருக்கைலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன் எனக்கு அளித்தருளினான். அவனது திருவருள் இருந்தவாறு என்னே!

9. "இந்திரன் மால் பிரான் ..... நொடித்தான் மலை உத்தமனே!"

(பொரை) திருக்கைலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வனாகிய எம் பெருமான், இந்திரன், திருமால், பிரமன், எழுச்சிமிக்க தேவர் ஆகிய எல்லோரும் வந்து என்னை எதிர்கொள்ளுமாறு, எனக்கு யானை ஊர்தியை அளித்தருளினான். திருக்கைலையில் மந்திரங்களை ஓதும் முனிவர்கள், 'இவன் யார்?" என்று வினவ 'இவன் எம் தோழன்! ஆரூரன் என அவனது திருவருள் இருந்தவாறு என்னே!

10. "ஊழிதொறூழி முற்றும் ..... நொடித்தான் மலை உத்தமனே!"

(பொ-ரை) ஆழ்ந்ததாகிய அரசனே! உலகம் அழியும் தோறும் உயர்வதும், பொன்வண்ணமானதும் ஆகிய திருக்கைலை மலைக்கன் வீற்றிருந்தருளும் முதல்வனைத் திருநாவலூரில் தோன்றியவனாகிய யான் இசைநூலில் சொல்லப்பட்ட ஏழாகிய இசையினையுடைய இனிய தமிழால், மிக்க புகழையுடையனவாகவும் கரும்பின் சுவை போலும் சுவையின் அடையவனாகவும், அப்பெருமானோடு ஒன்றுப்பட்டுப் பாடிய இப் பத்துப் பாடல்களையும் திருவஞ்சைக் களத்தில் வீற்றிருந்தருளும் பெருமானுக்கு நீ அறிவித்தல் வேண்டும்!

3. திருப்புன்கூர்ப் பதிகம்

[குறிப்பு: சுந்தர மூர்த்தி நாயனாரும், ஏயர் கோன் கலிக்காம நாயனாரும் திரும்புன்கூர் இறைவனைத் தொழுதனர். அப்போது சுந்தரர் பாடிய பதிகம் இது]

1. "அந்தணாளன் உன் அடைக்கலம் ..... திருப்புன் கூருளானே!

[பொ-ரை] வளப்பமான சோலைகளையுடைய திருப்புன் கூரில் எழுந்தருளியிருப்பவனே! முனிவன் ஒருவன் உன்னை அடைக்கலமாக அடைய, அவனைக்காத்தற் பொருட்டு, அவன் மேல் வந்த கூற்றுவனின் அரிய உயிரைக் கவர்ந்தவன் நீ! உனக்கு அடியேனாகியான் உன் ஆற்றலையறிந்துள்ளேன். என்னையும் எமதூதர்கள் வந்து, துன்புறுத்துவார்களானால், என் தந்தையாகிய நீ, இவன் என் அடியான்; இவனைத் துன்புறுத்தாதீர்? எனச் சொல்லி விலக்குவாய் என்ற எண்ணத்தினால் வந்து, உன் திருவடியை அடைந்தேன். என்னை ஏற்றுக் கொண்டருள் வாயாக!

கருத்து: கூற்றுவன், தன் உயிரைக் கவரவந்தபோது, மார்க்கண்டேய முனி சிவபெருமான் திருவுருவத்தை இறுகப்பற்றிக் கொள்ள, இறைவன் வெளிப்போந்து, ; காலால் காலனை உதைத்து, மார்க்கண்டேயருக்கு 'என்றும் பதினாறு' எனும் வரந்தந்த என்பது புராண வரலாறு.

2. "வையக முற்றும்.....திருப்புன் கூருளானே"!

[பொ-ரை] வளவிய சோலைகளையுடைய திரும்புன் கூரில் எழுத்தருளிருப்பவனே மழைப் பெய்யாமையால் வயலில் நீர் இல்லாததாயிற்று. எனவே இவ்வூர் மக்கள் நின்பா வந்து, 'மிக்க நிலங்களைத் தருவோம். எங்களை உய்யக் கொள்க' என்று வேண்டின தீயும் வெண்முகிலாய்ப் பரந்திருந்த நிலையை மாற்றி, எங்கும் பெருமழை பொழிய செய்தனை! ஆனால் பெருஉள்ளம் உண்டான பின்பும் மழை விடாதிருக்க, ஊர்மக்கள் 'இம்மழையைத் தவிர்ப்பின் மீண்டும் பன்னிரு வேலி தருவோம்' என்று வேண்ட அவ்வாறே நீயும் விடாது பெய்யும் மழையைத் தவிர்த்து இரண்டாவது முறையாக பன்னிருவேலி நிலம் பெற்றருளினை! இச்செயலை அறிந்துவந்து, அடியேன் நின் திருவடி அடைந்தேன் என்னை ஏற்றுக் கொண்டருள்வாயாக!.

3. " ஏத நன்னிலம் ..... திருப்புன் கூருளானே!"

[பொ-ரை] பூத கணங்கட்குத் தலைவனே! அழகிய சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே! பன்னிருவேலி கொடுத்தவர்களில் முதலாமவர் ஏயர் கோன் கலிக்காம நாயனார். அவர் அடைந்த பெரிய துன்பத்தை இப்போது போக்கினாய்! முன்பு பசுக்களது மடியில் நிறைந்திருந்த பாலைக் கறந்து உனக்கு நீராட்டினார். சண்டேசுவர நாயனார் இதனையறிந்த இவரின் தந்தை சினந்து, பாலினால் நீராட்டப் பெற்ற வெண்மணலால் ஆன நின்மேல் (சிவலிங்கம்) எற்ற. அது கண்ட சண்டேசுவரநாயனார், தன் தந்தையின் பாதங்களையே வெட்டினார். அத்தகைய நாயனாருக்கு, நின் முடிமேல் சூடியுள்ளக் கொன்றை மாலையைக் கழற்றிச் சூட்டி அருள் செய்தாய். அதனை அறிந்து, அடியேன் உன் பொன் போலும் திருவடியை அடைந்தேன். என்னைஏற்றுக் கொண்டருள்வாயாக.

4. "நற்றமிழ்வல்ல ஞான சம்பந்தன்.....திருப்புன் கூருனே!

(பொ-ரை) பொன்போலும் திரளாகிய அழகிய தாமரை மலர்கள் மலர்கின்ற பொய்கைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளிப்பவனே! நல்ல தமிழைப் பாடவல்ல ஞானசம்பந்தனும், நாவுக்கரையனும், நாளைப் போவானும், சூதாடுதலை. நன்கு கற்ற மூர்க்கனும், நல்ல சாக்கியனும் சிலந்தியும், கண்ணப்பனும், கணம்புல்லனும் எனும் இவர்கள், குற்றமான செயல்களைச் செய்யவும், அவைகளைக் குணமான செயல்களாகவே கருதிய உனது திருவுள்ளத்தின் தன்மையை அறிந்து வந்து. அடியேன் உனது ஒலிக்கின்ற கழலையணிந்த திருவடியை அடைந்தேன்; என்னை ஏற்றுக் கொண்டருள்வாயாக.

5. "கோல மால் வரை..... திருப்புன் கூருளானே"!

(பொ-ரை) வளவிய சோலைகளையுடைய திருப்புன் கூரில் எழுந்தருளியுள்ளவனே! தேவர்கள், அழகிய பெரிய (மேரு) மலையை மத்தாக நாட்டிக் கொடிய பாம்பை கயிறாகச் சுற்றி பாற்கடலைத் கடைந்து அதில் அமுதம் தோன்றாது. கொடிய நஞ்சு தோன்றியதைக் கண்டு, அவர்கள் பெரிதும் ஓடி வந்து அடைய அவர்கட்கு உதவக் கருதிக் கருமை நிறைந்த அக்கடல் விடத்தை உண்டு அமுது என்றும் நின்று விளங்குமாறு கழுத்திலே வைத்த பேரருளாளனே! நீ செய்த இச்செயலை அறிந்து வந்த, அடியேன் நின் திருவடியை அடைந்தேன். என்னை ஏற்றுக் கொண்டருள்வாயாக!

6. "இயக்கர் கின்னரர் ..... திருப்புன் கூருளானே"!

(பொ-ரை) வளவிய சோலைகளையுடைய திருப்புன் கூரிலே எழுந்தருளியிருப்பவனே! இயக்கரும், இன்னரரும், வருணனும், அக்கினியும், இயங்குகின்ற வாயுவும், சூரியனும், சந்திரனும், பசுக்களும் பிற தேவர்களும் அசுரர்களும், மற்றும் அறியாமை நீங்கின புலி, குரங்கு, பாம்பு முதலியனவும் உன் திருவடியை மறத்தல் சிறிதும் இன்றி வழிபட்டுப் பெற்ற அரிய திருவருளை அறிந்து அடியேனும் தடுமாற்றம் சிறிதுமின்றி உன் திருவடியை அடைந்தேன். என்னை ஏற்றுக் கொண்டருள்வாயாக!"

7. "பார்த்த நீள் செவி.....திருப்புன் கூருளானே!"

(பொ-ரை) தூயவனே! வளவிய சோலைகளையுடைய திருப்புன் கூரிலே எழுந்தருளியிருப்பவனே! நற்பொருள்களை உள்ளடக்கிய பெரிய செவிகளையுடைய முனிவர்களுக்கு முன்னொரு காலத்தே, சோலைகள் சூழ்ந்த ஆலமரத்தின் கீழிருந்து அறத்தைச் சொல்லியும், அருச்சுனனுக்கு அன்று பாசுபதம் கொடுத்தும், பகீரதன் வேண்டிக் கொள்ள அவனுக்காக ஆரவாரித்து வீழ்ந்த நீர் வடிவான கங்கையாளை உன் சடையில் வைத்து அடக்கியும் அருள் செய்தனை! அவற்றையெல்லாம் அறிந்து வந்து அடியேன் உன் திருவடியை அடைந்தேன். என்னை ஏற்றுக் கொண்டருள்வாயாக!

8. "மூவெயில் செற்ற.....திருப்புன் கூருளானே!"

(பொ-ரை) தேவ தேவனே! வளவிய சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளிருப்பவனே! நீ முப்புரத்தை அழித்த காலத்தில், அழியாது பிழைத்த அசுரர் மூவரில், இருவரை நின் திருக்கோயிலின் வாயிற்காவலராகும்படி பணித்தனை! மற்றொருவனை, நீ கரிந்த காடே அரங்கமாகக் கொண்டு, உமையவளை நோக்கி ஒப்பில்லாத பெரிய நடனத்தை மகிழ்ந்து செய்யும் போது, அழகிய மத்தளத்தை முடிக்கும்படி அருள் செய்தனை! இதனை அறிந்து வந்து, அடியேன் உன் திருவடியை அடைந்தேன்! என்னை ஏற்றுக் கொண்டருள்வாயாக!

9. "அறிவினால் மிக்க ஆறுவகைச்சமயத்து ..... திருப்புன் கூருளானே!"

(பொ-ரை) வளவிய சோலைகளையுடைய திருப்புன் கூரில் எழுந்தருளியுள்ளவனே! நூலறிவினால் மிக்க ஆறுவகைப்பட்ட சமயங்களில் உள்ள அவரவர்க்கும் அவ்வச்

சமயத்தில் இருந்து திருவருள் புரிபவன் நீ! அலை வீசும் பெரிய கடலிடத்து உள்ள இலங்கை அரசனாகிய இராவணனை அவனுக்கு அறிவு தோன்றுமாறு பெரிய மலைக்கீழ் வைத்து நெரித்தவன் நீ! பின்பு அவன் பாடிய, உய்யும் கருத்துக் கொண்ட பாடலின் இனிய இசையைக் கேட்டு அழகிய வாள் தந்து, நீண்ட வாழ்நாளையும் வழங்கியருளியவன் நீ! இத்தகைய நின் திருவருளை அறிந்து வந்து அடியேன் நின் திருவடியை அடைந்தேன் என்னை ஏற்றுக் கொண்டருவ்வாயாக!

10. "கம்பமால் களிற்றின் ..... திருப்புன் கூருளானே!"

(பொ-ரை) வளவிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே! அசையும் பெரிய யானையின் தோலை உடையவன் நீ; காமனை எரித்த ஒரு கண் உடையவன் நீ! இத்தகைய எம்பெருமானாகிய நின்னை வன்தொண்டனாகிய யான் மனத்தினால் விரும்பினேன். அவ்விருப்பத்தால் அரிய தமிழ்ப் பாடல்கள் பத்தும் இசைத்தேன்! (என்னை ஏற்றுக் கொண்டருள்வாயாக!) இப்பத்துப் பாக்களையும், பாட வல்லவர், நீங்குவதற்குரியவற்றை ஒழித்தவராவர். இது திண்ணம்.

4. திருநாகைக் காரோணப் பதிகம்

(**குறிப்பு:** சுந்தரர், திருவாரூரிலிருந்து திருநாகைக் காரோணத்திறைவரைத் தொழுது பொற்பூணும், மணிப்பூணும், நவமணிகளும், ஆடை, சாந்தம், குதிரை, சுரிகை, முதலியனவும் வேண்டிப் பாடியருளியது இப்பதிகம்)

1. "பத்தூர்புக்கு இரந்துண்டு ..... காரோண மேவியிருந்தீரே!"

(பொ-ரை) கடற்கரைக் கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளிப்பவரே! நீர், பல ஊர்களில் சென்று, பல பாமாலைகள் பாடி இரந்து உண்பீர்! அங்ஙனம் இரக்குங்கால், பிச்சை இடவரும் பாவை போலும் மகளிரோடு பொய்ச் சொற்கள் பேசிக் கரவு கொண்டு திரிவீர்! இறந்தவரது எலும்புகளை மேலே அணிந்து கொண்டு, எருது மேல் ஏறித் திரிவீர்! இவைகளைப் போலவே, உள்ள பொருளை மறைத்து வைத்து என் பொருட்டு ஒரு நாளும் மனம் இரங்காது, ஏதும் இல்லை என்பீர்! இவையெல்லாம் உமக்குச் சிறிதும் பொருந்தா! இப்பொழுதுயான் அணிவதற்கு முத்தாரமும், மேற்பட்டு விளங்குமாறு மாணிக்க வயிர மாலைகளும் ஆகியன தந்து, உடம்பிற் பூசிக் கொள்ள இதன் மணம் வீசும் கத்தூரி சந்தனம் முதலியனவும் நீர் தவறாமல் அணிந்தருள வேண்டும்!

2. "வேம்பினொடு ..... காரோணம் மேவியிருந்தீரே!"

(பொ-ரை) கடற்கரைக் கண் உள்ள திருநாகைக் காரோணத்தால் விரும்பி எழுந்தருளியிருப்பவரே! நீர் என்னைக் கசப்பான வேம்பினையும் தித்திப்புடைய கரும்பினையும் கலந்து உண்பித்து, நான், இங்கு உம்மிடம் எனக்குப் பிழைப்பை வேண்டிக் கொண்டிருக்க, நீர் என்முன் நில்லாது, திருத்துருத்தியில் புகுந்து அங்கே இருந்து விட்டீர்! இப்பொழுது உம்மைக் கண்டேன்! நீர், பாம்பும் விரிந்த சடைகளுமாகிய இவைகளைக் காட்டி என்னை வெருட்டிப் பெருமை அடைந்து விட நினைத்தால் நான் அதற்கு

உடன்படுவேனோ? மாட்டேன்! ஏனெனில் உம் பின்னே பலகாலும் திரிந்து விட்டேன். நீர்ச் சேம்பும், செங்கழு நீரும், குளிர்ந்த அகழியில் விளங்கும் திருவாரூரில் குடி புகுந்திருக்கும் தீவண்ண ராகிய நீர், இப்பொழுது எனக்குக் "காம்பு, நேத்திரம்' எனப்படும் பட்டாடைகளை அளித்தருளல் வேண்டும்!

3. பூண்பதோர் இளவாமை ..... காரோணம் மேவியிருந்தீரே!"

(பொ-ரை) விரிந்த சடையின்மேல் பாம்பையும், சந்திரனையும் வைத்த பெருமையுடையவரே! காண்பதற்கு இனிய மணிமாடங்கள் நிறைந்த நீள் தெருக்களையுடைய, கடற்கரைக் கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே! நீர், அணிந்த ஓர் இளைய ஆமை ஓட்டோடு, போர் செய்யும் எருது ஒன்றை ஏறி, விரும்புதல் இல்லாத வேடத்தை பூண்டு, எல்லோரும் காண, இசை பாடி, இறந்தோரது தலையில் பிச்சை ஏற்றலை ஒழியமாட்டீர்! அங்ஙனம் பிச்சை ஏற்குங்கால் பிச்சையைக் கொண்டோழியாது, வீண் சொற்களைப் பேசிப் பிச்சையிட வரும் மகளிரது வெள்வளைகளைக் கவர்வீராயின், மலையரையன் மகளாகிய உமா தேவி, மனம் பொறுப்பளோ? சொல்லீர்!

4. "விட்டதோர் சடை தாழ ..... காரோண மேவியிருந்தீரே!"

(பொ-ரை) கடற்கரைக் கண் வந்த திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளிப்பவரே! நீர் வீணாக அடிமைகளை வைத்துக் கொண்டீர்! மேலும் அவிழ்ந்துவிட்ட சடைகள் கீழே விழ, வீணை அழகுடையதாய் விளங்கத் தெருவில் விடைமீது ஏறிச் செல்வீர்! கொடிய பேய்கள் சூழ நடனமாடுதலை மேற்கொண்டு அழகுடையவராய், மாசற்ற பிறையை சூடுவது அழகோ? அன்றியும் வட்டமாக முடிக்கப்படுகின்ற நீண்ட கூந்தலையுடைய மகளிரை மயக்குவது தான் உமக்குப் பெரிய தவமோ? அல்லது பெருமையோ? இவை எப்படியானாலும் ஆகுக. எங்கள் துன்பமெல்லாம் நீங்கும்படி எங்கட்குப் பொற்கட்டியைக் கொடுப்பது எப்போது சொல்வீர்!

5. "மீண்டாடித் திரிதந்து ..... காரோணம் மேவியிருந்தீரே!"

(பொ-ரை) அழகரே! கடற்கரைக் கண் உள்ளதிருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே நீர், உமக்குத் தொண்டு செய்து திரியும் என்னை அடிமையாக ஏற்றுக் கொண்டும் அருள் பண்ணாது வண்கண்மை கொண்டு திரிந்தும், வெறுக்கப்படும் செயல்களைச் செய்தும் காரியக் கேடு பலவற்றைச் சொல்லியும் உம்மனம் வேண்டியவாறே திரிவீர்! உம்மை நான் எவ்வாறு அகப்படக் காணுதல் கூடும்? ஏனெனில் முன்பு உம்மை அங்ஙனம் யாரேனும் கண்டார் என்பதற்கு யாதேனும் பிராமணம் உண்டா? "கண்டோம்" என்பார்க்கும் அடிமுதல் முடி காணுதல் அரிதாம்படி நெருப்பாகியே நீண்டு நின்றீரல்லவா? அதனால் நும் இயல்பெல்லாம் விடுத்து, உம் கருவூலத்திலிருந்து நறுமணம், ஆடை, ஆபரணம் முதலியவற்றை நமக்கு அளித்தருள வேண்டும்.

6. "இலவவிதழ் ..... காரோணம் மேவியிருந்தீரே!"

(பொ-ரை) தோகை மயில்போலும் சாயலையுடைய மகளிர் நடனம் புரிகின்ற - செல்வத்தையுடைய கடற்கரைக் கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே! நீர் இலவம்பூப் போலும் இதழ் பொருந்திய வாயையுடைய உமையவளோடு எருதின் மேல் ஏறிக்கொண்டு, பூதங்கள் இசை பாடப் பலரும் இடும் பிச்சைக்கு, உச்சிப் பொழுதில் பல இல்லங்களில் புகுந்து திரிவீர், ஆயினும், நீர், அன்று தேவர்கள் வேண்ட அலைகடலில் தோன்றிய நஞ்சினை உண்டு அவர்கட்கு அருள் செய்தது. அவர்களது முறையீட்டைக் கேட்டு வாளாவிருக்காமல் கருணை மேலிட்டமையாலே! அங்ஙனமாக, இப்பொழுது எனக்குப் பாட்டும் சாந்தும் பணித்தருளாதிருக்கும் தன்மை என்ன வஞ்சகமோ?

7. "தூசுடைய ..... காரோணம் மேவியிருந்தீரே!"

(பொ-ரை) கடற்கரைக் கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளிருப்பவரே நல்லாடையை உடுத்த அகன்ற அல்குலையும், தூய மொழியையும் உடைய உமாதேவி, உம்பால் கொண்ட ஊடலை நீர் தொலைக்க முயன்றும், தொலையாதிருந்த காலத்தில், நீர் சொல்ல வந்தவன் போல, ஒளி பொருந்திய இலங்கைக்கு அரசனாம் இராவணன் உம் மலையைப் பெயர்க்க அவனை முதலில் தண்டிக்கப் பின்பு அவன் இசையினைப் பாட அவனுக்குத் தேரும் வாளும் கொடுத்தீர்! மேலும் பஞ்சத்தால் அன்புடைய அடியவர்கள் பசியால் வாடாதிருக்க அவர்கள் நல் உணவருந்தி இருக்குமாறு, மறையவர் நிறைந்த திருவிழிமிழலையின் நாள் தோறும் அன்று படிக்காசு அருளினீர்! அது போல, இன்று எனக்கு அருளல் வேண்டும்!

8. "மாற்றமேல் ..... காரோணம் மேவியிருந்தீரே"!

(பொ-ரை) கடற்கைக்கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே! யான் உமக்கு வழிவழியாக அடியேன் அதுவன்றி நீர் வலிந்து என்னை 'வாழ்விப்பேன்' என்று சொல்லி அடிமை கொண்டீர்! மிக்க செல்வம் உடையீர்! வறுமையுடையீரும் அல்லீர்! ஆயினும் மறுமொழி ஒன்றும் சொல்லாது வாய் வாளாதிருக்கின்றீர்! அழகிய திருவாரூரில் சேரும்படி நீர் சேர்த்து வைத்துள்ள மிக்க பொருட்குவியலில் எனக்கு வேண்டுவதாய் என் மனதில் மிகுதியாய்த் தோன்றும் மூன்று கூறுகளில் ஒருகூறு எனக்கு அளித்தருளல் வேண்டும். அதனோடு ஏறிப் போவதற்கு, காற்று வேகத்தில் செல்லும் நடையினை உடைய குதிரை வேண்டும்! இவைகளை அழியாது ஒழியின் அப்பால் அடியெடுத்து வைக்க முடியாமல், உம் திருவடிகளைப் பிடித்துக் கொள்வேன்.

9. "மண்ணுலகும் ..... காரோணம் மேவியிருந்தீரே"!

(பொ-ரை) கடற்கரைக் கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே! எம் பெருமானே! மண்ணுலகிலும் விண்ணுலகிலும் ஆட்சி உம்முடையதே நடைபெறுகின்றது. ஆதலின் நான் உம்மையும் தெளிய மாட்டேன். உமாதேவியாகிய மலையரையன் மகளையும், சிறுவனாகிய முருகனையும்

தெளியமாட்டேன். அளவின்றி உண்ணும் பெருவயிறன் கணபதி தன் உணவு தவிர வேறு ஒன்றும் அறியானாதலின் அவனிடம் நான் சென்று எதனை வேண்டுவேன்? உம்குடி முழுதும் இவ்வாறு இருத்தல் தக்கதோ? சொல்லியருளீர்! இப்பொழுது உறுதியாக என் உடலிற்குப் பிழைப்பைத் தார்ரேயாகில் உம் திருமேனி வருந்தும்படி கட்டிப்பிடித்துக் கொள்வேன். பின்பு, "இவன் கண்ணோட்டம் சிறிதும் இல்லாதவன்; கொடுமையாளன்' என்று என்னை வெறுத்துரைக்க வேண்டா!

10. "மறியேறு ..... காரோணம் மேவியிருந்தீரே!"

(பொ-ரை) மான் கன்று பொருந்திய கையை உடையவரே! தலைவரே! கடற்கரைக் கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே! நீர், பெருமை மிகவுடையீர்! மிக்க பொருட்குவைதருவேன்! என்று சொல்லி வழக்கில் வல்லீராய் என்னை ஆட்கொண்டீர் ஆனால் இப்பொழுது பொருள் இல்லீர் போல் வஞ்சனை பேசித் திருக்கீழ் வேளூரில் போய் தங்கிவிட்டீர்! உமது உறுதிமொழி எனக்கு உள்ளது என்றால் தான் உம்மால் வஞ்சிக்கப்படுவேனோ! படேன்! இலச்சினை பொருந்திய நல்ல அழகினைக் கொண்ட பொன்னால் ஆகிய உடைவாளும் தலையில் சூடும் பொற்றாமரைப் பூவும், பட்டுக் கச்சும் எனக்கு அளித்தருளவேண்டும். அன்றியும் முப்பொழுதும் கறியும் சோறும் நெய்யும் ஆகிய இவையும் வேண்டும்.

11. "பண்மயத்த ..... அமருலகு ஆள்பவரே!"

(பொ-ரை) அழகிய திருநாவலூரில் தோன்றிய நம்பியாரூரன் திருநாகைக் காரோணத்துப் பெருமானாரை அடுத்து நின்ற தன்மையால் அவரைக், "கடற்கரைக்கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே! இசையின் வண்ணமேயாய் உள்ள சொற்களையுடைய 'பரவை சங்கிலி' என்னும் இருவர்க்கும், எனக்கும் சார்பாய் உள்ள பெருமானே! யான் உம்மையன்றி வேறு யாரைச் சார்பாக உடையேன்? உமக்கு நெஞ்சறிந்த வண்ணமே பூண்ட அடிமையையுடையேனாகிய என் குறையை நீக்கியருல வேண்டும். ஒளி பொருந்திய முத்துக்களால் ஆக்கி அணிகின்ற மாலையும், ஒள்ளிய பட்டாடையும், பூவும், கண் நோக்கு நிறைந்த கத்தூரியின் மணம் கமழும் சந்தனமும் வேண்டும்" என்று வேண்டிப் பாடிய அரிய தமிழ்ப் பாடல்களாகிய இவைகளைப் பாட வல்லவர்கள், அமரர் உலகத்தை ஆள்வார்கள்.

வினா

1. சுந்தரர் கண்தானம் வேண்டிப்பாடிய பதிகப்பாடல் திறனை விளக்குக.
   (விடை: திருவாரூர்ப் பதிகம் - பாடல் 1-10)

2. திருப்புன்கூர் இறைவனைச் சுந்தரர் எவ்வாறு போற்றுகிறார்?
   (விடை: திருப்புன்கூர்ப பதிகம் - பாடல் 1-10 விளக்கம் பார்க்க)

3. சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கைலாயம் அடைய அருளிய பெருமானை எவ்வாறு பரவுகிறார்?
   (விடை: திருநொடித்தான் மலைப் பதிகம் - பாடல் - 1-10)

4. சுந்தரர் திருநாகைக் கரோண இறைவனிடம் வேண்டியவை யாவை?
   (விடை: திருநாகக் கரோணப் பதிகம்)

பெருமாள் திருமொழி

– குலசேகர ஆழ்வார்

சேர நாட்டை ஆண்ட மன்னர்களில் ஒருவர் குலசேகரர் ஆவர். இவர் திருமாலின் மார்பிலுள்ள கவுத்துவ மணியின் அவதாரமாகக் கேரள நாட்டுக் கொல்லி மாநகரில் தோன்றினார் என்பர். இளமையிலிருந்தே திருமால் பக்தியில் தலைசிறந்து விளங்கினார். இளமையிலேயே அரசுரிமையை வெறுத்துத் திருவரங்கம் சென்று திருக்கோயில் திருப்பணியில் அரசு புரிந்த காலத்திலேயே திருமாலையும் இவர் அடியார்களையும் பெரிதும் ஆதரித்ததார்.

திருமால் அடியவர்களாலேயே இவருக்கு உலகப்பற்றின்மை ஏற்பட்டது என்று கருதி அடியவர்களை இவர் அமைச்சர்கள் வெறுத்தனர். ஆதலால் அரண்மனை இரத்தின மாலையைக் கவர்ந்தவர்கள் என அடியவர்களை குற்றம் சாட்டிய போது பரமனடியார் அவ்வாறு ஒருபோதும் செய்யார் எனக் கூறிப் பாம்புக் குடத்தில் கையிட்டுச் சூளுரை செய்து அடியார் பெருமையை இவர் நிலை நாட்டினார். 'அவர்களுக்கே வாரம் கொடு குடப் பாம்பில் கை இட்டவன்' என்ற மணக்கால் நம்பியன் பாசுரத்தொடர் அந்நிகழ்ச்சியை விளக்கும்.

குலசேகரர் தம் காலம் எட்டாம் நூற்றாண்டின் இறுதி என்பர். ஒரு சமயம் ஒரு புராணிகர் இராமாயாணத்தில் கரன் வரலாற்றை விளக்கும் போது அப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்ச்சி என்று நினைத்து இராமனுக்குத் துணை புரிய இவர் வில்லேந்தி எழுந்தார் என்றும், இராமபிரான் தனியனாய்ப் போரிட்டுக் கரனைக் கொன்றார் என்று கூறிய அளவில் தம் வீராவேசம் அடங்கி அமர்ந்தார் என்றும் வரலாறு கூறும்.

இவர் பாடல்கள் 'பெருமாள் திருமொழி' என்னும் தலைப்பில் நாலாயிரதிவ்யப் பிரபந்தத்தில் காணப்படுகின்றன. இதில் 10 பதிகங்கள் உண்டு. அவை 105 பாசுரங்கள் ஆகும். இவை தவிர 'முகுந்தமாலை' என்ற நூலையும் இவர் அருளினார். இறைவனுக்கு அடிமைத்திறம் பூண்டு நிற்பதில் இவருக்கு வேட்கை மிகுதி. இவர் காட்டு மன்னார் கோயிலில் முக்தி பெற்றார் என்பர்.

பெருமாள் திருமொழி

குலசேகரர் பெருமாளாகிய இராமனிடத்தில் ஈடுபட்டு இராமனைப் பற்றிய பாடல்கள் பாடியிருப்பதால் இவருடைய திருமொழிக்குப் பெருமாள் திருமொழி என்ற பெயர் வழங்கலாயிற்று என்பர் ஒரு சாரார். பெருமாள் திருமொழியில் பெரிய பெருமாள் கண்ணன் அடியார். அரங்கன், வித்துவக் கோட்டம்மான் ஆகியோரெல்லாம் திகழ்கின்றார்கள். அதனால் குலசேகரர்க்குப் பெருமாள் என்ற சிறப்புப் பெயர் காரணமாகவே இவர் பாடல்கள் 'பெருமாள் திருமொழி' ஆயின; அதனால்தான் இத்திருமொழிக்கு உரை எழுதிய பெரியவாச்சான் பிள்ளை, குலசேகரைப் பெருமாள் என்னும் ஸ்ரீ குலசேகரப் பெருமாள் என்றும் எடுத்துக்கூறிப் பொருள் எழுதிச் செல்கின்றார்" என்பர் டாக்டர் தெ.பொ.மீ. அவர்கள் ('குலசேகரர்' ப.9)

திருமொழி என்பதற்கு **சிறந்த வார்த்தை** என்பது பொருள். பெருமாள் என்ற மறுபெயருடைய குலசேகராழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திவ்ய பிரபந்தம் என்பதே 'பெருமாள் திருமொழி' என்பதன் கருத்து ஆகும்.

முதல் திருமொழி – இருளிரிய என்ற பாசுரம் 1–11

பெருமாள் திருமொழியில் முதல் திருமொழி 'இருளிரிய' என்று தொடங்குவது ஆகும். குலசேகரர் திருவரங்கத் திருமாலினது அருளைப் பெறத் தம் அரசாட்சி தடையாக இருந்ததை உணர்ந்து அத்தடைகள் நீங்கித் திருமாலின் அருளையும் அவர்தம் அடியவர்களோடு கலந்துறையும் பேற்றினையும் ஒரு சேர பெற அப்பெருமாள் அருள் புரிய வேண்டும் எனத் துதிப்பதாய் இத்திரு மொழி உள்ளது.

இத்திருமொழியில் ஒவ்வொரு பாடலிலும் முதல் மூன்றடிகளில் திருவரங்கத்தே பள்ளி கொண்டருளிய திருமாலின் நிலையைப் படக்காட்சி போல் சித்திரிக்கிறார். நான்காம் அடியில் அத்தகையப் பெருமாளை 'என்று காண்பது' என்று வழிபடுவது' என வினவிக் காதலன் தன் காதலியைக் காண எத்தகு ஆவலோடு விரைந்து செல்ல எண்ணுவானோ அத்தகு விரைவு உணர்வுடன் இறைவனைக் காண விழைவது அவர்தம் ஆழ்ந்த இறையுணர்வைக் காட்டும்.

(1) திரு அரங்கம் என்ற பெரிய நகரில், இருள்சிதறுமாறு ஒளி விடும் மணிகள் விளங்கும் நெற்றியையும், சிறந்த புள்ளிகளையும் ஆயிரம் படங்களையும் உடைய நாக அரசனாகிய பெருஞ்சோதியாய் விளங்குபவன் அனந்தாழ்வன். அவ்வனந்தாழ்வானாகிய அழகிய வெண்ணிறப் படுக்கையில் பொருந்தி, தெளிந்த காவிரி தன் அலைக் கரங்களால் பாதங்களை வருட, பள்ளி கொள்ளும் கருமணியை கோமளத்தை என் இரு கண்கள் கண்டு களிக்கும் நாள் எந்நாளோ?

(2) மண மிகு கோயிலில் ஓராயிரம் வாய்களால் துதிக்கும் வெண்மையான உடலையுடையவனும், அழலை உமிழ்பவனும் ஆகிய ஆதிசேடன் கக்கியச் செந்தீயானது தலையில் அழிய மலர்களால் ஆன மேற்கட்டிப் போல விளங்கும். அதன் கீழே பாம்புப் படுக்கையில் பள்ளி கொள்ளும் காயாம் பூவின் மாலை போன்ற மாயோனைத் திருமணத் தூண்களைப் பற்றி நின்று வாயாரத் துதிக்கும் நான் எந்நாளோ?

(3) மாட்சிமையையுடைய பிரமன் தன் நான்கு நாவினால் துதித்து நான்கு முகங்களால் இனிதே ஏத்தி, எழில் கண்கள் எட்டினால் எல்லாப் பக்கமும் தொழிமாறு அமைந்த செவ்வியப் பொன்போன்றவன் திருமால் தாமரையுடைய கொப்புழ் விளங்க, அணி அரங்கத்துப் பாம்புப்படுக்கையில் பள்ளி கொள்ளும் அவன் திருவடியின் கீழ் மலரிட்டு அங்குள்ள அடியவர்களுடன் கூடி நெருங்கி வாழ்வது என்றோ?

நாவினாலும் முகத்தினாலும் ஏத்துதல் என்று வருவது, கூறியது கூறல்போல் உள்ளது. நான்முகனுடைய பாக்கியமே பாக்கியம் என்கின்ற மகிழ்ச்சியாலும் அவன்பேறு நமக்கு அரிது என்ற எரிச்சலாலும் சொல்லும் போது இவ்வாறு நிகழ்வதை உலகவழக்கில் காணலாம். திருமாலின் புகழை ஒத ஒரு நாப் போதாது. அதனால்தான் நான்கு நாவினையுடைய நான்முகன் புகழ்பாடுவதாக அமைக்கின்றார் குலசேகரர். நாற்பாலும் அவனை அழகைக் கண்டு பாட நான்கு முகங்களுடையானே பொருத்தமுடையவன்.

(4) குதிரை வடிவம் கொண்டு வந்த கேசியின் வாயைப் கிழித்து மகிந்தவனை கடல் போன்ற வடிவை உடையவனை என் கண்ணனை வலிய மலையைக் குடையாகத் தூக்கிப் பசுக்களைக் காப்பாற்றியருளின இடையர் தலைவனை, அமரர் தலைவனை தமிழ் மறை திருவாய் மொழி வடமொழியாம் இரமாயாணம் ஆகியவை போல் ஒப்புயர் வற்றவனும் உலகப் பற்று அற்றவர் பொருந்தும் கோயிலில் அரவு அணையில் பள்ளி கொள்பவனும் ஆகிய ஸ்ரீ ரங்கநாதனை நாக்குத் தடிக்கும்படி வாழ்த்தி என் கைகளால் பறிக்கப்பட்ட மலர்களைத் தூவி வணங்கும் நாள் என்றோ?

குதிரை வடிவில் வந்த கேசி என்ற அசுரனைத் திருமால் கொன்றமையம் இந்திரன் கல் மழை பெய்வித்த காலத்தில் கோவர்த்தன மலையைத் தூக்கிப் பசுக்களைக் காத்தமையும் புராண வரலாறுகள், அசுரனைக் கொன்றான் என நாம் அஞ்சி ஓடாதவாறு உருவிலும் அருட் செயலிலும் சிறந்தவன் என்பதை வலியுறுத்த முறையே கடல்போன்ற உருவினன், மலையைக் குடையாகக் கொண்டு பசுக்களைக் காப்பாற்றியவன் என்று புகழ்ந்தார்.

(5) இசை, இன்பம், தரும் தும்புரு, நாரதர் முதலியோர் யாழிசையால் ஏத்தவும், உந்திக் கமலத்தில் உதித்த நான்முகன் வணங்கி மறை நூலில் உள்ள துதிப்படால்களால், இடையறாமல் ஏத்தவும், மணிமாட மாளிகைகளையும், நிறைந்த செல்வத்தையும் சுற்றுப் பிரகாரங்களையும் உடைய கோயிலில் அரவணையில் பள்ளி நீல மணி நிற அம்மானை கண்டு என் மலர் சென்னி வணங்கும் நாள் என்றோ?

மதிள்: சுற்று பிரகாரங்கள் இசையின்பம் போல் இறைவன் இருப்பதால் அவ்வின்பத்தை தும்புரு, நாரதர் ஆகியோர் அவ் இறைவனிடம் கண்டனர்.

எம் மலருக்கும் முன் மலரும் கொப்பூழ் மலரில் அமர்ந்த மலரவன் தன் படைப்பாற்றலால் உலகப் பொருள்களையெல்லாம் அறிந்திருந்தும் இவனை அல்லால் வேறொரு பெரிய பொருளைக் காணவில்லை. ஆதலால் அவனும் போற்றுகின்றான். வலிய தலையைப் பூச்சூடி மென்மையாக்கி மலரினும் மெல்லிய இறையின் பாதங்களை வணங்க விரும்புவர்.

(6) வண்டுகள் படியும் தாமரை மலர்மேல் தோன்றிய பிரமனும் சிவனும், இந்திரன் முதலிய தேவர்களும், அரம்பையரும், தெளிந்த ஞான முனிவர்கள் குழுவும் முந்திக் கொண்டு எல்லாத் திசைகளிலும் மலர்களைத் தூவி வந்து சேரும் இடமான தேன்மலர்ச் சோலைகளுடைய கோயிலில் பாம்புப் படுக்கையில் ஏறிக் கண்வளரும். கடல் வண்ணனின் தாமரைக் கண்களையும் நிலவு போன்ற திருமுகத்தையும் கண்டு என் உள்ளம் உருகு நாள் என்றோ?

(7) கொடுமை மிகு மனத்தை ஒழித்து, வஞ்சனைகளை மாற்றிக் கொடிய இந்திரியங்களை அடக்கி துன்பப் பாரமாகிய பழவினைப் பற்றை அறுத்து ஐந்து காலங்களிலும் துதித்து அளவிறந்த பழைய நன்னெறியல் ஒழுகி அறநெஞ்சுடையவர்களுக்கு நிலைக்காளனாய் உள்ளவன். மாயோன் பொன்னி அரங்கத்து அரவு அணையில் பள்ளி கொள்ளும் அவனைக் கண்களால் கண்டு நீர் மல்கும் நாள் என்றோ?

இருமுப்பொழுது: ஐந்து காலங்கள், இது பஞ்சகாலங்கள எனப்படும். ஒரு பகற்பொழுதை ஐந்தாகப்பகுத்து அப்பொழுதுகளில் அவ்வற்றிற்குரிய ஒழுக்கங்களை மேற்கொள்ளல் பற்றி ஆகமங்கள் விளங்கும். இவ்வொழுக்கங்களை மேற்கொள்பவர் பஞ்ச கால பாராயணர் எனப்படுவர். ஐம்புலன்கள் விரும்பும் 'கண்டு கேட்டு உண்டு உயர்த்து உற்றறியும்' இன்பமெல்லாம். இறைவனிடம் உள்ளதால் புலனொழுக்கம் உடைய சான்றோரை அவை இறைவனைக் காணத் தூண்டும்.

(8) அம்புகளுடன் கூடி நீண்ட சார்ங்கம் என்ற வில்லும் வலைந்த பாஞ்ச சந்யம் என்ற சங்கமும், பகைவரை அழிக்கும் சுதர்சநம் என்ற சக்கரமும் கௌமோதகி என்ற கதையும், வெற்றியுடைய ஒளிமிக்க நந்தகம் என்னும் வாளும், வாயு, வேகமுடைய கருடன் என்ற பறவையும் ஆகிய இவை சூழ்ந்து காத்திடதிரு அரங்கத்து அரவு அணையில் பள்ளி கொள்ளும் பெருமானை வல்வினையேன் கண்டு இன்பமுற்று வாழ்வது என்றோ?

(9) நிறைவு பெறாத ஆசை மனமுடைய வைணவத் தொண்டர் தம் குழுவில் கூடித் திருமாலின் புகழ்பாடி நிறைவு பெறாத மனக்களிப்புடன் அழுத கண்ணீர் மழைபோல் பெருகிட மனமுருகி ஏத்தி, முழவோசை கடலொலிபோல் முழங்கும் திருவரங்கத்தரவணையில் துயிலும் போர்ச் சக்கரமுடைய அப்பெருமானைக் கண்டு, துள்ளிப் பூமியில் புரளும் நாள் என்றோ?

(10) வலிய பெருமைக்கு வானகம், தேவர்கள் உலகம், உலகிலுள்ள மனிதர் ஆகியோர் உய்வடைய மிக்க துன்பம் தரும் துயர் நீங்க, அயர்வில்லாத சுகம் வளர மனமகிழும் தொண்டர்கள் வாள், அன்புடன் தென்திசை நோக்கிப் பள்ளி கொள்ளும் திருமால் சந்நிதியின் முற்றத்தில் அடியவர் குழுவினைக் கண்டு அவர்களுடன் பொருந்தி அவர்களுடன் வாழும் நாள் என்றோ?

(11) மணற் குன்றுகள் விளங்கும் கரையினையுடைய காவிரியின் நடுவில் திருவரங்கத்து அரவு அணையில் துயிலும் கடல்போல் விளங்கும் கருமேனி அம்மானைக் கண்ணாரக் காணும் ஆசையால் குடை, வலிய படை, வாள், ஆகியன உடைய கூடல் நாயகனாகிய கொடையில் வல்ல குலசேகரர் அருளிய தமிழ்ப் பிரபந்தம் இப்பத்துப் பாசுரங்களை ஓத வல்லார் நலம் திகழும் திருமாலின் அடிகளில் சேருவர்.

இரண்டாம் திருமொழி – தேட்டருந்திறல் என்ற பாசுரம் 1– 10

திருவரங்கம் சென்று திருமாலைக் காண முற்பட்டபோதெல்லாம் அடியவர்களே எதிர்வந்தமையால் திருமால் வழிபாட்டினும் அவன் அடியார் வழிபாடு சிறந்தது எனக் குலசேகரர் எண்ணினார். அடியவர் தம் அகத்தே இறைவன் ஒளிர்கின்றான் எனத் தெளிந்தவர் அவர் உயிர்களுக்குப் பணி செய்வதே ஒப்பற்ற ஆண்டவனுக்குச் செய்யும் பணி என்பதை நிலைநாட்டியவர் அவர் உள்ளும் புறமும் ஒன்றுபட்டு உயிர்களிடை ஆண்டவனைக் கண்டு உவந்து வழிபாடு செய்வதைத் திருமாலின் அடியவரிடைப் பரப்பியவர் குலசேகரர் ஆவர். அதுபற்றியே தேட்டருந்திறல் என வரும் திருமொழியினைப் பெருமாள் திருமொழியில் சிறந்தது என்று திருமாலை வழிபடுவோர் புகழ்வர் என்பவர் திரு.தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (குலசேகரர் * 36)

முதற் பாசுரத்தில் திருமாலின்மீது தமக்குள்ள ஈடுபாட்டினைப் புலப்படுத்தும் குலசேகரர் இப்பாசுரத்தில் அ ர்தம் மெய்யடியார்கள் மீதுள்ள ஆழ்ந்த ஈடுபாட்டினைப் புலப்படுத்துகிறார்.

1) தேடிப்பெற அரியவனும் வலிமை அளிப்பவனும் தேன் போல் இனியவனும் தென் திருவங்கத்தில் வாழ்பவனும் திருமகள் வாழ்வதற்கிடாமல் வாடாத வனமாலை அணிந்தவனும் ஆகிய திருமாலை வாழ்த்தி அவனை விரும்பும் மன முடையவராய் ஆடுவதில் ஒருப்பட்டு வாய்விட்டு அழைத்து அயர்வடையும் மெய்யடியார்தம் குழுவைக்கான நேரிடின் கண்படைத்தற்குப் பயன் அதுவேயாம்.

திருமாலைக் காண்பதே கண் படைத்த பயன் என்பதிலும் அடியவர்களைக் காணலே கண்களுக்குப் பயன் என்ற கொள்கையுடையவர் குலசேகரர். சாதாரணத் தேன் அரிய முயற்சியால் பெறக்கூடியது. அவ்வாறாக தீந்தேனாகாவே உருக்கொண்ட திருமால் முயற்சியின்றி எளிதாய்க் காணக்கூடியவன் தேனைப் பருகினால் வலிவு உண்டாகும். திருமால் என்னும் தேனானது தன்னை அனுபவிக்க இழந்தவர்க்குத் தன்னையும் கொடுத்துத் தன்னை அனுபவிக்கும் உறுப்பான வலுவையும் தருகின்றது.

2) இதழ்கள் மிகுந்த தாமரையில் பிறந்த திருமகளின் இருதோள் மரங்களைத் துளை செய்து தள்ளியதும் பசுக்களை மேய்த்ததும் ஆகிய இவற்றை நினைந்து ஆடிப்பாடி ஓ அரங்கனே என அழைக்கும் தொண்டர் தம்திரு வடித்தூள்களில் நாம் ஆடப் பெற்றால் கங்கை நீரில் குடைந்து ஆடும் விருப்பம் ஏன்?

3) நப்பின்னைக்காக ஏழு காளைகளை அடக்கியதும் பன்றி அவதாரம் எடுத்து நிலத்தைக் குத்தியெடுத்ததும், முன்பு இராமனாய் அரக்கர்களை வென்றதும் வாமனனாய் உலகளந்ததும் ஆகிய இந்நிகழ்ச்சிகளை வாயாற் சொல்லிப்பாடி, காவிரி போல் பெருகும் கண்களின் நீரால், அரங்கன் கோயில் முற்றத்தினைச் சேறாக்கும் தொண்டர்தம் திருவடிகளால் தொகையுண்ட சேற்றை என் நெற்றிக்குத் திலகமாக அணிவேன்.

4) தோய்த்த குளிர் தயிரையும், வெண்ணெய் பால் இவற்றையும் ஒரே காலத்தில் உண்டதைக் கண்ட யசோதை சினந்து கட்டிய தோள்களையுடைய எம்பிராம் அரங்கநாதனுக்கு ஆட்பட்டு நாத்தழும்ப நாராயணா என அழைத்து மெய் தழும்பத் தொழுது ஏத்தி இன்புறும் தொண்டர்தம் திருவடிகளை என்மனம் ஏத்தி வாழ்த்தும்.

5) பொய்யான கோபக் குரலையுடைய. எருதுகளின் முகப்புகளை முறித்து, போர் செய்ய வந்த காளிய நாகத்தை ஈர்த்தவன் தென் அரங்கன் கல்லினால் ஆன ஒளிமிகு பெரிய மதில் சூழப்பட்ட தென்னரங்கத்தில் எழுந்தருளும் அத்திருமாலான கருமேகமானது தம் மனத்தில் நின்று விளங்க மெய் சிலிர்க்கும். அடியவர்களை என் மனம் நினைத்து சிலிர்க்கும்.

6) தோற்ற மூலகாரணனாய். முடிவிலும் வாழ்பவனாய், எவ்விடத்தும் இருப்பவனாய். வியப்பிற்குரியவனாய். தேவர்க்கு அதிபதியாய் ஆனவன் திருமால், அவன்தன் மலர்ப்பாதங்களைச் சூடும் அன்பில்லாத பாவிகள் உய்யும்படி எங்கும் திரிந்து குற்றமற்ற நல்வழிகளைக் காட்டி, திருமாலுக்கோ பக்தி செலுத்தும் தொண்டரிடம் என்மனம் எப்பிறப்பிலும் அன்பு கொள்ளும்.

7) மேகத்தின் போன்ற திருமேனியையும் ஒளிமிகு முத்துக்கள் போல முறுவலையும் சிவந்த வாயினையும் ஆரமணிந்த மார்பினையும் உடையவன் திருமால். அவ் அரும் பெரும் சுடரைச் சேரும் நெஞ்சினராகி கசிந்து கண்ணீர் ஒழுக்கும். அடியவர் தம் இரு திருவடிகளுக்கு என் மனம் ஒப்பற்ற அன்புடையதாகும்.

8) அலையெறியும் திருப்பாற்கடலில் பள்ளி கொள்பவனும் வண்டுகள் சூடையும் திருத்துழாய் மாலை அணிபவனும் மலைபோல் திருபார்வை உடையவனும், மலர்போன்ற கண்களை உடையவனுமான திருமாலை விரும்பி அடைந்து எழுந்து ஆடிப்பாடி திரிந்து அவனிடத்து மயக்கம் கொண்டு திரியும் தொண்டர் தம் வாழ்விற்கு என் மனம் மயங்கியது.

9) கண்ணானது பனித்து இடைவிடாது சொரிய. மயிர்சிலிர்க்க ஏங்கிக் களைத்து, நிலை தளர்ந்து, தலைகீழாகக் கூத்தாடி எழுந்து ஆடிப்பாடி வணங்கி, திருமாலுக்கு அடியவர்களாகி அவனிடத்துப் பித்தேறித் தரிகிறவர்கள் பைத்தியர் அல்லர்; மற்றவர்கள்தான் பைத்தியகாரர்.

10) அகவிதழ்களுடைய தாமரை மலரில் பிறந்த திருமகளுக்கு கணவனான திருமாலின் மெய்யடியார்தம் எல்லையில்லா அடிமைத்திற்குக் தினில் என்றும் பொருந்தும் மனத்தினை உடைய கொல்லிநகர், மதுரை, உறையூர் ஆகியவற்றிற்கு அரசனான குலசேகரர் அருளிய இனிய தமிழ்ப் பாசுரங்களை ஓதவல்லவர்கள். திருமாலின் தொண்டர் தம் தொண்டர் ஆவர்.

மூன்றாம் திருமொழி – மெய்பால் வாழ்க்கை என்ற பாசுரம் 1–9

முந்தைய பாசுரத்தில் திருமாலடியவர்கள் மீது அளவிறந்த அன்பினைக் காட்டினார் குலசேகரர். அதன் காரணமாக உலகிலார்மீது வெறுப்புற்று அவர்களைக் காணபதும் அவர்களோடு தொடர்பு கொள்வதும் பொருத்தமில்லை என உணர்ந்து உலகத்தோடு கூடுவது ஒழிந்தேன் என்றார். இவ்வாறு இயற்கைத் துறவு முறையை மிக அழகாக எடுத்து இயம்புகின்றார்.

1) பொய்யான வாழ்வினை உண்மை எனக் கொள்ளும் இவ்வுலகத்தாரோடு நான் சேர்வதில்லை. ஐயனே ஸ்ரீரங்கத்தானே இறைவன் திருநாமங்களைச் சொல்லி அழைக்கிறேன். திருமாலிடத்து மயங்கலுற்றேன்.

2) நூல்போன்று இடையையுடைய பெண்களோடு பொருந்தும் இவ்வுலகத்தோடு நான் சேர்வதில்லை. ஸ்ரீரங்கநாதனே எனக் கூத்தாடிக் கூப்பிட்டு அத்திருமாலிடத்து மயங்கலுற்றேன்.

3) மன்மதனுடைய அழகிய கொடிய வில்லுக்கு ஆட்பட்டு இவ்வுலகத்தாரோடு நான் சேர்வதில்லை, முத்துமாலையணிந்த மார்பினையும் அளவற்ற உருவங்களையும் குணங்களையும் உடைய, அடியவர்களை நரகத்தில் சேராமல் காத்தருளும் திருமாலினிடத்து மயங்கலுற்றேன்.

4) உணவையும் உடையையும் விரும்பி ஓடித்திரியும் இவ்வுலகத்தாரோடும் நான் சேர்வதில்லை. மோட்சத்தில் வாழ்பவனும் கல்நெஞ்சுடையவனின் மார்பினின்று பாலை உண்ட வாயனும் ஆன கண்ணனிடம் பித்தனானேன்.

கம்ஸன் தன்னைக் கொல்லப்பிறந்த தேவகிமைந்தனாம் கண்ணனைக் கொல்லப் பூதனை என்னும் ராஷஸியை ஏவ, அவளும் பெண்ணுருக் கொண்டு குழந்தை கண்ணனுக்கு நஞ்சு தீட்டிய தன் மார்பினின்று பாலைக் கொடுக்க முயன்றிட, பாலுண்ணுவதுபோல அவள் மார்பகங்களைப் பிடித்து அவள் உயிரை உறிஞ்சி இறக்கச் செய்தான் கண்ணன் என்பது புராண வரலாறு.

5) குற்றமற்ற நல்வழியில் செல்லாது அல்லாதன வற்றாது செய்யும் கொள்கையாளருடன் நான் சேர்வது இல்லை. தோற்ற முதல்வனாய் ஆயர் குலத்தவனாய் உள்ள அழகிய தாமரையில் தோன்றிய திருமகளின் துணைவனான திருமாலினிடம் பித்தனானேன்.

6) எம்போல் இறைவனிடம் அன்பு இல்லாதவரோடு நான் சேர்வதில்லை. வானுலக வாழ்வை ஒரு பொருட்டாக எண்ணமாட்டேன். தேவர்களுக்குத் தலைவனாம் உள்ள கோயிலில் எழுந்தருளிய எம் தலைவனாகிய திருமாலிடம் எப்போதும் மயங்கலுற்றேன்.

7) செவ்விய கண்களையுடைய திருமால் எந்நிலையிலும் யாரோடும் சேர்ந்து கெடுவதற்குரிய உறுப்பான நெஞ்சை நீக்கியருளினான். தலைவனே ஸ்ரீ அரங்கநாதனே என அழைக்கிறேன். என் தலைவனாம் அவனிடத்துப் பித்தானேன்.

திருமால் குளிர்ந்த கடாட்சம் உடையவர். ஆதலால் செங்கண்மால் எனப்பட்டார்.

8) இவ்வுலகத்தில் யாவரும் என்னைப் பொறுத்த வரை பித்தர்களே. நானும் அவர்க்கு ஒரு பித்தனே. இதைப்பேசி என்ன பயன்? ஆயனை அரங்கா என அழைக்கிறேன். என் தலைவனாகிய திருமாலினிடம் பித்தனானேன்.

நிலையில்லாதனவற்றை நிலையாய்க் கருதிப் பேய்போல் அலைபவரைப் பேயரே என்பர். நிலையிலா உலகைப் புறக்கணித்தும் நிலையான இறைவனை எண்ணிப் பேயாய் அலைவதால் அவர்கள் அளவில் இவரும் பேயரே.

9) அழகிய திருக்கையில் சக்கரத்தை ஏந்திய திருமாலின் திருவடிகளில் பொருந்திய மனமுடையவராய் பெரிய பித்தராய், சேரநாட்டுத் தலைவராய் உள்ள குலசேகரர் அருளிய இப்பாசுரங்களை இங்கு ஓதவல்லார்க்குத் துன்பம் ஒன்றும் இல்லை.

இப்பாசுரத்தின் பாடல்கள் உலக வாழ்க்கையின் இழிவையும் அன்பர் வாழ்க்கையின் இன்பத்தையும் எடுத்து காட்டுகின்றன.

நான்காம் திருமொழி – ஊனேறு செல்வம் என்ற பாசுரம் I - II

திருவேங்கடத் திருமாலினிடம் ஆரா அன்பு கொண்ட குலசேகராழ்வார். அதனை வெளியிடும் வகையில் அம்மலையுடன் தொடர்புடைய பொருள்களில் ஏதாவது ஒன்றாகத் தம் பிறப்பு அமையவேண்டும் என இப்பாசுரத்தில் வேண்டுகிறார்.

1) நம்பின்னைப் பிராட்டிக்காக ஏழு எருதுகளை வென்றவன்ராகிய திருமாலுக்கு அடிமைத் தொண்டு செய்ய வேண்டுவதல்லாமல் நாளும் நாள் தசை வளருவதும் நிலையற்ற செல்வத்தையுடையதும் வேண்டுவதல்லாமல் ஆகிய இம்மனித உடல் பிறவியை நான் விரும்பேன் வளைந்த பஞ்சசன்யங்களை இடப்பக்கம் கொண்ட திருமாலின் திருவேங்கட மலையில் உள்ள கோன் ஏவயில் நாரையாகப் பிறக்கக் கடவேன்.

2) அழியாத செல்வத்தையுடைய தேவமாதர்கள். தன்னைத் சூழ மேலுலகை ஆளும் செல்வத்தையும், இம்மணுலகை ஆளும் அரசினையும் நான் விரும்பேன். தேன்மலர்ச் சோலைகளையுடைய திருவேங்கட மலைச் சுனையில் ஒரு மீனாகப் பிறக்கத்தக்க பாக்கியத்தை உடையவனாகக் கடவேன்.

3) திரித்துவிட்ட சடையையுடைய சிவனும் பிரமனும் இந்திரனும் நெருங்கி உள்ளே செல்ல முடியாததாயுள்ள வைகுண்டமாகிய திருவேங்கட மலையின் வாயிலில் மின்னலை வலைத்தாற் போன்ற ஒளிமிக்க சக்கரத்தையுடைய திருவேங்கடத்திருமாலின் வாய் நீர் உமிழும் பொன் வட்டிலை ஏந்திக் கொண்டு விரைவில் உள்ளே புகும் தன்மையை பெறக் கடவேனாக.

4) ஒள்ளிய பவளத்தையுடைய அலைகள் உலவும் குளிர்ந்த பாற்கடலுள் கண்துயிலும் மாயோனின் இரு திருவடிகளைக் காண இசையினைப் பேசும் வண்டினங்கள் பண்ணிசை பாடும் திருவேங்கடத்தில் சண்பகமரமாய் நிற்கும் பாக்கியம் உடையவனாக கடவேன்.

அதிகாலையில் மலரும் பூ சென்பகப்பூ என்ற சிறப்புக் கருதி அம்மரமாய் ஆகித் தொடக்க நாள் முதலில் திருமாலை வரவேற்க விரும்பினார். திருமாலுக்கு விருப்பமான மலர் செண்பகமலர் என்பதை பெரியாழ்வார் பூச்சுடல் திருமொழியில் 'தேனிலினிய பிரானே செண்பகப் பூச்சுட்ட வாராய்' என்று கூறியதால் உணரலாம். ஏதேனும் குற்றத்திற்காகப் பொன்வட்டிலை ஏந்தியவரையும் விலக்குதல் கூடும் எனக் கருதியே சண்பகமரமாய் பிறக்க விரும்பினார் எனலாம்.

5) கண்டவரை நடுங்கச் செய்யும் மதம் கொண்ட யானையின் கழுத்தின் மீது இருந்து இன்பத்தை நுகரும் செல்வத்தையும் இந்த அரசாட்சியையும் நான் விரும்பமாட்டேன். அழகிய திருவேங்கட மலையில் புதராய் நிற்கும்படியான பாக்கியத்தை உடையவனாகக் கடவேன்.

உலாவரல் இன்புறும் செல்வமே எனினும் திருவேங்கடப் புதரை நோக்க அதுவும் அற்பமே என்பதை உணர்த்துகிறோம்.

6) மின்னலை ஒத்து நுண்ணிய இடையையுடையராகிய ஊர்வசி மேனகை போன்ற அழகியர்தம் பாடல் ஆடலை நான் விரும்பேன். 'தென தென' என வண்டுகள் இசைபாடும் திருவேங்கடத்தில் அதுபோன்ற பொன்மயமான சிகரம் ஆவதற்குரிய அருந்தவத்தை உடையவனாகக் கடவேன்.

7) வானத்தை இடமாகக் சிகாண்டு விளங்கும் முழுநிலவு போன்ற வெண்குடையின் கீழ் அரசனாய் வீற்றிருந்து போற்றப்படுவதற்கு காரணமான செல்வத்தை நான் மதிக்க மாட்டேன். தேன்மலர்ச் சோலையுடைய இத்திருமலைமேல் ஒரு காட்டு ஆறாகப் பெரும்படியான கருத்தை உடையேன் ஆவேன்.

8) பிறையணிந்த சடையையுடைய சிவனும் பிரமனும் இந்திரனும் முறைப்படி செய்யும் பெரிய வேள்விகளின் பயனாக அவர்தம் குறைகளைத் தீர்த்து விருப்பத்தை முடிப்பவனும் வேத முதல்வனும் ஆன திருமாலின் சோலையையுடைய வேங்கட மலைமேல் போகின்ற வழியாய்க் கிடக்கும் நிலையை உடையேனாகக் கடவேன்.

9. செடிபோல் அடர்ந்த வலியவினைகளைத் தீர்க்கும் திருமாலே உன்கோயிலின் உள்வாசலில் அடியவர்களும் தேவர்களும் தேவமாதர்களும் இடைவிடாமல் செல்லும்படியாகப் பொருந்தி உன் பவளம் போன்ற வாயினைக் காண்பேன்.

வேங்கட மலைக்குப் பல வழிகள் ஏற்படலாம். குறிப்பிட்ட ஒரு வழியாக இருக்கமுடியாது என எண்ணித் திருமாலின் திருவருள் நோக்கம் பதியுமாறு மெய்யடியார்கள் இடைவிடாமல் செல்லும்படியாக அமையுமாறு விரும்புகிறார். அடியவர்களின் நலனை நாடும் பெருமான் அதரங்கள் தன் நலங்குறித்தும் கேட்கக்கூடும் என்பதால் 'பவளவாய் காண்பேனே' என்கிறார்.

இப்பாடலை அடியொற்றியே வைணவக் கோயிலுள் வாசற்படி 'குலசேகரப்படி' என இவர் பெயரையிட்டு வழங்கப்படுகின்றது.

10) மேலுலகங்களை ஒரு கொற்றக் குடையின் நிழலில் ஆண்டு ஊர்வசியின் அழகிய அல்குலைப் பெற்றாலும் அதனை விரும்பேன். செம்பவள வாயினையுடைய திருமாலினது திருவேங்கடம் என்ற பொன்மலை மேல் ஏதேனும் ஒரு பொருளாகச் பிறக்கக் கடவேன்.

11) பகைவரைக் கொல்லும் கூர்மையான வேலினையுடைய குலசேகராழ்வார் குளிர்ந்த சாரல்களையுடைய வடவேங்கட மலையில் எழுந்தருளிய திருமாலினது பொன் போல் சிவந்த திருவடிகளைக் காண விரும்பி வணங்கி அருளிய தமிழ்ப் பதிகத்தைக் கற்கவல்லார் அவருடைய சிறந்த பக்தர் ஆவர்.

ஐந்தாந் திருமொழி – தருதுயரம் தடாயேல் என்ற பாசுரம் 1–10

அரகுலத்தில் குலசேகரர் பிறந்திருந்தும் தம் செல்வத்தையும் அதிகாரத்தையும் வெறுத்துத் திருமாலினிடம் ஆன அன்பு கொண்டவர் ஜீவாத்மாவானது பரமாத்மாவிற்கு எல்லா நிலைகளிலும் அடிமைப்பட்டது என்பதையும், அந்த ஜீவாத்மாவை வாழ்விக்கக் கடமைப்பட்டவன் இறைவனே என்பதையும் நன்கு அறிந்தவர். ஆகையால் அந்தத் திருமாலேயன்றித் தமக்கு வேறு சரணம் இல்லை என்று திருவித்துவக் கோட்டம்மான் முன்னிலையில் விண்ணப்பிக்கின்றார்.

1) மணமலர்ச் சோலைகளால் சூழப்பட்ட திருவித்துவக் கோட்டில் எழுந்தருளியுள்ள அம்மானே! நீ எனக்குத் தந்த இத்துன்பத்தை நீயே களையாவிடினும்

உன் திருவடிகளே அன்றி எனக்கு வேறு புகலில்லை. பெற்ற தாய் மிகுந்த சினங்கொண்டு தன் குழந்தையை வெறுத்துத் தள்ளினும் பின்பு அத்தாயின் அருளையே நினைந்து அழும் இளங்குழந்தையைப் போல் இருந்தேன்.

2) விண்ணை அளாவிய மதில் சூழ்ந்த திருவித்துவக் கோட்டில் எழுந்தருளிய தலைவா! கணவன், கண்டவரும் இகழுமாறு செயல்களைச் செய்திடினும் அவனையன்றி வேறொருவரையும் நினைக்கவும் செய்யாத உயர்குலத்துக் கற்புடைய மகள் போல், என்னை நீ ஆட்கொள்ளாவிட்டாலும் ஒலிக்கும் வீரக்கழலையுடைய உன் திருவடிகளையே சரணமாகக் கூறிக்கொள்வேன்.

3) மீன்கௌல்லாம் வாழும் இடமாக நோக்கும் நீண்ட வயல்கள் சூழ்ந்த திருவித்துவக்கோட்டு அம்மானே! அடியேன் மீது அருள் செய்யாதிருந்தாலும் உன்னையல்லாமல் வேறொருவரைப் பற்றேன். மாலையணிந்த மன்னன் பாதுகாக்காமல் எத்தகு துன்பங்களைச் செய்திடினும் அவனுடைய செங்கோலையே நோக்கி வாழும் குடிபோல் இருந்தேன்.

4) திருவித்துவக்கோட்டு அம்மா! (மருத்துவன்) வாளால் அறுத்துச் சுட்டாலும் அம்மருத்துவனிடம் நீங்கா அன்பு கொண்ட நோயாளி போல் உன் மாயையால் நீங்காத துன்பம் நீ தந்தாலும் அடியேன் உனக்கு அன்பு செய்யும் ஆளாக உன் அருளையே நோக்கியிருப்பேன்.

5) கொடிய கண்களையுடைய வலிய குவலயாபீடம் என்ற யானையைக் கொன்றவனே! வித்துவக்கோட்டு அம்மானே! உன் இரு திருவடிகளேயே நான் சரணம் அடைவதன்றி வேறு எவரிடத்துச் சென்று வாழ்வேன்? அலையெறியும் கடலினிடையே நான்கு திக்கிலும் சென்று பார்த்து எங்கும் கரையைக் காணாமல் திரும்பி வந்து தான் முன்பு பொருந்திய மரக்கலத்தின் பாய்மரத்தினைச் சேரும் பெரிய பறவையைப் போலானேன்.

கொடிய பகையை எளிதில் அழிக்கவல்ல உனக்கு என்னுடையத் துன்பங்களை நீக்குதல் அருமையன்று என்பர். 'வெங்கன் திண்களிறு அடர்த்தாய்' என்கிறார். அலையெறிந்து அச்சம் தரும் கடல் எல்லையில்லாப் பிறவித் துன்பத்துக்கும் கடலைக் கடக்க உதவும் கப்பல் பிறவிப் பெருங்கடலைக் கடத்தும் கருவியாகிய திருமாலுக்கும் அக்கப்பலில் பற்றுதற்கு உரிய இடமாகிய பாய்மரம் பற்றுதற்கு உரிய அவனது திருவடிக்கும் அப்பாய்மரமின்றி வேறு பற்றுக் கோட்டைப் பெறாத பறவை அவனது திருவடியேயன்றி வேறு தஞ்சம் பெறாத ஆழ்வார்க்கும் உவமைகளாகும்.

குவலயாபீடம் கொன்ற வரலாறு; கண்ணனைக் கொல்ல கம்சன் தன் அரண்மனை வாயிலில் வழியில் குவலயபீடம் என்னும் மதயானையை நிறுத்தி அவனைக் கொல்ல ஏவியபோது அதன் தந்தங்களை சேற்றிலிருந்து கொடியை எடுப்பதுபோல் எளிதில் பறித்து அவற்றையே ஆயுதமாகக் கொண்டு அடித்து அதன் உயிரைத்தொலைத்தான் என்பது புராண வரலாறு பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள உறவு மரக்கலத்திற்கும் அதனைப் பற்றும் பறவைக்கும் உள்ள உறவு போன்றது என்பர்.

6) திருவித்துவக்கோட்டம்மா செந்நிற நெருப்பானது தானாக அருகில் வந்து வெப்பத்தை செய்தாலும்; செந்தாமரைகள் வானில் தோன்றும் வெங்கதிரவனுக்கு மலருமேயல்லாமல் நெருப்புக்கு மலரா கொடிய பிறவித்துயரை தீர்த்து அருளாதொழிந்தாலும் உன் எல்லையில்லா உயர் குணங்களுக்கே அல்லாம ல் வேறொன்றுக்கும் நான் நெஞ்சுருக மாட்டேன்.

குலசேகரர் தன் இதயக் கமலத்தை மலரச் செய்வதற்குரிய குணநலன்களையுடையவனான திருமால் தனக்கு அருள் செய்யாதிருந்தாலும் தன் இதயம் அவன்தன் குணங்களுக்கு மலருமேயன்றி மற்றொரு கடவுள் தானாக வலிய வந்து சிறந்த குணத்தைக் காட்டி நின்றாலும் அதற்கு நெகிழாது என்றார். பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள உறவு ஞாயிற்றுக்கும் தாமரைக்கும் உள்ள உறவு போன்றது என்பர்.

7) திருவித்துவக்கோட்டு அம்மா! மேகமானது மழைபொழியாது. எத்தனை நாள் இருப்பினும் பசிய பயிர்கள், கருநிறம் கொண்டு எழும் பெரிய மேகங்களையே நோக்கும்; அப்பயிர்கள் போல் எனக்கு அருள் செய்யாமல் என் துயர்களைப் போக்காமல் விட்டாலும் அடியேன் என் மனதை உன்பால் மிகவும் செலுத்துவேன்.

8) மிகுதியாய் விளங்கும் காளமேகம் போன்ற கரிய திருநிறமுடையவனே! வித்துவக்கோட்டு அம்மா! புண்ணியனே! திரண்டு விளங்கும் நதிகள் எல்லாம் எல்லாவிடமும் பரவி ஓடி முடிவில் ஆழ்ந்த கடலிலே சென்று சேருமேயல்லாமல் மற்றொரிடத்தில் புகுந்து நில்லா. அவைபோல என் மனத்தில் புகுந்து விளங்கும் உன் சிறப்புமிகு குணங்கள் தவிர நான் மற்றொரிடத்தில் ஆழ்ந்துவிட்டேன்.

9) மிக்க ஒளியையே கொண்ட சக்கராயுதத்தையுடைய திருவித்துவக் கோட்டு அம்மா! உன்னையே விரும்பி மிகுந்த செல்வத்தை விரும்பாதவனேயே தானாகவே வந்து சேர விரும்பும் செல்வம்போல் உன் மாயத்தால் என்னை விரும்பாவிடினும் உன் அடியவனான நான் உன்னையே அடைய விரும்பி நிற்பேன்.

10) திருவித்துவக் கோட்டு அம்மா! நீ என்னை விரும்பாவிடினும் வேறு எவரையும் பற்றமாட்டேன் என்று அப்பெருமானின் திருவடிகளில் ஆர்வமுற்ற வெற்றியை தரும் வேலையும் தானையும் உடைய குலசேகரர் அருளிய தமிழ்பாடல்கள் பத்தினையும் ஓத வல்லவர்கள் நரகத்தினை சேரமாட்டார்கள்.

ஆறாந் திருமொழி : ஏர்மலர்ப் பூங்குழல் என்ற பாசுரம் 1–10

கண்ணன் அவதாரத்தை நினைந்த குலசேகரர் அதில் அப்பெருமானைத் தாம் அனுபவிக்கப் பெறாமல் போனமைக்கு இரங்கி அவ்விரக்கத்தை அந்த அவதாரத்தில் ஆயர் குலபெண்கள் கண்ணனோடு ஊடல் கொண்டு உரைத்த பேச்சுகளால் அருளைச் செய்வது இத்திருமொழி.

1. கண்ணபிரானே! அழகிய மலர்களையணிந்த மணமிக்க கூந்தலையுடைய இடைப்பெண்கள் பலர் இருக்கப் பெற்ற இத்திருவாய்ப்பாடியில் உன்னுடைய மார்புடன்

தவழ ஆசைப் படல் வீண் என நன்றாக அறிந்து வைத்தும் உன் பொய்யான வார்த்தைகளைக் கேட்டு மெய்யென மயங்கி மிக்க மழைபோல் பெய்யும் பணி குளிரில் அகப்பட்டு கூச்சமுற்று நடுங்கி யமுநாநதி மணற்குன்றில் உன் வரவைப் பார்த்தபொழுது விடியுமளவும் காத்து நின்றேன்.

2. கண்ணனே! கீழ்ப்புற வீட்டில் கயல் போன்ற அழகிய கண்களையுடைய ஒரு பெண் தயிர் கடைவதைக் கண்டு. நானும் விரைவில் கடைகிறேன்' என்று கூறித் திருட்டுப் பார்வை பார்த்து அவளருகே சென்று வண்டுகள் அமர்ந்த மலர்க்குழல் தாழ்ந்து அசையுமாறும் ஒளி முகம் வியர்க்கு மாறும் சிவந்த அதரம் துடிக்குமாறுக் குளிர்ந்த தயிரை நீ கடைந்த தன்மையை நான் உண்மையில் அறிவேன்.

வேறொரு ஆயர் குலப்பெண் 'இன்னமும் அங்கேயே தயிர் கடையப்போ! இங்கே உனக்கென்ன பணி என்று ஊடல் கொள்ளுவது போல் அமைந்துள்ளது.

3. மலர் அணிந்த கறுத்த கூந்தலையுடைய ஒருத்தியைக் கடைக் கண்ணால் பார்த்து, வேறொருத்தியிட மனதைப் பொருந்தச் செய்து மற்றொருத்தியிடம் அடிமை என்று உரைத்து, இன்னும் ஒருத்தியிடம் வருவதாய் இடத்தினைக் குறிப்பிட்டுப் பொய் பேசி சுருண்ட கூந்தலையுடைய மங்கை ஒருத்தியுடன் கூடி அவளுக்கும் மெய்ம்மையுடையனாய் இல்லை. இரட்டை மருதமரங்களே முறித்துத் தள்ளினவளே! நீ வளர்வதோடு கூடவே உன் தன் மாயைகளும் வளர்த்து நிற்கின்றன அந்தோ!

4. யசோதையின் மார்பில் பால் இருக்க அதனை விரும்பாமல் தவழ்ந்த தளர் நடை இட்டுச் சென்று பூதத்தின் மார்பில் வாயை வைத்து அந்நஞ்சினை உண்டு பித்தன் எனப் பிறர் ஏளனம் செய்ய நின்றாய் நான் மிக்க ஆவலுடன் எதிர் பார்க்கையில் நீ என்னால் தூது அனுப்பட்டு வந்த என் வேலைக்காரியிடம் மிகுந்த இன்பம் நுகர்ந்தால், அதுவும் உன் கொடுமைக்குத் தகுந்ததன்றே.

5. மின்னலை ஒத்த நுண்ணிய இடையினையுடையாளை அனைத்து மிகுந்த இருளில் பெண் ஆனையை முக்காடு இட்டுக் கொண்டு என் வீதி வழியே (அவளும் நீயுமாகப்) போகும்போது நான் கண்டேன். அன்றியும் நீ கண்ணில் தென்பட்ட வேறொருத்தியைக் கண்ணால் அருள் செய்து கையால் அழைப்பதையும் கண்டு நின்றேன். அவளை விட்டு இங்கு எதற்கு வந்தாய்? தலைவனே அங்கேயே நடப்பாயாக.

6. மல்லாரோடு போர் செய்த போன்களையுடைய கண்ணனே! கொடிய வினையினையுடைய நான் தூங்கத் தொடங்கியதும் அன்று இரவு நடுயாமத்தில் இனிய படுக்கையில் என்னைப் படுக்க விட்டு நீ விலகிப்போய் அன்றிரவும் அதற்கு மறு நாளும் பிற பெண்களோடு கூடி வந்தாய், இப்படிப்பட்ட நீ என்னருகில் ஏன் வந்தாய்? நீ போவாயாக.

மல்லருடன் பொருத வரலாறு கம்சனால் ஏவப்பட்ட சாணூரன். முஷ்டிகன் என்ற மல்லர்களைக் கண்ணன் மற்போரினால் கொன்ற வரலாறு பாண்டவர்க்குத் தூதாய் ஸ்ரீகிருஷ்ணன் சென்ற போது துரியோதனன் மறைமுகமாக அமைத்த நிலவறையால் மல்லர்களை உன்னே போர்க்கருவிகளுடன் இருக்க வைத்து அக்குழியை மூங்கிற்

பிளம்புகளால் மூடி அதன் மேல் இரத்தின சிம்மாசனம் அமைத்து கிருஷ்ணனை அமரச் சொல்ல அவனும் அமர்ந்தான் கிருஷ்ணன் அதன் மேல் ஏறிய மாத்திரத்தில் மூங்கிற் பிளம்புகள் முறிந்து ஆசனம் உள்ளிறங்கிப் பிலவறையில் செல்லுமளவில் அப்பெருமாள் மிகப் பெரிதாக விசுவரூபம் எடுத்து எதிர்க்கவே அப்பிலவறையிலிருந்த மல்லர்கள் அழிந்தனர் என்பதும் வரலாறு.

7. படங்களையுடைய இனிய பாம்பு அணையில் பள்ளி கொள்பவனே! தலைவனே! நாங்கள் மீண்டும் ஏமாறுவதற்குரியவர் அல்லர். நீ விரும்பதக்க மைபூசிய மான் போல் அழகிய கண்ணினை உடையவரும் அல்லர். காலதாமதம் செய்து எம் இல்லத்திற்கு வருவதை விட்டுவிட்டு உன் அழகிய உடை திருமுகம் கனிவாய் குழல் ஆகியவற்றில் ஈடுபட்டு உன் பொய் வார்த்தைகளில் ஒரு நாள் பட்டபாடு போதும். நீ வஞ்சகமான வார்த்தைகளைக் சொல்லாமல் போய்விடு.

8. என்னை வருக எனக் கூறிவிட்டு நிறைந்த முல்லை மலர்ப் பந்தலின் பதுங்கிய ஒருத்தியைக் கூடுவதற்குச் சென்று பிறகு என்னைக் கண்டு கலங்கிய நழுவினாய் பொன்னாடையைக் கையல் தாங்கிப் பொய்யாக அச்சம் காட்டி நீ ஓடிய போதிலும் இனி என்னிடத்தில் ஒரு நாள் வருவாயாகில் அப்போது என் கோபத்தைத் தீர்த்துக் கொள்வேன்.

9. மங்களகரமாக நல்ல வனமாலை மார்பில் விளங்க மயிலிறகுகளை கூடி ஒளி மிகுந்த அழகிய ஆடையை அரையில் சாத்தி பூங்கொத்துக்களைக் காதில் பொருந்த அணிந்து தேன்கமழும் நறுமணக் கூந்தலுடைய பெண்களுடன் குழைந்து உன் குழலை இனிதே ஊதி வந்தாய் உன் குழலின் இசையானது ஒரு நாளாகிலும் எங்களுக்காக வந்து ஊதும்படி இல்லை.

வேறொரு ஆயர்குலப் பெண்ணின் வருத்தமான பேச்சு இது.

10 இளமையான இடைக்குல நங்கையர் திருமகள் தலைவனான கண்ணபிரானை விரும்பி இரவு யாமத்தில் ஊடல் கொண்டு உரைத்தவற்றைச் சொல்லி நகர்த் தலைவனும் மதுரைக்கு மன்னருமான குலசேகராழ்வார் இனிய இசையில் பொருத்த அருளிய இனிய தமிழாலாகிய மாலை பத்தினையும் சொல்ல வல்லார்க்குத் துன்பம் இல்லை.

ஏழாந்திருமொழி – ஆலைநீள் கரும்பு என்ற பாசுரம் 1–11

கண்ணனுடைய குழந்தைத் திருவிளையாடல்களை யாசோதை கண்டு களித்து இன்புற்றாற்போல் தான் இன்புறாது இழந்த தேவகி பின்பு கண்ணனைக் கண்டபொழுது கழிவிரக்கத்துடன் பேசியது போல் இப்பாசுரம் அமைகிறது. இத்திருமொழியில் குலசேகரர் தேவகியாகவே மாறி இரங்குவது கற்போர் உள்ளத்தை ஈர்க்கும்.

1. ஆலையிலிட்டு ஆடத்தகுந்த நீண்ட கரும்பு போன்ற கண்ணனே தாலேலோ தாமரை போன்ற அகன்ற கண்களையுடைவனே தாலேலோ! மண மிகு நீண்ட என் மகனே தாலேலோ! எனப் பலமுறை சொல்லி என்வாய் நிறையுமாறு உன்னைத் தாலாட்டிடும் பேறு இல்லாத தாய்மார்களில் கடையான தாயாக இருக்கிறேன் நான்.

பன்னிரண்டு மாதம் கண்ணனை வயிற்றில் சுமந்து பெற்ற தேவகி அவனை உடனே திருவாய்பாடிக்குப் போய் விட்டாள். ஆதலால் அவனைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டி மகிழும் பாக்கியங்களை யசோதை பெற்றாளேயன்றித் தான் பெறவில்லையே எனத் தேவகி கலங்கிக் கூறினாள். நன்றாக முற்றிய சாறு நிரம்பிய கரும்பு என்று பொருள்பட "ஆலைநீள் கரும்பன்னவன்" என்றார்.

2. கூர்மையானதும் கையிடைப் பெற்றதும் செந்தாமரையை ஒத்தும் ஆன கண்களால் மேற்கட்டியில் தொங்கப்பட்ட ஒரு பொருளை இனிதாகப் பொருந்தப் பார்த்துக் கொண்டும் கறுத்த புறந்தாளையுடையதும் செந்தாமரை ஒத்துச் சிறுத்துச் சிவந்ததுமான திருவடிகளை முடக்கிக் கொண்டும் நீர் விளங்கப் பெற்ற மேகக் குட்டிபோல் அழகிய சிறுத்த திருவிரல்கள் அனைத்தையும் உள்ளங்கையில் அடங்கும்படி அணைத்து யானை போல் பள்ளி கொண்டருளும் அழகைக் கண்டிடாத பாவியானேன். அந்தோ கண்ணனே ஒன்றும் அனுபவியாத பாவியானேன்.

குழந்தைகள் தொட்டிலில் மேற்புறம் கட்டப்பட்ட கிளிச்சட்டத்தின் மிக அழகாக பொருளை உற்று நோக்கிக் களிக்கும்.

3. அன்புள்ளம் கொண்ட முந்தைய நல்ல உறவு முறையையுடைய பெண்கள் தம் தம் துடைகளில் முறையாக இருத்தி எம் அப்பனே, எம் குலத்துச் சுடரே எழுகின்ற மேகக் கூட்டத்தின் அழகைக் கவர்ந்த காளை போன்றவனே உன் தகப்பன் யார்? என்று கேட்க உன் சிவந்த நிறமுடைய விரலினாலும் கடைக்கண்ணாலும் காட்டுமாறு அப்பேற்றினை நந்தகோபர் பெற்றார்; நல்லவினை புரியாத என் தலைவனாகிய வாசுதேவன் பெறவில்லை.

ஒரு வீட்டில் குழந்தை பிறந்தால் எல்லோரும் நம் துடையில் வைத்துப் பலவாறு கொஞ்சுவார் என்பது போல் கண்ணனைப் பலரும் கொஞ்சினார்.

4. கண்ணனே இன்பம் தரும் நிலவினைப் பொழியும் அழகிய நிலவை ஒத்த திருமுகமும் திண்ணிதான திருக்கைகளும் திருமார்பும் திண்ணிய தோள்களும் தளிர்மலருடைய கறுத்த குழலும் பிறை நெற்றியும் அகன்ற தாமரைக் கண்களும் ஆன இவைகள் விளங்கும் இளமை இன்பத்தை இன்று என் கண்களால் நான் கண்டு அனுபவித்தாலும் தாய் என்று நினைக்கத் தகுதியான குழந்தைப் பருவத்தின் அளவில்லாத இன்பத்தை இன்று என் கண்களால் நான் கண்டு அனுபவித்தாலும் தாய் என்று நினைக்கத் தகுதியான குழந்தைப் பருவத்தின் அளவில்லாத இன்பத்தை இழந்த பாவியான எனது உயிர் நிற்க வழியில்லை.

5. உன் திருநெற்றியில் பொருந்திய சுட்டியானது அசைய அழகிய வாயில் உண்டான முத்தத்தைக் கொடுப்பதையும் உன் தந்தை போன்ற வடிவழகைப் பார்த்து என் மனம் குளிரும்படி சிவந்த சிறிய திருவாயில் விரல்களைக் சேர்த்துச் சீற்றத்துடன் உரைக்கும் மழலைச் சொற்கள் பேசுவதையும் பேறில்லாத நான் அனுபவிக்கவில்லை. தெய்வ நங்கையான யசோதை அவற்றை அனுபவிக்கப் பெற்றாள்.

6. குளிர்ந்த தாமரை போன்ற திருகண்களையுடையவனே, கண்ணனே நீ தவழ்ந்து எழுந்து தட்டுத்தடுமாறி நடக்கும் ஒரு நடையால் சிவந்த புழுதி மண்ணில் விளையாடி அக்கோலத்துடன் வந்து என் மார்பில் அணையும் படியான பேற்றினைப் பெறவில்லை அந்தோ! அழகிய சிவந்த சிறுகை விரல்கள் அனைத்தும் வாரிக்கொண்டு அமுது செய்த உணவில் எச்சிலை நான் உண்ணப் பெறவில்லை. இவற்றை இழந்த நான் தீய வினேயேன். என் தாய் என்னை ஏன் தான் பெற்றாளோ!

7. எல்லோருடனும் கலக்கும் இயல்புடையவனே என் வயிற்றில் உதித்த அழகிய குமாரனே, கோவிந்தனே என் முழங்கையில் பொருந்தி அழகுடையதும் இளையசிறுதலிர் போன்றதுமான ஒரு திருக்கையால் ஒரு மார்பை நெருடி மற்றொரு மார்பு வாயிலிருக்க நடுநடுவே என் முகத்தை நோக்கி புன்னகையைச் செய்து அழகிய உன் இரு கண்களால் நோக்கும் பார்வையினையும் ஐயோ இழந்தேனே.

8. வெண்ணையை முழுவதும் கையால் அளந்து எடுத்து உண்ணுவதும் இளந்தளிரையும், தாமரையையும் போன்றதுமான சிறிய திருக்கைகளும் அழகிய தாம்புக் கயிற்றால் அடிக்க அஞ்சி நிற்கும் நிலையும் வெண் தயிர் பூசப்பட்ட சிவந்த வாயும் அழுவதும் அஞ்சி நோக்குவதுமான அப்பார்வையும் அழகிய சிவந்த வாய் அழுவதும் அஞ்சி நோக்குவதுமான அப்பார்வையும் அழகிய சிவந்த சிறிய வாய் துடிப்பதும் தொழுவதும் ஆகிய இவற்றை நேரில் கண்டு அனுபவித்த யசோதை மேலான இன்பத்தின் எல்லையைக் காணப் பெற்றாள்.

கண்ணனின் குழந்தை பருவத்துச் செயல்களெல்லாம் யசோதைக்குச் கிடைத்ததேயன்றித் தனக்கு கிடைக்கவில்லையே என ஏங்குகிறார் தேவகி.

9. கோவர்த்தன மலையைக் குடையாகத் தாங்கி நின்றதும் அழகாகக் குரவை கோத்ததும் குடக்கூத்து ஆடினதும், கன்றாய் வந்த அசுரனைக் கொண்டு விளங்காய்களை உதிர்த்தும் காலால் காளிய நாகத்தின் தலையை மிதித்ததும் முதலான வெற்றி பொருந்திய நல்ல பிள்ளை விளையாட்டுகளில் ஒன்றையும் என் உள்ளம் குளிர நான் காணப் பெற்றிலேன்' இனியாகிலும் காணும் வழி இருக்குமாயின் அருள வேண்டும்.

இடையர்கள் தேவேந்திரனுக்கு எனச் சமைத்த சோற்றைக் கண்ணன் கோவர்த்தமலைக்கு இடுமாறு செய்தான். இந்திரன் பசியின் கொடுமையால் ஏழுநாள் விடா மழை பெய்வித்துப் பசுக்களுக்கும் இடையர்க்கும் துன்பத்தை விளைவித்தான். உடனே கண்ணன் கோவர்த்தன் மலையைக் குடையாக எடுத்துத் தாங்கி நின்று ஒருவர் மேலும் ஒருதுளி மழை விழாதபடி காத்தருளினான். இதுவே கோவர்த்தமலையை குடையாக பிடித்த வரலாறு.

ஒவ்வொரு ஆயர்குல பெண்ணின் பக்கமும் ஒவ்வொரு கண்ணனாகப் பல்லாயிரம் உருவங்கள் எடுத்து ஆடிய விளையாட்டு கண்ணன் ஆடிய குரவை ஆட்டம். அடுத்து குடங்களைத் தரையிலும் இரு குடங்களை இரு தோள்களிலும் மேலும் இரு குடங்களைக் கைகளிலும் ஏந்தி விண்ணில் எறிந்து ஆடுவதொரு கூத்தே குடக்கூத்து.

கண்ணன் தன்னை எதிர்க்க கன்றாய் வந்த ஒரு அசுரனைக் கொண்டு விளாமரமான மற்றொரு அசுரனைக் கொல்லுமாறு விளாங்காய்களை உதிர்த்த வரலாறு 'கன்றினால் விள எறிந்த வரலாறு' ஆகும்.

10. வஞ்சனையான நெஞ்சுடைய பூதனை வரண்டு எழுமாறு அவளுடைய நார்போன்ற நரம்புகள் கருகி உதிர நச்சுத்தன்மையுடைய மார்பை நீ சுவைத்தும் என்னிடத்து அருள் செய்து உயிருடன் வளர்ந்தாய். அந்தோ! கம்சனுடைய ஆயுளைக் கவர்ந்த கருமுகில் போன்ற தலைவனே நான் மார்பை வீணாகச் சுமந்து இழிந்தவாளானேன். உன்னைத் தவிர வேறு தஞ்சம் இல்லாமல் உன்னைக் காணப்பிழைத்துள்ளேன். உனக்கு தகுதியான நல்ல தாயைப் பெற்றாள்.

கஞ்சன் கம்சன் ஆவான். தன் மார்பைச் சுவைத்துக் கண்ணன் வளரப் பெறும் தகுதியைத் தான் இழந்தமையால் தேவகி முலை வெறிதே சுமந்து' என்று வருந்தினான்.

11. செல்வம் நிரம்பிய பெரிய நகரமாகிய வடமதுரைக்கு தலைவளாயிருந்த கம்சனை விண்ணுலகத்திற்குச் செலுத்தி விட்டு இங்கு வந்த கண்ணன் வியக்கத்தக்கன எல்லையில்லாமல் செய்தனவற்றைக் காணப் பெறாத தெய்வீகத் தன்மையுடைய தேவகி புலம்பிக் கூறிய பாசுரங்களை கொல்லி நகர் அசுரனாய் திருமாலின் பாதங்களைத் தன் முடிக்கு அலங்காரமாய் உடைய குலசேகராழ்வார் அருளிய நல்ல இசையுடைய தமிழ்மாலையை ஓதவல்லவர்கள் விரைவில் ஸ்ரீவைகுண்டத்தை அடைவர்.

எட்டாம் திருமொழி – மன்னு புகழ் என்ற பாசுரம் 1–11

ஆறாம் திருமொழி ஏழாம் திருமொழி ஆகியவற்றில் கிருஷ்ணாவதாரச் செயல்களை விளக்கிய ஆழ்வார் உடனே இராமாவதாரத்தில் ஈடுபட்டு அவ்வதாரத்தில் கோசலை இராமனுக்கு தாயாய் இருந்து அவனைத் தாலாட்டியதை உட்கொண்டு இராமனுக்கு தாயாய் மாறித் தாலாட்டி மகிழ்ந்தமையை இப்பாசுரத்தில் விளக்குவர். இதில் திருக்கண்ணபுரத்து இறைவனைப் போற்றுகின்றார்.

1. நிலையான புகழுடைய கோசலையின் அழகிய வயிற்றில் உதித்தவனே தென்னிலங்கைக்கு இறைவனான இராவணுடைய தலைகள் பத்தினையும் சிதறச் செய்தவனே செம்பொன்னால் அழிவில்லாத நல்ல பெரிய மதில் நாற்புறமும் சூழ்ந்த திருக் கண்ணபுரத்தில் எழுந்தருளிய என் கருமணியே என் இன்னமுதே இராமனே தாலேலோ.

2. திருவந்தியில் அலர்ந்த தாமரை மேல் பிரமனைத் தோற்றுவித்து உலகங்களை படைத்தவனே திண்ணிய பலமுடைய தடாகையின் மார்பைத் துளைக்குமாறு வில்லை வளைத்து அம்புகளை எய்தவனே கண்டவரெல்லாம் தன் மனம் இசையும்படி திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளிய என் கருமணியே எட்டுத் திசையிலுள்ளவர்களையும் அடிமை கொண்டருள்பவளே இராகவே தாலேலோ.

3. மணமிகுந்த கறுத்த கூந்தலையுடைய கோசலையின் சிறந்த குழந்தையே பொருந்திய பெரும்புகழுடைய சனகனுக்கு மருமகனே தசரதன் பெற்ற செல்வமே

கங்கையைக் காட்டிலும் சிறப்புமிகு சீர்திருத்தங்களையுடைய திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியே என் கருமணியே எங்கள் குலத்தில் உதித்த அமுதம் போன்றவனே இராமனே தாலேலோ.

திருமாலின் பாதத்திலிருந்து ஒரு சமயம் மாத்திரம் உற்பத்தியான பெருமையுடையது கங்கை. ஆனால் எச்சமயமும் திருமால் தொடர்புள்ளரை அத்தீர்த்தங்கள். ஆதலால் அங்கங்கையைக் காட்டிலும் அவை சிறந்தவை. இராமன் அரசகுலத்தில் பிறந்தது போல் அரசகுலத்தில் பிறந்தவர் ஆதலால் எங்கள் குலத்து இன்னமுதே என்றார்.

4. உத்திரமங்கலத்தில் பிரமனை உண்டாக்கியவனே தசரதனுக்கு மூத்த குமாரனே மிதிலையரசன் மகளாகிய சாணகிக்கு கணவனே வண்டுகளின் கூட்டம் சாமரம் என்ற இசையைப் பாடும் திருகண்ணபுரத்தில் எழுந்தருளிய என் கருமணியே அம்புகள் பொருந்திய வில்லை ஆள வல்லவனே, இராகவனே தாலேலோ.

5. உலகம் முழுவதும் ஆட்சிபுரியும் பெரிய செல்வத்தைப் பரதனுக்கே அருளிக் குறைவில்லா அன்புடைய இளையவனாகிய இலக்குவனுடன் புகுவதற்கு அருமையான காட்டை அடைந்தவனே திருக்கண்ணபுரத்து அரசே, மாலையுடன் கூடிய சிறந்த திருமுடியை உடையவனே என் தசரதன் பெற்ற குழந்தையே தாலேலோ.

6. எல்லா உறவினரும் பின்வரத் தொன்சிறப்புடைய தண்டகாரண்யம் அடைந்தவனே பிறவற்றை விட்டு உனக்கே பணிசெய்யும் முனிவர்க்கு அருமருந்தானவனே அயோத்தி மாநகரத்திற்கு அரசனே கற்றவர்கள் வாழும் இடமான திருக் கண்ணபுரத்தில் எழுந்தருளிய என் கருமணியே சிறிய தாயாராகிய கைகேயின் சொல்லை ஏற்றுக்கொண்ட இராமனே தாலேலோ.

7. பிரளய காலத்தில் ஓர் ஆலஓலையில் குழந்தை வடிவு கொண்டு உலகங்களை திருவயிற்றில் வைத்து நோக்கியவனே வாலியைக் கொன்று அவன் தம்பியான சுக்ரீவனுக்கு அரசை அளித்தவனே. கால்வாயில் உள்ள மணிகளை கரையில் கொண்டு கொழிக்கப் பெற்ற திருக்கண்ணபுரத்தில் என் கருமணியே திருவாலி திருநகரிக்குத் தலைவனே அயோத்தி நகர்க்கு அரசனே தாலேலோ.

8. மலைகளால் சேதுபந்தனம் (பாலம்) அமைத்து மதில்களையுடைய இலங்கையை பாழாக்கியவனே அலையெறியும் திருப்பாற் கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுது அருளியவனே கலை வல்லுனர்கள் வாழும் திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியே என் கருமணியே வில்லில் வல்லவனே வீரனே இராமனே தாலலோ.

9. கட்டு அவிழுமாறு மணமுடைய முடியினையுடைய தசரதன் தன் சிறந்த குமாரனே ஒப்பற்ற வில்லை வளைத்து மதில் இலங்கை அழித்தவனே களையாகச் செங்கழுநீர் மலர்கள் மலரப்பெற்ற திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளிய என் கருமணியே இளையவர்கட்கு அருள் செலுத்துபவனே இராகவனே தாலேலோ.

10. தேவர்களையும் அசுரர்களையும் திசைகளையும் படைத்தவனே யாவரும் வந்து திருவடிகளில் வணங்குமாறு ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொள்பவனே காவிரி என்ற சிறந்த

நதியானது பாயும் திருக்கணணபுரததில எழுந்தருளிய என் கருமணிமேய அம்புகள் தொடுக்கப்பெற்ற கொடிதானவில்லை ஆள்பவனே இராகவனே தாலேலோ.

11. என இராமபிரானைத் தாலாட்டிச் சொன்ன பாசுரங்களைக் கொல்லும் வேலினைச் செலுத்த வல்லவரும் குடையுடைவருமான குலசேகரர். நிலையான சிறந்த அழகிய மதில்கள் நாற்புரமும் சூழப்பெற்ற திருக்கண்ணபுரத்தில் அருளிய நூலாகிய தமிழ் மாலையாம் இப்பத்துப் பாசுரங்களிலும் வல்லவர்கள் பக்திமார்கள் ஆவர்.

ஒன்பதாந்திருமொழி – வன்றாளினினை என்ற பாசுரம் 1–11

இராமபிரான் காட்டிற்கு சென்றமையால் தசரதன் அப்பிரிவை ஆற்றாது புலம்பிய புலம்பல்களை இத்திருமொழி விளங்கும். "கற்போர் இராமபிரானையல்லாமல் மற்றுங் கற்பரோ' என்றபடி இராமன்மேல் ஆரக்காதல் கொண்ட குலசேகரர் வெகு காலத்திற்கு முன்பு நடந்த அச் சரித்திரத்தை அப்போதுதான் நடப்பதாகவே சித்திரிக்கிறார். குழந்தைப் பருவத்து இராமனை அனுபவித்துப் பின்பு நெடுங்காலம் இளமைப் பருவத்து நிலைகளை யெல்லாம். அனுபவிக்காமல் இழந்துவருந்திய தசரதன் இராமனைப் பிரிந்த அளவில் இரங்கிப் பேசியவற்றைத் தசரதனாகவே தாம்மாறிப் பேசுகின்ற பாங்கு சிறப்புடையது.

1. எம் இராமனே; வளமிக்க அயோத்தி மாநகர மக்கள் வலிமையுடைய இரு திருவடிகளில் வணங்கித் தொழுது துதிக்க மன்னனாக முடிசூட இருந்தாலும் சிம்மாசனத்தில் வீற்றிருக்க இருந்தவனும் ஆன உன்னை நெடுங்கானம் செல்லக் கூறினாள் கைகேயி. நல்ல மகனே நான் உன்னைப் பெற்று வளர்த்த தாயான கைகேயின் வார்த்தையைக் கேட்டு நன்றாகத் தான் நிலவுலகை ஆளச் செய்தேன்.

2. எம் இராமனே, கொடிய வாயுடைய என் கடுஞ்சொற்களைக் கேட்டுப் பெரிய நிலவுலக ஆட்சியை விரும்பாமல் விட்டு, விரைந்து வெற்றி தரும் மைம்மலை போன்ற வடிவுடைய யானை, தேர், குதிரை, ஆகியவற்றை நீக்கிவிட்டுக் காட்டைச் சேர்ந்த நெய் பூசப்பட்டவேல் போன்ற நீண்ட கண்களையும் சிறந்த ஆபரணங்களையும் உடைய பிராட்டியும் இளையவனான இலக்குவனும் உடன் தொடர எவ்வாறு நடந்து சென்றாயோ? எம் ஐயனே. நான் என் செய்வேன்?

3. கொலைத் தொழில் பொருந்திய வேல் போன்ற செவ்வரி பரந்த நீண்ட கண்களையுடைய கௌசலை தன் குலத்தில் தோன்றிய குமாரனே. வளைந்த வில்லைத் தரித்த வலியமலை போன்ற தோள்களையுடையவனே, வலிய வினையையுடைய என் மனம் உருகச் செய்யும் வகையினைக் கற்றவனே, காகுத்தனே, கரிய தலைவனே, மெல்லிய பஞ்சணையில் முன்பு உறங்கிப் பழகிய நீ இனி இன்று பெரிய காட்டிலுள்ள மரநிழலில் கருங்கல் பாறைமேல் உறங்கக் கற்றாயோ?

4. வா, இனிப் போ, மறுபடியும் வா, பின்னும் ஒரு முறை வந்து என்னைப் பார்த்துவிட்டுப் போ என்றெல்லாம் கூறுவோனே, மலருடைய கூந்தலினையும் மூங்கில் போன்ற அழகிய தோள்களையும் உடையவளமான் பிராட்டியை மணக்கச் சிவனது வில்லை முறித்தவனே. வல்வினையேனாகிய எனது மனம் உருகச் செய்யும் மகனே.

இன்று நீ. யானைகள் தங்கும் பெரிய காட்டுக்குப் போக எனது மனம் இரு பிளவாய்ப் போகாமல் வலியதாய் நிற்கும் தன்மை எதனால்?

5. பெரும்பாவியான என் மைந்தனே, பகைவர் கையில் ஏந்தும் கூர்மையான வேலின் நுனி போன்ற பருக்கைக் கற்கள் (காலில்) தைத்து அழுந்த, மென்மையான பாதங்களிலிருந்து குருதி பெருக, வெயில் உறைக்க, கொடிய பசிநோய் மிக, இன்று எவரும் விரும்பாத காட்டை (நான் சொல்லிட) விரும்பிப் போகின்றாய், கேசயன் பெற்ற மகளான கொடிய பாவிபாம் கைகேயியினுடைய சொல் கேட்ட கொடியேனாகிய நான் ஐயோ என் செய்வேன்?

6. ஐயா என மகிழ்ந்து அழைக்கும் அன்புமிகு சொல்லை நான் கேளாதே அணிகலன்கள் பொருந்திய என் மகனது மார்பு என் மார்பில் அழுந்தும்படி அணைக்காமல் அந்த இன்பக் கடலில் முழுகாமல் உச்சியை மோந்திடாமல், யானையின் நடைபோன்ற மென்மையான நடையின் அழகையும் தாமரை மலர் போன்ற முகப் பொலிவையும் காணாமல் எம் ஐயனான என் மகனை இழந்திட்ட இழி செயலைச் செய்தவனான நான் இன்னும் உயிர் வாழ்கின்றேன்.

7. தூய்மையான வேதத்தில் வல்வர்களே, சுமந்திரனே, வசிட்ட முனியே, மலர் பொருந்திய மணமிகு கூந்தலை இழிந்த சடையாகத் திரித்து அழகிய ஆடை அணிய வேண்டிய அரையில், விரும்பத்தக்க அழகிய புல்லை முறுக்கி உடுத்தி அணிகலன்கள் அணியாமல் உறுப்புக்கள் அழகு மாறி, பிறரைக் காக்கும் தோள்களையுடைய என் புதல்வன், நான் இன்று செல்லத்தக்க வனம் சேர்தல் தகுதியோ நீரே சொல்லுங்கள்.

கைகேயியே, கல்விச் செல்வத்தைப் பெற்ற குருக்களின் கீழ் அழகிய வேதங்களைக் கற்ற இரமானையும் அவனுக்குத் தம்பியான இலக்குவனையும் பேச்சில் கிளி போன்றவளும் மின்னலும் ஈடாகாத நுண்ணிடையும் மென்மையான இயல்பும் உடையவளும் என் மருமகளுமாகிய சீதையையும் காட்டிற்கு போகச் செய்து, உன் அன்புக்கு இடமான உன் மகனான பரதன் மேல் பழியுண்டாகும்படி செய்து என்னையும் நீண்ட வானகத்திற்குச் செலுத்துதலினால் நீ என்ன பயனடைந்தாய்? இவ்வளவும் செய்து விட்டு நீ பெரிய உலகில் இனிதாக வாழ்கின்றாயே.

'கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றறையவை' என்ற குறளுக்கேற்பக் கல்வி, அழிவில்லாச் சிறப்புடைய செல்வம் ஆதலால் அதனை முழுமையாகப் பெற்ற வசிட்டர் முதலிய குருக்களைப் 'பொன் பெற்றார்' என்றார் கைகேயி இராமனைக் காட்டிற்கு அனுப்பும் போது பரதன் கைகேயி நாட்டிற்குச் சென்றிருந்தாலும் அவனுக்காகக் கைகேயி செய்த முயற்சியில் அவனுக்குத் தொடர்பு உண்டு என்று உலகத்தார். நினைக்க இடம் கொடுத்தலால் 'நின் பற்றா நின் மகன் மேல் பழி விளைத்திட்டு' எனப்பட்டது.

9. முன்பு ஒரு நாள் மழுவையுடைய பரசுராமனிடமிருந்து வில்லை வாங்கி அவன் இயற்றிய தவத்தின் பயனை அழித்தாய். உன்னையும் உன்னை மகனாய்ப் பெற்ற அருமையையும், உன் தாயான கோசலையின் வருத்தத்தையும், ஒரு பொருளாகக்

கொள்ளாமல் என்னையும் என் சத்திய வாக்கினையும் பொருளாகக் கொண்டு வனம் புகச் சென்ற என் ஐயனே பெரிய தோள்களையுடைய வேந்தனே, ஏழ்பிறப்பும் உன்னையே மகனாகப்பெறும் பேறு பெறக்கடவேன்.

தவத்தைச் வென்ற வரலாறு: சீதையை மணந்தபின் இராமன் அயோத்திக்கு வரும் வழியில் பரசுராமன் இற்றுப் போன சிவனது வில்லை முறித்தது அறிந்தேன் ஸ்ரீ மஹா விஷ்ணுனது வில்லை வளை 'எனச் சவாலிட' அதனைப் பெற்ற இராமன் அதை வளைத்தான் தவத்தில் வல்ல பரசுராமனை அழிக்காமல் அவனது தவத்தை மாத்திரம் கவர்ந்தான்.

10. மனுகுலத்தவருள் சிறந்தவனே, தேன் விளங்கும் சிறந்த மலர்களைச் சூடிய கூந்தலையுடைய கோசலையும் சுமித்திரையும் மனம் வருந்தக் கூன் உருவம் போல் மனமும் கோணலாகப் பெற்ற வேலைக்காரியான கூனியின் சொல் கேட்ட கொடியவளான கையேயியின் சொல்லை ஏற்றுக் காட்டையே மிக விரும்பி இன்று நீ துறந்த வளமிகு அயோத்தியை நானும் துறந்து மிக விரும்பி வானகமே செல்கின்றேன்.

11. அழகு மிகுந்த கருநிறமுடைய திருமால் இராமனாக அவதரித்துக் காட்டுக்கு சென்றதான அச்செயலைப் பொறுக்கமாட்டாமல் வெற்றி மாலை பொருந்திய பெரியமலை கூர்மை மிகு வேலினைச் செலுத்தவல்ல உறையூர்த் தலைவரும் கொற்றக் குடையினையுடையவரும் ஆன குலசேகரர் அருளிச் செய்த சிறப்பு மிகு தமிழ் மாலையாம். இப்பாசுரங்களைக் கற்கவல்லார் கொடியவழி ஒன்றிலும் செல்ல மாட்டார்கள்.

பத்தாந்திருமொழி – அங்கனெடு மதில் என்ற பாசுரம் 1–11

இராமனிடத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்ட குணசேகரர் இராமாவதாரம் பற்றி இத்திருமொழியில் பேசுவர் திருச்சித்திர கூடத்திருப்பதியில் எழுந்தருளிய இராமபிரானின் சரிதத்தை வால் மீகி முனிவர் பேசியது போல் தாமும் பேசி அனுபவிக்கிறார்.

1. அழகிய இடந்தையுடையதும் நீண்ட மதில்களால் சூழப்பட்டதும் ஆன அயோத்தி என்ற அழகிய நகரத்தில் உலகனைத்தும் விளங்கச் செய்கிற நன் ஒளியினால் சூரிய குலத்துக்கு ஒப்பற்ற விளக்குப்போல் தோன்றித் தேவருக்கு முழுவதும் வாழச் செய்த வீரனை சிவந்த கண்களையுடைய பெரிய கருமேகம் போன்றவனை ஸ்ரீராமனை தில்லை நகர்த் திருச்சித்திர கூடத்தில் எழுந்தருளிய எங்கள் ஒப்பற்ற முதல்வனை எம்பெருமானைக் கண்டுகுளிரக் கானும் நாள் எந்நாளோ.

இராவணன் முதலிய அரக்கர்களின் தொல்லைகளைப் பொறுக்க மாட்டாமல் வந்து சரணடைந்த தேவர்கள் வேண்டு கோளின் படி திருமால் சூரிய குலத்தில் தசரதனை திருமகளாம் அவதரித்து அரக்கரை அழித்துத் தேவர்களைப் பாதுகாத்தமையால் வினைமுழுதும் உயக் கொண்டவீரன் எனப்பட்டார்.

2. வந்து எதிர்ந்த தடாகையின் மார்பைக்கீறி குருதி பொழியுமாறு வலிய அம்பைச் செலுத்தி வேதங்களைத் தம் மிடத்துக் கொண்டவேத முனிவன் விசுவாமித்திரர் செய்தயாகத்தைக் காத்து அந்த யாகத்திற்கு இடையூறு செய்த (சுபாடு முதலிய)

அரக்கர்களின் உயிரை உண்ட இராமன் சிவந்த தளிர்களின் நடுவே செழுமையுடைய குளிர் சோலைகளையுடை தில்லை நகர்த்திருச்சித்திர கூடத்தில் அந்தணர்கள் மூவாயிரம் பேர் துதிக்க அழகிய இரத்தின சிம்மாசனத்தில் இருந்த தலைவன் தாள் அறிவீர்களா.

3. செலவரி படர்ந்த அழகிய கருமையான நீண்டகண்களையுடைய சீதையை மனம்புரியச் சினமுள்ள எருதை ஊர்தியாக உடைய சிவபிரானுடைய வில்லை முறித்து பின்னும் கோடாலியை ஏந்திய பரசுரமானின் கொடிய கட்டமைந்த சிறந்த வில்லைக் கையால் வாங்கி வலைத்து வென்று வேற்படையுடைய மன்னர் மதிலையும் மதிற்பக்கத்தையுடைய தில்லை நகர்ந்திருச்சிச்சிர கூடத்தில் எழுந்தருளிய எவராலும் அடக்கிட அரிதான கொடியவில்லை ஏந்திய பெரிய கையையுடைய இராமனை வணங்குவார் தம் இரு திருவடிகளை வணங்கினேன்.

4. புரிசை மதில் பாங்கர் அட்டானை என்ற மதிற்பக்கத்தில் சொந்தமாக மலர்ந்த மலர்களைச் சூடிய சிறப்புடைய அயோத்தி நகரத்தை நீங்கி கங்கையின் துறையை பக்தனான குகன் புரவி செலுத்தி உதவக் காட்டினை அடைந்து அங்கு வந்த பரதனுக்குத் தன்மரவடியையும் அரசினையும் கொடுத்து சித்திரகூட பர்வதத்தில் எழுந்தருளிய இராமனை இன்று தில்லைநகர்த் திருச்சித்திர கூடத்தில் கண்குளிரக்காணப் பெற்ற இவ்வுலகிலுள்ளோர்களுக்கு தேவர்களும் சிறிதும் ஒப்பாக மாட்டார்கள். கொத்து சிந்திரகூட பர்வதத்தில் இருந்த இராமனைக் கண்ணால் கண்டு அனுபவிக்கப் பெறாத குறையை எக்காலத்திலும் உள்ள திருச்சித்தரகூடத்துப் பெருமானைக் கண்டு தீர்த்துக் கொள்ளலாம் என்ற பொருள் படப்பேசுகிறார்.

5. எதிரியின் வலிமையைத் தோற்கடிக்கும் மலைபோன்ற பெரிய தோள்களையுடைய விராதை அரக்கனைக் கொன்று சிறந்த தமிழ்முனிவராம் அகத்தியர் கொடுத்த கட்டமைந்த வில்லைப் பெற்று மானின் நோக்கத்தைத் தோற்கச் செய்யும் பார்வையுடைய அரக்கி சூர்ப்பனகையின் மூக்கை அறுத்து கரன் தூடணன் என்ற அரக்கர்களின் உயிரைக் கவர்ந்து மாரீச மான் அழிய வில்லை வளைத்து அம்புகளை எய்த இராமபிரானைத் தில்லை நகர்த்திருச்சித்திரக் கூடத்தில் தலை வணங்கிக் கைகூப்பி எந்த வல்லார்கள் உலவும் உலகம் தவமுடையது.

சூர்பனகை இராமலக்குவரிடம் வரும்போது அழகிய வடிவெடுத்து வந்தனள் ஆதலால் கலை வணக்கு நோக்கரக்கி என்றார் மானின் விழி பெற்று மயில் வந்தது என வந்தாள் என்பர் தம்விரும்பு தமிழைச் சிவ பிரானிடமிருந்து உபதேசம் பெற்றும் தென்பொதிய மலைக்குவந்து அகத்தியம் என்ற தமிழ் இலக்கண நூலை இயற்றித் தம்மாணக்கர்க்கும் கற்பித்துத் தமிழைத் தழைத்தோங்கச் செய்தமையால் அகத்தியர் தமிழ் மாமுனி எனப்பட்டார்.

6. தாம் விரும்பும் செல்வமாய்ப் பொருந்திய பிராட்டி பிரந்திட வருந்திச் சடாயு என்னும் கழுகரசை வைகுண்டத்தில் செலுத்தி வாலிக்கு அஞ்சிக் காட்டில் மறைந்து வசிக்கும் சுக்ரீவனுடன் நட்புக் கொண்டு வாலியைக் கொன்று இலங்கையின் தலைவனான இராவணன் செருக்கை அழிந்து அதனால் அனுமனால் எரிப்பித்துத்

தில்லைநகர்த் திருச்சித்திர கூடத்தில் இனிதே எழுந்தருளிய அம்மானை இராமபிரானை ஏத்துவார் தம் இரு திருவடிகளையே துதித்தேன்.

வைதேகி விதேக்ராஜனது மரபில் வளர்ந்தவன் என்று பொருள்படும் இராவணனால் சிறகு அறுபட்ட ஜடாயு இராமபிரான் அவனுக்கு மோட்ச வாழ்வு கொடுத்தமையை வைகுத்தந்து ஏற்றி என்றார்.

7. ஒலிக்கும் கடலை வெப்பமான அம்பினர் கலங்கும்படி எய்து அனைகட்டி அதனால் மறுகரை அடைந்து எரிக்கும் நீண்ட வேற்படையுடைய அரக்கருடன் இலங்கை வேந்தனின் இனிய உயிரைக் கொன்று அவள் தம்பியாம் வீடணனுக்கு அரசும் தந்து திருமகளுடன் இனிதமர்ந்த செல்வனும் தில்லைநகர்த் திருச்சித்திரகூடத்தில் எழுந்தருளியவனும் ஆன இராமபிரானின் திருவடிகள் தலைமேல் கொள்ளுதலாகிய ஆட்சியைப் பெறவிரும்புவேனேயன்றி அதற்கு மாறான அரசினை அரசாக மதிக்க மாட்டேன்.

8. அழகிய நீண்ட பொன்மணி மாடங்களையுடைய அயோத்தி அடைந்து அரசினைப் பெற்றுத்தன்னால் முன்பு சொல்லப்பட்டவனாக இராவணனுடைய பெரிய பழைய கதைகளையெல்லாம் அகத்தியன் வாயால் கேட்டு மிதிலைச் செல்வியாகிய பிராட்டி உலகம் வாழுமாறு பெற்ற மக்களாம் குசலவர்களுடைய சிவந்த பவளத் துண்டு போன்றவாயால் தன் சரிதையான ஸ்ரீ இராமாயணத்தைக் கேட்டவனாகிய திருச்சித்திர கூடத்தில் எழுந்தருளியவனாகிய எம் தலைவனுடைய சரிதையைக் காதால் கேட்போம். அவனைக் கண்ணால் காண்போம் இனிய அமுதத்தை ஒரு பொருளாக மதிக்க மாட்டோம்.

இராமபிரானின் சரிதை தேவ உலக அமிர்தத்தினும் இனிமை மிக்கது. ஆதலால் இன்னமுத மதியோம் என்றார் அகத்திய முனிவர் இராவணன் பற்றியும் அவன் குலத்தவர் பற்றியும் உள்ள செய்திகளையெல்லாம் இராமனுக்கு விளக்கினார் என்பது வரலாறு வால்மீகி முனிவருக்கு சிஷ்யர்களாக இருந்த சீதையின் மக்கள் குசலவர் இராமாயணத்தைப் பாராயணம் செய்து சபையில் பாடியபோது இராமபிரான் அக்காவியத்தைக் கேட்டு உணர்ந்தார்.

இராமாயணத்தைப் பாடி உலகை நன்னெறியில் வைத்தும் இராமனுக்குப்பின் அவர் போலவே நீதிமுறை தவறாமல் உலகை இனிதே ஆண்டும் உலகைக் காத்தமையால் உலகுய்யத் திருவயிறு வாய்த்த மக்கள் என்றார்.

9. மிகுந்த தவமுடைய கம்புகள் அடைந்து அவனைக் கொன்று சிறந்த குமாரன் உயிரைக் காப்பாற்றி அகத்தியன் கொடுத்த நிறைந்த மணிகளால் ஆன அணிகலனைச் சார்த்தி இலவணைத் தம்பி சத்ருக்கனைக் கொண்டு விண்ணுலகம் ஏற்றி துருவாச முனிவர் சாபத்தால் ஆற்றல் விளங்கும் இலக்குவனைப் பிரிந்தவனும் சித்திரக் கூடத்தில் உள்ளவனும் ஆன இராமபிரானை மறவாமல் என்றும் துதிக்கும் மனமுடைய நாம் இனி வரும் துன்பத்தை அடையமாட்டோம்.

மறையோன் உயிர் மீட்ட வரலாறு; இராமபிரான் நீதி தவறாது அரசாண்ட போது 5 வயதுப் பாலகனை இழந்த ஒரு மறையவன் ஆட்சிநெறி வழுவியமையே தன் மைந்தன் இறப்புக் காரணம் என்று கூறி தானும் தன் மனைவியும் அவள் மாளிகை வாசலில உயிர் துறக்கப் போவதாய்க் கூறினான். முனிவர்களை வரவழைத்து இராமன் ஆலோசனை கேட்டபோது நாரதமுனி அதிகாரமில்லாதவன் (சூத்திரகுலத்தவன்) செய்யும் தவத்தின் பயனே அது என்று கூறினார். இராமனும் அதற்கான காரணத்தை தேடுகையில் சூத்திர குலத்தில் பிறந்த சம்புகன் என்பவன் உடலுடன் விண்ணுலகம் செல்லத் தலை கீழாய்த் நின்று தவம் செய்வதை அறிந்து அச்செயல் அறத்திற்குத் துன்பம் எனக் கருதி வாளால் வெட்டி அவன் உடல் நீங்கி நற்கதி பெற உதவினான். அச்சமயத்திலேயே உயிர் நீத்த பிராமண குமாரன் பிழைத்தெழுந்தான்.

இராவணன் என்ற அரக்கனைத் தம்பி சத்ருக்கனனால் அழித்தான் இராமன் என்பது வரலாறு.

இராமபிரானுடன் தனித்து உரையாடிட வந்த கால தேவன் எவரேனும் அப்போது அங்கு வந்தால் உயிரை இழக்கும்படி தண்டனை கொடுத்திடவேண்டும் என்று கூறினார். அதற்கு ஒத்துக் கொண்ட இராமபிரானும் தன் தம்பி இலக்குவனைக் காவல் காக்கச் செய்தார். துருவாச முனி அங்கு வந்து இலக்குவனிடம், உடனே இராமனிடம் தான் வந்ததைத் தெரிவிக்கச் சொன்னார். இல்லையெனில் நகருடன் யாவரும் அழிய சாபம் கொடுப்பதாய்க் கூறினார். உடனே இலக்குவன் அவர் வரவை இராமனுக்கு தெரிவித்தான் காலதேவனை அனுப்பிய பின் துருவாச முனிவரை வரவேற்று அவரது பெரும் பசியை இராமன் போக்கினான். அவரை அனுப்பிய பின், காலதேவனுக்கு செய்த வாக்குத் தவறியதால் இலக்குவனைக் கைவிட்டதாக இராமன் கூற இலக்குவன் சரயூநதிக்குச் சென்று நீராடி மூச்சினை அடக்கி உயிரைப் போக்கினான். அதனால் முனிவன் வேண்ட 'திறல் விளங்கும் இலக்குவனைப் பிரிந்தான் தன்னை' என்றார்.

10. அன்று அசையும் பொருள்களையும் அசையாய் பொருள்களையும் வைகுண்டத்திற்குப் போகச் செய்து வலிமையுடைய பாம்பிற்குப் பகைவனாகிய கருடன் மேல் ஏறி அசுரர்களை வென்று அழகிய நீண்ட கைகள் நான்கும் விளங்க. விண்ணுலகத்தார் எதிர் கொண்டு, வரவேற்கத் தன் இடமான அவ்வைகுண்டம் சென்று இனிது வீற்றிருந்த தலைவனை திருச்சித்திர கூடத்தில் என்றும் இருக்கும் அவன் இந்த இராமபிரானே என்று அறிந்து துதித்து அவனுக்கு அடியவர்களான நீங்கள் நாள்தோறும் எப்போதும் வணங்குங்கள்.

11. திருச்சித்திரகூடத்தில் ஆற்றல் மிக்க அனுமனுடன் வீற்றிருக்கும் இராமனைக் குறித்து அழிவில்லாப் புகழுடைய தசரதனின் மகனாய்ப் பிறந்தது முதல் மோட்ச உலகம் அடைந்தது வரை ஸ்ரீ இராமாயண கரை முழுவதையும் அமைத்து, கொல்லும் இயல்பான கருவிகளையுடைய படைகளையும், வெற்றியும் ஒளியும் உடைய வாளினையும் கொண்ட உறையூர்த் தலைவரும் கொற்றக் குடையினை உடையவரும் ஆன குலசேகரர் அருளிய சிறந்த இயல்பினையுடைய இனிய தமிழ் மாலையாம் பத்துப் பாசுரங்களையும் கற்க வல்லவர்கள் நல்ல திகழ் ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளை அடைவார்கள்.

1. குலசேகரர். திருவேங்கடத் திருமாலினிடத்து ஆழ்ந்த காதல் கொண்ட பாங்கினை விளக்குக.

இறையின்பமே எல்லையில்லாப் பேரின்பம் என்று இறையடியார்கள் கூறி அப்பேரின்ப வெள்ளத்தில் என்றும் திளைத்திட விரும்புவார் வைணவ ஆழ்வார்களில் சிறந்த புலவராகப் பாராட்ட தக்க குலசேகரர் தம் பெருமாள் திருமொழியில் திருமாலினிடத்துத் தீராக் காதல் கொண்டு அவரின் இறையியல் புகழைப் பலபடியாகப் பாராட்டுவர். எல்லாம் வல்ல இறைவனை அடைய வேண்டுவோர்க்கு அப்பரம் பொருளை அடைந்த பின் அனைத்தும் எளிதாகவே அமைகின்றன அதற்காக இறைபோக இன்பத்தில் மூழ்கிட விரும்பும் அடியவர்கள் அதனிடம் செலுத்தும் கருவியாய் மனிதப் பிறவியைத் தேர்ந்தெடுத்தனர். 'பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்' என்றார் காரைக்கால் அம்மையார் 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' (தேவர் 4814) என்றார் அப்பர்.

மனிதப் பிறவியே அன்றியும் வேறு எந்தப் பிறவியானாலும் இறைவனை மறவாதிருக்கும் நிலைவேண்டும் என்று வேண்டியவர்களும் அடியவர்களே அப்பர்.

புழுவாய்ப் பிறக்கிலும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரந்தர வேண்டும் இவ்வையகத்தே (தேவர் 4.9 5.8) என்றார் குலசேகரர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தும் நிலவுலகை ஆளும் அரசனை இலக்குவன் போல் விரும்பவில்லை என்பதை 'மண் அரசும் யான்வேண்டேன்' என்ற அவர்தம் கூற்றே விளங்கும் இறைவனோடு உறையும் வாழ்வே பெருவாழ்வு எனக் கொண்ட இலக்குவன் போல் இருவரும் திருமாலுடன் பொருந்தும் அவ்வாழ்வே இனிய வாழ்வு என்று கருதினார் கனியிலும் கட்டிபட்ட கரும்பினும் இனியனல்லவா இறைவன்? அவ்விறைவன் உறைந்துள்ள திருவேங்கடம் வைணவர்க்கு கண் போன்றது. வான் ஆளும் செல்வமும் மண் அரசும் இம்மலையிலுள்ள புதருக்கும் ஈடாகா என்பதை மனதில் கொண்ட இவர் இம்மலையுடன் தொடர்புடைய எந்த பிறவியாகினும் பெற விழைகின்றார்.

ஊனையுண்டு ஊனைப் பெருக்கும் மானிடப்பிறவி விரும்பாத குலசேகரர் திருவேங்கடத் திருமாலினிடம் தொடர்பு கொள்ளத்தக்க அம்மலையில் வாழும் ஒரு பொருளாகத் தான் பிறக்க வேண்டும் என்பதை 'ஊனேறு செல்வம்' என்ற பாசுரத்தில் விளக்குவர். கற்போரை ஈடில்லாப் பக்திச் சுடரானது கொழுந்து விட்டு எரிந்து முடிவாகத் தான் இறைவனுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற நினைப்பில் அமையதியடைகிறது.

முதல் திருப்பாட்டில் நப்பின்னையை மணக்க ஏழு எருதுகளை வென்றவனாகிய திருமாலுக்கு அடிமைத் தொண்டு செய்ய விழையும் குலசேகரர் திருவேங்கட மலையில் உள்ள கோன் ஏரியில் நாரையாகப் பிறக்க விரும்புவதாயக் கூறுகிறார். சத்துவ குணத்தையுடைய குருகு அலையெறிவுக்கு அஞ்சாது கருமமே கண்ணாய் செயலில் ஈடுபடுவதால் அப்பிறவியை விரும்பினார் போலும்.

" ஊனேறு செல்வத் துடற்பிறவி யான் வேண்டேன்
ஆனேறேழ் வென்றானடிமைத் திறமல்லால்
கூனேறு சங்கமிடத் தான்றன் வேங்கடத்து
கோனேரி வாழுங் குருகாய்ப் பிறப்பேன்"

என்று செல்லலாம் என எண்ணினார் போலும் அதற்காக அப்பிறவியை வேண்டாம் என நீக்குகிறார். மண்ணுலக விண்ணுலக வாழ்வை விரும்பவில்லை எனக் கூறும் அவர் தேன் மலர்ச் சோலைகளையுடைய திரு வேங்கட மலைச் சுனையில் ஒரு மீனாகப் பிறக்கும் விதியுடையவராக விரும்புகிறார். திருமாலின் அவதாரங்களில் முதலாவதும் ஆதார இடமான அந்நிலையைப் பிரிவின் உயிர் தரியாததும் மீனன்றோ? இப்போது இல்லாவிடினும் சரி பல தவங்கள் செய்தபின் வருகின்ற பிறப்பிலாகினும் அவ்வாறு மீனாகப் பிறந்தால் போதும் எனப் பொருள்பட 'மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே' என்கிறார். நீர் நிலை வற்றிவிட்டால் மீன் இறக்க நேரிடும் என நினைத்தாரோ என்னுமளவிற்கு அப்பிறவியையும் விலக்குகின்றார். சிவனும் பரமனும் இந்திரனும் உள்ளே புக முடியாத வைகுண்டமாம் திருவேங்கடத்தே வீற்றிருக்கும் திருமாலின் வாய் நீர் உமிழும் பொன் வட்டிலை ஏந்தி விரைந்து உள்ளே புகும் தன்மையைப் பெறக் கருதுகின்றனர்.

ஏதேனும் குற்றத்திற்காகப் பொன்வட்டிலை ஏந்தியவரையும் விலக்குதல் கூடும் எனக் கருதினாரோ என்றளவில் அப்பிறவியையும் நீக்கும் குலசேகரர், பவள அலை உதவும் பாற்கடலில் துயிலும் திருமாலின் பாத அடிகளைக் காண, வண்டுகளை இசைபாடும் வேங்கட மலையில் சண்பக மரமாய் நிற்க விரும்புகிறார். விடியற்காலையில் மணத்துடன் அலர்ந்து திருமாலை வரவேற்க விரும்புவதை,

'பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துச்
செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவேனே" .

என்ற அடிகள் தெளிவாக்கும். செண்பக மலர் மணமுள்ளது என்ற காரணத்தால் அம்மரத்தையும் பெயர்த்துப் பிறர் வேறு இடத்தில் நடலாம் என அஞ்சினார் போலும் மதயானை மீதிருந்து நுகரும் செல்வத்தையும் அரசையும் தான் விரும்பவில்லை எனக் கூறி வேங்கட மலையில் புதராய் நிற்கும் அருளை வேண்டுகிறார். திருவேங்கடப் புதரை நோக்க அரச செல்வமும் அற்பமாக அவருக்குக் காணப்படுகிறது.

புதரையும் இப்பாழும் மனிதர் களைந்து விடலாம் என நினைக்கும் குலசேகரர் என்றும் ஒரு தன்மையாய் இருக்கும்படி அம்மலையிலேயே பொன்மையான சிகரமாய் ஆக விரும்புகிறார் சிகரத்தையும் திருவுருவங்கள் செய்வதற்குப் பெயர்த்து எடுத்துச் செல்ல வாய்ப்புண்டு; மேலும் நில நடுக்கத்திலும் மலைச்சிகரம் அழியலாம் எனக் கருதியிருக்கலாம் குலசேகரர். அதனால் நிலவுக்குடைக்கீழ் ஆளும் செல்வத்தையும் மதிக்காத அவர் தேன் மலர்ச் சோலைகளுடைய அத்திருமலைமேல் ஒரு காட்டு ஆறாகப் பெருகும்படியான கருத்துடையவராக ஆகின்றார். காட்டு ஆற்றை எவரும் பெயர்க்க முடியாதன்றோ?

"வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவர்தம்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கட மலைமேல்
கானாறாய்ப் பாயும் கருத்துடையே னாவேனே"

என்கின்றார். திருமாலினிடத்துத் தீராக் காதலால் அரச பதவியை உதறியவர் குலசேகரர். ஆதலால் 'மன்னவர் தம் கோணாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்' என்கிறார்.

அடுத்து சிவபிரான் பிரமன் இந்திரன் ஆகியோர் தம் வேள்வியின் பயனாக அவர் தம் குறை தீர்க்கும் வேதமுதல்வன் திரு'மாலினது வேங்கட மலைமேல் செல்லும் வழியாக கிடக்க விரும்புகிறார். காட்டாறும் சில நாளில் வற்றிவிடலாம் எனக் கருதிவிட்டாரோ? ஆதலால் வேங்கட மலையில் அடியவர் பாதங்கள் படும் வழியாகப் பிறக்க விரும்பினர் எனலாம். இக்கருத்தினையும் மாற்றி திருவேங்கட மலைக் கோவிலின் உள் வாசலில் அடியவரும் தேவரும் தேவமாதரும் இடைவிடாமல் செல்லுகின்ற படியாகப் பொருந்தித் திருமாலின் பவளம் போன்ற வாயினை காண விரும்புகிறார்.

"நின்கோயிலின் வாசல் அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும் படியாய்க் கிடந்து உன்பவளவாய் காண்பேனே"

வேங்கட மலையில் பல வழிகள் இருக்க மெய்யடியார் இடைவிடாமல் செல்லும் ஒரே வழி படிதான் என நினைத்து அப்படியாக அமைய விரும்புகிறார். அடியவர்தம் நலனை நாடும் பெருமான் அதரங்கள் படியாய் இருக்கும் தன் நலன் குறித்தும் கேட்கக் கூடும் என்பதால் 'பவளவாய் காண்பேனே' என்றார்.

செல்வந்தர் ஒருவேளை படியினைப் பொன்கவச்சத்தால் அமைத்தால் அப்போது திருமாலின் தரிசனம் கிடைக்காது போகலாம் எனகருதி அதனையும் தவிர்க்க விரும்பும் குல சேகரர் திருவேங்கடப் பொன்மலை மேல் ஏதேனும் ஒரு பொருளாக பிறக்க வேண்டும் என்று இறுதியில் கூறுகிறார். ஒவ்வொரு பிறப்பிலும் ஏதேனும் இடையூறு எனவும் எல்லாம் வல்ல இறைவனே எந்தப் பிறவியை எவருக்கு கொடுக்கலாம் என முடிவெடுப்பர் எனவும் அறிந்தவர் குலசேகரர். ஆதலால் ஒரு பிறவியையும் தாமாக வேண்டிகொள்ள விரும்பாமல் 'எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனும் ஆகுவேனே' என்கிறார்.

இவ்வாறு குலசேகரர் திருவேங்கடப் பொன்மலையிலுள்ள திருமால் மீது பெருங்காதல் கொண்டு அவரைவிட்டு நீங்காத வகையில், அம்மலையில் சிறிய துகளேயாயினும் அது பெருமாளுக்கு இணை என நினைத்து ஏதேனும் அம்மலைமேல் ஆவேன் என்கிறார். இவர் பாசுரங்களில் ஆழ்ந்த, பின்னால் வந்த வீரராகவ முதலியார் தம் திருவேங்கடக் கலம்பகத்தில்

"மாடாக நிழற்றுசெழு மரனாகத் தவச்சிறிய
பூடாகக் குழைதவநறும் புதலாக வழிப்படுமோ
ரோடாகப் பெறுவமெனில் உயிர்கள் நற்கதிபெறலாம்
வீடாகத் திருநெறிமால் வீற்றிருக்கும் வேங்கடத்தே"

என்று கூறுவர்.

2. இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பைக் குலசேகரர் உவமைகளால் விளக்கும் பாங்கினைக் கூறுக.

திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே

. . . . . .

. . . . . .

கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே

. . . . . .

. . . . . .

நாராய ணாவென்னா நாவென்ன நாவே”

என்று ஆய்ச்சியர் தம் குலத்து இறைவனாம் திருமாலின் சிறப்புகள் கருதி அவரைப் போற்றிப் புகழ்ந்து ஏத்துவர். உயர்ந்த அரச குலத்தில் பிறந்தவராயினும் தம் செல்வத்தையும் அதிகாரத்தையும் வெறுத்து அத்திருமாலின் சிறந்த அடியவரானவர் குலசேகரர். அவர் இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பை நன்கு அறிந்தவர். உயிரான ஜீவாத்மா இறைவனாம் பரமாத்மாவிற்கு எல்லா நிலையிலும் அடிமைப்பட்டது என்பதை உணர்ந்தவர். உயிர்களை வாழ்விக்க கடமைப் பட்டவன் அந்த இறைவன் என்பதை மிகத் தெளிவாக கண்ட அவர் அவனையன்றி புகலிடம் தருவார் ஒருவருமிலர் என்பதை நன்கு தெளிந்தார். இவ்வுண்மையைத் திருவித்துவக் கோட்டம்மான் முன்னிலையில் விண்ணப்பிக்கின்றார்.

திருவித்துவக் கோட்டம்மான் தனக்குதந்த பிறவித் துன்பத்தைக் களையாவிட்டாலும் அவன் திருவடிகளே சரணம் ஆகும். வேறு புகலிடம் இல்லை என்கின்றார். பெற்ற தாயானவள் மிகுந்த சினம் கொண்டு தன் குழந்தையை வெறுத்து ஒதுக்கினாலும் அக் குழந்தையானது அத்தாயின் அருளையே நினைந்து அழும் அது போல் தனக்கு அருள் செய்யாமல் இறைவன் ஒதுக்கினாலும் அவனருளையே நினைத்து அக்குழந்தை போல் அழுவதாய் கூறுவர்.

‘தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவும் மலர்பொழில் சூழ்வித்துவக் கோட்டம்மானே
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள் தன்
அருள் நினைத்தே அழும்குழவி அதுவேபோன் றிருந்தேனே”

என்பர். இறையை தாயாகவும் தன்னை குழந்தையாகவும் பாவிக்கிறார்.

தன் கணவன் கண்டவரும் இகழுமாறு செயலை செய்திடினும் அவனையன்றி வேறொருவரையும் நினையாத உயர்குலகற்புடைய மகள் போல் தன்னை இறைவன் ஆட்கொள்ளாவிடினும் ஒலிமிகு வீரக் கழலுடைய திருவடிகளையே சரணமாகக் கொள்வதாய் கூறுவர்.

“கண்டார் இகழ்வனவே காதலன்றான் செய்திடினும்
கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்போல்”

தான் இருப்பதாய் கூறுவர். தன்னை கற்புடைய மகளாகவும் இறைவனைத் தன் கணவனாகவும் கொள்கின்றார்.

மீன்கள் வாழும் வயல் சூழ்ந்த திருவித்துவக் கோட்டம்மானை விளிக்கும் குலசேகரர் மாலையணிந்த மன்னன் பாதுகாத்திடாமல் எத்தகு இன்னலைச் செய்திடினும் அவனும் செங்கோலையே நோக்கி வாழும் குடிபோல் தனக்கு இறை அருள் செய்யாதிருந்தாலும் அவனையல்லாமல் வேறொருவரையும் பற்றுவதில்லை என்கிறார். மன்னன் பாதுகாவாதிருத்தல் துன்பம் செய்தல் ஆகிய இரண்டும் இறைவன் அருள் செய்யாமை ஒன்றனுக்கு இணையாக இருத்தலைச் சுட்டுகிறார். மீனினங்களையே வாழவைக்கும் இறைவன் தனக்கு அருள் காட்டாதிருப்பானோ என்பது அவரது குறிப்பு. இறைவனை மன்னனாகவும் தன்னைக் குடிமகனாகவும் கருதுகிறார்.

மருத்துவன் வாளால் அறுத்துச் சுட்டாலும் அம்மருத்துவனிடம் நீங்கா அன்பு கொண்ட நோயாளி போல் தன் மாயையால் நீங்காத துன்பம் தரினும் அவ்இறைவனுக்கே அன்பு செய்யும் ஆளாக இருந்து அவன் அருளையே நோய் தீர்க்கும் வழி. பிறவி நோயை போக்கும் வழி என்பது உணரப்படும். பரமாத்மாவிற்கும் ஜீவாத்மாவிற்கும் உள்ள உறவு மருத்துவனுக்கும் நோயாளிக்கும் உள்ள உறவு போன்றது என்பது தெளிவாகும்.

கொடிய கண்களையுடைய வலிய குவலயாபீடம் என்ற யானையை கொன்றவனே என இறைவனை அழைக்கும் குலசேகரர் அலையெறியும் கடலினிடையே 4 திக்கிலும் சென்று பார்த்து எங்கும் கரையைக் காணாமல் திரும்பி வந்து தான் முன்பு பொருந்திய மரக்கலத்தின் பாய் மரத்தினைச் சேரும் பெரிய பறவையைப் போல் தான் வித்துவக்கோட்டு அம்மானின் திருவடிகளில் சரணம் அடைவதன்றி வேறு எவரிடத்தும் வாழமுடியாது என்கிறார்.

"வெங்கட்டிண் களிறடர்த்தாய் வித்துவக்கோட்டம்மானே
எங்குப்போ யுய்கேன் உன்னிணைடியே அடையல்லாமல்
எங்கும் போய்க் கரைகாணாது எறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே" (55)

என்பர். கொடிய பகையழித்தவனுக்குத் தன் துன்பம் நீக்கல் அருமையானது என்று பொருள்பட 'வெங்கண் திண்களிறு அடர்த்தாய்' என்கின்றார். கடல் பிறவித் துன்பத்துக்கும் கப்பல் திருமாலுக்கும். பாய்மரம் இறைவன் திருவடிக்கும் பறவை குலசேகரர்க்கும் உவமைகள்.

செந்நிற நெருப்பு தானே அருகில் வந்து வெப்பம் தரினும் செந்தாமரை மலர் வெங்கதிரவனுக்கு அல்லாமல் நெருப்புக்கு மலராது பிறவியத் துயர் தீர்த்து அருள் செய்யாதிருப்பினும் இறைவனின் உயர் குணங்களுக்கே அல்லாமல் வேறொன்றுக்கு நெஞ்சுருகுவதில்லை என்கிறார். இறைவனுக்கு கதிரவனும் குலசேகரர்க்குத் தாமரையும் உவமைகளாகும்.

மேகமானது மழை பொழியாமல் எத்தனைக் காலமும் இருப்பினும் பசிய பயிர்கள் கருநிறம் கொண்டு எழும் பெரிய மேகங்களையே நோக்கும். அப்பயிர் போல் தனக்கு அருள் செய்யாமல் தன் துயர்களை போக்காமல் இருந்தாலும்' தான் மனத்தினை

இறைவன்பால் மிகவும் செலுத்துவதாய்க் கூறுகிறார். மேகத்தையன்றி வேறொரு நீர்நிலையை தேடிப் போதல் முடியாது போல் இறைவனையன்றி தான் வேறொருவரைத் தேடிப் போதல் முடியாது என்கிறார். பரமாத்மாவிற்கும் ஜீவாத்மாவிற்கும் உள்ள உறவு மேகத்திற்கும் பயிருக்கும் உள்ள உறவு போன்றது என்பது தெளிவாகும்.

"எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மனத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர் விட்டாவிடினும் வித்துவக்கோட்டம்மா என்
சித்தமிகு வுன் பாலே வைப்படை யேனே"

என்பர்.

திரண்டு விளங்கும் நதிகள், எல்லாவிடமும் ஓடி முடிவில் ஆடிக்கடலையே அடையுமேயன்றி மற்றொரிடம் புகாதது போல் தன் மனத்தில் விளங்கும் வித்துவக்கோட்டு அம்மானின் சிறப்பு மிகு குணங்கள் தவிர மற்றோரிடத்தில் ஆழ்ந்து விடமுடியாது என்கிறார் குலசேகரர். ஆறானது தனியே நிற்கமாட்டாது கடலில் புகும்; புகுந்தபின் ஆட்கடலில் அலையினும் இறைவனது குணக்கடலில் ஆழ்ந்தபின் அதனின்று மீள்வதில்லை என்பர். கடலுக்கும் நதிக்கும் உள்ள உறவு போன்றது பரமாத்மாவிற்கும் ஜீவாத்மாவிற்கும் உள்ள உறவு என்பர்.

இறைவனையே விரும்பி மிகுந்த செல்வத்தை விரும்பாதவனைத் தானே வந்து சேரவிரும்பும் செல்வம் போல் இறைவன் விரும்பாவிடினும் அவனையே அடைய விரும்புவதாகக் கூறுகிறார். பரமாத்மாவிற்குச் செல்வத்துக்குரியவனும், ஜீவாத்துமாவிற்குச் செல்வமும் உவமைகளாகும்.

நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான் வேண்டும் செல்வம் போல் மாயத்தால்
மின்னையே சேர்திகிரி வித்துவக் கோட்டம்மா
நினையே தான்வேண்டி நிற்பனடியேனே"

என்கிறார்.

இவ்வாறு இறைவனாம் பரமாத்மாவிற்கும் உயிராம் ஜீவாத்மாவிற்கும் உள்ள தொடர்பைத் தாய் குழந்தை கணவன் - மனைவி மன்னன் - குடிமகன் - மருத்துவன் நோயாளி, மரக்கலம் - பறவை கதிரவன் - தாமரை, மேகம் - பயிர், கடல் நதி செல்வத்துகுரியவன் செல்வம் ஆகிய உறவுகளை உவமையாக்கி விளக்குவர் குலசேகரர்.

3. கண்ணனுக்கும் இராமனுக்கும் தாயாய் இருந்து அவர்களை அனுபவிக்கத் துடித்தவர் குலசேகரர் விளக்குக.

கண்ணனுடைய குழந்தைபருவத் திருவிளையாடல்களை யசோதை கண்டு களித்து இன்புற்றாற்போல் தான் இன்புறவில்லையே எனத் தேவகி புலம்புவதுபோலும் குழந்தை

இராமனுக்கு தாயாய் இருந்து அவனை தாலாட்டி இன்புற்று மகிழ்ந்து கூறுவது போலும் குலசேகரர் முறையே புலம்பியும் மகிழ்ந்தும் இறைவனாம் திருமால் சிறப்புகளில் ஆழ்ந்திருப்பதை அவரது 'பெருமாள் திருமொழி' ஏழு எட்டாம் திருமொழிகள் விளங்கும்.

கண்ணனை ஆலையிட்டு ஆடத்தகுந்த நீண்ட கரும்பே தாமரைக் கண்களையும் கடல்நிறமும் கொண்டவனே யானைகு .டி போன்றவனே மணமிகு நீண்ட குழலையுடையவனே தாலேலோ என்றெல்லாம் கூறி தான் மகிழவில்லையே என்று குலசேகராகிய தேவகி கூறுவதினின்று கண்ணனின் புறஅழகில் எந்த அளவிற்கு ஆட்பட்டார் என்பது புலனாகிறது.

இராமனைக் குழந்தையாக ஏற்ற குலசேகரர் இராமனுக்கு உறவுடையார்களை குறிப்பிட்டு அவன் குலப்பெருமையின் அழகினை மகிழ்ந்து பாராட்டுகிறார். நிலைத்த புகழுடைய கோசலையின் அழகிய வயிற்றில் உதித்தவன் தன் கருமணி, இன்னமுது, பெரும் புகழ்ச் சனகன் மகன் தசரதன் பெற்ற செல்வம் மிதிலையரசன் மகளாம் சானகிக்கு கணவன் வீரமகள் தங்கும் திருமார்புடையவன் அயோத்திமாநகர்க்கு அரசன் முனிவர்களுக்கு அருமருந்தானவன் சிறிய தாயாராகிய கைகேயின் சொல் ஏற்றவன் என்றெல்லாம் பாராட்டி மகிழ்கின்றது குலசேகரனின் தாயுள்ளம்.

கண்ணனின் குழந்தைப் பருவத்து செயல்களை தான்கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் புலனுணர்ச்சியால் மகிழவில்லை என்று புலம்புகிறாள் தேவகி. மேற்கட்டியில் தொங்கவிடப்பட்டபொருள் இனிதாகப் பார்த்து சிவந்த திருவடிகளை முடக்கியும் விரல்கள் உள்ளங்கையில் அடங்க அணைந்து யானை போல் துயிலும் அழகைக் காணாத பாவி என நொந்து பேசுகின்றாள் (காண்டல் உணர்வை இழத்தல்)

அடக்கியாரச் செஞ்சிறு விரலனைத்தும் அங்கையோட்டணைந்த தானையிற்கிடந்த
கிடக்கைகண்டிடப் பெற்றிலனந்தோ கேசவா கெடுவேன் கெடுவேனே (72)

நெற்றிச் சுட்டி அசைய முத்தம் கொடுப்பதையும் தந்தை வசுதேவன் போன்ற வடிவழகைக் கண்டுமனம் குளிருவதையும் திருவாயில் விரல்களைச் சேர்த்து சீற்றமுடன் உரைக்கும் மழலையும் தான் அனுபவிக்கவில்லையே என்கின்றாள் (உற்றறிதல், காண்டல், கேட்டல் உணர்வுகளை இழத்தல்) கண்ணன் தவழ்ந்து எழுந்து தடுமாறி நடந்து வந்து தன் மார்பில் அணையும் பேற்றினைப் பெறவில்லை. (உற்றறிதல் உணர்வை இழத்தல்) அழகிய சிறுவிரல்கள் அனைத்தும் வாரி அமுது செய்த உணவின் எச்சிலை தான் உண்ணப் பெறவில்லை (உண்டல் உணர்வை இழத்தல்) தளிர் போன்ற ஒரு கையால் மார்பை வருடவும் ஒரு மார்பு வாயிலிருக்க இடையிடையே தன் முகத்தை நோக்கி புன்னகை செய்து நோக்கவும் ஆன அப்பேறுகளைப் பெறவில்லை என்றெல்லாம் அரற்றுகின்றாள். (உற்றறிதல், காண்டல், உணர்வுகளை இழத்தல்)

வெண்ணையைக் கையால் அளந்து உண்ணும் தளிர்க் கரங்கள் தாம்புக் கயிற்றால் அடிக்க அஞ்சும் நிலை வெண்தயிர் பூசிய வாய் முழுவதும் அஞ்சி நோக்கும் அப்பார்வையும் சிவந்த வாய் துடிப்பதும் தொழுவதும் ஆகிய இவற்றை அனுபவித்த யசோதை மேலான இன்பம் பெற்றாள் என்கிறாள். இவை தவிர கோவர்த்தன மலையைக் குடையாகத் தாங்கியதும் குரவைக் கூத்தும் குடக்கூத்து ஆடியதும் கன்றாய் வந்த

அசுரனைக் கொண்டு விளங்காய்களை உதிர்த்ததும் காலால் காளியநாகத்தின் தலையை மிதித்தும் ஆகிய நல்ல பிள்ளை விளையாட்டுகளில் ஒன்றையும் தம் உள்ளம் குளிரக் காணவில்லையே எனக் கலங்குகிறாள்.

"குன்றினால் குடைகவித்ததும் கோலக்குரவை கோத்ததும் குடமாட்டும் கன்றினால் விளவெறிந்தும் காலால்காளியன் தலை மிதித்ததும் முதலா வென்றிர் பிள்ளை நல்விளையாட்டமனைத்திலும் அங்கென்னுள்ள முள்குளிர் (79) ஒன்றுங்கண்டிடப் பெற்றிலேனடியேன்".

என்பாள் பூதனையிடம் நச்சுப் பாலுண்டும் தன்னிடம் அருள் செய்தமையால் உயிரோடு வளர்ந்ததாகக் கூறி அவனுக்குப் பால் கொடுக்கப் பெறாத தன்மார்பை வீணாகச் சுமப்பதாய்ப் புலம்புகிறாள்.

தேவகியாக மாறிக் கண்ணனிடத்துத் தாய் உறவு கொள்ளத் துடித்த குலசேகரர் கோசலை போல் ஒரு தாயாக மாறிக் குழந்தை இராமனைத் தாலாட்டி மகிழும் நிலையிலும் தாயுறவு கொண்டு அக மகிழ்கிறார். குழந்தையுடன் உறவுகொண்டாரையெல்லாம் குறிப்பிட்டுக் கூறியதோடு அவ் இராமன் செய்த நன்மைகளையும் சுட்டிக் கூறி உலகத்தவர் அவன் பெருமையறியச் செய்கிறார். இராமன் செய்த நன்மைகள் நல்லன செய்தல் அல்லன அழித்தல் என்ற இருநோக்கில் அமைகின்றன. தீமைகளைதலும் நன்மை செய்தலேயன்றோ?

திருவுந்தியில் அளர்ந்த தாமரையில் பிரமனைத் தோற்றுவித்து உலகங்களைப் படைத்தவன் திருமால். அச்செயலை "புண்டரிக மலரதன் மேல் புவனியெல்லாம் படைத்தவனே' தாமரைமேலேயெனவனைப் படைத்தவனே' என்று இரு இடங்களில் குறிப்பிடுகிறார். அதுமட்டுமல்லாமல் தேவர்கள் அசுரர்கள் திசைகள் எல்லாம் படைத்தவனும் அவனே என்னும்போது அவன் தாயின் மகிழ்ச்சியை என்னென்பது? கனியினால் பிசைந்து எதனையோ சுட்டிட தான் மகன் அழகிய அரவம் செய்ததாக உலகியல் தாய்மார் மகிழ்வர். அப்படியெனில் உலகங்களையும் அண்டசராசரங்களையும் படைத்த மகன் செயலுக்கு எப்படியெல்லாம் மகிழ்வாள் அத்தாய்?

வேண்டியவர்க்கும் வேண்டியவாறு அருள் சுரப்பவன் இறைவன். அவ் இறைவன் அருளால் நன்மையடைந்தோர் பலர் பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுது அருளியவன். அவனே மேலும் தான் ஆளவிருந்த அருஞ்செல்வமாம் அரசை அவ்இறைவனாம் இராமன் பரதனுக்கே அருள் செய்தனவல்லவா? அதோடு தான் அருங்கானமும் சென்றவனன்றோ? இந்த அரிய செயல்களை எண்ணி வியக்கும் குலசேகரர்,

"பாராளும் படர் செல்வம் பரதநம்பிக்கே அருளி
ஆராவன் பினையவனோடு அருங்கானம் அடைந்தவனே
சீராளும் வரைமார்பா திருக்கண்ண புரத்தரசே
தாராளும் நீண்முடி என்தாசரதீ தாலேலோ"

என்று பாடி மகிழ்கிறார்.

மேலும் வாலியைக் கொன்று அவன் தம்பியான சுக்ரீவனுக்கு அரசை அளித்தான்; வீடணனுக்கு அருள் செய்தான். இக்காரணங்களால் இளையவர்கட்கு அருளுடையாய் இராகவனே தாலேலோ" என்கின்றார்.

'நல்லன செய்தல் ஆற்றீராயினும் அல்லன செய்தல் ஓம்புமின்' என்றார் சங்கச் சான்றோர். தீமைகளைக் கண்டு அஞ்சுகின்ற உலகில் தீயன செய்பவரை அழிக்க முற்படுகிறான் இறைவன். தென்னிலங்கை மன்னனாம் இராவணனை வதம் செய்யவே அவ் அவதாரம் எடுத்தவன் இராமன். 'தென்னிலைக்கோன் முடிகள் சிந்துவித்தாய்' மலையதனால் அணைகட்டி மதிளிலங்கை அழித்தவனே வளையவொரு சிலையதனால் மதிளிலங்கை அழித்தவனே' என்பன அக்கருத்தை விளக்கும்.

முனிவர்க்கெல்லாம் அருமருந்தான இராமன் அம்முனிவர் தம் வேள்வியைக் காக்கும் பொருட்டு அவரை எதிர்த்த தடாகையைப் பொருது கொன்றான், அச்செயலை

"திண்டிறலாள் தாடகைதன் உரமுருவச் சிலைவளைத்தாய்
கண்டவர் தம்மனம் வழங்கும் கணபுரத்தென் கருமணியே
எண்டிசையும் ஆளுடையாய் இராகவனே தாலேலோ"

என்று குறிப்பிடுவர்.

இவ்வாறாகத் தேவகி புலம்பலிலும் தாய் தாலாட்டலிலும் முறையே கண்ணன் இராமன் ஆகியோர் தம் பெருமைகளை அனுபவிக்கும் குலசேகரர் கற்போரை களிபேருவகைப்படுத்துவர்.

வினா

1. குலசேகரர் அடியவர்களை எவ்வாறு போற்றுகிறார்.
2. குலசேகரரின் இயற்கைத் துறவு நிலையைப் புலப்படுத்துக.
3. வேங்கடமலையில் தான் எவ்வாறு பறக்ககண்டேன் எனக் குலசேகரர் கூறுகிறார்?
4. கிருஷ்ணாவதாரச் செயல்களை எவ்வாறு உரைக்கிறார்?
5. இராமாவதாரச் சிறப்பினை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

சீவக சிந்தாமணி : சுரமஞ்சரியார் இலம்பகம் – அறிமுகம்

'சீவக சிந்தாமணி' என வழங்கப்பெறும் இந்நூலை எழுதியவர் திருத்தக்கத்தேவர் என்பவர். இந்நூல் ஒரு காப்பியக் கவிதையாகும். காப்பியக் கவிதை என்பது ஆங்கிலத்தில் Epic எனப் பெயர் பெறும். "வீரச் செயல் வெளிப்பாடுகளுடன் ஆழ்ந்த தத்துவப் பொருளுடன் கவிதை வடிவத்தில் அமைக்கப்பட்டுச் சொல்லப்படும் நீண்ட கதையே காப்பியம் என்பதாகும். சுருக்கமாகச் சொன்னால், கதை உரை கவிதை எனலாம்.

தமிழ்நாட்டில் முதலில் தோன்றிய காப்பியங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும். இவை கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றின. இவற்றை அடுத்து ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகு பல காப்பியங்கள் தோன்றின. இவை பெரும்பாலும் சமண, பௌத்த தத்துவங்களைச் சார்ந்தே இருந்தன. சீவக சிந்தாமணியும் கி.பி. 9ம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய ஒரு சமணத் தத்துவஞ் சார்ந்த காவியமே. இது பதிமூன்று இலம்பகங்களை அதாவது பகுதிகளைக் கொண்ட பெருங்காப்பியம். சச்சந்தன் என்ற மன்னனின் மகன் சீவகன் பல்வேறு வீரச்செயல்களும் அறிவுச் செயல்களும் நிகழ்த்தித் தன் தந்தையைக் கொன்ற கட்டியங்காரன் என்ற அமைச்சனை வென்று அரசனாகிப் பின் இறுதியில் தன் ஆட்சியை மகனிடம் ஒப்படைத்து விட்டுத் துறவு மேற்கொள்கிறான். சமணர்க்குரிய அருகதேவனை வணங்கி, நோன்பியற்றித் தவநிலை பெறுகிறான். இந்நிகழ்ச்சியை கூறுவதே இக்காப்பியத்தின் போக்காகும்.

இனி, இந்நூலின் பெயர் சீவகசிந்தாமணி என்பது தானா? திருத்தக்கத்தேவர் நூலின் தொடக்கத்தில் 6-ஆம் பாடலில் சீவக சாமியின் சரிதையைச் சொல்லப் போவதாகக் கூறுகின்றார். நூலில் இறுதியான முத்தி இலம்பகத்தில் ஒரு பாடலில் [பாடல் 3143] "சிந்தாமணி ஓதி உணர்ந்தார்" என்ற பெயர் இந்நூலுக்கு ஆசிரியரே தந்திருப்பதைக் காண்கிறோம். மேலும் சீவகன் பிறந்தவுடன், சிந்தாமணி என்று அவன் தாயால் வாழ்த்தப் பெறுகிறான். எனவே, சிந்தாமணியாகிய சீவகனின் கதை அல்லது சரிதை சீவக சிந்தாமணி என வழங்கப்படுவது பொருத்தமே.

சிந்தாமணி என்றால் வேண்டியவற்றைத் தரும் ஒரு தேவலோகப் பொருள் [காமதேனு போல்] எனப்படும். எனவே இந்த வகையிலும் பல்வேறு அறிவுத் துறைகள் நிரம்பிக் கிடக்கும் இந்நூல் சிந்தாமணி எனப்படுவது மிகவும் பொருத்தமே. [பல்வேறு பொருளகம்] என்ற பொருள் பொருத்தத்தில்தான் கோவையிலுள்ள கூட்டுறவுச் சிறப்பங்காடிக்கு [Super Market] இந்நூலின் பெயரான சிந்தாமணியை வைத்துள்ளனர்

இச்சீவக சிந்தாமணியின் சுரமஞ்சரியார் இலம்பகப் பகுதிக்குரிய பாடங்கள் இரண்டு வகையாக அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று இலம்பகத்தின் பாடல் கருத்துக்களை

ஆசிரியருடைய போக்கில் அப்படியே உரைநடையாகத் தருவது. இரண்டாவது சில முக்கியத் தலைப்புகளில் செய்திகளைக் கட்டுரைகள் போல அமைத்துத் தருவது.

சுரமஞ்சரியார் இலம்பகம்

சீவக சிந்தாமணியில் இது ஒன்பதாவது இலம்பகம். 107 பாடல்களைக் கொண்டது. சுரமஞ்சரி என்பாளைச் சீவகன் மணந்து கொண்ட நிகழ்ச்சியைக் கூறுவது.

கதைப் பின்னணி

ஏமாங்கத நாட்டில், இராசமாபுரத்து மன்னன் சச்சந்தன் தன் மனைவி விசயையின் அழகிலே மயங்கி ஆட்சியில் கவனமிழந்தான். ஆட்சிப் பொறுப்பை அமைச்சன் கட்டியங்காரனிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தான். ஆனால், கட்டியங்காரன் வஞ்சகமாக மன்னனைக் கொன்றுதானே மன்னனாகிவிட்டான். சச்சந்தன் செய்த மயிற்பொறி ஒன்றின் மூலம் தப்பித்தாள் விசயை. அவள் அப்போது கருவுற்றிருந்தாள். மயிற்பொறியை அவள் இயக்கமுடியாமையால் அது வழியில் ஒரு மயானத்திடை வீழ்ந்தது. அங்கே அவள் ஒரு ஆண்மகவைப் பெற்றாள். அக்குழந்தையின் விரலில் சச்சந்தன் பெயரிட்ட மோதிரத்தை அணிவித்து அவள் மறைந்து நின்றாள். அப்போது இழந்து போன தன் குழந்தையைப் புதைத்தற்கு வந்த கந்துக்கடன் என்னும் ஒரு வணிகன் அக்குழந்தையை எடுத்துக் கொண்டான். அப்போது ஒரு தெய்வம்'சீவக' என்று வாழ்த்தவே, அதற்குச் சீவகன் எனப் பெயரிட்டு வளர்த்தான். விசயை தவவேடம் கொண்டு நோற்று வாழ்ந்தாள். கந்துக்கடன் வீட்டில் கல்வி, வீரம் முதலியவற்றில் வல்லவனாக வளர்ந்து இளைஞனானான் சீவகன்.

அவனுடைய குரு அச்சணத்தியார் மூலம் தன் பழைய வரலாறு தெரிந்து கொதித்தெழுந்தான் சீவகன். ஆயினும் காலம் அறிந்து செயல்பட ஆசிரியர் கட்டளைப்படி காத்திருந்தான். அதன்பிறகு பல வீரதீரச் செயல்கள் புரிந்து ஒரு மாபெரும் வீரனாக வளர்ச்சியுற்று வந்தான். பசுக்களை கவர்ந்து சென்ற வேடர்களை வென்று இடையர்கோன் நந்தகோனின் மகளைத் தன் தோழன் புதுமுகனுக்கு மணம் முடித்தான். வெள்ளிமலை வித்யாதரன் மகள் காந்தவருவதத்தையை யாழ்ப்போரில் வென்று, அவளை மணமுடிக்க நின்ற போது எதிர்த்து வந்த மன்னர்களை வென்றான். பின் அவளை மனைவியாக்கிக் கொண்டான். சுண்ணப்பொடியின் தரம் கூறி, குணமாலையை யானையிடமிருந்து காப்பாற்றி அவளையும் மணந்தான். பின்னர் பல்லவதேயத்தில் சந்திராபம் என்னும் நகரிலுள்ள அரசன் தளபதியின் மகள் பதுமையைப் பாம்பு கடிக்கவே அப்பாம்பின் விடத்தைப் போக்கி அவளையும் சீவகன் மணந்தான். அதன்பின் நாணாத கேமசரியை நாண வைத்து அவளையும் மணந்து கொண்டார். பின்னர் மத்திமதேயத்து ஏமமாபுரத்து மன்னன் தடமித்தன் மகள் கனக மாலையை மணம் புரிந்தான். இவையெல்லாம் சீவகன் நாடெங்கும் சுற்றி வருகையில் புரிந்த வீரச்செயல்களுக்கும் ஆற்றலுக்கும் கிடைத்த பரிசுகள். நாமகள் இலம்பகம் என்ற

பகுதி சச்சந்தன் — கட்டியங்காரன் கதையாகும். சீவகன் பசுக்களை மீட்டதைக் கோவிந்தையார் இலம்பகம் என்ற பகுதியிலும், காந்தருவதத்தையை மணந்ததைக் காந்தருவதத்தையாரிலம்பகத்திலும் காணலாம். மற்றும் குணமாலையார் இலம்பகம், பதுமையார் இலம்பகம், கேமசரியார் இலம்பகம், கனகமாலையார் இலம்பகம் ஆகிய பகுதிகளிலும் சீவகனின் பல்வேறு செயல்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு வரிசையாகக் கூறப்பட்டு வரும் சீவகன் சரிதையில் எட்டாவதாக வரும் விமலையாரிலம்பகத்திற்கு அடுத்து ஒன்பதாவதாக வருவதே சுரமஞ்சரியார் இலம்பகம்.

சுரமஞ்சரியார் இலம்பகம்
கதைச் சுருக்கம்

இராசமாபுரத்தில் சுரமஞ்சரி என்பவளும் குணமாலை என்பவளும் சுண்ணம் [வாசனைப் பொடி] காரணமாக மாறுபட்டுத் தம் சுண்ணங்களுள் நல்லதை அறிய விரும்பினர். அவற்றைக் கண்ணுற்ற அறிஞர். அவற்றைச் சீவகனிடம் காட்டுமாறு கூறினர். அவனோ அவற்றின் தரத்தைத் தேர்ந்து குணமாலையின் சுண்ணத்தை நல்லதென்றான். அதனைக் கேட்டு அவலமுற்ற சுரமஞ்சரி, தன் சுண்ணத்தை இகழ்ந்த சீவகன் பின்னர் வலிந்து வந்து தன்னை விரும்பும்படி தான் நோற்பதாகக் குறிப்பால் உணர்த்தினாள். மற்றைய ஆடவர் எவரையும் கருதாளாகிச் சீவகனையே கருதிக் கன்னிமாடத்தில் நோன்பு இயற்றினாள்.

பேரழகி விமலை என்பவளை மணந்து கொண்ட சீவகனை அவன் தோழர் காமன் எனப் பாராட்டினர். சீவகனின் நண்பன் புத்திசேனன். அந்நகரத்தில் தன் மனைக்கு அருகே ஆடவர் வந்தாலும் உயிரை விடுவதாக நோன்புற்றிருக்கும் சுரமஞ்சரி என்பவளை மயங்கச் செய்து சீவகனை விரும்பச் செய்தால் அவனைக் காமத்திலகன் எனலாம் என்றான். அவளை மறுநாளே கொணர்ந்து காமன் கோட்டத்தில் மகிழ்விப்பதாகச் சூளுரைத்தான் சீவகன். காமன் படிவத்தின் பின்னே மறைந்திருக்குமாறு புத்திசேனனை நோக்கிக் கூறினான்.

சீவகன் முதிய அந்தணன் வடிவம் ஏற்றுக் கன்னிமாடத்திற்குள் சென்றான். அவனது பசியை போக்குவது பேரறம் எனச் சுரமஞ்சரி கருதி அவனை உபசரித்தாள். பஞ்சணையில் உறங்கிய அவன் ஓர் இனிய பாடலைப் பாடிடச் சுரமஞ்சரி தன்னை மறந்து மயங்கினாள். அப்பாடல் சீவகன் பாடலை ஒத்துள்ளது எனத் தோழியர் கூறினர். மறுநாள் காமனை வழிபட்டு இப்பாட்டையுடைய சீவகனை விரைவில் தருக' எனச் சுரமஞ்சரி வேண்டினாள். ஆங்கே ஒளிந்திருந்த புத்திசேனன், 'சீவகனை நீ பெற்றாய்' எனக் காமத் தெய்வம் வாய்விட்டுக் கூறியதுபோல் கூறினான். அந்நேரம் உரிய வடிவம் கொண்டு சீவகன் வர அவனைக் கண்டு நாணி நின்றாள் சுரமஞ்சரி. அவளைத் தழுவிய அச்செய்தியறிந்த அவன் தோழர் அவனைக் காமதிலகன் எனப் புகழ்ந்தனர். சுரமஞ்சரியின் பெற்றோர் சீவகனுக்கு அவளை மணம் செய்வித்தனர்.

சீவகன் காமத் திலகனோ? [1–4]

வாள் இரண்டையும் எதிரே வைத்தாற் போன்ற கண்களை உடைய [உடன் வந்த] மகளிர் இரு நாட்கள் கழிந்தன என வருந்தினர். சீவகனின் [விமலை என்பாளை மணந்த] மணக்கோலம் கண்ட அவன் தோழர் அவனைப் போற்றி நின்று அவன் மணந்த பெண்ணின் பெயரைக் கூறுமாறு வேண்டினர்.

ஒலிக்கும் வண்டுகள் போன்ற பல மணிகளையுடைய மேகலாபரணம் விளங்கும் அல்குல்களையும் துறவிகளும் விரும்பும் மார்பினையும் நாட்டியமாடும் பொருட்டு அலங்கரித்துக் கொண்ட சிறப்பினையும் உடைய அரம்பையை ஒத்த வாணுதலான் விமலையென்று பெயர் என்றான் சீவகன்.

அதுகேட்ட அவன் தோழர் சீவகனை ஐந்து மலர்க் கணைகளையுடைய காமன் என வியந்தனர். ஆயின் புத்திசேனனோ(சீவகன் நண்பன்) தம் பெற்றோரால் கொடுக்கப்பட்ட மகளிர், தம் கணவர் பொல்லாதவராயினும் அதற்கு நெஞ்சாலே நேர்ந்து அவரை வழிபடுவர். அதனால் வியக்க வேண்டாம் என நகைச்சுவையுடன் கூறினாள்.

மேலும் அவன் அழகிய அக்கன்னிப் பெண்களைக் கொடாது நெடுநாள் வைப்பின் பாவம் வந்து சேருவதுடன், குடிப்பழியும் உளதாம் எனக் கருதிப் பேசினவர்க்குத் தாமே அவளைக் கொடுத்துப் பாரம் கழித்தல் எந்தப் பெற்றோர்க்கும் ஒக்கும் ஆதலால் வியக்க வேண்டாம் என்றான்.

"அற்று மன்று கன்னி அம்மடந்தை மாரணி நலம்
முற்றினாரை நீடு வைப்பின் மூள்கும் வந்து பாவமும்
குற்ற மற்றுமாகும் என்று கோதை சூழ்ந்து கூறினார்க்கு
உற்ற டுத்த யாவு யார்த்தொ ழிதல் யார்க்கு மொக்குமே (4)

குறிப்புகள்: சீவகன் இருநாட்கள் வராதிருந்ததற்கு அவனுடன் வந்திருந்து பொழிலில் தங்கிய பெண்டிர் வருந்திக் கொண்டிருந்தனர்.

சீவகனுக்கு நண்பனான புத்திசேனன் ஏனையோர் சீவகனைக் காமன் என வியக்க அதற்கு மாறாகக் கூறுவான் போல நகையாடினான். பெற்றோர் தாம் விரும்பியவர்க்குத் தம்மைக் கொடாது, தீமையைப் புரியும் குரங்கு போன்ற தன்மையுடைய ஆடவர்க்கு மணம் செய்து கொடுப்பினும் குடிப் பிறந்த மகளிர் தம் குறிப்பிட்ட காலத்திற்குள் மணம் செய்து கொடுக்க வேண்டும். இல்லாவிடில் பாவமும், குற்றமும் ஆகும் என்ற அக்காலச் சமுதாய உணர்வு சுட்டப்பட்டுள்ளது.

சுரமஞ்சரியின் கோட்பாட்டைத் தகர்க்கச் சீவகன் சூளுரைத்தல் [5–10]

மேலும் புத்திசேனன் "நீ புகுந்த ஊரெல்லாம் மதுக்குடம் விரிந்தாற் போன்ற மலர்மாலையுடைய மகளிரோடு புதுமணம் செய்வை. சிற்ப நூலில் கூறப்பட்டதற்கு ஏற்பக் காணத்தக்க விதியையுடைய மாநகரில் திங்களுக்கு ஒப்ப முகமுடைய ஒரு மடந்தை [சுரமஞ்சரி] இருக்கின்றாள்.

"பணிப்பெண்களால் வழிபடப்படும் அவள் ஆடவர் தன்மனைக்கு அருகே வரினும் தன்னருகிலிருப்போர் ஆடவர் பெயரை நாடிக் கேட்பினும் உயிரை விடுவதாக வெகுண்டு நிற்பாள்".

காமனே வரினும் சினந்து அவனைக் காணாள் 'எனக்கு உடம்பு வெந்து போகும்' என்பாள் அவளை மயங்கச் செய்து அவள் நலன் நுகர்த்தால் [சீவகனைக்] காமனுக்குத் திலகன் என்போம்" என்றான்.

"காமனே செல் லினும் கனன்று காண்கிலான்
வெமெனக் கு'ம்பெனும் வேய்கொ டோளியை
ஏமுறுத்(து) அவள் நலம் நுகரின் ஏந்தையை
யாமெலாம் அருங்கமா திலகன் என்றுமே" (7)

நண்பன் புத்திசேனன் கூற்றினைக் கேட்ட சீவகன், "மாலையும் முந்நூலும் கிடந்த மார்பனே, நீ கூறியவளை மயக்குமுறுத்தாமல் விடுவேனா"யின் சிறிதும் அன்பில்லாத இழிந்த பெண்ணின் கூந்தலை நான் தழுவுவேனாக அமைவேன்".

"வண்டும் தேனும் வில்லைக்கொண்ட நாணாகவும் மலர்கள் அம்பாகவும் கொண்ட காமன் கோட்டத்தில் கொடி போன்ற சுரமஞ்சரியைக் கொணர்வேன். வெண்ணூல் நீலநிறமுண்டதனைப் போக்கினாற் போல் அவளது புதிய கோட்பாட்டைப் போக்குவேன். அவள் மணத்திற்குரிய ஆண்பெயரைக் கொள்ளச் செய்வேன். நாளை நீ காமனுடைய படிவத்தைச் சார்ந்து மறைந்திரு" என்றான்.

". . . . . .
கொடி யினைக் கொணர்ந்து நிலம்
உண்டது காற்றி ஆண் பேர்
ஊட்டுவல் உருவக் காமன்
கண்டபொற் படிவஞ் சார்ந்து
கரந்திரு நாளை என்றான்' (9)

மழைக்கண் மாதரை நோய் செய்யும் பொருட்டுக் குகையின்கண் கொடிய சிங்க ஏற்றைப் போன்ற வலிமையுடையவனாகிய சீவகன் தன் நண்பர்க்கு அவ்வாறு உரைத்து எழுந்தான்.

குறிப்புகள்

சீவகன் எண்மரை மணந்தவன். அவருள் சுரமஞ்சரியை மணப்பதற்கு முன் காந்தருவத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை ஆகிய பெண்களை அங்கங்கே சென்றவிடத்தில் மணந்தான். அதனால் அவன் நண்பன் புத்திசேனன், நீ புகுந்த ஊரெல்லாம் புதுமணம் பொருந்துகின்றனை" என்றான்.

ஆடவரை [சீவகனைத் தவிர] அறவே வெறுத்து காமனையும் சினந்து கன்னிமாடத்தில் இருந்தாள். சுரமஞ்சரி என்பது அவளது உள்ளத்து உறுதிப்பாட்டை உணர்த்தும் 'அன்பில்லாத இழிந்த பெண்ணின் கூந்தலைப் பொருந்துவேன்' என்ற சீவகன் சூளுரையானது கூந்தலை உரிமை கூறுவது ஒரு மரபு என்பதை உணர்த்தும். 'கூந்தல் அணை கொடுப்போம் யாம்' [கலி 101 : 42] என்ற கலித்தொகை அடி நினைவு கொள்ளத் தக்கது.

வெண்ணூல் நீலநிறமுண்டதனைப் போக்கினாற் போல் சுரமஞ்சரியின் கோட்பாட்டைப் போக்குவதாகச் சீவகன் சூளுரைத்தது. 'சாயத்தை வெளுக்கச் செய்வேன்' என்ற பொருளில் அமைகிறது.

அந்தணன் உருமாற்றம் (11–17)

அவ்வாறு எழுந்து சீவகனது உள்ளம் சுரமஞ்சரியைத் தழுவதற்கு வருந்தியது.

சுரமஞ்சரியை நினைத்து வருந்தும் சீவகன், "வடஞ்சுமந்த மார்பகங்கள் செப்பினைப் போன்றன. குவளை மலர் போன்ற மையுண்ட கண்கள் உள்ளங்கையினும் பெரியனவாகி அம்மங்கையின் முகத்தில் அமைந்து என் உள்ளத்தில் உள்ளன. இந்த அருள் இல்லாதவள் மல்லிகை மாலை ஏந்திய கருங்குழல் புரியினால் என்னைப் பிணித்து அலைக்கின்றாள். அவள் அழகோ என் மனத்தைச் சுட்டுக் கலக்குகின்றது. சில பரல்களை உடைய கிண்கிணி ஒலிக்கும் சீறடியாளாகிய சுரமஞ்சரியின் நலத்தை அடையப் பசிப்பிணியையுடைய கிழவனாகிய ஓர் அந்தணனாய் நான் செல்வது அவள் ஐயுறாமல் தெளியும் தன்மையதாகும்" என்று எண்ணினான்.

"கில்லரிக் கிண்கிணி சிலம்புஞ் சீறடிச்
செல்விதன் திருநலம் சேரும் வாயில்தான்
அல்லலங் கிழவனோர் அந்தணாளனாய்ச்
செல்லல்யான் தெளிதக வுடைத்தென் றெண்ணினான்" (14)

கிழவன் உருவில் செல்ல நினைத்த சீவகன் வருத்துகின்ற பாம்பு உரித்த தோல் போன்ற மேனியனாய், வில்லென வளைந்த உடலையுடையனாய், மேலாடையுடன் பிணங்கிய நூலணிந்த மார்பினனாய் முப்பிலக்கணத்தையுடைய பெரிய நூலை ஆராய்ந்து அம்மூப்பை எழுதியது போலத் தோன்றினான்.

வெளுப்பாக நரைத்த உடம்பினனாய், தெறித்த புள்ளியனாய், நுண்ணிதாகக் கிழிந்த ஆடையணிந்து, தலை வளைதலின் வளைந்த நோக்குடன் கிழிந்த குடையினனாய், கையில் ஒரு தண்டை ஆதரவாக ஊன்றியவனாய் பெண்ணின் நலத்தைக் காதலித்தலின் பேயின் தன்மையும் ஆயினான்.

"வெண்ணரை உடம்பினன் விதிர்த்த புள்ளியின்
நுண்ணவிர் அறுவையின் நொசித்த நோக்கினன்
கண்ணவிர் குடையினன் கைத் தண் டூன்றினன்
பெண்ணலங் காதலின் பேயும் ஆயினான்" (16)

சீவகன் பிணிப்பையுடைய யாழை ஒத்தமிடறு என்னும் தோட்டியாலே தூய நெஞ்சிடத்தையுடையவள் நலத்தைப் பிணிக்கும் பாகனாய் முதுமை என்னும் முகபடாத்தில் மறைந்து சுரமஞ்சரியின் காவலையுடைய வளமனைய அடைந்தான்.

குறிப்புகள்

சீவகன் சுரமஞ்சரியின் அழகால் பெரிதும் கவரப்பட்டமை புலனாகிறது. சுரமஞ்சரி பிறரது பசித்துன்பம் போக்கும் அருட்குணமுடையவன் என்பதால் கிழவன் உருவில் செல்ல நினைத்த சீவகன் "அல்லல் (பசித்துன்பம்) அங்கிழவனோர் அந்தணாளனாய்ச் செல்லல்" உரியதாகும் என்றான்.

பேய் முதலியவை ஒன்றைப் பெறுவதில் உறுதியாயிருத்தல் போல் சீவகன் ஒரு பெண்ணின் [சுரமஞ்சரியின்] காதலைப் பெறுவதில் உறுதியாயிருந்தமையால் 'பெண்ணங்காதலின் பேயும் ஆயினான்' என்றார். 'பலி கொண்டு பெயரும் பாசம் போலத் திறை கொண்டு பெயர்த்தி (71) என்ற பதிற்றுப்பத்தின் தொடர் நினைக்கத் தக்கது. சீவகன் தன்னை அறியாதபடி மறைத்தலின் முகபடாம் என்றார்.

கன்னிமாடத்துள் சீவகன் வருகையும் தோழியர் பரபரப்பும் [18–22]

ஊன்றுகோலே பற்றுக் கோடாகக் கொண்டு மிகத் தாழ்ந்து தளர்ந்து இளைத்து நின்ற சீவகனை வாயிற் காவலர் வினவினர். அவர்களை நோக்கி அவன், "முற்காலத்தில் இளம் பருவத்தில் பாற் சோற்றை விரும்புவேன். இம்முதுமையிலே என்னைக் கண்டு விருப்புற்றவர் தருவனவற்றை விரும்புவேன்" என்றான்.

"தண்டுவலி யாகநனி தாழ்ந்து தளர்ந் தேங்கிக்
கண்டுகடை காவலர்கள் கழற முகநோக்கிப்
பண்டையிளங் காலுவப்பன் பாலடிசில் இந்நாள்
கண்டுநயந் தார்தருவ காதலிப்பன் என்றான் " (18)

இதனைக்கேட்ட அவர்கள் கையால் தொழுதவராய் மிகுந்த முதுமையால் செவிகேளார்: பித்தரைப் போல் மனத்தில் தோன்றினபடி கூறினார் என்று எண்ணினர். அவரது பசியுடைமைக்கு இரங்கி மெல்ல நடந்து செல்லுமாறு உள்ளே விட்டனர். அக் கடைவாயிலில் சீவகன் விரைந்து சென்றான்.

மாலையும் குழலும் தாழுமாறு வண்டுகள் பொங்கி முரல கடலில் பிறந்த முத்து மாலையுடன் ஏனைய அணிகள் பிறழ மங்கையர் ஓடி வந்தனர். அவர்கள் சீவகனிடம் "இங்கே நீர் வருவது குற்றம்; போய் வாருங்கள்" என்றனர். சீவகனோ மறுமொழி கூறவில்லை. ஊதப் பறக்கும் தன்மையுடன் நுடங்கி வந்து நின்றான்.

மலர்மாலை அணிந்த அம்மங்கையர், இவன் நடுங்குவான் என எண்ணி அழகிய கூரிய வாளையும் நச்சு முனையுடைய அம்புடன் வில்லையும் ஒன்று சேர ஏந்தினர். அவனை அச்சுறுத்த அமுதம் போன்ற தம் சொல்லைக் கடுமையாக்கிக் கூறி அவனை வளைத்தனர்.

அவர்களில் சிலர் "இவர் முதிய பார்ப்பார் ஆகையால் வருந்துமாறு பேசாதீர்! அவ்வாறு பேசுவது பாவம். தொட்டாலும் விரைவில் இறப்பர். ஓவியர் எழுதிய பாவையோடு கூட ஒப்புமை செய்யமுடியாத நங்கையிடம் [சுரமஞ்சரியிடம்] இவரைக் கூறி அவளது ஏவலைக் கேட்டு அதன்படி செய்வோம்" என்றனர்.

"பாவமது நோவ உரை யன்மின்முது பார்ப்பார்
சாவர்தொடி னேகடிது கண்டவகை வண்ணம்
ஓவியர்தம் பாவையினொ(டு) ஒப் பரிய நங்கை
ஏவல்வகை கண்டறிதும் என்று சிலர் சொன்னார்" (22)

குறிப்புகள்

காவலர் கீழ உருவில் இருந்த சீவகனை நோக்கி வந்த காரியம் என்னவென்று கேட்க, சீவகனோ காது கேளாதவன் போல் தன் பசி பற்றியே கூறினான். வந்த குறிக்கோளை அடையும் பணியில் அவனது திறமையை இது காட்டும். இளம் பருவத்தில் பாற்சோறு ஒன்றையே விரும்புவேன். இப்பருவத்தில் என்னால் விரும்பப்பட்ட மகளிர் தருவன யாவற்றையும் காதலிப்பேன் என்ற பொருளில் பேசினான்.

சீவகன் செவிடன்போல் நடித்ததுடன் பித்தன்போலும் உளறினான். பொருத்தமற்ற நிலையில் மனத்திற்குத் தோன்றிய வகையே அவன் பேசியதைக் கடைகாப்பார் உணர்ந்திருந்தும், 'பசிக்கு இரங்கியவர் விடுத்தார்' என ஆசிரியர் கூறுவதால் சீவகன் எந்த அளவிற்குப் பசிப்பிணியால் துவள்பவன் போல் நடித்து அவர்களது இரக்கத்திற்கு ஆட்பட்டான் என்பது புலனாகிறது.

ஆடவர் வரின் சுரமஞ்சரியின் தவத்திற்கு இடையூறு ஏற்படும் என எண்ணிய மங்கையர் 'ஏதம்(குற்றம்) இதுபோமின்' என்று கூறி முதியவனை (சீவகனை) விரட்ட முற்பட்டனர். முதியவனோ அஞ்சுவது போல் நடிக்கும் நடிப்பின் காரணமாக ஊதப் பறக்கும் தன்மையுடன் நுடங்கி நின்றான்.

"ஊதுறப் பறப்பதாய் உலர்ந்த யாக்கை" என்ற கம்பராமாயணத் தொடர் நினைக்கத் தக்கது.

"அந்தணர் என்போர் அறவோர்" என்ற நிலையில் பார்ப்பார் வடிவில் வந்தவர் தீமையேதும் செய்யார் என்று மங்கையர் கருதினர். அவர்தம் கருத்திற்கு ஏதுவாகச் சீவகனது முதுமைக் கோலமும் அவன்பால் இரக்கத்தைத் தூண்டுவதாக இருந்தது. அதனால் பாவம் இது நோவ உரையன் மின் முது பார்ப்பார்' என்றனர்.

சுரமஞ்சரி சீவகனைக் காண வரல் [23–25]

"கையில் வளையினையும், கரிய குழலையும், வியப்பூட்டும் செவ்வரி படர்ந்த வாளனைய கண்களையும், வருந்தும் இடையினையும் உடைய நங்கையே, ஓர் அந்தணன் முறையானே முதிர்ந்த மூப்போடு வந்தான். இறந்துபடுவான் போலும் விரைவில் அவன் இறப்பதற்கு முன்னே நாங்கள் செய்வது என்ன எனக் கூறு" என்று அப்பெண்கள் சுரமஞ்சரியிடம் வினவினர். அவளும், "அவனிடம், செல்வோம், நீர் முன்னே செல்க" என்றாள்.

நல்ல சந்தனத்தைத் தடவிய மார்பினையும், பாலையாழ் போலும் மழலையினையும் உடைய சுரமஞ்சரி அகில் குழம்பால் மெழுகப்பட்டு, பல மாலைகள் நாற்றித் தேன் துளித்து மணம் வீசும் பசிய பொன்மாடத்திலிருந்து இழிகின்ற தன்மை, சோலைகளையுடைய மலையினின்றும் இழியும் தோகையையுடைய மயில் போன்று இருந்தது.

சீறடியில் அணிந்த கிண்கிணியும் சிலம்பும் ஒலிக்க, மேகலை மணிகள் மெல்லென இசைப்ப, மகரந்தம் தேனுடன் கலந்ததினால் சேறுபட்ட மலர் மாலையின் மீதிருந்த

வண்டுகள் திசைதோறும் எழுந்துபாட மணமலர்க் கொம்பு நடை கற்பதைப்போல் [சுரமஞ்சரி] வந்தாள்.

"சீறடிய கிண்கிணிசி லம்பொடுசி லம்ப
வேறுபடு மேகலைகண் மெல்லெனமி ழற்றச்
சேறுபடு கோதைமிசை வண்டுதிசை பாட
நாறுமலர்க் கொம்பர்நடை கற்பதென வந்தாள்" (25)

குறிப்புகள்

சுரமஞ்சரி உயிர்களின்பால் இரக்கச் சிந்தனையுடையவள் ஆதலால் 'உய்வதிலன்[இறந்துபடுவான்] எனத் தோழியர் கூறியதும், உடனே அவனைக் காணப் புறப்பட்டாள்.

சுரமஞ்சரியின் கன்னிமாடம் சோலையிடத்தில் அமைத்திருந்தமையால், அவளை மயிலுக்கு ஒப்புமை கூறும் போது "சோலைவரை" மேலிழியும் தோகை மயில் ஒத்தாள்" (சோலைகளையுடைய மலையினின்றும் இழியும் தோகையையுடைய மயில் போன்றாள்) என்று குறிப்பிட்டமை பொருத்தமானது, பாலைப் பண் இனிமைக்குக் கூறப்பட்டது.

மலர்கொம்பரான சுரமஞ்சரி நடந்து வரும்போது மலரின் மென்மைத் தன்மைக்கு ஏற்பக் கிண்கிணி சிலம்பு மேகலை மெல்லென ஒலிக்க வருவதாகச் சுட்டப்படுவது அழகுடையது. மலர்த்தேன் மலரின் மகரந்தத்துடன் கலந்து சேறாக மாறியதால் அத்தேனை நுகரப்பெறாமல் வண்டுகள் திசைதோறும் எழுந்து பாடின மேகலைகள் துகிலுள்ளும் புறம்பும் கிடத்தலின் 'வேறுபடு மேகலை' என்றார்.

சீவகன் சுரமஞ்சரியுடன் சிலேடைப் பொருளில் உரையாடல் (26–27)

சுரமஞ்சரி, 'நீ வந்த வருகை யாது கருதி?" என வினவினாள். அதற்குச் சீவகன், 'வாள் போன்ற கண்களையுடைய மடந்தையே கேள் உள்ளத்தை வருத்தும் அழகிய நீரையுடைய குமரியிலே ஆட வந்தேன்" என்றான். "அதனால் கிடைக்கும் பயன் யாது?" கூறுக என்றாள் அவள். அதற்கு அவன், முதன்மையாக என்னை வருத்தும் இம்முதிய மூப்பு நீங்கும்" என்றான்.

" வந்தவரவு என்னையென வாட்கண்மட வாயகேள்
சிந்தைநலி கின்றதரு நீ ர்க்குமரி ஆட
வந்திலதி னாயபயன் என்னைமொழி கென்றாள்
முந்திநலி கின்றமுது முப்பொழியு மென்றான்" (26)

மலர்மணம் தோற்குமாறு மணக்கும் கூந்தலையுடைய சுரமஞ்சரி மிகுதியாக நகைத்தான். " குமரி ஆடி இளமை பெறுவார்" நின்னைத் தவிரப் பிறரும் உளரோ? ஆராய்ந்து கூறுக என்றாள். "இம்மூப்புப் போகும் துறையைக் கண்டு அடைந்து தொழுது ஆடுவார் இலர்" என்றான் சீவகன். "உலகத்தார் அறியாத வேறொரு துறையை நீவிர் அறிவீரோ?" என இகழ்ந்து கூற அவனோ அதற்கு ஐயம் இல்லை என்றான்.

குறிப்புகள்

'திருநீர்க்குமரி ஆட' வந்ததாகச் சீவகன் குறிப்பிட்டமை இரு பொருளில் சிலேடையாக அமைந்துள்ளது. 'அழகிய தன்மையுள்ள நீரையுடை குமரியிலே ஆட' என்பது வெளிப்படையான பொருள். 'அழகிய தன்மையுள்ள கன்னியாகிய நின்னுடன் ஆட' என்பது உட்பொருள். வருங்காலத்து வராமல் முன்னே வந்து வருத்தும் முதிய மூப்பு என்பதை மனத்திற் கொண்டு 'முந்தி நலிகின்ற மூப்பு என்றான்! " நின்னுடன் கூடி மகிழ வந்தேன்; கூடி மகிழ்தற்கு முன் இம்முதிய மூப்பு வேடம் நீங்கும்" என்பது உட்பொருள். அவளுடன் கூடி மகிழ வந்ததாக அவன் கூறியததன் பொருளை உணராத அவள் குமரித் தீர்த்தம் ஆட வந்தான் என்றும் அந்நீரில் ஆடினால் முதுமை நோய் நீங்கும் என்றும் கூறினதாகத் தவறாகப் பொருள் கொண்டாள்.

சுரமஞ்சரி மேற்கொண்ட தவத்தைக் கெடுத்துக் கூடுந்துறை இம்மூப்பால் என அறிந்து அவளை அணுகிக் கூடுவார் தன்னையொழிய வேறு ஒருவரும் இலர் என்ற பொருளில் 'தொழுது ஆடுவார் இலர்' என்ற பொருளில் 'தொழுது ஆடுவார் இலர்' என்றான்.

சுரமஞ்சரி சீவகனுக்கு உணவு அளித்தல் [28–32]

"செத்த மரம் ஒன்று பெரிய மழையால் உயிரைப் பெறும் என்று கூறுபவராகிய இவர் பித்தராவர். இனி இவர் உற்ற பசி நோயை நீக்குவோம்" எனச் சுரமஞ்சரி நினைத்துத் தான் மறைவதற்குரிய மலை என ஞாயிறு தன் கதிர்களைச் சுருக்குகின்ற மிகுந்த அழகுடைய மாடத்தின் மேல் அழகுறச் சென்றாள்.

"செத்தமரம் மொய்த்தமழை யால் பெயரும் என்டார்
பித்தரிவர் உற்றபிணி தீர்த்துமென எண்ணி
அத்த மென மிக்கசுடர் அங் கதிர் சுருக்கும்
மொய்த்தமணி மாடமிசை அத்தக அடைந்தான்" (28)

"திரண்ட வளையணிந்த பெண்களே, சிவந்த வாய் நீண்ட பவளக் கொடியைத் துணித்ததாயும், கண்ணும் பாதமும் தாமரையுமாயும் அமைந்த இம்முதுமைப் பருவம் நமக்கு அளிக்கத் தக்கது. கொடியதான பசி மிகுந்துள்ளது. உணவை விரைவாக ஆக்கி இங்கேயே கொண்டு வருக" என்றாள் சுரமஞ்சரி.

திங்களை நலத்தோடு சூழ்ந்த அழகிய விண்மீன்கள் போன்று மிகுந்த ஒளியை வீசும் பொன்னால் ஆகிய சிறந்த உண்கலங்களைப் பரப்பிச் சுவையுணவை மகளிர் ஏந்தினர். இத்தகு சுவை எங்கும் உண்டதில்லையென்று சீவகன் கூறி வியப்புடன் உண்டான்.

பாலின் தன்மையைக் கொண்ட இனிய மொழியினளாகிய அவள் அப்போதே அவனை மணமுறும் எண்ணெயைத் தேய்த்து நல்ல நீரால் ஆட்டுவித்து, மேனி விளங்கும் வெள்ளை ஆடையினையும் சிறந்த பொன்னாள் இயன்ற நூலையும், மோதிரத்தையும் கொடுக்க, அவன் [சீவகன்] அமர்ந்து அவற்றை அணிந்து இடப்பட்ட தவிசின் மேல் இருந்தான்.

இனிமை பொருந்திய சாயலையுடைய பெண்கள் மலர் தங்கும் தூய நீரை வார்க்கும் கரகத்தை எந்தச் சீவகன் விரும்பி வாய் கழுவினான். அவர்கள் அமிழ்து போன்ற ஐந்து வகைப்பட்ட முகவாசம் கூட்டி ஆய்ந்த மணமிகு வெற்றிலையையும் காட்ட அவற்றை வாங்கிக் கன்னத்தில் அடக்கிக் கொண்டான்.

"தமிழ் தழிய சாயலவர் தங்குமலர்த் தூநீர்
உமிழ் கரகம் ஏந்த உரவோன் அமர்ந்து பூசி
அமிழ் தனைய பஞ்சமுக வாசமமைத்து ஆய்த்த
கமழ்திரையும் காட்ட அவை கொண்டுகவுள் அடுத்தான்" (32)

குறிப்புகள்

செத்தமரம் மழையினால் உயிரைப் பெறுவதில்லை. அதுபோல் குமரி ஆட முதுமூப்பு ஒழியும் என்பதும் நம்பற்குரியதாக இல்லை என்பது சுரமஞ்சரியாரின் கருத்தாகும்.

முதுமைப் பருவத்தினர் ஆதலால் உண்ணும் இடத்திற்குச் செல்லுதலும் இவர்க்கு இயலாது என்று மனத்திற் கொண்டு ' இவணே (இங்கேயே) கொணர்மின்' என்றாள். 'காலம் தாழ்த்தினால் இறந்துபடுவான் போலும். விரைவில் செய்ய வேண்டியதைச் செய்தல் வேண்டும்' எனத் தோழியர் முன்னரே குறிப்பிட்டனர். ஆதலால் இன்னும், சிறிது பொழுதும் இவர் பசி பொறுத்தல் அரிது என்ற எண்ணத்தில் 'அடிசில் (உணவை) கடிது (விரைவாக) ஆக்கி' என்றாள்.

வந்த முதியவனுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் அளித்ததுடன் பொன் அணிகலன்களையும் நல்கியமை சுரமஞ்சரியின் செல்வ வளத்தை உணர்த்தும்.

திங்களும் அதனைச் சூழ்ந்த விண்மீன்களும் செம்பொன் கலங்களுக்கு உவமையாகும். அத்தகு பொற் கலங்களில் உண்ணுவதற்குரிய தகுதியுடைய சீவகனை 'மிகு சான்றோன்' என்று ஆசிரியர் குறிப்பிட்டமை பொருத்தமுடையது.

தமிழ் என்ற சொல் இனிமை என்ற பொருளில் வந்துள்ளது. அறுசுவை உணவை மனநிறைவுடன் உண்டதால், சீவகன் விரும்பி வாய் பூசினான். (அமர்ந்து பூசி) என்றார். ஐவகைப்பட்ட முகவாசத்தை மணமிகு வெற்றிலையுடன் சேர்த்துச் செய்யப்பட்ட அதனைத் தற்காலத்தில் பீடா என்பர்.

சீவகன் சுரமஞ்சரியுடன் மீண்டும் (சிலேடையில்) உரையாடல் (33–36)

"நீர் வல்லது என்ன"? (செய்யக் கூடியது) என்று சுரமஞ்சரி வினவினாள் "மடலாய் நான் மறை வல்லன் (மறைந்த வேடம் கொள்ளுதலை வல்லேன்) என்று சீவகன் கூறினான். "நீர் கற்ற எல்லை எவ்வளவு"? என்று அவள் கேட்டாள். அவன் தத்துவத்தை உணர்த்தி முடியுமளவும் (நினைத்த காரியத்தைப் பெற்று முடியுமளவும்)" என்று கூறினான். அவளோ,

“நீர் இக்கலையெல்லாம் கற்ற காலத்தை இன்னும் கூறுக” என்றான். அதற்கு அவன் “கிளியைப் போலும் சில சொல் பேசுபவளே அக்காலத்தைக் கூற நினைவிலேன்.

அன்னம் போன்ற நடையுடைய சுரமஞ்சரி இந்நிலத்தில் இத்தன்மையுடையவர்கள் இல்லை என்று வியந்து ஏத்திச் சீவகனை விரும்பிப் பார்த்தாள்: இனி அவள் தன்னை வெளியே போகுமாறு கூறுவாள் என எண்ணிய சீவகன் மிகச் சிறிதுநேரம் உறங்கித் தலை தாழ அவள் அது கண்டு நகைத்தாள்.

“பின்னை இவள் போகுதிறம் பேசும் என எண்ணித்
தன்னஞ்சிறி தேதுயின்று தாழஅவன் நக்காள்” (34)

அழகிய முத்துப்போலும் பற்களையுடைய வாயையும் குவளை போலும் ஒளிபொருந்திய கண்களையும் உடைய சுரமஞ்சரியை மிகவும் முதுமையான வயதுடைய சாமி (சிவகாமி) முகம் நோக்கினான். “வாடைக் காற்று மிகுதலால் நெஞ்சு வருந்தும். சிறிது நேரத்தில் இறந்துபடும் தன்மையை எய்தினேன். மயிர்ச்சாந்து கமழ்கின்ற கூந்தலையுடையவளே, இதற்கு என் செய்வேன் உரைப்பாயாக! என்றான்.

“கோலமணி வாய்க்குவளை வாட்கண்மட வாளைச்
சாலமுது மூப்புடைய சாமிமுக நோக்கிக்
காலுமிக நோஞ்சிறிது கண்ணுந்துயில் குற்றேன்
ஏலங்கமிழ் கோதையிதற்(கு) என்செய்குரை என்றான் (35)

பூந்தாது விரிந்த மாலையில் மதுவார்கின்ற குழலையுடைய சுரமஞ்சரி தன் பட்டுக் கச்சால் பிணைக்கப்பட்ட சட்டிலிலிட்ட அணைமேல் வருத்தமின்றித் தங்குக என்றாள். கொடிய நெருப்பைப் போன்ற அலைவின்றி நின்ற காமக் கடலைக் கடையத் தொடங்கின அவன் தனக்கிட்ட பள்ளியின் மேல் மெல் என இனதாகக் களைப்பாறினான்.

குறிப்புகள்

‘மறைவல்லன்’ என்று சீவகன் கூறியது தான் வேதத்தில் வல்லவன் என்கின்றான் எனப் பொருள் கொண்ட சுரமஞ்சரி ‘நீர் கற்ற எல்லை எவ்வளவு’ என வினவியதற்கு வேதம் தான் கருதிய தத்துவத்தை முற்ற உணர்த்தி முடியமளவும் என்று அவன் கூறினான். அவளை அடைவதான காரியத்தைப் பெற்று முடியுமளவும் என்ற உட்பொருளில் அவன் விடையளித்தான்.

இனித் தன்னை வெளியே போதற்குரிய சொற்களைக் கூறுவாள் எனக் கருதிய சீவகன் மிகச் சிறிது நேரம் துயின்று தலையைச் சாய்ப்பது போல் நடித்தான்

“காலும் மிக நேரம்” என்று சீவகன் கூறியது ‘வாடைக் காற்றும் மிக வருத்தும்’ என்ற பொருளுடன் ‘கால்கள் மிக நோகின்றன’ என்ற உட்பொருளையும் கொண்டது. அதுபோல ‘கண்ணும் துயில்குற்றேன்’ என்ற அவனது கூற்று ‘இறந்துபடும் நிலையை அடைந்தேன்’ என்ற பொருளுடன் கண்களும் உறங்களுற்றேன்’ என்ற உட்பொருளையும் கொண்டது. வாடைக்காற்றை கூறியதனால் அத்திங்கள் கார்த்திகையாகும்.

'பட்டு நிணர் கட்டில்' (பட்டுக் கச்சால் பிணைத்த கட்டில்) என்பது சுரமஞ்சரியின் செல்வ வளத்திற்கு எடுத்துக்காட்டு. சீவகன் சுரமஞ்சரியிடம் காம உணர்வைத் தூண்ட இருந்தவன் என்பதைக் 'காமக் கடலைக் கடையலுற்றான்' என்ற தொடர் விளக்கும்.

மாலைக் கால வருணனை (37–40)

ஞாயிறு பகற்பொழுதுடன் மேற்றிசையில் வீழ்ந்து கலங்கிச் சாய்ந்தது. பிறகு மாலைக் காலத்தோடு தங்கள் வந்து தோன்றியதால், மகளிர் மகிழ்வுடன் தம் கணவர் தோளை மார்பால் எழுதுமாறு இராக்காலம் வந்து சேர்ந்தது.

" காலையொரு தாழ்ந்துகதிர் பட்டது கலங்கி
மாலையொடு வந்துமதி தோன்றமகிழ் தோன்றி
வேலனைய கண்ணியர்தம் வீழ்துணைவர் திண்டோன்
கோலமுலை யாலெழுதக் கூடியதை அன்றே" (37)

மலர் பொருந்திய அணையில் அகில் வளர்ப் புகையும் அழகிய மலர் மாலைக்கு ஊட்டிய இனிமையுடைய நல்ல அகில் புகையும், கூந்தலுக்குப் புகைத்த அகில் புகையும், ஆடைக்கு 'ஊட்டிக் கொழுவிய மெல்லிய அகில் புகையும் பொருந்திய மலை மீது தவழும் முகிலென உயர்ந்த மாடத்தே எழுந்தன.

குற்றமற்ற காய்ச்சிய பாற்சோற்றைச் சிறிது உண்டு, குற்றமில்லா அழகிய மலர் மாலை, மெல்லியதான அணிகலன், அறிவை கவலச் செய்யும் ஆடை, நல்ல சந்தனம், அழகிய தோடு இவற்றை அணிந்து குற்றமற்ற பெண்கள் அழகிய வீணையின் நரம்பைத் தடவி இசைத்தனர்.

"ஆசிலடு பாலமிர்தம் சிறியவயின் றம்பூங்
காசில்கடி மாலைகல நொய்யமதி கவற்கும்
தூசுநறுஞ் சாந்தினிய தோழவைகள் தாங்கி
மாசின்மட னூர்கண்மணி வீணை நரம்(பு) ஊர்ந்தார்" (39)

ஒருபுற மாலையினையும் தலைமுடியினையும் உடைய ஒப்பற்ற ஆடவர். தமது பருத்த திரண்ட தோளும் பெரிய மார்பும் பொருத்த மணக் கலவையை மெழுகி, இனிய கரும்பை மென்றால் போன்ற இனிய பவளமனைய செவ்வாயின் இனிமை கொண்ட அமிர்தத்தைப் பருகி, வளவிய மாலை வாடும்படி அணைந்தனர்.

குறிப்புகள்

தம் கணவருடன் சேர்ந்து மகிழும் பெண்கள் மலரணை, மலர்மாலை, கூந்தல், ஆடை முதலிய பல்வேறு பொருள்களுக்கு அகில் மணம் ஏற்றினர். இது அவர்களது செல்வ வளத்தினை உணர்த்தும். கூதிர்காலம், ஆதலின் காய்ச்சிய பாற்சோற்றை உண்டனர் என்றார். 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு' ஆதலால் சிறிதே உண்டனர். பெண்கள் மிகவும் மென்மைத் தன்மையுடையவர் ஆதலால் 'நொய்ய கலம்' (மெல்லிய அணிகலன்கள்) அணிந்தனர்.

சீவகனது இசைத் திறன் (41–44)

பொன்னாலான அறையில் இனிய படுக்கையில் மலரணையின் மேலிருந்த சீவகன், தான் நினைத்திருந்த தன் திருமணத்தை விரைந்து முடிக்க வேண்டி நிலைத்த இசையைப் பாடினான். இள மங்கையரும் இனிய அமிர்தாக அதனைக் கேட்டனர்.

அம்மங்கையர் காமனது அழகிய குரலே என்றும் அக்குரலை இது மயக்கும் என்றும் மயக்கம் கொண்டனர். மேலும், அக்குரல் இத்தன்மைத் தன்று. இயக்கரால் இசைக்கப்படுதலின் வந்தது என்று தம் பின்னும் முன்னும் நோக்குவார்; பேதைமையை மிகவும் கொள்வார்: சுரமஞ்சரியின் உள்ளத்திலே அமைக்கப்பெற்ற சீவகன் இவ்வாறு பாட வல்லான் என்று அவன் பெயரை வாழ்த்துவார்.

"மன்மதன் மணிக்குரல் மருட்டும் என்று மால்கொள்வார்
இன்னநின்றி யக்கரின் இயக்க வந்த தென்றதும்
பின்னு முன்னு நோக்குவார் பேது சால வெய்துவார்
கன்னி தன்மனத்தி ழைத்த காளை நாமம் வாழ்த்துவார்" (42)

மலர்கொத்தென அசைந்தும், மணமுறும் மாலைகளைத் தாங்கியும், அம்பினை ஒத்த கண்ணினார் அடியில் அணிந்த சிலம்பு முதலியன இடை வருந்துமென ஒலிக்கவும், சீவகன் தந்த இசையை விரும்பி அவ்விசையுடைய யானைக் காண ஓடினார். மனம் வெம்பும் விருப்பத்தை விளைத்த சீவகன் காமனினும் வேறல்லாதவன் ஆயினான்.

ஒளியுடைய மாலையையும் நீண்ட கூந்தலையும் பெரிய கண்களையும் உடைய மகளிர்க்குத் தம் வயத்தன் ஆகான் என்று நீக்கப்படுவானாகிய காமனைப் போன்ற காளை சீவகன். தன் நினைவுடன் அவர் கருத்தும் ஒத்தது. ஆதலின் கொன்றை மாலையை உடைய இறைவனது நீல மணி போலும் மிடற்றினிடையே கிடந்த காமகீதம் ஒன்றை மேலும் அவன் நன்றாகப் பாடினான்.

"தாம மாலை வார்குழல் தடங்கணார்க்கு இடங்கழி
காமன் அன்ன காளை தன் கருததொ டொத்த தாகலான்
மாமலர்த் தெரியலான் மணியிடற்றிடைக் கிடந்த
சாமகீதம் மற்றுமொன்று சாமி நன்கு பாடினான்" (44)

குறிப்புகள்

சீவகன் படிப்படியாகச் சுரமஞ்சரியின் உள்ளத்தில் இடம்பெற்று மணக்க விழைந்த காரணத்தால் இனிய இசையைப் பாட முற்பட்டான்.

சீவகனது இனிய குரலைக்கேட்டு அனைத்துப் பெண்டிரும் மயங்கினர். இது அவனது இசைத் திறனை விளக்கும். சுரமஞ்சரியின் மனத்தில் இடம் கொண்டவன் சீவகன். அதனால் 'கன்னிதன் மனத்து இழைத்த காளை ' எனப்பட்டான். சுரமஞ்சரியின் மனத்தில் வஞ்சினத்தை உண்டாக்கியவன் என்றும் கொள்ளலாம்.

ஆயர்பாடியில் கண்ணனின் குழலிசை கேட்டுப் பெண்கள் அனைவரும் தத்தம் நிலை மறந்து காண ஓடினதைப் போல் சீவகனது குரலிசை கேட்டுப் பெண்கள் அசைந்தும், மாலைகளைத் தாங்கியும், சிலம்பொலிக்க ஓடி வந்தனர். அப்பெண்கள் சீவகனது பாட்டைக் கேட்ட மாத்திரத்திலேயே அவர்கள் உள்ளத்தில் மனம் வெம்பும் வேட்கை விளைந்தது. அவ்வேளையில் அவனும் அவர்கள் கண்ணுக்குப் புலனாகாமல் இருந்ததாலும் (மறை வேடம்) வேட்கை விளையுமாறு பாடினதாலும் மன்மதனே ஆயினான் என்பர்.

சீவகன் பெண்களின் வயப்படாதவன் ஆதலால் அவர்களால் நீக்கப்படுபவன் என்பதால் 'இடம் கழி காமன் அன்ன' எனப்பட்டான். வரம்ப கடந்து எழுதற்குக் காரணமான காமத்திற்கு தெய்வமானவன் என்றும் கொள்ளலாம். காமனினும் மேம்பட்டவன் என்னும் பொருளில் தம்மிடத்தினின்றும் நீக்கப்படுபவனாகிய காமன் என்பர் நச்சினார்க்கினியர்.

சீவகனின் இசைக்குப் பெண்கள் மயங்குதல் (45–46)

வேட்டுவனாகிய அறிவுடையான் தன் ஓசையாக அழைக்கும் அவ்வோசையை விரும்பி மனம் ஒன்றிய மயில்திரள் ஓடுவது போல் கள்ளத்தனமான மூப்பினை உடைய அந்தணனின் முற்றுப் பெற்ற இசை வழியே கொடியை வென்ற நுண்ணிய இடையையுடைய குளிர்ந்த மலரனைய பெருங் கண்ணுடைய மகளிர் ஓடினர்.

"கள்ள மூப்பின் அந்தணன்க னிந்த கீத வீதியே
வள்ளி வென்ற நுண்ணி டைம ழைம லர்ந்த டங்கணார்
புள்ளு வம்ம திம்ம கன் புணர்த்த வோசை மேற்புகன்
றுள்ளம் வைத்த மாம யிற்கு ழாத்தி னோடி செய்தினார்" (45)

'நாங்கள் சிறிது பருத்துச் சிற்றிடையைக் கொல்வோம்' என்று கொறு கொறுப்பான (கோபிப்பான) போலும் மார்பினையும், அல்குலையும் உடைய பழச்சுமை மிகுந்த அழகிய கற்பகக் கொம்பு போன்ற சுரமஞ்சரி, குளிர்பிறை போன்ற பூணினை அணிந்த சீவகனின் இசைவலையில் போய் அகப்பட்டான்.

குறிப்புகள்

பறவைகளின் ஓசையியல்பை அறிந்த வேட்டுவன் அவற்றின் ஓசை போல முழங்கி அந்தந்தப் பறவைகளை ஈர்ப்பதுபோல், பொய்த் தன்மையுடைய முதுமை வேட அந்தணனாகிய சீவகன் பெண்கள் விரும்புமாறு இசைத்து அவர்களை ஈர்த்தான்.

பறவை வேடனின் வலையில் சிக்கியது போல் சுரமஞ்சரி சீவகனின் பாட்டாகிய வலையில் சிக்கினாள்.

சீவகன் சுரமஞ்சரியின் தோழிகளுடன் உரையாடல் (47–50)

"முற்றிழையுடைய அரிவையே, அடியில் அணிந்த சிலம்பு முதலியன ஒலிக்கவும், அல்குலில் அணிந்த கலைகள் கலந்து ஒலிக்கவும் வந்து நீவிர் முடிப்பதாகிய வேலை

என்ன? யான் மிகவும் முதிர்ந்தேன்" என்று சீவகன் கூறினான். மாவடு அளைய கண்ணுடைய சுரமஞ்சரி நகைத்து நாணி தோழிக்குப் பின்னே மறைந்திருந்து மின்னுக்கொடித் திரளிடையோ ஓர் அழகிய குளிர்ந்த மணிக்கொடி போல் நின்றாள்.

"நீர் என்னையன்றி இளைஞனைக் கண்டால் என்ன செய்வீர்?" என்று சீவகன் வினவினான். "பெருகும் தேனையுடைய கண்ணியை அணிந்த இளைஞர் பெயரும் இவ்விடத்தே கெடுக" என்று தோழியர் கூறினர். "இவ்வாறு கூறியது கூரிய பற்களையுடைய இவளை யாரும் பெண் பேசினார் இல்லை என்ற காரணத்தாலோ? ஒளிரும் வளையணிந்த இவளுக்கு வருந்தும்படியாக அவர் செய்தது வேறும் உண்டோ? என்றான் சீவகன்.

"இளையவற் காணின் மன்னோ என்செய்வீர் நீவிர் என்ன
விளை மதுக் கண்ணி மைந்தர் விளிகெனத் தோழிகூற
முளை எயிற் றிவனை யாரும் மொழிந்தனர் இல்லை என்றோ
உளைவது பிறிதும் உண்டோ ஒண்டொடி மாதர்க் கொன்றான்" (48)

"இம்மாதரின் எல்லா நன்மையுடைய சுண்ணத்தைச் சீவகன் பழித்த பிறகு ஆடவரை வெறுத்தனன்" என்று அத்தோழியர் கூறினர். "இவளுக்குத் தியானாகிய காளை இறந்தான் போலும்" என்று சீவகன் கூற அங்கிருந்து மகளிரெல்லாம் சீவகனை வாழ்த்தி" யாங்கள் ஆராய்ந்தோம்; ஐயன் பிழைத்திருக்கின்றான்; அதனை அறிந்தோம்.

"வாய்த்தஇம் மாதர் சுண்ணஞ்
சீவகன் பழித்த பின்றைக்
காய்ந்தனள் என்று கூறக்
காளைமற் றிவட்டுத் தியான்
மாய்ந்தனன் போலும் என்ன
மாதரார் ஒருங்கு வாழ்த்தி
ஆய்ந்தனம் ஐயன் உய்த்தான்
அறிந்தனம் அதனை என்றார்" (49)

"காற்றில் பட்ட காம வல்லிக் கொடி போல் சுரமஞ்சரி கலங்கிப் பித்தேறி மயங்கினாள். நாங்கள் இளங்கிளி ஒன்றைத் தூது விட்டோம். கயல் மீன் போன்ற நீண்ட கண்களையும் செவ்வாயையும் உடைய காந்தருவதத்தையின் பொலிவைக் கண்டு பால் உண்ட பவளம் போன்ற சிவந்த வாயையுடைய கிளி வந்து கூறியதால் துன்பம் நீங்கினோம் " என்றனர்.

குறிப்புகள்

தோழிகளை ஏதுவாகக் கொண்டு மறைந்து நின்றாள் சுரமஞ்சரி மின்னுக் குழாம தோழியர் குழாத்திற்கும் மணிக் கொம்பு சுரமஞ்சரிக்கும் உவமைகள்.

ஆடவர் பெயரைத் தன்னருகிலிருப்போர் நாடி விரும்பிக் கூறக் கேட்டாலும் உயிர் விடுவேன் என்று சுரமஞ்சரி சீறுவாள் என்று முன்னரே கூறப்பட்டதற்கு ஏற்ப 'மைந்தர் பெயரும் இவ்விடத்துக் கெடுக' [மைந்தர் விளிக] என்று சுரமஞ்சரியின் தோழியர் கூறினர்.

சுரமஞ்சரிக்குத் தீயனாகிய சீவகன் இறந்தான் போலும் என்றும் ஒன்றும் தெரியாதவன் போல் கூறினான் நடிப்பில் வல்ல சீவகன்.

சீவகனைப் பாடுமாறு தோழியர் கேட்டல் (51–54)

விளங்கும் பூங்கொம்பு போன்ற அப்பெண்கள்" சுரமஞ்சரியாகும் முன்னர் நெஞ்சிற் கொண்ட நோன்பு நீங்கி நும்மிடத்து முகம் கொடுப்பவராகச் சீற்றம் ஒழித்தனர். சீற்றம் நீரும் அன்பு கூர்ந்து இசையைப் பாடுமின் என்ன நேர்ந்தாலும் நாங்களும் பாடலைக் கேளாமல் உம்மைப் போகவிட்டோம். திருமகள் போலும் இவளைத் தொட்டு ஆணையிட்டோம்" என்றனர்.

"அசையும் மூங்கில் அணைய தோளையுடையீர், இப்பாவையான் (சுரமஞ்சரி) தனது தோற்றப் பொலிவு தொடங்கி ஒழித்தவற்றையும் எமக்குக் கொடுத்தால், பாடக்கடவோம். அதற்கு உடன்பட்டால் கேட்டீராக" எனச் சீவகன் உரைத்தான். "பெண்களே, பொன் அல்லாத பேயைத் தேடிக் காண்பார் யார்? மேலும் இந்த ஆண்மகன் கூறுவது நிகழக் கூடியதன்று. இதுவும் நாம் உடம்படுதற்குரியதாகும்" என்றனர் அப்பெண்கள்.

"பாடுதும் பாவை பொற்பே பற்றிமற்று) எமக்கு நல்கின்
ஆடமைத் தோளி னீர: தொட்டுமேல் கேண்மின் என்ன
நாடியார் பேயைக் காண்பார் நங்கை காள் இதுவும் ஆமே
ஆடுவ தொன்று மற்றின் ஆண்மகன் உரைப்பது) என்றார்" (52)

பட்டுச் சூழ்ந்து கிடந்த செம்பொன்னும் பவளமும் ஒளிரும் அல்குலையுடைய சுரமஞ்சரி, சீவகன் கருதியதை அறியாமல் உடம்பட்டான். காற்றாணைப் போன்ற தோளையுடையானும், "காமன் பாடின ஒற்றுமையுடைய குரல் வீணையால் செவிக்கு இனிமைதரும் அமிர்தத்தைப் பட்டம் அணிந்த ஒள்ளிய நெற்றியை உடைய தனக்குப் பாடுவேன் என்றான்.

வயிர ஒளியை வீசும் பைம்பூண் அணிந்த அழகுடைய முலைகளையுடைய மகளிரிலே, உயிர் பெற எழுதப்பெற்ற ஓவியப்பாவை போன்ற சுரமஞ்சரியின் குற்றம் அற்ற முகத்தைப் பார்த்து இனிமை நிறைந்து அமுதம் பெருக நரம்புடன் கூடி மறையும் அருவருப்பில்லா இசையைப் பாடுதற்கத தொடங்கினான்.

"வயிரவில் லுமிழும் பைம்பூண்
வனமுலை மகளிர் தம்முள்
உயிர்பெற எழுதப் பட்ட
ஓவியப் பாவை ஒப்பாள்

செயிரில்வாண் முகத்தை நோக்கித்
தேன் பொதிந் தமுதம் ஊறப்
பயிரிலா நரம்பிற் கீதம்
பாடிய தொடங்கி னானே” (54)

குறிப்புகள்

சுரமஞ்சரியாரும் ‘முன்பட்டது ஒழிந்து’ (முன்னர் நெஞ்சிற் கொண்ட நோன்பு நீங்கி) சீற்றம் நீங்கினார் என்பதில் “முன்பட்டது” என்பது ஆடவரைக் காணேன் என்ற நோன்பைச் சுட்டுகிறது.

“பாவை பொற்பே பற்றி எமக்கு நல்கின் பாடுதும்” என்று சீவகன் உரைத்தான். “இப்பாவை தன் தோற்றப் பொலிவு தொடங்கி ஒழிந்தவற்றை எமக்குக் கொடுத்தால் பாடுவேன்” என்றதனை, “பொன்னாயிருப்பதொரு பேயைப் பிடித்துத் தந்தால் பாடுவேன்” என்று கூறியதாக அப்பெண்கள் பொருள் கொண்டனர். சுரமஞ்சரியும் பொன்னால் பேயைப் பண்ணிக் கொடுப்போம் என உடன்பட்டாள் என்பர்.

சீவகன் அகப் பொருளில் அமையப் பாடத் தொடங்கல் (55–57)

மாலைப் பொழுது கண்டு ஆற்றாத தலைவி தோழிக்குக் கூறியதாகச் சீவகன் பாடத் தொடங்கினான். “வட்டமான தோள் வளை நெகிழுகின்றன; மாவடு போன்ற நிறம் பொருந்திய மலர்ந்த நீண்ட கண்கள் தொய்யில் எழுதிய மார்பில் நீரைச் சொரிகின்றன. அவ்வாறு சொரிதற்கும் காரணமாகிய நம்மிடத்து உளதாகிய ஆவல் கொண்ட நெஞ்சினை மாலைக் காலம் வருத்தும்.

“தொடித்தோள் வளைநெகிழத் தொய்யின் முலைமேல்
வழக்கேழ் டலர் நெடுங்கண் வார்புயலும் காலும்
வார்புயலும் காலும் வளைநெகிழு நந்திறத்தது)
ஆர்வமுறு நெஞ்சம் அழுங்குவிக்கும் மூச் செறிந்து

“கொட்டாவி கொண்டு நெருப்பென மூச்செறிந்து சோர்வுற்றுக் கையைக் கன்னத்திலே ஊன்றுதலாலே கண்ணீரானது கன்னத்தை வருத்தி விடும். அவ்வாறு அலைத்தலின் யாம் கையற்று(செய்வதறியாது) வருந்தும்படி, புண்ணைப் பிளக்கும் வேலைப் போல மாலை நேரம் புகுந்தது.

“மலர்ந்து விளங்கும் பூங்கோதாய், மார்பினிடத்துப் பொன் போன்ற பசலை உண்டாகத் தோன்றும். அவ்வாறு பொன் பசலை உண்டாகவும் காதோடு பொரும் கயற்கண்கள் முத்தனைய நீரை அரும்பவும் அன்பினாலே உருகும் நெஞ்சினை மாலைப் பொழுது வந்து வருத்தும்”.

குறிப்புகள்

சீவகனுக்குச் சுரமஞ்சரியிடம் வேட்கை ஏற்பட்டது. அதனை அவளிடம் நேரடியாகக் கூற முடியாத அவன் மாலை பொழுது கண்டு ஆற்றாத தலைவி தோழிக்குக் கூறியது போல் தன் குறிப்பை வெளிப்படுத்தினான்.

சுரமஞ்சரி காமக் கோட்டத்தே வழிபடல் (58–64)

இவ்வாறு பண்ணினுக்கு அரசனான சீவகன் வானவனால் பாடப்பட்ட இசையைப் பாடினான். அவன் பாடினபோது வளையணிந்த மகளிர் சோர்ந்து மயங்கிய மயிலைப் போன்றவர் ஆயினர். ஆடகமென்ற பொன்னால் அணைந்த பாவை போன்ற சுரமஞ்சரி அந்தணனைப் புகழ்ந்தாள். "நாளை செம்பொன்னால் அமைக்கப்பட்ட காமன் கோயிலிலே புகுந்து காமனை வழிபட்டு [இப்பாட்டையுடைய சீவகனைத் தரல் வேண்டும் என வரம் கேட்பேன்" எனக் கூறினான்.

"பாடினான் தேவ கீதம்
பண்ணினுக் கரசன் பாடச்
சாடக மகளிர் சோர்ந்து
செருக்கிய மஞ்ஞை யொத்தார்
ஆட கச் செம்பொற் பாவை
அந்தணற் புகழ்ந்து செம்பொன்
மாடம்புக்(கு) அநங்கன் பேணி
வரங்கொள்வல் நாளை யென்றாள்" (58)

மடலை அணிந்த பனையினது நீலமணியை நிறத்தால் மருட்டும் கரும்பை போல உடலில் பொருந்திய உயிரை வருத்தும் மார்பினை உடையவள் சுரமஞ்சரி. அவளும் பிறரை வருத்தும் அழகினையுடைய தோழியரும் வரம் வேண்டும் ஆவலில் திரண்டனர். இப்பால், கடல் அணிந்த பொட்டுப் போல ஞாயிறு கடலினிடத்தே உதித்தது.

நிலைபெற்ற செலவினையுடைய எருத்தினுக்குப் பொன்னால் அமைந்த மணி, தார், கண்ணி ஆகியவற்றைப் புனைந்து மின்னால் இயன்ற பட்டத்தைச் சேர்த்து, நெய், பால் இவற்றைத் தெவிட்ட ஊட்டி, வண்டியில் பூட்டினர். ஒரு மடந்தை எருத்தைச் செலுத்தும் கோலைக் கையில் கொள்ள இனிய இயலையுடைய பாவை தன் தோழியுடன் (ஆடவரை காணாத நிலைக்கு) இயைய வண்டியில் ஏறினாள். ஆடவர் விலக, அழகிய மொழி பேசும் பெண்கள் சூழச் சென்ற சுரமஞ்சரி காமன் கோட்டத்திலே இறங்கினாள். சீவகனை மறைய வைத்தாள். சூடுதற்கான மாலையும் சாந்தமும் விளக்கும் தூபமும் ஏந்திச் சேடியர் காமனைத் தொழுது நிற்கத் திருமகளான சுரமஞ்சரி இறைவனைப் போற்றினாள்.

சுரமஞ்சரியானவள் இட முழந்தானை ஊன்றி ஒளி வீசும் மாலையும் மென்மையான மலர்க்குடிலும் வலத்தோளில் விழ, ஈனாத இளங்கமுகின் கண்போல அமைந்த கலன் அணிந்த கழுத்தைச் சாய்த்து, பொன்நிலத்தில் முடி பொருந்த (வணங்கி எழுந்து) தன் இரு கைகளையும் குவித்து இதனை உரைப்பாள்.

"பொன்னிலஞ் சென்னி புல்ல
இடமுடிந்த தாளை ஊன்றி
மின்னவர் மாலை மென்பூங்
குழல்வனத் தோளின் வீழக்

கன்னியங் கமுகின் கண்போல்
கலனணி எருத்தங் கோட்டித்
தன்னிரு கையும் கூப்பித்
தையல் ஈதுரைக்கும் அன்றே” (62)

“தாமரை போலச் சிவந்த கண்களையும் செவ்வாயினையும் உடைய டொற்குழை அணிந்த மன்மதனே, இங்கே வேண்டுதலையுடையேன். மலர் நிறைந்த மார்புடைய மன்மதனே. காளையாகிய சீவகன் மார்பில் என்னைச் சேர்ப்பித்தால் பெரிய மகரக் கொடியும் அம்பும் வில்லாகிய கரும்பும் தேரும் ஊருடன் விளங்கத் தருவேன்” என்றாள்.

“தாமரைச் செங்கண் செவ்வாய்த்
தமனியக் குழைய னாயோர்
காமமங் குடையேன் காளை
சீவகன் அகலம் சேர்த்தின்
மாமணி மகரம் அம்பு
வண்சிலைக் கரும்பு மான்றோர்
பூமலி மார்ப ஈவல்
பொலிய ஊரொடும்

“தேன்பிளிரும் கோதையாய் நின் மனத்தில் மகிழ்ந்த காதலனை அடைந்தாய், நின் சிற்றிடை வருந்த நில்லாமல் செல்க” என்று சீவகனின் தோழன் (புத்திசேனன்) வஞ்சனையாகக் கூறியதை அறியாதவளாய்த் தான் வாழ்த்திய தெய்வமே வாய்விட்டுக் கூறியது என்றே வேல்போன்ற கண்ணையுடைய சுரமஞ்சரி மீண்டும் வாழ்த்தித் திரும்பினாள்.

குறிப்புகள்

சீவகன் இசையறிவுடையவன் என்பதைப் ‘பண்ணினுக்கரசன்’ என்ற தொடர் புலப்படுத்தும். ஆடகச் செம்பொன் என்பது நால்வகைப் பொன்னில் ஒன்றாகும்.

சுரமஞ்சரி ஆடவரை அறவே வெறுத்தவள். ஆதலால் ஒரு மடந்தை வண்டியைச் செலுத்துபவளாக அமர்த்தப்பட்டாள். தன்னுடன் வந்த முதிய அந்தணன் வேடத்திலிருந்து சீவகன் காதில் தான் இறைவனைப் போற்றுவது கேளாதபடி சுரமஞ்சரி அவனை ஒருபுறத்தே மறைத்து வைத்தான்.

காமனுக்கு மகரம் கொடியாதலால் ‘மகரம் ஈவேன்’ என்றாள் சுரமஞ்சரி. காமன் கோயிலில் மறைந்திருந்த சீவகனின் தோழன் புத்திசேனன் மன்மதக் கடவுள் வரங்கொடுப்பது போல் தானே வஞ்சனையாகக் கூறினான்.

சுரமஞ்சரி எதிர்பாராது வந்து தோன்றிய சீவகனுடன் மகிழ்தல் (65–69)

அடியிலே தங்குதல் கொண்ட ஆடகப் பொன்னாலான சிலம்பினளாகிய குழை முகத்தினையுடைய திருவைப் போன்றவள். அந்த மணவறை அருகிலே நின்ற சீவகனைக்

கண்டு வெட்கமுற்று ,ாவடு அணைய கடைக்கண் அவனை நோக்க நெஞ்சும் திடுக்கிட நீண்ட பூங்கொடி போல வளைந்து நின்றாள்.

"அடியிறைகொண்ட செம்பொன் ஆடகச் சிலம்பினாள்
கடியறை மருங்கின் நின்ற மைந்தனைக் கண்டு நாணி
வடியுறு கடைக்கண் நோக்க நெஞ்சதுட் கென்ன வார்பூங்
கொடியுற ஒசிந்து நின்றாள் குழைமுகத் திருவோ டொப்பாள்" (65)

அச்சம் தரும் வேல் போன்ற விருப்பூட்டும் கண்ணையுடையவள் மாலையும் குழலும் தாழவும் அரிய மணிக்குழை ஒரு காதில் கலக்குமாறு ஒளியை உமிழ்ந்து நின்று ஒளியுடை வான வில்லென வீச, விளங்கும் பொன்னோலை ஒளிவிட முகத்தைச் சிறிதே சாய்த்து அன்பு முற்றி நெஞ்சுருகி நின்றாள்.

"விளங்கும் மணிமேகலையில் அழுத்திய இந்திர நீலம் என்கிற ஒப்பற்ற மணியானது உத்திக்கு நேராக ஒரு கதிரை உமிழும் தன்மை போல அரிய மணிகலனுடையாளின் வயிற்றை அழகுச் செய்த, அழகிய மயிரொழுங்கு வந்து என் திண்ணிய நிறையைக் கவர்ந்தது" என்று சீவகன் எண்ணினான்.

"யான் நின்னைத் தெய்வம் என்றே தெளிந்தேன், நின் சிற்றடியை வழிபட வந்தேன்; இனி நின்னைத் தீண்டேன் எனின் வாழ்கிலேன்; அருள்வாய்" என வணங்கினான் சீவகன். காமன் அம்பெடுத்துச் செலுத்த மணமுடைய கருங்குழலாளைப் பசுவைத் தழுவும் விடையெனத் தழுவ அவன் அணிந்த மாலை குழைந்து வாடியது.

"தேறினேன் தெய்வ மென்றே
தீண்டலேன் ஆயின் உய்யேன்
சீறடி பரவ வந்தேன்
அருளெனத் தொழுது சேர்ந்து
நாறிருங் குழலி னாளை
நாகணை விடையில் புல்லிக்
கோல் தொடுத்து) அநங்கன் எய்யக்
குழைந்துதார் திவண்ட தன்றே" (68)

கார் காலத்திற்குரிய மயிலனைய சாயலாளும், பச்சிலையைக் கொண்ட கண்ணியையும் மலை போன்ற மார்பினையும் தடக்கையையும் உடைய சீவகனும் தமக்கு உவமையில்லாத தன்மையராய் ஆயினார். அவர்கள் இருவரும் தமிழில் கூறிய இன்பத்தை நிலைபெறுமாறு முறையின் நுகர்ந்தார்.

"கலைபுறஞ் சூழ்ந்த அல்குல் கார்மயில் சாயலாளும்
மலைபுறங் கண்ட மார்பின் வாங்குவில் தடக்கை யானும்
இலைபுறங் கண்ட கண்ணி இன்றமிழ் இயற்கை இன்பம்
நிலைபெற நெறியின் துய்த்தார் நிகர்தமக்(கு) இலாத நீரார் (69)

குறிப்புகள்

மணவறையில் நின்ற சீவகன் தனது கிழ வடிவை நீக்கிப் பழைய வடிவில் சுரமஞ்சரியின் மனம் துணுக்கெனக் காணுமாறு வந்து நின்றான். ஆதலால் நாணம் மீதூர அவள் கொடியை போல் வளைந்து நின்றாள்.

சுரமஞ்சரி காதில் அணிந்திருந்த மணிக் குழையானது கதிர் கலந்து நின்று ஒளியைச் சிதறவிடும் தன்மையதாகும். அவளுடைய கண்கள் வேல் போல் அச்சத்தைத் தருவனதாயும், அதே நேரத்தில் கவர்ச்சியால் விருப்பூட்டுவனவாயும் உள்ளன.

சுரமஞ்சரியின் வயிற்றினை அழகு செய்யும் மயிரொழுங்கு மேகலையில் அழுத்திய இந்திர நீலம் என்ற மணி ஒளிவிடுவதுபோல் இருந்தது என்பது தற்குறிப்பேற்ற அணியாகும்.

சீவகனும் சுரமஞ்சரியும் தமிழ் அகப்பொருள் நூல் கூறிய இயற்கைப் புணர்ச்சியாகிய இன்பத்தை அப்பொருள் நூலில் கூறியமுறையால் நுகர்ந்தார். இது சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப்படுதலின் உலகியல் வழக்கான காந்தருவமாகும்.

சீவகன் சுரமஞ்சரியின் நலன் பாராட்டி வழியனுப்பல் (70–75)

சீவகன் சுரமஞ்சரியின் அழகு வழியும் மேனியில் உள்ள அணியையும் மணிமேகலையின் காசுகளையும் ஒரு சேரத் திருத்தினான். ஒலிக்கும் அழகிய பொற்சிலம்பில் போர்த்த மகரந்தத் தூளைத் துடைத்து, அவளது தேன் அலரும் மாலையைச் சூட்டிக் குழலின் நலத்தையும் திருத்தினான்.

"வானில் நிறைந்து கமழும் மதுவையும் சாந்தையும் ஏந்தி, அம்மதுவைத் துளித்தலின் மொய்க்கும் வண்டுகளும் கரும்புகளும், தேனினமும் மலர்களை நுகரும். அத்தகு மலர் மாலையை உடையவளே. உனக்குக் காமன் தன் கையில் வில்லையும் சேம வில்லையும் நேரே வளைத்துத் தந்தான். மேலும் அவன் தாழ்வின்றி அமைத்து உறையை நீக்கித் தண்ணிய குருதியைத் தோய்த்து அழகு நிறைந்த ஊன் பொருந்திய ஒப்பற்ற இரு அம்புகளையும் கொடுத்தான். என்னையும் உயிருடன் இருக்க வேண்டினானே" எனச் சீவகன் சுரமஞ்சரியைப் புகழ்ந்தான்.

"வானார்கமிழ் மதுவுஞ் சாந்தும் ஏந்தி
மதுத்தளித்து வண்டுஞ் சுரும்பு மூசுத்
தேனார்பூங் கோதாய் நினக்குக் காமன்
சிலையிரண்டும் செவ்வனே கோலித் தந்தான்
தானாரப் பண்ணித் தடறு நீக்கித்
தண்குருதி தோய்த்துத் தகைமை சான்ற
ஊனார்ந்த ஓரினை அம்பும் தந்தான்
என்னை ஊனாக வேண்டினானே"

"தேனைச் சிந்தும் பூமாலையும், மணக்கும் பூங்குழலையும், கரும்பனைய இனிய மொழியினையும் உடையாளின் ஒளிரும் மார்பழகிற்கு விண்ணும் மண்ணும் யாவும்

விலையாகுமா? மின்னிடையாளைப பெண்களுக்கு அணியாக இருக்க விரும்ப முன்னாளில் பெரியோர் பெருமானாகிய பிரமன் படைத்தான்' என அவன் புகழ்ந்தான். அதற்கு சுரமஞ்சரி நாணினாள். குவளை மலர் போலும் பார்வையுடைய அவள் மலர்க்கு வாடிய கொம்பு போன்றாள்.

மாலையணிந்த குருதி வேலினான் நாணிய அவளைத் தன் துடைமேல் இருத்தி நாளைப் போதில் உன் நலத்தை அடையாதிருப்பின் அறம் நீங்குமாறு ஆளுகின்ற கட்டுயங்காரனாகக் கடவேன். 'நீ செல்வாயாக' என்றான்.

" . . . . . .

அறந்தலை நீங்கக் காக்கும்
அரசன்யான் ஆக நாளைச்
சிறந்தநின் நலத்தைச் சேரே
நாய்விடின் செல்க வென்றாள்'

ஒளிவிடும் மணி இழைத்த மோதிரம் அணிந்த மெல் விரலை முறையாகக் குவித்துச் சீவகனின் அழகிய அடிகளை வணங்கி நின்றாள். "நங்கையே நீ அஞ்ச வேண்டாம். செல்க" என விடுத்தான் அவன் பாவையானவள் சிலம்பும் செம்பொன் கிண்கிணியும் ஒலிக்க அசைந்து, நடந்து ஆயத்தாருடன் சென்றடைந்தாள்..

மிகுந்த மணிகள் ஒளிரும் மாலையினை உடைய வேற்கண்ணாள் விளங்கும் மணிக்கலனுடைய சீவகனிடம் இனிய அன்பு நிற்கச் சென்று அழகிய மாணிக்கச் சிவிகையில் அமர்ந்து செம்பொன் நீள் மனையில் புகுந்தாள்.

குறிப்புகள்

சுரமஞ்சரியின் பூஞ்சிலம்பில் போர்த்த மகரந்தத் தூளைத் துடைத்தான் என்பதால் அவ்விடம் மலர் பரப்பிக் கிடந்தமை புலனாகும்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் நலம் பாராட்ட முற்பட்ட கோவலன் 'உருவி லாளன் ஒரு பெருங் கருப்பு வில், இருகரும் புருவமாக வீக்க' எனப் புகழ்ந்தும், அதற்கு அடியார்க்கு நல்லார் 'சேமவில்லையும் கூட்டி'என விளக்கம் அளித்ததும் ஒப்பு நோக்கற்குரியன.

சீவகன் சுரமஞ்சரியின் நலத்தினை மறுநாள் அடைவதாகக் கூறும் போது ஒரு சூளுரையாகக் கூறினான். அதாவது அவளது நலத்தினை அடையாவிடில் அறத்தைத் தன்னிடத்தினின்றும் நீங்கும்படியாக உலகைக் காவல் செய்யும் மன்னனாகத் தான் ஆகக் கடவதாக என்றான். இதினின்றும் கட்டியங்காரன் அறநெறியில் ஆட்சி செலுத்துபவன் அல்லன் என்பது குறிப்பால் புலனாகிறது.

"சுரமஞ்சரி' மெல் விரல் வதியின் கூப்பி என்பதை 'மெல்லிய விரலை முறையாகக் குவித்துப் பணிந்தாள்' என்ற பொருளில் ஏற்கலாம். 'விதியின்' என்பதைத் தனியாகப்

பிரித்து, கணவனைத் தொழுதல் விதியாதலின் கைகூப்பித் தொழுது வணங்கி நின்றாள் என்றும் பொருள் கொள்ளலாம்.

சீவகன் – சுரமஞ்சரி மணத்திறம் கூறல் (76–83)

இந்திரவில் தான் மழை பெய்யக் கற்பதற்கு நீர்த்துளியை நாட்கொள்வது போல் வடிவுடையதாகத் துளிக்கும் தேனையுடைய புகழ் மாலை மார்பினன் சீவகன். அவனுடைய தோழர்கள் உவமிக்கத் தகுதியுடைய நம்பியாகிய அவனுக்குக் காமதிலகன் எனப் பெயர் கூறினர். அப்போது போர் வில்லும் உவமையில் தோற்குமாறு அமைந்த புருவத்தையுடைய சுரமஞ்சரியிடம் மணத்திறம் பற்றிக் கூறினர்.

ஒலிக்கும் கடலில் அமுதையும் தேனையும் ஒன்றாகக் கலந்துகொண்டு வரையப்பட்ட ஒப்பனை செய்த கொடி பூத்தது போன்ற மார்பினைப் பொறாத இடையையுடையவள் சுரமஞ்சரி. தேனைக் குடைந்து பருகித் தம் வயிற்றை நிறைத்து அழகிய நீலமணி போலும் வண்டுகள் பாடும் மணமுறும் மாலையையுடைய சுரமஞ்சரியின் சுற்றத்தாரிடம் (சீவகனுக்கு நண்பர்கள்) இம்மணத்தைச் சொன்னார்கள்.

'சீவகனுக்கு இவளைத் தரவேண்டும்' என்று கூறிய மொழியை மாலையணிந்த வணிகன் (சுரமஞ்சரியின் தந்தை குபேந்திரன்) கேட்டான்; வெப்பம் ஊட்டும் தேனை வாய்க்கொண்ட ஒருவன் விழுங்கவோ உமிழவோ இயலாது திகைப்பதுபோல் உடன்படுதலையும், மறுத்தலையும் அறியாதவனாய் இருந்தான். "நல்வினையில்லாதாள்பால் நல்வினையில்லாத நான் செய்வது என்ன?" என்று மயங்கினான். அங்கே சுரமஞ்சரி தன் அறிவினால் அறத்தொடு நிற்றலைச் சிந்தித்தான்.

"ஐயற்கென் றுரைத்த மாற்றங்
கேட்டலும் அலங்கன் நாய்கன்
வெய்யதேன் வாய்கொண் டாற் போல்
விழுங்கலோ(டு) உமிழ்தல் தேற்றான்

செய்வதேன் நோற்றி லாதேன்
நோற்றிலான் திறத்தின் என்று
மையல் கொண் டிருப்ப அப்பால்
குமரிதன் மதியில் சூழ்ந்தாள்" (78)

சுரமஞ்சரி அழகு பொருந்திய மாலையையுடைய தூணைச் சார்ந்து நின்ற மின்னல் போல் ஞாயிறு தோற்க ஒளிவிடும். மாலையையுடைய பவளத் தூணைச் சார்ந்து நின்றாள். அவள் இனிய தன்மையையுடைய கற்பு என்ற மாலையை வீசி நாணம் என்ற களிப்பையுடைய வண்டை ஓட்டிச் சொற் குற்றம் இல்லாமல் தோழிக்கு அறத்தொடு நின்றாள். (களவுக் காதலைத் தெரியப்படுத்தினாள்).

நன்னெறியில் வளர்ந்த மயிலனைய அழகிய சாயலையுடைய பவளத்தாலாகிய பாவை போன்ற, கழியிலே வளரும் கயல்போலும் கண்களையுடைய நங்கையின்

(சுரமஞ்சரியின்) கற்பினைத் தோழி அறிந்தாள்; தேன் வழியும் மாலையை அவளுக்கு அணிந்து அடியில் பணிந்து மனமார வாழ்த்தினாள். மது வழியும் முகில் போன்ற ஐம்பிரிவுடைய கூந்தலாளான அத்தோழி செவிலியை அடைந்து கூறினாள்.

"தேன் மாலையுடைய நற்றாயே, சுரமஞ்சரியின் உள்ளம் (சீவகனை மணக்கின்றதான இச்செயல்) இதுவாகும்" என்று சுனையின் குவளைமலர் போன்ற மையுண்ட கண்களையுடைய சுமதிக்கு (சுரமஞ்சரியின் தாய்க்கு)ச் செவிலி கூறினாள்: "நள்ளிரவில் கனவிலே விருப்பம் ஊட்டும் மலர்ப் பொய்கை வற்றக் கண்டேன். அத்தன்மையதாகிய கனாத் தன்மை இன்று நங்கைக்கு நீங்கியது போலும்" என்று சுமதி கூறினாள்.

"நனைவளர் கோதை நற்றாய் நங்கைக்(கு) ஈதுள்ளம் என்று
சுனைவளர் குவலையுண்கண் சுமதிக்குச் செவிலி செப்பிக்
கனையிருள் கனவில் கண்டேன் காமர்பூம் பொய்கைவற்ற
அனையதாம் கன்னி நீர் இன்று அற்றதாம் நங்கைக் கென்றாள்" (81)

கயல்மீனும், வில்லும், பிறைத்திங்களும் கிடந்து, இனிமையுடைய கொவ்வைக் கனியையும் முத்தையும் நன்கு மதிப்ப அணிந்து, அசையும் குண்டலத்தையையுடைய முழுமதி இதுவென்கிற முகமுடைய சுரமஞ்சரியின் தந்தை (குபேரதத்தன்) என்னென்று கேட்டான்; மனைவியாகிய சுமதி இதனைக் கூறினாள்.

"போரை விளைத்துக் கனலும் வேலுடையாய், சீவகன் சான்று காட்டி ஆராய்ந்த சுண்ணத்தை தீதெனக் காட்டினான் என்று கருதியே சிறுவயதிலே பேரறிவு பெற்ற சுரமஞ்சரி தானே பெரிய வேலியிட்டுக் காத்த கற்பு இதுபோலும் என்று அறிக. மற்றும் இது செல்வம் விளையும் தேன் பெய்கின்ற மழை, பாற்கடலில் பெய்தது ஆயிற்று" என்றாள்.

குறிப்புகள்

சுரமஞ்சரியைத் தன் காதல் வலையில் வீழச் செய்து நண்பன் புத்திசேனனிடம் அவளை மயக்குவதாகக் கூறிய சூளுரையில் வெற்றி கண்டான் சீவகன். அதனால் அவன் நண்பர்கள் 'நம்பி காமதிலகன்' என்று ஒத்துக் கொண்டனர்.

வெப்பம் உடைய தேனை வாயிற் கொண்டால் வெம்மையால் நஞ்சென்று விழுங்கமுடியாமலும், இனிமையால் உமிழ முடியாமலும் இருப்பதைப் போல் சுரமஞ்சரியின் நோன்பினால் உடம்பட முடியாமலும் நற்குணத்தில் வல்ல சீவகன் ஆதலின் மறுக்க முடியாமலும் குபேரதத்தன் இருந்தான். தன் காதலை முறைப்படி தோழிவாயிலாகப் பெற்றோர்க்கு உரைக்க சுரமஞ்சரி (அறத்தொடு நிற்க) எண்ணினாள்.

"உயிரினும் சிறந்ததென்ற நாணே, நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (தொல், களவு — 22)

என்றதன்படி கற்பினைக் காக்க வேண்டிச் சிறிது நாணை விட்டுவிட்டாள் சுரமஞ்சரி. நாணம் என்பது வண்டாகவும், கற்பு என்பது பூமாலையாகவும் உருவகிக்கப்பட்டுள்ளன.

கற்புக் கடம்பூண்ட தன்மையுடைய சுரமஞ்சரியின் களவுக் காதலை அறிந்த தோழி முறையாகச் செவிலியைப் பொருத்தி அறத்தொடு நின்றாள்.

சுமதி இரவில் கனவிலே ஒரு பொய்கை நீர் வற்றக் கண்டதாகக் கூறினாள். அப்பொய்கை நீர் போன்ற தன்மையதாம் கன்னிநீரும் சுரமஞ்சரிக்கு அற்றதாயிருந்தது என்று கனவின் பயனை ஏற்றிக் கூறினாள்.

சுரமஞ்சரியின் கண்களுக்குக் கெண்டைமீன்களும், புருவத்திற்கு வில்லும், நெற்றிக்கு இளமையுடைய திங்களும், வாய்க்குக் கொவ்வைக்கனியும், பற்களுக்கு முத்துக்களும் உவமைகள். கெண்டை முதலியன கிடந்த, தொண்டைக் கனியையும் முத்தையும் அணிந்த, குண்டலத்தையுடையதொரு திங்கள் என்பது இல்பொருளுமையாகும். நற்றாய் தந்தைக்கு அறத்தொடு நின்றாள்.

சீவகன் குணமாலை, சுரமஞ்சரி ஆகியோர்தம் சுண்ணங்களை வண்டுகளைப் பயன்படுத்திச் சாட்சியுடன் ஆராய்ந்து சுரமஞ்சரியின் சுண்ணம் தீதெனக் கூறினான். இதனை எண்ணியே பேரறிவுடைய மகள் சுரமஞ்சரி ஆடவரைக் காணேன் என மனத்திட்பத்துடன் இருந்தாள் போலும் எனத் தாய் சுமதி தன் கணவனிடம் கூறினாள், "பாற்கடலில் தேன்மாரி பெய்தது போல" என்பது பழமொழியாகும்.

குபேரதத்தன் சுரமஞ்சரியை மணமுடித்துக் கொடுத்தல் : (84–85)

குபேரதத்தன் அதனைக் கேட்பதிலே விருப்பங்காட்டித் தன் உறவினர்க்கெல்லாம் அறிவித்தான். விருப்பப்படும் உணவும் ஆடையும் சிறந்த பூணும் மாலையும் சாந்தமும் ஆகியவற்றை யாவர்க்கும் குறைவின்றிக் கொள்ளுமாறு செய்தான். கூடிய வாத்தியங்கள் எழுந்தொலிக்க, நல்ல நாளில் மணமுறு மாலையணிந்த சீவகனுக்குச் சுரமஞ்சரியைக் கொடுத்தான்.

"கேட்பது விரும்பி நாய்கன் கிளைக் கெலாம் உணர்த்தி யார்க்கும்
வேட்பன அடிசில் ஆடை விழுக்கலன் மாலை சாந்தம்
கோள்குறை வின்றி ஆக்கிக் குழுமியங் கறங்கி ஆர்ப்ப
நாட்கடி மாலை யாற்கு நங்கையை நல்கினானே" (84)

காற்சரியும் சிலம்பும் கிண்கிணியும் பொருந்திய அடிகளையுடைய அரிவையரையும், ஆடலில் சிறந்தாரும் அரிய மணிகள் இழைத்த யாழில் வல்லாரும் ஆன அரிவையர் நூற்றெண்மரையும், ஒன்றரைக் கோடிப் பொன்னையும், மூன்று ஊர்களையும் என் மகளுக்கு எரியும் தீயின் முன்னர்க் கொடுத்தேன்" என்று குபேரதத்தன் கூறினான்.

குறிப்புகள்

திருமணமானது இசைக் கருவிகள் முழங்க நல்ல நாளில் நடத்தப்பட்டமையும், அந்நாளன்று சுற்றத்தாருள் விரும்பியவர்க்கு விரும்பிய உணவு, உடை, மாலை, சாந்தம் போன்ற பொருட்கள் நல்கப்பட்டமையும் புலனாகின்றன.

திருமணத்தின் போது மணமகளுக்கு அவளுடைய பெற்றோர் ஆடலிலும் இசையிலும் வல்ல பெண்களையும், பொன், ஊர்கள் ஆகியவற்றையும் சீதனமாகக் கொடுப்பதாத் தீயின் முன் நின்று கூறிக் கொடுப்பது அன்றைய வழக்கம்.

சீவகன் சுரமஞ்சரியுடன் மகிழ்தல் : (86–89)

குற்றம் இல்லாத மணியும் முத்தும் வயிரமும் விளங்குகின்ற மேனியில் மாசற்ற சிவந்த பொன்னாலாகிய மாலை அணிந்த அழகிய குன்று போன்றவனாகிய சீவகனும், ஆடை புனைந்த தூய மணிக்கொடி போன்றவளான சுரமஞ்சரியும் தூயதாகக் கூடிய இன்பக் கடலில் முழுகினார்.

சுரமஞ்சரியின் பழமையான நலத்தை நுகர்ந்த சீவகன் துறக்கத்தைச் சேர்ந்தவர்களை ஒத்தவனானான்.

வரிகள் அமைந்த கழலையுடைய சீவகன் மார்பும் சுரமஞ்சரியின் செவ்விய மார்பும் தம்மில் போர் புரிந்து அதிலே திளைத்தன. தாளத்தோடு கலந்த பறை கெடுமாறு ஒலிக்கும் மேகலை ஒலியோடு சிலம்பொலியும் கூட, முறுக்குடைய குழல் குழைந்து தனித்திருப்ப மலரணையை விடாதவனானான்.

சீவகன் மணிகள் இழைத்த கிண்ணத்திலே மதுவை ஏந்த அதனைச் சுரமஞ்சரி பருகி மகிழ்ந்து மயக்கம் மிகுதியடைந்தாள். மான் போன்றவளை நெருங்கித் தழுவின் இடைவருத்தும் என எண்ணிய சீவகன் அழகிய மலராகிய குவளை மலரை ஒரு கையாலே கூந்தலுக்கு அளித்துத் தோள்களால் நெகிழத் தழுவினான்.

குறிப்புகள்

திருத்தக்கத் தேவர் காதலரைக் குன்று போன்றவன், கொம்பு போன்றவன் எனப் பற்பல இடங்களிலும் கூறும் இயல்புடையர்.

காதலர் இருவரும் ஒருமித்த இன்பத்தில் திளைத்தனர். துறக்கத்தில் புகுந்தவர் அரம்பையின் போகத்தையே நுகர்ந்திருப்பதால் சீவகன் துறக்கத்தைச் சேர்ந்தவரை ஒத்தவன் ஆனான்.

சீவகன் சுரமஞ்சரியுடன் காதலில் திளைத்தல் (90–97)

“வளம் மிகுந்த கங்கை போலும் பலரும் பல முகமாகப் பொருந்தும் மார்பினால் தழுவ வேண்டாம். போமின் வேண்டீர்” என்று கூறிச் சுரமஞ்சரி சீவகனுடன் ஊடி நீங்கி நின்றாள். “முல்லை மலர்க் கோதையே, நான் ஏதும் பிழை செய்யவில்லை. நீ சினங்கொள்ள வேண்டா” என்று வருத்தமுற்றுச் செந்நிறம் பொருந்திய சிற்றடியை வணங்கினான்.

சுவரில் எழுதிய பாவை சுரமஞ்சரி போலவே இருத்தலின் அதனை அழகுற இருப்பதாக எண்ணி நோக்கவே அவள் மேலும் ஊடினாள். “வட்டிகையால் சுவரில் எழுதிய பாவையை நோக்கி மகிழ்வுடன் இருந்தீரோ” என அவள் வினவினாள். ஒரு

பிடியளவு இடையினையுடைய அவளிடம் "ஒற்றுமையாக நின் உருவம் விளங்கச் சுவரிலே பொருந்தி நின்றாய். பேரழகுடைய நங்கையாகிய நீயே அவ்வுருவம் என நினைத்துக் கண்ணால் ஒப்பிட்டு நோக்கினேன்" என்றான் அவன்.

வட்டிகைப் பாவை நோக்கி
மகிழ்ந்திருந் திலிரோ என்னாத்
தொட்டிமை உருவந் தோன்றச்
சுவரையே பொருந்தி நின்றாய்
கட்டழ குடைய நங்கை
நீயெனக் கருதிக் கண்ணால்
ஒட்டியான் நோக்கிற்று) என்றான்
ஒருபிடி நுசுப்பி னாட்கே" (91)

நுண்ணிய ஆடை நெகிழ, மேகலை, மணி பரவி ஒளிர வருந்திக் கண்களைச் சுருக்கிச் சாய்த்துக் காமத்தால் சினந்து நோக்கினாள் சுரமஞ்சரி. குண்டலம் விளங்கவும் கூந்தலுடன் மாலை அவிழ்ந்து கோரவும் ஒளிவிடும் மணிக்கொடி போன்றவளாகிய ஒள்ளிய வளையுடைய அவள் ஊடி நின்றாள்.

"கிழவனாய் என் காவலிடத்தே வந்துபாடி இருப்ப அது கண்டேன். சுவரில் எழுதிய பாவையப் பார்த்து இமையால் இருக்கவும் பார்த்தேன். ஓர் இடத்தில் இரண்டு முறைமை நிகழ்ந்தது. (ஆதலால்) இங்கே நிகழ்த்துகின்ற காமத்தை ஒழிக" என்று ஆங்கு அவள் அழுத கண்ணீர்கள் சீவகன் உயிரை வருத்தின.

"கிழவனாய்ப் பாடி வந்தென்
கீழ்ச்சிறை இருப்பக் கண்டேன்
எழுதிய பாவை நோக்கி
இமையவித்து) இருப்பக் கண்டேன்
ஒழிக இக் காமம் ஒரூர்
இரண்டஃகம் ஆயிற்று) என்றாங் (கு)
அழுதகண் ணீர்கள் மைந்தன்
ஆவிபோழ்ந் திட்ட அன்றே" (93)

சீவகன், "சிறியவர் செய்த தீமையைப் பெரியவர் வெறுக்காமல் பொறுப்பர் அல்லரோ" என்று கூறி விளங்குகின்ற வேல் போல் கண்ணையுடைய சுரமஞ்சரியின் ஊடலைத் தீர்க்க முற்பட்டான். மாலையின் மகரந்தம் சிந்த அழகிய சிவந்த சிற்றடியில் அணிந்த அழகிய சிலம்பின் மேல் முடியைச் சேர்த்து அவளது ஊடலை நீக்கினான்.

காதலால் தங்குகின்ற சீவகன் யாழை வென்ற மொழியுடைய சுரமஞ்சரியின் அமிர்தத்தை வென்ற புலவியை (ஊடலை)ப் போக்கினான். விதையின்றிப் பழுத்த கொழுவிய காமக் கனியை நுகர்ந்தான். அவளுடன் ஆடி நீங்காதவனாய் முறையால் நிறைந்த முழு நிலவைக் கதிரவன் பொருந்தி ஒன்றான இயல்பை ஒத்தான்.

"யாழ்கொன்ற கிளவி யாள்தன்
அமிழ்துறழ் புலவி நீக்கிக்
காழின்றிக் கனிந்த காமக்
கொழுங்கனி நுகர்ந்து காதல்
தாழ்கின்ற தாம மார்பன்
தையலோ(டு) ஆடி விள்ளான்
வாழ் சென்ற மதியம் வெய்யோன்
ஒட்டியொன் றாயது) ஒத்தான்" (95)

பசிய இலைத் தொழிலையுடைய பட்டும் முத்தும் பவளமும் ஒளிருகின்ற அல்குலையும், நஞ்சு பொருந்திய இலை வடிவான வேல் போன்ற கண்ணையும் உடைய மாதரது நகை முகத்தின் முறுவலை நுகர்ந்தான் சீவகன். அவளது நினைவையும் குறிப்பையும் பார்த்து அம்பை விடுவதே தொழிலாகக் கொண்ட காமனானவன் கைவில்லையும் அம்பையும் ஏந்தினான். இவ்வாயிலை இப்போது காப்பானாயினான் (சுரமஞ்சரிக்கும் சீவகனுக்கும் இடையே மேலும் காதலை மிகுவித்தான்.

சீவகன் கடிப்பிணை என்ற அணியைச் சுரமஞ்சரியின் காதில் அணிவித்தான். தலைமுடியின்கண் மணம் காதவழி மணக்குமாறு தொடுக்கப்பட்டு அலர்ந்த மலர் மாலையைச் சூட்டினான். அவள் தோளிலே கிம்புரி (மகரவாய்) வடிவமுள்ள முத்து மாலையை அணிவித்தான். மார்பைச் சந்தனத்தாலே அழகுற எழுதி ஒளி பொருந்திய வளையைத் திருத்தினான்.

குறிப்புகள்

ஊடல் மிகுதி காரணமாகச் சுரமஞ்சரி சீவகனின் மார்பைப் பலரும் தழுவிய மார்பு என வெறுத்துக் கூறினாள். பெண் தன்மை உடையவர் எல்லோரும் தலைவனது மார்பைப் பொதுப் பொருளாகக் கொண்டு நுகர்வதால் அவன் மார்பைப் பொருந்த முடியாது எனத் தலைவி கூறுவதைத் திருக்குறளும் உணர்த்தும். "பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொது உண்பர் நண்ணேன் பரத்த நின் மார்பு" (1311) என்பது அக்குறள்.

ஊடலை மேற்கொண்ட சுரமஞ்சரி சுவரை ஒட்டி நின்றாள். அச்சுவரில் எழுதிய பாவை இவள் போலவே இருந்ததால் மயங்கிய அவன் இரண்டு உருவினையும் ஒப்பிட்டான். அவ்வோவியம் அழகுற இருப்பதாக எண்ணி நோக்கினான் என்று மேலும் ஊடினாள். "ஒப்பிட்டுப் பார்த்தேன்" என்று அவன் காரணத்துடன் கூறியும் தன்னினும் அவ்வுருவம் அழகுற இருப்பதாக எண்ணியே நோக்கினான் என ஊடினாள்.

சீவகன் கிழவனாய் வந்து சுரமஞ்சரியை விரும்பிப் பாடி அவளையே விரும்பினவனாயும், அதே நேரத்தில் சுவரில் எழுதிய பாவையை இமையாமல் பார்த்து மெய்மறந்தவனாயும் இரு நிலைகளில் மாறுபட்டவனாய் இருந்தமையால் 'ஓர் ஊர் இரண்டு அஃகம் ஆயிற்று' என்று ஊடற் கொண்டு அழுதாள் சுரமஞ்சரி.

ஊடலைத் தீர்ப்பதற்குரிய வழி சுரமஞ்சரியிடம் மன்னிப்புக் கேட்டல் என எண்ணிய அவன், 'சிறியவர் செய்த தீமை புலம்பலர் பொறுப்பரன்றே பெரியவர்' என்று கூறி அவளை வணங்கினான். சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே' என்கிறது வெற்றிவேற்கை. 'பிழைத்தது பொறுத்தல் என்றும் பெரியவர் கடனே என்பர் என்று கம்பரும் கூறியுள்ளார்.

'ஊடுதல் காமத்திற்கு இன்பம்' குறள் (1330) ஆதலால் 'அமிர்தத்தை வென்ற ஊடல்' என்றார். சுரமஞ்சரிக்கு நிறை நிலவும், சீவகனுக்கு கதிரவனும் உவமைகள்.

சீவகன் சுரமஞ்சரிக்கு அணியலங்காரம் செய்தான் என்பது அவளைப் பிரிய இருப்பதை உணர்த்தும.

சீவகன் பிரிவைப் பொறுக்குமாறு சுரமஞ்சரியை வேண்டல் (98–100)

விளங்குகின்ற வெள்ளருவி வீழும் குன்றிலே தோன்றிய தண்ணிய தசர விறகின் செந்தீயில் அழகு விளங்கும் அகிலும் தேனும் நேர் கட்டியும் ஆகிய இவற்றைக் கூட்டிக் குற்றமின்றி வளர்த்த புகையினையுடைய சுமளியின் கண்ணே சிங்கம் போன்ற காளையாகிய சீவகன் வெள்ளிய வளையணிந்த சுரமஞ்சரியை நோக்கி இதனைக் கூறினான்.

"கயல் போன்ற கண்களை உடையவளே, ஒரு காரியம் உளது. நீ வருந்த வேண்டா, சில நாட்கள் உன்னைப் பிரிவேன். அப்போது அருமையான உன் அழகைத் தாங்கி இருப்பாயாக, அதுவே உன் கடமையாகும் என்றுரைத்தான். அதற்கு அவள், பெரியோனே, நீ விரும்புவது அல்லாமல் வேண்டுவது வேறொன்று உண்டோ? நான் ஒரு தன்மையான உனது மனம் போல் சென்றேன் ஆதலால் உன் மன விருப்பமே என் விருப்பம்" என்றாள்.

"கரும நீ கவல வேண்டா
கயற்கணாய் பிரிவில் சின்னாள்
அருமை நின் கவினைத் தாங்கல்
அதுபொருள் என்று கூறப்
பெருமநீ வேண்டிற்று) அல்லால்
வேண்டுவ பிறிதொன் றுண்டோ
ஒருமைநின் மனத்தின் சென்றேன்
உவப்பதே உவப்பது) என்றாள்" (99)

நாணுடன் கலந்த இனிமை கொண்ட அச்சம் பொருந்திய மொழியைக் கேட்ட சீவகன், "தேன் மிகுந்த கோதாய், ஒப்பனையிலும் உன் அழகு தனித்து வருந்துமாறு தங்கியிரேன்" என்று கூறி அவளைத் தழுவிச் சென்றான். அவன் வாள் நெருங்கிய தோழர் சூழ்ந்து வரத் தன் இல்லத்தை மகிழ்வுடன் அடைந்தாள்.

குறிப்புகள்

தகரம் என்பது ஒருவகை வாசனை மரம். நேர்கட்டி என்பது ஒரு வாசனைப் பொருள்.

தலைவன் பிரிவைத் தலைவி ஆற்றிக் கொண்டு இருத்தல். அருமையையுடைய பொருள். ஆயின், அதுவே பெண்ணுக்குக் கடமையாகும் என்ற உண்மையைப் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

சீவகனைக் கண்ணுற்ற பெற்றோரும் மற்றோரும் மகிழல் (101–103)

சீவகனின் வளர்ப்புத்தாய் தந்தை குதிரைகளையும், யானைகளையும், பொன்னால் ஆகிய நீண்ட தேரினையும் பார்த்து இரவும் பகலும் ஒழிவின்றி 'என் மகன் எங்கேயுளான்?" என அழுத கண்ணீரைக் கொண்டு கையைக் கழுவி வருந்திச் கொண்டிருந்தாள். மெழுகு நெருப்பினிடத்து உருகினாற்போல நெஞ்சுருகுகின்ற அன்னையின் வருத்தத்தை சீவகன் அகற்றினான்.

ஒற்றரும் உணராதவாறு சீவகன் மொழியை நீக்கித் தன் உறுப்பினால் உறவினர்க்குக் குறிப்பை உணர்த்தினான். அவர்கள் ஒரு சேரத் திரண்டு அவனைத் தழுவிக் கொண்டனர் நம்பியே என்று அடித்துக் கொண்டனர். வருந்திச் சோர்ந்த அவர்களது கண்ணீர் காலையிழுத்து ஒழுகியது.

"ஒற்றரும் உணர்தல் இன்றி
உரைவித்(து) உறுப்பினாலே
சுற்றத்தார்க்(கு) உரைப்ப வீண்டித்
தொக்குடன் தழுவிக் கொள்வார்
எற்றுவாவ் இனைந்து சோர்வார்
நம்பியோ நம்பி என்னா
உற்றுடன்(று) அழுத கண்ணீர்
காலைத்(து) ஒழுகிற்(று) அன்றே" (102)

இவ்வழுகையால் இம்மறை வெளியாகும் என நினைத்துக் கந்துகன் கூறினான். கடல் அலை ஓய்ந்தது போல் வந்தவர் அழுகையை நிறுத்தினர். உண்டான அழுகையை மறைக்கக் கந்துகனின் தந்தை இருந்த நான் இது என நகரத்தார்க்குக் கூறினர். அளவற்ற மகிழ்ச்சியால் எல்லோரும் மனம் அமைதி அடைந்தனர்.

குறிப்புகள்

சீவகனைப் பெற்றவள் விசயை. அவனை வளர்த்துவந்த தாய் சுநந்தை. ஒற்றர்களும் உணராதவாறு பேச்சின்றியே உறுப்பினாள் (இங்கிதத்தால்) தன் வரவை உணர்த்தினான் சீவகன். அவன் இராசமாபுரம் வந்துள்ளான் என்பது மறை (இரகசியம்) ஆகும். சீவகனுக்காகச் செய்த ஆரவாரத்தை மறைக்கும் பொருட்டு' எந்தை இறந்தநாள் இன்று என' அழுதனர். கடலில் அலை ஒலி அடங்கியது என்பது உலகில் இல்லாத ஒன்றாகும் ஆதலால் இது இல்பொருள் உவமை.

சீவகன், தத்தை, குணமாலை ஆகியோரைக் கண்டு மீண்டும் பிரிதல் (104–107)

செங்கயல் போலும் தண்ணிய கண்களையும், செவ்வாயையும் உடைய காந்தருவத்தை சீவகனைக் கண்டு மகிழ்ந்தாள். அவள், 'அடிகளே, இனிய மொழியையுடைய என் தங்கையாகிய குணமாலையைச் சென்று காணுங்கள்' என்று வேண்டினாள். அவனும் குண மாலையை அடைந்து மங்க முறைமையால் தேன் துளி நீங்காத மாலையையும் மணங்கமழும் கண்ணியையும் முதலில் அவளுக்கு அணிவித்துக் குங்குமமும் இட்டான்.

"தீவினை யுடைய என்னைத்
தீண்டன்மின் அடிகள்: வேண்டா
பாவியேன் என்று நொந்து
பரிந்தழு(து) உருகி நையக்

காவியங் கண்ணி ஒன்றும்
கவலல்யான் உய்ந்த(து) எல்லாம்
நாவியே நாறும் மேனி
நங்கைநின் தவத்தின் என்றான்" (105)

அரிவையே கேட்பாயாக! அன்னம் போன்ற மெல்லிய நடையும், பார்வையும், மென்மையும், அழகும், எழுச்சியும், மீன் போன்ற இடையும், வெவ்விய மார்பும் விளங்குமாறும் என் மனத்திலே எழுதப்பட்ட நீங்காதிருந்தாய் என்றாலும் உன்னை, நான் பிரிந்த ஒரு நாள் ஊழிக்காலம் போன்றே இருந்தது" என்றான்.

"அன்னமென் நடையும் நோக்கும்
சாயலும் அணியும் ஏரும்
மின்னின் நுண் நுசுப்பும் வெய்ய
முலைகளும் முகமும் தோன்ற
என்மனத்து) எழுதப் பட்டாய்
ஆயினும் அரிவை கேளாய்
உன்னையான் பிரிந்த நாளோர்
ஊழியே போன்ற(து) என்றான்" (106)

குற்றமற்ற முறுக்கவிழ்ந்த மாலையணிந்த மார்பனான சீவகன் குணமாலை மகிழ்வனவற்றை இவ்வாறு உரைத்து இனிய துயிலை மேற்கொண்டான். மற்றொருநாள் தன் தந்தையிடம் (கந்துக்கடனிடம்) மேல் வரும் பொருளாக உள்ளவற்றைத் தனியே எடுத்துக் கூறினான். தன் தோழர்கள் சூழ்ந்துவரத் தாவும் குதிரையை வாங்கும் வணிகனாகப் புனைந்து கொண்டு தன் நகரினின்றும் நீங்கினான்.

குறிப்புகள்

பலநாள் சீவகனைப் பிரிந்த தத்தை, பிரிவுத்துயரில் வருந்தியிருப்பினும், அடுத்த மனைவியாகத் தன் கணவனுக்கு வாய்க்கப் பெற்ற குணமாலையை விரைவில் சந்திக்கத் தன் கணவனை வேண்டுவது அவளது பரந்த உளப் பாங்கை உணர்த்தும் பட்டத்து யானையாகிய அசனிவேகம் என்பதைத் தோற்கடித்தபின் குணமாலையைத் திருமணம் செய்து கொண்டான் சீவகன். தன் சீற்றத்திற்கு ஆளான அவனைக் கொல்ல மதனன் என்பவனைக் கட்டியங்காரன் அனுப்புகிறான். அவனைச் சுநந்தனன் என்பவன் பிறர் அறியாமல் காத்தான். அவனைக் கொல்ல முடியாது அயலான் ஒருவனை வாளால் உருத்தெரியாமல் கொன்று சீவகனை அழித்துவிட்டதாகப் புரளியைக் கிளப்பிவிட்டான் மதனன். ஊரார் குணமாலையைத் தீண்டிச் சீவகன் கொலையுண்டான் என்று அவளைக் குறை கூறலின், ' தீவுனையுடைய' என்றாள். சீவகன் தன்னை வந்தடைந்தும் அவனை நீக்கிக் கூற வேண்டலின் 'பாவியேன்' என்றாள்.

குணமாலையின் அழகு தன் நெஞ்சத்தே பதிந்தது. ஆதலால் அவளை ஒரு சிறிதும் மறக்கவில்லை; அப்படியிருந்தும் பிரிந்த ஒரு நாள் ஊழிபோலத் தன்னை வருத்தியது என்றான். இனிமேலும் தன்னை வருத்த வேண்டாம் என்பது குறிப்பெச்சம்.

தன் வளர்ப்புத்தந்தை கந்துக்கடனிடம் மிகுந்த மரியாதை உடையவனாகத் திகழ்ந்தான் சீவகன். அதனால் அவனிடம் இனிமேல் நடக்க இருப்பதைத் தனியே எடுத்துரைத்தான்.

கட்டுரைகள்

1. சீவகனின் பண்பு நலன்கள்

முன்னுரை

காப்பியத் தலைமகன் நிகரற்ற அழகுடையவனாக குறைவில்லாப் பண்பு நலன்கள் உடையவனாக அமைதல் வேண்டும். செறிந்த அறிவு, மாசற்ற வீரம், உயர்ந்த காதல் போன்ற இவற்றின் ஏற்றமிகு படைப்பாக அவனது படைப்பு விளங்க வேண்டும். சிறந்த காப்பியத் தலைவனைப் படைக்கும் திறத்தில்தான் இலக்கியத்தின் வெற்றி அமைகிறது. இவ்வடிப்படையில் சீவகனின் பண்பு நலன்களைக் காணலாம்.

உருவப்பொலிவு

சீவகன் தோற்றப் பொலிவுடையனாகத் திகழ்ந்தான். 'மலை புறம் கண்ட மார்பின் வாங்கு வில் தடக்கையான்' என்ற தொடர் சீவகன் மலை போன்ற தோற்ற மார்பினையும் தடக்கைகளையும் உடையவன் என்பதைப் புலப்படுத்தும். அவனுடைய உருவம் திண்ணியதாக இருந்தமையை 'அம் குன்று அனான்', 'உலம் பொரு தோளினான்' [கல்தூணைப் பொரும் தோள்களையுடையவன்] என்ற தொடர்கள் உணர்த்தும். 'குருதி வேலினான' என்று ஆசிரியர் அவனைச் சுட்டுவது அவனது வீரத்தின் மாட்சியை அறியச் செய்யும். அவனது வலிமையைக் குறிப்பிடும் போது குகையின்கண் கொடிய சிங்க ஏற்றைப் போன்ற வலிமை என்பர் ஆசிரியர்.

மாற்றுரு ஏற்பதில் வல்லவன்

தன் சுண்ணத்தை இகழ்ந்த சீவகன் பின்னர் வலிந்து தன்னை விரும்பும்படி தான் நோற்பதாகக் குறிப்பால் உணர்த்திய சுரமஞ்சரி மற்றைய ஆடவர் எவரையும் நினையாளாகிச் சீவகனையே கருதிக் கன்னிமாடத்தில் நோன்பு இயற்றினாள். சுரமஞ்சரியைத் தன்னால் மயக்க முடியும் என நண்பனாகிய புத்திசேனனிடம் சீவகன் சூளுரை உரைத்தான். அவன் நலத்தை அடையப் பசிப்பிணியுடைய கிழவனாகிய ஓர் அந்தணனாய்ச் செல்வது அவள் ஐயுறாமல் தெளியும் தன்மையதாகும் என எண்ணினான்.

"சில்லரிக் கிண்கிணி சிலம்புஞ் சீறடிச்
செல்விதன் திருநலம் சேரும் வாயில்தான்
அல்லலங் கிழவனோர் அந்தணாளனாய்ச்
செல்லல்யான், தெளிதக வுடைத்தென் றெண்ணினான்" (14)

இவ்வாறு எண்ணிய அவன் வருத்துகின்ற பாம்பு உரித்த தோல் போன்ற மேனியனாய், வில்லென வளைந்த உடலையுடையனாய், மேலாடையுடன் பிணங்கிய நூலணிந்த மார்பினனாய், மூப்பிலக்கணத்தையுடைய பெரிய நூலை ஆராய்ந்து அம்மூப்பை எழுதியது போல் தோன்றினான்.

உருமாற்றங் கொள்வதில் கைதேர்ந்த அவன் வெளுப்பாக நரைத்த உடம்பினனாய், தெறித்த புள்ளியனாய், நுண்ணிதாகக் கிழிந்த ஆடையணிந்து, கிழிந்த குடையுடன் சுரமஞ்சரியின் கன்னிமாடத்துள் வந்தான். முதியவனைப் போல் வந்தால் எளிதில் அம்மாடத்துள் நுழையலாம் என எண்ணித் தலை வளைதலின் வளைந்த நோக்குடன், கையில் ஒரு தண்டை ஆதரவாக ஊன்றி வந்தமை அவனது தனித்திறமையை உணர்த்தும்.

மேலும் சுரமஞ்சரியை மணந்து, பிரிந்த நிலையில் பல நாட்கள் பிரிந்திருந்த வளர்ப்புத்தாய் சுநந்தையையும் சுற்றத்தாரையும் கண்டான் சீவகன். ஒற்றரும் உணராதவாறு தன் மொழியை நீக்கித் தன் உறுப்பினால் உறவினர்க்குக் குறிப்பை உணர்த்தினான். சீவகன் சுரமஞ்சரியை மணந்து பிரிந்தபின் தன் மனைவியாகிய தத்தை, குணமாலை ஆகியோரைக் கண்டு அளவளாவினான். மீண்டும் அவர்களைப் பிரிந்த நிலையில் தோழர்கள் சூழ்ந்து வரத் தாவும் குதிரையை வாங்கும் வணிகனாகப் புனைந்து கொண்டு தன் நகரினின்றும் நீங்கினான். மாற்றுரு ஏற்பதில் வல்லவன் என்பதை இந்நிகழ்ச்சியும் உணர்த்தும்.

காதல் மன்னன்

சீவகன் விமலையை மணந்து கொண்ட மணக்கோலம் கண்ட அவன் நண்பர்கள் அவனை ஐந்து மலர்க்கணைகளையுடைய காமன் என வியந்தனர். சீவகனின் நண்பன் புத்திசேனன், ஆடவரை வெறுத்துத் தன் கன்னி மாடத்தில் நோன்பிருக்கும் சுரமஞ்சரியை மயங்கச் செய்து அவள் நலன் நுகரின் சீவகனைக் காமனுக்குத் திலகன் எனலாம் என்றான். "அவள் (சுரமஞ்சரி) நலம் நுகரின் எந்தையை யாமெலாம் அநங்க மாதிலகன் என்னுமே" என நண்பன் கூறியதைக் கேட்ட சீவகன் சுரமஞ்சரியை மயக்கமுறுத்துவதாக

ஆணையிட்டான். அவ்வாறே அவளை அடைய எண்ணிய அவன் முதிய அந்தணன் உரு ஏற்று அவளை மயங்கச் செய்து தன்னை விரும்புமாறு செய்தான். அவள் உள்ளத்தில் காதல் மன்னனாகத் திகழ்ந்த அவன், அவளை மணந்து தன் சூளுரையில் வெற்றியடைந்தான்.

சுரமஞ்சரியை மணப்பதற்குமுன், காந்தருத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை ஆகிய பெண்களைக் கலையாலும் திறத்தாலும் ஊழாலும் வெற்றியடைந்து, அங்கங்கே தன்னிடத்துக் காதல் கொண்ட அவர்களைச் சீவகன் மணந்து கொண்டான். அதனைக் குறிப்பிடும் நிலையில் நண்பன் புத்திசேனன், "நீ புகுந்து ஊரெல்லாம் மதுக்குடம் விரிந்தாற் போன்ற மலர்மாலையுடைய மகளிரோடு புதுமணம் செய்வை"என்றான். இதனின்றும் சீவகன் பல பெண்டிர் காதல் கொள்ளத்தக்க தலைவனாக இருந்தமை தெளிவாகிறது.

காமுகன் அல்லன் காம திலகன்

சீவகன் பல பெண்களை மணந்து கொண்டவன். அவனைக் காமுகன் என்பர் சிலர். அவர்க்கு விளக்கம் அளித்துச் சீவகன் காமுகன் அல்லன் என்பர் டாக்டர் துரை அரங்கனார். அவர், "பல மகளிரை மணந்து கொள்வது என்பது அவன் காலத்தில் சமூகம் உடன்பட்டதொரு நெறி. நெறியேயாயினும் அவ்வாறு பலரை மணத்தற்கு அடிப்படை இழிந்த காமமின்றி வேறில்லை என்பர். ஆனால் சீவகன் அவ்வாறு இழிந்த காமங் கண்ணியே மகளிர் பலரை மணந்தானல்லன்..... கடமையில் கண்ணும் கருத்துமாய் நின்ற வாழ்க்கைக் காலத்திலேயே மேற்குறித்த எண்மரையும் சீவகன் பெறும் பேறு எய்தினான". [இலக்கியக் கட்டுரைகள் பக் (94 - 99)

துரை அரங்கனாரின் இக்கருத்திற்கேற்பவே சீவகன் சுரமஞ்சரியை மணந்தமை அமைகிறது. ஆடவர் தன் மனையருகே சென்றாலும் தன் உயிர் நீப்பதாக நோன்பு, பூண்டு, உறுதியுடன், இருந்த சுரமஞ்சரியை மணப்பதால், காமதிலகன் என்ற புகழ்ப் பெயரைத் தம்மிடமிருந்து சீவகன் அடைவான் என நண்பர்கள் கூறினர். அவர்தம் கூற்றிற்கு இயைய தளராத அவள் உள்ளத்தை தளர்த்தித் தன்னையே அவள் நினைத்துருகும் வண்ணம் செய்து இறுதியில் அவளை மணந்து கொண்டு காமதிலகன் என்ற பட்டத்திற்குரியன் ஆனான். "பொருவிற்றாம் நம்பி காமதிலகன்" என அவன் தோழர் ஒத்துக் கொண்டனர்.

பேச்சாற்றல் மிக்கவன்

சீவகன் இரு பொருள்படப் பேசுவதில் வல்லவனாக இருந்தான். கன்னி மாடத்திற்கு அவன் வந்ததன் காரணத்தைக் காவலர் வினவினர். அவனோ அவர்தம் இரக்கத்திற்கு ஆட்படுமாறு "முற்காலத்தில் இளம்பருவத்தில் பாற்சோற்றை விரும்புவேன். இம் முதுமையிலே என்னைக் கண்டு விருப்புற்றவர் தருவனவற்றை விரும்புவேன்" என்றான். 'இப் பருவத்தில் என்னால் விரும்பப்பட்ட மகளிர் தருவன யாவற்றையும் காதலிப்பேன்" என்ற மறை பொருளில் அவன் பேசியதை உணராத அவர்கள் பித்தன் போல் உளறினான் என எண்ணிப் பசிக்கு இரங்கி விடுத்தனர்.

சுரமஞ்சரி அவனது வருகை பற்றி வினவிய போது, "உள்ளத்தை வருத்தும் அழகிய நீரையுடைய குமரியிலேயே ஆட வந்தேன்" என்றான். "அதனால் கிடைக்கும் பயன் யாது?" என்று அவள் கேட்க, "முதன்மையாக என்னை வருத்தும் இம் முதிய மூப்பு நீங்கும்" என்றான்.

"வந்த வரவு என்னையென வாட்கண் மடவாய்கேள்
சிந்தைநலி கின்றதரு நீர்க்குமரி ஆட
வந்திலதி னாயபயன் என்னைமொழி கென்றான்
முந்திலதி கின்றமுது மூப்பொழியு மென்றான்" (26)

"அழகிய தன்மையுள்ள கன்னியாகிய நின்னுடன் கூடி மகிழ வந்தேன்; கூடி மகிழ்தற்கு முன் இம்முதிய மூப்பு வேடம் நீங்கும்" என்ற உட்பொருளில் அவன் பேசியமை அவனது பேச்சாற்றலை உணர்த்தும்.

மேலும் சுரமஞ்சரி சீவகனிடம், " நீர் வல்லது என்ன?" என்று கேட்க அவன் "மடவாய் நான் மறைவல்லன்" என்று விடையளித்தான். அவளோ, "நீர் கற்ற எல்லை எவ்வளவு?" என்று கேட்க அவன், "தத்துவத்தை உணர்த்தி முடியுமளவும்" என்றான்.

சீவகன் தான் வேதத்தில் வல்லவன் என்று வெளிப்படையாகக் கூறிய கூற்றானது தான் மறைவான உருவம் கொள்வதில் வல்லவன் என்ற உட்பொருளைக் கொண்டது. தான் கற்ற எல்லை வேதம் தான் கருதிய தத்துவத்தை முற்ற உணர்த்தி முடியுமளவும் என்று அவன் கூறியது அவளை அடைவதான காரியத்தைப் பெற்று முடியுமளவும் என்ற பொருளையும் உள்ளடக்கியதாகும்.

இசைக் கலைஞன்

சீவகன் இசைபாடுதலில் ஏற்றமுடையவனாக விளங்கினான். சுரமஞ்சரியின் கன்னிமாடத்துள் நுழைந்து அவளது இரக்கத்திற்கு ஆளாகி விருந்துண்ட பிறகு இசை பாடத் தொடங்கினான். அவன் குரலைக் கேட்ட மங்கையர் காமனது அழகிய குரலே என்றும் அக்குரலை இது மயக்கும் என்றும் மயங்கினர். மேலும் அக்குரல் இத்தன்மைத்தன்று; இயக்கரால் இசைக்கப்படுதலின் வந்தது என்று தம் பின்னும் முன்னும் நோக்கினர். பேதைமையை மிகவும் கொண்டனர். அவ்விசையை விரும்பிய பெண்டிர் அவ்விசையுடையவனைக் காண ஓடினர்.

"மன்மதன் மணிக்குரல் மருட்டும் என்று மால்கொள்வார்
இன்னதின்று யக்கரின் இயக்க வந்த தென்றுதம்
பின்ன முன்னு நோக்குவார் பேதுசால எய்துவார்
கன்னி தன்மனத்தி ழைத்த காளை நாமம் வாழ்த்துவார்" (42)

சீவகன் சாமகீதம் பாட, தம் ஓசையாக அழைக்கும் வேட்டுவனது ஓசையில் மனம் ஒன்றி ஓடிவரும் மயில் திரள் போல் ஓடி வந்தனர். அழகிய கற்பகக் கொம்பு போன்ற சுரமஞ்சரி குளிர்பிறை போன்ற பூணினை அணிந்த சீவகனின் இசை வலையில் போய்

அகப்பட்டாள். சீவகன் அவளது குற்றமற்ற முகத்தை நோக்கி இனிமை நிறைந்து அமுதம் பெருக நரம்புடன் கூடி மறையும் அருவருப்பில்லாத இசையைப் பாடத் தொடங்கினான் என்பதை "தேன் பொதிந்தமுதம் ஊறப் பயிரிலா நரம்பிற் கீதம் பாடியே தொடங்கினானே" என்ற தொடர் விளக்கும்.

சீவகன் தேவகீதம் பாட வளையணிந்த மகளிர் சோர்ந்து மயங்கிய மயிலைப் போன்றவர் ஆயினார்.

"பாடினான் தேவ கீதம்
பண்ணினுக் கரசன் பாடச்
சூடக மகளிர் சோர்ந்து
செருக்கிய மஞ்ஞை ஒத்தார்" (58)

இத்தன்மையனைத்தும் சீவகன் மிகச் சிறந்த இசைக் கலைஞன் என்பதை உணர்த்தும்.

கூர்ந்த அறிவினன்

சுரமஞ்சரி பிறரது பசித்துன்பம் போக்கும் அருட்குணமுடையவன் என்பதை நன்குணர்ந்த சீவகன் பசித்துன்பத்தால் வாடுறும் முதிய அந்தணன்போல் சென்றால் அவளது இரக்கத்திற்கு ஆட்படலாம் என எண்ணினான். அவ்வாறு எண்ணியபடி,

"அணங்கர வுரித்ததோ லனைய மேனியன்
வணங்குநோன் சிலையென வளைந்த யாக்கையின்
பிணங்குநூன் மார்பினன் பெரிதோர் பொத்தக
முணர்ந்துமூப் பெழுதின் தொப்பத் தோன்றி" (15)

அவன் செய்யப்பட்டமை அவனது மதி நுட்பத்தினைக் காட்டும்.

அவன் வாயிற் காவலரிடம், 'இளம் பருவத்தில் பாற்சோற்றை விரும்புவேன்; இம்முதுமையில் என்னை விருப்புற்றவர் தருவனவற்றை விரும்புவேன்' எனப் பித்தனைப் போலும் செவிடனைப் போலும் உளறினான். இதனைக் கேட்ட அவர்கள் கையால் தொழுதவராய் மிகுந்த முதுமையால் செவி கேளார்; பித்தரைப் போல் மனத்தில் தோன்றின்படி கூறினார் என எண்ணினார். இவ்வாறு அவர்கள் எண்ணுமாறு செய்து அவர்களது இரக்கத்திற்கு ஆளாகியது அவனது திறமையை உணர்த்தும். மேலும் மங்கையர் அவனை விரட்டும் போது அஞ்சுவது போல் நடிக்கும் நடிப்பின் காரணமாக ஊதப் பறக்கும் தன்மையுடன் நுடங்கி நின்றமையும் 'பாவம் இது நோவ உரையன்மின் முது பார்ப்பார்', 'அவன் இறந்து படுவான் போலும், விரைவில் அவன் இறப்பதற்கு முன்னை நாங்கள் செய்வது என்ன' என்றெல்லாம் அப்பெண்கள் கூறியதற்கேற்ப அவன் நடித்தமையும் அவனது திறனைப் புலப்படுத்தும்.

படிப்படியாகச் சுரமஞ்சரியின் உள்ளத்தே இடம் பெற்றான் சீவகன். அவன் அளித்த ணவை உண்டபின் அவளை மணந்து கொள்ளும் தன் குறிக்கோளை நிறைவேற்றிட

ஆராய்ந்தான். இந்நிலையில் தான் நினைத்திருந்த தன் மனத்தினை விரைந்து முடிப்பதற்காக நிலைத்த இசையைப் பாடத் தொடங்கியமை அவன் அறிவுத்திறனைத் தெளிவாக்கும். மேலும் அவளது உள்ளத்து உணர்வுகளைத் தூண்டும் நிலையும் மாலைப் பொழுது கண்டு ஆற்றாத தலைவி தோழிக்குக் கூறுவது போல் பாடத் தொடங்கினான் அறிவில் வல்ல சீவகன். இவ்வாறு டாடும்போது தன் வேட்கைக் குறிப்பைப் புலப்படுத்தவும் முயன்றான் எனலாம்.

பெற்றோரை மதிக்கும் பண்பினன்

பல நாட்கள் வளர்த்த பெற்றோரைப் பிரிந்த சீவகன் சுரமஞ்சரியை மணந்த பின் அவளை நீங்கிப் பெற்றோரைக் காண வந்தான். மெழுகு நெருப்பினிடத்து உருகினாற்போல் நெஞ்சுருகிய அன்னை சுநந்தையின் வருத்தத்தை அகற்றினான். தன் தந்தை கந்துக்கடனிடம் மேல்வரும் பொருளாக உள்ளவற்றைத் தனியே எடுத்துரைத்து மீண்டும் பிரிந்தான். இந்நிகழ்ச்சிகள் பெற்றோரை மதிக்கும் அவன் பண்பினை உணர்த்தும்.

இவ்வாறு காப்பிய நாயகன் சீவகன் உருவப் பொலிவுடையவனாக, நடிப்புத் திறனுடையவனாக, சொற்திறம் மிக்கவனாக, காதலில் வல்லவனாக, காமதிலகன் என்ற பட்டத்திற்கு ஏற்றவனாக, இசைப் புலமையில் தேர்ந்தவனாக, கூர்த்தறிவு வாய்க்கப் பெற்றவனாகத் திகழ்ந்தமை ஆசிரியரால் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.

2. சுரமஞ்சரியின் பண்பு நலன்கள்

முன்னுரை

சீவகன் மணந்த பெண்களுள் ஏழாவதாக அமைபவள் சுரமஞ்சரி. காப்பியத் தலைவன் தன்னிகரில்லாப் பண்புகளோடு ஒளிரும் தன்மையில் அவனுக்கு இணையான உயர் குணங்களை உடையவள் சுரமஞ்சரி. தனது சுண்ணத்தை இகழ்ந்த சீவகன் பின்னர் வலிந்து வந்து தன்னை விரும்பும்படி அவனையே கருதி தோற்கும் தன்மையால் அவளுடைய பண்புகள் புலப்படும் பாங்கை உணரலாம்.

பேரழகுப் பாவை

சீவகன் சுரமஞ்சரியின் அழகைப் பெரிதும் போற்றினான். அவளுடை அங்க நலன்கள் அனைத்தும் அவன் உள்ளத்தைச் சுட்டுக் கலக்கின. அவள் அழகை எடுத்துரைக்கும் அவன் அவள் கண்கள் உள்ளங்கையினும் பெரியவனாகி அம்மங்கையின் முகத்தில் அமைந்து உள்ளத்தில் உள்ளன எனக் கூறி மயங்கினான். மணவறை அருகிலே நின்ற சீவகனை 'வடியுறு கடைக்கண் நோக்கி' ஒசிந்து நின்றமையும், 'நாம வேல் காமர் கண்ணாள்' நெஞ்சுருகி நின்றமையும் அவள் கண்ணழகை உறுதிப்படுத்தும். மேலும் ஆசிரியர் கழியிலே வளரும் கயல் போலும் கண்கள் வியப்பூட்டும் செவ்வரி படர்ந்த வாளனைய கண்கள் என்றும் கண்களின் எழிலைச் சுட்டுவர்.

சுரமஞ்சரியின் மொழி இனிமையாக இருந்தமை 'யாழ் கொன்ற கிளவியாள்' : கரும்பு ஏர் தீஞ் சொலாள்' என்ற தொடர்களால் தெளிவுறும். அவள் தோற்றம் கண்டோர்

விரும்பும் பேரழகுடையது. 'உயிர் பெற எழுதப்பட்ட ஓவியப் பாவை', 'ஆடகமென்ற பொன்னால் அமைந்த பாவை, 'பவளப் பூம்பாவை' போன்றவை எழிலைச் சுட்டும். அவளின் இடை 'நையும் இடை', 'மின்னு நுகர்ப்பினாள்' என சொல்லில் தெளிவுறும். அவளின் கூந்தலின் அழகு மேலும் சுரமஞ்சரியின் எழிலனை மிகுவிப்பதாக உள்ளது. 'மைய சூழல்' அவள் கூந்தலது கருமையும், கமம்பூங்குழல்' கூந்தலின் மணத்தை எடுத்துரைக்கும்.

உருவம் 'பூக்கொசிந்த கொம்பு ஒத்து' அமைந்தது. 'மின்னுக் கொடிக் குழாத் திடை ஓர் கோலம் குளிர் மணிக் கொம்பின் நின்றாள். 'ஒளி மணிப் பூங்கொம்பு ஒப்பாள்' என்பன அவளின் உருவத்தைச் சுட்டும். அவள் பொன் மடத்தினின்று இறங்கி வந்த தன்மை சோலையையுடைய மலையினின்றும் இழியும் தோகையையுடைய மயில் போன்று இருந்தது. அவள் நடந்து வந்த அழகு மணமுடைய மலர்க்கொம்பு நடை கற்பதைப்போல் இருந்தது என்றெல்லாம் ஆசிரியர் கூறுவது அவளது ஒப்பற்ற வனப்பினை உணரச் செய்யும்.

உள்ளத்து உறுதி

சுரமஞ்சரி தன் சுண்ணத்தை இகழ்ந்த சீவகன் பின்னர் வலிந்து வந்து தன்னை விரும்பும்படி குறிப்பால் உணர்த்தினாள். அதன்படி இறுதிவரை மற்றைய ஆடவர் எவரையும் கருதாளாகிச் சீவகனையே கருதிக் கன்னி மாடத்தில் நோன்பு ஏற்றாள். அவளது உள்ளத்து உறுதி சீவகன் நண்பன் புத்திசேனன் கூற்றாலும் புலப்படும். புத்திசேனன், "பணிப் பெண்களால் வழிபடப்படும் அவள் ஆடவர் பெயரை நாடிக் கேட்பினும் உயிரை விடுவதாக வெகுண்டு நிற்பாள். காமனேவரினும் சினந்து அவனைக் காணாள். எனக்கு உடம்பு வெந்து போகும்' என்பாள் என்றான். இக்கூற்றினின்றும் பிற ஆடவரைக் காணாது நோன்பில் ஆழ்ந்திருந்த அவளது உள்ளப் போக்கை உணர முடியும். அவள் ஏறிச் செல்லும் வண்டியைச் செலுத்த ஒரு பெண்ணையே அமர்த்தியமையும் இக்கருத்தை வலியுறுத்த உதவும். சிறுமுதுக் குறைவி தானே பெருவளைப்பிட்டுக் காத்த கற்பு' என்று தாய் சுமதி கூறியதும் சுரமஞ்சரியின் உறுதிப்பாட்டை உணர்த்தும்.

சீவகன் முதிய அந்தணன் உருவில் சுரமஞ்சரியின் கன்னிமாடத்துள் நுழைய அங்கிருந்த பெண்கள் ஓடிவந்து இங்கே நீர் வருவது குற்றம் போய் விடுங்கள் என்று கூறியது ஆடவரை நோக்கா அவளது மனத்திட்பத்தை உணர்த்தும். மேலும் சீவகன் தன்னையன்றி வேறு இளைஞனைக் கண்டால் என்ன செய்வார்கள் என்று சுரமஞ்சரியின் தோழிகளிடம் வினவினான். அதற்கு அவர்கள் "பெருகும் தேனையுடைய கண்ணியை அணிந்த இளைஞர் பெயரும் உச்சரிக்கப்படல் கூடாது என்ற உறுதியான கோட்பாட்டுடன் செயற்பட்டமை தெளிவாகும்.

கருணை உள்ளம்

சுரமஞ்சரி இரக்கச் சிந்தையுடையாளாக விளங்கினாள். ஒரு முதிய அந்தணன் இறந்துபடும் நிலையில் உள்ளான் செய்வது யாது? என தோழியர் கூறியதைக் கேள்வியுற்ற அத்தருணத்திலேயே உடனே அவள் அவனைக் காணப் புறப்பட்டாள். மேலும் சீவகன்

பித்தனைப் போல் உளறுவதையும் அறிந்து "முதுமைப் பருவம் அளிக்கத் தக்கது; கொடியதான பசி மிகுந்துள்ளது; உணவை விரைவாக ஆக்கி இங்கேயே கொண்டு வருக" என்று உத்தரவிட்டாள்

"கொடிதுபசி கூர்துள்ளது கோல்வளையீனிரே
அடிசில்கடி தாக்கியிவ ணேகொணர்மின் என்றாள்"

முதுமைப் பருவத்தினர் ஆதலால் உண்ணும் இடத்திற்கு செல்லுதலும் இவர்க்கு இயலாது என எண்ணியே 'இவணே கொணர்மின் என்றாள். "காலந்தாழ்த்தினால் இறந்துபடுவான் போலும்; விரைவில் செய்யவேண்டியதை செய்தல் வேண்டும் எனத் தோழியர் முன்னரே குறிப்பிட்டிருந்தனர். ஆதலால் இன்னும் சிறிது பொழுதும் இவர் பசி பொறுத்தல் அரிது என்ற எண்ணத்தில் அடிசில் (உணவை) கடிது (விரைவாக) ஆக்கி என்றாள். பசிப் பிணியைத் தீர்க்க முயலும் இரக்க உள்ளம் உரியதாய் போற்றப்படுவது 'பசிப்பிணி என்னும் பாவி.... அது தீர்த்தோர் இசைச் சொல் (புகழ்ச்சொல்) அளவைக்கு என் நா நிமிராது என்ற மணிமேகலைக் காப்பியத்தின் கூற்றால் உணரப்படும்.

செல்வச் செழிப்பு

பசும்பொன் நிலத்தே உறைபவளாகச் சித்தரிக்கப்படுகிறாள். செல்வமகள் சுரமஞ்சரி அவளது செல்வச் செழிப்பானது வந்த முதியவனுக்கு திங்களை சூழ்ந்த அழகிய விண்மீன்கள் போன்று மிகுந்த ஒளியை வீசும் பொற்கலங்களில் உணவை நல்கியமையாலும் உணரக்கூடும். மேலும் உணவும் உடையும் அளித்தவுடன் பொன் அணிகலன்களையும் அளித்த நிகழ்ச்சி 'விழுப்பொன் இயல் நூலும் பவித்திரமும் நல்க' என்ற தொடரால் புலனாகும்.

சீவகனைப் பொன்னறையுள் இன் அமளிப் பூவணையின் இருத்தியமையும் அவளது வண்டி எருத்தினுக்குப் பொன்னால் அமைந்த மணிதார் கண்ணி ஆகியவற்றை பொருத்தியமையும் மாணிக்கச் சிவிகையில் அமர்ந்து பொன்னால் மாடம் அடைந்தமையும் அவளது செல்வ வளத்தைத் தெளிவாக்கும். அவளது திருமணத்தின்போது ஆடலில் சிறந்த அரிவையர் நூற்றெண்மரையும் ஒற்றைக் கோடிப் பொன் மூன்று ஊர்கள் ஆகியவற்றுடன் சீதனம் கொடுத்தமையும் அவள் செல்வமகள் என்பதை உறுதிப்படுத்தும்.

சூதறியா வெள்ளையுள்ளம்

சுரமஞ்சரி வஞ்சனை அறியா வெள்ளையுள்ளத்தினள். முதிய அந்தணன் வேடத்தில் நுழைந்த சீவகனை காரியம் யாது என வினவியபோது 'திரு நீர்குமரி ஆட' என்று அவன் சுட்டியதன் உட்பொருளாகிய (கன்னியாகிய நின்னுடன் ஆட என்பதை உணராத பேதையுள்ளம் 'குமர நீரில் ஆட' என்று பொருள் கொண்டது. தன்னுடன் கூடி மகிழ்தற்கு முன் இம்முதிய மூப்பு வேடம் நீங்கும் என்று அவன் கூறிய கூற்றை உணராத அவள் குமரி நீரில் ஆடினால் முதுமை நோய் நீங்கும் என்று கூறினதாகத் தவறாகப் பொருள் கொண்டனர்.

'வந்தவர வென்னையென வாட்கண்மட வாய்கேள்
சிந்தைநலி நின்றதிரு நீர்குமரி ஆட

வந்திலதின் ஆயபயன் என்னைமொழி கென்றாள்
முந்திநலி கின்றமுது மூப்பொழியு மென்றான் (26)

மேலும் சீவகனிடம் செய்யக்கூடியது என்ன என்று அவள் வினவிட அவனோ 'மறைவல்லன்' என்றான். அவள் மறைவான உருவம் கொள்ளுவதில் வல்லவன் என்ற பொருளில் கூறியதை உணரமுடியாத அவள் தன்னை வேதத்தில் வல்லவன் என்றான் எனக் கொண்டு நீர்கற்ற எல்லை எவ்வளவு? என்றாள். அவளை அடைவதான காரியத்தைப் பெற்று முடியுமளவும் என்ற உட்பொருளை உணராத அவள் வேதம் தான் கருதிய தத்துவத்தை முற்ற உணர்த்தி முடியுமளவும் என்று அவன் கூறுவதாக நினைத்தாள். இவற்றினின்றும் சுரமஞ்சரி சூதறியா வெள்ளை உள்ளத்தினள் என்பது தெளிவாகும்.

"வல்லதெனை யென்னமறை வல்லன்மட வாயான்
எல்லையெவன் என்னப் பொருள் எய்திமுடி காறும்
சொல்லுமினு நீவிர்கற்ற காலமெனத் தேன்சோர்
சில்லென்கிளிக் கிளவியது சிந்தையிலன் என்றான்"

சுரமஞ்சரி காமன் கோயிலில் சீவகனைத் தருமாறு காமனை வேண்டியபோது சீவகனின் தோழன் புத்திசேனன் காமன் பேசுவதுபோல் 'தேன் பிளிறும் கோதையாய் நின் மனத்தில் மகிழ்ந்த காதலனை அடைந்தாய்' நின் சிற்றிடை வருந்த நில்லாமல் செல்க" என மறைந்திருந்து கூறியதை தான் வாழ்த்திய காமனே வாய்விட்டுக் கூறியது என்று நினைத்து மீண்டும் வாழ்த்தினாள். இது அவள் வஞ்சனையற்றவள் என்பதை தெளிவுறுத்தும்.

இறை நம்பிக்கை

சுரமஞ்சரி சீவகனை பெறவேண்டும் என்ற ஒரே குறிக்கோளில் கன்னிமாடத்தில் நோன்பினை மேற்கொண்டாள். முதிய அந்தணன் வேடத்தில் சீவகனது இசையைக் கேட்டபோது அவ்விசை சீவகனுக்கே உரியது என்று நினைத்த உள்ளம் "நாளை செம்பொன்னால் அமைக்கப்பட்ட காமன் கோயிலிலே புகுந்து காமனை வழிபட்டு (இப்பாட்டையுடைய சீவகனைத் தரல் வேண்டும் என) வரம் கேட்பேன்' என்று கூறிக் கொண்டாள். சூடுதற்கான மாலையும் சந்தனமும் விளக்கும் தூபமும் ஏந்திச் சேடியர் காமனைத் தொழுது நிற்கத் திருமகளான அவள் இறைவனைப் போற்றினாள்.

அவள் இடமுழந்தாளை ஊன்றி ஒளிவீசும் மாலையும் மென்மையான மலர்க்குழலும் வலத்தோளில் விழ ஈன இளங்கமுகின் கண்போல் அமைந்த கலன் அணிந்த கழுத்தைச் சாய்த்துப் பொன் நிறத்தில் முடி பொருந்த வணங்கித் தன் இரு கைகளையும் குவித்தாள்.

"பொன்னிலஞ் சென்னி புல்ல
இடமுழன் தாளை ஊன்றி
மின்னவிர் மாலை மென்பூங்
குழல்வலத் தோளின் வீழக்
கண்ணியங் கமுகின் கண்போல்
கலனணி எருத்தங் கோட்டித்
தன்னிரு கையுங் கூப்பித்
தையல் ஈதுரைக்கும் அன்றே" (62)

"தாமரை போல சிவந்த கண்களையும் செவ்வாயினையும் உடைய பொற்குழை அணிந்த மன்மதனே இங்கே வேண்டுதலையுடையேன். மலர் நிறைந்த மார்புடைய மன்மதனே காளையாகிய சீவகன் மார்பில் என்னைச் சேர்ப்பித்தால் பெரிய மகரக் கொடியும் அம்பும் வில்லாகிய கரும்பும் தேரும் ஊருடன் பொலியத் தருவேன்" என பணிவுடன் வரம் வேண்டினாள்.

மதி நலத்தினள்

திரு நீர்குமரி ஆட வந்ததாகச் சீவகன் சிலேடைப் பொருளில் பேசியதன் உட்பொருளை அறியமுடியாத வெள்ளை உள்ளத்தினள் சுரமஞ்சரி என்றாலும் செத்த மரம் ஒன்று பெரிய மழையால் உயிரைப் பெறும்' என்று கூறுபவராகிய இவர் பித்தரே என்றாள். உயிர்க்கும் திறனற்ற மரம் மழையால் உயிரைப் பெறுவதில்லை என்ற உண்மையைத் தகுந்த உவமையாகப் படைத்துக் காட்டும் அவளது அறிவு பாராட்டுக்குரியது. சீவகன் தேவகீதம் பாட எல்லோரும் சேர்ந்து மயங்கிய மயிலைப் போன்றவர் ஆயினர். உளநூல் அறிவுடைய நங்கையாகிய சுரமஞ்சரி அவனை தகுந்த நேரத்தில் புகழ்ந்து பாராட்டினாள்.

களவுக் காதலில் சீவகனுடன் திளைத்த சுரமஞ்சரி தன் அறிவினால் சிந்தித்து தோழிக்கு அறத்தொடு நின்றமையும் அவளது மதி நலத்தை உணர்த்தும். "சீவகன் சான்று காட்டி ஆராய்ந்த சுண்ணத்தைத் தீதெனக் காட்டியுளான் என கருதியே சிறுவயதிலே பேரறிவு பெற்ற சுரமஞ்சரி தானே பெரிய வேலியில் காத்த கற்பு இது போலும்" என சுரமஞ்சரியின் தாய் சுமதி பாராட்டினாள். இது சிறு வயதிலேயே மதிநலம் வாய்க்கப் பெற்றவள் சுரமஞ்சரி என்பதை தெளிவுறுத்தும்.

முடிவுரை

திருத்தக்கத்தேவர் சுரமஞ்சரியார் இலம்பகத்தில் தன்னிகரில்லாத் தலைவனாக சீவகனைப் படைத்து அவனுக்கேற்ற நிலையில் பண்புநலன்கள் சிறப்புற அமைய பெற்றவளாகச் சுரமஞ்சரியை படைத்துள்ளார்.

"அழகுப் பதுமையாகிய அவள் குறிக்கோளை நிறைவேற்றும் உறுதியுடையவளாக விளங்கினாள். செல்வச் செழிப்புடைய நங்கையாகிய அவள் உள்ளம் அருள் உள்ளம் தூய உள்ளம் வஞ்சனையறியாத் தெளிவுடையது. மதிநலம் வாய்க்கப்பெற்ற நங்கையாகிய அவள் இறையுணர்வு நிரம்பியவளாக விளங்கினாள்.

வினா – பத்தி

1. சீவகன் உரையாடல் திறன் யாது?
2. சீவகன் கன்னிமாடத்துள் சென்ற திறன் வரைக.
3. சீவகன் இசைப்புலமையை எடுத்துரைக்க.
4. சீவகன் - சுரமஞ்சரி காதலை எடுத்துரைக்க.
5. சீவகன் - சுரமஞ்சரி திருமண நிகழ்ச்சியை விவரிக்க.

கம்பராமாயணம் – கும்பகர்ணன் வதைப் படலம்

கம்பர் இராமயணம், கம்பர் கால சமுதாயச் சூழல்களை விளக்குகின்ற மக்கள் காப்பியம் இராம— வரலாறு என்னும் கதையைப் பாடு பொருளாகக் கொண்டிருந்தாலும், தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்க்கைச் சிக்கல்களே விளக்கப்படுகின்றன. உமறுப்புலவர் எழுதிய சீறாப்புராணம், வீரமாமுனிவர் எழுதிய தேம்பாவணி, இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம், பாரதியாரின் பாஞ்சாலி சபதம் ஆகிய காப்பியங்கள், பழைய புராணக் கதைகளின் மேல் புதிதாக வளர்க்கப்பட்டுள்ள சமுதாயச் சித்திரங்கள். இவைகளைப் போலவே கம்பனது இராமாயணமும் பழைய மொந்தையில் ஊற்றிய கள்ளாகத் திகழ்கிறது. தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் உள்ள முரண்பாடுதான் கம்பராமாயணம். இந்த முரண்பாடு யுத்த காண்டத்தில்தான் வெளிப்படுகிறது.

தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் யுத்தம். இந்த யுத்தத்திற்கு முக்கிய காரணம் சீதை. சீதையைப் பற்றிக் கொண்டது அதர்மம். அவளைத் துய்க்க நினைக்கின்றது. அந்தத் துய்ப்பும் அன்போடு இணைந்து அழிவில்லாக் காதலாகப் பெருக்கெடுக்க வேண்டும் என்பதே அதர்மத்தின் கூற்று. சீதை தர்மத்தின் பாற்பட்டவள். அவளை அதர்மம் அடைய நினைப்பதைத் தர்மம் விரும்பவில்லை.

சீதையை விட்டுவிடுவதா? இல்லை! வைத்துக் கொள்வதா? வைத்துக் கொள்வதென்றால் தர்மத்தின் தாக்குதலைச் சமாளிக்க வேண்டும். சீதையை விட்டுவிடு என்று இரந்தும் கேட்கவில்லை. சர்வ வல்லமை படைத்த நிலையில் தர்மம் யுத்தத்திற்கு வருவதால் அதர்மம் யோசிக்கின்றது. அதர்மமும் பின்வாங்காத நிலையில் வெற்றி அல்லது தோல்வி இரண்டில் ஒன்றை விரைந்து காண்போம் என்பதே அதர்மத்தின் பக்கம் பிரதானமாக நிற்கின்றது. இந்தப் பிரதான எண்ணமே யுத்த காண்டத்தின் விதையாக அமைந்துள்ளது. இது வதைப்படலத்தில் மேலோங்கி நிற்கிறது. இராமன் கும்பகர்ணனைக் கொன்ற செய்தி கும்பகர்ண வதைப்படலம்.

1. முதற்போரில் தோல்வியுற்ற இராவணன் இலங்கை மீள்தல்.
2. இராவணன் தூதர்களை அழைத்துக் கட்டளையிடல்
3. மாலியவான் "உற்றது வினவல்"
4. மாலியவானிடம் நிகழ்ந்தவற்றை உரைத்தல்
5. மாலியவான் அறிவுரை பகர்தல்
6. மகோதரன் மறுத்துக் கூறல்
7. கும்பகர்ணனை அழைத்து வரப்பணித்தல்
8. கும்பகர்ணனைத் துயில் எழுப்பல்
9. கும்பகர்ணனின் தோற்றப் பொலிவு
10. கும்பகர்ணனின் உணவு கொள்ளல்
11. கும்பகர்ண்ன் இராவணனுக்கு வழங்கிய அறிவுரை

12. கும்பகர்ணன் போருக்குச் செல்லல்
13. கும்பகர்ணனுடன் புறப்பட்ட படைகளின் பெருக்கம்
14. கும்பகர்ணனின் தன்மைகள்
15. கும்பகர்ணன் - வீடணன் உரையாடல்
16. போர்கள இயல்பு
17. கும்பகர்ணன் - நீலன் போர்
18. கும்பகர்ணன் - அங்கதன் போர்
19. கும்பகர்ணன் - அனுமன் போர்
20. கும்பகர்ணன் - இலக்குவன் போர்
21. கும்பகர்ணன் - சுக்ரீவன் போர்
22. கும்பகர்ணன் - இராமன் போர்
23. கும்பகர்ணன் - வதைப்படலம்
24. கும்பகர்ணன் இராமனுக்குக் கூறுதல்
25. கும்பகர்ணன் இறத்தல்

ஆகிய செய்திகளை விவரிக்கும் வகையில் இப்படலம் உள்ளது.

இராவணன் இலங்கை திரும்பிய நிலை

திசையானைகள் பொருகின்ற மார்பையும், கயிலாய மலையை ஒத்திருக்கின்ற தோள்களையும், நாரத முனியும் பாராட்டும்படி இசைக்கின்ற நாவையும் மாலை அணிந்த பத்து மணிமுடிகளையும், சிவபெருமான் கொடுத்த வாளையும் இமயத்தை அசைக்கின்ற வீரத்தையும் போர்க்களத்தில் விட்டவனாய் இலங்கை மீண்டான்.

யாராலும் வெல்ல முடியாத தேவர்களையும் வென்று மூவுலகங்களையும் காவல் செய்கின்ற இராவணன், பின் தொடர்ந்து வருகின்ற வசையுடனும், பகைவர்களுடன் வெல்வதற்கு பயன்படாத கைகளுடன் நடந்து இலங்கை சேர்ந்தான். அப்பொழுது பகல் என்னும் சக்தியால் உலகை ஆட்சி செய்த சூரியனும், தன் கதிர்களாகிய கைகளை மடக்கிக் கொண்டு வருகின்ற இரவுடன் போர் செய்யும் ஆற்றல் அற்றவனாய் மலையை அடைந்தான்.

முதற்போரில் இராகவனிடத்தில் தோல்வி கண்டமையால் திசைகளைப் பார்க்கவில்லை. நகரின் வளத்தைக் காணவில்லை. தன்னால் பார்க்க வந்த புதல்வர்களைப் பார்க்கவில்லை. தன் சேனையைப் பார்க்கவில்லை. மலர்களை சூடிய கூந்தலையுடைய மங்கையர்கள் தனித்தனியே இராவணனைப் பார்த்துக் கொண்டிருக்க எதையுமே பாராமல் பூமியாகிய பெண்ணை மட்டும் பார்த்த வண்ணம் அரண்மனைக்குள் புகுந்தான்.

“மாதிரம் எவையும் நோக்கான்
வளநாகர் நோக்கான் வந்த
காதலர் தம்மை நோக்கான்,
கடல்பெருஞ் சேனை நோக்கான்,

தாது அவிழ் கூந்தல் மாதர்
தனித்தனி நோக்க, தான் அப்
பூதலம் என்னும் நங்கை
தன்னையே நோக்கிப் புக்கான்" [யுத்த — 7401]

நவகிரகங்களையும் வென்று அடிமை கொண்ட இராவணனின் தோள்களில் பொருந்துகின்ற மெல்லிய கொங்கைகளையுடைய வெற்றித் திருமகளின் பார்வை முதற்போரில் வெற்றியைத் தராமையால், அன்றலர்ந்த மலரைப் போன்ற முகத்தையுடைய மகளிரின் கண்கள் இராவணனுக்கு கொடிய வாட்படையை ஒத்துக் காணப்பட்டன. இலங்கை வாழ் மக்களின் சொற்களெல்லாம் இராமனுடைய அம்புகளின் தன்மையை ஒத்திருந்தன.

ஆலோசனை தருகின்ற மந்திரிகள், ஒளி பொருந்திய நெற்றியை உடைய மனைவியர்கள், சேனைத் தலைவர்கள், உறவினர்கள் ஆகிய முக்கியஸ்தர்கள் எந்திரங்களைப் போன்று செயலற்று நிற்க, சிந்துரக் களிறு போல் அரண்மனைக்குள் புகுந்தான். ஆங்கு செம்பொன்னால் செய்யப்பட்ட பீடத்தின் கண் அமர்ந்து, இராமனுடன் போர் செய்த களைப்பு நீங்கியவனாய், சிந்தனையில் ஆழ்ந்தான். மெய்க்காப்பாளனை (கஞ்சுகி) நோக்கி, தூதுவர்களை அழைத்து வரும்படி ஆணையிட்டான். ஆணையின்படி சென்று கஞ்சுகியும் தூதர்களை அழைத்து வந்தான்.

வினையறி தூதர்கள்

வினை அறிந்து தொழில் புரியும் தூதர்களான மனகதி, வாயு வேகன், மருத்தன், மாமேகன் ஆகிய தூதர்கள் வந்தனர். தூதர்களை பார்த்த இராவணன் தூதர்களே! மனத்தினும் கடுகிச் சென்று, எட்டுத் திசைகளையும் கடந்து ஒலிக்கின்ற வீரக்குழல்கள் அணிந்த அரக்கர் சேனைகளை விரைவாக அழைத்து வருக என ஆணையிட்டான். கடல்கள் சூழ்ந்த ஏழு பெரும் தீவுகளிலும், மலைகளிலும், பாதாள உலகத்திலும், சக்கரவாள கிரியிலும் (ஆழி அம்கிரி) வாழ்கின்ற அரக்கர் கூட்டத்தையெல்லாம் அழைத்து வர, இராவணின் கட்டளையைத் தலைமேற் கொண்டு சென்றனர்.

இராவணனின் மன நிலை

தூதர்கள் அகன்ற பின்னர், மலர் தூவப்பட்ட படுக்கையிலே பள்ளி கொண்டான். அப்பொழுது மூவுலகினரும் இராவணனின் மனம் (பாவகம்) அறியாதவர்களாய்த் திகைத்து நின்றார்கள். பெண் இறை கொண்ட நெஞ்சில் நாணம் நிறைந்து, கண் துயிலாதவனாய், இராமனால் ஏற்பட்ட அவமானத்தை வெளிப்படுத்தியவனாய், கவலை, மனத்தை நெருட, சொல்லனின் ஊதுலைத்துருத்தி போல தீ மூச்சு விடுவானானான்.

"பண் நிறை பவளச் செவ்வாய்
பைந் தொடிச் சீதை என்னும்
பெண் இறைகொண்ட நெஞ்சின்
நாண் நிறை கொண்ட பின்னர்

கண் இறைகோடல் செய்யான்
கையறு கவலை கற்ற
உள்நிறை மானம் தன்னை
உமிழ்ந்து எரி உயிர்ப்பதானான்" [யுத்த — 7408]

[இராமனிடம் தோற்று, நாணத்தால் நலிந்தபோதும், சீதையின் மேல் கொண்டிருந்த காதல், இராவணனது நெஞ்சை விட்டு அகலவில்லை என்பது கருத்து]

வயிரம் போல் உறுதி படைத்த தோள்களை உடையவன் இராவணன். இராமனிடம் கண்ட தோல்வியை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நாணத்தால் வெட்கினான். வானவர் தன்னைப் பார்த்து நகுவர்; மண்ணுலக மாந்தர் சிரிப்பர்; பகைவர்கள் சிரிப்பார்கள்: என எண்ணாதவனாய் வேற்படையை ஒத்த நீண்ட கண்களையும், சிவந்த வாயினையும், மென்மைத் தன்மையையும் உடைய மிதிலை ஜானகி நகுவாளே என்றெண்ணி நாணத்தால் வாடினான்.

"வான் நகம்; மண்ணும் எல்லாம்
நகும் - நெடுவயிரத் தோளாண்
நான் நகு பகைஞர் எல்லாம்
நகுவர் என்று அதற்கு நாணான்
வேல்நகு நெடுங் கண்
செவ்வாய் மெல்லியல் மிதிலை வந்த
ஜானகி நகுவள் — என்றே
நாணத்தால் சாம்புகின்றான்" [யுத்த — 7409]

இராவணனின் முக்கிய நோக்கம் சீதையின் காதலைப் பெறவேண்டும். அவள் தன்னை மதித்துக் காதலிக்க வேண்டும் என்பதே. எனவே, தான் மற்றவைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. உற்றவளையே எண்ணி ஏங்குகின்றான்.

மாலியவான் மொழிதல்

அச்சமயத்தில் இராவணனுடைய பாட்டனாகிய மாலியவான் என்ற அரக்கன் அங்கு வந்தான். அழகிய வீரக்கழலை அணிந்திருந்தான். வளைக்கப் பெற்ற வில்லைப் போன்று வளைந்த முதுமையுற்ற உடலை உடைய முதிய அரக்கன். பொன்னாலாகிய வீரக் கழலணிந்த இலங்கைக்கு அரசனாகிய இராவணனைத் தாங்கிய பூம்படுக்கையின் பக்கத்திலுள்ள மெத்தையிட்ட பீடத்தில் (தவிசு) அமர்ந்தான்.

தவிசில் அமர்ந்த மாலியவான் இலங்கை வேந்தன் இராவணனை உற்று நோக்கினான். போரிலே தோற்றுவிட்டான் போலும் என எண்ணியவனாய், எக்காலத்தும் கெடாத தவத்தினை உடைய ஐயனே! மனம் வருந்தப் பெற்றாய், தோள்களும் வாடப் பெற்றாய். நிகழ்ந்த செயல் யாது என வினவினான்.

இராவணன் கூறுதல்

இராமனிடம் உற்ற தோல்வியால் துன்பம் பொருந்திய மனத்தினையும் (சுவையுறு நெஞ்சன்) கனல் பறக்கும் கண்ணினையும், துருத்தியின் வாயைப் போன்ற நெருப்புக் காற்றை வெளிப்படுத்தும் மூக்கினையும், நினைத்தாலே நீர் ஊறும் இனிய பாகை (நரை அறுபாகை) அன்றி அமுதத்தையே நக்கினாலும் சுவை தோன்றாத வறண்ட நாவினையும் உடைய இராவணன், மாலியவானிடம் கூறலுற்றான்.

பல வெற்றிகளைப் பெற்று தவக்கோலம் கொண்ட மானிட இனத்தவர்க்கும், எமக்கும் இடையே போர் மூண்டது. என்னைக் கண்டு அஞ்சிய தேவர்கள், இந்தப் போரைக் காண அச்சமின்றி என் முன்னே வந்து நின்றனர். பருந்துகள் குவிகின்ற போர்க்களத்தில் நம் குலம் இழிவாகும்படி போர் வந்து மூண்டதோடல்லாமல், மானிடரிடத்தில் தோல்வியடைந்தோம் என்ற வசையும் வந்து சேர்ந்துவிட்டதே என்றான்.

"பங்கம் வந்து உற்றது அன்றி
பழியும் வந்து உற்றது என்றான்"

முளைக்கின்ற தன்மை பொருந்திய பிறைச்சந்திரனை முடியில் அணிந்துள்ள முக்கண்ணனைப் படைக்கு முதல்வனாகக் கொண்டாலும் வளர்கின்ற தன்மையுடைய மூவுலகத்து (புவனம்) வீரர்களும் திரண்டு எமக்குத் துணையாக வந்தாலும், என்னுடைய பெரிய சேனையானது இலக்குவன் (இளையவன்)வளைக்கின்ற வில்லினின்றும் புறப்படும் அம்புகளுக்கு முன்னால் எதிர் நிற்க மாட்டாது.

படைக்கலங்களை வீசிக் கணக்கற்ற அரக்க வீரர்களை இராமன் அழித்த போதும், என்னைத் தோல்வி அவமானம் (பரிபவம்) தாக்கிய போதும், அந்த நாளில் இராமன், விளையாட்டாகக் கூனியின் கூனிலே படும்படி, மண் உருண்டையை சிறு வில்லினாள் எறிந்து விளையாடியதையே நினைப்பூட்டியதன்றி, உண்மையிலேயே எனக்குச் சினம் வந்துற்றதில்லை.

இராம பாணத்தின் இயல்புகள்

அரக்கர்கள் மலை போன்ற பெரிய உருவத்தை உடையவர்கள், கூரிய பற்களை உடையவர்கள், கொடிய அரக்கர் கூட்டம் நெருங்கி, நூற்றிரண்டு வெள்ளத்து அளவு உடையதாயினும், இராமனின் குறி தவறாமல் பதியும் அம்புகள் (வாளி) குதிரைகள், ஆனைகள், படையாட்கள் தலைகள் அற்று வீழத் தாக்கியதே அன்றி, உடல்களில் தங்கியதில்லை.

மேரு மலையைப் பிளக்கின்ற வலிமையுடையன. ஆகாயத்தைக் கடந்து அப்பால் செல்வன. சக்தி படைத்தன. கடல் நீரைப் பருகும் ஆற்றலுடையன. இராமனுடைய அம்பின் ஆற்றல் யாராலும் வரையறுத்துச் சொல்ல முடியாது. அம்புகளின் ஆற்றலைத் தாங்குவதற்கு பல கோடிக்கணக்கான மேருமலைகளும், விண்ணுலகங்களும், மண்ணுலகும், கடல்களும் வேண்டுமே அன்றி, என்னுடைய படைகளால் இராமனின் அம்புகளைத் தாங்க முடியாது.

"மேருவைப் பிளக்கும் என்றால்
விண் கடந்து ஏகும் என்றால்
பாரினை உருவும் என்றால்
கடல்களைப் பருகும் என்றால்
ஆருமே அவற்றின் ஆற்றல்
ஆற்றுமேல் அனந்த கோடி
மேருவும் விண்ணும் மண்ணும்
கடல்களும் வேண்டும் அன்றே" [யுத்த — 7418]

வில்லை வளைத்தல், நாணேற்றுதல், அம்பைத் தொடுத்தல் இவைகளில் ஒன்றைக் கூட யாரும் அறிய முடியாது. கண் இமைக்கின்ற தேவர்களாலும் அறிய முடியாது. இராமனது விற்றொழிலை அறியக் கூடியவர் ஒருவருமல்லர். "பொருதொழிலில் வீரமிக்க அரக்கர்களின் உயிர் போகும்படி செல்க" என நினைத்த மாத்திரத்தில் உலகம் முழுவதும் அம்புகளாய் தோன்றும்.

இராமனுடைய அம்புகள், நல்ல கவிவல்லானுடைய நாவினின்று புறப்படுகின்ற "சொற்களைப்" போன்றது. சொற்களால் துணை செய்யும் "தொடை" போன்றது. செய்யுளில் அமைந்துள்ள உணர்ச்சிச் செல்வமான இசையினைப் போன்றது. குற்றமற்ற அலங்காரப் பண்புகளனைத்தையும் உடையன.

"நல் இயல் கவிஞர் நாவில்
பொருள் குறித்து அமைந்த ஞானச்
சொல் என, செய்யுள் கொண்ட
தொடை என, தொடையை நீக்கி
எல்லையில் செல்வம் தீரா
இசை என, பழுது இலாத
பல் அலங்காரப் பண்பே
காகுத்தல் பகழி மாதோ"

இராமன் பகழி(அம்பு) சொல், தொடை, இசை, அணி ஆகியவைகளுக்கு உவமையாக்கப்பட்டுள்ளது.

இராமனுடைய வலிமை

பேய்க் கூட்டங்களோடு சுடுகாட்டில் உரைகின்ற சிவபெருமானின் (ஏயவன்) எட்டுத் தோள்களும், இந்திரனின் இரண்டு தோள்களும், இந்தப் பெரிய நிலவுலகத்தைத் தன் அடக்கிய திருமாலின் (மாயன்) ஆயிரம் தோள்களும் இராமனுடைய ஒரு விரலின் வலிமையைத் தாங்கும் சக்தி படைத்தன அல்ல.

"பேய் இருங் கணங்களோடுசுடு
களத்து உறையும் பெற்றி
ஏயவன் தோள்கள் எட்டும்
இந்திரன் இரண்டு தோளும்

மாஇரு ஞால முற்றும்
வயிற்றிடை வைத்த மாயன்
ஆயிரம் தோளும் அன்னான்
விரல் ஒன்றின் ஆற்றல் ஆற்றா”

சிறந்த வீரர்களுள் சிவந்த கண்களையுடையவன் திருமால் அந்தக் கார்த்த வீரியனைப் போல்வார் உள்ளார் என்று நினைக்க மாட்டேன். நான் பார்த்த அளவில் அக்கார்த்த வீரியனும், அம்முனிவன் (இராமன்) தம்பி (இலக்குவன்) பாதத்தில் ஒட்டிய தூசுக்கு ஒப்பாக மாட்டான். அப்படியிருக்க இராமனுக்கு முன் எதிர்த்து நிற்பவர் யாரும் இலலை.

வில்லின் ஆற்றல்

முப்புரங்களையும் எரித்த மாமேருவாகிய கொடிய வில்லும், இராமனுடைய அற்புத வில்லுக்கு ஒப்பாக மாட்டாது. அம்பாகக் கொள்ளுதற்கு தகுதியுடையன அல்ல. இராமனுடைய வில்லுக்கு ஒப்பாக வேறு பொருளும் இவ்வுலகில் இல்லை. (ஒப்பு வேறு உரைக்கல் ஆவது ஒரு பொருள் இல்லை). வேதங்கள் உரைக்கின்ற மெய்ப்பொருள் பொய்த்துப் போவதாயினும் இராமனது வில்லினின்று புறப்படுகின்ற அம்புகள் தன் தொழிலைச் செய்யத் தவறமாட்டாது. (வேதம் தப்பின போதும் அண்ணன் தனு (வில்) உமிழ் சரங்கள் தப்பா).

இராமனுடைய அம்புகள் வில்லினின்று புறப்படும் போது நான்முகன் (அயன்) ஒக்கும். வில்லினின்று புறப்பட்டு ஓடும் போது ஆயிரம் முகங்களையுடைய திருமாலை (அரி) ஒக்கும். பகைவர்களைச் சேர்ந்த போது ஊழிக் காலத்துத் தோன்றுகின்ற உருத்திரனை (அரன்) ஒக்கும், அழிக்கின்ற தொழில் வலிமையில், நீங்காத என்னுடைய (இராவணன்) செருக்கினையே நீக்கியது.

மனிதனான இராமன் தாங்கியுள்ள வில், மேற்றிசையிலுள்ளதோ? (குடக்கு) கிழக்குத் திசையிலுள்ளதோ(குணக்கு) மூலைத் திசையில் உள்ளதோ? (கோணம்) அகன்ற பெரிய நிலவுலகத்திலுள்ளதோ? வானத்திலுள்ளதோ? எங்குந்தான் உள்ளதோ? வடக்குத் திசையில் உள்ளதோ? தெற்குத் திசையில் உள்ளதோ? என உணர்ந்தேனில்லை. அன்றியும் அவ்வில் இராமனுடைய இடப்பக்கத்திலுள்ளதோ? வலப்பக்கத்தில் உள்ளதோ? இன்னும் நான் அறிந்திலேன்.

“குடக்கோ? குணக்தேயோ?
கோணத்தின் பால தேயோ?
தடத்த பேர் உலகத் தேயா?
விசும்பதோ? எங்கும் தானோ?
வடக்கதோ? தெற்கதே? என்று
உணர்ந்திலென் — மனிதன் வல்வில்
இடத்திதோ? வலத்ததோ? என்று
உணர்ந்திலேன் யானும் இன்னும்”

அனுமனின் சிறப்பு

இராமன் காற்றையே ஊர்தியாகக் கொண்டானோ? நெருப்பினையே ஊர்தியாகக் கொண்டானோ? அறிகிலேன். ஊர்தி (ஏற்றம்) ஒன்றும் இல்லை என எண்ணுவது அறிவின்மையாகும். `குரங்கை ஊர்தியாக கொண்டு நின்றான். அந்த குரங்கு அமரிடை ஆற்றுகின்ற ஆண்மைச் செயல்களைத் திருமாலைத் தாங்கியுள்ள கருடன் ஆற்ற வல்லதோ? இல்லை? எனவே இராமனுக்கு ஊர்தி இல்லை என எண்ணுவது அறிவின் பார்பட்டது அன்று எனச் சொன்னான்.

சீதையின் சிறப்பு

இராமனுடன் உற்ற முதல் நாள் போரில் அனைத்தையும் அறிந்து கொண்டதனால் இனி அறிந்து கொள்வதற்கு ஒன்றும் இல்லை எனக் கருதிய இராவணன், சீதையைப் பற்றி நினைக்கின்றான். பொறுமையில் பூமித் தேவியை ஒத்தவள். மூங்கில் போன்ற தோள்களையுடையவள். இராகவனின் வீரச் செயல்களோடு ஒப்பிட்டு நோக்கினாள் எனின், வீரச் சிறப்புடைய நானும் (இராவணன்) அழகில் சிறந்த காமனும் இழிவான நாயென்று சொல்லத்தக்க இழிவுடையவர்களாவோம்.

இந்திரன், திருமால், பிரமன், சிவபெருமான் போன்ற தேவர்களால் அன்றி, எனக்கு அழிவு வந்து சேர்ந்த காலங்களிலும் சிறந்ததொரு பகைவனைப் பெற்றேன். ஆரவாரிக்கின்ற வண்டுகள் உறையும் மாலையை உடையவனே! இச்சமயத்தில் இப்பகை வந்தது என்றான்.

"நாசம் வந்து உற்ற போதும்
நல்லது ஓர் படையை பெற்றேன்"

அழிவு வந்து உற்றாலும், அவ்வழிவு சிறப்பான இடத்திலிருந்து வந்தது பற்றி இராவணன் மகிழ்ச்சியடைந்தான்.

மாலியவானின் அறிவுரை

முதல்நாள் போரில் இராவணன் அடைந்த தோல்வி, இராமனின் வீரச்செயல்களைப் புலப்படுத்திய இராவணனின் புலம்பலைக் கேட்ட மாலியவான் சில அறிவுரைகளை வழங்குகிறான்.

நெருப்பை உவமையாகச் சொன்னாலும், நீண்ட மின்னலை உவமையாகச் சொன்னாலும் ஒப்பாகாத ஒளி பொருந்திய சிறந்த வேற்படையை உடைய இராவணனே! இராகவனின் ஆற்றலை முன்னே கூறிய என்னை வீணே கோபித்தாய்! உன் தம்பியாகிய வீடணன் உரைத்ததையும் கேளாது விட்டாய்; எங்களது கூற்றுக்கும் பொருள் உண்டு என்பதை ஆராயாது விட்டாய். இடித்துரைபபவர்களின் அறிவுரைகளைப் புறக்கணிக்கும் இயல்பினையுடைய நின் கூற்றுக்கு மாற்றுரைப்பவர் இலர் என்றே அறிகிறேன்.

பெருகி வருகின்ற சுற்றம், நம்முடைய வெற்றி, நட்பு, கல்வி, செல்வம் ஆகியவைகளும் நம் சேனைகளும் மடியப் போவதை நீ காணப்போகின்றாய். உண்மையான உறவினர் ஆராய்ந்து கூறியவிடத்து ஏற்றுக் கொள்ளாது விடுகின்றாய்.

"உளைவன எனினும் மெய்மை
உற்றவர் முற்றும் ஓர்ந்து
விளைவன சொன்ன போதும்
கொள்நிலை விடுதி கண்டாய்
கிளைக்கு சுற்றம், வெற்றி
கேண்மை நம் கல்வி செல்வம்
களைவு அருந்தானை யோடும்
கழிவது காண்டி என்றான் " [யுத்த — 7431]

மெய்மையுற்றவர் முற்றும் ஓர்ந்து விளைவன சொன்னபோது உளைவன எனினும் (துன்பம்) கேட்டுக் கொள்ள வேண்டும். அப்படிக் கேளாது போனதால் தான் இத்துன்பம் வந்துற்றது எனலாம்.

மகோதரனின் வாய் மொழி

மாலியவான் கூற்றினை கேட்ட மகோதரன் விரைந்து வந்து, இடைமறித்து மாலியவானைப் பார்த்து, "சிறுமை தரும் மொழிகளை நீ சொல்வதற்கு என்ன காரணம்" என மாலியவானை அதட்டினான். தோல்வியை ஒப்புக் கொண்ட மனத்தையுடைய இராவணனுக்கு நன்மை விளைக்காதனவற்றைக் கூறினான்.

"மாயைகள் பலவும் வல்ல
மகோதரன் கடிநின் வந்து
தீ எழ நோக்கி என் இச்
சிறுமை நீ செப்பிற்று"

வெற்றியே விளைவதாயினும், அதற்கு மாறாகத் தோற்று உயிர் விடும் நிலை நேர்வதாயினும் தான் மேற்கொண்ட ஒரு செயலிலே உறுதியாக நிற்றல் உத்தமர்க்கு உரியது. அதை விடுத்து மனம் தளர்ந்து தான் மேற்கொண்ட செயலிலிருந்து பின் வாங்கினால் அவனுக்கு இப்பிறவியில் பழியும், மறுபிறவியில் நரகமும் உண்டாகும்.

மானக் கயிலை மலையைக் கையினால் பெயர்த்து, அம்மலையை அஞ்சச் செய்த பெரும் வீரனே! திரிபுரம் எரித்த சிவனும், மூன்று நிலங்களையும் ஓரடியில் அடக்கிய திருமாலும் உன்னுடன் போர் செய்து உடைந்து போனார்கள். அவ்வாறிருக்க மானிடர் பொருதுகின்ற போருக்கு அஞ்சலாமா?

புகழால் மேம்பட்டவனே! வென்றவர் தோற்பர். தோற்றவர் வெல்வர். உயர்ந்தவர் தாழ்வர், தாழ்ந்தவர் உயர்வர் என்பர் அறிஞர். வல்லமைக்கு வரம்பு உண்டோ? நியதிகள் இப்படி இருக்க மானிடத் தவசிகளின் போரைப் புகழலாமா?

காவலனே! இராமன் தேவியை விட்டு விடுவாயானால் உன் வலிமை குன்றிவிடும்.

"தேவியை விடுதி ஆயின்
திறல் அது தீரும் அன்றே"

சீதையின் பொருட்டுப் போர் செய்து ஆவியை விடுதல் அன்று. அழிவில்லாத உன் பெருமையைத் தாழ்த்திக் கொள்வதில் என்ன லாபம். எனவே இக் கையறு கவலையை விடுக. சீதையை விடுத்து என்றேனும் ஒரு நாள் போகும். ஆவியை நிறுத்தலை ஆவியை விடுத்துப் புகழை நிலை நாட்டுதலே மேல்.

சிறிது காலம் கையறு நிலையால் காலம் தாழ்த்தினால் இலங்கை நாட்டையும், எங்களையும் (அரக்கர்) கனியை உடைய மரங்களைப் போல் குரங்குக் கூட்டம் வென்றுவிடும்.

"இனி இறை தாழ்த்தியாயின்
இலங்கையும் யாமும் எல்லாம்
கனியுடை மரங்கள் ஆக
கவிக்குலம் கடக்கும் காண்டி"

குளிர்ச்சி பொருந்திய கடலில் (வேலை) சிறிது நீரை சூரியன் (இரவி) பருகிவிட்டான் என்பதற்காக வருத்தப்படலாம்? கவலையை விடுக. துன்பத்தை நீக்குவாயாக.

கடலில் சிறிய நீரைச் சூரியன் பருகிவிட்டான் என்பதற்காக கடல் நோவதில்லை. சிறிது படைகளை இழந்தமைக்காக வருந்திச் சோர்தலாகாது என்ற குறிப்புடன் மகோதரன் பேசலுற்றான்.

பிரமன், திருமால், சிவன் ஆகிய மூவரும் உன்னிடம் தோற்றார்கள். தேவர்களெல்லாம் உனக்கு பணி செய்து கிடக்கும்படி மூன்று உலகங்களையும் ஒருங்கே பெற்றாய். இத்தகைய பெரும் வெற்றி பெற்ற எந்தையே! புல்லின் நுனியிலே ஒட்டியுள்ள பனித்துளியைப் போன்ற மனிதர்களாகிய இராம, இலக்குவரை ஒரு பொருளாக மதித்து, உன் தம்பியாகிய கும்பகர்ணனின் நினைவு உனக்கு ஏன் வரவில்லை?

கும்பகர்ணனைப் போருக்குப் போகும்படி பணித்தாயானால் மலை போன்ற அவனது உடம்பைப் பார்த்தவுடனே பகைவர்கள் அஞ்சி ஒடுங்கிப் போவார்கள். எதிர்த்து நிற்பாராயின் அந்தத் தவசிகளின் உயிரை, அவன் ஒருவனவாகவே நின்ற போக்கிவிடுவான்; என மகோதரன் சொல்ல இராவணனும் போர் செய்வதென முடிவு கொண்டான் நன்று கூறினாய் என்றான். இராமனுடன் நடந்த போரில் தளர்நிலை கொண்ட இராவணன் மகோதரன் பேச்சினால் கிளர்ந்த உள்ளமுடையவனானான்.

கும்பகர்ணனை அழைத்து வரப் பணித்தல்

மகோதரன் பேச்சு, இராவணனின் உள்ளத்தில் வீர ஆவேசத்தை ஊட்டியது. கும்பகர்ணனை அழைத்து வரும்படி ஏவலர்களைப் பணித்தான். கும்பகர்ணனைப் போருக்கு அனுப்பும் செயல் தக்கது. விரைந்து சென்று நம்பியை (கும்பகர்ணன்) இவ்விடம் கொண்டு வாருங்கள்.

"நம்பியை நணுக ஓடிச்
சென்று இவண் உருதிர்"

என இராவணன் கட்டளையிட்டான். தூதுவர்கள் கட்டளையின் பேரில் தேடுவது போல சென்று, மலையினும் உயர்ந்த தோள்களை உடைய கும்பகர்ணனது வெற்றி பொருந்திய அரண்மனையை அடைந்தனர்.

"குன்றினும் உயர்ந்த தோளான்
கொற்ற மாக் கோயில் புக்கார்"

தூங்கிக் கிடக்கின்ற கும்பகர்ணனை எழுப்புவதாக நான்கு பணியாளர்கள் (கிங்கிரர்) குன்று போல் கிடக்கின்ற கும்பகர்ணனது அரண்மனைக்குள் புகுந்தனர்.

இளவலே! துயில் நீங்கி எழுக, என ஆரவாரித்தனர். கிங்கரர்களின் ஆரவாரத்திற்குக் கும்பகர்ணன் துயில் எழவில்லை. தம் கையிலுள்ள இரும்புத்தடியால் (எழுவு) கும்பகர்ணனது தலையிலும், செவியிலும் மோதினர்.

துயில்கின்ற கும்பகர்ணனே! உங்களின் மாய வாழ்வு வீழ்ச்சியடையத் தொடங்கிவிட்டது. எழுந்திரு! இல்லையெனில் காற்றாடி போல சூழலக் கூடிய வில்லையுடைய கால தூதர் (இராமர்) கையில் சிக்கி, எழ முடியாமல் ஒரே உறக்கமாய் உறங்கப் போகிறாய்.

"கறங்கு போல விற்பிடித்த
கால தூதர் கையிலே
உறங்கு வாய் உறங்குவாய்
இனிக் கிடந்து உறங்குவாய்"

கும்பகர்ணன், இராமனால் கொல்லப்படப் போகிறான் என்பதைக் குறிப்பாக உணர்த்தினார்கள்.

எக்காலத்தும் முடிவில்லாத அரக்கர்களின் இன்ப வாழ்வு முடிவுறும்படி உன்னுடைய தமையன் தெரிந்தே தீமையைத் தேடி கொண்டான். இன்று நீ இறத்தல் திண்ணமாக இருக்க, இன்னும் நீ உறங்குவதோ?

"அன்று அலைத்த செங்கையால்
அலைந்து அலைந்து உணர்த்தினர்"

எனத் தன்னுடைய சிவந்த கைகளால் அடித்து எழுபபனா. குமபகாணன எழவலலை. இதை இராவணனிடம் சென்று தெரிவித்தனர்.

தென்றல் தங்கும் மாலை அணிந்த மார்பனே! வலிய உறக்கத்தினின்றும் கும்பகர்ணனை எழுப்பும் வல்லமை எங்களுக்கு இல்லை என்றனர். ஆயிரக்கணக்கான ஆனைகளோடு ஆளிகளையும் ஏவி மிதக்கச் செய்து எழுப்புவர்.

"மாவொரு ஆளி ஏவினான்
ஒன்றன்மேல் ஓர் ஆயிரம்
உழக்கி விட்டு எழுப்புவீர்"

மல்லர் படை

தொழில் திறமைவல்ல ஆயிரம் மல்லர் சேனைகளை கும்பகர்ணனது துயில் கலைக்க ஏவினர். தென்றல் தவழும் மாலை அணிந்த இராவணன் மனத்திலுண்டான வருத்தம் நீங்க இவன் (கும்பகர்ணன்) தமையனுக்குண்டான பகையை வெல்லுவான் என எண்ணியவர்களைய் மலையினும் உயர்ந்த தோள்களையுடை கும்பகர்ணனது பெரிய அரண்மனையினுள் புகுந்தனர்.

மிக்க வலிமை படைத்த வீரர்கள் அரண்மனை வாயில் திறந்ததும் கும்பகர்ணன் விடுகின்ற மூச்சுக் காற்று நெருங்கியது. மல்லர்கள் உள்ளே வருவதும் வெளியே போவதுமாகத் தத்தளித்தனர். அரக்கர் குலத்திற்கே உரிய வலிமையினால், கும்பகர்ணனின் துயிலைக் கலைக்க எண்ணி, கைகளால் ஒருவரை ஒருவர் பற்றிக் கொண்டு விரைந்து கோட்டை வாயில் வழியாகப் புகுந்தார்கள்.

"திண்திறல் வீரர் வாயில் திறத்தலும்
சுவாச வாதம் மண்டுற
வீரர் எல்லாம் வருவது போவது ஆக"

கும்பகர்ணனது மூச்சுக் காற்றுக்கு எதிர் நிற்க மாட்டாதவர்களாய் திண்டாடினர்.

அகலமான பெரிய வாயையும், மூக்கையும் கண்டு மெய் நடுங்கினர். அழகிய கைகளால் அடித்தெழுப்ப அஞ்சி, வேறு உபாயம் தேடினர்.

"துங்க வெவ்வாயும் மூக்கும் கண்டு
மெய் துணுக்கும் உற்றார்"

கும்பகர்ணனது ஆழமானது செவியிடத்துச் சங்கு, தாரை, சின்னம் முதலிய கருவிகளால் ஒலி உண்டாகும்படி செய்தனர். கொம்பு (கோடு) வலிவுடைய இரும்புக்கம்பி, சம்மட்டி(கூடம்) ஈட்டி(குந்தம்) ஆகியவைகளைக் கையில் கொண்டு தாரை, மூட்டு, மார்பு, தலை ஆகிய பகுதிகளில் தாக்கினர். சற்று நேரத்தில் தாக்கிய வீரர்கள் வலுவற்றுச் (வாடிகையர்) சோர்ந்தனர்.

குதிரைப் படைகளை ஏவுதல்

கும்பகர்ணனைத் தாக்கிச் சோர்வுற்ற மல்லர்கள் இராவணனிடம் சென்று முறையிட்டனர். அதற்கு, இராவணன் குதிரைப் படைகளை ஏவிவிடும்படி கட்டளையிட்டான்.

"நீடிய பரிகள் எல்லாம் நிரைத்திடும்
விரைவின் என்றான்"

இராவணனால் ஏவப்பட்ட குதிரைப் படைகள், பெருந்தூக்கம் கொண்டுள்ள கும்பகர்ணனது மார்பில் நடத்தினார்கள். அது, அவனுக்கு மாலையால் தட்டிக் கொடுப்பது போல் இருந்தது. அதனால் கும்பகர்ணன் பெருந்தூக்கம் கொள்ளலானான்.

குதிரைகள் துவைதலால் கும்பகர்ணன் துயில் நீக்கி எழவில்லை. மீண்டும் இராவணனிடம் சென்று, கும்பகர்ணனை எழுப்புவதற்கு எல்லா வழிகளையும் மேற்கொண்டோம். எங்களின் கைகளின் வலிமை எல்லாம் ஓய்ந்தன. குதிரைகளும் காலோய்ந்து போயின். வேறு உபாயத்தைக் கூற வேண்டும் என இராவணனின் பாதம் தொட்டு வணங்கி வேண்டினர்.

மணிகள் பதித்த பெரிய தேர்ப்படைகள் எதிர்த்து வரும்போது நடுக்கம் உறாத உடம்பை உடையவனும், இடையில் தடையில்லாத உறக்கத்தையுடையவனும், என்னை விட்டுப் பிரியாத தம்பியுமான கும்பகர்ணனை, வாய் மழுங்காத சூலத்தோடு மழுவையும், வாளையும் கொண்டு தாக்கியாவது துயிலினின்றும் எழுப்பிக் கொண்டு வாருங்கள் என இராவணன் கூறினான்.

கும்பகர்ணன் துயில் எழுதல்

'துயில் எழுப்பிக் கொணர்க' என்றவுடன் ஆயிரம் இராக்கதர்கள் ஒன்று திரண்டனர். இராவணனின் அடிவணங்கிக் கும்பகர்ணனது மாளிகையை அடைந்தனர். இரண்டு புறங்களிலும் நின்று கொண்டு இரண்டு கன்னங்களிலும் பொருந்தும்படியாகப் பெரிய உலக்கைகளைக் கொண்டு தாக்க, இறந்தவன் எழுந்தது போல் புரண்டு துயில் நீத்து எழுந்து அமர்ந்தான்.

"ஏர் ஐஞ்ஞூறு இராக்கதர்கள்
வன் தொழிலால் துயில்கின்ற
மன்னவன் தன் மாடு அணுகி
நின்று இரண்டு கதுப்பும் உற
நெடுமுசலம் கொண்டு அடிப்ப
பொன்றினவன் எழுந்தான் போல
புடை பெயர்ந்து அங்கு எழுந்திருந்தான்"

கும்பகர்ணன் எப்போது உறக்கத்திலிருப்பவன். ஆதலின், அவன் உறக்கத்தினின்று எழுந்ததை, இறந்தவன் எழுந்ததற்கு உவமையாக கூறப்பட்டுள்ளது.

மூவகை உலகத்திலுள்ளோர்களும் அஞ்சும்படி எழுந்தான். முரண்பட்ட பனை போன்ற கைகளையுடைய திசை யானைகள் வருத்தமுற எழுந்தான். சூரிய, சந்திரர்கள் அவதியுறும்படி எழுந்தான். தாமரை மலரின் மேலுள்ள பிரமன் (பூவுளான்) பாற்கடலில் பள்ளி கொண்ட திருமால் (பூணரிமேலான்) கைலாய மலை மீதிருக்கும் சிவன்

(பொருப்பினன்) ஆகிய மும்மூர்த்திகளையும் முதல்வராகக் கொண்ட தேவர்கள் மனம் கலங்கி கவலைப்படவும் துயில் நீக்கி, எளிமையாகக் கும்பகர்ணன் எழுந்தான்.

"மூவகை உலகும் உட்க
முரட்டிசைப் பனைக்கை யானை
தாவருந் திசையினின்று
சலித்திடக் கதிரும் உட்க
பூவுளான் புணரிமேலான்
பொருப்பினான் முதல்வராய
யாவருந் துணுக்குற்று ஏங்க
வெளிதினின் எழுந்தான் வீரன்" [யுத்த — 7455]

கும்பகர்ணன் உணவு கொள்ளல்

உறக்கம் நீங்கி எழுந்த கும்பகர்ணன், வறுத்த ஊனொடு வார்க்கப்பட்ட கட்குடங்களும் போதாமல் கடைவாயை நக்கிக் கொண்டு தலை தாழ்த்தி நின்றான். அதன்பின், அறுநூறு வண்டி உணவையும், இருநூறு கடும் கள்ளையும் (பத்து ஆயிரம்)விழுங்கியவனாய் மேலும் பசியைக் கிளப்பினான்.

"அறுநூறு சகடத்து அடிசிலும்
இறுநூறு குடம் கள்ளும் நுங்கினான்
ஏறுகின்ற பசியை எழுப்பினான்
சீறுகின்ற முகத்து இரு செங்கணான்" [யுத்த — 458]

அறுநூறு வண்டி அடிசிலை உண்பதற்கு முன் ஆயிரத்து இருநூறு எருமைக் கடாக்களையும் எளிதாகத் தின்று சிறிது பசியாறினான்.

கும்பகர்ணனின் தோற்றப் பொலிவு

மதிப்பால் உயர்ந்த இலங்கை வேந்தனின் தம்பியான கும்பகர்ணன் மூன்றடியால் உலகத்தை அளந்த திருமால் போல் பேருருவம் கொண்டு நின்றான். கும்பகர்ணனின் முடி வானினை முட்டி நின்றது. அவனுடைய உடல் வானவெளியை மறைத்தது. கண்கள், இரண்டு கடல்களைவிட பெரியதாய் இருந்தன.

"விண்ணினை இடறு மோலி (முடி)
விசும்பினை நிறைக்கும் மேனி
கண்ணெனும் அவை இரண்டும்
கடல்களின் பெரிய ஆகும்"

"பாம்பு உறங்கும் படர் செவிப் பாழியான்" (கும்பகர்ணன்) இராக்கதர்களின் வலிமையான தாக்குதலால் மூவுலகினரும் அஞ்சும்படி எழுந்தான். மண்ணினை அளந்து

நின்ற மால் என வளர்ந்து நின்றான். அறுநூறு சகடத்து அடிசிலை அயராது அயின்றான். பத்தாயிரம் குடங்களில் நிரப்பப்பட்ட கள்ளைப் (கள்) பருகினான். ஆயிரத்து இருநூறு எருமைக் கடாக்களையும் எளிதாகத் தின்று இனிது பசியாறினான். பசி நீங்கிய கும்பகர்ணன், முன்னோன் (இராவணன்) கோயில் (அரண்மனை) எய்தினான். இலங்கைத் தலைவனாகிய இராவணனை மலை கிடந்தென வணங்கினான். வணங்கி எழுந்த உம்பியை (தம்பி) ஆரத் தழுவிப் போர்க்கோலம் பூணச் செய்தான்.

போர்க்கோலம் பூணச் செய்தல்

குன்றன்ன கொள்கையானை (கும்பகர்ணன் உடன் இருத்தினான். உதிரத்தோடு கள்ளையும் ஊட்டினான். கடல் நுரை போன்ற வெண்துகிலை உடுப்பித்தான். ஒளிர்கின்ற இரத்தின ஆபரணங்கை அணிவித்தான். இந்திரனுடைய யானையில் இருந்து பறிக்கப்பட்ட முகபடாத்தை நெற்றியில் கட்டிவித்தான். தெய்வ மணம் கமழும் சந்தனக் குழம்பைக் கும்பகர்ணனின் மார்பில் பூசினான். கடவுள்(சிவன்) ஈந்த கவசத்தைச் சுற்றிக் கட்டினான்.

அந்த நேரத்தில், கும்பகர்ணனின் இடப்புருவம், இடத்தோளும் துடித்தன. இடப்புருவமும், இடத்தோளும் துடிக்க நின்ற கும்பகர்ணன் சற்று அஞ்சியவனாய், இக்காலையில் இவ்வாயத்தம் எது குறித்து? என வினவினான்.

வானரப் பெருஞ் சேனையோடு மானிடர் இருவர் (இராம, இலக்குவர்) நம் கோநகர் சுற்றியுள்ளனர். என்னையும் வெற்றி கொண்டனர். அவர்களை வெற்றி கொண்டு, அவர்களின் உயிரைக் கொள்வதற்கே உன்னை அனுப்புகிறேன். இட்ட தொழிலை இனிது முடிக்கும்படி புகன்றான்.

கும்பகர்ணன் கூறிய நெறி மொழிகள் (முறைகள்)

கொடிய போர் உண்டாகி விட்டதோ? கற்புடைய ஜானகியின் துயர் இன்னும் தவிர்ந்தில்லையோ? மண்ணுலகத்தும் விண்ணுலகத்தும் வளர்ந்த புகழ் போய்விட்டதோ? அழியும் காலம் வந்துவிட்டதோ? போர் நெருங்கி விட்டதோ? அப்போர் சீதையை மையமாகக் கொண்டு ஏற்பட்டதோ? சொன்ன சொற்களை ஏற்கவில்லையோ? திட்டிவிடம் அன்ன கற்பின் செல்வியை இன்னும் விடவில்லையோ? இவைகள் நடப்பது விதியின் இயல்பு போலும் என விம்மினான்.

அண்ணலே உலகினை (பூமி) அகழ்ந்து எடுத்துவிடலாம். அதனைச் சுற்றி வேலியும் கட்டிவிடலாம். விருப்பப்படி எதுவும் செய்விக்கலாம். ஆனால், பெருவலி இராமன் தோள்களை வெல்லலாம் என நினைப்பது கற்பின் கனலி சீதையின் மேனியைத் தழுவலாம் என நினைப்பது போலாகும்.

> "பெருவலி இராமன் தோள்களை
> வெல்லலாம் என்பது சீதை மேனியைப்
> புல்லலாம் என்பது போலு மால் [யுத்த — 7479]

இராமனை வெல்லவும் முடியாது. சீதையைத் தழுவவும் முடியாது. ஐயனே! உன் எண்ணம் தோற்பது உறுதி என்பதை கும்பகர்ணன் குறிப்பாக உணர்த்தினான்.

புலத்துயின் வழியில் வந்த குற்றமற்ற அரக்கர் குலத்தின் இயல்பு அழிந்துவிட்டது. வெற்றிக் கொள்வது என்பது முடியாத செயல். இராமனோடு போர் செய்வது வெற்றியின் புகழ் அழிவதற்கு அஸ்திவாரம். நிலத்தின் இயல்பே நீரின் இயல்பு என்பது போல, உன் தீய குணமே, வெற்றியின் புகழ் குன்றுவதற்கு காரணம் ஆகும்.

மாற்றான் மனம் கவர்ந்த செயலால் மாசுடையவனானாய், இந்திரனோடு போரிட்டு பெற்ற இந்திர உலகத்தை அவனுக்குத் திருப்பிக் கொடுத்தவனானாய், சுற்றத்தினர்களைக் கெடுத்தவனானாய். உன்னையும் அழித்துக் கொண்டாய், சிறைப்பட்ட விண்ணோரை விடுவித்தவனானாய். இத்தீவினையிலிருந்து உய்வதற்கு வேறு வழி ஒன்றில்லை.

அறம் உன்னை கண்டு அஞ்சி மறைந்துவிட்டது. அறத்தைக் கைவிட்டு அதர்மத்தை மேற்கொண்டாய். உனக்கு வெற்றி, புகழ், வீரம், செல்வம் மாறாது அளித்த அறம், இன்று உன்னோடு இல்லை. உன்னை அழிவிலிருந்து காப்பாற்ற ஒருவரும் இல்லை.

அழிவற்ற நல்ல எண்ணம், தூய செயல், இனிமையான செயல், அடைக்கலம் காக்கின்ற தன்மை, மாசில்லாது அறவழி நிற்றல், நடுநிலைமை தவறாது உண்மை பேசுதல் ஆகியவைகளின் மறு உருவான இராம, இலக்குவர்களின் முன் பாவம், பொய், வஞ்சனை ஆகிய தீயகுணங்களைக் கொண்ட நாம் பிழைப்போமா? என இயம்பினான்.

இயம்பியபின் இறுதியாக ஒன்று சொன்னான். ஐயனே! நான் சொல்வதை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வாயேல் நல்லது. இல்லை என்றால் தப்புதற்கு வழியின்றி இறந்தவனாவாய், இறந்தவனாகவே எண்ணிக் கொள் என்றவனாய், நம் பகைவர்களான இராம, இலக்குவர்க்கு காற்றைப் போல கடுகிச் சென்று கடல் தாண்டும், வன்குரங்கு (அனுமன்) உள்ளது. சீதையும் போகவில்லை. வாலியின் மார்பை துளைத்த அம்பும் உள்ளது. அவைகளுக்கு இலக்காக நாம் இருக்கின்றோம். அவைகளால் நாம் அழிவது உறுதி என்பதை மணங்கொள் என்றான். சீதையை விட்டு, இராமனின் திருவடிகளை வணங்கி, வீடணனோடு நட்புக் கொண்டால் நாம் பிழைப்பது உறுதி. அன்று எனின் இன்னொரு வழியும் பிழைக்க உண்டு. அதன்படி நடந்தால் உய்யலாம். அதாவது பகுதிபகுதியாக நாம் சேனைகளை ஏவிவிட்டு, அச்சேனைகள் அழிந்துபடுவதைக் கண்டு வருந்தி இருத்தல் அறிவின் பாற்பட்டதன்று. நம் படை எல்லாவற்றையும் பகைவர் மேல் செலுத்துதல் சாலச் சிறந்தது ஆகும்.

"நம் வலி எலாம் உடன்
உந்துதல் கருமம்"

என அண்ணல் அறியக் கூறினான். படைகள் பிளவுபட்டு போர் செல்லுதலை விரும்பாத கும்பகரணன் ஒருங்கு செல்வதை விரும்பினான். கொஞ்சம் கொஞ்சமாகச் சாவதைவிட ஒட்டு மொத்தமாகச் சாவதை உயர்வதாகக் கும்பகர்ணன் எண்ணினான்.

இராவணனின் சின மொழிகள்

கும்பகர்ணனுடைய அறிவு சான்ற மொழியைக் கேட்ட இராவணன் சினம் கொண்டான். சினம் கொண்ட இராவணன் சிறுமொழி பகரலுற்றான். கும்பகர்ணனை நோக்கிக் கோபமொழி பேசினான்.

அற்பத் தொழில் செய்யும் மனிதர்களை அழிக்கவே உன்னை அழைத்தேனே தவிர, எனக்கு வரப்போவதை அறிந்து கொள்ள அன்று. எனக்கு அறிவுரை கூற நீ அமைச்சனும் இல்லை. பகைவர்களுக்கு அஞ்சிவிட்டாய். உன் வீரம் பயனற்றுப் போய்விட்டது. போருக்குத் தகுதியற்றவன் ஆனாய். ஊனொடு கள்ளும் உண்டாய். இனி போய் உறங்குவாயாக என கும்பகர்ணன் மனம் வருந்துமாறு கூறினான்.

மானிடரை வணங்கி, கூனுடைக் குரங்குகளைக் கும்பிட்டு வாழ்வதை நான் விரும்பேன். அது ஊனுடை வாழ்க்கை. உனக்கும் உன் தம்பிக்கும் அவ்வாழ்க்கை பொருந்தும். நான் அக்காரியத்தை செய்ய மாட்டேன்.

> "மானிடர் இருவரை வணங்கி மற்றும் அக்
> கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு உய் தொழில்
> உனுடை உம்பிக்கும் உனக்குமே கடன்
> யான் அது புரிகிலேன்: எழுக போக என்றான்" [யுத்த — 7490]

கும்பிட்டு அடிமை வாழ்க்கை வாழ மாட்டேன். கூற்றையும் வெற்றி கொண்டவன் நான். மானத்தைப் பெரிதாக எண்ணுபவன். அடிமை வாழ்க்கையை விரும்பிய நீ எனக்குத் தேவையில்லை. எல்லாவற்றையும் நானே பார்த்துக் கொள்வேன், எனக் கோபமுறக் கூறினான்.

கோபக் கனல் கண்களில் கொப்பளிக்க, ஏவலர்களை நோக்கினான். தேர்களையும், படைக்கலன்களையும் கொணர்க என ஏவினான். போர் செய்ய இராவணன் வருகிறான் என்ற ஆணையைச் பறைசாட்டச் சொன்னான். விண்ணோடும், மண்ணோடும், மற்றோரும் வன் சிறுவரான இராம, இலக்குவரோடு சேர்ந்து கொண்டு என் முன் வரட்டும், என்னோடு பொருதட்டும் எனச் சொல்லிக் கொண்டே போர்க்களம் நோக்கிப் புறப்பட்டான்.

கும்பகர்ணன் போருக்குப் புறப்படல்

போருக்குப் புறப்பட்ட இராவணனை, கும்பகர்ணன் வணங்கினான். பொறுத்துக் கொள்ளும்படி வேண்டினான். இராவணனின் அழகிய அடிகளை மீண்டும் வணங்கி, வலிமை பொருந்திய சூலப்படையை வலத்து வாங்கினான். வாங்கியவன், உரைப்பதற்கு இன்னும் ஒன்று உள்ளது என்றான்.

தலைவனே! பகைவரை வென்று மீண்டும் வருவேன் என்று சொல்ல முடியாதவனாக இருக்கின்றேன். ஏனென்றால் விதி என் முன்னே நிற்கின்றது. விதி என்னை நிச்சயம் அழிக்கும். போரில் நான் இறந்துபடுவேன். நான் இறந்த பின்னராவது, கற்பின் கனலியை விட்டு விடுதல் நன்மை பயப்பதாகும்.

"வென்று இவண் வருவேன் என்று உணர்க்கிலேன; விதி
நின்றது பிடர்பிடித்து உந்த நின்றது;
பொன்றுவென்; பொன்றினால், பொலன்கொள் தோளியை
நன்று என நாயக ; விடுதல் நன்று அரோ"

ஊழ்வினை உறுத்து வந்துற்றது. இறப்பது உறுதி. வென்று வருவேன் என்பதில்லை. தன் தமையன் (கும்பகர்ணன்) வாழ வேண்டும் எனக் கருதியேனும் சீதையை நாயகன் பால் விடுக்க என்றான்.

இந்திரனை வென்றவனான இந்திரஜித்தும், இராமன் தம்பி இலக்குவன் வில்லினால் அழிவது உண்மை. நம் சேனைகள் பெருங்காற்றில் பட்ட சாம்பல் போல் பறந்துவிடும். இலங்கை வேந்தனே! என்னை வென்று விடுவர்களாயின், உன்னையும் வென்றுவிடுவர்.

"என்னை வென்றுளர் எனில், இலங்கை காவல!
உன்னை வென்று உயருதல் உண்மை; ஆதலால்
பின்னை நின்று எண்ணுதல் பிழை; அப் பெய்வளை
தன்னை நல்கு அளிப்பது தவத்தின் நன்றரோ!

நான் இறந்த பிறகு கூடி எண்ணுதல் பிழை. எனவே சீதையை அவர்களிடம் ஒப்படைப்பது நன்று. அண்ணலே! உனக்கு நன்மை பயப்பது எதுவோ அதையே செய்வாயாக! என விளம்பி முன்னை நாள் முதல் இற்றை நாள் வரை, நான் செய்தவனாகிய குற்றங்கள் இருந்தால் பொறுத்துக் கொள்வாயாக! இனி உன்னைக் காணும்பேறு எனக்கில்லை. தலைவனே விடைபெற்றுக் கொண்டேன்; எனக் கூறிப் புறப்பட்டான்.

இராவணனும் மற்றையோரும் மனங்கலங்குதல்

இராவணனிடம் விடை பெற்று கும்பகர்ணன் போருக்குப் புறப்பட்டான். போரில் கும்பகர்ணன் இறந்துபடுவானோ என எண்ணியவனாய் இராவணன் மனம் கலங்கினான். கண்களில் செங்குருதி தேக்கினான். கும்பகர்ணன் விடை பெற்ற காட்சியை கண்டு மனம் வருந்தினர் எல்லோரும் வருந்தி நிற்க கும்பகர்ணன் ஏறினான்.

"ஆயிரம் கோள் அரி, ஆளி ஆயிரம்
ஆயிரம் மதகரி, பூதம் ஆயிரம்"

தேரின் சிறப்பையும், வன்மையும் குறிப்பதற்கே, மிகவும் வலிமை பொருந்திய பிராணிகள் தேரில் பூட்டப்பட்டுள்ளன என்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. கைவேல், சக்கரம், சூலம், அம்பு, கோடாரி, வேல், உலக்கை, வாள், பெருந்தடி, தூண், வில், எறிஈட்டி, வளைதடி போன்ற படைக்கலங்களை கும்பகர்ணன் ஏறியுள்ள சுடர்மணித்தேரின் பின் காலாட்படைகள் சுமந்து சென்றன.

கும்பகர்ணனைத் தொடர்ந்து ஆயிரம் வண்டிகளில் அடிசிலைகளை ஏற்றி அரக்கர்கள் சென்றார்கள். கட்குடங்களையும், இறைச்சியையும் கும்பகர்ணன் வேண்டும் போது கொடுப்பவராய் பின் தொடர்ந்தனர்.

கண்டவர்கள் அஞ்சும்படி, அரக்கர் கொடுக்கின்ற அடிசிலையும், இறைச்சியையும், மீளுதல் அரிய பாதாளத்தில் போடுவது போல், வாயில் அள்ளிப் போட்டுக் கொண்டே கும்பகர்ணன் போர்களம் புகுந்தான். தேவர்கள் அவனைக் கண்டு அஞ்சினர். இமயன் விழித்துக் கொண்டான். பிணங்கள் விழத் தொடங்கியது. எங்கு ஓடுவது எனத் தெரியாமல் ஓடினர்.

இராமன் ஐயுறல்

கும்பகர்ணனின் போர்க்கள வருகை இராமனைத் திகைக்க வைத்தது. வருபவன் யாரென்று அறிய ஆவல் கொண்டான். கும்பகரணன் என இராமனுக்குத் தெரியாது. மலைகளுக்கெல்லாம் தலையாய மேரு மலைபோல் தோன்றிய கும்பகர்ணனை இராமன் பார்த்தான். உருவம், கொடி முதலியவற்றால் இராவணனின்றும் வேறுபட்ட கும்பகர்ணனை யாவனோ என ஐயுற்றான். இராவணன் அல்லாத இவன் யாராக இருக்க முடியும், தோள் தொடங்கி தோள் வரை பார்த்தால் நாட்கள் பல கழியும். நடுவண் நோக்கினால் மாமேருமலை போன்றுளான். போரை விரும்பி வந்தவனாக உணர்கிலேன்.

"தோளொடு தோள் செலத் தொடர்ந்து நோக்குறின்
நாள் பல கழியுமால்; நடுவண் நின்றது ஓர்
தாளுடை மலை கொலாம்; சமரம் வேட்டது ஓர்
ஆள் என உணர்கிலேன்; ஆம் கொலாம் இவன்?" [யுத்த — 7509]

இராவணனுடைய கொடி வீணைக் கொடியல்லவா? இதில் சிங்கத்தின் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இராவணனுடைய கம்பீரமான தோற்றம் கொண்டிருக்கிறான்! என ஐயுற்று நின்றான்.

வீடணனை நோக்கினான். சூரிய ஒளி இவனது உடம்பால் மறைந்தது. எங்கும் இருள் சூழ்ந்தது. இவனைக் கண்டு, நம் படைகள் சிதறி ஓடுகின்றன. கெடுதல் இல்லாத மனம் உடைய வீடணனே, இவன் யாவனோ எனக் கேட்டான்.

"அழுங்கல் இல் சிந்தையாயா!
யார் கொலாம் இவன்"

இராவணன் தன் உருவத்தை மாற்றிக் கொண்டானோ! எனக்கு தெரியவில்லை! எனக்கு அறிவிப்பாயாக!

"அரக்கண அவ்உரு ஒழித்து, அரியின் சேனையை!
வெருக் கொளத் தோன்றுவான் கொண்ட வேடமோ?

தெரிக்கிலேன் இவ் உரு; தெரியும் வண்ணம், நீ
பொருக்கென, வீடண! புகறியால் என்றான்”

நம் படைகளை அச்சுறுத்துவதற்கென்றே இவ்வுருவைக் கொண்டான் என ஐயுற்று, வீடணனிடம் ஐயத்தை தெளிவுறுத்தும்படி கேட்டான்.

கும்பகர்ணனின் தன்மையை வீடணன் விளம்பல்

இராகவனை வணங்கி இனையவை கூறலுற்றான் தலைவனை! போர் மேல் வருகிறவன் கும்பகர்ணன். எனக்கு முன்னும் இராவணனுக்குப் பின்னும் பிறந்தவன். கரிய நிறம் படைத்தவன். வீரக்கழலினன் கூரிய சூலத்தான்.

“பேர் இயல் இலங்கை வேந்தன்
பின்னவன், எனக்கு முன்னோன்
கார்இயல் காலன் அன்ன
கழல் கும்பகர்ணன் என்னும்
கூரிய சூலத்தான்.”

தந்தையே! வேதத் தலைவரும் சிவபெருமானும், நான்முகனும் போற்றுகின்ற திருமால் யோகத் துயில் எழுந்த காலத்தில் அசுரர்கள் படுகின்ற வேதனைகளையெல்லாம் கும்பகர்ணன் காலத்தில் தேவர்கள் படுவர். தேவர்களை விளையாட்டாக வேதனைப் படுத்துபவன். ஊழிக் காலம் வரை உறங்கும் தன்மையன். காலனுடைய அரிய உயிருக்கு (எமன்) இமயன் போன்றவன். கருகிச் செல்லும் கால்களை உடையவன். திருமாலை வென்று வெற்றி பெற்றவன்.

“காலனார் உயிர் காலனால்
காலின் மேல் நிமிர் காலினான்
மாலினார் கெட வாகையே
சூலமே கொடு சூடினான்”

காலனுக்கும் காலன், வலிமை படைத்தவன் இந்திரனுடைய வெள்ளை யானையைச் சுழற்றியவன், வன்மைக்கு அடங்காதவன், நெருப்பு, காற்று இவற்றை பிழிந்து சாறு கொல்லும் தன்மையினன், விண்மீன்களெல்லாம் நிலை பெயரும்படி கடல்நீரைக் காலினால் உந்துவான்.

“கழிந்த தீயொடு காலையும்
பிழிந்து சாறுகொள் பெற்றியான்”

கும்பகர்ணன் தீ, காற்று, நீர் ஆகிய மூன்று பூதங்களையும் வென்றவன் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறான்.

பருத்த உடலை உடையவன். தவத்தில் சிறந்தவன், வலிமையான வரத்தினையுடையவன். வலிமை படைத்தவன்.

"ஊன் உயர்ந்த உரத்தினான்
மேல் நிமிர்ந்த மிடுக்கினான்
தான் உயர்ந்த தவத்தினான்
வான் உயர்ந்த வரத்தினான்"

தன்னூன் பெருக்குதற்குப் பிறிதூன் உண்பவன். மன உறுதி உடலுக்கேற்ப அமைந்தவன்.

கும்பகர்ணனின் சுழற்சிக்குக் காற்றாடியைத் தவிர வேறு உவமை இல்லை. காற்றாடி போல் சுழலும் தன்மையினன் இன்றுவரை உறங்கியதால் தான் உலகோர் பிழைத்திருக்கின்றார்கள். உறங்காமல் இருந்திருந்தால் எல்லோரும் அழிந்திருப்பார் என்பது குறிப்பு. சிவபெருமான் நல்கிய சூலத்தை உடையவன். மின்னலை ஒத்த தேவர்கள் கும்பகர்ணனோடு போர் செய்தாரானால், அந்தத் தேவர்களின் முதுகுப்புறமின்று வேறு பார்க்காதவன். கும்பகர்ணனோடு எதிர் நின்று போர் செய்ய வல்லவர் இலர்.

பிறர் மனைவியைக் கவர்தல் என்பது அறநெறிக்கு அப்பாற்பட்டது. இச்செய்கையால் உயிரிழப்பு ஏற்படும் என்பதை இடியைக் காட்டிலும் கொடிய இராவணனுக்கு அறிவுறுத்தியவன்.

"தருமம் அன்று இதுதான்; இதால்
வரும் நமக்கு உயிர் மாய்வு" எனா
உருமின் வெய்யவனுக்கு உரை
இருமை மேலும் இயம்பினான்"

தர்மத்தின் தன்மை, அதர்மத்தின் இழிவு. இராவணனுக்குச் சுட்டிக் காட்டியவன். மாற்றான் மனைவி மேல் ஆசை வைப்பது மடமை. போரில் 'மாள்வது மெய்' தன் உயிரை வெறுத்து, போர் கருதி நின் எதிர் வந்து நிற்கின்றான்.

நல்லதையே நினைப்பவன். தீயதையே செய்யும் இயல்பினன். தீயதை செய்வதற்குக் காரணம் குடிப்பிறப்பு. புலத்தியர் குலத்தில் பிறந்தாலும் நீதியின் இயல்பை அறிந்தவன். எமனுக்கு முன் வந்து நிற்கின்றான் எனச் சொல்லி இராகவனின் பாதங்களை வணங்கி நின்றான்.

இராமனுக்குச் சுக்ரீவன் கூறியது

கும்பகர்ணனின் இயல்புகளை வீடணன் கூறக் கேட்ட, சுக்ரீவன் இராமனிடத்தில் கூறலுற்றான். இவனைக் கொல்லுதல் ஒரு பயனும் இல்லை. நம்மோடு சேருவானேயானால் சேர்த்துக் கொண்டு, செய்வனவற்றைச் செய்வோம்.

"இவனை இன்று
கொன்று ஒரு பயனும் இல்லை
கூடுமேல் கூட்டிக் கொண்டு
நின்றது புரிதும், மற்ற இந்

நிருதர் கோன் இடரும் நீங்கும்
நன்று என நினைத்தேன், என்றான்
நாதனும் நலன் ஈது என்றான்”

கும்பகர்ணனை நம்மோடு சேர்த்துக் கொண்டால் தமையன் இறந்து விடுவானே என்ற துன்பம் வீடணனை விட்டு அகலும். நம்மோடு சேர்த்துக் கொள்வது நலம் எனக் கருதினேன். இராமனும் ‘இது நல்லது’ எனக் கருதி ஏற்றுக் கொண்டான். கும்பகர்ணனை அழைத்து வர வீடணன் தயாரானான்.

“ஆகின் மற்று அடியேன் சென்று
அங்கு அறிவினால் அவனை உள்ளம்
சேகு அறத் தெருட்டி ஈண்டுச்
சேருமேல் சேர்ப்பன் என்றான்
மேகம் ஒப்பானும் ‘நன்று போக!
என விடையும் ஈந்தான்”

கும்பகர்ணனுடைய மனம் தெளிவுறும்படி செய்து, இவ்விடம் அழைத்து வருவேன் எனப் புறப்பட்டான்.

வானைச் சேனைகளைக் கடந்து, பெரிய படையை வீடணன் அடைந்தான். வீடணன் வருகையை கும்பகர்ணனுக்கு தூதர்கள் அறிவித்தனர். கும்பகர்ணன் தம்பியின் வருகை கண்டு மகிழ்ந்தான். மனங்கள் இரண்டும் ஒன்றாயின. கும்பகர்ணனின் பாதங்களை வணங்கினான் வீடணன்.

கும்பகர்ணன் வீடணனுக்குக வழங்கிய அறிவுரை

வீழ்ந்து வணங்கிய வீடணனை தூக்கி தழுவிக் கொண்டான். நீ! ஒருவன் மட்டும் பிழைத்துப் போனாய்’ என மகிழ்ந்தான். நீ வந்த காரணம் என்ன? என வினவியவனாய் மழையெனக் கண்ணீர் சொரிந்தான்.

இராமனிடம் அடைக்கலம் பெற்ற நீ சிறந்தவன். தேவர்களும் பெற முடியாத, இம்மை, மறுமை ஒரு சேரப் பெற்றாய். உன்னுடைய உயர்வு கண்டு என் மனம் மகிழ்ந்தது. கவிஞர் போல் அறிவு மிக்கவனே! என்ன காரணம் வந்துள்ளாய்? அமுதம் உண்டு கொண்டிருக்கின்ற நீ (வீடணன்) நஞ்சை அருந்தலாம்? நல்லதையே செய்கின்ற நீ தீயவைகளைச் செய்கின்ற இடத்திற்கு ஏன் வந்தாய்.

சீதையைச் சிறை செய்ததால், நம் குலத்தின் பெருமை அழிந்தது. உன்னால் குலப்பெருமை நன்மை அடைந்தது. உன்னுடைய வெற்றித் தோள்கள் என்னை மகிழ்விக்கின்றன. அந்த மகிழ்ச்சியை அழிய செய்ய வந்துள்ளாயே! என் மனம் வருந்துகின்றது.

"குலத்து இயல்பு அமிழ்ந்ததேனும்
குமர! மற்று உன்னைக் கொண்டே
புலத்தியன் மரபு. மாயாப்
புண்ணியம் பொருந்திற்று என்னா
வலத்து இயல் தோளை நோக்கி
மகிழ்கின்றேன்"

ஒரு குலத்தில் பிறந்த நற்செய்கையால், அக்குலத்தில் பிறந்த புதல்வனது முன்னோர்களும் நற்செயல் பெறுவார்கள் என்பதை நிலை நிறுத்துவாயாக!

இராம இலக்குவரிடம் அடைக்கலம் புகுந்த உன்னைக் கைவிடமாட்டார்கள். தன் உயிர் கொடுத்தேனும் அடைக்கலப் பொருளைக் காக்கும் தன்மையர். அவர்களிடத்தில் சேர்ந்துவிட்டதால் இறப்பு என்ற பயம் நீங்கப் பெற்றாய். இராமன் பெயர் நிலைத்திருக்கும் அளவும், உனக்குப் பிறப்பு என்னும் இழிவு இல்லை. அவர்களை விட்டு ஏன் இங்கு வந்தாய்?

இப்பிறவியில் தீவினை நீங்கப் பெற்ற வீடணனே! பிறர் மனைவியை உறவென நினைக்கின்ற எங்களை உறவென நினைக்கின்றாயா?

"பிறர் மனைநோக்கு வேமை
உறவு எனப் பெறுதி போலாம்"

தீவினைச் செய்கையுடையானை உறவெனக் கொள்ள வேண்டாம் என்பதே கும்பகர்ணனின் அறிவுரை.

தவத்தையும், தவத்தைப் பேணும் அறிவையும், ஒழுங்குமுறைகளையும் படைப்பில் முதல்வனாகிய பிரமனிடமிருந்து பெற்றாய். பிரமனால் அழிவில்லாத ஆயுளையும் பெற்றாய், ஆராய்ந்தறியும் தகுதி படைத்தவனே!

"சாதியின் புன்மை இன்னும்
தவிர்ந்திலை போலும்"

சாதியால் வந்த இழிகுணம், இன்னும் உன்னைவிட்டு நீங்கியபாடில்லை. அருந்தவத்தையும், ஆயுளையும் பெற்ற உன்னிடம் நற்குணம் அமையவில்லை.

எங்களைக் கொல்ல, இராமன் வில்லுடன் நிற்கின்றான். அவன் இளவல் இலக்குமன் நிற்கின்றான். சேனை வீரர்கள், என் உயிரைக் கொள்ள இமயன்; நிற்கின்றான் ஊழ்வினையும் காத்திருக்கின்றது. வலிமையெல்லாம் தொலையும்படியாக வந்துவிட்டாயே:

"ஏற்றிய வில்லோன், யார்க்கும்
இறையன் இராமன் நின்றான்;
மாற்ற அருந் தம்பி நின்றான்;

மற்றையோர் முற்றும் நின்றார்;
கூற்றமும் நின்றது; விதியும் நின்ற
தோற்ற எம் பக்கல் ஐய!
வெல்வலி தொலைய வந்தாய்!

தன் வலி, மாற்றான் வலி நுண்ணிதின் உணர்ந்து, வலி குன்றிய எங்கள் பக்கம், உன் பெருமை அழியும்படி ஏன் வந்தாய்?

எங்களை விட்டு நீங்கி, இராமனிடத்தில் அடைக்கலம் புகுந்துவிட்டாய். அங்கே இருந்து பிழைக்கிலை எனின், இராமன் அம்பு மழையினாலே, இறந்துபடுகின்ற எங்களுக்கு எள்ளும் நீரும் சொரிந்து இறுதிக்கடன் செய்வார் யார்?

"அயோத்தி வேந்தர்க்கு
அடைக்கலம் ஆகி ஆங்கே
உயிகிலை என்னின், மற்றுஇவ்
ஆரக்கராய் உள்ளோர் எல்லாம்
எய்கணை மாரியாவே சிறந்து
பாழ் முழுவது பட்டால்
கையினால் என் நீர் நல்கி
கடன் கழிப்பாரைக் காட்டாய்"

எங்களோடு நீயும் சேர்ந்தால், இராமன் கை வாழி உன்னையும் அழிக்கும். எனவே இங்கு நீ இருக்க வேண்டாம். திரும்பி இராமனிடம் சென்றுவிடு. எங்கள் எல்லோர்க்கும் பிதிரிக்கடன் ஆற்றுவாயாக.

நீ வரக் கூடிய காலம் இதுவல்ல. நாங்களெல்லாம் இறந்த பிறகு நீ, இலங்கை மூதூருக்கு வரவேண்டும், அதுவும் இலக்குமி தங்கும் இராமனுடன் வரவேண்டும் அதன்பின் அழியாத ஒப்பற்ற அரச செல்வத்தை அனுபவிப்பதற்காக, இப்பொழுது நீ செல்! என மொழிந்தான்.

இராமனைச் சரண் புகுமாறு வீடணன் வேண்டுதல்

"விரைந்து செல்க" எனக் கூறிய கும்பகர்ணனிடம் "சொல்ல வேண்டிய காரியம் ஒன்று உண்டு" எனக் குறிப்பிட்ட வீடணன் தாம் வந்த காரியத்தைக் கூறலுற்றான்.

இனிய கருணையைப் பொழிபவன் இராமன், நீ இராமனுடன் சேர்ந்தால் உனக்கும் அருள் செய்வான். உன்னை அடைக்கலமாகவும் ஏற்றுக் கொள்வான். பிறவியாகிய நோய்க்கு மருந்தும் ஆவான். இடையறாது தோன்றுகின்ற பிறவியை நீக்கி, முக்தியைக் கொடுப்பான்.

"மாறிச் செல்லும்
உருளுறு சகட வாழ்க்கை ஒழித்து
வீடு பேறு அழிக்கும் அன்றே"

அடைக்கலம் புகுந்தால் ஏற்றுக் கொள்வான் நற்குணமுடையவனே! இராமன் எனக்கு தந்த செல்வத்தையும், இலங்கை மீதான அரசுரிமை, மற்ற எல்லாமும் உனக்கும் தந்து, உன்னுடைய ஏவலின்படி நடப்பேன், உனக்கு இதைக் காட்டிலும் வேறு நன்மை பயப்பது, இல்லை. என்னுடைய மனத்துன்பத்தை நீக்குவாயாக! அத்தோடு நம் குலத்தை சிறப்பு செய்த பெருமையும் உன்னை வந்து சேரும்.

இராமனிடம் தப்புவது முடியாது. தப்பினாலும் வேறு புகலிடம் இல்லை. நீ சாவது உறுதி. நீதியும் தர்மமும் பொருந்தி நின்ற நீ வீணே ஆவியை விடுவதால் என்ன பயன்? வேத நூலின் முறைமைக்குப் பொருந்தி வாழ்வதே சிறப்புடையது. சிறந்தவர் தீய நெறியில் ஒழுகுவராயின் அவரை உயிரின் சிறந்த நட்புடையவரென்றும், உடன் பிறந்தவர் என்றும், தாய் என்றும், தந்தை என்றும் யாரும் நினைத்துப் பார்க்க மாட்டார்கள். இந்த நீதிமுறைகளை நீ அறிவாய்: அத்தகைய நீதிமுறைகள் சொல்லும்படியாக இல்லை. நல்ல காரியங்களைச் செய்ய துணிந்தபோது பழி வந்து சேர்வதில்லை.

"தூயவை துணிந்த போது
பழி வந்து தொடர்வ துண்டோ?

தூயவைகளைத் தொடர்ந்து செய்தால், தீ யவைகள் விலகிப் போகும். தீமையிலிருந்து விலகித் தூய்மைக்குள் குடி புகுந்தால் பாராட்டப்படுவாயே அன்றி, பழிக்கப்பட மாட்டாய். எனவே இராவணனை விட்டு, இராமனிடம் அடைக்கலம் சேர்க.

தீய மக்கள், பெற்றோர்கள், துர்க்குணமுள்ள மனைவி, நன்மை உணராத உறவினர், கேடு நினைக்கும் நண்பர், தீய நோக்கோடு உதவி செய்பவர், துக்கம் இவர்களின் தொடர்பு எனத் துறந்தால், அத்துறப்பு நன்மையை விலக்கி வீடு பேற்றையும் அளிக்கும் தன்மையன. அறங்காரணமாக யாரை வேண்டுமானாலும் துறக்கலாம். அறத்தினின்று வழுவிய உன் தமையனைத் (இராவணனை) துறப்பது குற்றமன்று. இராவணனைத் துறப்பது நன்மையையே தரும்.

தலைவனை! தீவினையை ஒருவரி செய்ய, அவனோடு தீங்கிலார் அழிவது சிறப்புடையது அன்று. அவ்வாறு அழிவது உயர்வா? தாழ்வா? தவத்தில் சிறந்தவனான பரசுராமன் அறங் கருதியன்றோ, தீவினை செய்த தன் தாயைக் கொன்றான்.

"தீவினை ஒருவன் செய்ய
அவனோடும் தீங்கு இலாதோர்
வீவினை உறுதல், ஐய
மேன்மையோ கீழமைதானோ?
ஆய்வினை உடையை அன்றே?
அறத்தினை நோக்கி ஈன்ற
தாய், வினை செய்ய அன்றோ,
தொன்றனன்; தவத்தின் மிக்கான்"

நீதி தவறியவர்கள் சாவார்கள். நீதியுடையவர் அவர்களோடு சேர்ந்து சாக வேண்டியதில்லை. ஐயனே! நீ சாக வேண்டியதில்லை. எனவே இராமனை ஏற்றுக் கொள்க.

பகைவரின் மார்பைத் துளைக்கின்ற வேலை உடையவனே! (கும்பகர்ணன்) திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றி உலகுயிர்களைப் படைத்த சிவன், தன் தந்தை என்ற பெயருக்குரிய பிரமன் தவறு செய்ததினால் பிரமனின் தலைகளில் ஒன்றை அறுக்க வேண்டும் என்று எண்ணவில்லையா? அழியாத பழியை ஏற்று, பின் அதற்காக வருந்துதலை அறிவோர் செய்யார். பழியோடு, பாவத்தைத் தழுவி நரகத்தில் வீழ்வது சிறப்புடையதன்று. வீடுபேறு நல்குகின்ற இராமனைப் பணிவது உனக்கு மேன்மை தரும். தர்மத்தைச் சேர்ந்து ஒழுகும். இரணக் கட்டியை அறுத்து மருந்திடுவர் உலகத்தா

அரக்கர் குலத்திற்கு இரணக் கட்டியைப் போன்ற இராவணனை துறப்பதி தவறில்லை. இராவணனோடு கலத்தலால் பயன் இல்லை. பெருமை வெளிப்படா கடலிலே கரைக்கப்பட்ட நறுமணல் பொருள் போல வீணாவாய்.

உன்னுடைய தமையனைக் காக்க நீ முயல்வது வீண். தருமத்தை செய்வோம் எ நினைப்பதும் வீண். பல போர்களில் வென்றும் நீ வாழ்வை அடையவில்லை. தாழ்வை அடைந்துள்ளாய். உன்னுடைய இளமை பயனின்றிக் கழிந்தது. தூக்கத்திலேயே கால கழிந்துள்ளாய். பிறவிப் பயனால் என்ன பயன் பெற்றாய்? அறநெறி கெட்டொழுகும்ட போரில் உயிரை விட்டு, நீ மேற்கொள்ளப் போவது என்ன?

இலக்குமியையும், பறிவத்சம என்னும் மச்சத்தையும் மார்பில் கொண்ட இராமை அடைந்தால் ஆயுட்காலம் பெறுவாய், பெருஞ்செல்வம் அடைவாய். தனியொ அரசனாக ஆள்வாய். இவைகளில் ஒன்றும் நீ அடையக் கூடாததில்லை. இவைகள அடையக் காலமும் சேர்ந்திருக்கிறது.

மூன்று கடவுளர்க்கும் முதல்வராகிய மூர்த்தியே, தர்மத்தை உலகில் நி நிறுத்துவதற்காக காகுத்த மரபிலே இராமனாகத் தன்னுடைய உருவத்தைக் காட வந்திருக்கின்றார். இராமன் அருளினால், நீ இலங்கை செல்வத்தை எய்துவாயான எவர்க்கும் தாழ்ந்தவனாக மாட்டாய். உன்னை வருத்தும் வலிமையுடையர் இலர்.

"தேவர்கும் தேவன் நல்க
ஏவர்க்கும் சிறியை அல்லை!
இலங்கையின் செல்வம் பெற்றால்
யார் உனை நலியும் ஈட்டார்
மூவர்க்கும் தலைவர் ஆன
காகுத்த வேடம் காட்டி!
மூர்த்தியார், அறத்தை முற்றும்
காவதிற்கும் புரிந்து நின்றார்

அதர்மத்தை அழித்துத் தர்மத்தை இவ்வுலகில் நிலைநாட்டவே இராமன் பிறவி எடுத்துள்ளான்.

தீமையை அகற்றி, நன்மை விளைவிப்பதே முக்கியக் கடமை. எனவே, இராமனைச் சேர்தி.

கீழ் மக்களின் செயலை மேற்கொள்ளாது, அறிவுடையோரின் செயலை மேற்கொண்டால், உன்னுடைய மக்கள், உன்னோடு உடன் பிறந்த என்னுடைய மக்கள், அரக்கர் குடித்தலைவனான இராவணனுடைய மக்களும் தலை நிமிர்ந்து வாழ்வர். ஐயனே! இராமனைச் சேர்தியாயின் முன்வரும் உன்மேல் மக்கள் இரக்கம் கொளார். பகை இல்லை, அழிவில்லை என்றும், வருத்தமும் இல்லை. தேவர்கள் நண்பர்கள் ஆவார். இனிய கனியாகும் ஒன்றை பூவிலே பறிக்கலாமா?

வேதநாயகனே (இராமன்) என் மேல் வைத்துள்ள அன்பின் காரணமாக, கருணையோடு உன்னை அழைத்து வரும்படி ஏவினான். இதுதான் நான் வந்த காரியம். ஐயனை! அறத்தோடு மாறுபடாமல் இராமனைக் காண வருவாயாக! என வேண்டிக் கும்பகர்ணனின் பாதங்களை வணங்கினான்.

கும்பகர்ணன் கூறிய மறுப்புரை

மாலை அணிந்த பரந்த மார்பை உடைய இளவலை!

"நீர்க்கோல வாழ்வை நச்சி
நெடிது நாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டார்க்கு
உயிர் கெடாது அங்குப் போகேன்"

அழியும்படியான செல்வ வாழ்க்கையை விரும்பி, இதுவரை என்னை வளர்த்து, போர்க்கோலம் புனைந்து புறம் அனுப்பிய என் தமயனைத் துறந்து, இராமனைச் சேரமாட்டேன் என் துன்பத்தை நீக்குவதாக இருந்தால், விரைந்து சென்று இராமனைக் கூடுவாயாக.

பரமன் அளித்த மாசற்ற வரத்தினால் தர்மநெறியை மேற்கொண்டுள்ளாய். இறவாத புகழை அடைந்தாய். தலைவன் ஆனாய். நீ இராமனை அடைந்து வாழ்தல் தகுதியுடையுது. மரணம் அடைதல் எனக்குத் தகுதியுடைத்து. அறிவில்லா அரசன் தீமை செய்யக் கருதினால் அத்தீமையைச் செய்ய விடாது காத்துத் திருத்தலாம்.. திருத்த முடியாதாயின், போர்த் தொழிலை மேற்கொண்டு, அவ்வரசன் இறப்பதற்கு முன்பே இறப்பது, அவ்வரசனது உணவை உண்டவர்க்கு உரிய செயலாகும். மூவுலகையும், ஆண்டு புகழ் பரப்பிய ஒப்பற்ற இராவணன், தன் சேனைகளோடும், சுற்றங்களோடும் தம்பியரின்றி மாண்டு கிடப்பது முறையாகாது. தமையன் தம்பியின்றிக் கிடப்பனோ?

"உம்பரும் பிறரும் போற்ற
ஒருவன் மூவலகை ஆண்டு

தம்பியர் இன்றி மாண்டு
கிடப்பனோ தமையன் மண்மேல்”

தம்பியர் இருவர் இன்றி, மண்மேல் தமையன் தனியே இறப்பது தகுதியன்று.

முன்னர் தன்னிடம் தோற்று ஓடிய கூற்றினிடத்தே (எமன்) இப்பொழுது இராவணன் தோற்றுப் போனான் என தேவர்கள் எள்ளி நகையாட உடன் பிறந்தவர்கள் இன்றிச் செல்லுதல் தகுதியோ! ஐயனே! எமனையும் வெற்றி கொண்ட நான்; இலங்கைச் செல்வம் நிலையானது எனக் கருதி என் அண்ணனின் உயிர் கொண்ட பகைவனாகிய இராமனை வாழ்த்தி, வணங்கி வாழ மாட்டேன்.

“கும்பிட்டு வாழ்கிலேன் யான்
கூற்றையும் ஆடல் கொண்டேன்”

பகையை வாழ்த்தி வாழ்கிலேன், இராவணனே முன்னால் இறந்தாலும் நான் இராமனைச் சேரேன்.

அனுமனையும், வாலியின் மகன் அங்கதனையும் சூரியன் மகன் சுக்ரீவனையும், வில்லேந்திய இராம இலக்குவரையும், சேனைகளை நடத்தும் நீரினையும், சாம்பவானையும், வானரச் சேனைகளையும் வெற்றி கொண்டு மூடியிருக்கின்ற பனியை நீக்கி, உலகத்தை சுற்றுகின்ற சூரியன் போல் திரிவேன், அதை நீ காண்பாய்!

“ஆலங்கண்டு அஞ்சி ஓடும்
அமரர்போல் அரிகள் ஓட
சூலம் கொண்டு ஓடி, வேலை (கடல்)
தொடர்வது ஓர் தோற்றம் தோன்ற,
நிலம் கொள் கடலும் ஓட,
நெருப்பொடு காலும் ஓட,
காலம் கொள் உலகும் ஓட,
கறங்கு எனத் திரிவன்; காண்டி;”

ஆலகால விடத்தைக் கண்டு அஞ்சி ஓடிய தேவர்களைப் போல் வானரங்களை ஓடச் செய்வேன், நீலநிறக் கடலையும் தோற்கச் செய்வேன். ஊழித் தீயையும், ஊழிக் காற்றையும் தோற்கச் செய்வேன். ஒரு கடல் இன்னொரு கடலை வேல் கொண்டு துரத்துவது போல சுழன்று திரிவேன். இதை நீ காண்பாய்.

கரிய மலையும், பொன் மாலையும் என்னும் படியான தோற்றம் கொண்ட இராம இலக்குவரைத் தவிர, போர்களத்தில் வேறு யார் நின்றாலும், அவர்களை உயிரோடு உலகில் உலவ விடமாட்டேன்.

என் சொல் தாழ்ந்ததில்லை. தலைக் கொள்ளத்தக்கது எனின், தாமதம் செய்யாமல் இராம இலக்குவரை அடைந்து நட்பு கொள்வாயாக. அவர்களோடு சேர்ந்தால்

எல்லோராலும் நீ விரும்பப்படுவாய். ஐயனே! விரைந்து செல்க. இராமனை வணங்கி, வேத நூல் முறைப்படி வாழ்ந்து; இறந்தவர்களாகிய எங்களுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடனைச் செய்து நரகத்தை அணுகாதபடி எங்களைக் காப்பாயாக.

இளவலே! காலத்தால் எங்களைக் காப்பாயாக. அழிவது அழியும். அருகிலிருந்து போற்றினும் அழிவது உறுதி. உணர்ந்து கொள்வதில் உன்னைப் போல் யாரும் இல்லை. போற்றினும் போதல் திண்ணம். காலமல்லாத வழிக் கருமங்கள் கைகூடாது. எங்களைக் குறித்து வருந்தாதே. எனக்கு வருத்தம் உண்டாக்காது. இராம இலக்குவரை விரைந்து அடைவாயாக எனச் சொல்லி, அவனை (வீடணனை)

"எடுத்து மார்பு இறுகப் புல்லி
நின்று நின்று இரங்கி ஏங்கி
நிறை கணால் நெடிது நோக்கி
இன்றொடும் தவிர்ந்தது அன்றே,
'உடன்பிறப்பு' என்று விட்டான்"

மிகுவலி வீரனும் (வீடணன்) அடிகளில் வீழ்ந்தான். வணங்கினான். கண்களும், முகமும், மனமும் வாடினான். உயிரும் உடம்பும் ஒடுங்கினான். மறுத்துப் பேசுவதில் பயனில்லை என உணர்ந்தான். மீளுதலை விரும்பி, கடல் போன்ற சேனை கைகுவித்து விடை கொடுக்க வீடணன் இராமனை அடைந்தான். கும்பகர்ணன் உள்ள நீர் எல்லாம் மாறி, உதிர நீர் ஒழுக நின்றான்.

உதிர நீர் ஒழுக நின்ற கும்பகர்ணனின் மனநிலையை வீடணன் இராமனுக்கு விளக்கினான். எந்தாய்! அறநெறியில் ஒழுகும் தன்மை, தீமையிலிருந்து விலகுகின்றவர்களுக்கு மட்டுமே உரித்து, கும்பகர்ணன் தீமைகளிலிருந்து விலகுகின்றவனாய் இல்லை. கும்பகர்ணன் மனமாற்றம் அடைந்து, நல்வழியில் உய்கின்ற முறையில் சொற்களைப் பெய்து, திறமையெல்லாம் பயன்படுத்திப் பேசினேன். அரக்கர் மூலப்பற்று நீங்காதவனாய் என் சொற்களை மேற்கொண்டானில்லை.

"பெய்திறன்; எல்லாம் பெய்து
பேசினன்; பெயருந் தன்மை
செய்திலன்; குலத்து மானம்
தீர்ந்திலன் சிறிதும்;"

தீமைகளிலிருந்து உய்கின்றவர்களுக்குத்தான் ஒழுக்கநெறி. கும்பகர்ணன் சிறிதும் குலத்து மானம் நீங்கிலன். என்னுடைய முயற்சி வீணானது, என்னுடைய சொற்கள் பயனற்றுப் போயின என உரைத்தான்.

வீடணன் உரை கேட்ட இராமன், ஐயனே! உனக்கு முன்பாகப் பிறந்தவனை, உன் கண் முன்னாலேயே, அம்பெய்து அவன் தலை அறுத்தல் இனிது அன்று. இனிச் செய்வதற்கு ஒன்றும் இல்லை. விதியை விலக்க வல்லவர்கள் யார் எனச் சொல்லுகின்ற வேளையில், இராக்கதர் சேனை, வானரச் சேனையை முயன்று போர் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

போர்கள இயல்பு

போர்களத்தில் அரக்கர்களின் குதிரைப் படைகளும், யானைப்படைகளும், தேர்ப்படைகளும் வானரப் படைகளோடு மோதின. போர்க்களத்தில் இரத்தப் பேராறுகள் ஓடின. இரத்தப் பேராறுகளில் மலைகள் இழுத்துச் செல்லப்பட்டன. தலையற்ற முண்டங்களின் கூட்டம் மிதந்து சென்றன. இறைச்சியை வயிராற உண்ட பேய்கள் எங்கும் ஆடின. இரத்த வெள்ளத்தில் தேர்கள் மிதந்தன. தேர்களின் மேல் உள்ள கொடிகள் விண்ணில் உயர்ந்து பறந்தன. இறைச்சியை உண்ட பருந்துகளும் கழுகுகள், கொடிகளோடு இணைந்து பறந்தன.

படைகளின் நிலை

வானரப் படைகளும், அரக்கர் படைகளும் கடுமையாக மோதிக் கொண்டன. ஒளி பொருந்திய பற்களை உடைய அரக்கர்களின் அழகிய தோள்களில், வானரப் படைகள் வீசிய மலையும், மரமும், கல்லும் ஒரு சேர வந்து விழுந்ததால், கையில் ஏந்திய வாளொடு குழப்பத் தன்மையை அடைந்தனர். அரக்கர்கள் வீசிய சூழப்படையும், வேற்படையும், வானரப் படைகளைத் தாக்கியதால் இரத்த வெள்ளத்தில் ஆழ்ந்தன.

அரக்கர் அம்புகளை எய்தார்கள். வானரர்கள் கற்களால் எரிந்தார்கள். அரக்கர்கள் அக்கற்களைக் கைகளில் பற்றி, மீண்டும் வானரர் மீது எறிந்தார்கள். அரக்கர்கள் எறிந்த அம்புகளை, வானரர்கள் கைகளில் பற்றி வீசி எறிந்தனர். அரக்கர்கள், வானரர்களை வைதனர். வானரர்கள் அரக்கர்களைப் பற்றிப் போருக்கு இழுத்தனர். இவ்வாறின்றி வேறு முறைகளிலும் போர் செய்தனர். இவர்களின் போர் முறைகளைக் கண்டு தேவர்கள் அஞ்சினர்.

கும்பகர்ணன் வானரர்களோடு போர் செய்தல்

நீரினை ஓட்ட முயல்கின்ற காற்றும், காற்றின் வேகத்தினைத் தாங்கி அதன் அதில் ஓடாது நிற்கும் நீரும் போல அரக்கர்களும், வானரர்களும் செய்கின்ற போரின் வலிமையைப் பார்த்தவாறு கும்பகர்ணன் தன் தேரினை ஓட்டிக் கொண்டு போர்க்களத்திற்கு வந்தான்.

> "ஊழியில் பட்ட காவில் உலகங்கள் பட்டால் ஒப்ப
> பூமியில் பட்ட, செந்நீர்ப் புணரியில் பட்டு, பொங்கும்
> சூழியின் பட்ட நெற்றிக் களிற்றொடும், துரந்த தேரின்
> ஆழியில் பட்ட அன்றே - அவனியில் பட்ட எல்லாம்"

ஊழி இறுதியில் தோன்றிய காற்றினாள் உலகங்கள் யாவும் அழிந்தது போல, இப்பூமியில் பொருந்திய வானரங்கள் புழுதியில் அகப்பட்டும், இரத்த வெள்ளத்தில் அகப்பட்டும், யானைகளின் கால்களில் சிக்கியும், கும்பகர்ணனுடைய தேரின் சக்கரங்களில் பொருந்தியும் அழிந்தன.

குன்றுகளைப் பெயர்த்து வானரங்களின் மேல் எறிவான். தேரிலிருந்து பூமியில் குதித்து, குரங்களின் வாலைப் பிடித்து ஒன்றோடு ஒன்றை மோதுவான். சில

குரங்குகளைக் காலால் உதைப்பான். கால்களால் மிதித்து நசுக்குவான். சில குரங்குகளை வாயில் போட்டுத் தின்று துப்புவான். தலைகளை திருகி எறிவான். எறிந்த தலைகளைக் காலால் தேய்ப்பான். விண்ணில் தூக்கி எறிவான். கைகளால் பிசைந்து உடம்பில் பூசிக் கொள்வான்.

'குன்று கொண்டு எறியும்,
பாரில் குதிக்கும்; வெங்கூலம் பற்றி
ஒன்று கொண்டு ஒன்றை ஏற்றும்
உதைக்கும், விட்டு உழக்கும், வாரித்
தின்றுதின்று உமிழும்; பற்றிச்
சிரங்களைத் திருகும்; தேய்க்கும்:
மென்று மென்று இழிச்சும்;
விண்ணில் வீசும்; மேல் பிசைந்து பூசும்;

சில குரங்குகளைக் கடலில் அமிழ்த்துவான். சிலவற்றை மண்மேல் வைத்துக் கையால் தேய்ப்பான். கையில் பட்ட வானரங்களை கடலில் குவிப்பான். தேர் மேல் மோதி அடிப்பான். எட்டுத் திசைகளிலும் வீசி எறிவான். வால்களைப் பற்றி மலைகளிலும், மரங்களிலும் சுற்றி அடித்துக் கொல்வான்.

கும்பகர்ணனின் கொடூரமான செயலை தாங்கிக் கொள்ள முடியாமல் வானரப் படைகள் அலுத்து ஓய்ந்தனர். சில வானரங்கள் உயிர் சுமந்து ஓடின. தேவர்கள் குலை நடுங்கினர். பிணங்களின் குவியலில் பறவைகள் வந்து நிறைந்ததால், உண்மையான மலைகள் தம் பெருமைகளை இழந்தன. குரங்கு சேனைகள், கும்பகர்ணனின் கைபட்டுக் குறைந்தன. எமனும் நாணித் தலைகுனியும்படி வானரங்களை கொன்று குவித்தான். குரங்குகளின் உயிர்களை விரைந்து பற்ற முடியாமையால் கூற்றும் (எமன்) கூசி நின்றான்.

குரங்கு படைகளின் நிலை

கும்பகர்ணன் அழிவது உறுதி என தெரிந்த வானரங்கள் மலை, மரம் போன்றவற்றைக் கொண்டு தாக்கினர். வானரங்கள் தாக்கிய கற்கள, மரங்கள், வேர்கள், கட்டைகளும் காலில் மிதியுண்ட உலர்ந்த புல்லினையும் பிற எளிய பொருட்களையும் போல நொறுங்கிப் போயின. இனி அவன் மேல் எறிவதற்கு மலை, மரங்கள் இல்லை என எண்ணி, பல்லோடு பல்லினைச் சேர்த்து கடித்துக் கொண்டு உடம்பின் மேல் மோதி இறந்தன.

குன்றின் மேல் விழுகின்ற குருவிக் கூட்டத்தைப் போலக் குதித்துக் கூடிக் கும்பகர்ணன் மேல் தாவின. தம் கைகள் வலிக்கும்படித் தாவிக் குதித்தன. பல்லால் கடித்தன. நகங்களால் உடம்பைக் கிழித்தன. முடிவில், ஒன்றும் செய்ய முடியாது வலியிழந்து, அவன் உடம்பினின்று இரங்கி ஓடின.

"சென்று மேல் எழுந்து பற்றி
கைத்தல் தேயக் குத்தி

வன்திறல் எயிற்றால் கவ்வி
வன்உசிர் மடியக் கீளா
ஒன்றும் ஆகின்றது இல்லை
என்று இழிந்து ஓடிப் போன”

“குன்றின் வீழ்குரிஇக்” என்னும் உவமை கும்பகர்ணனின் பலத்தையும், குரங்குகளின் பலவீனத்தையும் சுட்டிக் காட்டுகின்றது.

கும்பகர்ணன் நீலன் போர்

குருவிக் கூட்டம் குன்றில் மோதிச் சிதறுண்டதைப் போல, வானரங்கள் வலியிழந்து ஓடியதைக் கண்ட ‘நீலன்’ என்னும் வானரத் தலைவன், மண்ணில் மூழ்கிக் கிடந்த மலையைக் காற்றைப் போல் கையால் விரைந்து பற்றினான். நிமிர்ந்து மேல் எழும் நெருப்பைப் போல அம்மலையைச் சுழற்றிக் கும்பகர்ணன் மேல் விட்டான். நீலன் எறிந்த மலையைத் தன் சூலத்தால் பொடி செய்துவிட்டுப் புன்சிரிப்புத் தோன்ற நின்றான்.

மீண்டும் ஒரு மலையைத் தேடி திரிந்தால், அச்சம் கொண்டு அலைவதாகப் பிறர் எண்ணக் கூடும் என நினைத்த நீலன், தன் தோள்களையே படைகளாகக் (படைக்கலன்) கருதிக் கும்பகர்ணனது தேரின் மேல் ஏறினான்.

“புயங்களே படைகள் ஆகத்
தேர் எதிர் ஓடிப் புக்கான்”

முரசங்களும், கடலும் விண்ணில் தோன்றும் இடிகளும் ஓசையால் தோற்றுப் போகும்படியும் பார்ப்பவர்கள் அச்சம் கொள்ளும்படியும் கைகளால் கும்பகர்ணனைப் பலமுறைக் குத்தி, கால்களால் உதைத்தான்.

கைகள் சலித்தன. கால்கள் வலியிழந்து ஓய்ந்தன. ஆனால் சினம் மட்டும் பொங்கியவனாய், வெறுங்கையோடு நிற்கின்ற நீலனைக் கொல்வதற்கு நாணியக் கும்பகர்ணன் உயிர் பதைத்து விழுமாறு இடது கையால் தட்டிவிட்டான்.

“எய்தாது உயிர் பதைத்து வீழ
எற்றினான் இடது கையால்”

நீலனது கைகளும், கால்களும் சலிந்து ஓய்ந்தனவே தவிர, மனம் மட்டும் சலியாமல் கோபத்தால் பொங்கியது

அங்கதன் போர்

வலியிழந்து விழுந்த நீலனைப் பார்த்த அங்கதன் நெடிய மலையைப் பறித்து “மாண்டனன் அரக்கன் தம்பி” என வாழ்த்த கும்பகர்ணன் மேல் வீசினான்.

"நீண்டது ஓர் நெடுந்திண் குன்றம்
நிலமுதுகு ஆற்ற வாங்கி
மாண்டனன் அரக்கன் தம்பி
என்று உலகு எழும் வாழ்த்தத்
தூண்டினான்"

"மாண்டனன் அரக்கன் தம்பி" என மற்றையோர் வாழ்த்த, வீசிய மலையைக் கும்பகர்ணன் தோளிலே ஏற்றுக் கொண்டான்.

தோளிலே விழுந்த மலை துகள்களாய் சிதறித திசைதோறும் ஓடி மறைந்தன. அங்கதன் கோபம் தனியாதவனாய் அவ்விடத்திலேயே நின்றான். நின்றவனைக் கொல்ல கருதிய கும்பகர்ணன், ஏழு முனைகளும் வயிரத்தால் ஆகிய தண்டாயுதத்தை அங்கதன் "உயிரைப் பறித்து வா" என இடக்கையால் வீசினான். வானவர் வாழ்த்த அத்தண்டாயுதத்தை தன் தடக்கையால் பிடித்துக் கொண்டான். வலிமையுடைய அரக்கனை அழிப்பேன். உயிரைப் போக்குவேன் எனக் கர்ஜித்தவனாய், சிவந்த கண்களை விரித்தவனாய், ஆரவாரம் செய்தவனாய்; இடியேறு போல கும்பகர்ணனின் தேரின்முன் குதித்து நெருங்கி நின்றான்.

"அடித்து உயிர் குடிப்பேன் என்னை
அனல் விழுந்து ஆர்த்து மண்டி
கொடித் தடற் தேரின் முன்னர்க்
குதித்து எதிர் குறுகி நின்றான்"

குன்றம் அன்ன தேரின் முன் குதித்து நின்றான், இடியைப் போல் ஆர்த்து நின்றான்.

கும்பகர்ணன் – அங்கதன் உரையாடல்

அங்கதனை நிமிர்ந்து நோக்கி இறப்பதற்காக இங்கு வந்து சேர்ந்த தலைவன் சுக்கீரிவனோ? அன்றெனில் அவன் மகனோ? அல்லது ஊரை எரித்து, அரக்கர்களை வென்ற அனுமனோ? யாரோ? விளிம்புதி விரைவில் என்றான்.

நான் போர்முனையில் வல்லவனான வாலியின் மகன். இப்பொழுது உன்னை, என் வாலில் கட்டிக் கொண்டு சென்று இராமனுடைய பாதங்களை வணங்கிடச் செய்வேன்.

"நும்முனை வாலில் சுற்றி
நோன் திசை நான்குந் தாவி
மும்முனை நெடுவேல் அண்ணல்
முளரி அம் சரணம் தாழ்ந்த
வெம் முனை வீரன் மைந்தன்;
நின்னை என் வாலின் விக்கித்
தெம்முனை இராமன் பாகம்
வணங்கிடச் செய்வேன்"

இராவணன் தம்பியாகிய உன்னை என் வாலில் கட்டிச் சென்று இராமன் பாதங்களை வணங்கி, வாலியின் மகன் என்பதைக் காட்டுவேன் என அங்கதன் விடையறுத்தான்.

உன் தம்பியைக் கொன்ற இராமனுக்கு நன்றிக்கடன் தீர்க்காவிட்டால், இவ்வுலகோர் உன்னை நிந்தனை செய்வார்கள். "நல்லதே செய்ய நினைத்தாய்"என வஞ்சப் புகழ்ச்சியால் கூறினான். உன் தந்தையைக் கொன்று, உனக்கு தீமை உண்டாகிய இராமனுக்கு நீ உதவி செய்தால் உலகோர் உன்னைப் பழிப்பர். வீரர்கள் உன்னை அவமதிப்பர்; ஆதலின் உன் செயல் நல்லதன்று; என்பதைக் குறிப்பிட்டுக் காட்டினான்.

நீ இங்கு வந்ததின் நோக்கம் என்னை கொண்டு போவதற்கு அல்ல. வானவர் மார்பில் பாய்ந்த என் சூலம் உன் முதுகில் பாய்ந்து உன்னைக் கொல்லும். சூலத்தின் உச்சியில் நீ வைக்கப்படுவாய். அப்பொழுது உன் கால்களும் கைகலும் தொங்கிக் கிடப்பதை எண்ணித்தான் இங்கு வந்திருக்கின்றாய் என இகழ்ச்சியாகக் கூறினான்.

இப்படிக் கூறியதால், கோபத்தில் கண் சிவந்த அங்கதன், கண்களை அகலவிரித்து, இடிமலையில் வீழ்ந்தது என்று எண்ணும்படி ஒலி உண்டாக்கி உலகத்தோர் அஞ்சும்படி தோளின் மேல் வீசினான். பட்ட வயிரத்தண்டு. நெருப்புப் பொறியைப் போல் சிதறுண்டு போயின.

"புண்திறப் புறவ லாளன்
கையினால் புகைத்து குத்த
மண்திறப்பு எய்த வீழ்ந்தான்
மாருதி இமைப்பின் வந்தான்"

தலைமேல் குதித்தான் அங்கதன். அங்கதன் உடம்பில் புண் உறக் குத்தினான் குத்தினைத் தாங்காத அங்கதன், அலறியதை அறிந்த அனுமன், இமைப்பிற்குள் அங்கு வந்தான்.

கும்பகர்ணன் – அனுமன் போர்

அனுமன் இடையீடு கும்பகர்ணனுக்கு கோபத்தை உண்டாக்கியது. உடனே தன் கூரிய சூலத்தை, அனுமன்மேல் வீசினான். குன்றம் ஒன்றை பிடுங்கி அனுமன் கும்பகர்ணனின் நெற்றி பதியுமாற வீசிவிட்டு, தூயவன் இராமனை வாழ்த்தி ஆதரித்தான். அந்த மலை அனுமன் மார்பில் பட்டபோது, நெருப்புப் பொறிகள் சிந்தின. கும்பகர்ணனைப் பார்த்து வஞ்சின மொழிக் கூறினான்.

அனுமனின் வஞ்சின மொழி

மலை பெயர்த்து நேர் நின்ற அனுமன், உன்மேல் மலையை எறிவேன், உன் வல்லமை மாய்ந்து போகும் அல்லாமல் இம்மலையினை விலக்கிவிட்டால் உன் வல்லமையை எல்லோரும் அறிவர். உன்னோடு போர் செய்யாது போர் விடுவேன். நீ இவ்வுலகில் அழியாப் புகழைப் பெறுவாய்

"எறிகுவேன் இதனை நின்மேல்
இமைப்புறும் அளவில் ஆற்றல்
மறிகுவது அன்றி வல்லே
அறிகுவர் எவரும்: பின்னை யான்
உன்னோடு அமரும் செய்யேன்
பிறிகுவென்; உலகில் வல்லோய்
பெரும் புகழ் பெறுதி என்றான்;

அனுமன் எறிகின்ற மலையின் வன்மையால், கும்பகர்ணன் அழிந்து விடுவான் என்பதே வஞ்சின மொழிக்குக் காரணமாக அமைகிறது.

கும்பகர்ணனின் வஞ்சின மொழி

அனுமனின் வஞ்சின மொழியைக் கேட்ட கும்பகர்ணன் மலையின் குகை திறந்தாற் போன்று சிரித்து

"தோற்றனென் உனக்கு என் வன்மை
சுருங்கும் என்று அரக்கன் சொன்னான்"

நீ வீசுகின்ற மலையை தாங்க முடியாமல் தளர்ச்சியுறுவேனாயின்; உனக்குத் தோற்றவனானேன். என் வலிமையும் குறைந்ததாக எண்ணிக் கொள் என வஞ்சினம் உரைத்த கும்பகர்ணன் மலையைத் தன் தோளின் மேல் ஏற்றான்.

"கார் உதிர் வயிரக் குன்றைக்
காத்திலன் தோள்மேல் ஏற்றான்
ஓர் உதிர் நூறு கூறாய்
உக்கது, எவ்வுலகும் உட்க"

தோளில் விழுந்த குன்று,சிறு துகள்களாய் சிதறின. அவன் தோளில் பட்டு சிதறியதைக் கண்ட அனுமன் வியந்தான். அவன் வலிமை அளப்பதற்கு இயலாதது. எட்டுத் திசைகளும் குல மலைகளும், அவன் வளமைக்கு ஈடானவையல்ல.

"இவனது ஆற்றல்
அளக்குற்ற பாலும் ஆகா;
குலவரை அமரின் ஆற்றா;
சுந்தரத் தோளன் வாளி
பிளக்குமேல், பிளக்கும் என்னா
மாருதி பெயர்ந்து போனான்"

எவராலும் அசைந்தற்குரிய நிலையுடையவன். இவன் தோள்களை இராமன் அம்புதான் விளக்கவல்லன என எண்ணி அப்புறம் ஏகினான்.

எட்டுத் திசைகளிலும் உள்ள வரைகள் அனைத்தும் அவன் வல்லமையை அழிக்கும் ஆற்றல் படைத்தனவல்ல. சுந்தரத் தோலின் இராமன் கை வாளி (அம்பு) தான். பிளக்கும் என எண்ணியவனாய் இடம் பெயர்ந்து மறைந்தான்.

எழுபது வெள்ளத்து சேனைகளில் இறந்தவர் போக எஞ்சியவர்கள் 'இவன் கை சூலத்தால் அழிவர்' என தேவர்கள் கலங்கினர். அவனைத் தாக்கியவர்களின் கைகள் சலித்தனவேயன்றி, அவனை வென்றவர் ஒருவருமில்லை. சிறிது வலி உண்டாக்கியவர்களும் இல்லை.

"நூக்கினார் ஒருவரிமில்லை;
நோவு செய்தாரும் இல்லை;
ஆக்கினான் களத்தின் ஆங்கு
ஓர் குரங்கினது அடியும் இன்றிப்
போக்கினான் ஆண்மையாலா"

ஆண்மையால் அவன் புகழைப் புதுப்பித்துவிட்டான்.

கும்பகர்ணனின் போர் ஆரவாரம்

எமனையும் நடுங்கச் செய்யும் கும்பகர்ணன், குரங்கு கூட்டங்களை எல்லாம் அழித்து, இராம இலக்குவரை எதிர்த்து நின்றான். இராம இலக்குவர் இங்கு வரவில்லையோ? "போரிட அவர்களுக்கு வேறு இலங்கை உளதோ?" "எங்கு போனீர்கள்?" எங்கு போனார்கள்?" என உரத்துக் கூவி, தேவர்களும் அஞ்சுமாறு தன் வலிய தோள்களைக் கொட்டி ஆர்த்து நின்றான்.

"எங்கு உற்றார், எங்கு உற்றார்? என்று
எடுத்து அழைத்து, இமையோர் அஞ்ச
துங்கத் தோள் கொட்டி ஆர்த்தான்"

அவனிடம் போரிட வந்த குரங்குகள் பல இறந்து கிடந்தன. எஞ்சியது அஞ்சி ஓடின. போர்க்களத்தில் யாரும் இல்லை. இரத்த வெள்ளம் பாய்ந்து நிறைந்தது. எங்கும் அவனோடு, போரிடத் தயாரானான் இலக்குவன்.

இலக்குவன் – கும்பகர்ணன் போர்

இலக்குவன் வில்லின் நாணினைத் தெறித்தான். நாணொலி கேட்ட அரக்கியர், தம் கணவன்மார்கள் மாண்டனர் என நினைத்து, ஒளி வீசுகின்ற பொற்றாலிகளைக் கழற்றி தரையில் வீசினர். விண்ணில் இடிபோல் எதிரொலிகள் தோன்றின. திசைகள் செவிடாயின. பேய்கள் துணங்கை ஆடின.

"நாணெறிந்தனன் இலையினை
அரக்கியர் நகு பொன்
பூண் எறிந்தனர்; படியிடை;

இலக்குவனது வில்லின் நாணொலி கேட்டதும் அரக்கமாதர் தங்கள் தாலியை அறுத்து பூமியில் போட்டனர்.

இலக்குவனது அம்பு அரக்கர் சேனையை அழிக்கும் என்பதைக் கம்பர் கோடிட்டுக் காட்டுகிறார்.

இலக்குவனது அம்புகளின் வலிமை

இலக்குவனது அம்புகள், திசையானையின் மத்தங்களில் மூழ்கி இரத்தத்தைக் குடித்தன.

சில அம்புகள், உலக ஊர்களை எல்லாம் கொடுமைப்படுத்துகின்ற அரக்கர்களின் கழுத்துக்களை அரிந்தன. சில அம்புகள் தலைகளை அறுத்து, திசைகளின் கடைசி இடத்திற்கு கொண்டு சென்றன.

சில அம்புகள் சூரியனை ஒப்பாகக் காணப்பட்டன. மின்னல் கூட்டங்கள் ஓரிடத்துப் புகுந்தனபோல ஒளியைச் சிந்தின பொன் பொருந்திய விளிம்புகளையுடைய அம்புகள் முன்னின்ற அரக்கர் படையினரின் மார்பில் புகுந்து, வரிசையில் பின் நின்றவர்களின் முதுகில் வெளிப் போந்தன. சத்தம் இழக்கச் செய்தன.

காளம் என்னும் ஊதுகருவியின் பொகுட்டில் பாய்ந்து ஒலி இழக்கச் செய்தன. காலாட் படையினரின் பாய்ந்து ஆரவாரத்தை அடக்கின. ஆனைகளின் கழுத்தில் பாய்ந்து அதிர்ச்சியுற செய்தன. குதிரைகள் பூட்டிய தேர்களில் பாய்ந்து ஓடும் ஆற்றலை இழக்கச் செய்தன. எல்லா இடங்களிலும் அம்புகள் பரந்து கலந்தன.

ஆனைகளின் நிலை

இலக்குவன் விட்ட அம்புகளினால் ஆனைகள் எல்லாம் கொம்புகள் இழந்தன. வால்களை இழந்தன. செவிகளை இழந்தன. கண்களை இழந்தன. துதிக்கைகள், முன்னங்கால், உடல் உறுப்புகள் அனைத்தும் இழந்து மலை புரண்டன போல் மண்ணிடைப் புரண்டன.

“மருப்பு இழந்தன களிறு
எலாம் - வால் செவி இழந்த
நெருப்பு உகும் கண்கள்
இழந்தன; நெடுங் கரம் இழந்த;
செருப் புகும் கடுங்காத்திரம்
இழந்தன; சிகரப்
பொருப்பு உருண்டனவாம்
எனத் தலத்திடைப் புரண்ட”

ஆனைகளின் உறுப்புகள் மலையென மண்ணில் உருட்டின.

குதிரைகளின் நிலை

வேகம் பொருந்திய குதிரைகளின் தலைகளில் தொடர்ந்து அம்புகள் தைப்பதால் மயங்கிச் சாய்ந்தன. மார்புகள் தரையில் பொருந்த விழுந்தன. குதிரைகளில் ஒன்று கூட உயிர் பிழைக்கவில்லை.

அம்புகள் பட்டதால் இறந்துபட்ட குதிரைகளும் வில்லேந்திய தேர் வீரர்களும், கொடிகள் கட்டப்பட்ட தேர் வீரர்களும், கொடிகள் கட்டப்பட்ட தேர்களும், அளவின்றிப் புறப்பட்ட இரத்த வெள்ளத்தில் இழுப்புண்டனவே அன்றித் தாமாகச் செல்லும் ஆற்றலை இழந்தன.

இரத்த வெள்ளத்தில் மிதக்கின்ற தலைகள், பேய் கணங்கள் நிணக் கூழை முகக்கும் அகப்பையை ஒத்துக் காணப்பட்டன.

இலக்குவனது கொடிய அம்புகள், ஆனைகளின் நெற்றிகளில் மாறி மாறித் தாக்குவதால், அங்குசத்திற்கு அடங்காது, பாகர்களை நீக்கி, குரங்குச் சேனைக்குள் கரிய மேகங்களைப் போல் புகுந்தன.

அம்புகள் விரைந்து சென்று குதிரைகளின் குழம்புகளைக் குடைந்தன. வீரர்களின் வலிமையைக் குடைந்தன. நீண்ட பெரிய தேர்களைக் குடைந்தன.

அரக்கர்களின் நிலை

அரக்கர்கள், இரக்கம் இல்லாதவர்களாய் தர்மத்தோடு மாறுபட்டவர்களாக இருந்தாலும், அவர்களின் வீரம் கருதி, சுவர்க்கம் புகுகின்ற அரக்கர்களின் உடம்பை விண்ணுலகத்து அரம்பை மாதர் விரும்பித் தழுவினர்.

"அரக்கர் ஆக்கையை
அரம்பையர் தழுவினர் விரும்ப"

இலக்குவன் அம்பு, அரக்கர்களின் இன்னுயிர் குடித்து மீண்டது. அரக்கர்கள் வீர சுவர்க்கம் அடைந்தனர். அரக்கர்களின் கைகளை அறுத்தன. தலைகளைத் துணித்தன. கால்களை முறித்தன. தோள்களைச் சரித்தன.

"சிலவரைக் கரம், சிலவரைச்செவி, சிலர்நாசி
சிலவரைக் கழல், சிலவரைக்கண், கொளும் செயலால்"

இலக்குவன் அம்புகள் தைப்பதால் அரக்கர்கள் பயந்து ஓடினர்.

இலக்குவனின் வில்லாண்மையைக் கும்பகர்ணன் புகழ்தல்

போரில் இறந்த அரக்கர்களின் பெருக்கத்தையும், இலக்குவனின் வில்லாண்மையும் நோக்கிய கும்பகர்ணன், திரிபுரம் எரித்த சிவனும், இந்த இலக்குவனும் ஒரு தன்மையரான வில்லாளர்கள் என ஆயிரம் முறை புகழ்ந்து சொன்னான்.

"திரிபுரம் செற்ற தேவனும் இவனுமே செருவின்
ஒரு விலாளர், என்று ஆயிரம் கால் எடுத்து உரைத்தான்"

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளின் வில்வீரம் போன்றது எனப் புகழ்ந்தான்.

கும்பகர்ணன் போருக்கு வருதல்

திசைகள் தோறும் செலுத்தக் கூடியதும், வாயு வேகத்தினும் மன வேகத்தினும் மிக்க வேகமுடையதும், கொடிய சிங்கம் பூட்டப்பட்டதும், பொன்மயமான வடமேருமலை போன்றதுமான தேரை ஓட்டிக் கொண்டு இலக்குவன் முன் கும்பகர்ணன் வந்தான்.

"அடபொன் வட பெருங்கிரி பொருவு
தேர் ஓட்டினன் வந்தான்"

போருக்கு வந்தவனைக் கண்ட அனுமன் ஊர்தியின்றிப் பொருகின்ற போர் ஒப்புமையாகாது என எண்ணி இலக்குவனை அணுகி இளைய வள்ளலே! என் தோள் மேல் ஏறுக என வேண்டினான்.

"கிளை கொளாது இகல் என்று
எண்ணி மாருதி கிடைத்தான்
இளைய வள்ளலே! ஏறுதி
தோள்மிசை என்றான்"

இளஞ்சிங்கம் இலக்குவன் அனுமன் தோள்மீது ஏறினான். வானவர் வாழ்த்தினர். வானரம் ஆர்த்தது. அனுமனுடைய தடந்தோள், பரிகள் பூண்ட விரைவினையுடைய தேரினும் பெரியதாய் பரவித் தோன்றியது.

"நூறு பத்துடைப் பத்தியின்
நொறில் பரி பூண்ட
ஆறு தேரினும் அகன்றது
அவ்வனுமன் தன் தடந்தோள்"

அனுமனது தடந்தோள் மேல் இலக்குவன் அமர்ந்த தோற்றம் கயிலாய மலைமேல் அமர்ந்தது போன்று காட்சியளித்தது.

கும்பகர்ணன் – இலக்குவன் போர்

போருக்குத் தயாரான இலக்குவனைக் கண்ட கும்பகர்ணன், உயர்ந்த மேரு மலைக்கு ஒப்பான கட்டமைந்த வில்லினை, வான வில்லும் நாணுமாறு வளைத்தான்.

"வீங்கு தோள் வலிக்கு ஏய்து
விசும்பில் வில் கொள்க

வாங்கினான் நெடு வடவரை
புரைவது ஓர் வரிவில்”

வில்லை வளைத்து, நாணேற்றிய கும்பகர்ணன், இலக்குவனை நோக்கி நீ இராமன் தம்பி, நான் இராவணன் தம்பி நாம் இருவரும் போர் செய்வதற்காக நின்றிருக்கின்றோம். நமது போரைக் காண தேவர்கள் வந்துள்ளனர்.

பழமையான போர் முறைப்படி, நம் வலிமைக்கு உரிய வீர வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு போர் செய்வோம்;

பெய்தவத்தின் நல்வினையால் ஒரு பெண் எங்களுடன் பிறந்தாள். தவறு ஒன்றும் இல்லாதவள். அத்தகையவளின் மூக்கை அறுத்து கொன்றவனே! அவளைத் தொட்டு இழுத்த உன் கையைக் கொய்து தரையிடத்துக் ‘கிடத்தப் போகின்றேன்” காத்துக் கொள்;

“பெய் தவத்தின் ஓர் பெண் கொடி
எம்முடன் பிறந்தாள்
செய்த குற்றம் ஒன்று இல்லவள்
நாசி வெஞ்சினத்தால்
கொய்த கொற்றவ! மற்று அவள்
கூந்தல் தொட்டு ஈர்த்த
கை தலத்திடைக் கிடத்துவென்;
‘காக்குதி’ என்றான்”

முன்னையைப் புண்ணியத்தின் பிரதிபலிப்பாகத் தோன்றியவள். உடன் பிறந்த தங்கை. எனவே தான் சூர்ப்பணகையின் மூக்கறுத்த குற்றச் செயல் முதற்க்கண் நினைவுக்கு வருகிறது. ஒரு பெண்ணின் மூக்கை அறுத்து அவமானப்படுத்துவது குற்றம். எனவே என் தங்கையின் கூந்தல் தொட்ட கையைக் களத்திடை வீழ்த்துவேன் என வீரமொழி பகர்கின்றான்.

இருளை ஒத்த நிறத்தவனாகிய கும்பகர்ணன், இனையன சொல்லக் கேட்ட இலக்குவன். உனக்கு வில்லினால் மறுமொழி சொல்வதன்றி, சொல்லினால் அன்று எனச் சொன்னான்.

“வில்லினால் சொல்லின் அல்லது
வெந்திறல் வென்கச்
சொல்லினால் சொல்க சுற்றிலம்”

மல்லினால் செய்த தோளையுடைய இலக்குவன், அல்லினால் செய்த நிறத்தவனுக்கு செயலினால் வீரத்தை உணர்த்துமாறு, வெறும் சொல்லினால் உணர்த்துவது வீண் எனச் சொன்னான்.

இருவரும் போரிடுதல்

இருவரும் போரிட நெருங்கினர். கும்பகர்ணன் விட்ட அம்புகள் வானகம் பிளந்தது. மலைகள் பிளந்தன. நிலம் இரண்டாகக் கிழிந்தது எனத் தேவர்கள் கலங்கினர்.

"விண் இரண்டு கூறு ஆயது
பிளந்தது வெற்பு;
மண் இரண்டு உறக் கிழிந்தது;
என்று இமையவர் மறுக;
கண் இரண்டினும் தீ உகக்
கதிர் முகப் பகழி
எண் இரண்டினோடு இரண்டு ஒரு
தொடை தொடுத்துவிட்டான்"

அவன் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகள் விண்ணோரை அச்சங் கொள்ளச் செய்தது.

திசைதோறும் அம்பின் மழையாய் எரிந்து செல்வதைப் பார்த்த இலக்குவன் அறிந்து, தம்மிடமுள்ள ஒரு தெய்வத் தன்மையுடைய அம்பை ஏவ, அவ்வம்பு ஆயிரம் உருவங்களையுடைய கொடிய அம்பை அரிந்து வீழ்த்தியது.

திரணெழுந்து, செரித்து நோக்கிய கும்பகர்ணன், பன்னிரெண்டு வெங்கணைகளை அனுமன் மேல் செலுத்தினான். அவ்வம்புகள் ஒரு நொடிப் பொழுதில் திசைகளையும், விண்ணையும் மறைத்து நின்றன.

விண்ணையும், திசைகளையும் மறைத்து நின்ற அவனது அம்புகளை, தன் அம்புகளால் விலக்கிய இலக்குவன், இடந்தோறும், இடந்தோறும் நின்று, தேரைச் சுமக்கின்ற ஆனை (வெங்கரி) குதிரை (பரி) ஆளி, சிங்கம் போன்றவைகளை அம்புகளால் அறுத்துக் கூறுபடுத்தினான்.

அவன் ஏறி வந்த தேர் அழிந்தது. தேர்களை நடத்தும் பாகர்கள் அழித்தார்கள். மேகக் கூட்டங்களுக்கிடையில் நிமிர்ந்து தோன்றிய பெரிய வானவில் அமிழ்ந்தது போல, அவன் கையிலிருந்த பெரிய வில்லும் அறுந்தது. அப்போரின் தன்மையைக் கண்ட வானவர்கள் கும்பகர்ணனின் தேரில் பூட்டியிருந்த ஆனை, ஆளி, குதிரை, சிங்கம், பூதம் ஆகியவைகளை அம்பு எய்துதான் கொன்றானா? அல்லது சிறந்த மந்திரத்தைச் சொல்லிக் கொன்றானா? என வியந்தனர்.

தேரொடு வில்லும் இழந்த கும்பகர்ணன் சினம் கொண்டு இந்த 'இலக்குவன் உயிரைக் குடிப்பேன்' எனவுரைத்து மூவுலகங்களையும் வென்றமைக்கு அடையாளமான மும்முனைகளையுடைய ஒளி பொருந்திய சூலப்படையைக் கையிற் கொண்டான்.

"மூச்சிகையாய்த் தோன்றும்
வெஞ்சுடர்ச் சூல
வெங் கூற்றினைத் தொட்டான்"

போர்க்களக் காட்சி

அனுமன் தோளின்று தரையில் குதித்த இலக்குவனை, அரக்கர் படை சுற்றி வளைத்து ஆரவாரித்து, அரக்கர் சேனையைக் கண்ட வானர சேனை அச்சம் கொண்டு ஓடின. இலக்குவன் மட்டும் தனித்து நின்று போர் செய்தான். இலக்குவன் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளால் அரக்கர்கள் தலைகள் அறுத்து வீழ்ந்தன. அறுபட்டு வீழ்ந்த தலைகள் மலைகளைக் குவித்து, ஓடுகின்ற இரத்த வெள்ளத்தை தடுக்கும் அணைகள் எனக் காட்சியளித்தன.

ஆனைகளின் கைகளும், குதிரைகளின் கால்களும் தேர்களின் சக்கரங்களும், அரக்கர்களின் தலைகளும் சொரியும் இரத்த நீர் உள்ள இடந்தொறும். இடந்தொறும் கழித்துக் கொண்டிருக்க, இரத்த வெள்ளம் பிணங்களாகிய கரையைக் கடக்கவியலாது தடைபட்டு நின்றன.

வெற்றி பொருந்திய அரக்கர்களின் படைக்கலங்களாகிய வாள், இரும்புலக்கை, தண்டாயுதம், வேல், அம்பு, மழு, வச்சிரப்படை போன்றவைகளை இலக்குவனது அம்புகள் தொடர்ந்து சென்று துண்டு துண்டாக்கின. துண்டான படைக்கலத் துண்டங்கள் போர்க்களத்தில் பரவிக் குவிந்து கிடந்தன.

அரக்கர்கள் அணிந்திருந்த குண்டலங்களும், முடியும், முத்தாரங்களும், வெண்தாமரைகள், நெடுங்கொடிகள், பெருங்கொடிகள், மார்பினின்று பெயர்த்த சிலைகள் (வில்) கேடகங்கள், பீலிக் குடைகள், அம்புகள், போன்றவைகளை கரைகளில் நிற்கின்ற பேய்க் கூட்டங்கள், இரத்த வெள்ளத்தில் நீந்திச் சென்று வாரிக் குவித்தன.

கும்பகர்ணன் – சுக்ரீவன் போர்

ஈண்டு ஒரு புறத்தில் இக்கொடிய போர் நடந்து கொண்டிருக்க அண்டு, நீண்ட வெள் எயிற்று அரக்கன் (கும்ப) சுக்ரீவனோடு போர் செய்யத் தொடங்கினான். இப்போர் காணத்தக்கது என நினைத்து தேவர்கள் கூட்டம் கூடிப் பார்த்தனர்.

நெருப்புப் பொறிகள் சிந்துகின்ற கண்ணினன்; புகை கக்குகின்ற வாயினன்; செறிந்தெழுகின்ற கதிரவன் சிறுவன் சுக்ரீவன், விண்ணளாவிய மலை ஒன்றை ஏந்தி, கும்பகர்ணனின் திண்ணிய தோள்கள் 'முறிந்தன' எனக் கண்டோர் கருதுமாறு வீசினான்.

'பொறிந் தெழு கண்ணினன்;
புகையும் வாயினன்
செறிந் தெழு கதிரவன்
சிறுவன் சீறினான்"

சுக்ரீவன் எறியப்பட்ட மலையினின்று வீழ்ந்த வெங்களிறும், அரக்கர் சேனையிலிருந்த வெம்மலை வேழமும் போர் செய்தன. அம்மலை மற்ற மலைகளினும் பெரிது ஆகும். இம்மலையினின்று இரங்கிய மலைப்பாம்புகள், அரக்கர்களின் ஆனைகளின் உடல் அனுமாறு கவ்வின. பெரிய மலையைத் தன் உள்ளங்கையால்

ஏற்ற கும்பகர்ணனை அவுணர்கள் வாழ்த்தி ஆரவாரித்தனர். மலையை உள்ளங்கையில் ஏந்தி பிசைந்து துகளாக்கித் திரும்பிச் 'செல்க' எனத் தூற்றிவிட்டான்.

"அடா, நீ ஆற்றிய குன்றம்
'என்று' அளவு இல் ஆற்றலான்
நீற்றினும் நுணுகுறப் பிசைத்து
'நீங்கு' எனத் தூற்றினான்'

கும்பகர்ணனின் பேராற்றலைக் கண்டு விண்ணவர் அச்சம் கொண்டனர்.

கும்பகர்ணன் சூலப்படையை எறிதல்

சோர்விலாச் செல்வன் (கும்ப) தவத்தின் மிக்க முனிவர் தம் சாபச் சொற்கள் போலத் தப்பாது பாய்கின்ற சாலப் படையை எடுத்து 'கொல்' என்று ஏவினான்.

'கொல்' என எறிந்தனன்
குறைவு இல் நோன்பினோர்
சொல் எனப் பிழைப்பு இலாச் சூலம்'

சுக்ரீவன் மேல் ஏவிய சூலம். "இறந்தான்" 'இறந்தான்' எனப் பார்த்தவர் வாய்விட்டு அலறும்படி விசும்பில் உயர்ந்து சென்றது. விண்ணில் உயர்ந்து சென்ற சூலத்தை அனுமன் எட்டிப் பிடித்து ஓடித்துப் போட்டான்.

"பட்டனன் பட்டனன்' என்று பார்த்தவர்
விட்டு உலம்பிட நெடு விசும்பில் சேரலும்
எட்டினன் அது பிடித்து
இறுத்து நீக்கினான்
ஒட்டுமோ மாருதி அறத்தை ஓம்புவான்"

சூலம் ஒடிந்ததின் பேரொலி

சுக்ரீவனை நாடி உயிர் குடிக்க வந்த சூலத்தை அனுமன் பற்றி ஒடித்தான்.

"சித்திர வனமுலை சீதை கேள்வனார்
அத்திரு மிதிலையில் அறிவு முற்றிய
பித்தன் வெஞ்சிலையின்ன இறுத்தபேர் ஒலி
ஒத்தது, சூலம் அன்று இற்ற ஓசையே"

சூலம் ஒடிந்த ஓசையானது, சந்தனக் கோலம் பூசப்பட்ட கொங்கைகளையுடைய சீதையின் கணவனான இராமன் அழகிய மிதிலையில், முதிர்ந்த அறிவினையுடைய பித்தன் என்று பெயர் பெற்ற சிவபெருமானின் கொடிய வில்லை இராமன் ஒடித்த

பொழுது உண்டான ஓசையைப் போன்று இருந்தது. தக்கனது யாகத்தை அழிக்க வேண்டி எடுத்த வில்லை, சினமாறி சிவன் மிதிலை மன்னர்பால் மிதித்துச் சென்றான். அந்த வில்லை இராமன் ஒடித்த ஞான்று எழுந்த பேரொலியை ஒத்து விளங்கியது.

கும்பகர்ணன் சுக்ரீவனைத் தாக்குதல்

'உன்னை எதிர்த்து இனி போர் செய்யேன்' என அனுமன் பெயர்ந்து போயினான். அனுமன் பெயர்ந்தான். அவ்விடத்தில் நின்ற சுக்ரீவன், கும்பகர்ணனின் முன் பாய்ந்து, அவனைப் பற்றிக் கொண்டு தன் கொடிய கைகளால் தாக்கினான். தாக்கிய சுக்ரீவனை, நின் ஆண்மை நன்று ஆயினும், இன்றோடு உன் செருக்கு அடங்கிவிடும் என்றவனாய், நீங்கிச் செல்லாவண்ணம் சுக்ரீவனைப் பற்றி நெருக்கினான். கும்பகர்ணனும், சுக்ரீவனும் சுழன்று போர் செய்தனர். சுழலும் வேகத்தில் கும்கர்ணனா? சுக்ரீவனா எனத் தேவர்களைலும் அறிய முடியவில்லை. சாரிகை திரிந்து இருவரும் போர் செய்தார்கள். இடிகள் எறிந்தன. இருவர் வாய்களும் இரத்த நீரைச் சொறிந்தன. ஆனால் இருவருந் சோர்வடையாது போர் செய்தார்கள். (சாரிகை என்பது சுழற்சி)

ஒருவரை ஒருவர் அதட்டினர். உடம்பினை முறுக்கினர். கும்பகர்ணன் தன் நீண்ட வலிய தோள்களால் சுக்ரீவனை வலைத்துக் கட்டி, அவன் பொறுக்க முடியாதபடி இறுக்கினான். இறுக்கத்தினால் சுக்ரீவன் உணர்விழந்தான்.

"உறுக்கினர் ஒருவரை ஒருவர்
உற்று இகல் முறுக்கினர்
அரக்கன் மொய்ம்பினால்
பொறுக்கிலா வகை நெடும்
புயங்களால் பிணித்து இறுக்கின்ன,
இவன் சிறிது உணர்வும் எஞ்சினான்"

இறுகத்தால் உணர்விழந்த சுக்ரீவனைத் தூக்கிக் கொண்டு இலங்கைக்குப் போனான். வானரப்படை இச் செயலைக் கண்டு அஞ்சி ஒடுங்கியது.

சேயகளைக காகக அலலும பகலும கூவிக் கொண்டிருந்த தாய்ப் பறவையை வல்லூறு எடுத்துக் கொண்டு போய்விடக் கதறிய குஞ்சுகள் போல, வானரக் கூட்டம் துன்ப ஆரவாரம் செய்தன. வானரர்கள் பார்ப்புகள் (குஞ்சு) போன்றனர். சுக்ரீவன் தாய்ப் பறவை போன்றவன். அவன் சுக்ரீவனைத் தூக்கிச் சென்றது கண்டு வானவர் நடுங்கினர். வானரத் தலைவர்களின் கண்கள் இடுங்கின. நெஞ்சங்கள் எரிந்தன. 'மடங்கின வரம் உயிர்ப்பு' என்னும்படி மூர்ச்சையடைந்தனர்.

சுக்ரீவனை எடுத்துச் செல்பவனாகிய கும்பகர்ணன் எனனும பாம்பு போல காட்சியளித்தான்.

அழுங்கல் இல் கோன் முகத்து
-அரவம் ஆயினான்

சூரியனுடைய மகனாகிய சுக்ரீவன், உலக மக்கள் கலங்கும்படி விழுங்கப்பட்ட சந்திரனைப் போல் மெலிந்து காணப்பட்டான்.

"எழும்கதிர் இரவிதன் புதல்வன்
எண்ணுற விழுங்கிய மதி என
மெலிந்து தோன்றினான்"

வெண்ணிறமுள்ள சுக்ரீவனை எடுத்துச் செல்லும் கரியவனான கும்பகர்ணன், சந்திரனை விழுங்கும் கரும்பாம்பாகிய இராகுவுக்கு உவமையாக்கப்பட்டான். கும்பகர்ணனது பிடிப்புக்குள் மயங்கிக் கிடங்கும் சுக்ரீவன். இராகுவால் ஒளி இழக்கும் சந்திரனுக்கு உவமையாக்கப்பட்டான். கும்பகர்ணனது கரிய மேனியில் மறைக்கப்பட்டுள்ளதால் கருமேகம் புகுந்த சந்திரனுக்கு உவகையாக்கப்பட்டான்.

கருங்கடல் கடந்த காலம் (அனுமன்) எமன் வாழ்கின்ற இருகைகளையும் பிசைந்து கொண்டு பின் சென்றான்.

"கருங்கடல் கடந்த அக்காலன்
காலன் வாழ், பெருங்கரம் பிசைந்து
அவன் பின்பு சென்றனன்"

காய்கதிர்ச் செல்வன் மகனாகிய சுக்ரீவனைக் கும்பகர்ணன் தூக்கிக் கொண்டு போன செய்தியை, ஆயிரம் வானர வீரர்கள் இராமன் அடிபணிந்து

"காய்கதிர்ச் செல்வனைப் பிணித்த கையினன்
போயினன் அரக்கன்"

எனப் புகன்றனர்.

"காய்கதிர்ச் செல்வனைக் கவர்ந்து போயினான்" எனக் கேட்ட கார்முகில் மேனியன் (இராமன்) மிகுந்த சினத்தொடு விரைந்து இலங்கை மாநகரின் வாயிலை அடைந்தான்.

உடைப் பெருந்துணைவனை (சுக்ரீவன்) எடுத்துக் கொண்டு இலங்கையை அடைவானாயின் பெருங் 'கேடு வரும்' எனக் கருதிய இராமன் 'அம்புமாரி பெய்து அவன் செல்லும் வாயிலை அடைப்பேன்' எனக் கூறி ஆகாய வழிகளையும் அம்புகளால் அடைத்துவிட்டான்.

"உடைப் பெருந் துணைவனை
உயிரின் கொண்டு போய்
இடைப் பெருங் கொடி நகர்
அடையின் பெரும் பகழியின்
மாறியி தூர்த்து உற
'அடைப்பேன்' என்று அடைத்தனன்
விசும்பின் ஆறு எலாம்"

நகர வாயில்களை மட்டுமன்றி, விண்வழிகளையும் அம்புகளால் அடைத்தான். விண்வெளிகளை இராமன் அம்பு அடைத்ததினால் திசைகள் தோன்றாமல் மறைந்தன. சூரியன் கதிர்கள் வருதல் தடைப்பட்டன். விண்ணில் எவையும் செல்ல முயலவில்லை. கார்மேகம் மேல் இடம் அகன்றன. ஆகாயமே தூர்ந்து விட்டது.

விண்வெளி தூர்ந்ததால் மனத்தினும் கடுகிச் செல்லும் கும்பகர்ணன் அம்புகளால் ஆக்கப்பட்ட மதிலை நெருங்கி, அவற்றை நீக்கும் வன்மையால், இம்மதிலைச் செய்தவன் யாவன் எனத் திரும்ப நோக்கினான். தாமரைத் தடாகம் போன்று முகம், வாய், கண், கை, கால் எனப் பெயர் வழங்குமாறு மண்ணுலகம் விளங்க வந்தக் கார்முகில் மேனியானைக் கண்டனன்.

கும்பகர்ணனது வீர மொழி

இராமனைக் கண்ட கும்பகர்ணனது வாயானது கொடும் புகையைக் கக்கியது. உதடுகள் துடித்தன. புருவங்கள் ஏறின. கண்கள் தீப்பொறி உமிழ்ந்தன; இடியொலி போன்று அதட்டியதால் அருகிலிருந்த வரைகள் நொறுங்கிச் சரிந்தன.

வலி தொலைந்து மாய்ந்த கவந்தனும், பூவைக் கவர்ந்துண்ணும் இயல்புள்ள வாலி என்று எனை எண்ணி, இச்சுக்ரீவனது உயிரைக் காக்கும் பொருட்டு என்னைத் தாக்க வந்திருக்கின்றாய்! அம்பு பூட்டிய வில்லையுடையவனே! உன் தம்பி இலக்குவணனுடன் சென்று போர் செய்யவில்லை. அவனுக்கு வாகனமாய் அமைந்த அனுமனையும் வெகுளவில்லை. உன்னிடம் தோற்ற வாலியின் தம்பியாகிய சுக்ரீவனையும் கோபிக்கவில்லை. எனக்கு நிகரற்ற அவர்களோடு போர் செய்ய நான் விரும்பவில்லை.

"உம்பியை முனிந்தலேன்; அவனுக்கு ஊர்தியாம்
தும்பியை முனிந்திலேன்; தோற்ற வாலிதன்
தம்பியை முனிந்திலேன்; சமரம் தன்னில் யான்
அம்பு இயை சிலையினாய்; புகழ் அன்று ஆதலால்"

எனக்கு நிகரான உன்னோடு போர் செய்வது தான் புகழ். அதனால் தான் உன்னைத் தேடி திரிந்தேன். நீ கிடைக்காமையால் விளையாட்டாகச் செய்த போரில், உன் வானரப்படைகள் திசை கடந்து ஓடியது. உன் தம்பி வலி சாய்ந்து ஒதுங்கி நடந்தான். அனுமன் வலி சிதைந்து போனான். என்னோடு போர் செய்ய வந்த இவனை ((சுக்ரீவன்) எடுத்துக் கொண்டு எளிதாக வந்தேன்.

சுக்ரீவனைக் காப்பாற்ற நீ வந்தாய் எனின், என் பாக்கியமே உன்னை இங்கு கொண்டு வந்து சேர்த்தது என்பேன். நான் கற்ற போர் முறைகளையெல்லாம் உன்னோடு செய்து என் அண்ணன் (இராவணன்) மனத்தில் பொருந்திய காதல் நோயைத் தீர்ப்பேன். வெற்றி பொருந்தியவனே! சுக்ரீவனாகிய குரங்கை என் பிடியிலிருந்து மீட்டுக் கொள்வாயேயானால் "சீதையும் சிறையினின்றும் மீண்டனள்" என எண்ணிக் கொள். என் கைப் பிடியிலிருந்து சுக்ரீவனையும் விடுதலை செய்ய முடியாது, சீதையையும் சிறை மீட்ட முடியாது என்ற குறிப்புத் தோன்றக் கூறினான்.

இராமனின் வஞ்சின மொழி

கும்பகர்ணனின் கோப மொழியைக் கேட்ட இராமன் என் துணை தூக்கியே உன் கோள்களை அரிந்து துணிக்கவில்லையாயின், உனக்குத் தோற்றவனாவேன். இனி இவ்வில்லையும் பிடிக்க மாட்டேன்.

"இன் துணை ஒருவனை எடுத்த தோள் எனும்
குன்றினை அரிந்து யான் குறைக்கிலேன் எனின்
பின்றி னென் உனக்கு; 'வில் பிடிக்கிலேன்' என்றான்"

மேற்கொண்ட வஞ்சினத்தை முடிக்காத போது, வீரற்கு வில்லும் மிகை என்பது இராமனின் கருத்து.

கும்பகரணன், தன் கைகளால் அம்பு மதிலைக் கலைக்க முற்படும்போது, கூரிய முனையோடு விளங்கும் அம்புகள் இரண்டினை அகன்ற கும்பகர்ணனின் நெற்றியில் எய்தினான்.

அம்புபட்ட கும்பகர்ணனின் தோற்றம்

இராமன் விட்ட அம்பு, கும்பகர்ணனின் நெற்றியில் புகுந்ததால் இரத்தமாகிய செவ்வானம் சுற்றிப் படர்ந்தது. நெற்றியில் குத்திட்ட நீண்ட அம்புகள் ஒளிவீச நின்ற கும்பகர்ணன் உதய மலையை ஒத்துத் தோன்றினான். இது காறும் வலிய திறமையால் தோல்வி காணாத்வனாகிய கும்பகர்ணன் மயக்கம் அடைந்தான்.

சுக்ரீவன் மயக்கம் தெளிதல்

அம்புபட்ட கும்பகர்ணனின் நெற்றியிலிருந்து அருவி என குருதி கொட்டியது. குன்றின் வீழ் அருவி எனக் குதித்துக் கொண்டு குரங்கு நின்ற குருதி நீர் கும்பகர்ணனின் கையில் மயங்கிக் கிடக்கின்ற சுக்ரீவனின் முகத்தில் சிந்தியதால் அவன் உறக்கத்தினின்று எழுந்தாற்போல் எழுந்தான்.

"இன்துயில் உணர்ந்தென
உணர்ச்சி எய்தினான்: (சுக்)
என் திறல் தோற்றிலான்:
மயக்கம் எய்தினான்" (கும்ப)

குருதி வெளிப்பட்டதால் கும்பகர்ணன் மயக்கம் அடைந்தான். குருதி நீர் மயங்கிக் கிடந்த சுக்ரீவனின் முகத்தில் அருவி என வீழ்ந்ததால் மயக்கம் தெளிந்தான். கும்பகர்ணனது நெற்றியில் பதிந்துள்ள அம்புகள் இராமன் கையதுதான் என எண்ணிய சுக்ரீவன். இராமனை நினைந்து கை தொழுது வாழ்த்தினான்.

சுற்றுற நோக்கிய சுக்ரீவன், நாயகன் இராமனைக் கண்டான். கண்டவன் நாணம் கொண்டான். வெறுமனே உறவிடம் சேர விரும்பாத சுக்ரீவன், கும்பகர்ணனின்

மூக்கையும், காதையும் அடியோடு கவர்ந்து கொண்டு உறவினரை (இராம இலக்குவரை) அடைந்தான்.

"விண்டவன் நாசியும் செவியும் வேரொடும்
கொண்டனன்: எழுந்து போய் தமரைக் கூடினான்"

பகைவனுடைய கையில் அகப்பட்ட நிலையில், தன் தலைவனைக் காண நேர்ந்தமைக்கு சுக்ரீவன் நாணம் கொண்டான்.

நாசியையும், செவியையும் இழந்த கும்பகர்ணனைக் கண்டு வானரங்கள் ஆரவாரம் செய்து மகிழ்ச்சியடைந்தன. மேகங்கள் முழங்கி மழை பொழிந்தன. தானம், தவம் இரண்டும் ஆரவாரித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தின. கடலும், மழையும் மகிழ்ச்சியைக் கொண்டாடின. தேவர்களோடு சேர்ந்து தர்மமும் ஆரவாரித்தது.

"வானரம் ஆர்த்தன; மழையும் ஆர்த்தன;
தானமும் ஆர்த்தன; தவமும் ஆர்த்தன;
மீன் நரல் வேலையும் வெற்பும் ஆர்த்தன;
வானவரோடு நின்று அறமும் ஆர்த்ததே"

அதர்மம் அழிந்தது என தர்மங்களின் சாயல்கள் ஆரவாரம் செய்து மகிழ்ந்தன. வலிமை பொருந்திய கும்பகர்ணனது கொடுமையான கையிலிருந்து விடுபட்ட சுக்ரீவனைக் கண்ட இராமன் சிறையினின்று சீதை மீண்டாள் என மகிழ்ந்து மனத்துயரம் நீங்கினான்.

கும்பகர்ணன் உணர்வு பெறுதல்

குருதி வெள்ளத்தால் மூடப்பட்ட கும்பகர்ணன், தன் அங்கையிலிருந்து வானரத் தலைவனான சுக்ரீவன் தழுவிச் சென்றான் என்ற உண்மையையும், தனது நாசியும், செவியும் இடம் மாறி போய்விட்டன என்பதையும் உணர்ந்தான். தலையிலிருந்து வீழ்கின்ற இரத்த வெள்ளத்தில் மூழ்கிய கும்பகர்ணன் காவிக் கல்லால் ஆகிய பெரிய மலையை ஒத்துத் தோன்றினான். அவன் நெற்றியிலிருந்து இரங்குகின்ற இரத்தம் வாடைக்காற்றோடு இரங்குகின்ற அருவியை ஒத்தன. பெருமூச்சுடன் இரத்த ஆறு ஒழுக நின்றான். அறிவுடைய ஆண்மை மிக்க கும்பகர்ணன் அறிவில்லாத பெண்ணின் தன்மையை ஒத்தவனானான்.

கும்பகர்ணன் தனக்கு நேர்ந்த அவமானத்தை எண்ணிப் பகைவர்களை ஏசிக் கொண்டு எழுவான். வானவர்களைப் பார்ப்பான். பின்பு தன் முகத்தினின்று அகன்ற நாசியை பார்ப்பான். நேற்றைக்கும், இன்றைக்கும் உள்ள வேறுபாட்டை எண்ணிப் பார்ப்பான். மண்ணினைப் பார்ப்பான். என் முகம் காண்பதற்கு முன்னம் அவன் முகத்தை அப்படி ஆக்க வேண்டும் என எண்ணியவனாய், கேடகத்தையும், வாளினையும் கைக் கொண்டான்.

கும்பகர்ணன் கேடகத்தை வீசினான். விண்ணிலுள்ள நட்சத்திரங்களெல்லாம் கூசின. தேவர்கள் குடல் குழம்பப் பெற்றார்கள். காய்ச்சின அரக்கன் கோபம் (கும்ப) கொண்ட பொழுது, அவன் நாசியும், செவியும் வெங்குருதி சிந்தின.

"வீரிணன் கேடகம், விசும்பின் மீன் எலாம்
கூசின; அமரரும் குடர் குழம்பினார்"

இரண்டாயிரம் பேய்கள் சுமந்து செல்லக் கூடிய எரிகின்ற வயிர வாளை ஏந்திய கும்பகரணன், ஆயிரம் பேய்கள் சுமந்து வந்தளித்த கேடகத்தை இடத்து வாங்கினான்.

கும்பகர்ணன் போர் ஆரவாரம்

மலை போன்ற தோற்றமுடைய கும்பகர்ணன், ஒளி வீசுகின்ற கைவாளைச் சுழற்றி வீசினான். விண்ணின் நட்சத்திரங்கள் எல்லாம் மண்ணில் உதிர்ந்தன. மண்ணுலகத்தை ஆதிசேடன் தலையொடு அதிரச் செய்தான். ஆயிரம் கதிர்களையுடைய சூரியன் வலம் வருகின்ற வடமேருமலையை போன்ற காட்சியனாகத் தோன்றினான்.

கும்பகர்ணன் வீசிய கேடகம், குரங்குக் கூட்டங்களைத் திசைதோறும் கொண்டு தள்ளின.

"தோளிடைத் தூக்கவும் துகைக்கவும் கடர்
வேலுடைக் கூற்றினால் துணிய வீசவும்
காலுடைக் கடலெனச் சிந்தி கைகெட
வாலுடை நெடும்படை இரிந்து மாய்ந்ததால்"

வீரிய கேடகமும், விளங்கிய வாளும், வானரப் படைகளைச் சிதறிச் செயலிழக்க வைத்தன. வீசிய வாளால் வானரப் படைகள் கூறுபட்டன. குருதி ஆறாகப் பெருகியது.

இராமன் – கும்பகர்ணன் போர்

அண்ணல் இராமன் கும்பகர்ணனது திண்ணிய வலிமையையும் வெற்றியையும் சிந்தித்து, 'எமனை இன்று இவன் கண்ணில் நிறுத்துவேன்' என்ற உறுதியான கொள்கை மனத்தில் நிலைபெறக் கும்பகர்ணனை நெருங்கினான்.

"நண்ணினன் நடந்து எதிர்
நமனை இன்று இவன்
கண்ணிடை நிறுத்துவேன்"

"இன்று இவனை எமனுலகத்திற்கு அனுப்புவேன்" என்பதை அண்ணல் இராமன் நினைந்து, பதிமூன்று அம்புகளைக் கும்பகர்ணன் மேல் ஏவினான். அவ்வம்புகளைக் கும்பகர்ணன் தன் வாளினால் பருத்து உகுத்த இறகுகளைப் போல் தூளாக்கினான்.

ஆடவர்க்கரசரான இராமன், அவ்வழி தொடர்ந்து கோடை காலத்து சூரியன் போல் கொடுமை தரக்கூடிய கூரிய அம்புகளைத் தொடர்ந்து செலுத்தினான். தொடர்ந்து வந்த அம்புகளையும், கும்பகர்ணன் தன் கேடகத்தால் செயலிழக்கச் செய்தான்.

செங்கணன் இராமன், சிரித்துச் செருகிய பிறிதோர் அம்ப கும்பகர்ணனுடைய கை வாளாகிய நாகத்தை அறுத்து வீழ்த்தியது. ஒடிந்துவிட்டதாகிய வாள், இன்னும் ஒடிந்திலது எனக் கண்டோர். கருதுமாறு வாளைக் கையில் ஏந்தியவனாய் 'முடித்து விட்டேன் முடித்து விட்டேன்' என்று கூறிக் மகாண்டு முன்னே வந்து நின்றான்.

"அற்றது தடக்கை வாள் அற்றது இல்' என
மற்ற ஒரு வயிரவாள் கடிதின் வாங்கினான்
'முற்றினன் முற்றினன்' என்று, முந்து வந்து
உற்றனன் — ஊழித்தீ அவிய ஊதுவான்"

இராமன் அம்பால் கும்பகர்ணனின் வாள் அற்றது. இமைப்பொழுதில் மற்றொரு வாளை விரைந்து வாங்கினான். எல்லோரையும் முடித்துவிட்டேன் என முன் வந்தான்.

முற்றினன் என முன் வந்த கும்பகர்ணனின் நீண்ட வாளை முறியச் செய்த பின்பு, பொன் கொண்டு இழைத்த கேடகத்தைப் புரளச் செய்தான். கும்பகர்ணனின் மார்பில் பொருந்திய நல் நெடுங் கவசத்தின் கண் மின்னலை ஒக்கின்ற கொடிய அம்பைப் படரவிட்டான்.

இந்தச் சமயத்தில், இராவணன் அனுப்பிய படை நெருங்கி வந்தது. இப்படையைக் கண்டு இந்திரன் தன் உறவினர்களோடு ஓடினான். கடல் தன் நிலை குலைந்தது. தசமுகன் (இராவணன்) விடுத்த படை கண்டோர் நடுங்க நெருங்கி வந்தது. விற்போரில் ஒப்பற்றவனாகிய இராமன், இக்கும்பகர்ணனைக் கொல்வதற்கு ஏற்ற தருணம் இதுவே என எண்ணினான்.

குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை, மதம் பொருந்திய ஆனைப்படை ஆகிய நான்கு வகைப்படைகளும், பக்கந்தோறும் சூழ்ந்து கும்பகர்ணனைக் காத்து நின்றது. திருமாலின் அம்சமான இராமனும் போருக்கு வருக, எனக் கடிது கூவினான். நான்கு வகை படைகளும், கடல் என நெருங்கி வர, ஊழியின் ஒருவனும்(இராமன்) எதிர் சென்று ஊன்றினான். அரக்கர்கள் படையின் முன்னே, கும்பகர்ணன் சூலம் கொண்டு தோன்றினான்.

போர்க்களக் காட்சி

கடல் எனத் திரண்ட அரக்கர் சேனையை இராமன் வில் கொண்டு தாக்கினான். தலைகளை அறுத்து உடல்களை துடிக்கவிட்டான். மரங்கள் கிடந்தன போன்று தலைகள் கிடந்தன. மலைகளின் குவியல் என உடல்கள் குவிந்தன. கரங்கள் கிடந்தன. நிலத்தைக் கவ்விக் கொண்டு தலைகள் கிடந்தன. போர்களத்தில் உயிர் கொண்டு திரிபவரைக் கண்டிலராயினர்.

படைக் கலங்களின் அழிவு

அரக்கர்களின் படைக்கலங்களில் சிதையாதிருந்த படைக்கலங்கள் எதுவும் இல்லை இராமன் எய்த அம்புகளால் அரக்கர்களின் படைக்கலங்கள் இறுதலும், முறிதலும், துறுதலும், துணிதலும், பொடியாதலும், நூறாகி அறுதலும் உடையனவாயின. ஒடியாத படைக்கலங்களை இமையோரும் கண்டிலர். ஒடிந்து நொறுங்கிய படைக் கருவிகள், போர்க்களத்தை மேடாக்கின. படைக்கலங்கள் இரத்த வெள்ளத்தில் இழுப்புண்டு அலைந்தன. படைக்கலங்களால் போர்களமே பெரும் திரடாக மாறியது.

ஆனைகளின் அழிவு

மதம் பொருந்திய யானைகளின் மத்தங்களில் இராமன் எய்த அம்புகள் புகுந்ததால் தம் பாகர்களைக் கடந்து ஓடின. ஓடிய ஆனைகள் நிலத்தை குடைந்து கொண்டு போகும்படி இரத்தத்தோடு குடல் சோர விழுந்து கிடந்தன. சில யானைகள் மருப்புக்களையும் இழந்தது. உடம்பு துண்டாக்கப்பட்டுக் கிடந்தன. மருப்புக்களை இழந்தனவும் துதிக்கைகளை இழந்தனவும் இராமன் அம்புகளால் துண்டதுண்டமாகி இறந்து கிடந்த ஆனைகளைத் தவிர நடந்து செல்லும் ஆனைகளை இமையோரும் காண்கிலர் ஆனைப்படைகள் அனைத்தும் அழிந்துவிட்டன..

தேர்களின் அழிவு

அதிர்குரல் மணித்தேர்கள்' தேர்ப்பாகரை இழந்தன தேர்களில் கட்டப்பட்டிருந்த வானளாவிய கொடிகள் அறுந்து ஒழிந்தன ஒளி வீசுகின்ற கூரிய அம்புகள் (வெயில் உமிழ் அயில் அம்பு) குத்திப் பிளந்த குதிரைகள் உயிரின்றிக் கிடந்தன. தேர்கள் அச்சாணிகளை இழந்ததும் மூட்டு வாய்கள் கழன்றும் ஓடும் நிலைகள் இழந்து அம்புபட்ட உடம்புகளிலிருந்து வெளி வந்து வெண்மையான நிணக் குழம்பிடை ஆழ்ந்து கிடந்தன. தேர்கள் வீரர்களை இழந்தும் கொடிகளை இழந்தும் குதிரைகளை இழந்தும் அச்சு பொறிகளை இழந்தும் கொழுப்பு கலந்த குருதி வெள்ளத்தில் ஆழ்ந்து கிடந்தன.

குதிரைப் படைகளின் அழிவு

அழகுமிக்க குதிரைகள் ஓடும் இயல்பை இழந்தன. (ஆடல் தீர்ந்தன) வளைகழுத்து அறுபட்டன. அதிர்கின்ற கனை குரல் அடங்கப்பெற்றன. கால்கள் துணிக்கப்பட்டன. அஞ்சாமை பொருந்திய ஆனைகளின் திரள்களால் எழுந்த பிண மலைகளால் அமைந்த வெப்பமான இரத்த நீராறுகளால் உந்தப்பட்டு ஓடுதல் அன்றி, உயிரோடு ஓடுபவைகளை காண முடியவில்லை.

'ஆடல்தீர்ந்தன: வளைகழுத்து அற்றன:
அதிர் பெருங்குரல் நீத்த
தாள் துணிந்தன தறுகண் வெங்கரி
நிரை தாங்கிய பிணத்து ஓங்கல்
கோடு அமைந்த வெங்குருதி நீர்
ஆறுகள் அழதொறும் கொணர்ந்து உந்தி,
ஓடல் அன்றி நின்னு உகழ்வன
கண்டிலர் - உருகெழு பரிஎல்லாம்'

ஆனைகளின் பிணமலையே குருதி ஆற்றுக்குக் கரையாக அமைந்தன குதிரை சேனைகள் முழுவதும் அழிக்கப்பட்டன.

காலாட்படையின் அழிவு

வெங்களத்து வந்து உற்ற அரக்கர்களை எல்லோரும் வரும்ப கூடிய விண்ணுலகத்தில் தேவர்களை கண்டனரே அன்றி. மலையினும் பெரிதாகிய தோற்றத்தையுடைய அரக்கர்களை போர்க்களத்தில் கண்டிலர் கணவர்களின் உடம்பை தேடுகின்ற அரக்கியர்களின் கூட்டத்தையே கண்டார்கள்.

உம்பரும்'
அரக்கர் வெங்களத்து வந்து உற்றாரைக்
காதல் விண்ணிடைக் கண்டனர்;
அல்லது கணவர் தம் உடல் நாடும்
மாதர் வெள்ளமே கண்டனர்;
கண்டிலர் மலையினும் பெரியாரை"

வேதநாயகன் (இராமன்) வெங்கணை, அரக்க வீரர்களை முற்றிலும் அழித்தது. அரக்க வீரர்கள் குழுமிய போர்க்களத்தில், அரக்கியர்களே காணப்பட்டனர். இராமனது அம்பினால் போர்ப்படைகள் அழிக்கப்பட்டன. அரக்கர்கள் துன்பப்பட்டனர். தேவர்கள் மகிழ்ந்தனர்.

இராமன் வாய்மொழி

இராமன் எய்த வொங்கணையால் அழந்தொழிந்த அரக்கர்களின் நடுவே எவரிடத்தும் தோல்வியுறாத கும்பகர்ணன் தனியே நின்றான். தனிப்பட்ட கும்பகர்ணனின் முகம் நோக்கி, ஒப்பற்ற தலைவன் இராமன் ஒன்று கூறலுற்றான்.

"வானொடு வந்த பெரும்படையையும் இழந்துவிட்டு, என்னெதிரில் தனியே நின்றுள்ளாய்! நீதியோன் வீடணனுடன் பிறந்தவன் ஆதலின் உன் உயிரை உனக்குக் கொடுக்கிறேன். 'திரும்பிப் போகின்றாயா? இன்று போய், நாளை வருகின்றாயா? இல்லையெனில் போர் செய்து இப்பொழுதே சாகின்றாயா?" உனக்குப் பொறுத்த மானதைப் பொருந்த ஆராய்ந்து சொல்வாயாக.

"எதியோடு எதிர் பெருந்துணை இழந்தணை:
எதிர் ஒரு தனி நின்றாய்;
நீதியோனுடன் பிறந்தனை ஆதனன்
நின் உயிர் நினக்கு ஈவேன்;
போதியோ? பின்றை வருதியோ?
அன்று எனின் போர் எரிந்து இப்போதே
சாதியோ? உனக்கு உறுவது
சொல்லுதி, சமைவுறத் தெரிந்து சும்ம!"

பெரும்படை இழந்தாய்! இன்துணை இழந்தாய்! தனியானாய்! நீதியோனுடன் பிறந்தாய்! தனியே நிற்பவனோடு வலிமை காட்டுதல் பிறந்தாய்! தனியே நிற்பவனோடு வலிமை காட்டுதல் போரறம் அன்று.

நீ! முன் செய்த தீவினை முடியவில்லை. அதனால்தான் என் கட்டளைக்கு அடிபணியாமல் எமனுடைய கட்டளைக்கு உட்பட்டு, வீடணன் அழைக்கும் பொழுது, அவனோடு வராமல் நின்றுவிட்டாய்; எனவே உன்னுடைய ஆயுட்காலத்தோடு பெறுதற்குரிய செல்வத்தையும் இழந்துவிட்டாய். பெருந்துயிலை நெடுங்காலம் செய்து, இறப்பதற்கென்றே உடன்பட்டு நின்றுவிட்டாய்! இப்பொழுது உனக்கு உறுவது ஒன்று சொல்க. என்றான்!

கும்பகர்ணன் மறுமொழி

இராமனது அருள்மொழி கேட்ட கும்பகர்ணன் நீ கூறியதெல்லாம் இருக்கட்டும். தகுதியும், மானமும், வீரமும், வெற்றிநெறியும், தருமமும் குடியிருக்கின்ற இடமாகிய உங்களால், எங்களைப் பிரிந்து சென்று தனது மூக்கோடு பெரிய காதும் அறுபட்ட என் தங்கை சூர்ப்பணகை போல் மூக்கறுபட்ட என் முகத்தைக் காட்டிக் கொண்டு உயிரோடு இருக்கமாட்டேன்.

"எங்களைப் பிரிந்து
தன் பெருஞ்செவி மூக்கோடும்
அற்ற எங்கைபோல் என் முகம்காட்டி
நின்று ஆற்றலென் உயிர் அம்மா"

மூக்கறுப்புண்ட பின்னும் என் தங்கை (சூர்ப்பணகை) முகம் காட்டி வாழ விரும்பினாள். ஆனால், நான் மூக்கற்ற முகம் காட்டி வாழ விரும்பவில்லை.

அழிவில்லாதவனே! (முடியாதாய்) தேவர்கள் எங்களால் பெருமை இழந்தனர். (நோக்கு இழந்தனர் வானவர்) தீண்டி வருத்தும் தெய்வம் போன்றவள் சீதை. பிறர் மனைவி. எனவே அவளை விரும்பவேண்டாம் எனத் தடுத்தேன். என் சொல்லை என் அண்ணன் (இராவணன்) கேளாததால் தக்கவர்களுக்கு முன்பு தலை நிமிர்ந்து பேசும் தகுதியற்றவன் ஆனேன். பகைவர்களால் காதொடு, மூக்கையும் இழக்கப் பெற்ற,'மீண்டு போதல்' என்பது முடியாது.

"செவி தன்னொடு மாற்றாரால்
மூக்கு இழந்தபின் 'மீளல் என்றால்
அது முடியுமோ?"

அழகு பெண்டிரை விரும்புதல் ஆடவர்க்கு இயல்பாயினும் பிறர் மனைவி ஆயவளை(சீதை) விரும்புதல் அறத்திற்கு மாறுபட்டது.

உங்களுடைய தோள், தலைகளையும், என் வாள் கொண்டு துணித்து, உங்களின் உயிரைக் குடித்து, என் அண்ணன் (இராவணன்) மகிழுமாறு சீதையின் அழகிய நலத்தைக்

கொடுக்க வந்த நான், தேவர்கள் சிரிக்குமாறு சிவந்த தலைகளைத் தாங்கி கைகளொடும், இரத்தத்தோடு கண்ணீர் தேக்கி என் தங்கை சூர்ப்பணகை போல் இராவணன் முன் நின்று புலம்பமாட்டேன் சூர்ப்பணகை பெண், ஆதலால் அழுது புலம்பினாள். நான் என் அண்ணன் முன்சென்று அழுது நிற்காமல், 'உன் உயிர் குடிப்பேன்', மூன்று உலகங்கட்கும் தலைவனாக இருந்தாலும், வீரர்களின் முறைமையை அறிந்திலை நீ கருத்தோடு வரும் சேவகன் போர்த்துறையில் வேறு வேறாகத் தலையைக் கொய்து விட்டுப் பின்பு பொருந்தினால் அது பொருந்துமோ?

"..... அமர் துறைச் சிரம் கொய்த
பொருந்தினால் அது பொருந்துமோ?
தக்கது புகன்றிலையோ? என்றான்?"

நீ தகுதியான சொற்களை சொல்லவில்லையே!

அண்ணனுக்காகப் போர் செய்ய வந்த என்னைப் 'போ' என்றால் எப்படி? வீரர்களின் ஆற்றல் அறிந்து பேசுகின்ற சொல்வன்மை பெற்றாயில்லை எனக் கும்பகர்ணன் புகன்றான்.

'போர்க் கோலஞ் செய்து விட்டார்க்கு உயிர் கெடாது அங்கு போகேன்' என முழங்கிய கும்பகர்ணன் நீண்ட பெரிய சூலத்தை வலக்கையிலிருந்து இடக்கைக்கு மாற்றிக் கொண்டானன். பக்கத்தில் நின்ற குன்றை நிலமகள் பதறுமாறு பெயர்த்து ' வென்று தீர்க என விட்டான். விட்டமலை மேல் வந்து மோதும் முன், சிவபெருமான் அணிகின்ற திருநீறு போல இராமன் பொடியாக்கினான்.

இராமன் மீண்டும் தன் அம்புகளை ஏவினான். பெருமை பொருந்திய இராமன் அம்புகள் கடல் நீரை உண்ண வல்லவனாக இருந்தாலும், விண்ணுலகத்தை கடக்க வல்ல ஆற்றலைப் பெற்றிருந்தாலும், இடியைச் சுடக் கூடியதாக இருந்தாலும், நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் கொடுத்ததுமாகிய கும்பகர்ணன் மார்பில் பொருந்தியுள்ள கவசத்தைக் கடக்க முடியாதனவாகின.

'சங்கரன் கவசம்' என உணர்ந்த 'தடங்கண்ணான்' சங்கரன் கொடுத்த பாசுபதமாகிய அம்பினைப் பூசித்து வில்லில் தொடுத்தான். கவசம் தரையில் விழ கவசமிழந்த கும்பகர்ணன் தடி கொண்டு வானரப் படைகளை அழித்தொழித்தான்.

"வாய்ந்த வல் நெடுந் தண்டு
கைப்பற்றினன்; வானரப் படை முற்றும்
சாந்து செய்குவனாம், என
முறை முறை அரைத்தனன், தரையொடும்".

வானரப் படைகள் சாந்துபோல் அரையுண்டன. இராமன் விட்ட அம்புகள் ஆயிரம் கும்பகர்ணனைச் சுற்றி பறந்து கொண்டிருந்தன. உடம்பில் பதிந்து கொண்டிருந்தன ஆயிரம் அம்புகள். ஆயிரம் அம்புகள் தைப்பதற்கு இடமின்றி அலைந்தன. ஆயிரம் அம்புகள், உடம்பினுள் புகுந்து வெளியேற முடியாமல் மறைந்தன. ஆயிரம் அம்புகள்

புதிதாக வந்தது. இதற்கெல்லாம் அஞ்சாமல் கும்பகர்ணன் சுழன்று போர் செய்தான். இராமன் பத்து வகை அம்புகளை தொடையில் தொடுத்து எய்தான். கும்பகர்ணன் வைத்திருந்த தண்டு துண்டமாயிற்று. கும்பகர்ணன் கேடகத்தை வாளொடு ஏந்தினான்.

அவனைக் கண்ட வானர வீரர்கள் ஓடி ஒளிந்தனர். தேவர்கள் தலை குனிந்தனர். குன்றை ஒத்த கும்பகர்ணனது தோளைத் தணிப்பாயாக' என இராமன் அம்பினை விட்டான்.

கும்பகர்ணனது கை அறுதல்

வானவர் வாழ்த்தும்படி சென்ற அம்பு, கும்பகர்ணனது வலது கை வாளொடு விழும்படி அறுத்தது(வலகை அற்றது வாளொடும்) இதனைக் கண்டு இராக்கதர்கள் துன்பமுற்றனர். தீவினை துன்பமுற்றது. நல்வினை ஆரவாரித்தெழுந்தது. அரக்கர்கள் கலக்கம் அடைந்தனர்.

"அறக்கனுற்றது தீவினை; நல்வினை
ஆர்த்து எழுந்தது: வோர்த்துக்
கலக்க முற்றனர்; இராக்கதர்
கால வெங் கருங்கடல் திரை போலும்
வலக்கை அற்றது வானொடும்".

வலக்கையை இழந்தவன், இடக்கையால் மீண்டும் வானரங்களை தாக்கினான். வானரம் செயலிழந்து வீழ்ந்தது. பல்லை இளித்துக் கொண்டு ஓடின. அவனது அறுபடாத கைக்கு அஞ்சுவதைக் காட்டிலும், அற்று வீழ்ந்த கையினுக்கே உலகெல்லாம் அஞ்சலாயின.

"மாறு வானரப் பெருங்கடல் ஓட
தன் தோள்நின்று வார் கோரி
ஆறு விண் தொடும் பிணம் சுமந்து
ஓட, மேல் அமரரும் இரிந்து ஓட
கூறுகூறுபட்டு இலங்கையும்
விலங்கலும் பறவையும் குலைந்து ஓட
ஏறு சேவகன் மேல் எழுந்து ஓடினன்
மழைக்குலம் இரிந்து ஓட".

பிணம் சுமந்த குருதி வெள்ளம் விண்ணைத் தொட, விண்ணவர்கள் அஞ்சி ஓடவும். இலங்கை வாழ்நரும், மலைவாழ் விலங்குகளும் பறவைகளும் பலவாறு சிதறி ஓடவும், மேகக் கூட்டங்கள் அஞ்சி ஓடவும், சிங்க ஏறு போன்று இராமன் மேல், கும்பகர்ணன் சினந்து ஓடினான்.

கும்பகர்ணனது மற்றொரு கை அறுதல்

இராமன் மேல் ஓடிய கும்பகர்ணனின் இடது கையையும் இக்கணத்தில் அறிவாயாக என தொழுது வேண்ட, தனது கொல் அம்பினால் (இராமன்) ஈற்றுக்கையையும் அணை உண்டாகுமாறு கடலில் இட்டான்.

"நெடுங் கொற்றவன் கொலை அம்பால்
வேற்றுக்கையையும் வேலையில்
இட்டனன்; வேறும் ஓர் அணைமான":

இருகையையும் இழந்த அவன் (கும்ப)ஐயம், அச்சம் இன்றி ஆண்மை குன்றாது நின்றான்.

கடலில் கிடந்த கைகளின் தோற்றம்

இராமனது அம்பு அவனது தோளைக் கருங்கடலுக்குக் கொண்டு வந்தது. எனவே கருடன் அம்புக்கு ஒப்புமை.

தோளொரு கைகளை இழந்தவன் வானரப் படைகளை தசையும், தோலும், எலும்பும் குருதியோடு ஒன்றாகுமாறு கலக்கினான்

"..... வான முந்நீரை
உழக்கினான் தசை, தோல் எலும்பு
எனும் இவை குருதியொடு ஒன்றாக"

கும்பகர்ணனது கால்களைத் தடிதல்!

நிலத்தின் கண்ணதாகிய காற்று, நெருப்பு, நீர் எனப்படும் மூன்றும் இணைந்த உருவத்தானை, கொல்ல இயலாதோர் வடிவத்தானை, உயிர்களையெல்லாம் குடிக்கின்ற கும்பகர்ணனை கோபத்தில் எமன் போன்றவனை அஞ்சாமையின் தலைவனை, செருக்கில் வல்லவனை, வில்லில் வல்லவனாகிய இராமன், கூரிய கொடிய அம்பினால் வலக்காலையும் அறுத்தான்.

"..... உயிர்களைக் குடிப்பானை
சலத்த காலனை, தருகணர்கு
அரசனை தருக்கினின் பெரியானை
வலத்த தாலையும், வடித்த வெங்
கணையினால் கடித்தனர்"

காற்றும், கனலும், புனலும் கலந்த கோலத்தான், வளமை மிக்க வலது காலை இழந்தான். வலக்காலை இழந்தும் எஞ்சிய காலால் குந்தி குந்திப் போர் செய்ய வந்தான்.

மாற்றி ஊன்ற கால் இல்லாமல், ஒரு காலிலேயே விண்முட்ட நின்று போர் செய்யவந்த (கும்) மற்றொரு காலையும் வாங்கினான்.

"எறு சேவகன் எரிமுகப் பகழியால்
இரு நிலம் பொறை நீங்க
வேறு காலையும் துணித்தனன்"

அவனது (கும்ப) இரண்டு கை, இரண்டு கால் துணிவற்றன. அவனது (கும்ப) உடம்பில் இருநூறாயிரம் அம்புகள் தைத்தன. அம்புகள் முதுகில் துளை உண்டாக்கி, வெளிப் போந்தன. அதனால் கும்பகர்ணனது கோபம் அதிகமாயின. மழைபொழிகின்ற மேகத்தில் தோன்று இடியினும் பெருத்த அதட்டல் ஒலியோடு கோபம் வளர்ச்சிப் பெற்றது.

கும்பகர்ணன் மண் மீது கிடந்து, மலைகளைத் தன் வாயில் கடித்து ஒடித்து மூச்சுக் காற்றால் திசையிறுதி செல்லுமாறு ஊத, வானரங்கள் அழிந்தன.

"பாதம் கைகளோடு இழந்தவன்
படியிடை இருந்து, தன் பருவாயால்
காதம் நீளிய மலைகளைக் கடித்து
இறுத்த எடுத்து, வெங்கனல் பொங்கி,
மீதுமீதுதான் அகத்து எழு காற்றினால்
விசைகொடு திசை செல்ல
ஊத ஊதப்பட்டு உலந்தன வானரம்
உறுமின் வீழ் உயிர் என்ன"

கும்பகர்ணன் மலையை வாயில் கவ்வியதைக் கண்ட இராமன் வியந்து, தம் மலர் போன்ற கரங்களை அசைத்தான்.

கும்பகர்ணன் புலம்பல்

இராமனுடைய வில்லின் ஆற்றலுக்கு, ஆயிரம் இராவணன் இருந்தாலும் இணையாக மாட்டார்கள். ஐயோ நான்(கும்ப) கையும் காலும் இழந்துவிட்டேன். இராவணனுக்கு உதவ துணை காணேன். காமநோய் கொண்டு இராவணன் வாழ்வை முடித்துக் கொண்டான். இராவணன் வாழ்க்கை முடிந்தது. வாழ வேண்டிய இராவணன் வாழ வழி இன்றி இனி உய்யுதல் என்பது அரிது என துன்பமுற்றப் புலம்பினான்.

"ஐயன் வில் தொழிற்கு ஆயிரம்
இராவணர் அமைவிலர்; அந்தோ! யான்
கையும் கால்களும் இழந்தனன்; வேறு
இனி உதவல் ஆம் துணை காணேன்;
மையல் நோய்கொடு முடிந்தவர் தான்!
என்றும், வரம்பு இன்றி வாழ் வானுக்கு
உய்யுமாறு அரிது என்றும் தன்
உள்ளத்தின் உணர்ந்து ஒரு துயர் உற்றான்"

என்னைத் தவிர இராவணனுக்கு வேறு துணை இல்லை. சாவிலிருந்து உய்யும் வழியும் இல்லை நெடுநாள் வாழ்பவன் பெண் ஆசையால் அழிந்தானே? பிறர் மனை நயந்தமையால் இராவணன், முடிப்பாரின்றியே முடியத் தக்கவனாயினான் எனப் பலவாறு புலம்பினான்.

கும்பகர்ணன், இராமனிடம் கூறியவைகள்

'சிந்தூரச் செம்பசுங் குருதி' திசைகள் தோறும் ஆறாகப் பெருகி, தேர்கள், ஆனைகள், குதிரைகள், படைவீரர்களை இழுத்துக் கொண்டு செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த கும்பகர்ணன் கண்முன் நின்ற பொன் தோளனை, (இராமன்) முகம் பார்த்து இணையன கூறலுற்றான்.

அடைக்கலமாகத் தன்னை அடைந்த புறாவின் பொருட்டுத் தன்னையே ஈந்த வாள் வேந்தன் 'சிபி' மன்னன் வழி வந்தவரே! அரக்கராகிய எம் தீவினைகளை நீக்கிவிட்டு, வந்தடைந்தவனாகிய வீடணன் உயிரைக் காக்கக் கடவீர்;

"எண் வினை தீர்த்து, உம்முடைய
கைக்கு அடைந் தான் உயிர்
காக்கக் கடவீர், என் கடைக் கூட்டால்"

தன்னை அடைக்கலமாக அடைந்த பறவையின் உயிரைக் காக்க 'சிபி' மன்னனின் வழியில் வந்த நீவிர், அம்மன்னன் மேற்கொண்ட அறச்செயலைச் செய்தற்கு உரியவராகின்றீர், அடைக்கலம் புகுந்த என் தம்பியாகிய வீடணனைக் காக்கக் கடவீர்.

அரசர் வடிவம் கொண்டு அமைந்த வேத நெறி ஒழுகும் அந்தணனே! என் தம்பி வீடணன், அரக்கர் சாதியில் பிறந்தமையால் வருகின்ற பாவ நெறியை அறியான். அவன் உன்னைச் சரணாக அடைந்துள்ளான். உனக்கு அடைக்கலப் பொருளுமாவான். எனவே வீடணன் உயிரைக் காக்க வேண்டும்.

"நீதியால் வந்த தொரு
நெடுந் தரும் நெறி அல்லால்
சாதியால் வந்த சிறு
நெறி அறியால், என் தம்பி;
ஆதியாய்! உனை அடைந்தான்
அரசர் உருக் கொண்டு அமைந்த
வேதியா! இன்னும் உனக்கு
அடைக்கலம் யான் வேண்டினேன்"

அடைக்கலம் வேண்டி வீடணன், உன்னை அடைந்ததே அன்றி, அவன் பொருட்டு அவன் உயிரைக் காக்க நானும் உன்னை வேண்டினேன்.

அறநெறியில் மாறுபாடு இல்லாதவனே! வெற்றியே நினைக்கின்ற வேல் தாங்கிய இராவணன்; இவ்வீடணன், "அரக்கர் குலத்தை வேரொடு அழிக்க நினைக்கிறான்" என்னும் கருத்துடையவனாக இருக்கிறான். இவ்வீடணனைக் கொல்லும் வாய்ப்பு இராவணனுக்குக் கிட்டுமானால், 'உடன் பிறப்பின் பயனை அறியாதவனாகிய இராவணன் இவனைக் கொன்று விடுவான். ஆதலால் இவனைக் கருத்துடன் காப்பாயாக.

"ஒல்லுமாறு இயலுமேல்
உடன் பிறப்பின் பயன் ஓரான்
கொல்லும—ால் அவன் இவனை;
குறிக்கோடி, கோடாதாய்!

அரக்கத் தன்மை நீங்கி கும்பகர்ணன், இப்பொழுது இரக்கத் தன்மையில் நின்று இராமனை வேண்டுகிறான்.

நம்பி! தகவில்லாத இராவணன், வீடணனை தம்பி என நினைத்து மனம் இரங்கிக் கொல்லுதலைத் தவிரான். வீடணனைக் கண்டால் கொன்று விடுவான். சிறிதும் இரக்கம் காட்டமாட்டான். ஆதலால் உன் தம்பியையோ; உன்னையோ; அனுமனையோ; என் வீடணன் ஒரு போதும் பிரியாதவனாக இருக்க அருள் செய்வாயாக.

"உம்பியைத் தான்; உன்னைத்தான்
அனுமனைத்தான், ஒரு பொழுதும்
எம்பி பிரியானாக அருளுதி
யான் வேண்டினேன்"

வீடணனை, இராவணன் கண்டால் கொல்லுவான். தம்பி என இரக்கம் கொள்ளான். வீடணனைக் காக்கும் பொருட்டு வேண்டினான்.

போர்கள நிகழ்ச்சியைப் பார்த்து கொண்டிருக்கும் முனிவர்களும் தேவர்களும் "இது மூக்கில்லாத முகம்" எனப் பார்த்தறியா வண்ணம் உன் அம்பினால் என் கழுத்தை அறுத்தெறிவாயாக;

"மூக்கு இல்லா முகம் என்று
முனிவர்களும் தேவர்களும்
நோக்குவார் நோக்காமை
நுன் கணையால் என் கழுத்தை
நீக்குவாய்"

என் கழுத்தை நீக்கியபின், என் தலையை கடலுக்குள் யாரும் அறியாவண்ணம் போகச் செய்வாயாக. இதுவே; நான் உன்னை வேண்டிக் கொள்கின்ற 'வரம்' எனச் சொல்லி முடித்தான்.

"..... நீக்கிய பின்
நெடுந் தலையைக் கருங்கடலுள்
போக்குவாய்; இது நின்னை
வேண்டுகின்ற 'பொருள்" என்றான்"

பகைவர்களாய்த் தனக்கு அடங்கியிருந்த தேவர்களும் முனிவர்களும், "மூக்கில்லா முகம என தருவர். ஆதலால் தன் தலையைக் கடலுள் போக்குமாறு வேண்டினான்.

கும்பகர்ணன் வேண்டிக் கொண்ட வரத்தை நிறைவேற்றக் கருதிய இராமன், வலிமை பொருந்திய. இணையை வில்லின் நடுவில் பூட்டி, கும்பகர்ணனின் தலையைக் கொய்தான். தலையை கொய்யப்பட்ட ஒலிக்கும் தன்மை கொண்ட கரிய கடற்பரப்பில் அழுந்துமாறு செய்தான்.

"வரம் கொண்டான்; இனி மறுத்தல்
வழக்கு அன்று, என்று ஒரு வாளி
உரம் கொண்ட தடஞ் சிலையின்
உயிர் நெடுநாண் உள் கொளுவா,
சரிம் கொண்டான், கொண்டதனைத்
திண் காற்றின் கடும் படையால்,
அரம் கொண்ட கருங் கடலின்
அமுவத்துள் அழுத்தினான்"

வலுவான பெருங்கணையால், கும்பகர்ணனின் தலையை அறுத்து அத்தலையை வாயுக் கணையால் கடலுள் அழுத்தினான். கடலின் அலைகள் கிழக்கிலும், மேற்கிலும் மிக்குள்ள திசைகளிலும் போவதைத் தடுத்து நிறுத்தி, இரு கண்களிலும் எழுகின்ற புகையோடு பொருந்தி, புகை உண்டாகுமாறு பெருமூச்சு விடுகின்ற அறுபட்ட மூக்கினுள் நீர் புகுந்த நிரம்பிய கும்பகர்ணனது முகமாகிய குன்றம் கடலினுள் புகுந்து மூழ்கியது.

வானவர் மகிழ்ந்தனர்

கும்பகர்ணன் இறந்து ஒழிந்ததைக் கண்டு வானவர் ஆடினர். அரம்பை மாதர் அமுதம் போன்ற இசையைப் பாடினர். தவ முனிவர்களும், அந்தணர்களும் அச்சம் நீங்கினார்கள். வானரப் படைத் தலைவர்கள் வில்வீரன் இராமனைக் கூடினார்கள். அரக்கர்கள் கும்பகர்ணன் இறந்த செய்தியை இராவணனுக்கு உணர்த்தும் பொருட்டு குடர் கலங்கி ஓடினார்கள்.

"ஆடினையார் வானவர்கள்;
அரமகளிர் அமுத பாடினர்;
மாதவரும் வேதியரும் பயம் தீர்ந்தார்,
கூடினார் படைத் தலைவர் கொற்றவனா;
குடர் கலங்கி ஓடினர்
ஆடல் அரக்கர், இராவணனுக்கு உணர்த்துவான்"

கும்பகர்ணனது வீழ்ச்சிக்குப்பின் உலகின் நிலையை உணர்த்தியதற்கு கும்பகர்ணன் இறப்பு. தேவர்களுக்கு வசந்த காலமாயிற்று. தேவிகள் பாட தேவர்கள் ஆடினார்கள். அரக்கர் கூட்டம் அழிந்தது. அரக்கர்கள் கும்பகர்ணன் இறந்த செய்தியை இராவணனிடம் சொல்வதற்கு ஓடினார்கள்.

அரக்கர் குலத்தில் பிறந்து ஒப்பற்ற வீரனாய், உடன் பிறந்து, இராவணனுக்குத் தம்பியாய், அறநெறியில் ஆழ்ந்த பற்றுடையவனாய் இராமன் பால் சேர்ந்திருத்தலே வீடணனுக்குத் தகுதி என்றும், இராவணனைச் சேர்ந்திருத்தலே தகுதி என்றும் அதர்மத்தையும், தர்மத்தையும் வேறுபடுத்திக் காட்டி வீர மரணம் அடைந்த கும்பகர்ணனின் வதையைக் கூறுவதாக இப்படலம் அமைவதால் இது கும்பகர்ணனின் வதைப் படலம் என்றாயிற்று.

வினா

1. கும்பகர்ணன் இராவணனுக்குக் கூறிய அறிவுரை யாது?
2. இராமன் - கும்பகர்ணன் போரினை விவரிக்க.
3. கும்பகர்ணன் வீடணனுக்குக் கூறிய அறிவுரை யாது.
4. கும்பகர்ணன் இராமனிடம் வேண்டியவை யாவை?

1. இராவணன் புலம்பல்

முதற் போர்ப்படலத்தில், இராமனிடத்தில் இராவணன் தோற்றான் தோல்வியை உணர்ந்த இராவணன் நாணத்தோடு இலங்கை புகுந்தான். நாணத்தால் தரை நோக்கிய இராவணனது மனநிலை, கும்பகர்ணன் வதைப் படலத்தில் வெளிப்படுகிறது.

தோல்வியில் மனம் குழம்பிய இராவணன், வலிமை பொருந்திய மார்பையும் கயிலாயத்தைப் பெயர்த்த தோள்களையும், சாமவேதம் பாடிய நாவையும், மாலை பொருந்திய பத்து மணிமுடிகளையும், சிவன் கொடுத்த வாளையும், உடன் பிறந்த வீரத்தையும் போட்டு, வெறுங்கையோடு இலங்கை வந்தான். தோல்வி நாணம், இராவணன் அணைத்துக் கொள்ள, தரை நோக்கித் தலை கவிழ்ந்த இராவணனை, மலர்தாங்கிய கூந்தலர் தனித்தனி நோக்க, தன் வளநகர் நோக்காமல், வரவேற்க வந்த தல்வர்களை நோக்காமல் திரண்டு நின்ற சேனையை நோக்காமல், பூமிப் பெண்ணை நாக்கியபடி நடந்தே நகர் புகுந்தான்.

தனிமையில் நகரை அடைந்த இராவணன், தூதர்களை அழைத்து வரும்படி, ஞ்சுகியை ஏவிவிட்டு, ஆங்கோர் மலப்படுக்கையில் அமர்ந்தான். இரர்மனிடம் நாற்றாலும் நாணத்தால் நலிந்தாலும், சீதையின் மேல் உற்ற பொருந்தாத தோல்வி ரிட்டதால் மனம் வருந்தினான். வருந்திய நெஞ்சினன், மாலியவானிடத்தில், ால்வியை எண்ணிப் புலம்பினான்.

நம் குலத்துக்கு ஒவ்வாத பங்கம்(தோல்வி) வந்துற்றது. சிவபெருமானை தல்வனாகக் கொண்டு மூவுலகத்துச் சேனைகளும் ஒன்று சேர்ந்து வந்து எனக்கு ுவினாலும், இலக்குவன் வில்லின்று புறப்படும் அம்புகள், என்னை வந்துற்ற போது, ன்னிடத்தில் கோபம் உண்டாகவில்லை. மேலும் அவ்வம்புகள் நம் படைகளின் ல்பட்டு, கடந்து சென்றனவே அன்றி, நமது படைகளின் உடலில் தைத்துத் கியதில்லை. இராமனுடைய அம்புகள் உலகம் எங்கும் பதிந்து செல்கிறதே தவிர, ்கும் ஒவ்வாக நின்றதில்லை. ஊழித் தீயையும் எரிக்கும் ஆற்றலுடையது. திசைகளைத் ுறுகின்ற வன்மை படைத்தது. கடல்களைப் பருகும் தன்மையன, பூமியைப் பிளக்கின்ற ன்மையான. அவனுடைய அம்புகளின் பலத்தை எதிர்த்து நிற்கும் வன்மை தம் அரக்கர் டைக்கில்லை. வில்லை வளைத்தலையும், அம்புகளைத் தொடுப்பதையும் ண்ணிமைக்காத தேவர்களும் கண்டதில்லை. நினைத்த அளவில் உலக முழுவதும் ம்புகளாய் தோன்றும் சக்தியை யாரும் அறிந்திலர். சிவனின், சூல படையும், ருமாலின் சக்கரப் படையும் இந்திரனின் குலிசப் படையும் வருவதைப் ர்த்திருக்கிறேன். இம்மூவரின் படையினது தாக்குதலையும் தாங்கி இருக்கிறேன். னால் மூவரின் இராமனது அம்புகளின் தாக்குதலால் வருந்தினேன். என்னாலேயே ம்முனிவனது அம்புகளை தாங்க முடியாத பொழுது, வேறு யார் தாங்க வல்லார். நவருமில்லை.

பேய்க் கூட்டங்களோடு சுடுகாட்டில் உலவித் திரிகின்ற சிவனுடைய எட்டுத் ள்களும், தேவேந்திரனுடைய (இந்திரன்) இரண்டு தோள்களும், திருமாலின் ஆயிரம் ள்களும், அந்த மானிடன் இராமனின் ஒரு விரலின் வலிமையைத் தாங்கும் ற்றலைப் பெற்றிருக்க மாட்டாது.

சிவந்த கண்களையுடைய திருமாலும், இராமன் தம்பி இலக்குவனின் பாதத்தில் ஒட்டியுள்ள தூசுக்கு ஒப்பாகமாட்டான். முப்புரங்களையும் எரித்த சிவனின் கொடிய வில்லும் இராமனுடைய அதிய வில்லுக்கு அம்பாகக் கூட ஆகமாட்டாது.

இராமனது அம்புகள் தோற்றதில் பிரமனைப் போன்றும், ஓட்டத்தில் திருமாலைப் போன்றும், பகைவர்களைச் சேர்ந்த பொழுது உருத்திரனைப் போன்றும் காணப்படுகின்றன. அந்த அம்புகளின் பெருமை, நம்மால் சொல்லப்படுகின்ற அளவுக்குச் சிறியன அல்ல.

இராமன் தாங்கியுள்ள வில் எத்திசையிலிருக்கிறது என அறிய முடியவில்லை. இராமனது ஊர்தி எத்தன்மையது என அறிந்து கொள்ள முடியவில்லை. இராமனது வீரச் செயலை, மூங்கில் அன்ன தோள்களையுடைய சீதை கண்டாளாயின் என்னை நாயென நகுவாள். இராம, இலக்குவர்களைப் பற்றி அனைத்தையும் தெரிந்து கொண்டேன். இனி தெரிய வேண்டியது ஒன்றும் இல்லை.

என்னிடத்தில் தோல்வி கண்டு, பயந்தோடிய இந்திரன், பிரமன், திருமால், சிவன் ஆகிய தேவர்களால் அழிவு வராமல், எனக்கு அழிவு வந்து சேர்ந்தபோதும் நல்லதொரு பகைவனைப் பெற்றேன்.

"நாசம் வந்துற்ற போதும்
நல்லதோர் பகையைப் பெற்றேன்"

இப்படி ஒரு செயல் இங்கு வந்து உற்றதே என வருந்தப் புலம்பினான்.

2. கும்பகர்ணன் பாத்திரப்படைப்பு

கும்பகர்ணனின் முழுமைத் தன்மையை உணர்வதற்கு சிறந்த வாயிலாக அமைவது கும்பகர்ணன் வதைப் படலம், கும்பகர்ணனின் வன்மை மென்மைகள். இப்படலத்தில் பிரதானமாகக் காணப்படுகின்றன. கும்பகர்ணனைப் பிரதானமாகக் கொண்டிருப்பதால், இப்படலம் கும்பகர்ணன் வதைப் படலம் எனப்படுகிறது. கும்பகர்ணனின் வதையைக் கூறும் படலம் எனவும் கொள்ளலாம். இராவணனது களத்தில், கும்பகர்ணன் பெருவளம் படைத்த வீரன், எதையும் எளிதில் வெல்லும் தன்மையினன், குன்றைப் போன்ற தோளினன், எதையும் எளிதில் வெல்லும் தன்மையினன், சிவந்த கண்களையுடையவன், வன்துயில் பாங்கினன், ஆழ் செவியினன், தடந்துயில் தன்மையான், பதையாத உடம்பினன். பனை போன்ற நீண்டகையினன், விண்ணினை இடிக்கும் மகுடத்தான். விசும்பினை மறைக்கின்ற மேனியன், கடல்களைப் போன்ற கண்ணினன். எதையும் அவமதிக்கும் சிரிப்பினன். சூலம் கொண்ட தோளினன், செம்மயிர்த் தலையினன், சூல் கொண்ட மேக திறத்தினன், காலனை வெல்லும் வலிமையன் அகன்ற வாயினன். புழை (குகை) போன்ற கண்ணினன். பாம்பு உறங்கும் படர் செவிப் பாழியான் பகுத்தறியும் மனத்தினன். தேவர்களை வென்ற தீரன், போரில் தோல்வியுற்ற இராவணன் போர்க்கோலம் செய்வித்து, இராமனை வென்று வருக என வேண்டினான்.

பகுத்தறியும் பாவலன்

விசும்பை முட்ட நின்ற கும்பகர்ணனின் மார்பில், ஆனேற்றுத் (எருது) தலைவன் கொடுத்தக் கவசத்தைச் சுற்றிக் கட்டிய இராவணனிடம், மின்னலை ஒத்த இடைப் புருவமும், விசும்பை முட்டிய இடத்தோளும் துடிக்க, இச்சிறப்பு (போர்க்கோலம்) எது குறித்து என வினவிய கும்பகர்ணன், கோநகரில், கொடிய போர் வந்து விட்டதோ? கற்புடைச் செல்வியின் துயர் இன்னும் நீங்கவில்லையோ? மூவுலகத்தும் எய்திய. புகழ் போய்விட்டதோ? அழியும் காலம் வந்துவிட்டதோ? அப்போர், சீதையை மையமாகக் கொண்டதோ? கற்பின் கனலியை இன்னும் விட்டிலையோ? இராமனுடைய தோள்களை வெல்லலாம் என நினைத்தியோ? என வினாக்களை அம்புகளாய் செலுத்தினான்.

சீதையை விடாமல் வைத்திருப்பது உன்னுடைய விதியின் தன்னையே ஆகும். பெருவலி இராமனின் தோள்களை வெல்லலாம் என்பது, சீதையின் மேனியை, புல்லலாம் என்று நினைக்கின்ற உன் கருத்துக்கு ஒப்பானது, குற்றமற்ற நம் குலத்தினது பெருமை அழிந்து விட்டது நீரினது தன்மை நிலத்தினது தன்மையை ஒத்தது போல உன்னுடைய எண்ணமும் உன் செயலும் ஒத்துக் காணப்படுகிறது.

அறம் அஞ்சி உன்னை விட்டுப் பிரிந்தது. அழிவிலிருந்து உன்னைக் காப்பவர் ஒருவருமில்லை. வஞ்சமும், பாவமும் பொய்யும் கலந்த நாம் இனி வாழமுடியாது. தர்மம் தலை தூக்கி விட்டது. இனி நாம் தப்பிப்பதில்லை. நாம் தப்பிக்க வேண்டுமானால் படையை விட்டு, அவை சிந்துதல் கண்டு, நீ இருந்து தேம்புதல் மந்திரம் அன்று, எனவே படைகளை ஒன்று திரட்டிப் போரிட்டு மடிவோம் என மயங்கினான்.

அஞ்சுவதற்கு அஞ்சாமை பேதமை என்ற அறவழியில் நின்றவன், அரக்கர் குலத்தில் பிறந்தாலும் அழி குணத்தில் சிறியன சிந்தியாத செம்மல், முன்னவன் சொல்லில் முனைந்து நின்றவன் சிந்தித்து, அதன் பின் செய்பவன், பகுத்தாயும் பண்பினனாதலால், முன்னவன் சொல்லை முதன்மையாகக் கொண்டு செஞ்சோற்றுக் கடன் தீர்க்கச் செருக்களம் புகுந்தான்.

குன்றென நின்ற தோளான்(வீரம்)

வீரத்தில் இராவணனுக்கு இணையானவன். விண்ணை மறைத்தேகும் மேனியன், நல்லதை நினைப்பவன், ஆனால் தீயவைகளைச் செய்பவன். மனம் சுதந்திரமாக இருப்பதால் நல்லதையே நினைக்கிறான். உடம்பு, முன்னவனுக்கு (இராவணன்) அடிமைப்பட்டிருப்பதால், தீமைகளைச் செய்கிறான்.

'தருக என் தேர்" "சாற்றுக என் கூற்றை" "பொருக என்னோடு" எனப் புகன்று போர்க்களம் போயினான். அண்ணா! என் குற்றம் பொறுத்துக் கொள்வாயாக எனப் புகன்ற கும்பகர்ணனின் போர்த் தோற்றம் கூற்றத்தை ஒத்தது. தேவர்களை ஓடச் செய்தது. இராமனின் கருத்தைக் கவர்ந்தது. குரங்குச் சேனைகளை அஞ்சி ஓடச் செய்தது. செல்வத்திற்குரிய திருமகளையும், தேவர்களது ஊரையும் நோக்கா வண்ணம் போர்க்களம் மட்டும் நோக்கித் தேரினைச் செலுத்தி வந்தான்.

குன்றுகளைப் பெயர்த்து எறிந்ததும், அடித்தும், மிதித்தும், மோதியும், தின்றும் வானரங்களைச் சந்தனக் குழம்பு போலாக்கினான். கடல் நீரில் அமிழ்த்தியும், மண்ணிடைத் தேய்த்தும், நெருப்பிடை வீசியும், தேரிடை இட்டும், மலைகளில் மோதியும் வானரப் படைகளை சிதறித் திசைமாறி ஓடச் செய்தான்.

குரங்கு வெள்ளத்தைக் கொன்ற கும்பகர்ணன் மண்ணிடைக் கிடந்த மலையை எடுத்து வீசிய நீலனை வென்று முறுவல் தோன்ற நின்றான். மாண்டனன் அரக்கன் தம்பி என்று ஏழு உலகமும் வாழ்த்தத் தூண்டிய அங்கதனை வென்று நின்றான்.

மாருதி வீசிய மலைகளைத் தோளில் தாங்கித் 'தோற்றனென் உனக்கு என் வன்மை சுருங்கும்' என அனுமனைச் சொல்லால் வென்று நின்றான்.

நீ இராமன் தம்பி, நான் இராவணன் தம்பி இருவரும் போர் செய்வதற்காக நின்றிருக்கின்றோம். நமது போரைக் காண்பதற்குத் தேவர்கள் வந்துள்ளனர். நம் வலிமைக்கு உரிய வீர வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு போர் செய்வேன் என இலக்குவனோடு பேசிக் கொண்டே போர் செய்தான்.

நீண்ட கைகளால் சுக்ரீவனை வளைத்து இறுக்கி, மயங்கச் செய்து, தூக்கிக் கொண்டு இலங்கை புகுந்தான். இராமனோடு போர் செய்யத் துணிந்து மடிந்த வாய் கொழும்புகை சிந்த, இதழ் துடிக்க, புருவங்கள் ஏறிட, கண்கள் சிவக்க. "எத்த வலியுடையாரோடு போர் செய்ய விரும்பி உன்னைத் தேடித் திரிந்தேன்" 'உன்னைக் கண்டது என் பாக்கியம்' என வீர உரை பகன்று, இராமனோடு போரைத் தொடங்கினான்.

சகோதர உணர்வு

இராவணனுக்குப் பின்னவன், வீடணனுக்கு முன்னவன், தீயதையே நினைத்து தீயதையே செய்பவன் இராவணன் நல்லதையே நினைத்து தீயதையே செய்பவன். கும்பகர்ணன் நல்லதையே செய்பவன் வீடணன். அண்ணனுக்கு ஏற்ற தம்பியாகவும், தம்பியை விரும்புகின்ற பாதுகாக்கின்ற அண்ணனாகவும் விளங்கினான். இராவணனின் செயல் தவறானது என்பதை அறிந்தும் உடன்பிறந்தானின் மானம் காக்கத் தேரேறிப் போர்களம் சென்றான். தேவர்கள் போன்ற மூவுலகையும் ஆண்ட முன்னவன், பின்னவர் இன்றி மண்ணில் மாள்வதை விரும்பாத சகோதர உணர்வும், ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவர்க்கு உரியது என்ற செய்நன்றிக் கடனும், கும்பகர்ணன் போர் மேற் செல்லக் காரணமாக இருந்தது.

இராமனைப் போரில் வெல்லமுடியாது என்பதை முன்னரே உணர்ந்த கும்பகர்ணன் 'வென்று மீள்வேன்' என்பதை விடுத்துப் "பொன்றுவேன்" எனப் புறப்பட்டான். உடன் பிறந்த தம்பி வாழ்வாங்கு வாழ விரும்பியவன். உடன் பிறப்பின் பயன் கருதி, 'உம்முடைய கைக்கு அடைந்தான் உயிர் காக்கக் கடவீர்' என இராமனிடத்தில் வேண்டினான்.

அழியும்படியான செல்வி வாழ்வை விரும்பி நெடிது நாள் வளர்த்த என் முன்னவனை விட்டு விட்டு, இராமனிடம் போக மறுத்தான். சகோதர பாசத்துக்காக

உயிர்விடவும் துணிந்தான். தம்பியர் இன்றி தமயன் சாவதை மனதிலும் நினையாதவன். வாழ்வதும் சாவதும் இயற்கை என்னும் தலையாய எண்ணத்தால், இளவலை(வீடணன்) வாழ்வாங்கு வாழ வழி வகுத்தான். முன்னவன் (இராவணன்) சொல்லைத் தலைமேற்கொண்டு போர்க்களம் புக்கதும் பின்னவன் (வீடணன்) உயிர் வாழ இராமனை வேண்டிக் கொண்டதும், கும்பகர்ணனின் உயர்வான சகோதர உணர்வை வெளிப்படுத்துகிறது எனலாம்.

3. இராவணனுக்கு, மகோதரன் கூறிய வீர மொழிகள்

மாலியவானின் அறிவுரையில் சிந்தை தெளிவுற்ற, ஒப்பந்த மனத்துடன் விளங்கிய இராவணனுக்கு நன்மை பயவாத வீரமொழிகளை மகோதரன் கூறினான்.

விரும்பி மேற்கொண்ட செயல், வெற்றியையே தருவதாக இருந்தாலும், தோல்வியைத் தந்து உயிர் போவதாக இருந்தாலும், தான் மேற்கொண்ட செயலில் உறுதியாக நிற்றலே உத்தமர்க்கு உரியது. மாறாக அவ்வுறுதியிலிருந்து பின்வாங்குவானானால் இப்பிறப்பில் பழியும், மறுபிறப்பில் நரகமும் விளையும்.

கயிலை மலையை அஞ்சச் செய்தவனே! எல்லாச் செல்வங்களுக்கும் உரியவனான சிவபெருமானும் மூன்று உலகங்களையும் ஓரடியில் அடங்கச் செய்த திருமாலும் உன்னிடம் தோற்றுப் போனார்கள். சிவனையும் திருமாலையும் வென்ற நீ! மானிடர் பொருத போர்க்கு அஞ்சுகின்றனை போலும். உயர்ந்த வெற்றியும், உயிரைவிடக் கூடிய தோல்வியும் வீரர்கள் பெறக் கூடியதே ஆகும்.

புகழுக்குத் தலைவனே! வென்றவர் தோற்பர் தோற்றவர் வெல்வர். மேலாய் நின்றவர் தாழ்வர். தாழ்ந்தவர் உயர்வர். இது உலகத்து இயற்கை. வல்லமைக்கு வரம்பு இல்லை. உலகத்தின் இயற்கை இவ்வாறிருக்க, எளிய தவசிகள் இருவரின் போரைப் புகழலாமா? தேவையை விடுதியாயின் உன்னுடைய வலிமை உன்னைவிட்டு நீங்கும். சீதையை விடுவதைக் காட்டிலும், ஆவியை விடுவதே மேல் தேவியை விடுத்து என்றேனும் ஒரு நாள் போகும் ஆவியை நிறுத்தலை விட ஆவியையே விட்டு கொண்ட கொள்கையை நிலைநாட்டுதலே நீ செய்யத்தக்கது. அழிவில்லாத புகழை அழித்துக் கொள்வது எது கருதி? கவலையை விட்டு செயலில் முனைப்புக் கொள்வாயாக.

இக்கையறு நிலையில் காலம் தாழ்த்தினால், இலங்கையையும் எங்களையும் வானரக் கூட்டம் வென்றுவிடும். குளிர்ச்சி பொருந்திய கடலில் சிறிது நீரைச் சூரியன் பருகிவிட்டான் என்பதற்காக வருத்தம் கொள்ளலாம்? இவ்வருத்தத்தை விடுவாயாக.

எந்தாய்! பிரமன், திருமால், சிவன் ஆகிய மூவரும் முன்னாளில் உன்னிடம் தோற்றார்கள். தேவர்கள் ஏவல் செய்ய மூன்று உலகங்களையும் பெற்றாய்! புல்லின் நுனியில் ஓட்டிய பனித்துளிகளாகிய இராம இலக்குவர்களை ஒரு பொருட்டாகக் கருதலாமா? மனிதர்களை மாவீரர்களாக மதிக்கின்ற நீ; உன் தம்பியாகிய கும்பகர்ணனை மதிக்காமல் நினைக்காமல் விட்டதற்குக் காரணம் என்ன?

தலைவனே! அந்தக் கும்பகர்ணனை அழைத்துப் போருக்கு ஏவுவாயானால் மலையை ஒத்தக் கும்பகர்ணனது உடம்பைப் பார்த்தே பகைவர்கள் ஓடிவிடுவார்களே; ஓடாது போர்க்களத்தில் நிற்பார்களேயானால் அவன் ஒருவனே தனித்து நின்று அவர்களின் உயிரைப் போக்கி விடுவானே, என மகோதரன் வீர உரைகளை முழங்கினான். இவ்வுரைகள், இராவணனுக்கு வீரத்தை உண்டாக்கின. இராவணன், இவ்வுரைகளை மனத்தூட் கொண்டு போருக்கான ஆயத்தங்களை கவனிக்கத் தொடங்கினான். மகோதரனின் உரைக்கு கும்பகர்ணன் முதல் பலியானான்.

4. மாலியவான் அறிவுரைகள்

உறுதியான, நெடிய தோள்களையுடைய இராவணன் இராமனிடத்தில் தோல்வியுற்றதால் வானவர் சிரிப்பரே. மாந்தர்கள் நடுவரே: நான் அவமதித்துச் சிரித்த பகைவர்களெல்லாம் இப்பொழுது என்னைப் பார்த்துச் சிரிப்பார்களே; என எண்ணாமல் அதற்காக நாணம் அடையாமல்; வேல் நகு நெடுங்கண், செவ்வாய் மெல்லியல் மிதிலை வந்த ஜானகி (சீதை) நகுவாளே என நாணிப் புலம்பினான்.

அந்த வேளையில் இராவணனுடைய புலம்பலும் வளைக்கப்பட்ட வில்லைப் போன்று வளைந்த முதுகினன். அழகிய வீரக்கழலை அணிந்த மாலியவான் என்னும் அரக்கன் அங்கு வந்தான். இராவணனைத் தாங்கிய பூம்படுக்கையில். ஆங்கோர் மூலையில் அமர்ந்தான்.

இலங்கை வேந்தனாகிய இராவணனின் நிலையை உற்று நோக்கினான்: பொருந்த வந்துற்ற போரில் தோற்றனன் போலும் என எண்ணினான். எக்காலத்தும் அழியாத பெரிய தவத்தினை உடைய ஐயனே! மனமும் வருந்தினாய்; தோள்களும் வாடப் பெற்றாய்; நிகழ்ந்தது யாது? என வினவினான். இராமனின் வில்லாற்றலையும், இலக்குவனது வில்லாற்றலையும் அவர்களது வெற்றிகளையும், தனது தோல்வியையும் இராவணன் கூறினான். நிகழ்ந்தவற்றைக் கூறக் கேட்ட மாலியவான் இராவணனுக்குச் சில அறிவுரைகளைக் கூறலுற்றான்.

மாலை சூடிய நெடிய வேற்படையை உடையவனே! போருக்குச் செல்வதற்கு முன்னே, இராமனுடைய ஆற்றலை எடுத்துக் கூறிய என்னை வீணே கோபித்தாய். உன் தம்பியாகிய வீடணனுடைய இனிய சொற்களைக் கேளாது விட்டாய்; இவ்வாறு நாங்கள் கூறுவதில் பொருள் இருக்கிறது என்பதை ஆராயாது விட்டாய்; நிகழப் போவதை, உண்மையான உறவினர்கள் ஆராய்ந்து கூறியபோது ஆராயாது விட்டாய்; அதனால் நம்முடைய சுற்றமும், செல்வமும் இதுவரை நாம் பெற்ற வெற்றியும், நம் சேனைகளும் அழிவதை நீ காண்பாய்.

மன்னவனே! மெய்மை உற்றவர் விளைவன சொன்னபோது ஏற்றிடல் வேண்டும். உரைத்ததற்கு மறுத்துரைப்பது என்பது கூடாது. உடன் பிறந்தாரின் இன்சொல் ஏற்றிடல் வேண்டும். மற்றவர்களின் சொல் கேட்டு மன்னவன் நடக்க வேண்டும். எதையும் ஏளனமாகத் தள்ளிவிடக் கூடாது என்ற பொருள்பட மாலியவான் சில அறிவுரைகளை இராவணனுக்கு வழங்கினான்.

5. கும்பகர்ணன் துயில் எழுதல்

கும்பகர்ணனை போருக்கு அனுப்பும் செயல் தகுதியானது என அறிந்த இராவணன் கும்பகர்ணனை எழுப்பி ஆணையிட்டான். ஆணையை தலைமேற்கொண்ட தூதர்கள் 'குன்றினும் உயர்ந்த தோளான் (கும்ப) உறங்குகின்ற அரண்மனையை அடைந்தனர்.

அரண்மனை புகுந்த தூதுவர், அரசனே! 'துயில் நீங்கி எழுவாயாக! எனச் சொல்லி தன் கையிலுள்ள இரும்புத் தண்டினால் கும்பகர்ணனது தலை, செவி போன்ற பாகங்களில் மோதினர். கும்பகர்ணனே! உங்களின் பொய்மை வாழ்வு வீழ்ச்சி அடையத் தொடங்கிவிட்டது. எழுந்திருப்பாயாக! இல்லையென்றால் வில் பிடித்த கையையுடைய இமயதூதர் கையில் அகப்பட்டு உறங்கப் போகிறாய்;

எப்பொழுதும் அழிவில்லாத அரக்கர்களது இன்ப வாழ்வு அழியும்படி, உன் தமையன் தீமையைத் தேடிக் கொண்டான். இன்று இறத்தல் என்பது உறுதி. இறப்பை அறியாது இன்னும் நீ தூங்குவதோ என்றவாறு தங்களின் சிவந்த கைகளால் அடித்து எழுப்பினர்.

கும்பகர்ணன் எழுந்திராததால், ஒன்றின் மேல் ஒன்றாக ஓராயிரம் யானைகளோடு, ஆலிகளையும் ஏவி மிதிக்கச் செய்து எழுப்புவீர் என இராவணன் ஆணையிட்டான். இராவணன் ஏவிய தானை அங்கு சென்று, இனிது மிதித்து மீண்டது. கும்பகர்ணன் அசையவில்லை. சேனைகள் வெறுமனே மீண்டது கண்ட இராவணன், தொழில் திறமை மிக்க மல்லர் ஆயிரம் பேரை சேனையோடு அனுப்பி, கும்பகர்ணனை எழும்படி ஆணையிட்டான்.

குன்றினும் உயர்ந்த தோளான் துயில் கொள்ளும் அரண்மனை புகுந்த மல்லர்கள், கும்பகர்ணனைக் கண்டு இராவணன் மனதில் கொண்டுள்ள துயரத்தை இவன் (கும்ப) போக்குவான் என எண்ணினர். எண்ணியவர்கள் உள்ளே புகுவதற்கு முயன்றனர். முயன்று புகுந்தவர்கள். கும்பகர்ணனின் மூச்சுக் காற்றால் உள்ளே செல்வதும், வெளியே போவதுமாய் இருந்தனர். கும்பகர்ணனின் வாயையும், மூக்கையும் கண்டு நடுங்கினர்.

அவனுடைய ஆழ்செவியில் சங்கொடு, தாரையை முழங்கினர். கும்பகர்ணனை எழுப்ப முடியாது, வாடிய முகத்தினராய், வதங்கிய கையினராய் இராவணனை அடைந்தனர்.

கும்பகர்ணன் மேல் குதிரைகளை ஏவுதல்

குதிரைகளை வரிசையாக அணிவகுத்து கும்பகர்ணன் மேல் நடக்கவிட்டான். குதிரைகள் கால் ஓய்ந்து நடக்க இயலாமல் தடுமாறின. குதிரைகளின் செயல் கும்பகர்ணனைத் தட்டிக் கொடுப்பது போல் இருந்தது. மீண்டும் தடம் துயில் கொள்ளலானான். ஐந்நூறு இராக்கதர்கள் புறப்பட்டனர். கும்பகர்ணனை நெருங்கி வந்து, இரண்டு கன்னங்களிலும் வலிய உலக்கையால் இடித்தனர். உலக்கையின் இடியால் கும்பகர்ணன் எழுந்தான்.

கும்பகர்ணன் எழுதல்

துயில் கொண்ட மன்னவனை, நெடுமுசலம் கொண்டு இராக்கதர்கள் தாக்கியதால், கும்பகர்ணன் பொன்றினவன் (இறந்தவன்) எழுந்தது போல் புடை பெயர்ந்து (புரண்டு) எழுந்தான்.

மூவுலகத்தினரும் அஞ்சும்படி எழுந்தான். திசை யானைகள் வருத்தமுற எழுந்ததால் சந்திர சூரியர்கள் அஞ்சி நடுங்கினர். தாமரை மலரில் அமர்ந்துள்ள பிரமன் (பூவுளான்) பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள (புணரி மேலான்) திருமால், கயிலாய மலைத் தலைவன், சிவன் (பொருப்பினான்) ஆகிய மூவரையும் முதல்வராகக் கொண்டுள்ள தேவர்கள் அச்சமுற்றுக் கவலை கொள்ள எளிதாக எழுந்தான்.

துயில் எழுந்த கும்பகர்ணனின் தோற்றம்

கும்பகர்ணனின் தலையிலிருந்து மகுடம் விண்ணினை முட்டி நின்றது. அவனுடைய மேனி விசும்பை மறைத்து நின்றது. கண்கள் இரண்டு பெரிய கடல்களைப் போல் காணப்பட்டன. இலங்கையர் வேந்தன் பின்னோன்(கும்ப) மண்ணினை அளந்து நின்ற திருமாலைப் போல் வளர்ந்து நின்றான்.

6. வீடணன் கண்ட கும்பகர்ணன்

போர்க்கோலம் புனைந்து, போர்க்களம் வருகின்ற கும்பகர்ணனைக் கண்ட இராமன் யாவனோ? என ஐயுற அருகில் நின்ற வீடணன், இராமனின் இணை அடிகளை வணங்கி இனையன கூறலுற்றான்.

தேரேறிப் போருக்கு வருகின்றவன் கும்பகர்ணன், பேரிலங்கை வேந்தன் பின்னவன் (தம்பி) எனக்கு முன்னோன் (அண்ணன்) கருமையை உடைய இயமனைப் போன்றவன். கழலணிந்த, கூரிய சூலத்தையுடையவன் கும்பகர்ணன். சிவபெருமானால் போற்றப்பட்டவனும், பிரமனால் போற்றப்பட்டவனுமாகிய திருமால், யோகத்துயில் நீங்கி எழுந்த காலத்தில் அசுரர்கள் படுகின்ற வேதனைகளையெல்லாம், கும்பகர்ணன் உறக்கத்தினின்று எழுந்த காலத்தில் தேவர்கள் படுவர். தேவர்கள் வேதனை செய்வதை இயல்பாகக் கொண்டவன்.

என் முன்னோன் இராவணனுக்குத் தாழ்வில்லாத ஒரு தம்பியாவான். ஊழிக்காலம் வரை உறங்கும் பெற்றியன். காலனை வென்று அவன் உயிரைப் போக்கும் தன்மையன். கும்பகர்ணனைக் கண்டு காலன் அஞ்சுவான். காலக் கடவுளுக்குக் காலன் இவன். காற்றைவிட விரைந்து செல்கின்ற கால்களையுடையவன். திருமாலை வென்று வெற்றிமாலை சூடியவன். இந்திரனுடைய வெள்ளை யானையைத் தனித்து நின்று சுழற்றிய வீரன்.

யாவருடைய வன்மைக்கும் அடங்காத நெருப்பையும், காற்றையும் பிழிந்து சாறு கொள்ளும் தன்மையுடையவன். விண்மீன்கள் நிலைபெயரும்படி காலினால் கடல்நீரை உந்தும் தன்மையவன்.

மலைபோன்ற மாமிச உணவினன். மேம்பட்ட வலிமையை உடையவன். சிறந்த தவத்தினன். வானம் தழுவிய வரத்தினன். காற்றாடி போன்ற சுழலும் தன்மையினன். நஞ்சுண்டான் நல்கிய சூலப்படையுடையவன். தேவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தவன். இராவணனுக்கு நீதி புகட்டியவன். உறுமின் வெய்யவன். தமையன் இராவணனை மெய்மொழிகளால் கடிந்தவன். இப்பொழுது உறுதி என்பதை மனதில் கொண்டு, தன் உயிரை வெறுத்து உன் எதிரில் வந்து நிற்கிறான் எனக் கூறி இராமனை வணங்கினான்.

7. கும்பகர்ணன், வீடணன் உரையாடல்

கும்பகர்ணனின் தன்மைகளை அறிந்து இராமன், அவனை அழைத்து வரும்படி வீடணனை அனுப்பினான். தம்பியின் வருகை, கும்பகர்ணனை மகிழச் செய்தது. மகிழ்ச்சியின் மயக்கத்தால் வீடணனை உச்சி முகந்து உயிர் மூழ்கப் புல்லினான். பாசத்தால் தழுவி, தெளிவில்லாதவன் போல தனியே வந்த காரணம் வினவினான்.

உய்ந்தனை என்று மனம் மகிழ்ந்திருந்தேன். தேவர்களால் பெற முடியாதவைகளை, நீ இராமனிடம் பெற்றமைக்காக மகிழ்ச்சியடைந்தேன். அறிவு மிகுந்தவனே! இராமனிடத்தில் அமுதத்தை உண்டு கொண்டிருக்கிற நீ நஞ்சை அருந்தலாமா?

இராவணனால் அரக்கர் குலம் அழிந்தாலும், உன்னால் அரக்கர் குலம் பெருமை அடைந்தது. மன்னவனே! (வீடணன்) மகிழ்ச்சி பொருந்தி, என் மனம் வருந்தும்படி இங்கு ஏன் வந்தாய்?

அடைக்கலம் என்று அடைந்த உன்னை, இராம இலக்குவர்கள் கைவிடத் துணிய மாட்டார்கள். அவர்களைச் சேரப் பெற்றமையால் இறப்பு என்னும் பயம் நீங்கப் பெற்றாய். இவ்வுலகில் இராமன் பெயர் இருக்கின்ற வகையில் உனக்குப் பிறப்பு என்னும் இழிவில்லை. எதன் பயன் கருதி இங்கு வந்தாய்? வீடணனே ! பிறர் மனைவியை விரும்புகின்ற எங்களை உறவு என நினைத்தியோ?

தவத்தையும், ஒழுங்கையும், தர்மத்தையும், அறிவையும் பரமனால் அடையப் பெற்றாய்; அழிவில்லாத ஆயுளையும் அவனிடமிருந்து பெற்றிருக்கிறாய்; ஆனால் சாதியால் வந்த இழிபிறப்பு, உன்னைவிட்டு நீங்கவில்லை போலும்.

இராம இலக்குவர்களும், சேனைகளும், எங்களைக் கொல்வதற்கென்றே வில்லேந்தி நிற்கின்றனர். எங்களின் உயிரைக் கவர்ந்து செல்வதற்கு எமனும் தயாராக இருக்கின்றான். வீடணனே! இராமனிடத்து தோற்றுப் போகும் எங்களை நாடி, உன் வலிமையெல்லாம் அழியும்படி வந்துவிட்டாயே!

வீடணனே! எங்களை விட்டு நீங்கி, நீ பிழைக்கவில்லையானால், நாங்கள் இறந்தபின், எள்நீர் நல்கி பிதிர்க்கடன் (ஈமக்கடன்) ஆற்றுவார் யார்?

நாங்கள் இறந்தபின், இராமனோடு இலங்கை மூதூர் வந்து, அரசச் செல்வத்தை அனுபவிக்க வேண்டும். மேற்காணும் செய்திகளைக் கும்பகர்ணன் வீடணனுக்குக் கூறினான்.

வீடணன் உரையாடல்

கும்பகர்ணனின் உரையாடலைக் கேட்ட வீடணன் எனக்கு முன்னவனே, கருணை உள்ளம் படைத்த இராமபிரானை நீ அணுகுவாயானால், உன்னைத் தன்னோடு சேர்த்து அருள்புரிவது மட்டுமின்றி, உன்னை அடைக்கலமாகவும் ஏற்றுக் கொள்வான். மயக்கத்தைக் கொடுக்கும் பிறவியை நீக்கி, முக்தியைக் கொடுப்பான்.

எனக்கு இராமன் தந்த செல்வத்தையும், இலங்கையை ஆளுகின்ற சிறப்பையும் உனக்கு நான் கொடுப்பேன். உன்னுடைய ஏவலின்படி நடப்பேன். உன் தம்பியாகிய எனக்கு மன அமைதியைக் கொடுத்து நம் குலத்தையும் காத்த பெருமை உன்னை நாடி வரும். நீதிமுறைகளை நீ அறிவாய். உனக்குச் சொல்லும்படியாக ஒன்றும் இல்லை. எல்லாம் நீ அறிவாய். நல்லவைகளைச் செய்யும்போது பழி வராது.

துன்பத்தை விளைவிக்கக் கூடியவர்களின் தொடர்பை அறுத்தல் நன்மையே ஆகும். அப்படிப்பட்ட துறவு வீடு பேற்றைத் தரவல்லது. தீவனையை ஒருவன் செய்ய, அவனோடு சேர்ந்து தீவினை செய்தவர்கள் அழிதல் முறையன்று. தீவினை செய்த தாயைத் தாய் என்று நினையாமல், தாயைக் கொன்றதை நீ அறிவாய். துன்பம் தருகின்ற செயல்களை அறிஞர்கள் விரும்பமாட்டார்கள். துன்பத்தை நீக்குவதுதான் அறிவுடைமை.

உன் முன்னவனாகிய இராவணனை, இறந்து விடாமல் காப்பது என்பது முடியாது. போரில் பல வெற்றிகளைப் பெற்றும் நீ வாழவில்லை. தாழ்வையே சந்தித்தாய். உன் இளமையைப் பயனின்றி தூங்கியே கழித்துவிட்டாய். நீண்ட உறக்கம் நீங்கப் பெற்று அழிவில்லாத செல்வமும் நீண்ட ஆயுளும் இப்பொழுது உன்னை வந்து சேர்ந்திருக்கிறது. அழிகின்ற தருமத்தை நிலை நிறுத்துவதற்காக முத்தொழில் இறைவன், இராமனால் வந்திருக்கின்றான். இராமனுடைய அருளைப் பெற்றால், நீ எவர்க்கும் தாழ்ந்தவனாக மாட்டாய். உன்னை அழிக்கின்ற வலிமை படைத்தவர்களும் இல்லை.

வேதத்தின் தலைவனான இராமன், உன் மீதுள்ள இரக்கத்தின் காரணமாக உன்னை அழைத்து வரும்படி என்னை அனுப்பினான். இதுதான் நான் வந்த காரியம். வேறொன்றுமில்லை. கருணை வடிவான இராமனைக் காண வருவாய் எனக் கூறி, கும்பகர்ணனின் காலில் விழுந்து வணங்கினான்.

கும்பகர்ணன் மறுமொழி உரைத்தல்

குருதி நீர் சோர நின்ற கும்பகர்ணன், அழகிய தோள்களையுடைய தம்பியாகிய வீடணனைத் தூக்கித் தழுவிக் கொண்டு மைந்தனே! நீரில் மேல் எழுத்துப் போன்ற செல்வ வாழ்வை விரும்ப, என் தமையன் இராவணனைத் துறந்து இராமனிடம் வரமாட்டேன். என் தமையன் இராவணனுக்காக உயிரை விடுவதையே மேலாக கருதுகின்றேன். என்னுடைய துன்பத்தை நீக்குவதாக இருந்தால், கார் முகில் வண்ணனை விரைந்து சென்று அடைவாயாக.

பிரமன் தந்த வரத்தினால் அழியாத தரும வழியை மேற்கொண்டிருக்கின்றாய். அதனால் உலகத்தில் உள்ளவர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்குவாய். இராமனை

அடைந்து வாழ்தல் உனக்கு தகுதியுடையதாகும். ஆனால் எனக்கு இழிவு பொருந்திய மரணமே புகழுடையதாகும்.

அறிவில்லா அரசன் தீமைகளைச் செய்தால், அவனைச் சார்ந்தவர்கள், அச்செயலைச் செய்ய விடாது தடுத்துத் திருத்தலாம். அவ்வாறு திருத்த முடியவில்லை என்றால், போர் செய்து அவ்வரசன் இறப்பதற்கு முன் இறத்தலே, அவ்வரசனுடைய உணவை உண்டவர்க்கு உரிய செயலாகும்.

தேவர்களும், பிறரும் போற்றுமாறு மூவுலகையும் ஆண்ட நம் தமையன்(இராவணன்) தம்பியர் இன்றி இறப்பதை நான் விரும்பவில்லை. இராவணனைக் கண்டு நகைக்கும்படி, தமையன், தம்பியர் இன்றிப் போருக்குச் செல்வது தகுதியுடையதன்று.

இமயனையும் வெற்றி கொண்ட (எமன்) நான் இலங்கைச் செல்வத்தை விரும்பி, இராமனை வணங்கி வாழமாட்டேன். அனுமனையும், அங்கதனையும், சுக்ரீவனையும் இராம இலக்குவர், நீலன், சாம்பவான், குரங்கு சேனைகளையும் வெற்றி கொள்வேன்.

ஆலகால விடத்தைக் கண்டு அஞ்சி ஓடிய தேவர்களைப் போன்று குரங்குச் சேனைகளை அஞ்சி ஓடச் செய்வேன். நீலக் கடலையும் தோற்கச் செய்வேன். ஊழிக்காற்றை வெல்வேன். உலகத்தை அழிப்பேன்.

இராம இலக்குவரைத் தவிர மற்றவர்களை உயிர் கொண்டு, உலகில் உலவ விட மாட்டேன். என் சொல்லைச் சிறந்ததாகக் கருதினால், தாமதம் இன்றி இராம இலக்குவரை அடைந்தால் எல்லோராலும் புகழப்படுவாய். விரைந்து செல்வாயாக.

என்றும் நிலைத்திருப்பவனே; செல்வம் வரும்போது வரட்டும். அவை போகும்போது சொல்லாமல் போகும். எனவே செல்வம் நிலையானதல்ல. அழிதலைக் காப்பது என்பது இல்லை. உன்னைவிட நல்லறிவாளர்கள் இல்லை. எனக்கு வருத்தம் உண்டாக்காது, இராம இலக்குவரை அடைவாயாக! என மறுமொழி உரைத்தான்.

வீடணன் விடை பெறுதல்

குணத்தில் குன்றென நின்ற வீடணன், கும்பகர்ணனை வணங்கினான். மனம் வாடினான். உயிரும், உடம்பும், ஒடுங்கினான். குமிபகர்ணனிடம் பேசுவதால், இனி பயனில்லை என அறிந்த வீடணன், கடல் போன்ற சேனை கைகுவித்து வணங்கப் புறப்பட்டான். 'இன்றோடு தவிர்ந்தது என் உடன் பிறப்பு' என விட்ட கும்பகர்ணன் உள்ள நீர் எல்லாம் மாறி, கண்களில் உதிர நீர் ஒழுக, வீடணன் சென்ற வழியைப் பார்த்து நின்றான்.

8. இராமன் – கும்பகர்ணன் உரையாடல்

இராமனுக்கும், கும்பகர்ணனுக்கும் நடந்த போரில் அரக்கர் படைகளும், வானரப் படைகளும் அழிந்து ஒழிந்தன. போர்க்களத்தில் அரக்க வீரர்கள் மாண்டனர். யானைகள் அழிந்தன. தேர்கள் ஒடிந்து குவிந்தன. கும்பகர்ணன் தனிப்பட்டான்.

தனிப்பட்ட கும்பகர்ணனின் முகம் நோக்கி, ஒப்பற்ற இராமன் அவனது தனிமைக்கு இறங்கி, என்னோடு போர் செய்து பெரும்படை இழந்தாய்! இப்பொழுது என் முன் தனியே நிற்கின்றாய்! நீதியோனுடன் (வீடணன்) பிறந்தவன் என்பதனால் உன்னுயிரை உனக்குத் தருகின்றேன். இப்பொழுது திரும்பிப் போகின்றாயா? போய்! நாளை வருகின்றாயா? இல்லையென்றால் போர் செய்து இப்பொழுதே சாகின்றாயா? உனக்கு எது விருப்பமோ? ஆராய்ந்து சொல் எனக் கூறலுற்றான்.

உன்னுடைய முன் வினை இன்னும் முடியவில்லை. அதனால்தான் 'வீடணன் அழைத்தபோது வராமல் நின்று விட்டாய். அதனால் உன் வாழ்நாளோடு, நீ பெற வேண்டிய செல்வமும் உன்னைவிட்டு நழுவிவிட்டது. பெருந்துயில் கொண்டு இறப்பதையே தொழிலாகக் கொண்டாய்! உனக்கு எது பொருந்துவதோ அதைச் சொல் என இராமன் கேட்டான்.

கும்பகர்ணன் பதில்

எங்களைப் பிரிந்து, மூக்கொரு காதும் அறுபட்ட என் தங்கை சூர்ப்பனகை போல, மூக்கு அறுபட்ட என் முகத்தைக் காட்டி உயிர் வாழமாட்டேன்.

தாக்கணங்கு அனைய சீதை! பிறர் மனைவி, அவளை விரும்பலாகாது என என் முன்னவனைத் தடுத்தேன். என் முன் தலை நிமிர்ந்து பேசும் வாக்கை இழந்தேன் என வருந்திக் கொண்டிருக்கின்ற நான், பகைவரால் காதொடு மூக்கும் இழந்த பின், மீண்டும் போ! என்றால் அது எங்ஙனம் முடியும்? முடியாது.

உங்களை வென்று, சீதையை இராவணனிடம் ஒப்படைக்கவே நான் வந்தேன். இப்பொழுது குருதி, தோய்ந்த உடம்பினனாய், செங்கை தாங்கிய சிரம் கொண்டு என் தங்கை சூர்ப்பனகை போல இராவணன் எதிரில் போக மாட்டேன்.

நீ! ஒப்பற்ற தலைவன். ஆயினும் வீரர்களின் முறைமையை அறிந்திலை. வாள் கொண்டு தலை கொய்து பின் பொருந்தினால் அது பொருந்துமோ? தக்கது சொல்லவில்லையே! தகாதன சொல்கின்றாய் எனக் கூறிய கும்பகர்ணன், ஆங்கு நின்ற குன்று ஒன்றையும் பெயர்த்து இராமன் மேல் வீசினான்.

போர்க்களத்தில், இராமனும் கும்பகர்ணனும் பேசிக் கொள்வது முரண்பாடாக அமைந்திருக்கிறது. போருக்கென்று வந்தவனைப் "போய்வா" என்பது போர் மரபு அன்று. அதனால்தான் 'போர் முறைமை' அறியாதவன் இராமன், என்று கும்பகர்ணன் குறிப்பிடுகின்றான்.

9. கும்பகர்ணன் இராமனிடம் வேண்டிக் கொண்டது

சிந்தூரச் செம்பசுங்குருதி திசைகள் தோறும் ஆறாய்ப் பெருகி, யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும் இழுத்துக் கொண்டு ஓடுவதைப் பார்த்த, ஆண்மைக் களிறு அன்னை கும்பகர்ணன், இராமனை நோக்கி,

புக்கு அடைந்த புறவு காத்த 'சிபி'

என்னும் வேந்தன் வழியில் வந்தவர்களே! அடைக்கலம் காக்கும் நீர் அரக்கராகிய எம் தீவினைகளை நீக்கிவிட்டு, உம்மிடத்தில் அடைக்கலமாக வந்தடைந்த என் தம்பி வீடணனைக் காக்கக் கடவீர்.

முதற்கடவுளே! அரசர் உருவம் கொண்ட அந்தணனே! தொன்று தொட்டு அறநெறியில் ஒழுகாது, அரக்கர் சாதியில் பிறந்தமையால் சிறுமையுள்ள பாவநெறியை அறியாதவன். உன்னைச் சரணாக அடைந்தான். உனக்கு அடைக்கலமாவன் என அவன் பொருட்டு உன்னை வேண்டினேன்.

அறநெறியில் மாறுபடாதவனே!

வெல்வேல் அரக்கன், உடன்பிறப்பின் பயன் ஓரான் இவனைக் (வீடணன்) கண்டால் கொன்று விடுவான். ஆதலால் இலக்குவனையோ, உன்னையோ, அனுமனையோ, என் தம்பி ஒருபோதும் பிரியாதவனாக இருக்க அருள்புரிவாய் என வேண்டினேன்.

மூக்கில்லாத முகம் என்று முனிவர்கள் சிரிப்பர். அமரர்கள் நகுவர். முனிவர்களும், தேவர்களும் நோக்காவண்ணம் என் கழுத்தை அறுத்து நீக்குவாயாக. அவ்வாறு அறுக்கப்பட்ட தலையைக் கரிய கடலுள் போக்குவாயாக. இது நான் வேண்டுக் கொள்கின்ற வரம் ஆகும். கும்பகர்ணன் வேண்டிய வரத்தை மறுப்பது மரபன்று. வலிய வில்லின் வன்கணையால் கழுத்தைத் துண்டித்துக் கருங்கடலுள் போக்கினான்.

பெரிய புராணம் – எறிபத்த நாயனார் புராணம்

சங்க காலத்தில் கடவுளர் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. கி.பி. ஏழாம் நூற்றாண்டு தொடங்கிச் சைவமும் வைணமும் மலர்ந்து தனித்தனியாக இலக்கியத்திலும் மணம்பரப்பும் நிலை தெளிவாகிறது. பக்தி இலக்கியங்கள் பரவலாய்த் தோன்றிய அக்காலம் சமய மறுமலர்ச்சிக் காலம் எனப் போற்றப்படுகிறது.

புறநெறிகள் தலையெடுத்தபோது ஞானத்தின் திருவுருவமாக எழுந்தருளிய திருஞான சம்பந்தர் அயல வழக்கை வென்று தமிழ் வழக்கை நிலைபெறச் செய்து வாழ்வளித்தார். மனித குலத்தின் உரிமையை முடக்கி அடிமை கொண்ட முடியரசை பலர் அஞ்சியடங்கி உச்சி மேற்கொண்டு பாராட்டிக் கொண்டிருந்த போது அப்பர் "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" எனப் பாடினார். ஏழாம் நூற்றாண்டில் தொடங்கிய இந்தச் சமய மறுமலர்ச்சி இயக்கம் பன்னிரெட்டாம் நூற்றாண்டில் சேக்கிழார் பெருமானால் பேணிப் பெரிதும் வளர்க்கப் பெற்று நிலைநிறுத்தப்பட்டது. பக்தி இயக்கத்தில் ஈடுபட்ட தொண்டர்களின் வரலாற்று நூல் ஒன்று முழுமையாக இல்லை என்ற குறையை நீக்க அவர் முற்பட்டார். புனைகதை வடிவிலமைந்து புகுந்து தலையெடுத்து தமிழ் மக்கள் உள்ளம் கவர்ந்திருந்த புறச் சமயக் காப்பியங்களுக்கு மாற்றாகப் பக்தியின் பயனையும் திருத்தொண்டின் சிறப்பையும் உணர்த்தும் அடியார்களின் உண்மை வரலாற்றை எழுதினார். அதுவே திருத்தொண்டர் புராணம்.

சேக்கிழார் வழிவழிச் சிறந்த வேளாண் மரபில் சேக்கிழார் குடியில் பிறந்தவர். குடிச் சிறப்பை விளக்கிய இவர் குடிப் பெயரையே பெற்றார். இவரது இயற்பெயர் அருண்மொழித் தேவர் என்ற இராம தேவர்; இவர் பெற்றோர் வெள்ளியங்கிரி முதலியாரும் அழகாம்பியுகைமாவர்; தோன்றிய ஊர் தொண்டை நாட்டுக் குன்றத்தூராகும். இவர் அநபாய சோழனுக்கு முதல் அமைச்சராகவும் பொறுப்பேற்று பணியாற்றினார்.

இவரது சைவஇலக்கியத் தொண்டு சிறக்க இறைவனே 'உலகெலாம்' என அடி எடுத்துக் கொடுத்ததாய்க் கூறுவர். அரசனே இவரை யானை மீதமர்த்தித் தான் கவரி வீசிச் சிறப்பித்ததாக இவர் வரலாறு பேசுகிறது.

இவருக்குப் பின் வந்தோர் பலரும் இவரைப் பாராட்டிப் பாடியுள்ளனர். உமாபதி சிவம் 'திருத்தொண்டர் புராண வரலாற்றில் சேக்கிழாரை வாழ்த்தியுள்ளார். சிவஞான முனிவர்,

'தூக்கு சீர்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்லபிரான் எங்கள்
பாக்கியப்பய னாய்ப்பதி குன்றை வாழ்
சேக்கி ழான் அடி சென்னி இருத்துவாம்"

என்று பரவுகிறார் (காஞ்சிப் புராணம் சிறப்பு பாயிரம்)

பெரியபுராணம் என்ற பெயர், நூலின் பெருமை கருதி பிற்காலத்து வழங்கப்பட்டதாகும்.

சேக்கிழார் திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டு திருமுறைகள் திருக்கோவிற் செம்பேடுகள் சாசனங்கள் ஆகியவற்றிலிருந்து அச்சான்றும் செவிவழிச் செய்திகளாய் அமைந்த புறச்சான்றும் தேடி முறையான வரலாற்று நூலாகத் தமது பெரிய புராணத்தைச் செய்தார். இதில் மனித குலத்திற்கு தேவையான செய்திகள் பலவும் பேசப்பட்டுள்ளன. சமுதாயத்தில் அனைத்து மட்டத்திலும் அரனடிக்கு அன்பு பூண்டு விளங்கிய அனைத்து பெருமக்களின் வரலாற்றையும் எந்தவித வேறுபாடும் இன்றி இயல்புற எடுத்துக் கூறியுள்ளார்.

இந்நூல் இரண்டு காண்டங்களும் பதிமூன்று சருக்கமும் 4253 விருத்தப்பாக்களும் கொண்டது. இந்நூற்பயன் பேரின்ப முத்தி உதவுவதாகும். சிறப்பு மிக்க இந்நூலின் சுருக்கத்தில் இடம்பெற்ற எரிபத்தநாயனார் புராணம் பாடப்பகுதியாக உள்ளது.

சிவனடியார் அறுபத்து மூவர் வரலாற்றை முதலில் பாடிய சுந்தரர் தம் 'திருத்தொண்டத் தொகையில் 'இலை மலிந்த வேம்பின் எறிபத்தார் என பாடியுள்ளார். அதை விரித்துரைத்த நம்பியாண்டார் நம்பிகள் தம் 'திருத்தொண்டர் திருவந்தாதியில்

"ஊர்மதில் மூன்(று) அட்ட உத்தமர்க்(கு) என்(று) ஓர் உயர் தவத்தோன்
தாரமலர் கொய்யா வருபவன் தண்டின் மலர்பறித்த
ஊர்மலை மேற்கொள்ளும் பாகர் உடல்துணியாக்குமவன்
ஓர்மலி மாமதில் சூழ் கருவூரில் எறிபத்தனே"

எனப் போற்றியுள்ளார். இவ்வரலாற்றை விரித்து சேக்கிழார் 56 பாடல்களில் பாடுகிறார்.

பாடல் : 1

மல்லல்நீர் ஞாலம் தன்னுள் மழவிடை உடையான் அன்பர்க்கு
ஒல்லை வந்துற்ற செய்கை உற்றிடத்(து) உதவுநீர் ஆர்
எல்லையில் புகழின் மிக்க எறிபத்தர் பெருமை எம்மால்
சொல்லலாம் படித்தன்றேனும் ஆசையால் சொல்லலுற்றாம்

பொருள்

இந்நிலவுலகம் நீரால் சூழப்பெற்றது. இதில் வாழ்ந்த தொண்டர்களில் ஒருவர் எறிபத்தர் (அவரது பெருமையும் சிவத் தொண்டின் தன்மையும் என்னவெனில்) இளமையான எருதினை ஊர்தியாக கொண்ட சிவபெருமானின் அடியவர்க்கு துன்பம் நேர்ந்தால் உடனே விரைந்து வந்து அத்துன்பத்தைப் போக்க முயல்வதாகும் (இச் செயலால்) எல்லையற்ற புகழ் பெற்றவர் எறிபத்தர். அவர் பெருமை என் சொல்லில் அடங்குவதன்று எனினும் அதை எடுத்துரைக்கும் ஆவல் எனக்கு இருப்பதால் (அவர் வரலாற்றை) சொல்ல தொடங்குகிறேன்.

விளக்கம்

எறிபத்தர் என்பது காரணப் பெயராகும் இறைவனின் அடியார்க்கு ஏற்பட்ட துன்பத்தைப் போக்குவதற்கு மழுவாயுதத்தை எறிந்து பத்தி செய்பவர் என்பது பொருளாகும். இறைவனின் ஊர்தியான எருது அறத்தின் உருவாதலின் மூப்பின்றி என்றும் இளையதாயிற்று. துன்பம் தீர்க்க இவர் முன்வரும் தீவிரமும் விரைவும் சுட்ட 'ஒல்லை' என்றார்.

பாடல் : 2

பொன்மலைப் புலிவென்று) ஒங்கப் புதுமலை இடித்துப் போற்றும்
அறநெறி வழியே ஆக அயல்வழி அடைத்த சோழன்
மன்னிய அநாயன் சீர் மரபின்மா நகரம் ஆகும்
தொல்நெடும் கருவூர் எனும் சுடர்மணி வீதி மூதூர்

பொருள்

சோழர் குடித்தோன்றிய அரசரில் ஒருவர் கரிகாலர். அவர் இமயம்வரை படையெடுத்து சென்று வென்றார். தம் வெற்றிக்கு அடையாளமாக அம்மலையின் உச்சியில் புலிக் கொடியை பொறித்தார். அம்மலையை இடித்துக் காவல் பொருத்தப் புதுவழி ஒன்று அமைத்தார். அந்த வழியே அனைவர்க்கும் வழியாகுமாறு ஏனைய வழியெல்லாம் அடைத்தார். அவர் காலம் முதல் அவர் வழியில் தோன்றிய அநபாயச் சோழர் காலம் வரை வழிவழியாகச் சோழரின் தலைநகரத்தில் ஒன்றாக இருந்து வந்த சிறப்புடையது கருவூர் எனும் ஊராகும். அவ்வூர் மிகவும் பழமையானது. ஒளியும் அழகும் உடைய வீதிகள் நிறைந்தது.

விளக்கம்

சோழர்கள் இமயம்வரை படையெடுத்துச் சென்று புலிக்கொடியை பொறித்து வந்த செய்தி பிற இலக்கியங்களிலும் பேசப்படுவதாகும். 'கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியிற் சூட்டிய வளர்புலிச் சோழர்' எனச் சேக்கிழாரே பிறிதோரிடத்துக் கூறியுள்ளார். "பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணான்டான் மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேன்தன்" எனச் சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு 'அயல்வழி அடைத்த' எனச் சுடப்பட்டது. நாடுகாவல் பற்றிய செய்தியாகும். நாட்டிற்கு வடவெல்லையான இமயத்தில் அதற்கு அப்பாலுள்ள நாடுகளிலிருந்து வருவோர் நுழைவதற்கான வழிகள் பல இருப்பின் பாதுகாப்பு குறையும். எனவே தான் இமயத்தை வெற்றி கொள்ளுமுன் அங்கிருந்த பல வழிகளையும் அடைத்து புதுவழி ஒன்று உண்டாக்கி அதிலும் அயலார் நுழையாதவாறு காவல் அமைத்து ஆண்ட செயலே இங்கு பேசப்படுகிறது. பெரியபுராணத்தில் இடம்பெறும் புகழ்ச்சோழர் என்பவரும் தம்மொடு மாறுபட்ட அயலானுடைய மலையரனை வென்று துரத்திய செய்தி உண்டு. எல்லைப்புற பாதுகாவல்பட இன்றும் இயங்குகின்றதன்றோ?

பெரியபுராணம் எழுதற்கு காரணமாக அமைந்தவன் அநபாயன் எனவே நூலின் சேக்கிழார் பதினொரு இடங்களில் அவனைப் பாராட்டிக் கூறுவார். அப்பதினோர் இடங்களில் இஃது ஒன்றாகும்.

பாடல் : 3

மாமதில் மஞ்சுசூழும்; மாளிகை நிரைவின் சூழும்'
தூமணி வாயில்சூழும்; சோலையில் வாசம் சூழும்'
தேமலர் அளகம்சூழும் சிலமதி தெருவு சூழும்;
தாம் மகிழ்ந்து) அமரர் சூழும் சதமகன் நகாழ் தாழ

பொருள்

மனிதரினும் உயர்ந்தோர் தேவர். மனிதர் வாழும் நிலவுலகினும் சிறந்தது தேவருலகின் இந்திரபட்டினம். அந்தபட்டினமும் இதனினும் தாழ்ந்தது எனச் சொல்லதக்க சிறப்புடையதாகும் எறிபத்தரின் ஊர். அந்நகரில் வானில் செல்லும் மேகங்கள் சூழுமளவு மதில்கள் உயர்ந்து நிற்கும். மாளிகைகள் வரிசை வரிசையாக வானளாவ உயர்ந்திருக்கும். வாயில்களில் தூய்மையான மணிகள் பதிக்கப் பெற்றிருக்கும். மலர்கள் மலர்ந்து மணம் வீசும் சோலைகள் நிறைய உண்டு. தேன் பொருந்திய மலர்களைக் கூந்தலில் அணிந்தவரும் மதி போன்ற முகத்தினருமாகிய பெண்கள் சிலர் தெருவிலே நடந்து செல்வர்.

விளக்கம்

சோழர்களின் தலைநகரங்களில் ஒன்றாதலின் கருவூர் உயர்ந்த மதிலரண் பெற்றிருந்தது வானில் செல்லும் மேகங்கள் தொடுமளவு உயர்ந்தவனாதலின் 'மாமதில் மஞ்சு சூழும்' என்றார 'மஞ்சு துஞ்சி இஞ்சி' எனப் பிறரும் பாடுவர் அநீதி நிகழ்ந்தால் அதனைப் போக்குதற்கு அரசனிடம் முறையிடுவதற்குரிய கருவியான ஆராய்ச்சி மணி அரண்மனை வாயிலில் தொங்கு மாதலின் 'தூமணி வாயில் சூழும்' என்றார். அழகிய மணிகள் இழைத்த வாயில் என்றும் பொருள் கொள்ளலாம். சோழ அரசர்களில் காரணமாகவே கருவூர்க்குத் தங்கள் நகரம் தாழ்ந்தமை பற்றி தேவர்கள் வருந்தாமல் இருந்தனர் எனச் சுட்ட மகிழ்ந்து தாழ் என்றார்.

புராணப்படி இந்திரன் தன்னைப் பகைத்த அசுரனை வெல்ல முசுகுந்தனின் உதவி வேண்டினான். இவரும் இந்திரவுலகம் சென்று அசுரனை வென்றார். அதற்குப் பரிசாகச் செம்பொன்னாலான தியாகேசர் உருவைப் பெற்றார். அதை திருவாரூரில் நிறுவினர். மேலும் இவ்வுதவியைப் பாராட்டும் வகையில் இந்திரன் தன் மகள் தெய்வானை திருமணத்திற்கு மூசுகுந்தனுக்கு அழைப்பு அனுப்பி சிறப்பித்தான். இவ்வரலாறு கந்த புராணம் எனும் நூலில் காணப்படுகிறது.

தேவருலகில் மேகங்கள் இந்திரனுக்கு ஊர்தியாகும் பயன்மட்டுமே தருவன; கருவூரிலோ மழைபொழிந்து தானம் சிறப்பு பூசைக்கெல்லாம் உதவின. தேவருலச் சோலை கற்பகப்பூ ஒன்றே கொண்டது; கருவூர்ச் சோலைகளோ கற்பகத்தின் மணத்தை வெல்லும்

பலவகைப பூக்கள் கொண்டன தேவருலகில் சந்திரன் ஒருவனே வானில் உலவுவான். கருவூரிலோ முகங்களாகிய மதில்கள் பல தெருவில் உலவும் இவ்வாறு பலவகையிலும் கரூவூர் தேவலோகத்தைவிட உயர்ந்திருந்தது என்பது உட்குறிப்பாகும்படி பாடலின் சொற்கள் அமைந்துள்ளன.

பாடல் : 4

கடகரி துறையில் ஆடும்; களிமயில் புறமயில் ஆடும்
அடர்மணி அரங்கில் ஆடும்; அரிவையர் சூழல் வண்(டு) ஆடும்
படர்ஒளி மருகில் ஆடும்; பயில்கொடி கதிர்மீது ஆழு
தட நெடும்புவி கொண்டாடும் தனிநகர் வளமை ஈதால்

பொருள்

நீர்த்துறைகளில் மதயானைகள் விளையாடும்; மயில்கள் களிப்புடன் நகரை அடுத்துள்ள காடுக்களில் ஆடும்; நெருங்கிய மணிகளையுடைய ஆடரங்குகளில் ஆடற்பெண்களின் கூந்தல் மேல் வண்டுகள் ஆடும். ஒளிபடரும் வீதிகளில் கட்டப்பட்டுள்ள கொடிகள் கதிரின்மீது ஆடும். நீண்டு அகன்ற உலகம் கொண்டாடுவதாகிய இவ் ஒப்பற்ற கருவூரின் வளமை இத்தகைய தாகும்.

விளக்கம்

யானைகளுக்கு இயல்பாகவே நீராடலில் விருப்பம் உண்டு மதத்தினால் அவ்விருப்பம் மிகும். எனவே 'கடகரி துறையிலாடும்' என்றார். ஆடல் மகளிர் கூந்தலிற் சூட்டிய புதுமலர்களை வண்டுகள் மொய்த்திருக்கும். இயல்பாகவே மலர்கள் சுற்றிசுற்றி பறக்கும் அவை மகளிர் ஆடுவதால் ஏற்படும் அசைவுகளாலும் எழுந்தெழுந்து பறக்குமாதலின் 'அரிவையர் சூழல் வண்டாடும்' என்றார். அரங்குகளில் அரிவையர் ஆட்டம் விழாக்களையும் மகிழ்ச்சிக் காலங்களையுமே குறிக்குமாதலின் பசியும் பிணியும் இல்லா வளவாழ்வுடையது கருவூர் என்பது பெறப்படும். இதற்கு ஒப்புடையநாடேதும் இன்றாதலின் 'தனிநகர்' என்றார். முற்பாட்டில் கூறியபடி இந்திரவுலகம் மட்டுமன்றி இவ்வுலகம் கொண்டாடும் ஊர் என்பது குறிப்பு.

இப்பாடலில் தனித்தனியே கூறப்பட்ட செய்திகளை ஒருங்கிணைந்து உரையாசிரியர் ஒருவர் இப்பாடற்கு நயம்படப் பொருளுரைப்பார். அவர் துறையில் படிந்தாடும் யானைகளை மேகமென்று எண்ணி மயில்கள் ஆடின இந்த மயில்களில் ஆட்டம் எம் தலைவியர் ஆடலுக்கு இணையாகாது எனச் சுட்டி வண்டுகள் ஆடல் மகளிர் கூந்தலையே சுற்றின. இவ் வெற்றியை விண்ணிற்கு அறிவுறுத்த ஆடல் மகளிரை ஒத்த கொடிகளும் உயரே ஆடின. இது கண்டு உலகம் கொண்டாடி மகிழ்ந்தன.

பாடல் : 5

மன்னிய சிறப்பின் மிக்க வளநகர் அதனின் மல்கும்
பொன்னியல் புரிசை சூழ்ந்து சுரர்களும் போற்றும் பொற்பால்
துன்னிய அன்பின் மிக்க தொண்டர்தம் சிந்தை நீங்கா
அந்நிலை அரனார் வாழ்வ(து) ஆனில எனும் கோயில்

பொருள்

நிலைபெற்ற சிறப்பும் வளமும் கொண்ட கருவூரில் ஆனிலை எனும் சிவன்கோவில் ஒன்றிருந்தது. அது தேவரும் வாழ்த்துகின்ற சிறப்பு மிகுந்த பொன்வேலைப்பாடு கொண்ட திருமதிலாற் சூழப்பட்டது உழைப்பும் அன்பும் நிறைந்த தொண்டர்களின் சிந்தையின்றும் நீங்காமல் இறைவன் உறைவது போல் நிலைப்பெற்றது.

விளக்கம்

கோவில் திருமதில் அதில் சிகரங்கள் மதிவாயில் முதலிய இடங்களில் பொன்வேலைப்பாடுகள் செய்தல் வழக்கமாதலின் 'பொன்னியல்' என்றார். பொன் போன்ற இயல் அழகிய இயல்பு என்றும் கொள்ளலாம். தேவர்களுக்குரியது பொன்னாடு பொன்னாலும் பொற்பாலும் ஆதனினும் சிறந்து இது விளங்குவதால் சுரர்களும் போன்றினார்கள் என்பது குறிப்பு. திருக்கோயிலைக் காட்டிலும் அன்பர் சிந்தையே அரனுக்கு உகந்த இடமாதலின் அதனையே உவமை கூறினார். காமதேனு என்ற பசு வணங்கி நற்பேறு பெற்ற தலமாதலின் ஆனிலைப் எனப் பெயர் பெற்றது என்பது பேரூர்ப் புராணம் கூறும் வரலாறு. பசுக்களாகிய ஆன்மாக்களின் பாசத்தை அரித்து (போக்கி) ஆட்கொள்ளும் பதி என்ற குறிப்பு பெற அரனார் என்றார்.

பாடல் : 6

பொருள் திருமறைகள் தந்த புனிதரை இனிது அக்கோயில்
மருள்துறை மாற்றும் ஆற்றால் வழிபடும் தொழிலர் ஆகி
இருள் கடு ஒடுங்கு கண்டத்(து) இறைவர்க்(கு) உரிமை பூண்டார்க்(கு)
அருள் பெரும் தொண்டு செய்வார் சுவர் எறிபத்தராவார்.

பொருள்

மெய்ப்பொருள் உணர்த்துன மறைகள். அவற்றையும் கடந்து நிற்கும் தூயவர் சிவபெருமான். அவரை அத்திருக்கோயிலில் இனிதாக மருளாகிய பிறவிப் பகையை மாற்றும் நெறியால் வழிபட்டிருந்தார் ஒருவர். இருள் போன்ற நஞ்சானது ஒடுங்கி நிற்கும் கழுத்தினையுடைய சிவனுக்கு உரிமையாகிய அடியவர்க்கு அவனது அ ள் வழியே நிற்கும் பெரிய தொண்டு செய்தார். அவர் பெயர் எறிபத்தர் ஆகும்.

விளக்கம்

உயிர்களுக்கு உறுதி தருவன அறம், பொருள், இன்ப ம், வீடு எனும் நாற்பொருள்கள். அவையே மெய்ப்பொருள்கள். அவற்றை உணர்த்துவன திருமறைகள் மறைகள் நாதமாகிய பிரணவத்தின்றும் உதிர்பவை. இறைவன் நாத முடிவில் விளங்குபவன்; வேதத்தால் விளையும் ஞானம் அபரஞானம் கலைஞானம் எனவும்படும். இறைவன் அபரஞானத்தால் உணரப்பட்டான். உணர்வதற்கரிதாகிய மெய்ஞ்ஞானமான பரஞானத்தால்தான் அறியப்படுபவன். எனவே 'மறை கடந்த' என்றார். 'மறைகள் தந்த' என்பது பாடமானால் உலகம் உய்ய மறைகள் தந்த என்பது பொருளாகும். 'பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மணருள் ஆன் ஆம் மாணாப் பிறப்பு' என்பது

வள்ளுவம். ஆணவத்தால் விளையும் மருளாள் மோகம் முதலிய துறைகள் பிறக்கும் சிவாகம் சீவமே அதனை மாற்றும் ஆறு ஆகும். நஞ்சைத் தடுக்க வல்லமை பெற்றவரே மருளை மாற்றும் ஆற்றலினர் என்பது குறிப்பு, வழிபடும் தொழிலர்' என்றதனால் எரிபத்தரின் அரன்பணியும் 'பூண்டார்க்கு அருட்பெருந்தொண்டு' என்றதனால் அவரது அடியார் பணியும் உணர்த்தப்பட்டன. இறைவன் அடியார் இருவர்க்கும் தொண்டு செய்தவர் அவர்.

பாடல் : 7

மழைவளர் உலகில் எங்கும் சைவம் ஓங்க
அழல் அவிர் சடையான் அன்பர்க்(கு) அடாதன அடுத்தபோது
முழைஅரி என்னத் தோன்றி முரண்கெட எறிந்து தீர்க்கும்
பழமறை பரசும் தூய பரசுமுன் எடுக்கப் பெற்றார்

பொருள்

மழையினால் நிலைபெற்றிருப்பது உலகம். அந்த உலகில் சைவம் எல்லாவிடத்தும் நிலைபெற்றுள்ளது சைவம் ஓங்கியுயர வழிச்செய்தவர் எரிபத்தர் அவரிடம் எதிர்த்தோர் வலிமை கெடுமாறு எறியவல்லதும் பழைய வேதங்களால் போற்றியுரைக்கப்பட்டதுமான மழுவாயுதம்_ என்றுண்டு. நெருப்புப் போன்ற நிறமும் விரித்த சடையும் உடைய சிவபெருமானின் அன்பர்க்கு வரத்தகாத துன்பம் வருமாயின் குகையினின்றும் (இரையை நோக்கிய பசியுடன்) விரைந்து வெளிப்பாயும் சிங்கம்போல் விரைவில் தோன்றித் தீர்ப்பார் எரிபத்தர்.

விளக்கம்

வான்சிறப்பு என்பது வள்ளுவர் போற்றிய ஒன்று. நீரின்று உலகம் அமையாது. விசும்பின் துளி வீழாமல் பசும்புல்லும் காண இயலாது எனவே 'மழைவளர் உலகு' என்றார் 'ஆண்டு உலகு ஏழ் அனைத்திலும் வைத்தார் தாமே அங்கங்கே சிவமாகி நின்றார் தாமே' யாதலின் உலகில் எங்கும் மன்னிய (நிலைபெற்ற) சிவம்' என்றார். இராமனிடம் பேரன்பு கொண்ட தசரதன் இரண்டு வேண்டிய கைகேயிடம் பின்னையது போற்றிப் பேசவும் பொறாத மறநீ' என்றதாகக் கம்பர் பாடுவார் ஈண்டும் அரசன் அடியார்க்கு வரும் இடையூறு பற்றிச் சொல்லானும் சுட்ட விரும்பாத சேக்கிழார் 'அன்பர்க்கு அடாதன அடுத்த போது' என்றார். புல போலன்றிச் சிங்கம் பசித்தாலன்றிக் குகையை விட்டு வெளிவராது. அங்ஙனம் தேவை கருதி அரிதாக வெளி வருகையில் எவ்வகை எதிர்பினுக்கும் அஞ்சாமல் வீரத்துடன் விரைந்தெழும். எரிபத்தரும் தாமாக எவருடனும் மாறுபாடு கொள்ளார். அடியாரைக் காக்க வேண்டிய தேவை வருகையில் தீவிரத்துடன் எழுவார். எனவே 'முழை அரி என்னத் தோன்றி முரண்கெட எறிந்து தீர்க்கும்' என்றார். பகைவரை அழிக்காமல் பகையை அழிப்பதே எரிபத்தர் செயல். எனவே முரணுபவர் கெட எண்ணாமல் 'முரண்கெட' என்றார். பரசு சிவன் கை ஆயுதமாகும். 'பரசு ஹஸ்தாய நம' என்பது சிவ அஷ்டோத்ரம் எனவே ' மறைபரசும்' (புகழும் வணங்கும்) பரசு என்றார். அது அடியார் துன்பம் நீக்கிச் சிவதர்மம் செய்யத் துணை நிற்பதுடன் அடாதன செய்தோரையும் தண்டித்து அவரைத் திருத்தி

நல்வழிப்படுத்தலும் செய்வதால் 'தூயபரசு' ஆயிற்று 'கோல் மழுவால் ஏறுண்டு குற்ற நீக்கிச் சுற்றமுடன் மூல முதல்வர் சிவலோகம் எய்தப் பெற்றான்" என்று சண்டீகர் புராணமும் பேசும். அடியவர் பணிகள் இருவகைப்படும். அவர் வேண்டுவன கொடுத்தல் ஒருவகை. இளையான்குடி மாறர், இயற்பகையார் ஆகியோர் செய்தன அவ்வகை அடியார்க்கு அடாதன அடுத்தபோது முன்வந்து தீர்த்தல் மற்றொருவகை எரிபத்தர் விறல் மிண்டர் சத்தி நாயனார் ஆகியோர் திருப்பணிகள் இவ்வகையாகும்.

பரசினால் அடாதன நீங்கின; அவை நீங்கிச் சைவம் ஓங்கிற்று; அது ஓங்க மழை மன்னிற்று' அது மன்ன உலக வளரும் எனத் தொடர்பு கூறலாம்.

பாடல் : 8

அண்ணலார் நிகழும் நாளில் ஆனியை அடிகளார்க்குத்
திண்ணிய அன்பு கூர்ந்த சிவகாமி ஆண்டார் என்றும்
புண்ணிய முனிவனார்தாம் ழப்பறித்து அலங்கள் சாத்தி
உள்நிறை காதலோடும் ஒழுகுவார் ஒருநாள் முன்போல்

பொருள்

பெருமையுடைய எறிபத்தர் இவ்வாறு தொண்டு செய்து வாழ்ந்து வந்தார். அவ்வூரிலே சிவகாமியாண்டார் என்னும் புண்ணியம் மிகுந்த தவமுனிவர் ஒருவர் வாழ்ந்தார். அவர் திருவானிலைக் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனிடம் பேரன்பு கொண்டவர். ஆகமவிதிப்படி பூப்பறித்து மாலைகட்டி இறைவனுக்கு சாத்தி மனம் நிறைந்த பக்தியுடன் வாழ்ந்தார். ஒருநாள் தம் அன்றாட வழக்கபடியே பூக்கொய்து இறையை வழிபடப் புறப்பட்டார்.

விளக்கம்

பசுபதீச்சுரம் என்ற கோவிலே ஈண்டு ஆனிலை எனப்படுகிறது. எதுவரினும் கலங்காத பக்தியினர் என்பதால் 'திண்ணிய அன்பு' என்றார் சிவகாமி என்னும் உமையது நாயகனாதலின் இறைவனுக்கே சிவகாமி ஆண்டார் என்னும் பெயருண்டு. இப்படியவர் அப்பெயர் கொண்டவர் எனலாம் அல்லது சிவனிடத்து பேரன்பு (காமம்) கொண்ட தம்மை ஆண்டவர் அவர் என்ற பொருளில் இவருக்கு ஏற்பட்ட காரணப் பெயராதலும் கூடும்.

சிவகாமி ஆகிய தன்னை ஆண்டவர் என்பது கருத்து.

இறைவனுக்கு பூமாலை சாத்தும் திருப்பணி பெருஞ்சிறப்புடையதாகும். முருகநாயனார் என்பாரும் இப்பணி ஆற்றியவர். இப்பணியின் சிறப்பு "துளக்கினன் மலர் தொடுத்தால் தூய விண் ஏறலாகும் என்பதால் பெறப்படும்.

இறைவனை மன, மொழி, மெய் எனனும் மூன்றாலும் வணங்க வேண்டும். "உள்நிறை காதலோடும் ஒழுகுவார்" என்பதால் மனமும் "சாத்தி" என்னும் மெய்யும் இறை

வழிபாட்டில் ஈடுபட்டமை பெறப்படும். தூய்மை கருதித் தம் வாயைக் கட்டியவாறு இப்பணியில் ஈடுபட்டார் என்பது அடுத்து வரும் பாடலால் புலனாகவிருக்கும் கருத்து' எனவே சொல்லால் வழிபட்டமை சொல்லப்படவில்லை.

இறைவனது திருவருளையும் அடியவர் சிறப்பையும் உலகம் உணர்தற்குரிய நிகழ்ச்சி ஒன்று நடைபெறவிருக்கும் நாளாதலின் ஒப்பற்றது என்ற பொருள்பட 'ஒருநாள்' என்றார்.

பாடல் : 9

வைகறை உணர்ந்து போந்து புனல்மூழ்கி வாயும்மூட்டி
மொய்ம்மலர் நெருங்கு வாச நந்தன வனத்து முன்னிக்
கையினில் தெரிந்து நல்ல கமழ்முகை அலரும் வேலைத்
தெய்வ நாயகர்க்குச் சாத்தும் திருப்பள்ளித் தாமம் கொய்து

பொருள்

நாள் தோறும் இறைவனுக்கு பூமாலை சாத்தும் தொண்டில் ஈடுபட்டிருந்த சிவகாமியாண்டார். ஒரு நாள் காலை வழக்கம்போல் விடியாற்காலையில் துயிலெழுந்தார். குளிர்ந்த நீரில் நீராடி எச்சி தெறித்து விடாவாறு வாயைக் கட்டிக்கொண்டு கொத்து கொத்தாக மலர்கள் பூத்து மணம் நிறைந்துள்ள நந்தவன சென்றார். மலர் பறித்து பழகிய கைகளால் தெரிந்தெடுத்து நல்ல மணமுடையனவும் அன்று மலர்கின்ற பருவத்தில் உள்ளளவுமாகிய அரும்புகளை அறிந்து அவற்றுள்ளும் இறைவனுக்கு சாத்துதற்குரிய திருப்பள்ளி தாமங்களைக் கொய்து கொண்டார்.

விளக்கம்

இறைவனை வழிபடுவதில் சரியை கிரியை யோகம் ஞானம் என நான்கு நெறிகள் உண்டு. பூமாலை சாத்துதல்

பாடல் : 10

கோலப் பூங்கூடை தன்னை நிறைத்தனர் கொண்டுநெஞ்சில்
வாலிய நேசம் கொண்டு மலர்க்கையில் தண்டும் கொண்டும் அங்கு
ஆலயம் அதனை நோக்கி அங்கணர்க்(கு) அமைத்துச் சாத்தும்
காலை வந்(து) உதவ வேண்டிக் கடிதினில் வாரா நின்றார்

பொருள்

அழகிய பூக்கூடையை நிறைத்துக் கொண்டு மனத்தில் தூய அன்பு கொண்டு அழகிய கையில் தண்டினை ஏந்தியவாறு இறைவனுக்கு மாலைகட்டிச் சாத்தும் காலையில் உதவ வேண்டித் திருக்கோவிலை நோக்கி விரைந்து நடந்தார்.

விளக்கம்

தண்டு எனச் சுடப்பட்டது. பூக்கூடையை தொங்கவைத்துத் தாங்கிவரும் தண்டாகும். இதன் தலைப்பகுதியில் ஒரு வளைவிருக்கும். அதில் கூடை தொங்கும்

இவ்வளைவு மரஞ்செடி கொடிகளை ஒடியாத வண்ணம் மெல்ல வளைத்துப் பறித்தற்காகும். 'வன்தனித்' தண்டில் தூங்கும் மலர்கொள் பூக்கூடை" என்றும் தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு கொம்புதைப்ப" என்றும் பிற இடங்களில் இது சுட்டப்படுகிறது. பூசைமுறைக் காலம் தாழ்த்தாமல் உதவும் பொருட்டு மூப்புடையராயினும் தம் அன்பினால் விரைந்தாராதலின் 'கடிதினில்' என்றார்.

பாடல் : 11

மற்றவர் அணைய இப்பால் வளநகர் அதனின் மன்னும்
கொற்றவர் வளவர் தங்கள் குலப்புகழ்ச் சோழனார்தம்
பற்றலர் முனைகள் சாய்க்கும் பட்டவர்த்தனமாம் பண்பு
பெற்ற வெங்களிறு கோலம் பெருகு மா நவமி முன்னாள்

பொருள்

சிவகாமியாண்டார் கோயிலை நோக்கி விரைந்து கொண்டிருந்த வேளையில் வளமான அத்திருநகரில் நிலை பெற்ற அரசரும் சோழர்குலத்தில் தோன்றிய வருமான புகழ்ச் சோழ நாயனார்க்கு உரியதும் பகைக்களத்தில் பிறரை வெல்லும் திறம் பெற்றதுமான பட்டவர்த்தனம் என்னும் யானை மிகுந்த மகாநவமி அன்று தெரிவில் ஓடி வந்தது. சரியைப் பணியாகும் அப்பணி செய்வோர் பின்பற்றவேண்டிய நெறிமுறைகள் 8 முதல் 10 வரையுள்ள 3 பாடல்களில் உணர்த்தப் படுகின்றன. வைகறை என்பது கதிரவன் தோன்று முன் ஐந்து நாழிகை அளவுள்ள சிறுபொழுதாகும். நீரான் அமையும் புறத்தூய்மை அகத்தூய்மைக்கு அடிப்படையாதலின் வழிபாட்டின் முன் நீராடல் மரபு இறைவனுக்குரிய மலர் பறிக்கையிலும் மாலைகட்டிச் சாத்துகையிலும் வாயினின்றும் தூய்மையற்ற வாயு, வாய்நீர், ஆவிம் தும்மல், இருமல், உமிழ்நீர், முதலியன வெளிவந்து மலர்களின் தூய்மையைக் கெடுக்குமாதலின் வாய்கட்டி மலர்பறித்தார். அன்றியும் மலர்களின் மணம் தன் மூக்கிற் புகின் இறைவனுக்குரியவற்றைத் தான் முதலில் நுகர்ந்து எச்சில் ஆக்கியதாகும். அது தவிர்த்தற் பொருட்டும் துணியாற் கட்டியிருக்கலாம். இன்றும் கோவிற்பணி செய்வோரிற் பலர் இவ்வழக்கத்தை மேற்கொண்டிருத்தல் காணலாம்.

இவர் மலர் பறிப்பது இருளும் ஒளியும் கலந்த விடியற் பொழுதாலின் கண்ணால் தெளிவாகக் காண இயலாது. எனவே மலர்கள் பறித்துப் பறித்து பழகிய கைகளில் தீண்டும் போதே அம்மலரின் தம்மையே அறியும் ஆற்றல் பெற்ற அவர் 'கையினில் தெரிந்து பறிப்பதாகக் கொள்ளலாம். அரும்பாகப் பறித்து மாலை கட்டி இறைவனுக்குச் சாத்துகையில் அவை மலர்ந்து மணம் வீசி 'அலரும் வேலை (வேளை) சாத்தும்' என்றார். காலையாயின் மலர்கள் வண்டுகள் மொய்க்குமாதலின் அவை இறைவனுக்குச் சாத்தப்படும் தகுதியை இழந்துவிடும். எனவே மலர்கள் மலர்தற்கு முற்பட்ட பருவத்திலும் காலத்திலும் பூக்கொய்யும் மரபினை இங்கே உணரலாம். "யாதோர் தேவர் எனப்படுவோர் கெலாம் மாதேவன் அலால் தேவர் மற்றில்லையே" (அப்பர்) ஆதலின் 'தெய்வ நாயகர்' என்றார். சிவாகமங்களும் புஷ்பவதி முதலான நூல்களும் அந்த தெய்வங்களுக்கு சாத்த வேண்டிய மலர்கள் குறித்து பல நியதிகள் உள்ளன. அவற்றை அறிந்து 'சாத்தும் திருபள்ளித் தாமம் என்க'.

மகாநவமி என்பது புரட்டாசி மாதத்தில் வளர்பிறை முதல் நாள் தொடங்கி ஒன்பது நாள் அம்மனை நோக்கி காக்கப்படும் சைவ நோன்பு இதனுள் பூசைச் சிறப்பு இரவில் நடைபெறுமாதலின் நவராத்திரி என்றும் மறுநாளான பத்தாம் நாள் பூசையுடன் இந்நோன்பு முடிவதால் அதையும் சேர்த்துத் தசரா என்று அழைப்பர். தேவி பூசையான இதை வடமொழியாளர் துர்க்கா பூசை என்பர். நகர் முழுவதும் கோவிலிலும் மனையிலும் பலவகையால் அலங்கரித்துத் தேவி கொலுவிருப்பது சிறப்பாகக் கொண்டாடப் பெறுவது மரபு எனவே கோலம் பெருகு மகாநவமி என்றார் இன்றும் நவராத்திரி கொலு கொண்டாடப்படுகிறது.

பாடல் : 12

மங்கல விழவு கொண்டு வருநதித்துறை நீராடிப்
பொங்கிய களிப்பினோடும் பொழிமதம் சொரிய நின்றார்
எங்கணும் இரியல் போக எதிர் பரிக்காரர் ஓடத்
துங்கமால் வரைபோல் தோன்றித் துண்ணென அனைந்தன்றே

பொருள்

மங்கலமாகிய திருவிழாக்குரிய அணியை மேற்கொண்டு அவ்வூரில் ஓடிவரும் ஆம்பிராவதி ஆற்றில் நீராடி களிப்பு மிகுதியால் பொழிகின்ற மதநீர் சொரிய அங்கங்கு நின்ற பொதுமக்கள் ஓடவும் பாகர்கள் எதிரில் ஓடவும் பெரிய மலைபோல் தோன்றி அச்சம் தருமளவு நெருங்கி வந்தது யானை.

விளக்கம்

அம்பிராவதி நதி என்பது மேற்கு தொடர்ச்சி மலைகளின் ஒன்றில் கோயம்முத்தூர் மாவட்டம் திருமூர்த்தி மலைக்கருகில் தோன்றிக் கிழக்கில் ஒருவருவது. காவிரியின் கிளை நதிகளில் ஒன்று. திருச்சி மாவட்டம் கட்டளை என்ற ஊர்க்கருகில் திருமுக்கூடல் என்னுமிடத்தில் காவிரியுடன் கலக்கிறது. இதன் வடகரையில் கருவூரும் ஆனிலையும் உள்ளன. ஆம்பிரம் என்னும் பெயருடைய மாமரங்களின் நிழலில் வருவதால் இப்பெயர் பெற்றதென்பர். இதன் இருமருங்கிலும் பல முனிவர்கள் விருட்சங்களாக (மரங்களாக) இருந்து தவம் செய்தார்கள் என்பது தலபுராணம். கருவூர்த் தலபுராணம் ஆம்பிராவதி நதிச் சுருக்கம் இவை கூறும்.

பரிக்காரர் என்போர் குத்துக் கோற்பாகர். யானையை வசப்படுத்தும் ஈட்டி முதலிய குத்துகோல்களை தாங்கி அதற்கு முன்பின் இரு பக்கங்களிலும் ஓடிச் சென்று மக்களை விலக்கியும் யானையை அடக்கியும் அதன் செலவை ஒழுங்குபடுத்தியும் செல்வர். யானையின் மேலிருந்து செல்வோரின் வேறானோர்.

பாகர்க்கும் அடங்காமல் ஓடிவந்த களிறென ஈண்டுக் கூறியது. இத்தகைய களிற்றின் முன்னும் எதிர்த்து நின்ற எரிபத்தரின் அஞ்சாமையை உணர்த்தற்கு ஆகும்.

பாடல் : 13

வென்றி மால் யானை தன்னை மேல் கொண்ட பாகரோரும்
சென்று) ஒரு தெருவின் முட்டி சிவகாமியார் முன்செல்ல
வன்தனித் தண்டில் தூங்கும் மலர் கொள் பூக்கூடை தன்னைப்
பின் தொடர்ந்து) ஓடிச் சென்று பிடித்து முன்பறித்து சிந்த

பொருள்

வெற்றி தருகின்ற யானையானது தன்மேல் ஏற்றியிருந்த பாகர்களோடும் சென்று ஒரு தெருவிலே முட்டி அங்கே பூக்கூடையுடன் விரைந்து சென்று கொண்டிருந்த சிவகாமியாண்டாரின் பின் தொடர்ந்து ஓடி அவர் தாங்கிச் சென்ற தண்டில் தொங்கிய பூக்கூடையை பறித்து சிந்தியது.

விளக்கம்

அரசரது பட்டத்து யானையாதலாலும் அரசர் வெற்றி முடி சூடியவராதலாலும் இதுவரை அரசருக்கு இவ்வுலக வெற்றிக்குத் துணை செய்தது போல் இப்போது திருவருள் கூடும். ஆன்மீக வெற்றிக்கு இக்களிறு துணைசெய்ய விருப்பதால் 'வென்றிமால் யானை' மதத்தையும் சேர்த்து 'வென்றிமால் யானை' என்றார்.

அரசானை செல்லுதற்கென அமைந்த தெருக்கள் தனியே உண்டு. அவற்றினின்றும் விலகி வேறொரு தெருவில் ஓடியதால் 'ஒரு தெருவின் முட்டி' என்றார். சிவகாமி ஆண்டார் அரசயானை முதலியன பவனி செல்லும் தெருக்களில் ஆரவாரம் விரைந்து செல்வதைத் தடுக்கும் என்பதால் தனியே ஒரு தெருவில் சென்றார். அந்தத் தெருவில் இவ்வானையும் ஓடி வந்தது.

இடை கீழ்ப்பகுதிகள் தூய்மையற்றவளை என்றும் அதனால் இறைவனுக்குச் சாத்தும் பூக்களைக் கூடையை இடைக்குக் கீழ் பிடிக்கலாகாது என்பது விதி என்று தெரிகிறது. ஒரு தண்டிலே தூக்கிய பூக்கூடையை தலைக்கு மேற்பிடித்துச் செல்ல வேண்டும். அதனால் பூக்கூடை 'தண்டிலே தூங்கும்' என்றார். அன்றியும் தாம் செல்லும் விரைவினால் கூடையின் உள்ளிருக்கும் பூக்கள் ஒன்றுடன் ஒன்று மோதி உருக்குலைவுறாமல் தாங்கிச் சென்றமையும் உணர்த்தப்பட்டது. கடுநடை உடைய யானை தனக்கு முன் சென்று கொண்டிருந்த ஆண்டாரை ஓடிச் சென்று தொடர வேண்டியிருந்ததெனில் அவர் எத்துணைக் (கடிதினில்) விரைந்து கொண்டிருந்தார் என்பதும் அந்த விரைவுக்கு அடிப்படையான இறையன்பும் புலனாகும்.

பாடல் : 14

மேல்கொண்ட பாகர் கண்டு விசைகொண்ட களிறு சண்டக்
கால் கொண்டு போவார் போலக் கடிது கொண்(டு) அகலப்போத
நூல் கொண்ட மார்பில் தொண்டர் நோக்கினர் பதைத்துப் பொங்கி
மால் கொண்ட களிற்றின் பின்பு தண்டு கொண்(டு) அடிக்க வந்தார்

பொருள்

ஆண்டாளின் பூக்கூடையை பறித்து பூக்களை சிதறடித்ததை யானையின் மேலிருந்த பாகர்கள் கண்டனர் உடனே வேகம் கொண்ட அந்த யானையை ஊழிக்காற்றைக் கொண்டு போல விரைந்து வேறுபுறம் கொண்டு போய் விட்டார்கள். முந்நூலணிந்த மார்பினரான சிவகாமியாண்டார் யானையின் செயலால் பதைத்து மிக்க கோபத்துடனே பொங்கி எழுந்து தண்டு கொண்டு அடிக்கும் நோக்குடன் யானையின் பின் ஓடினார்.

விளக்கம்

கால் - காற்று சண்டக்கால் - சண்ட மாருதம் என்று அழைக்கபடும் ஊழிக்காற்று பொதுவாகவே யானை விரைந்து செல்லும் இயல்பினது. (கால் கிளர்ந்தன்ன வேழம் எனும் திருமுருகாற்றுப் படை. இப்போது மதத்தாலும் பாகர் தலைமீலட்டாலும் மேலும் விரைந்து சென்றமையான சண்ட மாருதம் உவமிக்கபட்டது. தான் பிறர் வசப்படாமல் தன்வசப்பட்ட பொருள் அனைத்தும் அலைக்கும் ஊழிக் காற்றின் தன்மை மதக்களிற்றுகுப் பொருத்த மன்றோ? மேலும் அது தீமை செய்யாதபடி அதனைக் கொண்டு சென்றனரே அன்றிச் சிவ அபசாரத்தைப் பொருட்படுத்தாமல் சென்றனர் என்பது பொருளன்று.

மதம் கொண்ட யானையை எதிர்க்கத் துணிந்த ஆண்டாரின் பின் விளைவை எண்ணிப் பாராத செயல் அவர் இறையன்பை புலப்படுத்தும்.

பாடல் : 16

அப்பொழுது) அணைய ஒட்டாது) அடற்களிறு அகன்றுபோக
மெய்ப்பெருந்த தொண்டர் முப்பால் விரைந்துபின் செல்ல மாட்டார்
தப்பினர் விழுந்து கையால் தரையடித்து) எழுந்துநின்று
செப்பரும் துயர நீடிச் செயிர்த்து முன் சிவதா என்பார்

பொருள்

தன்னை தண்டு கொண்டு அடிக்க வநத ஆண்டாரின் பிடிக்குச் சிக்காமல் யானை சென்றுவிட்டது. மூப்பினால் அதன்பின் தொடி இயலாத எறிபத்தர் கீழே விழுந்துகையினால் தரையை அடித்து மோதி அரற்றிப் பின் எழுந்து நின்று சொல்லுதற்கரிய துன்பத்தால் சினம் கொண்டு 'சிவதர்' என்று அலறினார்.

விளக்கம்

யானையை அடிக்க சென்றார், அடித்திருப்பின் அது திருப்பி இவரைத் தாக்கியிருக்கும். எனவே 'தப்பினர்' என்றார் கால் தவறி விழுந்து என அச்சொல்லுக்குப் பொருள் தருவதும் உண்டு.

பாடல் : 16

களி யானையின் ஈருரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
தெளிவார் அமுதே சிவதா சிவதா.

பொருள்

(இறைவனுக்குத் தாம் நாள்தோறும் செய்து வந்த திருப்பணி முட்டுப்பட்டதால் செயலற்றுக் கலங்கிச் சிவதா என்று ஓலமிட்ட சிவகாமியாண்டார் இறைவனை அழைத்து முறையிட்டார்) மதம் பொருந்திய யானையின் தோலைப் போர்வையாக உடையவனே, சிவதா, எளியாரைக் காக்கும் வலிமை உடையவனே சிவதா, அன்பு நிறைந்த அடியார்களின் அறிவே, சிவதா, மெய்ப்பொருள் இதுவெனத் தெளிந்த மனத்தார்க்கு அமுதே சிவதா.

விளக்கம்

கயாசுரன் என்பவரின் தோலை உரித்துத் தேவர் துயர் நீக்கியமை கந்த புராணம் கூறும் வரலாறு அங்ஙனம் தன் தோலை உரித்த இறைவனின் அடியார்க்குத் தீங்கு செய்யும் துணிவு ஒரு யானைக்கு வந்ததே! அது கண்டும் — முன்னர்த் தோலுரித்துப் போர்த்த உனக்கு இவ்யானையின் செயலைத் தடுக்கவோ ஒறுக்கவோ இயலாமற்போயிற்றா என்பது எரிபத்தரின் மனக்குமுறல் போலும். அவரறியாமல் அவர் உள் மனம் இறைவனை நோக்கி முறையிடுங்காலத்துத் தனக்கு ஊறு செய்த யானையை வென்ற செயலையே. முதலில் குறிக்கிறது. எளியாரைக் காத்தல் வலியர் கடன் ஆதலின் எளியார் வலியாம் இறை என்றார் அறிவே வடிவான நீ செய்ய வேண்டியது இன்னதென உனக்கு அறிவுறுத்தும் ஆற்றலுள்ளார். ஆரென்ற குறிப்புடன் 'அளியார் அடியார் அறிவே' என்றார்.

பாடல் : 17

ஆறும் மதியும் அணியும் சடைமேல்
ஏறும் மலரைக் கரி சிந்துவதே
வேறு) உள் நினைவார் புரம்வெந்து) அவியச்
சீறும் சிலையாய் சிவதா சிவதா

பொருள்

கங்கையையும் பிறைச்சந்திரனையும் அணியும் சடைமுடிமேல் வீற்றிருத்தற்குரித்தாகிய மலரை யானை சிந்துவதோ? மனத்திற்குள் முரண்படும். அசுரருடைய கோட்டைகள் நெருப்பில் வெந்து அழியும்படி அவர்கள் மேல் சினைந்து சீறி அழித்தவில்லை ஏந்தி யவரே சிவதா சிவதா.

விளக்கம்

ஆறும் மதியும் அணிந்தமை சுட்டியது இறைவனின் ஆற்றலை உணர்த்தியதாகும். பகீரதன் தவற்றிற்கிரங்கி அவன் முன்னோர்களை உய்விப்பதற்காக மண்ணுலகிற் பாயவந்த விண்ணுலக கங்கையின் ஆற்றலை உலகம் தாங்காதலின் அதனைச் சடையில் ஏற்றுக் கட்டிப் பின் உலகம் தாங்கவல்ல சிறிய அளவில் சிவன் விடுவித்தார் எனப் புராணம் கூறும் தட்சன் சாபத்தால் தேய்ந்து அழியவிருந்த மதியைத் தலையில் சூடி மீண்டும் வளரச் செய்து அருளியவரும் அவரே. எனவே கங்கையின் செருக்கடங்கி உலகம் காத்தும்

மதிக்க அடைக்கலம் தந்து உதவிய ஆற்றலும் அருளும் பெறப்பட்டன. உலகிற்கும் மதிக்கும் வரவிருந்த பெருங்கேட்டைத் தவிர்த்த பிரானுக்கு தம் அடியவர்க்கு வரவிருந்த சிறுகேட்டைத் தடுக்க இயலாமற் போயிற்றோ என்ற குறிப்புபட அரற்றுகிறார். சிவனால் எரியுண்ட திரிபுரத்தில் வேறாக நினையாத மூவர் இருந்தனர் என்றும் அவரை விடுவித்து தன்னுடன் முரண்பட்ட பிறரையே சிவன் அழித்தார் என்றும் புராணம் கூறும் மூவர் உயிர் வாழ முட்புரமும் நீராக ஈவர் பொருதார் இமையோரில் என்பது புலவர் பாட்டு எனவே வேறு உள் நினைவார்மட்டும் நீறானார் என்றார்.

பாடல் : 18

தஞ்சே சரணம் புகுதும் தமியோர்
நெஞ்சேய் துயரம் கெடநேர் தொடரும்
மஞ்சே எனவீழ் மறலிக்(கு) இறைநீள்
செஞ் சேவடியாய் சிவதா சிவதா

பொருள்

தனியரான மார்க்கண்டர் தஞ்சம் என்று வந்து அடைக்கலம் புகுந்த போது அவர் நெஞ்சிற் பொருந்தியதுயரம் கெடும்படி அருளிக் கருமேகமென அவர் மேல்வந்த கூற்றுவனை உதைத்த சேவடியை உடையவரே சிவதா சிவதா.

விளக்கம்

தஞ்சே - தஞ்சமாக; தமியோர் - ஒப்பற்றவர் ஆதலின் தனித்திருப்பவர் மார்க்கண்டேயர் என்றும் பதினாறாய் நின்ற இறவாமையும் பிறவாமையும் பிற உயிர்கிட்கில்லாப் பெரும்பேறுகளன்றோ? அவர் நெஞ்சிற் பொருந்திய துயரமன்றது அவரது இறப்புக் குறித்ததன்று; சிவபூசைக்கு நேர்ந்த இடையூறு குறித்தது அவனை 'நேர் தொடரும் மறலி' என்றார். அன்றியும் தூதரை அனுப்பாமல் தானே நேரே வந்து என்று கூறலாம். மஞ்சே என வீழ்ந்தவாறு கூற்றவனும் எருமையும் கரிய நிறத்தவாதலின் என்க மேகத்தின் செயல் பின்னர் உயிர்களுக்கு அமுதாகிய நீர் தருவது அதேபோல் கூற்றுவன் செயலும் பின்னால் மார்க்கண்டருக்கு உயிர்தந்த அமுதமாயிற்று - சிறிது நீண்ட இறைவன் திருவடி கூற்றுவனைத் தடுக்குமளவில் சிறிது மட்டுமே நீண்டது. அது மேலும் நீண்டிருப்பின் கூற்றுவன் அழிந்தே இருப்பான். வீடாகிய நித்திய இன்பம் தருமாதலின் செஞ்சேவடி என்றார்.

பாடல் : 19

நெடியோன் அறியா நெறியார் அறியும்
படியால் அடிமைப் பணிசெய்து ஒழுகும்
அடியார்களில் யாள் ஆரா அணைவாய்
முடியா முதலா எனவே மொழிய

பொருள்

திருமாலும் அறியமுடியாத சிவநெறியில் நின்று தாம் அறிந்த அளவில அடிமைத்தன்மையில் நின்று பணிசெய்து ஒழுகுகின்ற அடியார் கூட்டத்தில் என்னை யாராக மதித்து அணைவீர்? முடிவில்லாத முதல்வரே எனச் சிவகாமி ஆண்டார் மொழிந்தார்.

விளக்கம்

ஈரடியால் மூவுலகமும் அளந்த சிவனும் நெறியறியான். அடியார்களுக்கு அருள்பவன் சிவன். தானோ அடியார் கூட்டத்துள் வைத்து எண்ணப்படுதற்குரிய அருகதை அற்றவர் எனவே தான் இறைவன் தன் இடர் தீர்க்க வரவில்லை என்னும் குறிப்பை உட்கொண்டு 'அடியார்களில் யான் ஆரர் அணைவாய் என்று கேட்கிறார். வாழ்வில் துன்பத்தால் மனம் நொந்தோர் தம் உதவியை எதிர்பார்த்த இடத்தில் கிடைக்காதபோது அவரைக் குறைசொல்லும் சிறுமை இல்லாத காரணத்தால் 'நீங்கள் உதவவேண்டும் எந்த உரிமையில் நான் எதிர்பார்க்க முடியும். நான் என்ன மகனா துணையா' என மணபிணக்குடன் கூறும் நெளிவில் இவ்வடியார் பேசுகிறார்.

பாடல் : 20

என்(று) அவர் உரைத்த மாற்றம் எறிபத்தர் எதிரே வாரா
நின்றவர் கேளா மூளும் நெருப்புயிர்த்(து) அபுன்றி பொங்கு
மன்றவ் அடியார்க்(கு) என்றும் வழிப்பகை களிறே அன்றோ?
கொன்(று) அது வீழ்ப்பன் என்று கொலைமமு எடுத்து வந்தார்.

பொருள்

சிவகாமியாண்டார் புலம்பிய சொற்களை எறிபத்தர் கேட்டார். நெருப்பு போல் நெட்டுயிர்த்துச் சினம் மிகுந்து 'அம்பலத்து ஆடும் எம்பிரானின் அடியார்க்கு யானை என்று வழிப்பகை அல்லவா? அதனைக் கொன்று வீழ்த்துவேன் என்று கூறித் தம் மழுவினை ஏந்திக் கொண்டு வந்தார்.

விளக்கம்

முன்னரே குறிப்பிட்ட புராணகதைப்படி கயாசுரன் என்ற யானை வடிவ அரக்கன் சிவனுடன் போரிட்டவன். அவ்வாறு ஒரு யானை பகையானதால் வழி வழி யானை இனமே இறைவனின் அடியார்க்குப் பகையாயிற்று என்றார். களிற்றை ஐம்புலனாகிய களிறு எனவும் கொள்ளலாம் "பழியே விளைக்கும் பஞ்சேந்திரியக் குஞ்சரமே" என்பர்.

பாடல் : 21

வந்தவர் அழைத்த தொண்டர் தமைக்கணட்டு வணங்கி "உம்மை
இந்த வல் இடும்பை செய்த யானை எங்குற்றது? என்ன
"எந்தையர் காத்தும் பூவை எச்சையிற் பறித்து மண்மேல்
சிந்தி முன் பிழைத்துப் போகா நின்றது) இத்தெருவே"
என்றார்.

பொருள்

எரிபத்தர் சிவகாமி ஆண்டாரை கண்டு வணங்கி 'உம்மை இந்த கொடிய துன்பத்திற்கு ஆளாக்கிய யானை எங்கே சென்றது? என்று கேட்க 'எம்பெருமான் அணிகின்ற பூவை என் கையினின்றும் பறித்துத் தரையில் சிந்திக் குற்றமிழைத்தும் தப்பிப் பிழைத்து இத் தெருவழியே சென்றுவிட்டது" என அவர் விடையளித்தார்.

விளக்கம்

எறிபத்தர் அடியார் மேல் பக்தி கொண்டிருந்தபான்மை அவர் சிவகாமி ஆண்டாரை வணங்கி பேசிய முறையால் வெளிப்படுத்துவதாகும். "தாழ்வெனும் தன்மை" விளங்கும் "சைவமாம் சமய" ஒழுக்கம் புலனாகிறது. வேண்டுதல் வேண்டாமை இலாதவனாகிய இறைவனடி சேர்ந்தார்க்கு யாண்டும் எவ்விடும்பையும் இலாதல் வேண்டும். அவ்வாறிருக்க இறையடியாராகிய உமது இறைபணிக்கு முட்டுப்பாடு நேர்ந்ததே எனசுட்ட "இந்த வல் இடும்பை" என்றார் சிவக் குற்றத்திற்கு உயிர்த் தண்டமே கழுவாயாகவும் களிறு பிழைத்துப் போகிறதே எனசுட்ட "முன் பிழைத்துப் போகா நின்றது" என்றார். நிகழ்ந்ததை எறிபத்தர் அறிவாராதலின் ஓலத்திற்கு காரணம் கேளாமல் அதனை விளைவித்த யானை எங்குற்றது என மட்டும் வினவினார். அதற்கு விடையளித்தவரோ தம்சினத்தாலும் துயரத்தாலும் அவர் அறிந்ததை உணராமல் முழுமையும் விளக்கினார்.

பாடல் : 22

"இங்(கு) இது பிழைப்பது) எங்கே இனி? என முனிவாய் சிந்தும்
அங்கையின் மழுவும் தாமும் அனலும் வெங்காலும் என்னப்
பொங்கிய விசையில் சென்று பொருகரி தொடர்ந்து பற்றும்
செங்கண் வாள் அரியிற் கூடிக் கிடைத்தனர் சீற்றம்மிக்கார்.

பொருள்

"இந்த யானை இனிப் பிழைப்பது எங்கே" என்று சொல்லிய எறிபத்தர், "உடனே தீயை வாயில் சிந்துவதாய்த் தம் அகங்கையில் ஏந்திய மழுவும் தாழுவாய்த் தீயும் காற்றும் கூடியது போல மிகுந்த வேகத்துடன் சென்றார். தன்னுடன் போர் செய்யும் யானையை விரைந்து தொடர்ந்து பாய்ந்து பற்றுகின்ற சிவந்த கண்களும் கூரிய நகங்களும் கொண்ட சிங்கத்தைப் போலச் சினம் மிகுந்தவராய் யானையை நெருங்கினார்.

விளக்கம்

மழுவின் துனிப் பகுதி ஒளி வீசுவது. அது பாயப் பெற்றார் உடலில் தீப்பாய்ந்த எரிச்சலை உண்டாக்குவது எனவே 'அறிவாய் சிந்தும்' என்றார். விரைந்து செல்லும் இவர் காற்றாக இவர் ஏந்திய மழு நெருப்பாகக் காற்றினால் அழிக்கும் தன்மை மிகப் பெற்ற நெருப்புப்போல் இவ'ர் கோபத்தாலும் விரைவினாலும் மழுவின் கொலையாற்றல் மிகுந்தது என்பது பொருள். வாள் - அரிவாள் போன்ற கூரிய நகம் கொண்ட சிங்கத்தைச் சுட்டியது. அரியில் அரி—யினைப் போல் - நகம் மழுவுக்கும் சிங்கம் எரிபத்தர்க்கும் உவ்மைகள் ஆயின் யானையைத் தொடர்ந்த சிங்கம் என்றது இங்கே எரிபத்தர் தொடர்வதும் யானையையே ஆதலால் உவமை மட்டுமின்றி உண்மையும் ஆயிற்று.

பாடல் : 23

கண்டவர் "இது முன்பு அண்ணல் உரித்த அக்களிறே போலும்
அண்டரும் மண்ணுளோரும் அடுக்கினும் அடர்த்துச் சிந்தித்
துண்டித்துக் கொல்வேன்" என்று சுடர்மழு வலத்தில் வீசிக்
கொண்(டு) எழுந்(து) ஆர்த்துச் சென்று காலினால் குலுங்கப் பாய்ந்தார்

விளக்கம்

யானையின் செயலை அறிந்த போதே கயாசுரன் நினைவுடன் 'வழிப்பகை' என்றவர் அதனைக் கண்டதும் மீண்டும் கூறுகிறார். தேவர்கள் அறிவும் தவமும் மீக்கோராயினும் ஒரோ வழிச் சிவக் குற்றம் செய்வோரேயாதலின் அவர்கள் இவ் யானைக்காகப் பரிந்து பேசி எதிர்த்து வரினும் வரலாம். இது பட்டத்து யானை என்பதால் அரச சார்புடையோர் எதிர்த்து காக்க முற்படலாம். அப்படி விண்ணோரும் மண்ணோரும் எதிர்த்து வரினும் கேளேன் என்றார். பூவைப் பறித்தது துதிக்கையேயாதலின் அதனைத் துண்டிப்பேன் என்றார். சண்டீச நாயனாரும் தந்தையின் காலையே துணித்தார் செருத்துணையார் அரசன் தேவியின் முக்கினையே வர்த்தார் கழற்சிங்கர் தேவியாரின் கையே தடிந்தார். குற்றம் செய்த உறுப்புகளையே தண்டிக்கும் இந்நியதிப்படி எரிபத்தர் துதிக்கை துணித்தார். வேகத்துடன் ஒரு பொருளை எறிய முற்படுவோர் தலைக்கு மேல் தூக்கிச் சுழற்று வராதலின் மழு வலத்தில் வீசிக் கொண்டு என்றார்.

பாடல் : 24

பாய்தலும் மீசை கொண்(டு) உய்க்கும் பாகரைக் கொண்டு சீறிக்
காய்தழல் உமிழ்கண் வேழம் திரிந்து மேல் கதுவ (அச்சம்)
தாய்தலை அன்பின் முன்பு நிற்குமே! தகைந்து பாய்ந்து
தோய்தனித் தடக்கை வீழ மழுவினால் துணித்தார் தொண்டர்

பொருள்

எறிபத்தர் யானையின் மேல் பாய்ந்தவுடன் மேலிருந்து தன்னைச் செலுத்தும் பாகரையும் மீறிக் கொண்டு, நெருப்பை உமிழும் கண் கொண்ட அந்த யானை திரும்பி இவர் மேல் தாவிற்று. இவர் அதனை எதிர்த்துப் பாய்ந்து நிலம் தொடுமாறு நீண்ட அதன் பெரிய துதிக்கை விழும்படி மழுவினால் வெட்டினார் தாயினது தலையன் பின் முன்னே அச்சம் எதிர் நிற்குமோ?

விளக்கம்

அடைப்புக் குறிக்குள் இடம்பெற்ற சொற்கள் கவிக் கூற்றாகும். அடியார் பணிக்கு நேரும் முட்டுப் பாட்டை நீக்கத் துணிந்த அறிபத்தரது அன்பு தாயன்பை ஒத்தது. தன் மக்களுக்கு நேர்ந்த துன்பம் கண்டு அதைப் போக்க விரையும் தாய் தன் முயிற்சிக்கு எதிர்ப்புக் கண்டு அஞ்சி நிற்க மாட்டாள்.

அது போன்ற எறிபத்தர் யானையை அஞ்சாமல் எதிர்த்தார் என்பது யானைக்கு ஆறு அங்கங்கள் நிலம் தோய நீண்டிருத்தல் சிறப்பென்பர். அந்த ஆறனுள் ஒன்று துதிக்கை இவ்வானை சிறந்ததென்பதை இது உணர்த்திற்று.

பாடல் : 25

கையினைத் துணித்த போது கடலெனக் கதறி வீழ்ந்து
மைவரை அனைய வேழம் புரண்டிட, மருங்கு வந்த
வெய்ய கோல் பாகர் மூவர் மிசை கொண்டார் இருவர் ஆக.
ஐவரைக் கொன்று நின்றார் அருவரை அனைய தோனார்.

பொருள்

எறிபத்தர் துதிக்கையைத் துணித்தும் கடல் போன்று கதறிக் கீழே விழுந்த கரிய மலை போன்ற இவ்யானை, நிலத்தில் புரண்டது. அதன் மேலிருந்து செலுத்திய பாகர் இருவருமாக ஐவரையும் அரியமலை போன்ற தோளுடைய நாயனார் கொன்று நின்றார்.

விளக்கம்

கடல் போல் பேரிரைச்சலுடன் வலிதாளாமல் கதறிற்று யானை என்பார் 'கடலெனக் கதறி' என்றார். மலை போன்ற யானை கடல் போல் கதறிற்று' என் கையில் ஒரே பொருள் உருவத்தால் மலையாக ஓசையால் கடலாக இருந்தமை உணர்த்திய கவிநயம் காணத் தக்கது. மரண வேதனையுடன் மண்ணிற் புரண்ட யானை இறந்து பட்டமை பட்ட வர்த்தனமும் பட்டு என்பதாலும், 'உறங்கி மீதெழுந்தது ஒத்து' என்றும் கூறுவதாலும் துணியப் படும். யானைக்கு முன் ஒருவனும் இரண்டு பக்கங்களிலும் இருவருமாக மூவர் குத்துக் கோலுடன் வருவது வழக்கம். யானைக்கு முன்னும் பக்கங்களிலும் வரும் மக்களை விலக்கலும் யானையை வழிப்படுத்தலும். இவர் பணி. ஐவர் இறக்குமாறு மழு வீசிய தோர் வலிமை, சுட்ட இருவரை அனையதோள் என்றார்.

பாடல் : 26

வெட்டுண்டு பட்டு வீழ்ந்தார் ஒழிய மற்றுள்ளார் ஓடி
மட்டவீழ் தொங்கல் மன்னன் வாயிற் காவலரை நோக்கி
பட்டவர்த்தனமும் பட்டுப் பாகரும் பட்டார் என்று
முட்ட நீர் கடிது புக்கு முதல்வனுக்(கு) உரையும்"

என்றார்.

பொருள்

வெட்டியதால் இறந்து வீழ்ந்த பாகர் தவிர வேறிருந்த பணியாளர் ஓடிச்சென்று வாசனையுடைய மாலையணிந்த அரசனது அரண்மனை வாயிற் காவலரை நோக்கி, "பட்டத்து யானையும் இறந்தது. பாகரும் இறந்தனர். அன்று நீவீர் விரைவிற் சென்று அரசனுக்குத் தெரிவியுங்கள் என்றார்.

விளக்கம்

மங்கல விழாக் கொண்டு யானையுடன் வந்தார் பலர் அவருள் ஐவர் ஒழிய ஏனையோர் சுட்டப்பட்டனர். அவரும் பாகர்களே என்பது அடுத்த பாட்டில் செப்பினார் பாகர்' என வருவதால் உணரப்படும். "யானையும் இறந்தது: பாகரும் இறந்தார்" எனப் பேச்சு வழக்கிற் போன்ற பதட்டத்துடன் கூறுகின்றனர் முட்டப்புக்கு, கடிது என்பதும் அதனாலேயே.

பாடல் : 27

மற்(று) அவர் மொழிந்த மாற்றம் மணிக்கடைக் காப்போர் கேளாக்
கொற்றவன் தன்பால் வந்து குரைகழல் பணிந்துநின்று
"பற்றலர் இலாதாய் நின் பொன் பட்டமால் யானை வீழச்
செற்றனர் சிலராம்' என்று செப்பினர் பாகர்" என்றார்.

பொருள்

மணிகட்டிய அரண்மனை வாயிலைக் காப்போர், வந்தோர் கூறிய சொற்களைக் கேட்டதும் அரசனிடம் சென்று, அவரது வீரக் கழலணித்த அடியிற் பணிந்து நின்று, "பகைவர் இல்லாதவரே, பொற்பட்ட மணிந்த உம் பட்டத்து யனை விழுமாறு சிலர் கொன்றதாகப் பாகர்கள் கூறினார்கள் என்று தெரிவித்தார்கள்.

விளக்கம்

எதிர்த்து நிற்கும் துணிவு யாருக்கும் இன்றாதலின் அரசன் பகையற்றவன். அவ்வாறிருந்தும், அவனது யானையும் அதன் பாகரும் வீழ்ந்தது வியப்பு பெருவீரம் கொண்ட அரசனுக்கு இச்செயல் குறித்த நடவடிக்கை எடுப்பது எளிது என்று உணர்த்தினர்.

வந்து கூறியோர் யானையும் பாகரும் இறந்ததாக மட்டுமே கூறினர். எனினும் அதனைச் செய்தார் உளராக வேண்டும் என யூகித்து வாயிற் காவலர் பேசினர். எரிபத்தர் வீரமும் வலியும் இறையன்பும் அறியாராதலின் யானையையும் பாகர் ஐவரையும் கொல்வது தனிமனிதர் செயலாக இருக்கக்கூடும் என்ற எண்ணமே எழாமல் குழு ஒன்றின் செயலென கருதிக் கூறினார் எனலாம்.

பாடல் : 28

வளவனும் கேட்ட போதில் மா(று) இன்றி மண்காக்கின்ற
இளர்மணித் தோள் அலங்கல் கரும்பினம் கிளர்ந்துபொங்க
அள(வு) இல் சீற்றத்தினாலே ஆர் செய்தார் என்றும் கேளான்
இள அவிஏறு போல எழில்மணி வாயில் நீங்க

பொருள்

யானையும் பாகரும் இறந்த செய்தியைக் கேட்டதும் எதிர்ப்போர் எவருமின்றி தன் நாட்டை ஆள்பவனான சோழன் ஒளிவிடும் மணிகள் பூண்ட தோளில் குடியிருந்த மலர்மாலையை மொய்த்திருந்த வண்டுகள் ஆரவாரித்து எழுமாறு அளவு இல்லாத கோபத்துடன் யானையையும் பாகரையும் கொன்றவர் யார் என்று கூடக் கேளாமல் இளைய சிங்கம் போல் நடந்து மணிவாயிலை நீக்கி வந்தான்.

விளக்கம்

அரசன் விரைவாக எழுந்தபோது வேகத்தினாலும் போர்த்தினவினாலும் தோள்கள் துடித்தமையால் அதில் சூடியிருந்த மாலைகளை சூழ்ந்திருந்த வண்டுகள் அலைவுற்று எழுந்து பறந்த காட்சி காட்டப்படுவதால் அரசனது விரைவு புலனாகிறது. அரசனும் சிவப்பற்றும் சிவனடியார்பால் பெருமதிப்பும் கொண்டவனாதலின் கொன்றவர் எறிபத்தர் என்று கேட்டு அறிந்திருந்தால் சினம் கொண்டு சென்றிரான். அதனை உணர்த்தும் வகையில் யார் என்று கேளாமலே சென்றதாகப் புலவர் பாடுகிறார். எறிபத்தரை 'முழைஅரி' என்றவர் அவரினும் இளைய அரசனை இளஅரி பொருத்தமாகச் சுட்டினார்.

பாடல் : 29

தந்திரத் தலைவர் தாமும் தலைவர்தன் நிலைமை கண்டு
வந்துறச் சேனை தன்னை வல்விரைந்(து) எழ முன்சாற்ற
அந்தர(து) அகலம் எல்லாம் அணிது கில் பதாகை தூர்ப்ப
எந்திரத் தேரு மாவும் இடையிடை களிறும் ஆகி

பொருள்

அரச தந்திர தலைவர்களாகிய அமைச்சர்களும் தம் தலைவராகிய அரசரது நிலையைக் கண்டனர். உடனே படைகளை மிகவிரைவாக கூடி நிற்கும்படி பறையறையச் செய்தனர். அழகிய துணி கொடிகள் வானெல்லாம் பரவி நிறையுமாறு எந்திரத் தேர்களும் குதிரைகளும் இடையிடையே யானைகளும் வந்து நின்றன.

விளக்கம்

அரசன் குறிப்பறிந்து ஒழுகும் திறமுடையோர் அவன் அமைச்சர் என்பது இப்பாடல் புலப்படுத்தும் உண்மை வானத்தை மறைக்குமளவு பெருகிய கொடிகள் என்றது அக்கொடிகளை உயர்த்திய படையின் பெருக்கத்தை சுட்டிற்று. எந்திரங்களால் இயக்கப்படும் தேர்களும் பகைவர்மேல் பல படைகளை வீசும் எந்திரங்களை கொண்ட தேர்கள் என்றும் இருவகையும் எந்திரதேர்கள் எனப்படும். வானத்தில் சென்ற மயிற்பொறி பற்றி சீவகசிந்தாமணி பேசும். நூற்றுவர்க் கொல்லி ஆயிரவர் கொல்லி முதலான படைகளும் உருகிய உலோகக் குழம்பு முதலியவற்றை வீசும் எந்திரங்களையும் தேர்களில் கொண்டு சென்று போட்டிருக்கலாம். எந்திரத்தால் உருளும் உருளையுடைய தேர் என்றும் சிலர் கூறுவர். குதிரைப் படையுடன் ஒப்பிட்டால் யானைப்படை குறைவாதலின் 'இடையிடை' என்றார்.

பாடல் : 30

வில்லொடு வேள் வாள் தண்டு பிண்டி பாலங்கள் மிக்க
வல் எழு முசலம் நேமி மழுகழுக்கடை முன்னான
பல்படைக் கலன்கள் பற்றிப் பைங்கழல் வரிந்த வன்கண்
எல்லைஇல் படைஞர் கொட்புற்று எழுந்தனர் எங்கும் எங்கும்

பொருள்

வில், வேல், வாள், தண்டு, பிண்டிபாலங்கள், வலிய இரும்புலக்கை, சக்கரங்கள், மழு, சூலம் முதலிய பலபல படைக்கலங்களையும் ஏந்தி அழகிய வீரக்கழல் அணிந்து வரிந்து கச்சுக்கட்டி வன்கண்மையுடைய அளவிலாத படைவீரர்கள் எங்கும் சுழன்று குதித்து எழுந்தனர்.

விளக்கம்

வில்லின் சிறப்பும் மிகுதியும் சுட்ட அதனைத் தனியே பிரித்துக் கூறினர். பிண்டிபாலம் என்பது உச்சியில் பீலிகட்டப் பட்டு எறியப்படும் ஒரு படைக் கலமாகும். வேல் போன்று எறி ஆயுதங்களில் ஒன்று பீலித்தண்டம் என்றும் கூறுவர். நால்வகைப் பாடல்களில் பல்வேறு படைக்கருவிகள் ஏந்திச் சென்ற காலாட்படைபற்றி இப்பாடல் கூறுகிறது.

பாடல் : 31

சங்கொடு தாரை காளம் தழங்(கு) ஒலி முழங்கு பேரி
வெம்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி
பொங்கொலிச் சின்னம் எல்லாம் பொருபடை மிடைந்த
மங்குல்வான் கிளர்ச்சி நாண மருங்(கு) எழும்து இயம்பி மல்க

பொருள்

சங்கு, தாரை, காளம், மிகுந்த, ஒலிதரும் பேரி, கொடிகுரலுடைய பம்பை, கண்டை பெரியதுடி, திமிலை, தட்டி முதலிய கருவிகள் எல்லாம் ஒலிக்கக்கூடி நிறை படையின் நெருக்கத்தில் மேகங்கள் நிறைந்த வானின் முழக்கமும் இதனினும் குறைவானது என்னும்படி பேரொலி எழுந்தது.

விளக்கம்

பகைவரை வெல்வதிற் சிறப்பிடம் பெறும் கருவிகளில் வில்லை முற்கூறியவர் வெற்றியை அறிவிக்கும் சங்கை ஒலிக்க கருவிகளில் முற்கூறுகிறார். பம்பை என்பது அகன்ற இரு முகமும் பேருருவும் உடைய கருவி. கண்டை என்பது பறைகளில் ஒருவகை. திமிலை சல்லரி என்ற பெயராலும் வழங்கப்படும். தட்டி என்பது கரடிபாறை தட்டை என்றும் கூறுவர். போரில் படைகலை ஊக்கப் படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் இவை பயன்படும் மேனாட்டிலும் warband உண்டு.

பாடல் : 32

தூரியத் தலைப்பு முட்டும் சுடர்படை ஒலியும் மாவின்
தார்மணி இசைப்பும் வேழ முழக்கமும் நடந்தேர்ச் சீறும்
வீரர்தம் செருக்கின் ஆர்ப்பு மிக்(கு) எழுந்(து) ஒன்றாம் எல்லைக்
காருடன் கடைநாள் பொங்கும் கடல் எனகலித்த அன்றே.

பொருள்

பல்வேறு கருவிகளின் ஒலியும், தாக்குகின்ற ஒளியுடைய படைக்கலன்களின் ஒலியும், குதிரைகளின் கழுத்துமாலை மணிகளின் ஒளியும் யானைகளின் முழுக்கமும் பெரிய தேர்களின் ஆரவாரமும் படைவீரர்களின் ஒலியும் எழுந்து ஒன்று கூடிய போது உலகின் முடிவுக்காலத்தில் ஊழிப் பெரு மேகத்தின் இடிமுழக்கத்துடன் பொங்கும் கடல் போல ஓசை எழுந்து.

விளக்கம்

எனவே முழுக்குதலைச் சுட்டும் பொதுச் சொல்லான 'துவைப்பு' இடம் பெற்றது. தாம் ஏந்திய படையினாலும் தம் ஆண்மையினாலும் செருக்குடைய ஆனார் வீரர். தேவரும் மாவும் களிறுமாகிய படைகள் வெவ்வேறாக அமைந்த தத்தம் இடங்களினின்றும் புறப்படும் எழுச்சியைத் தனிதனியே முதலிற் கூறியவர் அவை ஒன்று கூடி ஆரவாரத்தை அடுத்துத் தொகுத்துரைத்தார்.

பாடல் : 33

பண்ணுறும் உறுப்பு நான்கிற் பரந்தெழு சேனை எல்லாம்
மண்ணிடை இறுகால் மேன்மேல் வந்தெழுத்து போல் தோன்றத்
தன் அளிக் கவிகை மன்னன் தானை பின் தொடரத் தான் ஓர்
அண்ணலம் புரவிமேல் கொண்(டு) அரசமா விதிசென்றான்.

பொருள்

வகையாக அமைக்கப்பட்ட நால்வகை உறுப்புகளாற் பரந்தெழுந்த சேனையெல்லாம் உலகத்து அழிவைச் செய்யும் ஊழிக்காற்று மேன்மேல் வந்தெழுந்தது போல் தோன்றியது அவ்வாறு எழுந்த படை தம்மைப் பின்தொடர்ந்து வர தாம் ஒரு பெருமை பொருந்திய கொற்றக் குடை கொண்ட அரசர் அரசமா வீதியில் சென்றார்.

விளக்கம்

படைதிரண்டு எழுந்த காட்சிமட்டுமே உலக முடிவில் எழும் ஊழிக்காற்றை ஒத்திருந்தது; செயலில் அது உயிர்கட்கு ஊறு ஏதும் விளைக்கவில்லை. எனவே ஊழிக்காற்று 'போல்' என்றும் 'தோன்ற' என்று மட்டும் கூறுகிறார். நூல்களில் வகுத்தவாறு நல்ல குதிரைக்குரிய எல்லா நல்ல இலக்கணங்களும் பொருந்தியதுடன் அழகும் உடைய குதிரை எனச் சுட்ட 'அண்ணல் அம்புரவி' என்றார். சோழ அரசரது தலைநகரங்களில்

ஒன்றாதலால் பல வகையினர்க்கும் உரியனவாய்ப் பற்பல தெருக்கள் அமைந்திருக்கும். எல்லாத் தெருக்களிலும் எல்லோரும் செல்லலாம் என்பது இறை வழக்கம். எனவே அற்றை வழக்கம் சுட்ட 'அரசமாவீதி' என்றார்.

பாடல் : 34

கடுவிசை முடுக்கி போகிக் களிற்றொடும் பாகர் வீழ்ந்த
படுகளம் குறுகச் சென்றான்; பகைப் புலத்தவரைக் காணான்;
வீடுசுடர் மழு ஒன்று) ஏந்தி வேறு) இரு தடக்கைத்தாய
அடுகளிறு) எனை நின்ற அன்பரை முன்பு கண்டான்

பொருள்

விரைந்து சென்ற அரசர் யானையுடன் பாகர்கள் இறந்துபட்ட இடத்தை சென்று அடைந்தார். அருகே பகைவர்கள் யாரையும் அவர் காணவில்லை. ஒளி வீசும் மழு ஏந்திய இரு கைகளுடன் அழிக்கும் யானை போல நின்ற சிவனடியார் ஒருவரையே கண்டார்.

விளக்கம்

அரசரும் படைகளும் சென்ற விரைவு சுட்டக் கடு விசை, முடுகி என விரைவு குறிக்கும் மூன்றும் சொற்களை அடுக்கி மொழிந்தார் படுகளம் பட்ட இறந்த இடம் மழுவொடு நின்ற எறிபத்தரை யானை போல் நின்றதாய் பாடியவர். யானைக்கு துதிக்கை ஒன்றேயாக இவர்க்கு கைகளோ இரண்டாதலின் உவமிக்கப்பட்ட யானையினின்றும் வேறுபட்ட அத்தோற்றத்தை விதந்தோதினார்.

தமது யானை இறந்த களத்தில் அரசர் பகைவர் காணவில்லை; ஒரு களிறே கண்டார் அது கொல்லும் களிறாக இருந்தது; அதற்கு வகைகள் இருந்தன; அவை யானை துதிக்கையின்றும் எண்ணிக்கையாலும் செயலாலும் மாறுபட்டன — என்று இவ்வாறு பொருள் கூட்ட வேண்டும் முன்னைய பாடல்களில் எறிபத்தரைச் சங்கம் என்ற ஆசிரியர் இங்கே யானை என்றமை சிந்திதற்குரியது.

இறையன்பர்க்குத் துன்பம் நேர்ந்த போது அத்துன்பத்தை விளைவித்தவற்றின் முன் எறிபத்தர் மழுவொடு எதிர்த்து நின்ற நிலை ஆசிரியர் பார்வையில் சிங்கமாக அமைந்தது. இப்புராணத்தில் கண்டாற் போன்று யானையை எதிர்க்க வேண்டிய அரிய செயலாயினும் யானையையும் எதிர்க்கும் சிங்கம் போன்று எறிபத்தர் அதைச் செய்து முடிப்பார் என்பதை அவ்வுவமை உணர்திற்று. ஆனால் செய்து முடிப்பார் என்பதை அவ்வுவமை உணர்திற்று. ஆனால் அரசர் எறிபத்தரைக் கண்டபோது கொண்டவராதலின் எறிபத்தரைக் கண்டபோது யானையை அவருக்கு தோன்றியிருக்குமாதலின் யானை உவமையாயிற்று.

யானையின் துதிக்கை போன்று பெரியனவும் ஆற்றல் வாய்ந்தவையும் ஆயினும் யானையின் ஒரு கை சிவகாமி ஆண்டார்க்குத் துன்பம் விளைவிக்க எறிபத்தர்

இருகைகளும் அன்பர்க்கு அரணும் அல்லார்க்கு முரணும் ஆயினவாதலால் 'வேறிரு தடக்கை' என்றார்.

யானையையும் பாகரையும் கொன்ற பின்னர் அச்செய்தி கேட்டு அரசரும் சேனையும் வருமளவும் வந்தபின்னும் அவ்விடம் விட்டு நீங்காமல் நிற்கும் எறிபத்தரின் அஞ்சாமை இங்கு புலப்படும்.

பாடல் : 35

பொன் தவழ் அருவிக் குன்றம் எனப் புரார் களிற்றின் முன்பு
நின்றவர் மன்றுள் என்றும் நிருத்தமே புரியும் வெள்ளிக்
குன்றவர் அடியார் ஆனார்; கொன்றவர் இவர் என்(று) ஓரான்
"வென்றவர் யாவர்?" என்றான் வெடிபட முழங்கும் சொல்லான்.

பொருள்

பொன் துகள்கள் நீருடன் கலந்து வருவதற்கு இடமாகிய அருவிகளையுடைய குன்று போலப் புரண்ட யானையின் முன்னே நின்ற எறிபத்தர், திருவம்பலத்தில் எப்போதும் ஆனந்தக் கூத்தினையே பயில்கின்றவரும் வெள்ளிமலையாகிய கைலாயத்தின் உடையவரும் ஆகிய சிவப்பெருமானுக்கு அடியவர் ஆயினார். ஆதலால் இவர் யானையையும் பாகரையும் கொன்றவர் என்று நினைக்க மாட்டாதவாய்" வென்றவர் யார் என்று வெடிபட முழங்கும் குரலில் அரசர் கேட்டார்.

விளக்கம்

யானையை அருவி பாயும் குன்று என்றார் குன்றம் ஒத்த யானை, துதிக்கை வெண்டுண்ட இடத்தினின்றும் குருதியோடக் கிடந்த நிலையை இவ்வுவமை சுட்டிற்று வெண்டுண்டு நேரம் கடந்தமையாலும் குருதிச் செந்நீருடன், முன்னால் பொங்கி வழிந்த மதநீரும் சேர்ந்தமையாலும் குருதியின் அடர்ந்த செந்நிறம் மாறி நீர்த்துப் போய்ச் செம்பொன்னிறம் பெற்றதால் பொன் தவழ் அருவி . என்றமை மேலும் பொருத்துவதாயிற்று. வெண்டுண்ட உடல் மேலும் சிறிது நேரம் வேதனையாற் புரள்வது இயல்பாதலின் 'புரள்களிறு' என்றார்.

யானையும் பாகரும் வீழ்ந்து கிடக்கும் இடத்தில் மமுவொடு ஒருவர் நிற்கக் கண்டும் அவர் தோற்றத்தினின்றும் அவர் அரனடியார் என்பதை உணர்ந்தமையால் அவர் செய்திருக்கக் கூடும் என்ற எண்ணமே வராமல் பேசும் அரசனின் சிவப்பற்று சிந்தித்து இன்புறத்தக்கது.

பாடல் : 36

அரசன் ஆங்(கு) அருளிச் செய்ய அருகு சென்(று) அணைந்து பாகர்
"விரை செய்தார் மாலையோய்! நின் விறல்களிற்(று) எதிரே நிற்கும்.
திரைசெய் நீர் உலகின் மன்னர் யாருளார்? தீங்கு செய்தார்
பரசுமுன் கொண்டு நின்ற இவர்" எனப் பணிந்து சொன்னார்.

பொருள்

அரசர் வினாவியது கேட்ட பாகர்கள் அவர் அருகே சென்று "மணம் பொருந்திய மலர் மாலையையும் மணி மாலையையும் அணிந்தோய் அலைகடல் சூழ்ந்த உலகம் முழுவதிலும், உனது வலிய யானையின் முன் எதிர்த்து நிற்கவும் துணிவுடைய மன்னர் யாருளார்? நின் யானையையும் பாகரையும் கொன்றவர், மழுவாயுதம் ஏந்தி நிற்கும் இவரே" என்று வணக்கத்துடன் கூறினார்கள்.

விளக்கம்

யானையுடன் வந்தோரில் எறிபத்தரால் வெட்டுண்டோர் போக எஞ்சிய பாகரே அரசனுக்கு செய்சி கூறி அழைத்து வந்தனர். அவர்களே இங்கு அரசனுக்கு மறுமொழி கூறுகிறார்கள்.

பாடல் : 37

குழை அணி காதானுக்(கு) அன்பராம் குணத்தின் மிக்கார்
பிழைபடின் அன்றிக் கொல்லார் பிழைத்த(து) உண்டு என்(று) உட்கொண்டு
மழைமத யானைச் சேனை வரவினை மாற்றி மற்ற
உழைவயப் புரவிமேல் நின்(று) இழிந்தனன் வகைமன்னன்

பொருள்

"குழையணிந்த செவிகளையுடைய சிவபெருமானுக்கு அன்பராகிய இவர் குணமிக்கவர். யாவை தவறு செய்திருந்தால் அல்லது கொல்ல மாட்டார். எனவே குற்றம் ஏதேனும் நிகழ்ந்திருக்கும் என்று மனத்தினுள் சிந்தித்து பார்த்து மழைபோல் மதம் சொரியும் யானைபடை முதலிய சேனைகள் முன்னேறாத வண்ணம் தடுத்து தாம் ஏறி வந்த கொற்றக் குதிரையினின்றும் மன்னர் இறங்கினார்.

விளக்கம்

இறைவனது அம்மையப்பர் திருவுருவத்தில் ஆண்பாகம் வலப்பாகம். வலக்காதிலணிந்த சங்குக்குழை வீரம் பற்றிய மறக்கருணை சுட்டும். அவன் அன்பராகிய இருவரும் குற்றம் கடியும் மறக்கருணையால் தான் இது செய்திருக்க வேண்டும் என்ற குறிப்பை உள்ளடக்கி 'குழையணி காதினானுக் கன்பர்' என்றார். 'குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கண்மேயும் காத்தல் அரிது' என்ற குறளின் கருத்தை நினைத்துப் போலும் அரசன் 'குணத்தின் மிக்கார்' என்றார். குணத்தின் மிக்க அவர் வெகுளி கணமும் காத்தல் அரிது. அவர் சினம் கொள்கின்ற வகையில் யானை பிழை செய்திருக்க வேண்டும் என்பது அரசன் கருத்து 'கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ்கலை கட்டதனொடு நேர் என்பதை உணர்ந்த மன்னராதலின் செய்த யானை கொல்லத்தக்கது என்றே உணர்ந்தார்.

அரசரது சிந்தனை தருக்க நியாய நெறியப்பட்டது ஆகும் நெருப்பின்றி புகையில்லை என்பது நிறுவப்பட்ட உண்மை. எனவே புகை காணப்படின் தீ அங்கு காணப்படா

விடினும் நெருப்புண்டு என கொள்ளப்படும். புகையாகிய காரியம் கொண்டு நெருப்பாகிய காரணம் துணியப்படும். இங்கே பிழையாகிய காரணத்தை அதற்கு தரப்பட்ட தண்டமாகிய காரியத்தினின்றும் அரசர் உணர்கிறார். பிழைப்பினல்லது கொல்லார் எறிபத்தர் என்பதால்,

உலக மன்னனாயினும் அடியார்க்குத் தொண்டனேயாதலின் புரவியினின்றும் கீழிறங்கித் தான் சென்று அவரிடம் பேசும் பண்பு காண்கிறோம்.

பாடல் : 38

மைத்தடம் குன்றுபோலும் மதக்களிற்று) எதிரே இந்த
மெய்த்தவர் சென்றபோது வேறொன்றும் புகுதா விட்ட
அத்தவம் உடையேன் நானே அம்பலவாணர் அன்பர்
இத்தனை முனிய கெட்டேன் என்கொலோ பிழை என்று) அஞ்சி

பொருள்

"கரிய பெரிய மலைபோன்ற உருவம் உடையதும் மதமுடையதுமான யானையின் முன் உண்மையான தவத்தரான இவர் சென்றபோது வேறொன்றும் நிகழாமை என் தவப்பற்றே ஆகும். அம்பலத்தாடும் எண்பிரானின் அடியரான இவர் இவ்வளவு சினம் கொண்டு யானையும் பாகரையும் கொல்லும் அளவு பெரியபிழை என்ன நேர்ந்ததோ? ஓ கெட்டேன்" என்று அரசர் அஞ்சிக் கூறினார்.

விளக்கம்

அரசரின் பண்பு இப்பாடலில் மேலும் விளக்கம் பெறக் காணலாம் யானையையும் பாகரையும் கொன்றவர் அரனடியார் என்பதைக் கண்டவுடனேயே சினம் தவிர்ந்து காரணமின்றி அவர் கொல்லாராதலின் யானை செய்த பிழை ஏதும் இருக்க வேண்டும் என்றவர் யானை கொல்லப்பட்டதற்குக் கூடக் கவலைப்படாமல் யானையால் அடியவர்க்குத் தீங்கேதும் நிகழாமை அறிந்து நிம்மதி கொள்ளும் இறையன்பும் அடியார்ப் பற்றும் எண்ணி இன்புற்குரியன். புகுதாவிட்ட - புகுதாபோயின் நிகழாமல் விட்ட இவ்வரசர் எத்தகையர் என்பது இவரது வரலாற்றினால் கூறப்படும் செய்தியென்றால் புலனாகும். பகைவரை வென்ற இவருடைய படைகள் மாற்றானின் நகரினின்றும் கொணர்ந்த தலைக்குவியலில் ஒரு தலையில் அரனடியார்க்குரிய அடையாளங்களில் ஒன்றான சடாமுடி தெரியக் கண்டதும் பெருந்துன்பம் அடைந்து அதனைப் பொன்னாலான தட்டில் ஏந்தித் தன் தலையில் தாங்கித் தீப்பாய்ந்தார் என்று புராணம் இவரைப் புகழும். அத்தகையோர் யானையில் எறிபத்தர்க்கு இன்னல் விளையாமைக்கு மகிழ்வது இயல்பன்றோ!

பாடல் : 39

செறிந்தவர் தம்மை நீக்கி அன்பர் முன் தொழுது சென்று ஈது
அறிந்திலேன் அடியேன் அங்குக் கேட்ட(து) ஒன்று) அது நிற்க

மற்ந்த இக களாறறன குறறம பாகமரா(ரு) இதனமான
எறிந்ததே போதுமோதான் அருள்செய்யும் என்று நின்றார்

பொருள்

அரசர் தம் அருகிருந்தோரை யெல்லாம் அப்பால் போகச்செய்து அரனடியாரான எறிபத்தர் முன் சென்றார். "இதனை யான் அறியவில்லை"; அடியேன் அரண்மனையில் கேள்விப்பட்டது வேறு செய்தி. அது நிற்க இறந்த யானையால் நேர்ந்த பிழைக்குக் கழுவாய் பாகருடன் இதைக் கொன்றதுடன் திருமோ? (வழங்கிய தண்டனை போதுமா?) கூறி அருள்க என்று கேட்டு நின்றார்.

விளக்கம்

தன் ஐம்புலன்கள் ஆன்மாவை மயக்கி வினையில் வீழ்த்துவதுபோல தம்மைச் சார்ந்த மக்கள் நிகழ்ந்த உண்மையை சரியாகக் கூறாமல் தம் அறிவை மயக்கி சிவக்குற்றத்தில் தன்னை வீழ்ந்த இருந்தனர். ஆதலின் இவர்கள் நீக்கத் தக்கார் என்ற குறிப்புப்பட 'நீக்கி' என்றார். யானையை கொன்றமை கூறியோர் கொல்லப்பட்ட காரணம் கூறவில்லை அன்றோ? அரன் கோவிலுக்கு அடியவர் எடுத்துச் சென்ற மலர்களை சிந்திய குற்றதிற்காக யானை கொல்லப்பட்டது என்ற கூறியிருந்தால் அரசனிடமும் அடியாரிடமும் பேரன்பு கொண்ட அரசன் படையுடன் புறப்பட்டிரான் அன்றோ? அத்தகையோரை 'நீக்கி' என்றார் சென்று தொழுது என்று கூறாமல் தொழுது சென்று என்றமையால் தொழுதவாரே சென்ற அன்பு புலனாகும்.

பாகரும் இறந்து கிடந்தனர். ஆயினும் களிற்றின் குற்றமே கேட்டார் அரசர் ஏனெனில் பாகர் தவறிழைத்திருப்பின் களிற்றைக் கொல்ல காரணமில்லை. ஆனால் களிறு பிழைத்திருந்தால் அதனையும் அதனை காக்க முற்பட்ட பாகரையும் கொன்றிருத்தல் கூடும். அறிவுடைய அரசர் இதனை ஓர்ந்து பேசுகிறார்.

முரசுகட்டிலில் துயின்ற மோசிகீரனார்க்கு கவரி கொண்டு வீசி நின்ற சங்ககால தமிழக அரசர் வழிவந்தவராதலின் பட்டத்து யானையைக் கொன்றவரிடம் "அதற்கு வழங்கப்பட்ட தண்டம் போதுமா" என கேட்கிறான். அரனடியான் சிறப்பறியா யானையை பட்டத்து யானையாக கொண்டு பிறகுற்றம் நிகழாத வண்ணம் தடுத்தாட் கொள்ள இயலாத பாகரையும் அமர்த்திய தனக்கும் தண்டமேதும் தருதல் முறையென அவன் மனம் கருதியது போலும் அன்றி வேறு யார் காரணம் எனினும் வேறு தண்டனை வேண்டுமெனினும் அவரையும் ஒறுத்துத் தண்டிக்கத் தான் முன்வருவதை உணர்த்துகிறேன்.

பாடல் : 40

மன்னவன் தன்னை நோக்கி வானவர் ஈசர் நேசர்
"சென்னி" இத்துங்க வேழம் சிவகாமி ஆண்டார் கொய்து
பன்கை ஆபரணர்ச் சாத்தக் கொடுவரும் பள்ளிதாமம்
தன்னை முன் பறித்துச் சிந்தத் தரைப்படத் துணிந்து வீழ்த்தேன்"

பொருள்

வானத்து தேவர்கெல்லாம் இறைவனாகிய சிவபெருமானிடம் அன்பு கொண்ட எறிபத்தர் அரசனை நோக்கி "சென்னியே சிவகாமி ஆண்டார் இறைவனுக்குச் சாத்தக்கொய்து கொண்டு வந்த திருப்பள்ளித் தாமத்தை இந்த யானை பறித்துச் சிந்தியதால் அதை நிலத்தில் விழுமாறு துண்டித்து வீழ்த்தினேன்" என்றார்.

விளக்கம்

தோழர்கள் மரபுக்குரிய பெயர்களில் ஒன்று 'சென்னி' என்பது, மேலும் தோழர்கள் வழிவழியாய்ச் சிவனடியைத் தம் சென்னியில் சேர்ந்த மரபினர். "சென்னி வளர் மதியணிந்த சிலம்பணி சேவடியார் தம் - மன்னிய சைவத்துறையின் வழி வந்த குழவளவர்" என்பார் சம்பந்தர் எனவே சிவத் குற்றம் நிகழவொட்டார் என்பதும் சென்னி என்பதால் உணர்த்தப்பட்டது. பன்னகம் - பாம்பு பன்னக ஆபரணர் பாம்மை அணியாக அணிந்த சிவனைக் குறிக்கும் "ஆர்த்திட்டதும் பாம்பு கைக் கொண்டதும் பாம்பு" என்பர் யானையையும் கொல்ல வல்ல நஞ்சுடைய பாம்புகளை பாம்பு" அணியாகப் பூண்டவர்க்குச் சாத்தும் மலரைச் சிந்தத் துணிந்த யானை என்பது குறிப்பு. சிவகாமியாண்டார் குற்றமேதும் செய்யாதிருக்க யானை தானாக முன்வந்து பறித்தது எனச் சுட்ட "முன் பறித்துச் சிந்த" என்றார்.

தமக்குச் சரியென்று தோன்றிய செயலாயினும், பிறர் குற்றமெனக் கருதவல்ல ஒன்றைத் தாம் செய்வதாக ஒப்புக் கொள்ளும் துணிவு சிலருக்கே உண்டு. எறிபத்தர் "வீழ்த்தேன்" என்று துணிவுடன் அரசரிடம் கூறுகிறார்.

பாடல் : 41

"மாதங்கம் தீங்கு செய்ய வரு பரிக்காரர் தாமும்
மீது அங்குக கடவுவாரும் விலக்கிடாது) ஒழிந்துபட்டார்
ஈது) இங்கு நிகழ்ந்தது" என்றார் எறிபத்தர்; என்ன அஞ்சிப்
பாதங்கள் முறையால் தாழ்ந்து பருவரைத் தடம்தோள் மன்னன்

பொருள்

(யானையைக் கொன்ற காரணம் கூறிய எறிபத்தர் பாகரைக் கொன்றது ஏனெனக் கூறத் தொடங்கி)" யானை சிவக்குற்றம் செய்தது கண்டும் அதனுடன் நடந்து வந்த குத்துக்கோற்காரரும் அதனை மேலிலிருந்து செலுத்தும் பாகரும் அதனைத் தடுக்க முற்பட்டமையால் (என்னால் மழு எறியப்பட்டு) மடிந்தார். இதுவே இங்கு நிகழ்ந்தது என விளக்கினார். எறிபத்தர் பேசக் கேட்ட அரசர் அச்சத்துடன் அவருடைய திருவடிகளை முறைப்படி வணங்கினார்.

விளக்கம்

கடமை தவறியதால் பாகர் மடிந்தார் என்பது சுட்டப்படுகிறது.

யானை தன் செயல்களை அறிந்து ஆராய்ந்து ஆற்றலற்றது. எனவே 'வீழ்த்தேன்' என்று அதைக் கொன்றதைத் தன் செயலாகக் கூறினார். பாகரோ பகுத்தறிவுடைய மனிதர். எனவே தம் இறப்பிற்குத் தாமே காரணமானார் எனச் சுட்டப் 'பட்டார்' என அவர் இறந்ததை அவர் செயலாகவே கூறினார். பெரியோரையும் இறைவனையும் பணியும் முறை பற்றி விதிகள் உண்டு. அவர் வணங்குமுன் தான் வணங்கல் ஐந்துறுப்புகள் அல்லது எட்டுறுப்புகள் நிலத்தில் பட வணங்குதல் முதலியன. அவ்விதிகளை அறிந்து முறைப்படி வணங்கினார் அரசர். அவர் வணக்கம் மனத்தின் பணிவால் வந்ததின்றி அச்சத்தால் வந்ததன்று என்பதைப் 'பருவரைத் தடந்தோள்' என்ற தொடர் சுட்டும். 'பெருக்கத்து வேண்டும் பணிதல்' என்பார் வள்ளுவரும்.

பாடல் : 42

'அங்கணர் அடியார் தம்மைச் செய்த இவ அபராதத்துக்(கு)
இங்கிது தன்னால் போதாது; என்னையும் கொல்ல வேண்டும்
மங்கல மழுவால் கொல்கை வழக்கும் அன்று இதுவாம் என்று
செங் கையால் உடைவாள் வாங்கிக் கொடுத்தனர் தீர்வு நேர்வார்

பொருள்

"இறைவனிடத்தும் அடியார்களிடத்தும் செய்த இந்தக் குற்றத்திற்கு யானையும் பாகரும் கொல்லப்பட்டமை மட்டும் போதாது; என்னையும் கொல்ல வேண்டும். தங்கள் கையிலுள்ள மங்கலமான மழுவினால் கொலை செய்தல் தக்கதன்று. இதுவே அதற்குத் தகுந்தது என்று தாமே தீர்ப்புரைத்துத் தம் உடைவாளை உருவி எறிபத்தர் கையில் தந்தார் அரசர்.

விளக்கம்

யானை செய்த குற்றம் பெரியது; அதற்கு எறிபத்தர் வழங்கிய தண்டனை சிறியதென்பது அரசர் கருத்து. அவரவர் இயல்பறிந்து அவரவர்க்குப் பொறுப்புகள் வழங்க வேண்டியது அரசன் கடமை. சிவக் குற்றம் இழைக்க வல்ல யானையையும் பாகரையும் தேர்ந்தெடுத்துப் பணியில் அமர்த்தியவன் அவனாதலின் மூலக்குற்றம் தனதெனக் கருதுகிறான்.

பாடல் : 43

வெந்தழல் சுடர்வாள் நீட்டும் வேந்தனை நோக்கி "கெட்டேன்
அந்தம இல் புகழான் அன்புக்(கு) அள(வு) இளமை கண்டேன்
தந்தவாள் வாங்க மாட்டார்; தன்னைத் தான் துறக்கும் என்று
சிந்தையில் உணர்வுற்று) அஞ்சி வாங்கினார் தீங்கு தீர்ப்பார்

பொருள்

வெவ்விய தழல்போல் (கொடிய நெருப்புப்போல் ஒளிவீசும் வாளை உருவி நீட்டும் அரசரைப் பார்த்து; "ஐயோ, கெட்டேன் — எல்லையில்லாத புகழுடைய இவ் அரசரின்

அன்பினுக்கு ஓர் அளவே இல்லையென்பதை இப்போது உணர்கிறேன்" என்று எண்ணினார் எறிபத்தர் அரசர் நீட்டிய வாளை வாங்க விரும்பாவிடினும் தாம் வாங்காவிடில் அரசர் தம்மைத் தாமே மாய்த்துக் கொள்வாரே என்று அதற்கும் அஞ்சினார். அத்தீமை நிகழாமல் காக்கும் கருத்தினார் அதைத் தம் கையில் வாங்கிக் கொண்டார்.

விளக்கம்

உடலைத் துறத்தல் என்பது செயற்கரிய செயலாகும். மானிடராய் பிறத்தலே அரிது; அதிலும் கூன், குருடு, செவிடாக அன்றி நல்லுடலுடன் பிறத்தல் மிக அரிது மேலும் சிறப்பான அரச குடியில் பிறந்து சிவனடியராகவும் திகழ்ந்து இறைவனின் இனித்தமுடன் எடுத்த பொற்பாதங்களை காணவென்ற மனிதப் பிறவியை வேண்டும் மனத்தினராய் வாழும் ஒருவர் அவ்வுடலைத் துறக்க விரும்புதல் அருஞ்செயல். உடலின் அருமை உணர்ந்தே திருமூலர்.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்ததே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே;

பொருள்

என்றும் "உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என் உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேன்" என்றும் பாடியுள்ளார். இப்பாடலைக் காப்பதற்காகப் பாதகம் புரிவோர் கூட உளர். அவ்வாறிருந்தும் சிவக்குற்றம் நிகழ்த்திய யானையையும் அதனைத் தடுக்கும் ஆற்றல் இல்லாத பாகரையும் பணியில் அமர்த்திய தாமும் சிவக்குற்றம் புரிந்ததாகவே கருதி, அக்குற்றம் புரிந்த உடல் சிதையட்டும் என்று எண்ணினான் அரசர்.

பாடல் : 44

வாங்கிய தொண்டர் முன்பு மன்னனார் தொழுது நின்றே
"ஈங்(கு) என்னை வாளினால் கொன்(று) என் பிழை தீர்க்க வேண்டி
ஓங்கிய உதவி செய்யப் பெற்றனன் இவர் பால்; என்றே
ஆங்(கு) அவர் உவப்பக் கண்ட எறிபத்தர் அதனுக்(கு) அஞ்சி

பொருள்

வாளை வாங்கிய சிவதொண்டரின் முன் அரசர் தொழுது நின்றார். "வாளினால் கொன்று என் பிழையை தீர்க்கும் பேருதவி செய்யும் பேற்றினை இவரிடம் நான் பெற்றேன்" என்று மகிழ்ந்தார் அது கண்ட எறிபத்தர் அஞ்சினார்.

விளக்கம்

குற்றம் நிகழாமல் காத்தல் வேண்டும் குற்றம் புரிந்தோரைத் தண்டிக்கும் பொறுப்புடைய அரசர் கண்ணோட்டம் இன்றித் தன்னையும் தண்டிப்பதுடன் அதற்கு மிகவும் செய்யும் அருஞ்செயலை இங்கே காண்கிறோம்.

பாடல் : 45

“வன்பெரும் களிறு பாகர் மடியவும் உடை வாளைத் தந்து
என் பெரும் பிழையினாலே என்னையும் கொல்லும் என்னும்
அன்பனார் தம்மைத் தீங்கு நினைந்தனன்” என்று கொண்டு
“முன்(பு) என்(று) உயிர் செகுத்து முடிப்பதே முடிவு” என்(று) எண்ணி

பொருள்

‘வலிய பெரிய யானையும் பாகரும் மடிந்தும் (அதற்கு வருந்தாமலும் அதற்கு காரணமான என்னைத் தண்டியாமலும்) தம் உடைவாளைத் தந்து யானையும் கொல்லுமாறு கூறுகின்ற இப் பேரன்பருக்குதான் தீங்கு நினைத்தேனே” என்று எண்ணி, முதலில் என் உயிரைப் போக்கிக் கொள்வதே இதற்கு முடிவாகும்” என்று கருதினார்.

விளக்கம்

சிவத்தொண்டுக்கு இடையூறாகிய யானையை இவன் “வென்றியமால் யானை” என்றது ஏனெனில் சிவனடியார்களாகிய சிவகாமியாண்டார் எறிபத்தர் அரசர் ஆகியோரின் பெருமையை உலகிற்குகாட்டுதற்காக இறைவன் நிகழ்த்திய திருவிளையாடலில் யானை ஒரு கருவியாயிற்றேயன்றித் தீக்குணத்தால் சிவக்குற்றம் இழைத்திலது என்பதால்.

பாடல் : 46

புரிந்(து) அவர் கொடுத்த வாளை அன்பர்தம் கழுத்தில் பூட்டி
அரிந்திடல் உற்றபோதில் அரசனும் “பெரியோர் செய்கை
இருந்தவாறு) இது என்? கெட்டேன்” என்(று) எதிர் கடிதிற் சென்று
பெரும் தடம் தோளால் கூடிப் பிடித்தனன் வாளும் கையும்

பொருள்

அரசர் கொடுத்த வாளைக் கொண்டு எறிபத்தர் தம் கழுத்தை அரியத் தொடங்கவே அரசர் துணுக்குற்று “ பெரியோர் செய்த்துணிந்த செயல் என்னே! ஐயோ கெட்டேன்” என்று விரைந்து போய் அந்த வாளையும் அதை ஏந்திய கையையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டார்.

விளக்கம்

பெரியோர் ஒருவர் தாமே தம் உயிரைப் போக்கி கொள்ள முனையும் செயல் தன்னால் நிகழந்ததே என்று அரசர் துணுக்குற்று “ஐயோ கெட்டேன்” என்றார்.

பாடல் : 47

வளவனார் விடாது பற்ற மாதவர் வருந்தி நிற்ப
அள(வு) இலாப் பரிவில் வந்த இடுக்கணை அகற்ற வேண்டிக்
களமணி களத்துச் செய்ய கண்ணுதல் அருளால் வாக்குக்
கிளர் ஒளி விசும்பின் மேல வந்(து) எழுந்தது பலரும் கேட்ப

பொருள்

தாம் செய்யத் துணிந்ததைச் செய்ய விடாமல் தன்கையையும் வாளையும் சோழர் பற்றியதால் பெரும் தவராகிய எறிபத்தர் வருந்தி நின்றார். அளவற்ற அன்பு காரணமாகவே இவ் இருவரிடத்திலும் வந்த துன்பத்தை நீக்கும் பொருட்டு நஞ்சணிந்த கண்டரும் நுதலில் கண்ணுடையவருமான சிவபெருமான் ஞானஒளி திகழும் வானில் பலரும் கேட்குமாறு திருவாக்குத் தந்தருளினார்.

விளக்கம்

அன்பின்மையால் துன்பம் நிகழ்வதே உலக இயல்பு இங்கோ அன்பினாலேயே துன்பம் நிகழ்ந்தது. எனவே 'பிரிவில் வந்த இடுக்கண்" என்றார். கொடிய நஞ்சினால் தேவர்களுக்கு நேர இருந்த இடுக்கண் தீர்க்கவே இறைவன் ஆலம் உண்டு நீல கண்டரானார். இங்கும் அடியவர் இடுக்கண் தீர்க்க விரைந்து வந்தார். சிவனது நெற்றிக்கண் நெருப்பு ஆதலின் 'செய்ய கண்ணுதல்' என்றார்.

பாடல் : 48

"தொழுந்தகை அன்பின் மிக்கீர்; தொண்டினை மண்மேல் காட்டச்
செழுந்திரு மலரை இன்று சினக்கரி சிந்தத் திங்கள்
கொழுந்து (அணி) வேணிக் கூத்தர் அருளினால் கூடிற்(று) என்(று) அங்(கு)
எழுந்திடு பாகரொடு யானையும் எழுந்ததன்றே.

பொருள்

யாவரும் தொழத்தக்க பெருமையுடைய அன்பினால் மிக்கவர்களே திருத்தொண்டின் தன்மையை மண்ணுலகில் காட்டுவதற்காகவே திருப்பள்ளித் தாமத்தை இன்று யானை சிந்தும்படியான நிகழ்ச்சி பிறையணிந்த சடையை உடைய கூத்தனாரின் திருவருளினாலே கூடிற்று" என்று இறைத் திருவாக்கு வானில் எழுந்து இறந்த பாகரும் யானையும் உயிர் பெற்று எழுந்தனர்.

விளக்கம்

மலர்கள் சிந்திய துயரில் இறைவனை அழைத்து ஓலமிட்ட போது சிவகாமியாண்டார் "ஏறும் மலரைக் கவி சிந்துவதே" எனக் கேட்டார். உன்முடிக்கு அணியாகும் மலரைச் சிந்தும் வல்லமை ஒரு யானைக்கு உண்டா என்ற அவ்வினாவிற்கு விடைபோல அமைகிறது இப்பாடற் பொருள் சிந்த வேண்டும் என்பது இறைவன் திருக்குறிப்பாதலின் யானை சிந்தும் வல்லமை பெற்றது என்பதே அவ்விடை.

முதலில் யானையும் பின்னர்ப் பாகரும் இறந்தனர். ஒடுங்கியவை மீள எழுகையில் யாது இறுதியில் ஒடுங்கிற்றோ அஃதே முதலில் எழும் என்பது முறையாக கருதப்படுகிறது. யானையும் பாகரும் தோன்றுகையில் எழுந்தனர்.

பாடல் : 49

ஈரவே பூட்டும் வாளை விட்(டு) எறிபத்தர் தாமும்
நேரியர் பெருமான் தாள்மேல் விழுந்தனர்; நிருபர்கோனும்
போர்வடி வாளைப் போக எறிந்தவர் சுழல்கள் போற்றிப்
பார்மிசைப் பணிந்தான் விண்ணோர் பனிமலர்மாரி தூர்த்தார்!

பொருள்

தம் கருத்தினை அரியும்படி தூக்கிய வாளினைவிட்டு எரிபத்தரும் சோழரின் கால்களில் வீழ்ந்தார். அரசரும் வாளை எறிந்துவிட்டு எரிபத்தரை வணங்கி அவர் திருவடிகளில் படுமாறு நிலத்தில் விழுந்து பணிந்தார். தேவர்கள் குளிர்ந்த மலர் மழை பொழிந்தனர்.

விளக்கம்

இறைவன் திருவருளால் அவர் திருக்குறிப்புப்படி நிகழந்த ஒரு செயலைச் சிவக்குற்றம் எனத் தவறாக கருதிய எறிபத்தர் அச்செயல் குறித்த உண்மையைத் தா'ம் உணரக் காரணமாக இருந்த அரசரின் கால்களில் வீழ்ந்தார்.

பாடல் : 50

இருவரும் எழுந்து வானில் எழுந்த போர் ஒலியைப் போற்ற
அருமறைப் பொருளாய் உள்ளோர் அணிகொள் பூங்கூடை தன்னில்
மருவிய பள்ளித் தாமம் நிறைந்திட அருள மற்(று) அத்
திருவருள் கண்டு வாழ்ந்து சிவகாமி யாரும் நின்றார்.

பொருள்

எரிபத்தரும் அரசரும் எழுந்து நின்று வானில் எழுந்த திருவாக்கின் ஒலியை போற்றினர். அருமறைப் பொருளாக உள்ள சிவபெருமான் அழகிய பூக்கூடையில் முன் பொருந்தியிருந்த மலர்கள் நிறையும்படி அருள் செய்ய அத்திருவருட் செயலைக் கண்டு பெருவாழ்வு அடைந்தவராய் மகிழ்ந்து சிவகாமியாண்டாரும் நின்றார் விளக்கம்.

பலரும் கேட்க மேல் வந்த எழுந்த பேரொலி என்பதாலும் சுத்தமாயை முதற்காரணமாகிய எழுத்தொள என்பதாலும் அனைத்திற்கும் காரணமாகிய இறைவனிடத்தினின்றும் வந்தமையாலும் பேரொலி என்பார். இப்புராணத்தில் சிக்கல் தோன்றியதே மலர் சிந்தியமையால் தான். அழிந்தமுறைக்கு எதிர் முறையில் படைப்பு நிகழுமாதலின் முதலில் மறைந்த மலர்கள் இறுதியில் கூடையில் தோன்றின.

பாடல் : 51

"மட்(டு) அவிழ் அலங்கல் வென்றி மன்னவர் பெருமான் முன்னர்
உள்தரும் களிப்பினோடும் உறங்கி மீ(து) எழுந்த(து) ஒத்து

முட்ட வெம் கடங்கள் பாய்ந்து முகிலென முழங்கி பொங்கும்
பட்டவர்த்தனத்தைக் கொண்டு பாகரும் அணைய வந்தார்"

பொருள்

மணம் வீசும் ஆத்திமாலை அணிந்த மன்னர் முன்பு தூங்கி எழுந்தது போன்ற தோற்றத்துடன் மதநீர் பாயவும் ஆரவாரத்துடன் பட்டவர்த்தனம் என்னும் யானையைச் செலுத்திக் கொண்டு மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு பாகர்களும் அங்கே வந்தனர்.

விளக்கம்

இறையருளால் இறந்தவர் இயல்பாக எழுந்து வந்ததை உறங்கி எழும் இயல்பான செயலுக்கு ஒப்புமை கூறுகிறார். "உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி எழுவது போலும் பிறப்பு" என்னும் குறளும் ஈண்டு ஒப்பு நோக்குதற்குரியது.

பாடல் : 52

"ஆனசீர்த் தொண்டர் கும்பிட்(டு)" அடியேனேன் களிப்ப இந்த
மானவெம் களிற்றில் ஏறி மகிழ்ந்து) எழுந்தருளும்" என்ன
மேன்மை அப் பணிமேற்கொண்டு வணங்கி வெண் குடையின் கீழ்
யானை மேற் கொண்டு சென்றார் இவுளி மேற் கொண்டு வந்தார்."

பொருள்

சிறப்புடைத் தொண்டரான எறிபத்தர் அரசரை வணங்கி "அடியேன் கண்டு களிக்குமாறு இவ் யானையின் மேலேறி மகிழ்ச்சியுடன் இனி உமது அரண்மனைக்கு எழுந்தருளக் கடவீர்" என்று சொல்லக் குதிரை ஏறி வந்த மன்னர், அக்கட்டளையை ஏற்று எரிபத்தரை வணங்கி வெண் குடைநிழலில் யானை மேலே ஏறிச் சென்றார்.

விளக்கம்

இறைவன் திருவருளுக்காளான அரசரை யானைமேல் உலாவரக் காணும் வேட்கையுடன் எரிபத்தர் பேசுகிறார் அரனடியாரும் தம் மதிப்பிற்கு உரியவருமான எரிபத்தர் முன் தாம் யானை மேல் ஏறிச் செல்லல் அரசர்க்கு உடன்பாடு அன்றென்றாலும் அவர் கட்டளையைத் தாம் மேற்கொண்டு அவரை வணங்கிச் செல்லும் பண்பினைக் காண்கிறோம்.

பாடல் : 53

'அந்நிலை எழுந்த சேனை ஆர்கலி ஏழும் ஒன்றாய்
மன்னிய ஒலியின் ஆர்ப்ப மண்ணெலாம் மகிழ்ந்து வாழ்த்தப்
பொன் நெடும் பொதுவில் ஆடலில் நீடிய புனிதர் பொன் தாள்
சென்னியில் கொண்டு சென்னி திருவளர் கோயில் புக்கான்"

பொருள்

அந்நிலையில் ஏழகடல்களும் ஒன்று சேர்ந்து ஒலித்தாற் போன்ற ஓசையுடன் சேனைகள் ஆரவாரித்தன. உலகத்தார் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்த்தினர். பொன்னம் பலத்தே ஆடும் இறைவன் திருவடிகளைத் தலையில் சூடியவராய்ச் சோழரும் தமது அரண்மனையை அடைந்தார்.

விளக்கம்

யானையின் மேலிருந்தபோதும் இறைவன் தாளின் கீழ் உள்ளோம் என்ற உணர்வே அரசர்க்கு இருந்ததாதலின் (தாள் சென்னியிற் கொண்டு) என்றார்.

பாடல் : 54

தம்பிரான் பணிமேற் கொண்டு சிவகாமியாரும் சார
எம்பிரான் அன்பரான எறிபத்தர் தாமும் என்னே
அம்பல நிறைந்தார் தொண்டடர் அறிவிற் (கு) அரியார் என்று
செம்பியன் பெருமை உன்னித் திருப்பணி நோக்கிச் சென்றார்.

பொருள்

தம்பிரானது பணியை மேற்கொண்டு சிவகாமியாரும் திருக்கோயிலை நோக்கிச் செல்ல இறைவனது அன்பராகிய எறிபத்தரும் "என்னே அம்பலம் நிறைந்த சிவபெருமானின் தொண்டடர்கள் அறிதற்கு அரியராவர்" என்று சோழரது பெருமையை நினைத்து அற்புத உணர்வு மேலோங்கத்தம் திருப்பணியைத் தொடரச் சென்றார்.

விளக்கம்

சிவகாமியாண்டாரின் மலர்சாத்தும் பணி அன்றாடம் தடையின்றி வழக்கமாக நிகழ்வது. எனவே மேற்கொண்டு சென்றார். எரிபத்தர் பணியோ அரனடியார்க்கு துன்பம் நேரும் காலத்து மட்டுமே நிகழுமாதலின் அதனை 'நோக்கிச் ' சென்றார்.

பாடல் : 55

மற்றவர் இனையதான வன்பெரும் தொண்டு மண்மேல்
உற்றிடத்து) அடியார் முன் சென்று) உதவிய நாளுநாளும்
நல்தவக் கொள்கை தாங்கி நலமிகு கயிலை வெற்பில்
கொற்றவர் கணத்தின் முன்னாம் கோழுதல் தலைமை பெற்றார்

பொருள்

எறிபத்த நாயனார் இப்படிப்பட்ட வலிய தொண்டினை இவ்வுலகில் அடியார்கள் துன்புற்ற காலத்து முன்சென்று உதவி நாள்தோறும் தம் கொள்கைபடியே நடந்து திருக்கயிலை மலையில் இறைவருடைய திருக்கணங்களின் முதல்வர்க்கு முதல்வராகுப் கணநாயகத் தலைமையைப் பெற்றார்.

விளக்கம்

மழுவினால் எறிதலின் வன்தொண்டு ஆயிற்று. பேரிடர்களையும் பெருவீரம் கொண்டு தீர்ப்பதாலும் இறையன்பர்க்குச் செய்யப்படுவதாலும் அது பெருந்தொண்டு ஆயிற்று. யாரும் வேண்டாமல் தாமே முன் சென்று உதவுவராதலின் உற்றிடத்து முன் சென்று என்றார். நல் தவம் கொள்கை தாங்கியதாகக் கூறப்படுவதன் பொருள் சுப்பிரமணிய முதலியாரால் பின்வருமாறு விளக்கப்படுகிறது. "சிவனடி மறவாச் சிந்தையும் அதனால் அவனடியார்க்குப் பணி செய்யும் ஆர்வமும் தவக் கொள்கை எனப்பட்டன. அடாதன செய்தாரைத் தண்டித்து எறிகின்ற வகையாலே இங்கு யானையும் பாகரும் பட்டமைப் போலப் பலரும் படவரினும் அவை திருத்தொண்டினை நிகழச் செய்யும் நன்மை பயத்தலால் நற்கொள்கை எனப்பட்டன. தாங்கி அடியார்க்கு வரும் இடையூறுகளைக் களைவது ஆண்டானாகிய அரசன் பொறுப்பு. ஆயின் இங்கு அவரது பிரதிநிதியாக அவர் உள்ளிருந்து ஊக்கி அறிவித்து இயக்கிய வழியே எறிபத்தர் தமது கடமையாக மேற்கொண்டு செய்தனர். இது பெரும்பலமான கடமையாதலின் தாங்கி என்றார்.

பாடல் : 56

"ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மையும் தம்மைக் கொல்ல
வாளினைக் கொண்டு நின்ற வளவனார் பெருமை தானும்
நாளும் மற்றவர்க்கு நல்கு நம்பர்தாம் அளக்கிலன்றி
நீளும் இத் தொண்டின் தீர்மை நினைக்கில் ஆர் அளக்க வல்லார்?"

பொருள்

ஆளுடைய தொண்டராகிய எரிபத்த நாயனார் செய்த வீரச்செயலினையும் தம்மையும் கொல்லும்படி தமது உடைவாளையும் கொடுத்து நின்ற சோழரது பெருமையினையும் நாளும் நாளும் அவர்க்கு அருள்கள் நல்கும் நம்பராகிய இறைவர் தாமே அளந்தாலன்றி நீளச் செல்கின்ற இந்தத் திருத்தொண்டின் தன்மைகளை நினைக்குமிடத்து யாவர் அளக்கும் வன்மையுடையார்? (ஒருவரும் இலர்)

விளக்கம்

யானையின் பலமும் மதம் கொண்ட தன்மையும் பாகர் பலரானதும் அரச சார்பும் தமது தனிமையும் ஆகியவற்றை எண்ணாது எறிபத்தர் முன் சென்றமையின் 'ஆண்மை' என்றார்.

வினா

1. எறிபத்த நாயனார் அவதரித்த நாட்டுச் சிறப்பினைச் சேக்கிழார் எவ்வாறு புகழ்கிறார்?

2. எறிபத்த நாயனாரின் பக்திச் சிறப்பினை எடுத்துரைக்க.

வளன் சனித்த படலம்

ஆசிரியர்

கிருத்துவ சமயத்தைப் பரப்பத் தமிழகத்துக்கு வந்த மேனாட்டார் பலர். அவர்களுள், வீரமாமுனிவர் இத்தாலி நாட்டில் உள்ள மாந்துவா மாநிலத்தில் காஸ்திக்கிலோன் என்னும் சிற்றூரில் கி.பி.1680 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தையார் கொண்டல் மோ பெஸ்கி; தாயார் எலிசபெத் அம்மையார், பள்ளிப்படிப்பை முடித்ததும் சமயப் பணியில் ஈடுபடக்கருதி இவர் சேசு சபையிற் சேர்ந்தார். சமயக் கல்வியுடன் இத்தாலி, கிரேக்கம், எபிரேயம் எனப் பல மொழிகளையும் பயின்று தேர்ச்சியுற்றார். 1707-ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்றார்.

1711-ஆம் ஆண்டு தமிழகத்திற்கு வந்தார். தத்துவ போதகரையும், அருளானந்தரையும் போலவே இவரும் ஊனுணவைத் துறந்து காவியாடை அணிந்து தமிழகத் துறவி போன்றே வாழ்ந்தார். சுப்பிர தீபக்கவிராயர் என்பவரிடம் தமிழ்க் கற்றதாகக் கூறுவர்.

காமநாயக்கன்பட்டி, குருக்கள்பட்டி, மணப்பாடு, அம்பலக்காடு முதலான பல இடங்களில் இவர் சமயப்பணி ஆற்றினார். ஏலாக்குறிச்சி வட்டாரக் குருவாகப் பணியாற்றியபோது, அவ்வூரை ஆண்ட குறுநில மன்னரான மழவராயரிடம் நட்புக் கொண்டு ஏலாக்குறிச்சியில் ஒரு மாதா கோவில் கட்டினார். அம்மாதாவினைத் தொழுது திருக்காவலூர்க் கலம்பகம், அன்னையழுங்கல் அந்தாதி, அடைக்கலமாலை முதலிய பக்திச் சுவை ததும்பும் சிறு நூல்களைப் பாடினார். மேலும் அந்தாதி அடைக்கலமாலை முதலிய பக்திச் சுவை ததும்பும் சிறு நூல்களைப் பாடினார். மேலும் விருத்தாசலத்துக்கு ஆறுமைல் தொலைவிலுள்ள கோனான் குப்பம் என்னும் சிற்றூரில் ஒரு கோவில் கட்டி, மரியாளின் திருவுருவைத் தமிழ் நாட்டுப் பெண் வடிவில் அமைத்துப் 'பெரிய நாயகி' எனப் போற்றினார். அவ்வன்னையின் அருள் பெற்று முனிவர் பாடிய நூலை தேம்பாவணயாகும்.

இந்நூல் கி.பி.1726-இல் இயற்றப்பட்டது. தேம்பாவணியே முனிவர் மதுரையில் உள்ள புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றியபோது புலமை வீறும் சமய வீறும் ஒருங்கே விளங்கியமை அறிந்து அவரை வீரமாமுனிவர் எனப் போற்றியதாய்க் கூறுவர்.

1746 -இல் கேரள நாட்டிலுள்ள அம்பலக்காடு என்னும் ஊரிலிருந்த சேசுசபை மடத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். அங்கு அவர்1774-இல் இறைவன் திருவடியை அடைந்தார்.

தமிழுக்குப் பல துறைகளிலும் தொண்டாற்றிய இவர். இவர் இயற்றிய

பெருங்காப்பியம் — தேம்பாவணி

சிறுகாப்பியம் — திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலை, கலிவெண்பா, அன்னை அழுங்கல், அந்தாதி, கித்தேரியம்மாள் அம்மானை, கருணாம்பரப் பதிகம்.

இலக்கண நூல்கள்	—	தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம்.
உரைநடை நூல்கள்	—	வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதக மறுத்தல், ஞானம் உணர்த்துதல், திருச்சபைக் கணிதம், வாமன் கதை, பரமார்த்தகுரு கதை முதலியன.
அகராதிகள்	—	சதுரகாதி; தமிழ் இலத்தீன் அகராதி; தமிழ் — பிரெஞ்சு அகராதி; தமிழ்—போர்த்துக்கீசு அகராதி.

அகராதித் துறையில் காலத்தாலும், தரத்தினாலும் முதன்மை வாய்ந்தது இவர் நூலாதலின் இவரை 'அகராதியின் தந்தை" என்றே புகழ்வர். தமிழ் எழுத்துக்களில் வரி வடிவில் இவர் செய்த சீர்திருத்தம் அனைவரும் அறிந்ததே.

இவரியற்றியவற்றுள் தலைசிறந்ததாகிய தேம்பாவணியில் உள்ள "வளன் சனித்த படலம்" நமக்குப் பாடப் பகுதியாக அமைந்துள்ளது.

வளன் சனித்த படலம்

பாயிரத்திற்குப் பின் அமைந்த நாட்டுப் படலம், நகரப் படலம் ஆகியவற்றுக்கும் அடுத்து அமைவது இப்படலம். இது 61 பாடல்களைக் கொண்டது. வளன் என்பது சூசையப்பரைச் சுட்டும். அவர் (ஜனித்த —சனித்த) பிறந்த வரலாறு பேசுவததாலின் இப்பெயர் பெற்றது. சூதேய நாட்டில் எருசலேம் நகரின் சிறப்புரைத்தவர் அந்நகரை ஆண்ட தாவீது மன்னனின் சிறப்பொடு வளன் சனித்த படலத்தைத் தொடங்குகிறார்.

"அன்னமா திருநக ரத்துஉ டற்கு உயி
ரென்னமா தாவிதன் இனிதில் வீற்றிருந்து
ஒன்னலார் வெருவுற உவந்து, பாவலர்
சொன்னபா நிகருமேல் துளங்கி னான்; அரோ" (1)

1. பாடற் பொருள்

(முன்னுள்ள நகரப்படலத்தில் விளக்கிக் கூறப்பட்ட சிறப்புக்களைப் பெற்ற) அத்தகைய செல்வநகரில், உடலுக்கு உயிர்போல் தாவீது மன்னன் அரசாண்டான். பகைவர் அஞ்சுமாறு அவரை வென்று களிப்புக் கொண்டான். புலவர்கள் உவமித்துக் கூறிய பொருள்களுக்கெல்லாம் மேலானவனாக விளங்கினான்.

விளக்கம்

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னன் உயிர்ததே மலர் தலை உலகம்" என்ற சங்க இலக்கிக் கோட்பாடு இப்பாட்டில் காணப்படுகிறது. உயிரெல்லாம் புக்கதோர் உடம்பும் ஆயினான் எனக் கம்பர் மன்னனை உடலாகவும், மக்களை இயக்காற்றல்

கொண்ட உயிராகவும் பேசுவார். உயிரும் கண்ணுமாய் ஆயினான் எனச் சேக்கிழார் செப்புவார். ஒருங்கிணைந்திருந்தால் மட்டுமே செயற்படக்கூடிய உயிர்—உடல் உறவினை அரசு — மக்கள் தொடர்பில் பொருத்திப் பேசுதல் எம்முறையிலும் பொருளாழம் வாய்ந்ததே. "ஞாயிற்றன்ன வெந்நிறல் ஆண்மை யொடு' ஒன்னாதார்க்கு இன்னான் ஆதலை அரசர்க்குச் சிறப்பாகப் பேசும் சங்க இலக்கிய மரபினை, 'ஒன்னலார் வெருவுற உவந்து' என்ற தொடரில் காண்கிறோம்.

"அருளொடு வீங்கிய அகத் தினான், குளி
மருளொடு வீங்கிய மழைக்கை யான், மலர்ச்
சுருளொடு வீங்கிய தொடையல் மார்பினான்
பொருளொடு வீங்கிய பொறைப்பு யத்தினான்"

2. பாடற் பொருள்

தாவீது அருள் நிறைந்த மனமுடையவன், நீர்த்துளிகள் நிறைந்த மேகங்களினும் சிறந்த கொடைக்கை உடையவன்; மலர் மாலைகள் நிறைந்த மார்பினை உடை யவன், பொன் அணிகலன்கள் நிறைந்த மாலை போன்ற தோள்களை உடையவன்.

விளக்கம்

குடிதழீஇக் கோலோச்சும் மன்னன், கொடை, அளி, செங்கோல், குடி-யோம்பல் ஆகிய நான்கு பண்புகளும் பெற்றிருத்தல் வேண்டுமென்பர் வள்ளுவர். தாவீது அவை உடையான் என்பதை இப்பாடலில் உணர்த்துகிறார் ஆசிரியர். கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடைய மாரியே கொடையிற் சிறந்தார்க்கு உவமையாதல் தமிழிலக்கிய மரபு, சூல் கொண்ட மேகமே பயன் தருமாதலின் வறண்ட வெண்மேகம் விலக்கித் தடதுளி மருளொடு வீங்கிய மழைக்கையான்' என்றார். திருவும் தெளிவும் ஒருங்கே குடிபுகாத இருவேறு உலகத்து இயற்கைக்கு மாறாக அழகும், ஆண்மையும் அமையப் பெற்றவன் என்பதுணர்த்தப் "பொருளொடு வீங்கிய பொறைப் புயத்தினான்' என்றார்.

"ஒளிதவழ் அசனியை உமிழ்ந்த வில்லினான்,
அளிதவழ் நிழல்செயும் அருட்கு டையினான்,
வெளிதவழ் நவமணி விழுங்கும் தேரினான்
களிதவழ் மதம்பொழி களிற்றின் ஆண்மையான்"

3. பாடற் பொருள்

தாவீது மின்னலொடு கூடிய இடி போன்ற அம்புகளை வெளியிடும் வில்லுடையவன். கருணைமிகுந்ததும் மக்களுக்கு நிழல் தருவதுமான குடையுடையவன். ஒளி மிகுந்த நவமணிகள் பதிக்கப் பெற்ற தேரினையுடையவன். களிப்புத் தவழும் மத் பொழிகின்ற களிறு போன்ற வீரமுடையவன்.

விளககம

'ஒளிதவழ் அசனி' என்ற தொடர் மின்னலோடு கூடிய இடி எனப் பொருள்படும். கூரிய ஒளி வீசும் அம்பினைச் சுட்டும் உருவகத் தொடராகும். அவன் வில்லானது, 'ஒளிதவழ் அசனியை' — மின்னலோடு கூடிய இடியினை உமிழ்கிறது என்றார். கூரிய அம்புகளை எய்கிறது என்பது பொருள். அசனி போன்ற அம்பு என்று கூறாமல் அசனியையே உமிழ்வதாகக் கூறுகிறார். வெற்றக்கு அறிகுறியாம் வெண்கொற்றக்குடையினை மக்களுக்கு நிழல் செய்தல் கருத்தை ஏந்தியதாய்ப் பாடுதல் மரபு. 'வெயில் மறைக் கொண்டன்று குடிபுரப்பதுவே கூர்வேல்வளவ' என வெள்ளைக் குடி நாயகனார் பாடியது ஈண்டு ஒப்பு நோக்கற்குரியது. அவன் அருட்பண்பைக் குடைக்கேற்றி, 'அருட்குடை' என்றார். வில்லும் தேரும் வீரன் கைப்படாவிடின் வெற்றெனக் கிடக்குமன்றோ! 'பேடிகை வாளாண்மை' என வள்ளுவர் நகைத்த நிலையன்றோ? அதை விலக்க ஒளிதவழ் அசனியை உமிழும் வில்லும், வெளிதவழ் நவமணி விழுங்கிய தேரும் கொண்டவன் களிதவழ் மதம்பொழி களிற்றின் ஆண்மையான் ஆகவும் விளங்கினான் என்றார். வீரம் மட்டுமன்றி ஈரமும் பெற்றிருந்தமை உணர்த்த 'அளி தவழ் நிழல் செயும் அருட்குடையினான்' என்றார்.

4. பாடற் பொருள்

தாவீது போரில் புறங்கொடாத வலிமையுடையவன். சிங்க ஏறு போன்றவன். இவன் பகைவர்கள், உண்மை முன் எதிர்த்து நிற்க முடியாமல் பொய்மை ஓடி ஒளிதல் போல் இவன் வலிமையின் முன் நிற்க முடியாமல் கலங்கி ஓடுவர். இவ்வாறு போர் தொடங்கு முன்னரே வெற்றி பெறும் சிங்கம் போன்ற சிறப்புடையவன்.

விளக்கம்

இவனை எதிர்த்து நிற்கவும் திறமின்றி உள்ள உரமின்றிப் போர் தொடங்குமுன்னரே புறமுதுகிட்டுப் பகைவர் ஓடும் நிலைக்கு 'மெய் முனர்ப் பொய்யென' என்று கூறும் உவமை பெரிதும் சிறந்தது. மெய்யே வெல்ல வேண்டும் என்பது அறநியதி யன்றோ? ஆழ்ந்த பொருள் தந்து புலத்திற்றாகிச் சவியுறத் தெளிந்து சான்றோர் கவி அமையுமெனக் கம்பர் கூறியமை உயிர்க்கு உறுதியளிக்கும் உலகில் உண்மைகள் ஆங்காங்கு விரவிக் கிடக்கும் என்பதலான்றோ? அத்தகு உண்மைகளுள் ஒன்றை இப்பாடலில் உவமையாக உரைக்கின்றார் ஆசிரியர்.

5. பாடற் பொருள்

தாவீது, வேலினாற் செய்யும் போரில் பிறரால் என்றும் வெல்லப்படாதவன்; மேம்படச் செய்யும் தவத்தினால் தம்மைத் தானே வென்றவன். மீன்கள் திரிகின்ற கடல் சூழ்ந்த உலகில் ஒளி மிகுந்த வானவரும் விரும்பும் தன்மையொடு நிற்பவன்.

விளக்கம்

உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காத்தலே வெற்றிக்குள் வெற்றி வாய்ந்ததாகலின் புலன்களை வென்று செய்யரும் தவத்தினால் தாவீது மேம்பட்டதைச் சிறப்பித்துப் பேசுகின்றார். வெளிப்படையாகச் செய்யும் போரில் கிடைக்கும் வெற்றி தோல்விகள் பெரிதல்ல. எனவே, 'வேல் செய்யும் போரினால் வெலப்படான், ஆகத் தாவிது விளங்கினான என்பதோடு நிறுத்தாமல், 'சால்செயும் தவத்தினால் தனை வென்ற தன்மையன்' ஆகவும் அவன் விளங்கியதைக் குறிக்கிறார். பிறரை வெல்லல் எளிது. அதற்குத் துணை வலியும் உண்டு. தன்னை வெல்லல் அரிது. தாவீதும் தன்னை வெல்வார் யாருமற்ற நிலையில் தன்னைத் தானே வென்றான் என்பதும் உணரப்பட்டது. வானவரும் மகிழ மானிடரும் புகழ வாழ்ந்தவன் எனக் கூறுகிறார்.

"நீதிநன் முறையெலாம் நிறைந்த நீள்தவம்,
ஆதிதன் மறை இவை அனைத்தும் மேற்படர்
கோதில் நன்உதவிசெய் கொழுகொம்பாகி வான்
ஏதில்நன் முறை, இவண் இசைந்த மாட்சியான்" (6)

6. பாடற் பொருள்

நீதி, நன்முறை, நீண்டதவம், ஆதி வேதமுறை ஆகிய அனைத்தும் மேலே படர்ந்து வளர உதவுகின்ற குற்றமில்லாத கொழுகொம்பாகத் தாவீது வாழ்ந்தான். வானுலகில் நிலவும் குற்றமற்ற நீதிமுறை நிலவுலகில் பொருந்துமாறு செய்த பெருமையுடையான்.

கருத்துக்கள் என்னும் நுண்பொருள செயல் வடிவம் பெற்றுப் பயன்தர மனிதன் என்னும் பருப்பொருள் வடிவம் தேவை. எனவே ஆதரவற்றுக் கிடக்கும் கொடிகள் எனக் கருத்துக்களைச் சுட்டி, அவை நிற்கவும் நிலைக்கவும் வளரவும் வாழவும் பூக்கவும் பொழியவும் பயன்படவும் இன்றியமையாத கொழுகொம்பு எனத் தாவீதைச் சுட்டுகிறார். இப்பண்புகள் எல்லாம் நிறைந்தவன். இவற்றை உலகில் வளருமாறு செய்பவன் என்பதை இங்ஙனம் அழகாக வெளியிடுகிறார். பசி முதலிய உடல் உணர்வுத் துன்பங்களோ கவலை முதலிய மன உணர்வுத் துன்பங்களோ அற்றது வானுலகம் என்ற கருத்து வீட்டுலகம் பற்றிச் சமயங்கள் கூறுவது. அதற்கேற்ப தாவீதின் ஆட்சியில் பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமாப்பென்னும் அணிகள் ஐந்தும் அமையப் பெற்றிருந்ததை உணர்த்த "வான் ஏதில் நன்முறை இவண் இசைந்த மாட்சியான்" என்கிறார்.

7. பாடற் பொருள்

தாவீது, தன் செங்கோல் வளையாமல் அதன் நலத்தை நிறுவ அறம் மிகுந்து ஆண்டதால், அவன் ஆண்ட சூதேய நாடானது நூல் நலம் வாய்க்கப் பெற்று விண்மீன்கள் சூழ்ந்த வானுலகம் கண்டு வியக்குமாறு வாழ்ந்தது.

விளககம

வானில் நிலவியதை ஒத்த ஆட்சி என முற்பாடலிற் கூறியவர் வானவர் வியக்குமாறு, அவருலக ஆட்சியினும் விஞ்சிய சிறப்புக்களுடன் கூடிய நல்லாட்சி தாவீதினுடையது என்பதை இப்பாடலிற் கூறுகின்றார். நிலவுலகில் பைங்கூழ் களைக்கட்டல் எனக் கொடியாரை ஒறுத்து நல்லாட்சி நிறுவலே அருமையும், பெருமையும் உடையது ஆதலின், வான்வியக்கிறது. நாட்டில் அல்லவை தேய்த்து அறம் பெருக்கிய செயல் தாவீதினுடையது என்பதை, "கோல் நலம் கோடிலா நிறுவி" என்பது உணர்த்தும்.

"பகை செய்வார்க்கு இடியென, படிந்து போற்றிய
தகை செய்வார்க்கு அமுதென நாமத் தன்மையாள்
நகை செய்வார்க்கு இளவலாய் நடத்தும் வேல் இலான்,
மிகை செய்வான் ஆண்மையை விளம்பல் நன்று, அரோ" (8)

8. பாடற் பொருள்

தாவீது, தன்னைப் பகைத்தாருக்கு, இடி போன்றவன், பணிந்து அவனை வாழ்த்திப் பெருமை செய்வார்க்கு, அமுதம் போன்றவன், பிறர் அஞ்சும் தன்மையன், தன்னை எள்ளி நகைப்பாரைச் சிறியரென எள்ளி நடத்தி வேலியின்றியே அவரை வெல்வான். அவன் வீரத்தைப் பேசுவதே நலம் பயக்கும்.

விளக்கம்

பணிந்தார்க்கும் இனியனாய்ப் பகைத்தார்க்கும் வெய்யனாய், ஞாயிற்றன்ன வெந்திறல் ஆண்மையும் திங்கள் அன்ன தண்பெரும் சாயலும் வானத்தன்ன வண்மையும் வாய்க்கப் பெற்றவன் தாவீது என்கிறார். "மிகை செய்வான்" என்ற தொடரில் 'மிகை' என்பது துன்பத்தைக் குறித்தது— 'மிகுதியான் மிக்கவை செய்தாரை" என்ற குறளிற் போல நல்லோர் புகழை நவிலுதலும் நன்று என்கிறார்.

9. பாடற் பொருள்

இந்தச் சிறப்புக்களைக் கொண்ட தாவீது சூதேய நாட்டு அரசன் ஆயினது எவ்வாறு என்பதைக் கூறவரும் ஆசிரியர் சவுல் அரசன் நாட்டை ஆண்ட காலத்தில் பிலித்தையர் எதிர்த்ததையும் அவர்க்குத் தூணாய் விளங்கிய இராக்கதனைத் தாவீது இறையருளால் கொன்றதையும் சவுலின் நாட்டைப் பெற்று அரசாளத் தொடங்கியதையும் விவரிக்கத் தொடங்குகிறார்.

வேதங்கள் வழங்கிய வளமிகுந்த சூதேய நாட்டைச் சவுல் என்ற அரசன் ஆண்டு வந்த காலத்தில் பிலித்தையார் என்பார் வேதங்களை மறுத்தனர். சவுலை எதிர்த்தனர். மேகத்தினின்றும் தாரை தாரையாக நீர்த்துளிகள் விழுந்தாற் போல் அம்பு மழை பொழிந்தனர்.

10. பாடற் பொருள்

வேலியினால் சூழப்படாத சூதேயத் தலைநகர் நடுங்குமாறு பிலித்தியரிடைதே கோலியாத்தெனும் அரக்கன் ஒருவன் சவூலை எதிர்த்து வந்தான். கதிரவன் கதிர்களை வகுத்தாற் போல் ஒளிவீசும் வாளேந்தியவர் நடுவே, கரிய பெரிய மேகம் போல் தோன்றி ஆரவாரித்து நின்றான்.

விளக்கம்

இயற்கையான அரண் அமைந்தமையாலோ, இனிய ஆட்சியின் காரணமாகப் பகைப்பயம் அற்றிருந்தமையாலோ, வேலி வேண்டப்படாததாக அந்நாடு இருந்தது போலும்! பகைவர் போரும் அந்நாட்டவருக்கு புதிதி என்பதை உணர்த்தி அதனாலேயோ அவர்க்கு அச்சம் மிகுந்திருக்கும் என்பதை உணர்த்தியிருக்கிறார்.

"துளிசிறைச் செயும் முகில்புகும் இருமலை சுமந்த
ஒளிசிறைச் செயும் ஒருகரும் பருவதம் என்னா,
வெளிசிறைச் செயும் வியன்இரு புயத்து மேல், சிரமே
களிசிறைச் செயும் கதம்கொடு, வெருவுறத் தோன்றும்' (11)

11. பாடற் பொருள்

நீர்த்துளிகளைத் தன்னுட் கொண்ட மேகங்கள் தங்குகின்ற இரண்டு மலைகள் சுமக்க அவற்றின் இடைநின்ற ஒளியை உள்ளடக்கிய பெரிய கரிய மலைபோல, அண்ட முழுவதும் அளந்தாற் போல் அகன்றிருந்த இரண்டு தோள்களின் நடுவே மகிழ்ச்சியை உள்ளடக்கிய கோபத்துடன் கோலியாத்தின் தலையானது, காண்பவர் அஞ்சுமாறு காட்சியளிக்கும்.

விளக்கம்

கோலியாத்தின் உருவச் சிறப்பை உணர்த்தும் பாடல், அவனுடைய தோள்கள் இரண்டும், ஆகாயத்தையே மறைக்குமளவு பெரியன. ஒவ்வொரு தோளும் ஒரு மலை போன்றது. அவன் தலையோ மற்றொரு பெருமலையை ஒத்தது. எனவே தோள்களும் தலையும் இருமலைகள் தாங்க இடைநிற்கும் பெருமலை போல் தோன்றின. வெற்றி உறுதி என்பதனால் களிப்பும், தன் ஆற்றலை அறியாதும் அஞ்சாதும், அடிபணியாதும் சவூலின் படையினர் எதிர்த்து நிற்பதால் கதமும் கொண்டு தோன்றுகின்றான் கோலியாத்.

"நீண்டவாள் புடை நெருங்கிய, படர்கரு முகில்போல்
மாண்டதோள், வியன் வட்டமே பொறுத்து, வெஞ்சுடரைத்
தூண்டலாமெனச் சுளித்த நீள்ஈட்டி, கை தாங்கிக்
கீண்டு அளாவுஅழல் விழிவழி கிளர்ப்ப விட்டு, எதிர்ந்தான்" (12)

12. பாடற் பொருள்

கோலியாத், நீண்ட வாளைத் தன் அரையில் இறுகக் கட்டியிருந்தான்; அகன்ற கரிய மேகம் போன்ற பெரிய தோளில், பெரிய கேடயத்தைத் தாங்கியிருந்தான். கண்களை அகல விரித்துக் கோபத்தால் நெருப்பெனத் தோன்ற எதிர்த்து நின்றான்.

விளக்கம்

வாள், ஈட்டி, கேடயம் மூன்று ஏந்திச் சினத்துடன் எதிர்த்த தோற்றம் பேசப்படுகிறது. ஈட்டியின் நீளம், வானத்துக் கதிரவனாம் விளக்கைத் தூண்டுதற்குரிய கோல் எனத் தோன்றியதாக உயர்வு நவிற்சி அணி அமையப் பாடியுள்ளார்.

13. பாடற் பொருள்

வெள்ளத்திற் பொங்கிய பெருநதியின் அலைகள் போல எருக்கமாலை சூடிய இழிவான நெஞ்சில் அடங்காத ஆணவம் நிறைந்த அரக்கன் நெருப்பு எழுந்தாற் போல் கோபித்து, செருக்கு நிறைந்த சினமிகுந்த சொற்களை இடியென முழங்கினான்.

விளக்கம்

எருக்கம் பூ இழிவாகக் கருதப்படுவது. அதை அணிந்து வருகிறான் கோலியாத்.

14. பாடற் பொருள்

கோலியாத் தன்னை எதிர்த்துப் போர் செய்யக் கூடிய சவூலின் படையினரை நோக்கி, "உங்களில் ஒருவன் தனியே வரட்டும், பெருமை மிகு நானும் அவனும் தனிப்போர் புரிவோம். எங்களில் தோற்றவர் வென்றவர்க்கு அடிமையாவோம்" என அறைகூவினான்" மகிழ்ச்சியோடு சிரித்துச் சவூலின் படையினரை எண்ணி இகழ்ந்துரைத்து அறை கூவி அழைத்தான்.

15. பாடற் பொருள்

"பெரிய குன்றமோ பேயதோ, பூதமோ, ஏதோ
உரிய தொன்றுஇலா உருவினைக் கண்டுளீ, வெருவி
கரியவின் இடி கதத்த மின் கொடுவிடுத்தன்ன,
அரிய கோலியாற்று அறைந்தசொல் கேட்டனர் மருண்டார்" (15)

சவூலின் படையினர் பெரிய மலையோ, பேயோ, பூதமோ, வேறு யாதோ என்று இன்னதென்று அறிய முடியாத உருவொடு வந்து நின்ற கோலியாத்தைக் கண்டு வெகுண்டனர். கருத்த வானமானது மின்னலொடு இடி இடித்தாற் போன்ற அவன் கடுஞ் சொற்களைக் கேட்டு மனம் மருண்டனர்.

விளக்கம்

கதத்த மின்கொடு; உக்கிரமான மின்னலோடு; உலகில் ஒவ்வொன்றுக்கும் குறித்த ஓர் உருவம் உண்டு, உருக்கொண்டு, அது இன்னதென உணர்வர். கட்டுவர். கோலியாத்தின் உருவோ, இதுவரை இன்னதென்று பெயர் சுட்டி அறியப்பட்ட எந்த உருவத்தையும் ஒத்து இருக்கவில்லை எனவே, 'உரியதொன்று இலா உருவு' என்றார். உருவம் கண்டு வெகுண்டவர் சொல்லைக் கேட்டு மருண்டனர்.

16. பாடற் பொருள்

சவூலின் நல்ல பெரிய படை தன்னைக் கண்டு அஞ்சி நடுங்கிய தன்மையைக் கோலியாத் கண்டான். நீண்ட கல்மலையை ஒத்தவன் செருக்கும் கோபமும் கொண்டு, இறைவனுக்கு மாறாகவும் அவரை இகழ்ந்தும் பேசியவாறு பல நாட்கள் தன் அறைகூவலை விடுத்து எல்லோரையும் கண்டு எள்ளி நகைத்தான்.

விளக்கம்

எளிய சிறுவனான தாவீது பின்னால் இறையருளால் கோலியாத்தைக் கொல்கிறான். ஆணவத்தால் கோலியாத் பற்றிப் பேசும் போதெல்லாம் அவன் இறைவனை இகழும் ஆணவப் போக்கினையும் உடன் கூறியே செல்கிறார்.

17. பாடற் பொருள்

எதிர்த்து ஏற்பவர் எவருமின்றிக் கோலியாத் அறைகூவிப் பேசிய சொற்களைக் கேட்டு சவூல் மனம் தளர்ந்தான். எவரேனும் கோலியாத்தின் அறைகூவலை ஏற்றுச் செல்ல வேண்டுமே என ஏங்கினான். 'எவனொருவன் கோலியாத்தை எதிர்த்து வெல்கிறானோ அவனுக்கு என் மகளைத் தருவேன்' என்று அறிவித்தான்.

விளக்கம்

குடிகளைக் காக்கும் பொறுப்புடையவன் அரசனாதலின கோலியாத்தின் அறைகூவல் சவூலுக்குக் கவலை அளிக்கிறது. அரக்கனின் வலிமை அறிந்தும் தன் படைகளை அனுப்பி அவற்றை அழிவுக்கு உட்படுத்தலும் அவனுக்கு உடன்பாடில்லை. அதே சமயம் வளமை வாய்ந்த எதிரியின் கை ஓங்குமாறு விட்டு விட்டு வாளாவிருத்தலும் குடிகளுக்கு நாளடைவில் துன்பமே விளைக்கும். இத்தகைய சமயங்களில் பரிசு ஒன்று அறிவித்து இடையூற்றை விலக்க முன்வருமாறு, வீரர்க்கு அறை கூவல் விடுப்பது பண்டை அரசியலில் பயின்று வந்த முறையை, அதன்படியே சவூலும் நடக்கிறான்.

18. பாடற் பொருள்

இவ்வாறு கோலியாத் அறை கூவுவதும் அவனை எதிர்க்க யாருமின்றிச் சவூல் படை வாளாவிருப்பதுமாக நாற்பது நாட்கள் கடந்தன. அதன்பின் சவூலின் படையில் சேர்ந்து போர் செய்யச் சென்றிருந்த தன் அண்ணன்மார் மூவரையும் காணும் ஆசையால்

அவ்வீட்டின் இளவலான தாவீது வந்தான். வந்த இடத்தில் முன் நடந்தவற்றையெல்லாம் கேட்டறிந்தான்.

விளக்கம்

தாவீதின் அண்ணன்மார் முன்னரே அரசரின் அழைப்பை ஏற்றுப் பிலித்தையரை எதிர்த்துப் போர் செய்ய வந்திருந்தனர். அவர்களைக் கண்டு பேசிப் பெற்றோர்க்குச் சேதி சொல்ல வந்த தாவீது போரின்றியே நீண்ட நாள் கடந்திருப்பதை அறிகிறான்.

19. பாடற் பொருள்

கேள்விப்பட்ட செய்தி தாவீதின் நெஞ்சில் சினத் தீயை எழுப்பியது. "நினைத்தவற்றைச் செய்து காட்டும் வல்லமை வாய்ந்தவரும் வாய்மை கடந்தவருமான கடவுளை இகழ்ந்து பேசி மரணத்தை விரும்பி உண்ட கயவன் யார்?" எனக் கேட்டான்.

விளக்கம்

வெம்மை மிகுதி சுட்ட எள் போட்டால் பொரியும் என்றுரைப்பது வழக்கு. அதுபோல, தாவீதின் மனத்தில் எழுந்த சினத் தீயானது நெருப்பை மூட்டவல்லதாக இருந்தது என்கிறார். இறைவனை இகழ்தல் மரணத்தை வலிய வரவழைத்துக் கொள்ளாதலின் 'விளி விழுங்கிய கயவன்' என்றார்.

"கைவ யத்தினால், கருத்திடத்து உடலினூங்கு ஓங்கும்
பொய்வ யத்தினான், புகைந்தசொற்கு அஞ்சுவது என்னோ?
மெய்வ யத்தினால் விழைசெயம் ஆவதோ? கடவுள்
செய்வ யத்தினால், 'சிறுவன்—நான் வெல்லுவேன்" (20)

என்றான்.

20. பாடற் பொருள்

அஞ்சிய படையினரை நோக்கித் தாவீது, "படைவலிமையினால் மனத்தில் உடலில் உண்மையாக உள்ளத்தினும் மிகுதியாக ஓங்கும் பொய்யான வலிமையினால் பேசும் அவன் சொற்களுக்கு அஞ்சுவது ஏன்? உடல் வலிமையினால் வெற்றி உரியதாகுமா? கடவுள் தரும் வலிமையினால் சிறுவனாகிய நான் அவனை வெல்லுவேன்" என்றான்.

விளக்கம்

படைவலிமை காரணமாக உள்ளத்தில் ஏற்படும் உரம் உண்மையான வலிமையன்று. எனவேதான் கைவயத்தினால் கருத்திடத்து உடலினூங்கு ஓங்கும் பொய்வயம் என அதைப் புகன்றார். மெய்வயம் என்ற தொடர் மெய்யின் வயத்தை—உடலின் வலிமையைச் சுட்டியது. கோலியாத்தின் உடலே சவூல் படையினரை வெருட்டியதாதலின் உடல் வலிமை உண்மை வலிமையன்று என உணர்த்தினான். அவன் சொற்களும் அஞ்சுதற்குரிய

அல்ல எனவும் தெரிவித்தான. சவூல் படையினரை அச்சுறுத்தியவை கோலியாத்தின உடலும் உரையுமே, இவ்வாறு அந்த இரண்டு அச்சங்களுமே தேவையற்றவை எனத் தாவீது அவர்களுக்குப் புரிய வைத்தான்.

கோலியாத்தைக் குறிக்கும் போதெல்லாம் அவன் அழிவுக்குக் காரணமாகும். ஆணவத்தை உடன் கூறுவதுபோல், தாவீதைச் சுட்டும் போதெல்லாம் அவன் வெற்றிக்கு அடிப்படையாகும். இறைப்பற்றையும் பணிவையும் சேர்த்துரைப்பது புலவர் இயல்பாகிறது. "கடவுள் செய் வயத்தினால் சிறுவன் நான் வெல்லுவேன்" என்றே தாவீது கூறுகிறான்.

21. பாடற் பொருள்

தாவீது பேசியதைச் சவூல் செவியுற்றான். அவனைத் தன் முன் கொணருமாறு பணித்தான். தன் முன் வந்து நின்ற சிறுவனைக் கண்டான். "நீயோ கோலியாத்தை எதிர்க்க முன்வந்தாய்? இறக்க நினைத்தாய் போலும்! மலையையே பெயர்த்து எறிந்த தனக்கு உவமையாகச் சொல்ல எதுவுமின்றி வெற்றி கொண்ட வலிமை மிக்க கோலியாத்தின் சினத்தின் முன் நீ எம்மட்டு" என்று கேட்டான்.

விளக்கம்

தாவீதின் உருவச் சிறுமை கண்டு பரிதாபம் கொண்ட சவூலின் கூற்று இப்பாடல்.

"ஏந்தல் ஈரடி இறைஞ்சிய இளவலும், அறைவான்
காய்ந்த தோர்பகை, கடுத்த தன் பவம் செயின், மீட்டு
வேய்ந்த தோர்படை வேண்டுமோ? கடவுளைப் பகைத்து
வாய்ந்த ஆண்மையை மறுத்தனை எவன் வெல்வான் ஐயா" (22)

22. பாடற் பொருள்

அரசன் கூறியதைக் கேட்ட தாவீது, "அரசே முற்றிய பகையானது சினமுற்றுப் பெரும் பாவத்தைத் தானே தேடிக் கொள்ளுமாயின் அதனை வெல்ல வேறொரு படையும் வேண்டுமோ? கடவுளைப் பகைத்து அவர் ஆற்றலை மறுத்தவனை யாரால் தான் வெல்ல முடியாது? (எவராலும் முடியும்)" என்றான்.

விளக்கம்

தன்னைத்தான் கொல்வது சினம். அதுவே போதும்; அதன்றியும் கோலியாத் இறைவனைப் பழித்த பாவமும் கொண்டவன்; ஆணவம் கோபம் என்ற இரண்டு பெரும் பாவங்களால் தன் வலிமை குறையப் பெற்ற அவனை எதிர்த்து எவரும் வெல்லமுடியும் என்பதே தாவீது கூறும் கருத்து.

"திறம்க டுத்தகொல் சிங்கமும் உளியமும் பாய்ந்து,
மறம்க ருத்து, அதிர் வல்லியத்து இனங்களும் எதிர்ந்து
கறங்குஅ டுத்தகால் கழுத்தினை முருக்கி, நான் கொன்றேன்;
அறம்கெ டுத்தவன் அவற்றினும் வலியானே?" என்றான் (23)

23. பாடற் பொருள்

மேலும் தாவீது, "வலிமை மிகுந்த சிங்கம், கரடி, வீரமிக்கு முழங்கும் புலி ஆகியவற்றையே எதிர்த்து நின்று, சுழற்காற்றுப் போல் அவற்றின் கழுத்தை முறுக்கிக் கொன்றவன் நான். அறம் கெடுத்த கோலியாத் அவற்றிலும் வலிமை வாய்ந்தவனா? அல்லவே" என்றான்.

விளக்கம்

அறிவினால் அனைத்துயிரினும் மேம்பட்டவன் மனிதன், எனினும் அறம் தவறுகையில் அனைத்து வலிமையும் இழந்து தாழ்ந்தவனாகிறான்.

24. பாடற் பொருள்

தாவீதின் அரிய வீரம் கண்டு சவூல் அரசன் அதிசயித்தான். நன்று என்று அவனைப் பாராட்டினான். பின் விரிவாகப் பரவிய ஒளி மிகுந்த வேலோடு தனது பல்வேறு கருவிகளையும் கோலியாத்துடன் போர் செய்வதற்காக ஒருங்கே ஈந்தான். ஆனால் தாவீது அவற்றோடு போர்க்களம் செல்வதற்கு அவற்றைக் கையாளும் முறை தெரியாது எனக் கூறி அவற்றை மறுத்துவிட்டுச் சென்றான்.

விளக்கம்

எளியவனான தனக்குப் போர்க்கருவிகளைக் கையாளும் முறை கூடத் தெரியாததலின் அவை தேவையில்லை எனக் கூறுகிறான் தாவீது. ஆம் அவன் இறையருளும் மனத் தூய்மையுமே படைக்கலங்களாய்க் கொண்டு செல்கிறான்.

25. பாடற்பொருள்

பொறுக்கி எடுத்த ஐந்து கூழாங்கற்களோடு கவணை மட்டும் எடுததுக மகாணடு தாவீது சென்றான். அது கண்டு நாட்டு மக்கள் அனைவரும் வியப்பும், இரக்கமும் கொண்டனர். வேதியர் அவன் வெல்ல வேண்டும் என்ற ஆர்வத்துடன் வாழ்த்துரைத்தனர். எல்லோரும் ஆரவாரம் செய்தனர்.

விளக்கம்

மாங்காய், பறவைகள் முதலியவற்றை வீழ்த்தச் சிறுவர் கையில் வைத்திருக்கும் கருவி, வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பர்.

26. பாடற் பொருள்

சவூல் படையினரின் ஆரவாரத்தைக் கோலியாத் கேட்டான்; தன்னை எதிர்த்துத் தனிப்போர் செய்ய முன்வந்த சிறுவனைக் கண்டான்; அவனை இகழ்ந்து பேசியவாறு, காண்பவர் அஞ்சக் கூடிய வேலோடு தாவீதின் அருகே வந்தான். அகன்ற கரிய முகிலிலிருந்து வெளிப்பட்ட கோடையிடுபோல உரத்த குரலில் முழங்கினான்.

தன்னை எதிர்க்க முற்பட்டவன் சிறுவனே எனக் கண்ட கோலியாத் ஆணவத்துடன் எள்ளி நகையாடியவாறு வரும் காட்சி.

"நீ அடா! எதிர் நிற்பதோ; மதம்பொழி கரிமேல்,
நாய், அடா! வினை நடத்துமோ? கதம்கொடு நானே
வாய் அடா! பிளந்து உயிர்ப்பிட மறுகி, நீ நுண்தூள்
ஆய், அடா! உலகு அப்புறத்து ஏகுவாய்" என்றான். (27)

27. பாடற்பொருள்

தாவீதை நோக்கிய கோலியாத், "அடே, சிறுவனான நீயா என்னை எதிர்த்து நிற்பவன்? மதம் பொழியும் களிற்றை எதிர்த்து, நாய் போரிடுமா? நான் கோபம் கொண்டு போரிட்டால் உன் வாய் பிளந்து, உயிர்நிலை கழன்று, நீ தூள் தூள் ஆகி மறுவுலகம் செல்வாய்" என்றான்.

விளக்கம்

உருள் பெருந்தேர்க்குரிய அச்சாணி சிறிதே, ஆனால் உருவு கண்டு எள்ளும் அறியாமையுடன் கோலியாத் பேசுகிறான். முன் நிற்பவனை நாயென இழித்துரைக்கிறான்.

"வெல்வை வேல்செய்யும் மிடலதுஉன் மிடல்; அடா, நானோ
எல்லை ஆதரவு இயற்று எதிரிலாத் திறக் கடவுள்
வல்கை யோடு, உனை மாய்த்து, உடல் புட்கு இரை யாக
ஓல் செய்வேன்" எனா உடைகவண் கழற்றினை இளையோன் (28)

28. பாடற்பொருள்

தாவீது, "அடே, வெல்லுகின்ற கூரிய வேலின் ஆற்றலே உன் ஆற்றல், நானோ நம்பினார்க்குத் தக்க தருணத்தில் ஆதரவு நல்குபவரும் ஈடில்லாத திறமிக்கவருமான கடவுளின் வல்லமையுள்ள திருக்கையோடு உன்னை எதிர்க்கிறேன். அக்கையினால் உன்னை மாய்த்து உன் உடல் பறவைகளுக்கு இரையாகுமாறு விரைவினில் செய்வேன்" என்று கூறிக் கவணைச் சுழற்றினான்.

விளக்கம்

பாரதப் போரில், கண்ணனின் படைமுழுவதும் பெற்ற துரியோதனனும் ஆயுதம் தாங்காத அவனது உதவிபெற்ற அர்ச்சுனனும் மோதினாற் போல் கோலியாத்தும் தாவீதும் மோதுகின்றனர். அர்ச்சுனன் போல் அறிவோடு இறைத்துணை என்னும் ஈடிலா வலிமையின் துணையினால் எதிர்க்கிறான் தாவீது.

"கல்லை ஏற்றலும், கவணினைச் சுழற்றலும் அக்கல்
ஒல்லை ஓட்டலும், ஒருவரும் காண்கிலர்; இடிக்கும்
செல்லை போத்தன சிலைநுதற் பாய்தலும், அன்னான்
எல்லை பாய்ந்து, இருள் இரிந்தென வீழ்தலும் கண்டார்" (29)

29. பாடற் பொருள்

தாவீது கல்லைக் கவணில் பொருத்தியதையோ, கல் பொருந்திய கவணைக் கழற்றியதையோ; குறிப்பார்த்துக் கல்லை எறிந்ததையோ சுற்றியிருந்த யாரும் காணவில்லை. இடியோடு கூடியமேகம் போன்ற கல் கோலியாத்தின் நுதலிற் பாய்வதையும் அவன் கதிரவன் ஒலி பாய்ந்ததும் இருள் வீழ்ந்தாற்போலக் கீழே வீழ்ந்ததையும் மட்டுமே கண்டனர்.

விளக்கம்

"கடையு கத்தினில், கருமுகில் உருமொடு விழும்போல்,
படைமு கத்தினில், பார்பதைத்து அஞ்ச, வீழ்த் தனன்தன்
புடைய கத்தினில், புணர்ந்தவாள் உருவி, "என் தெய்வம்
உடை உரத்தினை உணர்மின்" என்று இருஞ்சிரம் கொய்தான்" (30)

30. பாடற்பொருள்

ஊழிக்கால இறுதியில் கரியமேகம் இடியெடு விழுந்தாற் போல் போர்க்களத்தில் நிலம் பதைத்து அஞ்சுமாறு வீழ்ந்தான் கோலியாத். அவன் இடையில் செருகியிருந்த வாளினை உருவி, "என் தெய்வத்தின் வலிமையை உணர்வீர்களாக" என்று முழங்கித் தாவீது கோலியாத்தின் தலையை வெட்டினான்.

விளக்கம்

கோலியாத்தின் வாளையே உருவி அவன் தலையைக் கொய்கிறான் தாவீது.

31. பாடற்பொருள்

விகாரமான வாயில், வளைந்த பிறை போன்ற பற்கள் வரிசையாய்த் தோன்ற, ஊனிலிருந்து குருதி வழிய நீண்ட மலை போன்று தோன்றிய கோலியாத்தின் தலையைத் தாவீது கையிற்பற்றித் தூக்கினான். பிலித்தையரின் பெரும்படை அஞ்சி மனம் கலங்கி ஓடியது.

விளக்கம்

பிலித்தையர் வலிமை முழுவதும் கோலியாத்தையே சேர்ந்ததாகலின் அவன் இறந்ததும் அஞ்சி ஓடுகின்றனர்.

32. பாடற்பொருள்

மழை மேகத்து இடி அஞ்சுமாறு முழங்கிய கோலியாத் என்னும் அரக்கன் வென்ற தாவீது, அதன் பின் வலிமை மிகுந்தலும் பகைவர் அஞ்சுவதுமான தன் வேலால் போரில் தன்னை எதிர்ப்போர் எவருமின்றியும், வேதங்களை படித்துரைத்தவர் யாரும் அதற்காகப் பின் காலமெல்லாம் வருந்துமாறும் ஒரு நிலையை ஏற்படுத்தினான்.

விளக்கம்

மறைபழித்த கோலியாத்திற்கு நேர்ந்த கதியை அறிந்தார் யாரும் அதன்பின் துணியார்; துணிந்தாரெனில் அதற்காக அவர் காலம் முழுவதும் என்றென்று இரங்குமாறு செய்வான் தாவீது. அறத்தை நிலை நாட்டும் மறைக் காவலனாகத் தாவீது விளங்கியதை இப்பாடல் உணர்த்துகிறது.

33. பாடற்பொருள்

தாவீது பகைவருடைய தலைகளை வாளால் கொய்தான், ஒளி நிறைந்த முடிசூடி, அரியணை ஏறினான். மேலான ஒளியுடன் கருணை பொழியும் செங்கோலை ஏந்தினான்; அரசனான்.

விளக்கம்

மகளைத் தந்த சவுல் தாவீதை அரசனுமாக்குகிறான்; பகைவரையெல்லாம் வென்று தாவீது முடிசூடுகிறான்.

34. பாடற்பொருள்

நூற்பொருளை நன்குணர்ந்து தெளிந்த நுட்பத்துடன் அறிவுடையோர்க்கும் கிட்டாததும் வானவர்க்கு உரியதுமான, பின்வருவதை முன்னுணரும் அறிவானது தவப்பெருமையோடும் தாவீதை இருப்பிடமாய்க் கொண்டது.

விளக்கம்

எதிராக காக்கும் அறிவுடன் தாவீது செயலாற்றினான் என்பதை உணர்த்தும் பாடலிது.

35. பாடற்பொருள்

பொன்னாற் செய்த முடியும் செங்கோலும் துறந்து சென்று, வாழ்தற்குரிய காட்டில் வாழ்கின்ற தவத்தோரை அழைத்து வந்து, பல மணிகள் பதித்த அரியணையில் வீற்றிருக்கச் செய்து, கீழான பண்புகளை ஒழித்த அற மன்னனாகிய தாவீது அரசாண்டான்.

விளக்கம்

தவத்தோர் புலன்களை அடக்கியவர் ஆதலின் அவர் பெருமையுணர்ந்து அழைத்து வந்து சிறப்புச்செய்து, அவர் சொற்படி அரசாண்டான். தாவீது என்பது கருத்துப்போலும்.

36. பாடற்பொருள்

தாவீது வேலின் துணையொடு பகைவர் வெள்ளத்தை வென்று அடக்கினான். நூலின் துணையோடு ஐம்புலன் அடக்கிக் காத்துத் தன்னையும் வென்று ஒழுகினான். செங்கோண்முறை தவறாமால் அரசாண்டான். நீதிக் கொழுந்து தழைத்து வளரும் கொழுகொம்பு ஆனான். நீர் நிறைந்த மழை மேகத்தினும் மிகுந்த அருளோடு செயற்படும் கொடைக்கையராக இருந்தான்.

விளக்கம்

நாட்டைக் காக்கும் வீரமும், மனிதரைப் போற்றும் ஈரமும் தாவீதும் ஒருங்கமைந்த சிறப்பை உணர்த்தும் பாடலிது. அரசாள்வோன் ஐம்புல இன்பத்தில் ஆழ்வது முறையன்று; அவற்றை அடக்கி மக்கள் நலனை மனத்திற் கொண்டு ஆள்வதே முறையென்பது முனிவர் புலப்படுத்தும் கருத்தாகும்.

37. பாடற்பொருள்

நிலை பெற்ற, அரிய அருட்குணத்தால் இவ்வுலகில் பெற்ற புகழ் மட்டுமின்றி, இனிய அருட்குணத்தால் வானுல இறைவனுக்கும் விருப்பத்திற்குரியவனாகத் தாவீது விளங்கினான். முன்னே அரிய தவம் செய்தோர் கொண்ட தவப் பயன்கள் எல்லாம் பெற்று, அடைதற்குரிய வான் வீட்டில் உள்ள தெய்வங்கள் துணையோடு நிலத்தை ஆண்டான்.

விளக்கம்

மானிடர் புகழவும் வானவர் மகிழவும் நல்லாட்சி புரிந்தமையைச் சுட்டும் பாடலிது.

38. பாடற்பொருள்

இங்ஙனம் தாவீது நடந்து கொண்ட முறையினால் ஆண்டவர் பேரு வகை கொண்டார். ஒரு நாள் அவனிடம் 'மலர்களை ஒத்த சந்ததியில் நெருங்கிய பல தலைமுறைகளை கடந்தபின், சிறப்பான சேய் ஒருவன் பிறப்பான்; சிறந்த மூன்று உலகிலும் வாயினால் விளக்க முடியாத பெருஞ் சிறப்பை அவன் பெறுவான்' என்று வரம் தந்து அருளினார்.

விளக்கம்

"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்பார் வள்ளுவர். தாவீதின் தகுதியுணர்ந்து மகிழ்ந்த இறைவன் சிறந்த எச்சம் வழங்கிச் சிறப்புச் செய்கிறார்.

39. பாடற்பொருள்

இறைவன் தந்த இவ்வரத்தால் தாவீதின் சந்ததியில் ஆண்டவன் அவதரித்து உலகாள்வார் என்பதாயிற்று மானுட இயல்போடு தேவன் உலக முழுவதும் ஆள்வதென்பது யாவும் வல்ல இறைவனுக்கு அரிய செயலாகுமா? (இல்லையே)

40. பாடற்பொருள்

அரசாளும் தன்மையிற் சிறந்த தாவீதின் குடிவழியில் தெய்வ மேன்மையால், மண்ணுலகில் மக்கள் தன்மையில் சிறந்த மைந்தன் ஒருவன், விண்ணும், மண்ணும் ஒருங்கே ஆளவும், நால்வகைக் குற்றங்களாலும் தவறாத செங்கோல் ஆட்சி நல்கவும் இறைவன் திருவுளம் கொண்டார்.

41. பாடற்பொருள்

நினைத்ததை எல்லாம் நினைத்தவாறே நடத்தி காட்ட வல்ல ஆண்டவன். இகழத்தக்கன அனைத்தும் நீக்கப்பட்ட தன்மையோடு தாவீதனின் வன்மையிற் சிறந்த குலவழியிற் பிறந்து மூவுலகும் ஆள, சூசை என்பவர் பிறக்குமாறு முடிவெடுத்தார்.

42. பாடற் பொருள்

இறைவன் தன் வலிமையை உலகிற்குணர்த்தும் வகையில், யாங்கணும் அரசனராயப் போற்றத்தக்க சூசையப்பரைக் குறித்த குடிவழியாகிய தாவீதின் வழியில் செல்வம் எதுவுமினஅறி வறியாராய்ப் பிறக்கச் செய்தார்.

விளக்கம்

தாவீதின் அரசனாக ஆண்டவன், ஆயின் அவன் வழித் தோன்றிய சூசையப்பர், எளிய குடியில் தோன்றி உலகை உய்விக்கும் இயேசுபிரான் தந்தையாதல் வேண்டுமாதலின் வறிய குடியிற் பிறக்குமாறு செய்கிறார். ஆண்டவன் தாவீதின் குடியில் ஒருவன் புகழடைவான் என்று வரம் தந்தாரே அன்றிப் பொருளோடு வள வாழ்வு வாழ்வான் எனப் புகலவில்லை அல்லவா?

43. பாடற் பொருள்

மெய்யான உலக வாழ்வின் பொருட்டு இல்லாமையோடு, கையுழைப்பில் உணவு தேடும் நிலையில் வறிய வீட்டில் பிறந்த சூசைப்பர் உண்மையான செல்வமாகிய உள்ள வளம் மிகப்பெற்றுப் பின்னர், அழகிய வானுலகிலும் அனைவருக்கும் அரசனாய் வணங்கப்படுமாறு இறைவன் திருவுளம் கொண்டார்.

விளக்கம்

இவ்வுலகிற்கு இன்றிமையாதப் பொருள் இல்லையெனினும் அவ்வுலகிற்கு வேண்டிய அருளும் உரனும் பெற்றவர் சூசையப்பர் என்பது உணர்த்தப்படுகிறது.

44. பாடற் பொருள்

நூலறிவிற்கு இடமாகிய மெய்யறிவினால், ஒவ்வொரு வினையின் முடிவு காலத்தையும் நுனித்து ஆராய்ந்தறிபவரும் வானுலகமும் கடந்து அப்பால் ஆள்பவருமான இறைவன், மிகுந்த கருணையொடு தான் தேர்ந்தெடுத்த நாளில் சூசையப்பரின் தாயாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் கருவுற்றாள்.

விளக்கம்

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பதற்கிணங்கச் சூசையப்பர் தொடர்பான ஒவ்வொன்றும் இறைவனால் திட்டமிட்டுச் செய்யப்படுகின்றன.

45. பாடற் பொருள்

கொலைத் தொழிலை மேற்கொண்டு சுடர்விட்ட வேலேந்திய கொற்றவன் தாவீதனின் வழியில் தோன்றியவன் சகோபவன். அவன் தேவி, வில்லொத்த விளங்கு நுதலாள், நீப்பி என்ற பெயரினாள், அவன் இன்ப அலை முகந்து களித்துக் சூலுற்றாள்

விளக்கம்

தாவீதன் வழியில் தோன்றிய சகோபவன் மனைவி நீப்பி கருவுற்ற செய்தி கூறப்படுகிறது.

46. பாடற் பொருள்

மணிகளைப் பழிக்குமளவு அழகு கொண்ட அம்மங்கை மனமுவந்தாள். பிற அணிகளை மதிப்பறச் செய்யும் பேரணியாகி. கருவுயிர்த்த நிலையில் நோயின்றி இன்பம் பெருக வாழ்ந்தாள். அணிகலன்கள் அழகற்றவை என ஒதுக்கத் தக்க வகையில் அவள் முகம் ஓவியம் போல் ஒளி வீசிற்று'.

விளக்கம்

'பெறுமவற்றுள் யாமவறிதில்லை அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற' என்று வள்ளுவர் கூறினாற்போல, 'அணி பழித்து அணிந்த நற்கருப்பம்' என்கிறார். அவள் அழகு மணியைப் பழித்ததாக அவள் முகம் அணிகலன்களைப் பழித்ததாக அவள் கருப்பம் அணி பழித்ததாயிற்று. மணியிற் சிறந்த அழகும் அணியிற் சிறந்த ஒளி முகமும் கொண்டவள். மங்கலமாம் மனைமாட்சியின் நன் கலமாம் மக்கட் பேறு எய்து நிலை உற்றாள் என்பது கருத்து.

47. பாடற் பொருள்

சிறந்த அச்சூலின் தன்மையை என்றென்று உரைப்பது? மாலையோடு பிறந்த மணம் என்பதா? சங்கினது அழகுடன் பொருந்திய முத்து விளங்கும் தன்மையை ஒத்ததா? நீர் முதலான ஐந்து பூதங்களும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட தம் நிலைகளை விடுத்து ஒன்றுபட்டு வேறுபாடின்றி நின்றன என்பதா?

விளக்கம்

அழகு, மணம், பெருமை அனைத்தும் கொண்டது. அச்சூல் என்கிறார். ஐம்பூதங்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. 'மண்திணிந்த நிலனும், நிலனேந்திய விசும்பும், விசும்பு தைவருவளியும், வளித்தலை இய தீயும் தீ முரணிய நீரும்' என்ற புறநானூற்றுப் பாடல் ஐந்து பூதங்களும் இடையேயுள்ள உறவு சுட்டும் - ஐந்தில் ஆகாயம் தவிர்த்த ஏனையவற்றின் கூடலே மனித உடல் என்றும், பஞ்சபூதங்களின் சேர்க்கையே மனித உடல் என்றும் பௌத்த, இந்து சமயங்கள் விளக்குவதுண்டு. மண்ணினின்றும் உருவானவன் மனிதன் என்ற கோட்பாடு கிறித்தவர்க்கு உண்டு. 'நீரோடும் ஐந்து தம் பகையை நீத்து ஒரு சீரொடு வேறு சில சிறந்த சூலதே' என்ற அடிகளில், உலகிற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பினைச் சிந்திக்க வைக்கிறார் ஆசிரியர்.

48. பாடற் பொருள்

இறைவன் பெருகுகின்ற அன்பினால் ஓர் உயிரைத் தோற்றுவித்தார்; அறை வீட்டினுள் அரசன் புகுந்தாற்போல், வெண்பிறை நாள் தோறும் வளர்தலை ஒத்து வளர்ந்து வந்த கருப்பத்தைத் தாங்கி அழகு வளரும் உடலுனுள் செலுத்தினார்.

விளக்கம்

உரிமையுள்ளோர் மட்டுமே புகுதற்குரிய அறை வீடுகள் கருப்பத்தினுள் இறைவன் உயிரைச் செலுத்தியதைக் குறிக்க 'அறைவளர் மனையினுள் அரசன் புக்கெனத் தடையின்றிச் செலுத்தியதாய்ப் பாடுகிறார்.

49. பாடற் பொருள்

விலக்கப்பட்ட கனியை ஆதாம் உண்டதால் அதனை உண்ட வாய் வழியே உடலிற் பரவின நஞ்சின் தன்மை உயிர்களையும் பற்ற அவர் தம் சந்ததியராகிய மனித குலத்துக்கு வந்து சேர்ந்த பரம்பரை நோயான அந்த ஆதிப்பழி இக்கருவினைப் பற்றாதவாறு இறைவன் அருளினார்.

விளக்கம்

நாணம், பாவபுண்ணியம் முதலான மனிதர்க்கேயுரிய உணர்ச்சிகள் ஏதுமின்றி இயல்பாக வாழ்ந்து கொண்டிருந்த ஆதாமும் ஏவாளும் பாம்பின் உருவில் வந்த சாத்தானின் தூண்டுதலால் உண்ணலாகாதென இறைவனால் ஒதுக்கப்பட்ட மரத்தின் கனியை உண்டு பழியுற்றனர். அந்தப்பழி மனித குல முழுவதையுமே பற்றி உயிர்களைத் தொடர்வதாகக் கிருத்துவர் கூறுவர். அப்பழி பற்றாதவாறு சூசையப்பரின் கருநிலையிலேயே இறைவன் அருள் செய்ததாய் ஆசிரியர் பாடுகிறார்.

50. பாடற் பொருள்

சூசையப்பர் கருவாக இருந்தபோதே, சென்மப் பாவத்தினின்றும் அவரைக் காக்கக் கருதிய இறைவன் யாவருக்கும் பொதுவான ஞான நீராட்டு முறை ஏற்றதன்று எனக் கருதி ஏழாம் மாதம் தாண்டுமுன்பே வினை நீங்குமாறு தன் சிறப்பான அருட்பயனால் சூலின் சென்மப் பாவம் விலக்கினார்

விளக்கம்

காப்பியத் தலைவராக்கிய சூசையப்பரைத் தன்னிகரில்லா - மாண்பினராய்க் காட்ட இவ்வாறு வீரமாமுனிவர் உரைப்பினும், கத்தோலிக்கத் திருச்சபை இவ்வாறு கருதவில்லை என்பது திரு.ரா.லே ஆரோக்கியம் பிள்ளை என்பவர் தேம்பாவணி நூலுக்கு எழுதியுள்ள விளக்கக் குறிப்புகளிலிருந்து தெரிகிறது.

51. பாடற் பொருள்

இங்ஙனம் இறைவன் தீயவற்றை விலக்கிச் சிறப்புத் தந்ததையோ கடவுள் தந்த வர மிகுதிகளையோ தன் சூலிடத்து நேர்ந்தவை எதுவுமே தாய் அறியவில்லை. அளவில்லாத உள்ள மகிழ்ச்சியுடன், தளர்ச்சி எதுவுமற்ற தன் உடல்நலத்தை எண்ணி வியப்புடன் தாயானவள் உறைந்தாள்.

விளக்கம்

இறைவனின் திருவருட் செயல்களை நீப்பி அறியவில்லை எனினும் கருவுற்ற மாதர்க்கு இயல்பாக ஏற்படும் உடற்சோர்வு மனச் சோர்வுகள் இல்லாமல் தன் உடல் நலம் தந்த மகிழ்வோடு வியப்போடும் இருந்தனள்போலும், சென்மப் பாவம் விலகியேதோடன்றி வேறு பல நலனும் இறைவன் விளைத்தனர் போலும் 'பதிவரத் தொகை' பற்றி ஆசிரியர் குறித்துள்ளார்.

52. பாடற் பொருள்

மணத்தை உட்கொண்டுள்ள தாமரை மலர் போலத் தன்னுள் மறைந்த தேனாகக் சூலுற்ற நீப்பி நன்மைகள் நிறைந்து முகத்தில் ஒளி படர விளக்கினாள்.

விளக்கம்

மலரினுள் தேன்போல் வயிற்றினுள் சூல் வளர்வது சுட்ட மணத்தை உட்கொண்ட மலரை உவமையாக்கி; கான்முகம் புதைத்து அவிழ் கமலப்பூ எனச் சூல்முகம் புதைத்த சீர் என்கிறார். கருவுற்ற மகளிர்க்கு இயல்பாகவே எழில் கூடும் என்பர். பெண்மையின் பயன்பெற்ற மகிழ்ச்சியும் முகத்தில் எதிரொலித்திருத்தல் கூடும்.

53. பாடற் பொருள்

சொல்லால் இத்தகையது என ஒப்புமை கூற முடியாதவாறு அழகிற் சிறந்து பசிய பொன்னொத்த சூலானது முதிர்ந்த, இரவில் படர்ந்து இருள் நீங்குமாறு மேலே வானில் தோன்றும் திங்களாகிய அழகுள்ள மணிபோல தெய்வ ஒளி நிரம்பிய முகத்துடன் பிறந்த மகளின் எழில்கண்டு பலருடைய மனமயக்கம் அழிய, தாயானவள் இன்பப்பயன் பெற்றாள்.

விளக்கம்

இராமனின் எழிலுக்கு ஒப்புமையாக யாதுரைப்பேன். ஏதுமில்லையே என ஏங்கிய கம்பர் போல் சொற்களில் ஒப்புமை கூற முடியாத அழகென்கிறார் ஆசிரியர். கூற

முயன்றால் சொற்களாக அடுக்கலாமே ஒழிய அவற்றின் பொருளில் அழகை உணர்த்திவிட முடியாது என்கிறார். 'பல்லாருடைய மம்மர் கெட' கருவுயிர்த்தாள் நலமாகப் பெற்றுப் பிழைக்க வேண்டுமே என உற்றோரும் மற்றோரும் கொண்டிருந்த கவலையைச் சுட்டுவதாகலாம்: அல்லது சூசையப்பரின் பிறப்பு — பலருடைய மனமாசுகள் நீங்கி அறிவொளி பெருகக் காரணமாயிற்று என்றும் கொள்ளலாம். நீப்பியைப் போலவே கரு உற்றிருந்த வேறு பல மகளிரின் மகப்பேற்றுத் துன்பங்கள் இம்மகவின் முகவொளியால் நீங்கின என்ற பொருளும் கூறப்படுகிறது. அடுத்தவர் துன்பம் அவரொத்த நிலையிலுள்ள பிறருக்கு அச்சம் விளைத்தலும், அடுத்தவர் இன்பம் அதே நிலையிலுள்ள பிறர்க்குத் தன்னம்பிக்கை ஊட்டலும் மனித இயல்பன்றோ? துன்பம் ஏதுமின்றி அழகிய ஆண்மகவு பெற்ற நீப்பியின் நிலை, கருவுற்றிருந்த வேறு பலர்க்கிருந்த அச்சம் நீக்கி அவர் மனமயக்கம் அழிந்திருக்கலாம்.

54. பாடற் பொருள்

சூசையப்பர் பிறந்ததும் அனைவரும் மகிழ்ச்சியுற்றனர். அருள் பொறுக்கப்பட்ட அழகு கொழித்த முகத்தின் ஒளியை உணர்ந்தோர் மகவின் பெருமையைத் தெளிவாக அறிந்தார். 'கடவுளின் திருவடிகளுக்குப் பெருமை சேர்க்கும் குளிர்ந்த மாலையாவான் இவன்' என்று வெற்றி வாழ்த்து உரைத்தார்.

விளக்கம்

சூசையப்பரின் முகத்தில் தோன்றிய அருள் ஒளி "இம்மகவு உலகப் பற்றுக்களில் அழலப் பிறந்ததன்று; இறைப் பணியில் ஈடுபட்டு இறைவனுக்கு உகந்ததாதற்கரிய உயிர்' என்ற எண்ணத்தை அம்மகவைப் பார்ப்பவர் மனதில் தோன்றுவித்தது.

55. பாடற் பொருள்

பொன்னிற மணியின் சாயலோடு விளங்கிய மகனை நோக்கி, ஆசை மிக்க கனியை ஈன்ற நீப்பி "கற்றவர்கள் அரியப் பாடல்களைப் பாடும் ஓசையால் மிக்க தரும் பீடத்தில் வளர்க்க சூசையே' என்று வாழ்த்தி இறைவனை வணங்கினான்.

விளக்கம்

தன் மகவின் எதிர்காலம் குறித்து இனிய கனவுகள் காணுதல் எந்தப் பெற்றோர்க்கும் இயல்பு. அவ்வாறே நீப்பியும் தன் மகனை வாழ்த்தி அவ்வெண்ணம் நிறைவேற இறைவனின் அருள் வேண்டித் தொழுகின்றாள்.

56. பாடற் பொருள்

கதிரவனின் கதிர்களைத் திரட்டித் திங்களுக்குத் திலகமிட்டாற்போல் ஒளி மிகுந்த முகத்தினளாய் மகனை ஏந்தியவாறு இறைவன் அடிகளை வணங்கிப் பணிந்து "இம்மகவு அறத்துறையில் திங்களென வளர வாழ்த்தியருள்க" என்று விருப்பத்தோடு வேண்டினாள்.

விளக்கம்

'யா அம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல; அன்பும் அருளுமே' என்று பரிபாடலில் இடம் பெறுதல் வேண்டும் போல் சூசையப்பர் கருவாக இருந்த

காலத்திலிருந்து அவருக்கு அளிக்கப்படும் வாழ்த்துக்களும் வரங்களும் அவருக்கு அறவாழ்வு வேண்டுமென்பதாகவே இருந்தன. தாய் செய்யும் வேண்டுதல் கூட அவ்வாறே உள்ளது. உலக இன்பங்களில் உழலாமல் இறைவனுக்குத் தந்தையாரும் பேறுபெற்று உயரிய வாழ்வு வாழவிருக்கும் சூசையப்பரின் வாழ்வுக்கு ஏற்ற முற்குறிப்புகளாக இவை இலங்குகின்றன.

57. பாடற் பொருள்

அழிவில்லாத பேரின்பத்தை நல்கும் நோக்கினை நோக்கி, வானுலகிற்குத் தலைவனான இறைவன், குறையாத வரத்தோடு வாழ்த்த முற்பட்டார். வானில் ஒரு குரல் எழுந்து, "அசையாத நிலைத்த அறத்தில் நின்று என் மார்பில் வாடாத மாலையாவன் உன் அருள் மகன்' என்றது. அழகிய பூமாரியும் உடன் பொழிந்தது.

விளக்கம்

காப்பியங்களில் இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் இடம் பெறுதல் இயல்பு, தமிழின் முதற்காப்பியமான சிலப்பதிகாரம் முதல் இம்மரபைக் காணலாம். இதிலும், நீப்பியின் வேண்டுகோளுக்குச் செவி சாயத்த இறைவன் வானொலியாக அதை வழங்கல் காண்கிறோம்.

58. பாடற் பொருள்

மையை நூலாக நூற்றாற் போன்ற கரிய, அழகிய கூந்தலைக் கொண்ட நீப்பி, தனக்கு வாய்த்த மகன் அடையவிருக்கும் நலத்தை வானொலியிற் கேட்டு இறைவன் திருவடியில் வீழ்ந்து வணங்கினான்; எந்நூலினும் மேம்பட்ட மெய்நூலிற் கூறப்பட்ட முறையில், தவறாத வினைகளெல்லாம், ஒழுக்க நூலில் வல்ல அறவோர் செய்து மனம் கனிந்து தம் வாழ்த்துக்களை வழங்கினார்.

59. பாடற்பொருள்

வாடாத அழகுடைய மகனுக்கு, சோதிட வல்லோர் கூறும் புகழ் விரும்பப்படாத அணியாகும் என அவற்றையெல்லாம் விலக்க, வாடாத அணியாய்க் கருதி இறைவன் வாழ்த்திய 'தேம்பாவணி' என்ற அணியே சிறந்தெனக் கருதி ஏற்றனர்.

விளக்கம்

மகவு பிறந்ததும் பிறந்த வேளை அடிப்படையில் சாதகம் கணித்துப் பலன் கூறல் வழக்கம். அதையோ அன்றி வேறு வழக்கத்தையோ மனத்தில் கருதி, மானிடர் கணித்துக் கூறும் புகழ் வேண்டாததென விலக்கி, இறைவன் வானொலியில் வழங்கிய வாழ்த்தே சிறந்தெனக் கொண்டனர் என்கிறார்.

60. பாடற் பொருள்

செந்நிறம் பொருந்திய வானில் எழும் பிறைத் திங்களின் சிறப்பைப் பெற்று கிண்கிணியும் சிலம்பும் ஆர்க்குமாறு அணிவித்து, ஒளி தங்குமிடம் எனக்கூறத் தக்க

மணிமோதிரம் அணிவித்த பசிய பூம்படுகையில் கிடத்தி முகம் கண்டார். கடல் நெருங்கிச் சூழ்ந்த உலகின் திலகம் என்று புகழ்ந்தார்.

விளக்கம்

மாலை நேரச் செவ்வானில் தோன்றும் பிறைத் திங்கள் போன்ற அழகுடைய குழந்தைக்கு அணிகள் அணிவித்து மலர்படுக்கையில் கிடத்தி உலகின் திலகம் என்று புகழ்ந்தனர்.

61. பாடற் பொருள்

வான்மேல் தோன்றும் சுடர் நிலத்தில் கிடந்தாற் போன்ற அழகிய வடிவம் என்பார்; கானில் செய்த தவம் இன்று பலித்த பயன் என்பார்; மறைநூல்களின் பொருளுக்கு விளக்கமானவன் என்பார். பலவாறு பாராட்டியும் மகவின் சிறப்பை முழுவதும் உரைத்தார் சிலர்.

விளக்கம்

பலர் பலவாறு பாராட்டியும் 'விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்' என்ற நிலையில் சூசையப்பரின் புகழ் யாராலும் முழுமையாக உணர்த்தப்படாததாகவே இருந்தது.

குறிப்புகள்

தேர்வு நோக்கில் சில குறிப்புகள் தரப்படுகின்றன. தேர்விற் கேட்கப்படும் சிறு வினாக்கள், கட்டுரை வினாக்கள் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு இவற்றைப் பயன்படுத்துக.

செய்தித் தொகுப்புகள்

1. தாவீது மன்னன் சிறப்பு (பாடல்கள் 1.8)

சூசையப்பரின் முன்னோனான தாவீது, மன்னனாக ஆண்ட சிறப்பை எடுத்துரைத்து 'வளன் சனித்த படலம்' தொடங்குகிறது.

சிறப்புடைய எருசேலம் நகரில் உடலுக்கு உயிர்போல் தாவீது அரசண்டான். பகைவர் அஞ்ச வென்றுகளித்தான். பாவலர் பாடிய உவமைகட்கு மேல் சிறப்புற்றிருந்தான் - அருள் வாய்ந்த - அகம் - மழையை வென்ற கொடைக்கை - மலர்மாலை அணிந்த மார்பு - அணிகள் அணிந்த மலையொத்த தோள்கள் - இடிபோன்ற அம்பெய்யும்வில் - குடிகட்கு நிழல் செய்யும் அருட்குடை - நவமணி பதித்த தேர்கள் - களிறு ஒத்த வீரம் - போர் தொடங்கு முன்னரே பகைவர் முன்னிற்க மாட்டாமல் கலங்கியோடும் சிங்கவாகை - வேற்போரில் வெல்லப்படான் - தன்னைத் தானே தவத்தில் அடக்கியவன்; வானவர் விரும்பும் பான்மையான - நீதி, தவம், மறை ஆகியன படரும் கொழு கொம்பு - வானத்து நல்லாட்சி முறை மண்ணில் நிலவச் செய்தவன் - கோடாத செங்கோல் நலத்தால் நாட்டில் நூல், பொருள் அறநலங்கள் பெருகின - பகைத்தார்க்கு இடி - பணிந்தார்க்கு அமுது இகழ்ந்தார் ஒறுப்பவன் - ஆண்மை விளம்பல் அரிது.

2. தாவீதின் இளமைப் பருவம் அல்லது தாவீதின் அரசன் ஆன வரலாறு அல்லது கோலியாத்தின் வீழ்ச்சி அல்லது பிலித்தையர் – சவூல் போராட்டம் அல்லது இறைப் பற்றாளனின் வெற்றி. (பாடல்கள் 9–31)

சவூல் மன்னன் ஆட்சிக்காலம் - மறையைப் பழித்த பிலித்தையர் எதிர்ப்பு - கோலியாத் வருகை - தனிப்போருக்கு அழைத்தல் - சவூல் படையினர் அச்சம் - கோலியாத் இகழ்ந்துரைத்தல் - கோலியாத்தை வெல்வோர்க்கு மகளைத் தருவதாக சவூல் அறிவித்தல் - சவூல் படையிலிருந்த அண்ணன் மாரைக் காணத் தாவூது வருதல் - கோலியாத் பற்றி அறிதல் - எதிர்க்க முன் வரல் - சவூல் அரசன் தடுத்தல் - தாவீதின் துணிவுரை இறைவனை எள்ளியோர் அழிவும் இறைப்பற்றாளர் சிறப்பும் கூறங் - அரசன் அளித்த போர்கருவிகளை மறுத்துக் கவணும் 5 கற்களும் எடுத்து செல்லல் - தன்னை எதிர்க்க வந்த சிறுவன் என்றறிந்து கோலியாத் இகழ்தல் - நாயால் யானையை வெல்ல இயலுமா எனல் - தாவீது இறைவன் புகழ்ந்துரைத்தல் - கவண் வீசுதல், கல்பட்டுக் கோலியாத் இறந்து வீழல் - அவன் உடைவாளையே எடுத்து தாவீது அவன் தலையைகர் கொய்தல் - பிளித்தையர் அஞ்சியோடல் - தாவீது அரசனாதல்.

3. கோலியாத்தின் தோற்றம் (பாடல்கள் 11, 12)

நீர்த்துளிகள் நிறைந்த மேகம் படியும் இரண்டு மலைகளுக்கு இடையே ஒரு கருமலை போல அண்டங்களை அளிக்கும் இரண்டுதோள்களுக்கு நடுவே தலை - சினத்துடன் பிறர் அஞ்சத்தோன்றும் - நீண்ட வாள் அறையில் கட்டப்பட்டிருத்தல் - மேகம் ஒத்த பெரிய தோளில் கேடயம் - கதிரவனைத் தூண்டும் கோலொத்த நீண்ட ஈட்டி - விழியில் போத்தீ

4. கோலியாத் சினவுரை (பாடல்கள் 13, 14)

வெள்ளத்தாற் பொங்கிய நதியலை போல; எருக்கமாலை சூடிய மார்பிடை, அடங்காத செருக்கு மிகுந்து, நெருப்பு எழுமாறு சினந்து சினவுரைகளை இடியென இடித்துரைத்தல்.

போர் செயக் கூடினோரிடம் "சீர்த்த நான், அவன், சிறந்த போர் தனித்தனி தாக்க, தோர்ந்த பாங்கினர் தொழும் பரென்று ஆகுவர்" என்று உவகையுடன் நகைத்து, இகழ்வு அறைந்து அழைத்தல்.

5. தாவீதின் வீரம் அல்லது தாவீது – சவூல் உரையாடல் (பாடல்கள் 19–21)

கோலியாத்தின் அறை கூவலை அறிதல் - இறைவனைப் பழிக்க சொற் கேட்டுச் சினமுறல் - கடவுளை நகைத்து மரணத்தை எதிர் கொள்ளும் கயவன் யார் என வினவல் - படைவலி என்பது பொய்ம்மை - அதற்கு அஞ்சுவது ஏன் - உடல் வலிமையால் வெல்ல முடியுமோ? - கடவுள் அருள் வலிமையால் நான் கோலியாத்தை வெல்வேன் -

சவூல் சிறுவனைக் கண்டு நீயா கோலியாத்தை எதிர்ப்பாய்? இறக்க எண்ணினையோ - மலையையே எறிபவன் முன் நீ என்னாவாய் எனல் - அவன் பாவமே அவனைக் கொல்லும். கடவுளை மறுத்தவனை யாராலும் வெல்ல இயலும் - சிங்கம், கரடி, புலிகளையே கொன்றவன் நான் - அறம் அழித்த கோலியத் அவற்றினும் வலியனோ எனல் - அரசன் நன்று எனப் போர்க் கருவிகள் தரல்.

6. தாவீதின் நலன்கள் (பாடல்கள் 32–37)

ஆட்சி சிறப்பு : போர் முகத்து எதிரி இல்லாமை - மறையைப் பழித்தவர் அதற்காகக் காலமெல்லாம் வருந்தும் வகை செய்தல் பகைவர் தலைகளை வாளால் கொய்தல் - ஒளிமிகு முடிசூடி அரியனை ஏறல் - கருணையுடன் செங்கோல் செலுத்தல் - நூல் வல்லோர்க்கும், இயலாதவருக்கும் பொருள் காட்டும் மாட்சி பெறல் - தவச்சிறப்பு இவன் நாட்டுக் குடிகளுள் ஒன்றாதல் - வேலினால் மாற்றாரை வெல்லல் - கோல் கோடாமல் ஆளல் - நீதிக் கொழுந்து பற்றிப் படரும் கொம்பாதல் - மேகம் பழிக்க கொடையாளன் ஆதல் - மண்ணில் மட்டுமின்றி விண்ணிலும் புகழ் பெறல் - அளவிலா வரங்கள் பெறல் - வானோர் துணையுடன் நிலத்தில் ஆளல்.

7. இறைவன் தந்த வரம் (பாடல்கள் 38–43)

தாவீதின் தலைமுறையில் பிறக்கும் மகவொன்று மூவுலகிலும் மேலான சிறப்புப் பெறுவான். நிலமும் வானும் ஆளும் சிறப்படைவான் - நால்வகைக் குற்றங்களால் வழுவாத செங்கோல் புரிவான் - இத்தகு மகவாகச் சூசையப்பரைத் தேர்ந்தெடுத்து வறுமையில் பிறக்கச் செய்தான் - கையால் உழைத்து உணவு பெறும் அடியில் உதித்தவன் - உண்மையான தாகிய உள்ள வீரத்தினால் வானோர் வணங்கும் அரசனாவான் என்னும் வரம் தந்தார்.

8. கருவில் திருவுற்ற அருமை அல்லது சூசையின் தாயடைந்த சிறப்பு (பாடல்கள் 44–52)

இறைவன் அருளால் தாவீதின் குடிவழியில் வந்த சகோபவன் மனைவி நிப்பி, கருவுற்றாள் - மணி பழித்த அழகு மலரொடு இணைந்த மணமோ? சங்கின் அழகோடு கூடிய முத்தோ? ஐம்பூதமும் வேறு பாடின்றி ஒன்று கூடியதோ எனத் தக்கதாகக் சூல் அமைந்தது - அறை வீட்டில் உரிமையுடை அரசன் நுழைத்தாற்போல இறைவன் நிப்பியின் கருப்பத்தில் தான் அன்பொடு இயற்றிய உயிரைப் புகுத்தினான். விலக்கப்பட்ட கனியை உண்டதால் ஆதாம் ஏவாளின் வழியே மனித இனத்தைப் பாரம்பரியமாய்ப் பற்றித் தொடர்ந்து வரும் ஆதிப்பழி என்னும் சென்மப்பாவம் அக்கருவிற்கு இல்லாமற் செய்தார். இறைவன், தீயவை விலக்கிய சிறப்பாலும் தூய பல வரங்களின் அருளாலும் தன் சூலுக்கு நேர்ந்த சிறப்பை உணராமலே நிப்பி மேன்மேலும் சிறப்புற்றாள் - மனமிகு தாமரை மலரெனத் தன்மைகள் கூடி அழகு மிகப் பெற்றாள்.

9. சூசையின் பிறப்பு அல்லது சூசையை வாழ்த்திய முறை (பாடல்கள் 53–61)

சொற்களைக் கடந்த, ஒப்புமை கூறவியலாத வனப்புடன், இரவில் இருள் நீங்கும் மதிபோல, ஒளிமுகத்துடன் சூசை பிறத்தல் - பலருடைய மன மயக்கம் அழிதல் -

சூழ்ந்திருந்தார். இவன் இறைவன் அடிகளுக்கு எழில் கூட்டும் மாலையாவான் என வாழ்த்தல் - தாயும் "கற்றோர் அருந்தொடைப்பா ஓசைமிக்க அறத்தொகையின் பீடத்து உயர் வளர்க" எனல் - மகனை ஏந்தி இறைவனை வணங்கி இவன் அறவேந்தனாய் வளர ஆசி அருள்க என வேண்டல் - இறைவன் 'ஆடா நிலை அறத்து என் மார்பில் தேம்பாவணியாவான் வாடா அருள் மகன்" என வானொலியில் வாழ்த்தல் - இறைவன் அளித்த புகழே சிறந்த அணியெனக் கொள்ளல் வேறு அணிகள் விரும்பாது விலக்கல் - நிலவுலகிற்குத் திலகம் எனக் கண்டோர் மகவின் முகத்தைப் பாராட்டல் - 'வான் மேல் வைத்த சுடர் கிடைக்கும் வண்ண வடிவு' என்பார்; 'கான் மேல் வைத்த தவம் இனி நன்று இங்கண் காட்டும்' என்பார்; - 'நூல் மேல் வைத்த மறைவிளக்கம் நுண்மாண் சுடர்' என்பார் - ஆசையின் புகழை முற்றிலும் உரைத்தார் யாருமிலர்.

சீறாப்புராணம் – நாட்டுப்படலம்

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் சமயமும் இலக்கியப் பாடுபொருள்களும் இரண்டறக் கலந்தவை. தமிழகத் தொன்மைச் சமயமான நிலத்தெய்வ வழிபாடும், வைதீகச் சமயங்கள் போற்றும் சிவன், திருமால் ஆகியோரின் வழிபாடும் மட்டுமின்றிப் புறச் சமயங்களான பௌத்தம், சமணம், கிருத்தவம், இசுலாம் ஆகியவற்றின் கடவுட் கோட்பாடுகளும் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. வேற்று மொழியினரும் தம் சமயக் கொள்கைகளைத் தமிழ்ப் பாடல்களில் வெளியிட முற்பட்டுத் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்தனர். அவ்வகையில் முகமதியர் தமிழுக்கு ஆற்றிய பணிகளில் தலைசிறந்தது எனக் குறிக்கத் தக்கது 'சீறாப்புராணம்' என்ற நூலின் ஆக்கம்.

நூலாசிரியர்

முகம்மது நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அவருக்குத் தோழராக வாழ்ந்தவர் அப்துல்லா இப்னு பாகிர் என்பவர். அவரது பரம்பரையில் வந்தவர் 'சேகு முதலியார்' என்று அழைக்கப்பட்ட செய்கு முகம்மது அலியார். அவர் மலையாள நாட்டிலிருந்து தமிழ்நாடு வந்தவர் எட்டயபுரத்து அரசின் நட்பைப் பெற்று வாழ்ந்தவர். அவருக்கு மகனாய் பிறந்தவர் உமறுப்புலவர். எட்டயபுர அரசவைப் புலவரான கடிகை முத்துப்புலவரிடம் உமறு இளமையில் தமிழ் கற்றார். ஒரு முறை வடநாட்டிலிருந்து வந்த வாலை வாருதிப் புலவர் என்பவர் தம்மை வாதில் வெல்வார் உளரோ என அறைகூவல் விடுத்தார். அவர் புலமைத் திறத்தாலன்றி, மாயமந்திரங்களாலேயே பல அரசைப் புலவோரை வென்றவர். எனவே கடிகை முத்துப்புலவர் கலங்கி நின்றார். உமறுப் புலவர் தம் ஆசிரியர் அனுமதியுடன் அவருக்குப் பதிலாகச் சென்று வாலை வாருதியார்க்கு எதிர் நின்றார்.

வாதம் தொடங்கியதும் வாலைவாருதி, தம் வலக்கையில் அணிந்திருந்த தங்கக் கடகத்தை அசைத்து மேலேற்றினார். வழக்கமாக, அவர் அவ்வாறு செய்ததும் 'வாலை வாருதி' என்றியீரே? என்ற சொற்கள் ஒலிக்கும். அன்றுமட்டும் 'வாலை வாருதி என்று அறியாயோ பிள்ளாய்' என்ற சொற்கள் கேட்டன உமறுப்புலவர் தம் இடையிற் செருகியிருந்த யாழ்ப்பாணத்து எழுத்தாணியை எடுத்து நிலத்தில் ஊன்றி எதிர்பேசுமாறு ஆணையிட்டார். ஏதும் நிகழவில்லை இருமுறை ஆணையிட்டும் ஒன்றும் நிகழாமற் போகவே கடுஞ்சினத்துடன் 'பேசு' என்று உமறு ஆணையிட, உடனே கீழ்காணும் பாடல் ஒலித்தது.

'சமரதுர கதத்துங்க மனருஞ்ச டாசென்று
சரிசமா 'சனமீதிலே
அமரவொரு நரகொம்பு தினமுஞ்சு மாசெல்லு
மமுதகவி ராஜனானே

திமிர பகை வரைவென்ற பருதியெனு மெமதெட்டத்
தரனணி வாயில் வித்வான்,
உமறுகுமு றிடிலண்ட முகடும்படி ரென்னு
முள்ளச்சம் வையும் பிள்ளாய்

இதனைக் கண்டும் கேட்டும் அஞ்சிய வாலை வாருதி, உமறுப்புலவரை வெல்ல முடியாதென உணர்ந்து தோல்வியை ஒப்புக்கொண்டார். இதனால் மன்னர் உமறுப்புலவர் மீது பெருமதிப்புக் கொண்டார். விருதுகள் பல வழங்கினார். மாணவரைப் பாராட்டிய ஆசிரியரும் அன்று முதல் அவரே அரசவைப் புலவராக விளங்க வேண்டும் எனக் கூறி அனுப்பி வைத்தார். உமறுப்புலவர் அப்பணியைச் சிறப்புறச் செய்தார்.

சீறாப்புராணம் தோன்றிய வரலாறு

உமறுப்புலவர் காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த இசுலாமியர், கம்பராமாயணம், மக்காபாரதம் முதலியவை பற்றிய சொற்களை ஆர்வத்துடன் கேட்பது வழக்கம். இராமநாதபுரச் சேதுபதி மன்னரின் அமைச்சராக இருந்த செய்கப்துல் காதிர் என்ற சீதக்காதி மரைக்காயர் இசுலாமியர் அவர்களுக்குரிய நெறியிலமைந்த பேரிலக்கியங்களைக் கேட்க வேண்டும் என்ற விருப்புக் கொண்டார். அத்தகைய இலக்கியம் படைத்தற்குரியவரைத் தேடிக் கொண்டிருந்தார்.

அரசாங்கப் பணியாக எட்டயபுரம் சென்றவர். உமறுப் புலவரை அறிந்தது அப்பணியை அவரிடம் தர எண்ணினார். உமறுப்புலவரை தம் இல்லத்தில் விருந்துக்கு அழைத்துத் தம் வேட்கையை வெளியிட்டார். புலவரும் ஏற்றுக் கொண்டார்.

வள்ளல் பெருமானின் வரலாற்றுச் செய்திகளை உரையாக தருமாறு இறைநேசர் செய்கு சதக்கதுல்லா அப்பா அவர்களைச் சீதக்காதி வேண்டிக்கொண்டார். ஆனால் உமறுப்புலவரின் தோற்றம் கண்டு அப்பா உரைதர மறுத்தார். முகம்மது நபி(ஸல்) அவர்களின் வரலாற்றை பாடும் வாய்ப்புக்காக ஏங்கிய உமறுப்புலவர் பள்ளி வாயிலினுள் சென்றமர்ந்து தம் உள்ளத்து உணர்ச்சிகளைப் பாடினார். இன்று 'முதுமொழிமாலை' என்ற பெயரில் 88 பாடல்கள் வெளியாகியுள்ளது. பாடியவாறே துயிலின் கனவில் நபிகள் தோன்றி மறுபடியும் அப்பா அவர்களிடம் சென்று வேண்டுமாறு பணித்தார். அவ்வாறு அவரும் வேண்ட, மனமாறிய அப்பாவும் உரைதர இசைத்தார். அவர் மட்டுமின்றி அவர் மாணவரான் மாமு நைனார் லெப்பை என்பவர் மூலமும் உரை வழங்கினார். நபிநாயகம் அவர்களின் வரலாறு கூறும் காவியம் பாடத் தொடங்கினார்.

அந்நிலையில் சீதக்காதி இறக்கவே உமறுப்புலவர் மனம் நொந்தார். எனினும் அபுல்காசிம் மரைக்காயர் என்பவர் துணையாக சீறாவைப் பாட வைத்தார். நன்றி மறவாப் புலவர். கம்பர் சடையப்பரை நினைவு கூர்ந்தாற்போல நூலின் பல இடங்களில் தம்மை ஆதரித்த வள்ளலைப் போற்றியுள்ளார்.

நூலமைப்பு

சீறாப்புராணம், நபியவர்களின் வரலாற்றை முழுமையாக கூறவில்லை. இந்நூல் கூறாமல் முடித்தவற்றை பனூ அகமது மரைக்காயர் செய்து முடித்தார். இது 'சின்னச் சீறா' என்ற பெயரில் வழங்குகிறது.

உமறுப்புலவரின் நூல் விவாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலும் பல படலங்களைக் கொண்டுள்ளது.

முதலாவதான விவாதத்துக் காண்டம் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. பதினேழு பாடல்களில் கடவுள் வாழ்த்தும், 8 பாடல்களில் அவையடக்கமும் கூறப்படுகின்றன. அடுத்து, நாட்டுப்படலம் அமைகிறது. 60 பாடல்களைக் கொண்ட இதுவே பாடப்பகுதியாகி உள்ளது.

நாட்டுப்படலம்

பாடல் : 1

தரும் கொடை நயினார் கீர்த்தி சகமெல்லாம் பரந்து மிஞ்சி
நெருங்கியே விசும்பல் அண்ட முகடுற நிறைந்தவே போல்
இருங்கண வெள்ளை மேகம் இரைபசும் கடல்விழுந்து உண்டு ஓர்
கருங்கடல் எழுந்தது என்னக் ககனடைச் செறிந்து மீண்ட

தலைவரான நபியவர்கள் அருள் நிறைந்தவர். அவரது புகழானது உலகமெல்லாம் பரவியுள்ளது. அதற்கு மேலும் பரவ உலகில் இடமின்மையால் வானில் பரவியது. அண்டத்தின் உச்சியை முட்டுமளவு நிறைந்தது. அதைப்போல, பெருங்கூட்டமாக எழுந்த வெள்ளை நிற மேகங்கள் ஒலிக்கின்ற பசிய கடலில் மூழ்கி நீரை உண்டு பெருத்து மற்றுமொரு கருங்கடல் எழுந்தாற் போல மேற்சென்று வானிற் பரந்து நின்றன. பின் மழையாகக் கீழே மீண்டும் விழுந்தன.

கடலினின்றும் நீர் ஆவியாகி மேற்சென்று வானில் கருமேகமாய் பரந்து நிற்பதற்கு நபியவர்களின் பெருமை உலகமெங்கும் பரவி வானிலும் விளங்கும் நிலை உவமை கூறப்படுகிறது.

பாடல் : 2

அகிலம் எங்கணும் திடுக்கிட வாய்திறந்து அதிர்ந்து
மிகு மழைக்குலம் அடிக்கடி விழிப்பபோல் மின்னிக்
ககனம் எண்திசை அடங்கிலும் பரந்து கால் ஊன்றிச்
சிகர பூதரம் மறைதரச் சொரிந்தன செருமி.

மிகுதியான மேகக்கூட்டமானது உலகம் முழுவதும் திடுக்கிடுமாறு தன் வாய்திறந்து முழங்கியது. அடிக்கடி கண்மூடித் திறப்பதுபோல் மின்னியது. வானமும், எட்டுத் திசைகளும் ஆகிய பகுதிகள் முழுவதும் பரந்து நின்று; மலையும் முழுவதும் மறையுமாறு பேரொலியுடன் நீரைப் பொழிந்தது.

மின்னல் மேகக்கூட்டத்தின் கண்ணொளியாகவும், இடியானது அதன் வாயொலியாகவும் உருவாக்கப்பட்டுள்ளன.

பாடல் : 3

அதிரும் மாமழைத் துளி இடையிடை அணி அணியாய்
முதிரும் இந்தர கோபமும் ஆலியும் உதிர்ந்த
கதிர்செய் முத்தமும் மாணிக்கராசியும் கலந்தே
உதிரும் வண்ணம் ஒத்து இருந்தன கிரி ஒருங்கு ஒருங்கே

ஒலியுடன் பெய்த பெருமழைத்துளிகளின் நடுவே வரிசை வரிசையாய் இந்திர கோபப்பூச்சிகளும், உதிர்ந்த பனிக்கட்டிகளும் தோன்றிய காட்சியானது, மலைகளில் ஆங்காங்கே ஒளிவிடு முத்துக்களும், சிவந்த மாணிக்கமணிகளும் கலந்து உதிரும் பான்மையை ஒத்திருந்தன.

இந்திர கோபப்பூச்சிகள் மழைக்காலத்தில் வரிசை வரிசையாய் நிலத்தில் ஊரும், பெருமழை பொழிகையில் விழும் வெள்ளிய ஆலங்கட்டிகளும், இந்தப் பூச்சிகளும் இணைந்து தோன்றிய காட்சி, முத்துக்களும், மாணிக்கங்களும் மழையாய்ப் பொழிந்தாற் போல் தோன்றின என்கிறார் புலவர்.

பாடல் : 4

பம்மி எங்கனும் பொழிதரும் சாரல் வாய்ப்பட்டுக்
கம்மினத் தகடுஉறக் கொடுகிய குளிர் கலக்க
மும்மதக் காரிகளும் அரிகளும் முரண் அறவே
சம்மதித்து ஒருபுடை கிடப்பன எனக் காரும்

எல்லாவிடங்களிலும் மழைபொழிந்ததால் நீர்த் தாரைகளில் நனைந்து கொடிய குளிரால் நடுங்கி மும்மதங்கள் ஒழுகுதற்குரிய களிறுகளும், சிங்கங்களும் இயல்பாகத் தங்களுக்கிடையே நிலவும் பகை நீங்கி ஒற்றுமையாய் ஒருபுறம் வாழ்வதற்கெனக் கூடியது போல் சேர்ந்து கிடக்கும்.

பாடல் : 5

தந்தி மான்மரை அணில் கொடுவரி தகர்உடும்பு
மந்தி சிங்களம் கவரிமா அழுங்கு தேவாங்கு
முந்து மான்மதம் எண்கு செந்நாய் பணி முன்மா
நந்தி மிஞ்சிய விலங்கினம் கொடுகி மெய்ந்நடுங்கும்

யானை, மான்கூட்டம், அணில், கொடிய புலி, ஆடு, உடும்பு, குரங்கு, சிங்கம், கவரிமான், அழுங்கு தேவாங்கு விரைந்தேகும் மான்மதம், கரடி, செந்நாய், முள்ளம்பன்றி, காளை முதலிய பல்வேறு விலங்கினங்களும் குளிரினால் உடல் நடுங்கின.

எளியன மட்டுமின்றி வலிய விலங்குகளும் வருந்துமாறு குளிர் கூடுதலாக இருந்ததென்பதை இப்பாடலில் உணர்த்தியுள்ளார்.

பாடல் : 6

வேங்கை சந்தனம் சண்பகம் நெல்லி வேய்தான்றி
கோங்கு அசோகு தேக்கு ஆகினி பாடலம் குறிஞ்சி
நாங்கு கார்அகில் குங்குமம் இலவு நாரத்தை
தாங்கும் வேர்அற வரையொரு வரையிடை சாய்க்கும்

வேங்கை, சந்தனம், சண்பகம், நெல்லி, மூங்கில், தான்றி, கோங்கு, அசோகு, தேக்கு, பலா, பாடலம், குறிஞ்சி, நாங்கு கரிய அகில், குங்குமம், இலவம், நாரத்தை ஆகிய மரங்கள் எல்லாம் வேரற்று விழுமாறு மலைப்பகுதியை அப்பெருமழையானது தாக்கிற்று.

பாடல் : 7

விலங்கு இனங்கள் தம் குலத்தோடும் குழுவொடும் வெருட்டிக்
கலங்கும் அஞ்சிறைப் பறவைகள் அனைத்தையும் கலைத்தே
இலங்கு பைங்கனி சிதறிடத் தருக்களை இடறி
நலங்கொள் பைங்கதிர்க் கிரியிடை சரிந்தது நாரம்.

நன்மைதரும் கதிரவனின் கிரணங்கள் ஒளிவீசும் மலையில் பொழிந்த மலை நீரானது விலங்கினை அவ்வவ் இனத்தோடும், கூட்டத்தோடும் ஓடச் செய்தது: குளிரால் நடுங்கிய பறவைகளை கலைந்தோடச் செய்தது. புதிய பழங்கள் சிதறுமாறு மரங்களின் மேல் மோதியது.

இப்பாடல் இயற்கையை மட்டுமின்றி உயரினங்களையும், மலையிற் பெய்த பெருமழை பாதித்தது என்பதை உணர்த்துகிறது. பழுத்த பழமெனில் தானே உதிரும் தன்மையது. அவ்வாறன்றிக் காம்பில் பொருந்தியிருக்கும் கனிகளே காற்றினால் உதிரும் எனவே, 'பைங்கனி' எனக் கனிக்குப் பசுமை கூறினார். காய் திரண்டு கனியத் தொடங்கும் பருவத்துக் கனிகள் இளங்காற்றில் உதிரா. அத்தகு கனிகளும் உதிருமாறு தருக்களை மோதியது காற்றெனில் அதன் கடமை புலனாகின்றதன்றோ?

பாடல் : 8

வரி விழிச் செவ்வாய்க் குறத்தியர் இதணும்
மனையையும் தினையையும் வாரிப்
புரிநரம்பு இசையாழ் தொண்டகப் பறையும்
பொடிபடத் துறுகளன் மோதி
விரிதலைக் குறவர் விழாத்தொடும் வெருட்டி
விளைந்த முக்கனி சத்கோடி
சரிதர வீழ்த்தி மரகதக் கிரணத்
தடவரை அருவிகொண்டு இறங்கும்

மலையிற் பெய்த மழையானது சிவந்த கோடுகளுடன் கூடிய கண்களையும் செவ்விதழ்களையும் கொண்ட குறத்தியரின் பரணையும், வீடுகளையும் தினைக் கதிர்களையும் வாரியடித்துச் சென்றது. முறுக்கேறிய நரம்புகளுடன் கூடிய இசை நிரம்பிய யாழும், தொண்டகப்பனையும் பொடிபடுமாறு அவற்றைப் பாறைகளில் மோதியது. விரிந்த தலையுடன் கூடிய குறவர் கூட்டங்களை அஞ்சியோடச் செய்தது. கோடிக்கணக்கான, நன்கு கனிந்த பழங்கள் சரிந்து விழுமாறு செய்தது. பசுமை வாய்ந்த மலைவழியே அருவியாக இறங்கியோடியது.

இப்பாடல் மழை, காற்றும் இணைந்ததன் பயனாய் உயிர்களும் உடைமைகளும் உற்ற நிலையை உணர்த்துகிறது. ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தனியே இசையும் யாழும், பறையும் உண்டு. குறிஞ்சி வாழும் குறிஞ்சி நிலத்திற்குரியது தொண்டகப்பறை. யாழும் பறையும் காற்றில் அடித்துச் செல்லப்பட்டு பாறையில் மோதி தூளாகும் அளவு பெருங்காற்று வீசுகிறது. பாம்பை கண்டும் இடி முழங்கத்தையும் கொண்டது மறவர் இனம். அவ்வினத்து ஆடவரும் அஞ்சுமாறு வீசியது காற்று எனில் அதன் வேகம் எத்தகையது?

பாடல் : 9

மலையெனும் அரசன் புயங்களைத் தழுவி
மகிழ்ச்சி செய்து அவனுழைசி சிறந்த
நிலைகெழு பொன்னும் உரகச் செம்மணியும்
நித்தில் ராகியும் கவர்ந்து
தொலைவு இலாப்பண்டம் அனைத்தையும் வாரிச்
சுருட்டியே எல்லைவிட்டு அகலும்
விலைமகள் போன்று பலபல முகமாய்
வெள் அருவித்திரள் சாயும்

மலையில் இருந்து விழும் அருவியானது பொன், மாணிக்கம், முத்து ஆகியவற்றை உருட்டியவாறு விழுந்தது. அக்காட்சி மலையென்னும் அரசனின் தோள் தழுவி இன்பமூட்டி விலைமகள் போல் அவனிடமிருந்த செல்வத்தை எடுத்துக் கொண்டு வெள்ளருவியாள் வருவது போல் இருந்தது.

நீரைத் தாய்க்கு ஒப்பிடுவர் கம்பர். செவிலிக்கு ஒப்பிடுவர் சேக்கிழார். விலைமகளுக்கு ஒப்பிடிகின்றார் உமறுப்புலவர். கரையிலுள்ள மக்களுக்கு உணவூட்டுவதால் தாய் என்பார் கம்பர். வானின்று பெற்ற மழை நீரை வளம் சேர்க்க வழங்கும் ஆற்றை வளர்ப்புத் தாய் என்றார் சேக்கிழார். மலைபடு பொருளெல்லாம் அள்ளி வருவதால் மலையரசன் மனமகிழ கடந்து இன்பமூட்டி விலையாகப் பொருள் பெற்று அவனை வறியனாக்கி வரும் கணிகையாய்க் காண்கிறார் உமறுப்புலவர்.

பாடல் : 10

தாது உகுத்து வண்டு ஆர்த்துஎழத் தருத்தலை தடவி
வீதிவாய் நுரைதர வருபாகு எழ வீசிக்
காது மாகளிறு என நதி கழைக்கு அடங்காது
மோது காலினால் ஏற்றிய அணையிட முறிக்கு.

குத்துக்கோலுக்கு அடங்காமல் வீதிவழியே வாயில் நுரையுடன் பாகனை எறிந்து ஓடிவரும் கொலைகளிறு போல, மழையினால் பெருகிய நதியானது ஓடிவந்தது. பூக்களின் மகரந்தங்கள் உதிர வண்டுகள் ஓடுமாறு மரங்களின் உச்சியை எட்டி ஓடியது. வாய்க்கால்கள் வழியே ஓடிப் பாய்ந்து மதகுகளை முறித்தது.

ஓரளவு இப்பாடலில் சிலேடையணி உள்ளது. மரங்களில் மகரந்தம் உதிர வண்டுகள் ஓடுமாறு உச்சியை ஒடித்து மதநீர் நுரைத்தோடப் பாகனை எறிந்து வரும் களிறு என்றும், மகரந்தம் உதிர வண்டுகள் பறந்தோட, மரங்களின் வீதிவழியே நுங்கும் நுரையுமாய்க் குழம்பு போல் ஓடிய புதுவெள்ளம் என்றும் இருபொருள் கொள்ளலாம்.

பாடல் : 11

பரந்த வெண்நுரைத் துகில் உடுத்து அறல்குழல் பரப்பி
விரைந்து பாய் கயல்விழி எனத் திரைக்கரம் வீசிச்
சுரந்த புற்பகத் தனத்துடன் சுழி உக்தி தோற்றப்
பொருந்து மால்நதி விளங்கு இழை மகளிரைப்போலும்

மழைநீர் நிரம்பி ஓடி பெரிய நதியானது அழகிய அணிகளை அணிந்த மகளிர் போன்று தோற்றமளித்தது. எவ்வாறெனில், பரந்த வெண்மையான உடையை ஆடையாக உடுத்திருந்தது. கரையின் கருமணல் அதன் கூந்தலாக விரிந்திருந்தது. நீரினுள் வேகமாகப் பாய்ந்து திரிந்த கயல்மீன்கள் விழிகளாகி அமைந்திருந்தன. அலைகள் கைகளாக இருந்தன. சுரந்த நீர்க்குமிழி மார்பகங்களாயிற்று. நீரிற் சுழி கொப்பூழ் ஆயிற்று.

நதியைப் பெண்ணாக உருவகிக்கும் மரபு சங்க இலக்கியங்களீல் தொடங்கி, சிலம்பில் வளர்ந்து கம்பரில் கனிந்த ஒன்று. தமிழ் இலக்கிய மரபில் ஊறிய உமறுப்புலவரும் நதியை பொன்னே போல் போற்றுகிறார். கெண்டை மீனை உவமை கூறுங்கால் அதன் தோற்றம் கண்ணின் வடிவுக்கு உவமமாகும் என்றும், நீரின் சுழற்சி மகளீரின் விழியசைவிற்கு நிகராகும் என்றும் கூறுவதுண்டு. இங்கு புலவர் விரைந்து 'பாய் கயல்விழி' எனப் பொருத்தமான அடைமொழி புகன்றுள்ளார். விளங்கிழை மகளிர் எனக் கூறிவிட்டு, ஆற்றைப் புனைகையில் அதன் தோற்றம் மற்றும் கூறியதால் அடித்துச் செல்லும் ஆறு பொன்னும் மணியும் பூவும் அதற்கு அணிகளாயின என்பது பெறப்படும்.

பாடல் : 12

கிடந்த சந்தனம் கார் அகில் கிளைமணி, கரிக்கோடு
உடைந்த முத்தம் வெண்தந்தம் முச்சுடர் ஒளி ஒதுங்கக்
கடந்த செம்மணிப் பையுடன் கொடுகடல் ஏற
நடந்த வாணிகன் ஒத்தது செழுங்கழை நதியே.

நதியானது தான்\கடந்து வந்த வழியிற் கிடந்த சந்தனம், கரிய அகில், மணிகள், யானைக் கொம்பு, முத்துக்கள், தந்தங்கள் ஆகியவற்றை அடித்துக் கொண்டு சென்றது. கதிரவன் நிலவு, தீ முச்சுடர்களின் ஒளியும் தோற்குமாறு பொருட்களை அடித்துக்

கொண்டு சென்றது. சிறந்த மணிகள் நிறைந்த பையுடன் வாணிகம் புரியக் கடலில் கலம் ஏறிப் புறப்பட்ட வணிகனை ஒத்திருந்தது.

ஆற்றின் தோற்றமாம் ஒற்றைக் காட்சி பற்பல வடிவுறும் பொற்புறு கற்பனைத் திறனை உமறுப் புலவரிடம் காண்கிறோம். 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பதற்கேற்ப வினையை உயிராய்க் கொண்டு விருந்தோம்பப் பொருள் வேண்டி விரைந்தேகும் வணிகன் கடல்கடந்து வணிகம் செய்யச் சென்றாற் போல் நதி தோன்றியது என்கிறார். கடல் நீர் நதிகளுக்கு வளம் சேர்ப்பதால் வாணிக உவமம் பொருள் ஆழமும், பொருத்தமும் உடையதாகிறது.

முற்றிய நெல், கரும்பு, வாழை, மூங்கில், யானைத் தந்தம் முதலிய முப்பதுக்கும் மேற்பட்ட பொருள்கள் முத்துடையன எனல் தமிழ் இலக்கிய மரபு. எனவே,

'கரிக்கோடு உடைந்த முத்தம்' என்றார்

பாடல் : 13

இத்தகைக் குறிஞ்சி நிலத்தினைக் கடந்தே
எரிதழல் பாலையில் புகுந்து
மைத்தடம் கூந்தல் கருவழிச் செவ்வாய்
எயிற்றியர் வயிறு அலைத்து ஏங்கக்
கைத்தலத்து ஏந்து குழந்தையும் சிறாரும்
வேடர்தம் கணத்தொடும் வெருட்டு
முத்தணி சிறப்ப இருகரை கொழித்து
முல்லையிற் புகுந்தது சலலம்

இவ்வாறு மலைநிலத்தைக் கடந்த மழைநீர் வெள்ளமானது. பாலை நிலத்திற் புகுந்தது. பாலை நிலப் பெண்களான எயிற்றியர் தம் வயிற்றில் அடித்துக் கொண்டு அழுது புலம்புமாறு அவர்கள் குழந்தையும், சிறுவரும், ஆடவரும் வெருண்டோட ஓடியது. பின்னர் முல்லை நிலத்திற் புகுந்தது.

குறிஞ்சியில் வெள்ளம் விளைத்த கொடுமைகளை விரிவாகப் பேசியவர் ஏனைய நிலங்கள் பற்றிச் சுருக்கமாய்க் கூறி முடித்து விடுகிறார்.

பாடல் : 14

பால்தயிர், நறுநெய்க் கலத்தொடும் கலக்கிப்
பட்டியும் குட்டியும் சிதறிச்
சூறையிட்டு உதறிநெய்முடை கமழும்
சுரிகுழல் தோறுவியர் உடுத்த

கூறையும் குழலும் குடுக்கையும் தடுக்கும்
கொண்டெடுத்து அவர் நிரை சாய்த்து
மாறு அரையரைப் போல் பெருவளம் கவர்ந்து
மருதத்திற் பரந்தது வெள்ளம்.

முல்லை நிலத்தில் பாய்ந்த வெள்ளமானது தயிர், பால், மணமிக்க நெய் ஆகியவை இருந்த கலங்களை உருட்டி, ஆடுகள் அடைத்து வைக்கும் பட்டியிற் பாய்ந்து குட்டிகளெல்லாம் சிதறியோடச் செய்து, நெய்மணம் கமழும் கூந்தலையுடைய பெண்கள் உடுத்த ஆடையும், இடையரின் குழலும், குடுக்கையும், தடுக்கும் அவற்றை எடுத்துக் கொண்டு பசுக்களை அழித்து, பகைவரை அழித்து அவர்கள் செல்வத்தை எடுத்துக் கொண்டு மருத நிலத்தைச் சேர்ந்தது.

விலைமகளை குறிஞ்சியில் மலையரசன் வளம் கவர்ந்த மழைநீர், கள்வராய் முல்லையில் கவர்ந்து செல்கிறது என்கிறார்.

பாடல் : 15

கன்னல் மால்நதி வெண்திரை நுரை கரைபுரளத்,
தென்னிலைப் பருப்பு ஆகிய கால்அலாம் செருமி,
அனீன மென்சிறைப் பெடையொடும் குடம்பைவிட்டு அகலத்,
துன்னும் ஏரியும், தடங்களும் நிறைந்தது தோயம்.

இனிய நீரைக் கொண்ட பெரிய நதியானது. வெள்ளிய அலைகள் இருகரையிலும் நுரைபொங்க ஓடியது. இருப்பிடத்தை விட்டு அன்னம் பெட்டைகளோடும் அகலுமாறு ஏரியும், குளங்களும் நீரால் நிறைந்தன.

பாடல் : 16

அலை எறியும் திரைகடலென வருந்தி அதனைத்
தொலைவில் மள்ளர்கள் குளம்தொறும் புகுத்திய தோற்றம்
கொலைமதகரிக் குழுவினை வயவராய்க் கொடுபோய்
நிலை தரித்திடும் படுகுழி படுத்தலை நிகர்க்கும்.

அலைவீசும் கடலென நுரைபொங்க வரும் நதியினை அழிவில்லாத வீரம் உடையவர்கள் குலம் தொறும் வழிப்படுத்திய காட்சியானது கொலைக் களிற்றுக் கூட்டத்தை வீரர்கள் கொண்டுபோய் படுகுழியில் விழுமாறு செய்ததை ஒத்திருந்தது.

வெள்ளத்தை மதயானைக்கு ஒப்பிட்டதும், நீரைத் தேக்கிய மதயானையைக் குழியில் அகப்படுத்தியதற்கு ஒப்பிட்டதும் மிகப் பொருத்தம். யானை ஆற்றல் மிக்கது ஆபத்தானது. 'அறிந்திருந்தும் பாகனையே கொல்லும்'. நீரும் அவ்வண்ணமே வெள்ளமாக வரும்போது, உலகையே அழித்துவிடும். களிற்றினை அடக்கிக் கட்டுத்தறியிளிடின் பணிகள் பலவற்றிற்குப் பயன்படும். அதுபோல் வெள்ளத்தை தேக்கி வைத்தல் உழவுக்கும், மின்னுற்பத்திக்கும் பயன்படும்.

பாடல் : 17

தடமும் ஏரியும் வாவியும் கழனியும் சலசக்
கிடங்கும் எங்கணும் நிறைதரப் பெருகி கிலாலம்
குடம்பையின் பல பேதமாகிய சதகோடி
உடம்பு தோறினும் வார்நின்ற நிலையினை ஒக்கும்.

மழைநீர் ஒன்றே தடங்களிலும் ஏரிகளிலும் வாவிகளிலும் கழனிகளிலும் நீர்க்கிடங்குகளிலும் நிறைந்து பல்வேறு வடிவில் தோன்றிய காட்சி, உயிர் உறையும் கூட்டின் பல வேறுபாடு தோற்றமாகிய கோடிக்கணக்கான உடம்புகளில் ஒவ்வொன்றிலும் உயிர் உறைவது போன்றிருந்தது.

உயிரின் இயல்பு ஒன்றே. ஆனால், அது உறையும் உடல்களுக்கேற்ப வெவ்வேறு வடிவில் காட்சி தருகிறது. அதுபோல் நீர் ஒன்றெனினும் இருப்பிடம் பலவாகிறது.

பாடல் : 18

ஏரியை உடைத்துக் குளம் கரைதகர்த்தே
இடிபட அணையினை முறித்துச்
சேரியுள் பரந்து கொல்லையுள் புகுந்து
செழும் கருப்பாலையைச் சாய்த்து
வேரி அம் சலசக் கழனியை வழக்கி
விரிதலை அரம்பையைத் தள்ளி
வாரியிற் செறிந்து பனையெலாம் நிரப்பி
மட்டிலா மலிந்தது வனமே.

வெள்ளமானது தன் தேக்கிவைக்கப்பட்ட ஏரியை உடைத்தது. குளத்தின் கரையைத் தகர்த்தது. மதகுகளை முறித்தது. மக்கள் வாழும் சேரியிற் பரந்து சென்றது. பயிர் கொல்லைகளிற் புகுந்தது. கரும்பாலையைச் சாய்த்து தள்ளியது. கழனியைத் தாக்கியது. வாழை மரங்களை வீழ்த்தியது. கடல்போல் நிறைந்து வயல்களெல்லாம் நிரப்பி அளவில்லாமற் பரந்தது.

பாடல் : 19

அலை எறிந்து இரு கரைவவி ஒழுகும் கம்பலையும்
கலையும் வெள் அனம் சிறைவிரித்து அசைத்த கம்பலையும்
அலைதிறந்தன மதகின்வாய் வழிந்த கம்பலையும்
சிலை தரித்த பேரொலி பெரும்படையொலி கிறக்கும்.

அலைகளை வீசியவாறு இருகரையும் மோதிச் சென்ற ஓசையும், பெருகிய வெள்ளத்தால் கலைந்தோடிய அன்னக் கூட்டங்கள் சிறகுகளை அடித்து எழுப்பிய ஓசையும், மதகுகளின் வழியே அலைபுரண்டோடிய நீரின் ஓசையும், வில்லேந்திய பெரும்படையின் ஆரவாரத்தினும் மிக்கிருந்தது.

பாடல் : 20

முறைமுறைக் கிணைப் பறையொலி கடலென முழங்க
நிறையும் சேரிவிட்டு எழுந்தன உழவர்கள் நெருங்கிச்
செறி தடக்களிறு இனமென வயின்வயின் திரண்டு
மறி புனற்கரை இடந்தொறும் செறிந்தனா மலிந்தே

மருத நிலத்தில் வரிசையாகக் கினைப் பறைகள் கடலென முழக்கமிட்டு ஒலித்தன. நீர்க்கரை தோறும் உழவர்கள் கூட மதக்களிற்றுக் கூட்டமென வரிசையாகச் சேர்ந்து நின்றனர்.

மழை பொழிந்து வெள்ளம் பெருகி நீர் நிலைகள் நிறைந்தும் உழவு வேலைகள் தொடங்கக் கூடுமாறு பறைகள் ஒலித்து அறிவிக்கும் வழக்கம் சுட்டப்படுகிறது.

பாடல் : 21

மட்டுவாய் வயிறார உண்டு எண்ணிலா மள்ளர்
கொட்டு வாங்கியே இருபுயம் குலுங்கிடக் கரண்கள்
வெட்டுவார் சிலர் மென்கரத்து ஏந்தியே வரம்பு
கட்டுவார் அடைப்பார் திசைதொறும் கணக்கிலையே.

கணக்கற்ற மள்ளர்கள் கூடி வயிறாரக் கள்ளை மாந்தினர். பின் கொட்டு என்னும் கருவியை எடுத்துத் தோள்கள் குலுங்கிடக் கரண்களை வெட்டத் தொடங்கினர். அவருள் வேறு தம் மென்கரத்தில் மண்ணேந்தி வரப்புக் கட்டினர்: வேறு சிலர் மடை அடைத்தனர். இங்ஙனம் திசைதோறும் வயல்வேலைகளில் ஈடுபட்டவர் கணக்கிலாதோர் ஆவர்.

கூடிச்செய்ய வேண்டிய உடற்பணி எதுவாயினும் குடித்து மகிழ்ந்து தொடங்குதல் இன்றும் எளியோரின் பழக்கம். அம்மரபின்படியே மட்டுண்டு கூடுகின்றனர் மள்ளர்கள்.

பாடல் : 22

தெரிபொறி முகட்டுக் கவட்டுஅடி அலவன்
சிதைந்திடக் கமடம் உள் அழுந்த
வரிவளை நெரிய வலம்புரிக் குலத்தின்
வயிற்றிடைக் கொழுமுகம் தாக்கி
விரிகதிர்த் தரள மணிபல உகுப்ப
வெருள் மதக் கவையடிப் பேழ்வாய்
நிரைநெறி மருப்புக் கரும்பகடு இணக்கி
நீள் வயல் எங்கணும் உழுதார்.

புள்ளிகள் தெரியும் புறமும், பிளவுபட்ட விரல்களும் கொண்ட நண்டுகள் சிதைந்தழியுமாறும், ஆமையானது சேற்றில் புதையவும். வரிகளுடன் கூடிய சங்குகள்

நெரிபடவும் வலம்புரிச் சங்குகளின் வயிற்றில் ஏர்முகம் தாக்கியதால் ஒளிமிகுந்த முத்துக்களை அவை உதிர்க்கவும், அச்சம் தரும் மதமும் பிளவுபட்ட அடிகளும் பெரியவாயும் நீண்ட மருப்பும் கொண்ட கருநிறத்துக் களிறுகளை வசப்படுத்தி நீண்ட வயல்கள் முழுவதும் உழுதார்கள்.

அலவனும் சங்கும் வலம்புரியும் நீர் வாழ் இனங்கள், வயலில் நீர் நிரம்பியிருந்ததால் அவை நிறைந்திருந்தன. உழவர்கள் உழத் தொடங்கியதும் அவை அழிகின்றன. 'மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று ஆனை கட்டிப் போரடிக்கும் அழகான தென் மதுரை' என்பர்.

பாடல் : 23

முள் அரைப் பசுந்தாள் வட்டலைக் கமல
முகை உடைந்து ஒழுகுதேன் தெறிப்பக்
கள் அவிழ் குவளை ஒருபுறம் சரியக்
கடிமலர்க் குமுதம் மடிய
மள்ளர்காற் சேற்றில் இடறிய பதும
மணியின் மலர் அளி எழுப்ப
வெள்ளநீர்ப் பரப்பு கழனிகள் தோறும்
மென்கருஞ்சேறு செய்தனரே.

பசிய தாளும் வட்ட இலைகளும் கொண்ட தாமரை மலரின் மொட்டுகள் உடைந்து ஒழுகிய தேன் பக்கங்களில் தெறித்தது. கள் ஒழுகும் குவளை மலர்கள் ஒருபுறம் சரிந்து வீழ்ந்தன. உழவர்கள் கரிய சேற்றில் காலில் இடறிய தாமரை மலர்களில் இருந்த வண்டுகள் வெருண்டோடின. இவ்வாறு நீர் வெள்ளம் பரவியிருந்த வயல்தோறும் உழுது சேறாக்கினர் உழவர்கள்.

பாடல் : 24

சுந்தரப் பொறி அஞ்சிறை அறுகால்
ஏழிசை அளி தொகுதியிற் கூடி
மந்தரம் அனைய தருவின் மேல் வீழ்ந்து
வாய்விட முழங்கிய ஓதை
கொந்து எறி கமலம் குமுதம் செங்கழுநீர்
குடியொடு மடிந்தன இனிமேல்
அந்தரம் அலது வேறிடம்இலை என்று
அழுகுரல் மயங்குவ போலும்

அழகிய புள்ளிகளொடு சிறகுகளையும், ஆறுகால்களையும் ஏழிசையையும் கொண்ட வண்டுகளின் தொகுதி. மந்தர மலையை ஒத்த மரத்தின் மேல் வீழ்ந்து எழுப்பிய பேரோசையானது "கொத்துக்களாக மலரும் தாமரை, குமுதம், செங்கழுநீர் ஆகிய மலர்கள்

எல்லாம் வெள்ளத்தில் அடியோடு அழிந்துவிட்டன; எனவே, நாங்கள் தங்குவதற்கு இனிமேல் வானம் அல்லது வேறிடம் இல்லை என்று அழுது மயங்குவது போல் போலிருந்தது.

'அஞ்சிறை அறுகால் ஏழிசை அளி' என்ற தொடர் சொல்நயம் உடையது. வெள்ளத்தால் மரத்தின் மேல் விழுந்த வண்டுகள் எழுப்பிய ஒலிக்கு, ஒரு காரணம் கற்பித்த தற்குறிப்பேற்றம், இப்பாடலில் காணும் பொருளணியாகும்.

பாடல் : 25

சுரும்பினம் இருந்து தேனுண்டு தெவுட்டிச்
சுருதிசெய பன்மலர் சிறந்த
இரும்படிக் கிடங்கில் கிடந்து மூச்செறிந்த
எருமையின் சுவைமடிப் பரூஉத்தாள்
நிரம்பிடப் பதிந்த சலஞ்சலத் தரள
நீணிலா எறிப்பது நிறைந்த
கரும்பொறிக் கவைநாத துளை எயிற்று அரவு
கவ்விய கதிர்மதி போலும்.

வண்டுகளின் கூட்டம் தங்கித் தேனுண்டு திகட்டிப் போய் இசைபாடும் பண்மலர்கள் நிறைந்த ஆழமான கிடங்கொன்று உண்டு. அதிற்கிடந்த மூச்செறிந்த எருமையின் பரிய காலில் நிரம்பப் பதிந்த முத்துக்கள் நிலவொளி போல் தோன்றும், அக்காட்டி, கரிய புள்ளிகளும், பிளவுபட்ட நாவும், துனையமைந்த எயிறும் கூடிய பாம்பினால் கவ்வப்பட்ட மதிபோல் தோன்றும்.

நீரில் ஆழ்ந்திருக்கும் கரிய எருமையின் காலிற் பதிந்த முத்துக்கள். கிரகண காலத்தில் பாம்பினால் பற்றப்பட்ட மதிபோன்று தோன்றின. சந்திர, சூரிய கிரகணங்கள் முறையே கேது, ராகு என்னும் பாம்புகள் அவற்றை விழுங்கி வருவதால் ஏற்படுவன என்ற கூறுவது இந்து சமயப் புராண மரபு.

பாடல் : 26

கலன்பல அணிந்து தொண்டி உண்டு எழுந்து
கதிரவன்தனைக் கையால் தொழுது
குலம்தரு தெய்வணக்கமும் செய்
குழுவுடன் உழுநர்கள் கூண்டு
நிலம் தனை வாழ்த்தி வலக்கரம் குலுக்கி
நெல்முளை சிதறிய தோற்றம்
பொலன்பல சிறப்பு இடன்அற நெருங்கிப்
பொன்மழை பொழிவது தோன்றும்.

அணிகலன்கள் பல அணிந்து நெல்லாற் சமைத்த கல்லை உண்டு எழுந்து, கதிரவனைக் கைகளால் வணங்கி, அவரவர் குலதெய்வ வணக்கமும் செய்து உழவர்கள் கூட்டமாக கூடினார்கள். பின், நிலத்தினை வாழ்த்தி விதைக்கத் தொடங்கினார்கள். வலக்கரம் உலுக்கி அவர்கள் நெல்விதைகளை தூவிய தோற்றம், பொன்மழை பொழிவது போல் இருந்தது.

பயிர்க்கு இன்றியமையாத நீரும் ஒளியும் வழங்கும் கதிரவனைப் பயிர் தெய்வமாய்க் கருதி வழிபடுகின்றனர். அறுவடைத் திருவிழாவாம் பொங்கலன்று கதிரவனுக்குப் புது நெல்லில் பொங்கலிட்டுப் படைப்பது இன்றும் வழக்கம். அடுத்து அவரவர் குலதெய்வ வணக்கம். இறுதியாக நெல்விளையும் நிலமகளை வாழ்த்துகின்றனர். நெல்முளை விதைத்த தன்மை பொன்மழை பொழிவதாய்த் தோன்றுவதில் ஒரு பொருத்தமுண்டு. "பொன் விளையும் பூமி எனப் புகழ்வதுண்டு. எனவே, நெல்லைப் பொன்னுக்கு நிகராகச் சொல்வது பொருத்தமே அன்றோ?

பாடல் : 27

படர்மருப்பு எருமைக்கு உடம்பு உரை செருத்தல்
பருமுலைக் கண்திறந்து ஒழுகி
நடைவழி சொரியும் அமுதமும் வாழை
நறுங்கனி உகுத்த செந்தேனும்
உடைபடு பசைப் பசுங்கனிச் சுளையில்
ஊற்றிருந்து ஓடிய தேனும்
கடிமலர் போர்த்த வரம்பினைத் தகர்த்துக்
கழனியில் பரந்து பாய்ந்து உடைக்கும்.

அகன்ற கொம்பினைக் கொண்ட எருமையானது உடலை உராய்தற்குரிய கல்லிற்பட்டு அதன் பருத்த மடியினின்றும் ஒழுகிப் பாதையெல்லாம் ஓடும் பாலும் வாழையின் மணமிகுந்த பழத்தினின்றும் வழிந்த சாறாகிய செந்தேனும், உடைந்த பலாப்பழத்தின் சுளையினுள்ளிருந்து ஓடும் தேனும் சேர்ந்து மணமலர்கள் மறைந்திருக்கும் வரப்பினைத் தகர்த்து வயலினுள் பாய்ந்து சென்று நிறையும்.

வயலின் வரப்பு உறுதியானது. அதைத் தகர்க்கப் பெருவெள்ளம் வேண்டும். பாலும் தேனும் பெருகியோடிய சிறப்பை உயர்வு நவிற்சியுடன் இப்பாடலில் உரைக்கிறார் உமறுப்புலவர்.

பாடல் : 28

அருமறை நெறியும் வணக்கமும் கொடையும்
அன்பும் ஆதரவும்நல அறிவும்
தருமமும் பொறையும் இரக்கமும் குணமும்
தயவும் சீர் ஒழுக்கமும் உடையோர்

பெருகிய செல்வக் குடியொடு கிளையும்
பேருந்து இனிதிருத்து வாழ்வனபோல்
மருமலர்ப் பழனக் காடெலாம் நெருங்கி
வளர்ந்தது நெட்டிலை நாற்றே.

அரிய வேதங்களிற் சொல்லப்பட்ட ஒழுக்கமும், வணக்கமும் கொடைப்பண்பும், அன்பும், ஆதரவும், நல்லறிவும், தருமமும், பொறுமையும், இரக்கமும், பண்பும், கருணையும் நல்லொழுக்கமும் உடையோர் பெருகிய செல்வக் குடியுடன் சுற்றம் சூழ இனிதாக வாழ்வது போல் மணமலர்கள் நிறைந்த வயற்காட்டில் நெல்நாற்று வளர்ந்தது.

பாடல் : 29

கோது அற எழுந்த நாற்றினைப் பறித்துக்
குவிந்திடு முடியிட மடுத்துத்
தீதறும் கருங்கண் செய்யவாய் வெண்பல்
சிற்றிடைக் கடைசியர் வாரிப்
பூதரம் அனைய சுணங்கணி முலையில்
புள்ளியில் சேதகம் போர்ப்ப
ஆதரம் பெருகி நீரை வடிவாய்
அணியணி நாற்றினை நாடுவர்.

குற்றமின்றி விளைந்த நாற்றினைப் பறித்துக் குவித்து முடிகட்டினர். குற்றமற்ற கரிய கண்ணும் சிவந்த வாயும் வெண்பல்லும், சிறிய இடையும் கொண்ட உழத்தியர் முடிகளை வாரிநிலம் போன்ற கணங்கணிந்த மார்பகத்தில் சேர்த்து, வரிசை வரிசையாய் நிலத்தில் நட்டனர்.

பாடல் : 30

கையினில் செறிந்த முடியினைச் சிதறிக்
கடைசியர் கரங்கள் தொட்டு ஒழுங்காய்ச்
செய்டினில் பதிப்பத் துளி கருஞ்சோறு
தெறித்திடும் செழுமுகச் செவ்வி
துய்ய வெண் திரைப்பாய் சுருட்டி மேல் எறியும்
தொடுகடல் முகட்டுகடை எழுந்து
வையகம் சிறப்ப வருமுழு மதியும்
மறுவும் ஒத்திருந்தன மாதோ.

கையினில் பொருந்திய நாற்று முடியினைப் பிரித்து கடைசியர் ஒழுங்காக வயலில் நட்டனர். அவர்களது செழுமையான முகத்தில் கருநிறச் சேற்றுத் துளி தெறித்தது. அத்தோற்றம் தூய்மையான வெண்ணிறத்து அலைகளாகிய பாயினைச் சுருட்டி மேலே

எறிகின்ற தொடுகடல் ஓரத்தில் எழுந்து வையகம் ஒலிபெற வருகின்ற முழுமதியில் உள்ள மறுவை ஒத்திருந்தது.

பாடல் : 31

பனைமதுத் தேக்கி இருவிழி சேப்பப்
பைங்கழை நிகர்த்த தோள் அசைய
அனநடை சிதையச் சேவடி பெயர்த்திட்டு
அள்ளலம் சேற்றிடை நடுவோர்
சினமதக் கரிக்கோடு எனும் முலைத் தடத்தில்
சேதகம் தெறிப்பது திரண்ட
வசைமென் முகையில் பொறிவரி அறுகால்
வண்டு மொய்த்திருப்பது போலும்

பனங்கள்ளை மாந்தியதால் சிவந்திருந்த விழிகளுடன், பசிய மூங்கிலை ஒத்த தோள்கள் அசைய, கள்ளுண்டதால் தடுமாறி இயல்பான அன்னநடை சிதையும் வகையில் தங்கள் சிவந்த அடிகளைப் பெயர்த்து நடந்து வந்து சேற்றிடை நாற்று நட்டனர் உழத்தியர். சினமுடைய மதக்களிற்றின் கொம்பு எனத்தக்க அவர்கள் மார்பகத்தில் தெறித்த சேறானது, திரட்சி வாய்ந்த தாமரை மொட்டில் புள்ளிகளும், வரிகளும் கூடிய அறுகாற் பறவையான வண்டு மொய்த்திருப்பதைப் போல் காட்சியளித்தது.

முகத்தில் தெறித்த சேற்றை முன்னைய பாடலிற் கூறியவர் முலைத்தடச் சேற்றை இப்பாட்டில் மொழிகிறார்.

பாடல் : 32

முற்றுஇழை கிடந்த முலைக்குவடு அசைய
முகில் தவழ் கருங்குழல் நெகிழச்
சிற்றிடை ஓசிய மதிமுகம் வெயர்ப்பச்
சேற்றிடை நாற்றினை நடுவோர்
பற்று மென்கரத்தில் கரும் பொனின் கடகம்
பசிய நெற்பயிரொளி பாய
மற்றெனை உரைப்ப வரிகதிர் பரப்பு
மரகதக் கடகம் ஒத்திருந்த

அணிகள் தவழ்ந்த மார்பகங்கள் அசைய, மேகம் தவழ்ந்தாற் போன்ற கரிய குழல் நெகிழ, சிறிய இடை ஓடிய, மதி போன்ற முகம் வியர்க்க உழத்தியர் — நாற்றினை சேற்றிடை நட்டனர். அவர்களுடைய மென்மையான கைகளில் இரும்பு கடகங்கள் அணி செய்தன. கரிய அக்கடகங்களில் பசிய நெற்கதிர்களின் ஒளி பாய்ந்தபோது — ஓ! அக்காட்சியை என்னென்று உரைப்பது! விரிகின்ற ஒலியைப் பரப்பும் மரகதத்தால் ஆன கடகங்கள் போல் அவை தோன்றின.

அணிந்துள்ள ஆடை அணிகளின் நிறம் உடலில் இணைந்து மெருகூட்டுவதும் அருகருகே உள்ள இருபொருள்களில் ஒன்றின் ஒளி மற்றொன்றிற் பாய்ந்து வண்ணவித்தை புரிவதும் கணகூடாக நாம் காணும் ஒன்றே. எளிய உழத்தியரின் இரும்பு அணி. நெற்பயிரின் ஒளியால் நவமணிகளில் ஒன்றான மரகதப் பச்சை வண்ணமுற்றது.

பாடல் : 33

வெறிமது அருந்தி மரகத கோவை
மென்பிடர் கிடந்து உருண்டு அசையக்
கறுவிய மனத்தோடு இனத்தொடும் இதலிக்
கடைசியர் களிப்பொடு தவளச்
சிறுநகை தரளப் பவளமெல் இதழில்
செழுமலர்க் கைவிரல் குவித்துக்
குறிகுரல் குவிகை கூன் பிடர்ப் பேழ்வாய்க்
குடவளை குரவையோடு இகழும்.

வெறியூட்டும் மதுவைப் பருகி மரகக மாலை மென்மையான புறங்கழுத்தில் கிடந்து அசைய, சினத்துடன் தம் இனத்தொடு சண்டையிட்டவாறே மகிழ்ச்சியுடன் பவளமலையை மெல்லிய இதழில் தங்கள் செழுமையான மலர் போன்ற கைவிரல்களைக் குவித்து வைத்துக் குலவையிட்டனர். அக்குலவையானது வளைந்த முதுகும் பெரிய வாயும் கொண்ட குடவளையின் குலவையோடு மாறுபட்டு எழுந்தது.

முதன்மையான நிகழ்ச்சியின் போது மகளிர் கூடிக் குலவையிடல் இன்றும் வழக்கம். நாற்று நடவின்போது மகளிர் குலவையிடுவது குலவைக்கு மாறாக அவர்கள் எழுப்பும் போட்டிக் குரல்போல் இருந்தது.

பாடல் : 34

கூந்தலும் பிடிமா மென்னடை மயிலும்
குடமுலைக் கடைசியர் செழுங்கைக்
காந்தள் மெல்விரற்கும் கடுவரி விழிக்கும்
கடைந்து இணைக்கிய கணைக்காற்கும்
சேந்தினை பொருவாது இனண் என வெருவிச்
செங்கயல் வரிவரால் கெளிறு
பாய்ந்து அயல் போய் வனத்திடை ஒலித்துப்
பங்க மெய்படப் பயப்படுமே.

அழகிய கூந்தலுடன் பெண்யானை போன்று மென்மையான நடை பயிலும் கடைசியரின் கைகளிலுள்ள காந்தல் மலர் போன்ற மெல்லிய விரல்களுக்கும், கடைந்து உருவாக்கினாற் போன்று திரண்டிருந்த கணைக்கால்களுக்கும் தாங்கள் ஒப்பாக மாட்டோம் என அஞ்சிச் செங்கயலும் வராலும் கெளிறும் ஆகிய மீன்கள் வயற்பரப்பினின்று வெளியேறிச் சென்று காட்டில் ஒளிந்து கொள்ளும்.

நாற்று நடுகையில் அதுகாறும் கழனி களித்திருந்த மீன்கள் வெளிச் சென்றிருக்கலாம். அதனை, உழத்தியரின் விரல், விழி முதலியவற்றுக்குத் தோற்று ஓடியதாகப் புலவர் கற்பனை செய்து தற்குறிப்பேற்றமாகப் பாடுகிறார்.

பாடல் : 35

குருகு இனம் இரியப் புள்ளினம் பதறக்
கொக்கினம் வெருவிட எகினம்
விரிமலர் கமலப் பாயல்விட்டு அகல
மென்சிறைப் பெடை அனம் துடிப்பச்
சொரிமதுத் துளித்துக குவளைவாய் சிதறச்
சுருட்டி வால் விசைத்திடத் துள்ளி
வரிவால் பகடு வாளை நிலவு எறிக்கும்
மடைத்தலை கிடந்து மூச்செறியும்.

குருகுக் கூட்டம் இடம் விட்டு அகல், பறவையினங்கள் பதற, கொக்குக் கூட்டம் அஞ்சியோட, அன்னங்கள் தாமரை மலர்ப்படுக்கையினின்றும் வெளியேற, மெல்லிய சிறகுகளைக் கொண்ட பெட்டை அன்னங்கள் துடிக்க, குவளை மலர்கள் மதுரச் சொரிந்து வாய் அவிழ்க்க, வரால் மீன்கள் வாலைச் சுருட்டி வேகமாகத் துள்ளிச் சங்குகள் நிலவொளி போல் ஒளிவீசிச் கிடக்கும் மடைப்புறத்திற் கிடந்து மூச்செறியும்.

பாடல் : 36

வரிசையில் செறிந்த நிரைபசும் சாலி
வளர்கிளைக் கிளையெனக் கிளைத்துப்
பெருகு சூல்முதிர்ந்து ஈன்று ஆரமுது உறைந்து
பிடர் குனிதரக் குலை சேந்து
சொரிகதிர்ப் பவள நிறம்பல படைத்துச்
சுடர்மணி முத்தினம் தெறிப்பத்
தரையினில் படிந்தே அருட்கடை சுரந்த
தருவினம் வெருவிடக் கிடக்கும்.

பசுமையான சாலி நெற்கதிர்கள் வரிசை வரிசையாக வளர்ந்திருந்தன. கிளை கிளையாக கிளைத்தால் போன்று கதிர்கள் பால் முற்றி நிறைந்து வளைந்து நின்றன. பவளநிறம் படைத்த கதிர்கள், முத்துக்கள் போன்ற கதிர்கள் தெறித்து விழத் தரையிற் படிந்தாற் போன்று கிடந்த காட்சி மரங்கள் சாய்ந்து கிடந்தன எனுமாறு இருந்தது.

நெற்பயிர்கள் மண்ணின் மாண் பாலும், உரத்தாலும், உழைப்பாலும் மரங்கள் போல் பெருத்திருந்தன.

பாடல் : 37

கொத்து அலர்சூடி அரைத்துகில் இறுக்கிக்
குடமதுக் கைமடுத்து அருந்தி
மைத்தவழ் கனகக்கிரிப்புயம் திரண்ட
மன்னர்கள் வனப்பினுக்கு உடைந்த
சித்தசன் கரவாள் பறித்ததை வளைத்த
செயலெனப் பிள்ளைவெண் பிறைவாள்
கைத்தலத்து ஏந்திக் கழனியில் புகுந்து
கதிர் அரிந்து அரிநிரை இடுவார்.

மலர்கொத்துக்களைச் சூடி, அரையாடையை இறுக்கிக் கட்டி, குடத்துமதுவைக் கையேந்திப் பருகி உழவர்கள் புறப்பட்டனர். மேகம் தவழும் பொன்மலைபோல் திரண்ட தோளுடைய உழவர்கள் தமக்குத் தோற்ற சிற்றரசன் கையிலுள்ள வாளைப் பறித்து அதை வளைத்தாற் போலப் பிறையென வளைத்த அரிவாளைக் கையில் ஏந்திக் கழனியிற் புகுந்து கதிர்களை அறுத்து வரிசைவரிசையாக இட்டனர்.

பாடல் : 38

திருந்திய அரியைக் கொடுங்கையில் கிடத்தித்
திரைசெய்து கம்மையில் சேர்த்துக்
கருந்தடம் கூந்தல் செவ்வரி வேல்கண்
கடைசியர் குழாத்தொடும் திரண்டு
விரிந்த செங்கமலக் கரம்பல வருந்த
விசித்து இறுக்கிய சுமை ஏந்திப்
பொருந்திய வரப்பின் நெறி கடைக்கதலப்
புலியடி குலை தலை சாய்க்கும்.

அறுத்துத் திருத்தி. தாள்களை கட்டாகக் கட்டினர். கரிய அகன்ற கூந்தலும் செவ்வரி படர்ந்த வேல் போன்ற கூரிய கண்களும் கொண்ட உழத்தியர் திரண்டு வந்து, மலர்ந்த செந்தாமரைக் கைகள் வருந்துமாறு, இறுக்கிக் கட்டப்பட்ட, கதிர்க்கட்டுகளை ஏந்தி வரப்பில் நடந்து சென்று சூட்டடிக் களத்தில் சேர்த்தனர்.

உழவுத் தொழிலை ஒவ்வொரு நிலையாக நுட்பமாகப் புனைகிறார். புரிசேர்த்து நெற்கதிர்களை இறுகக் கட்டுவதை மட்டுமே ஒரு பாடலிற் கூறுகிறார்.

பாடல் : 39

அசைந்த சிற்றிடை மென்கொடி வருந்திட நீள்
அணிவிடம் மார்பிடைப் புரளப்
பசுங்கிளிப் பரிவேள் படையெனத் திரண்ட
கடைசியர் சுமையெலாம் பரப்பி

இசைந்திட நிறைத்துக் குவித்த நெற்போர்கள்
எங்கணும் இலங்கிய தோற்றம்
விசும்பினைத் தடவ துரை சதகோடி
வீற்றிருந்தன எனச் சிறக்கும்.

சிறிய இடையாகிய மெல்லிய கொடி வருந்துமாறும், நீண்ட வடம் மார்பினில் புரளுமாறும் பசிய கிளியை ஊர்தியாகக் கொண்டு அரசனான மன்மதனின் படை திரண்டு வந்த உழத்தியர் கூட்டம் சுமந்து வந்து குவித்த நெற்போர்கள் எங்கும் நிறைந்து காணப்பட்டன. அத்தோற்றம் வானத்தை முட்டுமளவு உயர்ந்த மலைகள் கோடிக் கணக்கில் இருப்பது போல் காணப்பட்டது.

பாடல் : 40

கார்த்தடக் களிற்றின் வனப்பினை அழித்த
கருங் கடாவினம் பல இணைத்துப்
போர்த்தலை திறந்து திரித்து வை நீந்துப்
பொன்னறச் செந்நெல்லைக் குவித்துச்
சேர்ந்திடும் சகடம் தொறும் தொறும் இயற்றித்
திரன்மனை வயின் வயின் செறிப்பார்
ஆர்த்த பேர் ஓதை இனமணி கொழிக்கும்
அறைதிரைக் கடலினைப் பொருவும்.

களிற்றின் அழகைத் தோல்வியுறச் செய்து, கரிய காளைகள் பலவற்றை ஒன்றாக இணைத்துப் போரடித்து வைக்கோலைப் பிரித்துப் பொன்னிறச் செந்நெல்லைக் குவித்தனர். குவித்த செந்நெல்லை வண்டிகளில் ஏற்றி மனைதோறும் சேர்த்தவர்கள் எழுப்பிய பேரொலியானது வணிகன் நிறைந்த அலைகடல் ஓசையை ஒத்திருந்தது.

பாடல் : 41

செந்நெல்லின் பெருக்கின் கனைக்குரல் சகடம்
திசைதொறும் மலிந்தன செருக்கும்
கன்னல் அம் கழனி புகுந்து அறுத்து அடைந்த
களமர்கள் ஒலிகுரல் சேருக்கும்
துன்னபூம் கமுகஞ் சிதறு செம்பழுக்காய்
சுமப்பவர் கம்பலைச் செருக்கும்
மன்னவன் வதைத் துரை அபுல்காசீம்
வளமனைச் செருக்கும் ஒத்திருக்கும்.

செந்நெல்லின் பெருக்கினை ஏற்றிச் செல்லும் வண்டிகள் எல்லாத் திசைகளிலும் நிறைந்து தோன்றுவதால் ஏற்படும் ஒலியும், கரும்பு வயலிற் புகுந்து அறுத்து அவற்றை

ஓரிடத்தை குவித்த உழவர்களின் குரல் ஒலியும் நெருங்கிய பூக்களைக் கொண்ட கமுக மரத்தினின்றும் சிதறும் காய்களைச் சுமந்து செல்பவர் ஒலியும், வகுதைக்கு அரசனான அபுல்காசீமின் செல்வமனையிற் மலர்கூடியிருக்கும் ஆரவாரத்தை ஒத்திருக்கும்.

தன்னை ஆதரித்த வள்ளலை நன்றியுணர்வுடன் ஆசிரியர் நினைவு கூறும் இடங்களில் ஒன்றை இப்பாடலிற் காண்கிறோம். நெல் வண்டிகளின் ஓசையும் கரும்பு வயலின் அறுவடை நிகழும் ஓசையும் போன்ற ஓசை எழ வேண்டுமாயின், எத்தனை பேர் கூடியிருக்க வேண்டும்? அத்தனை பேரையும் ஆதரிக்கும் ஆற்றலும், அருள் உள்ளமும் அபுல்காசீமுக்கு இருந்ததை உணர்த்துகிறார் புலவர்.

பாடல் : 42

கால துட்டவாய் முளரியில் ஊறு கள் அருந்தி;
கோல துட்டஅம்சிறை அளி குழுவுடன் பாடும்
சோலை வட்டவாய் மயிலினம் சூழ்ந்து கார்நில
ஆலவட்டம் ஒத்திருந்த மென்சிறை விரித்து ஆடும்.

தாமரை மலரின் ஊறும் மதுவை அருந்தி அழகிய வட்டமான சிறகுகளைக் கொண்ட வண்டுகள் கூட்டத்துடன் பாடும். அத்தகு சோலையில் மயிலினம் சூழந்து, கருநீல விசிறியை ஒத்த தம் சிறகினை விரித்து ஆடும்.

வண்டுகள் பாட மயில்கள் ஆடிய காட்சி காட்டப்படுகிறது. 'ஆடமக் குயின்ற அவிர்துளை மருங்கின், கோடை அவ்வளி குழல் இசையாக, பாடின் அருவிப் பனிநீர் இமிழிசை தோடமை முழவின் துரை குரலாக' என்ற சங்க பாடல் முதல்

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஒங்கக் குவளைகண் விழ்த்து நோக்கத்
தெண்டீரை எழினிகாட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கும் மாதோ.

என்ற கம்பர் கவிதை வரை, இயற்கையில் இசையும் நாடகமும் கண்ட புலவோர் பலர் அம் மரபினில் வந்த உமறுப் புலவரும் அத்தகு காட்சி ஒன்றைப் படைத்துள்ளார்.

பாடல் : 43

அரக்கு எறிந்த செவ்வாம்பல் வாய் அணியிழை மடவார்
நெருக்கி இட்டகால் சிலம்பொலி விசும்புற அதிர
இருக்கும் வாவியுள் பெடை, அனம் இடர்கொல் என்று இரங்கித்
தருக்கு இழந்து தன் சேவல்வாயத் தொனியெனத் தயங்கும்.

அரக்கினை வெல்லும் சிவந்த நிறத்து ஆம்பல் மலரினை ஒத்த வாயினை உடைய பெண்களின் காற்சிலம்பின் ஒலி வானுறக் கேட்டது. குளத்தில் மிதந்து கொண்டிருந்த

பெண் அன்னங்கள் தம் சேவலின் குரல் என அவற்றை எண்ணி மயங்கி, இடரேதும் உண்டோ என கவலைப்படும்.

பாடல் : 44

நலம் கொள் தாமரை முகமலர்தர, நறும்குவளை
விலங்கி துள்ளையில் வழியெனக் கிடப்ப மெல்அரும்பு
துலங்கு மென்முலை தோன்றிடப் பச்சிலைத் துகில் போர்த்து
இலங்கு வாவிகள் அணியிழை மகளிர் ஒத்திருந்த

குளங்களில் பூத்திருந்த தாமரை முகமாக, குவளை மலர் விழியாக, அரும்புகள் மார்பாக, பச்சிலைகள் ஆடையாக அமைந்ததால் வாவிகள் மகளிரை ஒத்திருந்தன.

மலர்களை மகளிரின் உறுப்புகளுக்கு உவமை கூறுதல் இலக்கிய மரபு. குளத்தில் மகளிரின் உறுப்புக்களை ஒத்த மலர்கள் கிடப்பதால் அவற்றை ஒருங்கே காட்டுகையில் குளங்கள் மகளிராய்த் தோற்றமளிக்கின்றன.

பாடல் : 45

நிரைந்த சண்பகம் தடக்கரை நிரம்பச்
சொரியும் பொன்மலர் மீதினில் வரிஅளித் தோற்றப்
புரிந்து இலங்கு பொற்கரையினை இரும்பினால் இறுகப்
பரிந்து அறைந்த சுள்ளாணியின் புறமெனப் பரந்த

குளக்கரையில் இருந்த சண்பக மரங்களும், பாதிரி மரங்களும் பொன் போன்ற மலர்கள் நிறைப் பூத்துக் கிடந்தன. அவற்றின் மேல் வரி வண்டுகள் இருக்க தோற்றமானது. ஒளிவீசும் பொற்கரைக்கு இரும்பினால் சுள்ளாணி அறையப்பட்டமை போல் இருந்தது.

வண்டுகள் கரியன, சிறியன. எனவே, இரும்புச் சுள்ளாணியின் புறமெனத் தோன்றின. அவை மலர்களின் மேல் மதுவருந்த வீற்றிருந்தமையால் பொற்கரையின் மேல் அறைந்த சுள்ளாணி போன்று தோன்றின. புலவர் கற்பனையாகப் படைத்து மொழியும் காட்சி உவமையாகும் பாங்கினை இப்பாடலில் காண்கிறோம்.

பாடல் : 46

தோடு அவிழ்ந்து பூத்தாது உகக் குடைந்து இசைச் சுரும்பு
பாட வாவியுள் இளநிலாத் தோன்றிய பான்மை
சாடும் வார்புனல் அலைதரத் திரைகளில் தத்தி
ஓடம் ஓடுவது ஒத்திருந்தன என ஒளிரும்.

குளத்தில் மலர்ந்திருந்த மலர்களின் இதழ்கள் விரிந்து மகரந்ததூள் சிந்துமாறு வண்டுகள் அவற்றைக் குடைந்து தேனுண்டு பாடின. அவ்வேளை வானத்து நிலவின்

பிம்பம் குளத்து நீரில் தோன்றியது. காற்றில் அலைகள் எழுகையில் நிலவின் பிம்பம் அசைவது. ஓடம் ஒன்று விடுவது போன்றிருந்தது.

பாடல் : 47

வாய்ந்த மெல்லிசை மடந்தையர் தடத்தின் மெய்வருத்தத்
தோய்த்து நீர்குடைந்து ஆடுவோர் மதிமுகத் தோற்றம்
சேர்ந்த கஞ்சமும் குவளையும் என எழில் சிறந்த
கூந்தல் வெண்திரைக் கடலிடை முகில் எனக் குலவும்.

பொருத்தமான மெல்லிய அணிகளை அணிந்த மகளிர், மெய்வருந்தக் குளத்தில் புக்குத் தோய்ந்து நீராடியபோது தெரிந்த மதிபோன்ற முகங்களின் தோற்றம் தாமரையும், குவளையும் எனச் சிறந்திருந்தது. அவர்தம் கூந்தல் வெள்ளிய அலைகளோடு கூடிய கடலின் நடுவே முகில் போல் தோன்றியது.

'புக்கு முகோர் என்னக் குடைந்து நீராடி' எனப் பாவைப் பாடல் மகளிர் நீராடலைப் பேசும், அங்ஙனம் நீராடுங்கால் நீருக்கு வெளியே தென்பட்ட மகளிரின் முசும் தாமரையாகவும், விழிகள் குவளைகளாகவும் தோன்றின. இரு மலர்களுமே நீரில் மலர்வனவாதலின் அக்காட்டி இயல்பாகவும் இருந்தது. தொலைவில் இருந்து பார்ப்பவர் தாமரையும், குவளையும் மலர்ந்துள்ளன என்றே எண்ணி ஏமாறும் வண்ணம் இருந்தது. நீரில் நனைந்து விரிந்து கிடந்த கருங்கூந்தல் நீரலைகளின் மேல் தோன்றியமை கடலலைகளின் நடுவே மேகம் எழுந்தாற்போல் தோன்றியது.

பாடல் : 48

திருந்து மெல்லிழை மடந்தையர் புனலிடைத் திளைப்பச்
சரிந்த கூந்தலில் இருந்த வண்டு எழுந்து பூந்ததில்
விரிந்த காவியில் வீழ்வது மின் அமர் விழிக்குப்
பொருந்துமோ எனச் சினத்துடன் உதைப்பது போலும்.

நன்கு செவ்வனே திருத்தி அமைக்கப்பட்ட மெல்லிய அணிகளை அணிந்த பெண்கள் புனலில் திளைத்து ஆடுகையில் அவிழ்ந்து சரிந்த கூந்தலில் இருந்து வெளியேறிய வண்டுகள், பூங்குளத்தில் விரிந்துள்ள காவிமலரில் சென்று அமர்வது மின்னலை ஒத்தவரின் கண்களுக்கு நீங்கள் நிகராவீர்களோ எனக் கேட்டுக் கோபத்துடன் அவற்றை உதைப்பது போன்றிருந்தது.

மங்கையர் தலைப்பூவில் இருந்த வண்டுகள் அவர்கள் நீராடுங்கால் கூந்தலை அவிழ்த்ததால் கலைந்து பக்கத்தே நீரில் மலர்ந்துள்ள காவிமலரில் படிகின்றன. இதில் தற்குறிபேற்ற அணி அமையுமாறு விளக்கம் தருகிறார். கூந்தலில் படிந்திருந்த வண்டுகள், மகளிர் நீராடுவதற்காகக் குளத்தில் இறங்கியபோது அங்கே மலர்ந்திருந்த (வண்டுகள்) காவிப்பூக்களைக் காண்கின்றன. மகளிர் கண்களுக்கு அவை உவமையாகப் பேசப்படுவது நினைவுக்கு வர ஒரு சிறிதும் ஒவ்வாத இவற்றையா உவமை கூறினார்? இவ்வுவமையால்

மகளிரின் கண்களைக் குறைத்து மதிப்பிட்டதாக அல்லவா ஆகிறது என்று சினம் கொண்டு அம்மலர்களைச் சென்று உதைக்கின்றனவாம்.

மதுவைத் தேடிச் செல்வதால் மலர்களை நன்கறிந்த வண்டை ஒரு தீர்ப்புக் கூறச் செய்தமை, தீர்ப்பு சரியானதே என்பதை உணர்த்துகிறது.

பாடல் : 49

மறிந்து தூங்கிய நாவலின் கனியை ஓர் மங்கை
எறிந்து பார் மதுகரத்தினைக் கரத்தினால் எடுப்பப்
பறிந்து போதலின் துணிக்கின் கையுதறி மெய்பதறிச்
செறிந்து சூழ்தரச் சொறிந்த மைக்கனியையும் தீண்டார்.

நாவல் மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருந்த வண்டினை நாவற்கனி என எண்ணிப் பறித்தாள் ஒரு பெண். அது பறந்து செல்லவே திடுக்கிட்டு கையை உதறி மெய் பதறிய அவள், அடுத்து, உண்மையான பழத்தினையும் தொட அஞ்சினாள்.

பாம்பினை விழுதென்று எண்ணிப் பற்றிப் பின் உண்மையறிந்ததும் பயந்து போய் அதைவிடுத்து மரத்தின் உச்சிக்குச் சென்ற குரங்கு கீழே பார்த்துத் தன் வாலையே பாம்பென்று எண்ணி அஞ்சியதைப் பாரதிதாசனார் பாடுவார். அதுபோல் நாவற்பழமென்று எண்ணி வண்டைப் பற்றிய பெண் அடுத்து உண்மையான பழத்தைப் பறிக்கவும் அஞ்சும் நிலையை உமறுப்புலவர் கற்பனை செய்கிறார்.

பாடல் : 50

கரிய மைவிழி மங்கையர் பூங்குழல் காட்டில்
சொரியும் மென்மலர்த் தாதுதகள் உதிர்ந்தன சுடர்மின்
விரியும் மெல்லிழைப் பூணொடு பூண்பல மிடைந்து
பொருந் துரிசு அதிற் பொற்பொடி உதிர்வன போலும்

கரிய, மையிட்ட விழிகளைக் கொண்ட பெண்களின் பூச்சூடிய கூந்தலாகிய காட்டில் மெல்லிய மலர்களின் மகரந்தத்துகள்கள் உதிர்ந்து கிடந்தன. அக்காட்சி ஒளிபொருந்திய அணிகள் பல ஒன்றோடு ஒன்று உராய்ந்து கிடக்கும் துரிஞ்சில் பொற்பொடி உதிர்ந்து கிடப்பது போல் தோன்றியது.

சூடியுள்ள பூக்களிலிருந்து உதிர்ந்த மஞ்சள் நிற மகரந்தத்தூள் பொன்னின் துகள் தூவப்பட்டாற்போல் தோன்றுகிறது.

பாடல் : 51

பிடித்த கொம்பிலிருந்த ஓடி முட்குடக்கனி பிடித்துக்
கடித்த போதினில் காம்பு அறக்கனியுடன் கவியும்
படித் தலத்தினில் வீழ்ந்திடப் பதறி மெய் பரிதவித்துத்
துடித்துத் தன்னுயிர்க் கணவனை அணைத்து உடல் துணுக்கும்

குரங்கானது தான் பற்றியிருந்த கிளையிலிருந்து தாவி முட்புறம் கொண்ட பலாவின் கனியைப் பிடித்துக் கடித்தபோது அதன் காம்பு ஒடிந்ததால் கனிவிழ, கனியுடன் சேர்ந்து அக்குரங்கும் தரையில் விழுந்தது. அதனால் பதறி மெய்நடுங்கித் துடித்துத் தனக்கு இன்னுயிரான தன் கடுவனை அணைத்து உடல் நடுங்கிக் கிடக்கும்.

பாடல் : 52

தாறு கொண்ட பைங்கதலி தேமாப் பலாத் தருத்தேன்
ஊறு கொண்ட செங்கனி சிதறு கிடங்கிடை உகுப்பச்
சேறு கொண்டு அதிற் கிடந்து இருள் செறி கருமேதி
வேறு கொண்டு பொன்மதியின் குலமென விளங்கும்.

தார்விட்ட பசிய கதலி வாழையின் பழமும் இனிய மாம்பழமும், பலாப்பழமும், கனிந்த தேனூறும் பழங்கள் கீழே சிறிய பள்ளத்தில் வீழ்ந்து கிடந்தன. அவற்றினின்றும் வெளியேறிய தேனினால் அப்பள்ளம் சேறாயிற்று. இருள் போன்ற கரிய நிறத்து எருமையானது அச்சேற்றில் திளைத்துக் கிடந்ததால் நிறம் மாறிப் பொன் மேதிக் குலமெனத் தோற்றம் பெற்றது.

பழங்கள் கனிந்து தேனொழுகும் காட்சி சங்க இலக்கியங்களில் காணும் ஒன்று. அங்ஙனம் ஒழுகிய தேன் பல நாள் கிடந்த புளிப்பேற அதை உண்டு களித்த மந்தியொன்று கட்குடித்த களிநிலை எய்திய காட்சியை சங்கப்பாடல் ஒன்றில் காண்கிறோம். இங்கு வாழை, மா, பலா என்னும் தமிழகத்து தலைசிறந்த முக்கனிகளும் கீழே விழுந்து தேன் ஒழுகிச் சேறாக்க அதிற்புரண்டு எருமை தன் கருநிறம் மாறிப் பொன்னிறம் உற்றதாய்க் கற்பனை செய்கிறார் புலவர். பறிப்பார் இன்றிப் பழங்கள் மிகுந்து கிடப்பதைச் சுட்டி நாட்டின் இயற்கை வளமும் செல்வ வளமும் ஒருங்கே விளங்கினார்.

பாடல் : 53

கள் அவிழ்ந்த பூம்பொய்கையில் புள்ளிமை கலையத்
துள்ளு மேல்வரிக் கயல்உண்டு நாரைகலே தூங்கும்
உள்ளம் அன்புறச் சேவலின் சிறைநிழல் ஒதுங்கு
வெள் அனப்பெடை தாமரைத் தவிசில் வீற்றிருக்கும்

நாரைகள், கள்ளூறும் பூக்கள் நிறைந்த பொய்கையில் கூடியுள்ள பறவைகள் கலையுறுமாற துள்ளுகின்ற கயல்மீன்களை உண்டு தூங்கும். அன்பொடு தன் சேவலின் சிறகு நிழலில் ஒதுங்கி வெள்ளன்னப் பேடுகள் தாமரையாகிய இருக்கையில் அமர்ந்திருக்கும்.

நீரிலுள்ள வாளை மீன்கள், நீர்க்கரையில் வளர்ந்துள்ள மரங்களின் பழங்களைத் தாக்கி விழச் செய்யும் அளவு மேலே குதித்து மீள்வதாகப் பாடுதல் மரங்களிலுள்ள பறவைகள் அஞ்சிக் கலையுமாறு மீன்கள் மேலெழும் காட்சியைக் காட்டுகிறார்.

பாடல் : 54

ஏலவார் குழற்கு இடுபுகை மஞ்சினோடு இகழும்
சோலை வாய்தொறும் முக்கனித் தேன்மழை சொரியும்
ஆலை வாய்தொறும் கரும்புடைத்து ஆறு எடுத்து ஓடும்
நீல வாய்மலர் வாவிகள் பெருங்கடல் நிகர்க்கும்.

மணமிகுந்த குழலுக்கு, மங்கையர் இடுகின்ற அகில் முதலான புகைகள் மேகத்தொடு போட்டியிடுமளவு மிகுதியாகப் பரந்திருக்கும். சோலைகள் தோறும் முக்கனிகள் தேனை மழையாகவே சொரியும். ஆலைகளில் கருப்பஞ்சாறு ஆறாக ஓடும். நீல மலர்கள் நிறைந்த குளங்கள் கடலை ஒத்து ஆழமாக இருக்கும்.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே"

என இறையனார் என்ற புலவர் தன் தலைவியின் கூந்தலைக் காட்டிலும் நறுமணம் வீசும் மலர் உலகில் உள்ளதா? எனத் தும்பியைத் தலைவன் கேட்பதாகப் பாடுவர். அங்ஙனம் கூந்தலை மணமிகச் செய்ய அகில், சந்தனம் முதலிய மணப் பொருள்களைப் புகைத்தும் நறுமணங்களில் ஆடியும் மணமூட்டுவர் மகளிர். அப்புகை மேகத்தினும் மிகுந்தது. என்கிறார் புலவர்.

பாடல் : 55

தெருள் உறும்படி தேன்துளி தெறித்திடச் சிதறிப்
பொரு அலைத்திடு மாங்கனி தேங்கனிப் பொழிவே
மருமணம் பெறும் சந்து துகில் சண்பக வனத்தில்
தருவெனும் பெயர்பெறச் சிறந்து வந்திருந்தனவே.

மயக்கம் ஊட்டும் வகையில் தேன்துளிகள் தெறிக்குமாறு கீழே அவற்றைச் சிதறிக் காற்றில் ஒன்றுடன் ஒன்று மோதுமளவு நெருங்கி வளர்ந்துள்ள மாங்கனி, தேங்கனி நிறைந்த பொழிலானது மணமிகுந்து சந்தனம், அகில், சண்பக மரங்களும் நிறைந்தது. நல்ல பயன் தருவதாக இருந்தது.

பாடல் : 56

நினைக்கும் பொற்பொருளே நிந்தனை மற்றோர்
நிந்தனை சிந்தனை இலையே
இனக்கரும் சுரும்ப மதுத்துளி அருந்தும்
இவையலால் மதுப்பிறிது இலையே.

சினக்கரி முனைக்கோட்டு இளமுலைப் புல்லி
திருத்தும் பொய் அலது பொய்யிலையே
வனக்கனி கறுத்த குலைக்களவு அலது
மறுத்து ஒரு கொலைக்களவு இலையே.

இந்நாட்டில் வாழும் மக்கள் விருப்புடன் நினைக்கும் பொன்னும் பொருளுமே நிந்தனை: வேறு நிந்தனை ஏதும் அவர் சிந்தையில் இல்லை. கரிய வண்டினங்கள் மலர்களின் தேனை அருந்துவது அல்லது மக்கள் அருந்தும் மது வேறு இல்லை. சினமிகுந்த களிற்றின் கூரிய கொம்பொத்த இளமுலைகளையுடைய மகளிரின் ஊடலைத் தீர்க்கச் சொல்லும் பொய் அல்லது வேறு பொய் இல்லை. சோலையில் கனிகள் கறுத்த குலைக்களவு தவிரக் கொல்லையும் களவும் இல்லை.

'வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர் செருநர் இன்மையால்
உண்மை இல்லை பொய்யுரை இலாமையால்'

எனக் கம்பர் பாடியது போலவும்

'ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்'

என்ற சிற்றிலக்கியக் கற்பனை போலவும் நாட்டுப் படலத்தின் இறுதியில் குற்றமற்ற சமுதாயம் ஒன்றைக் காட்டுகிறார் புலவர். மற்றவற்றை ஏற்பினும் கள்ளுண்டு களித்த காட்சிகளைக் காட்டிய புலவர் 'மதுப்பிறிநிலையே' என்பதை ஏற்றல் கடினம். கற்பனையால் விளையும் இத்தகு கருத்து முரண்பாடுகள் எல்லாக் காப்பியங்களிலும் காணலாம் போலும்.

செய்தித் தொகுப்புகள்

தேர்வில், வினாக்களுக்கு விடையளிக்க உதவும் வகையில் நாட்டுப் படலச் செய்திகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

1) மழைக்காட்சியைப் புலவர் எவ்வாறு கூறுகிறார்?

நபியவர்களின் புகழ் உலகலொம் நிரம்பியதுடன் வானிலும் பரவினாற் போல் மேகம் கடல்நீரை உண்டு வானிற் பரவுதல்.

உலகம் திடுக்கிட இடித்து — கண் விழிப்பது போல் மின்னி — எண் திசையும் காலூன்றி — மலையும் நிலமும் மறைத்துப் பெய்தல்.

ஆலங்கட்டிகளும் இந்திர கோபப் பூச்சிகளும் அணியாய்ச் செல்லல், முத்து மாணிக்கம் உதிர்வதை ஒத்திருத்தல்.

2) குறிஞ்சி நிலத்தில் மழை எவ்வாறு பொழிந்தது?

குளிர்க்கொடுமை— கொடுமை விலங்குகள் தம்முள் பகை நீங்கி ஒன்றாய்க் கிடத்தல்—பல்வேறு விலங்குகள் குளிரால் நடுங்குதல்—வெள்ளத்தால் பல்வேறு மரங்கள் சாய்தல்—விலங்குகளை ஒட்டிப் பறவைகளைக் கலைத்துப் பழங்கள் சிதற மரங்களைச் சாய்த்தல்—குறவர் வீடும் பயிரும் பரணும் பறையும் அழிதல்—குறவர் அஞ்சி ஓடல்—மலையில் அருவியாய் விழுதல்—விலைமகள் போல் மலையரசின் செல்வம் அனைத்தும் கவர்ந்து ஓடிவரல்—நுரையாடையும், மணற்கூந்தலும் கயல்விழியும் அலைக்கரமும் புற்புதத்தனமும் சுழிக்கொப்பூழுமாய் நதி மகளிரெனத் தோன்றல்—மணிகள் நிறைந்த பையுடன் வணிகம் கருதிக் கடல்மேற் செல்லும் வணிகரை ஒத்திருத்தல்.

3) பாலை நிலத்தில் மழைபொழிந்த வகை யாது?

எயிற்றியர் வயிற்றலடித்து அழுமாறு — கைக்குழந்தையும் சிறாரும் அஞ்சியோடப் பெய்தல்.

4) முல்லை நிலத்தில் மழை நீர் எங்ஙனம் பாய்ந்தது?

பால் தயிர் நெய்க் கீலங்கள் உருளல்—பட்டியும் குட்டியும் சிதறல்—ஆய்ச்சியர் ஆடை, புல்லாங்குழல், குடுக்கை, தடுக்கு ஆகியன கொண்டோடல் — ஆநிரைகள் அடித்துச் செல்லுதல்—மாற்றார் போல் செல்வத்தைக் கவர்ந்து செல்லல்.

5) மருத நிலத்தில் மழைநீர் பெருகியோடியது எவ்வாறு?

ஆறுகள் நுரைபுரள ஓடல்—அன்னங்கள் அகல, ஏரியும் பிற நீர் நிலைகளும் நிறைதல்—உழவர்கள் ஆற்று நீரைக் குளத்தில் பாய்ச்சுவது, காட்டு யானைகளை அவற்றைப் பிடித்தற்குரிய குழிகளில் வீழ்த்துவது போல் இருத்தல்—மழை நீர் ஒன்றே பல்வேறு நீர் நிலைகளில் இருப்பது, உயிர் பல்வேறு உடல்களில் பல்வேறு வடிவில் இருப்பது போல அமைதல்—ஏரியை உடைத்துக் குளம் தகர்த்து அணை முறித்து மக்கள் வாழிடத்திற் புகுந்து பயிர்க் கொல்லையிற் பாய்ந்து கருப்பாலன சாய்த்துக் கழனியை உழக்கி வாழை தள்ளி மருத நிலமெள்கும் நிரம்பல்—நீர் நிலைகளின் அலையோசையும், அஞ்சியோடும் அன்னங்கள் சிறகடி ஓசையும் மருதநீர் பாயும் ஓசையும் மிகுந்திருத்தல்.

6) உழவர் உழுத காட்சியைப் புலவர் எவ்வாறு பாடுகிறார்?

மழை முடிந்ததும் பறையொலித்தல், உழவர்கள் ஒன்று கூடல்—கள்ளுண்டு பணி தொடங்கல்—புயம் குலுங்கக் கொட்டு வாங்கிக் கரண்கள் வெட்டல்—வரம்பு கட்டுதல்—அடைத்தல்—நண்டுகள் சிதையச் சங்குகள் நெரிய—வலம்புரிகளினின்றும் முத்துதிரக் காளைகளை ஏரில் பூட்டி உழுதல்— தாமரை மொட்டு உடைந்து தேன் தெறிக்க, குவளை சாயக் குழுதமலர் அழிய, வண்டுகள் பறந்தோடக் கழனிகளை நன்றாக உழுது சேறாக்குதல்.

7) உழு தொழிற் காட்சியைச் சீறாப்புராண வழி விளக்குக.

வண்டுகள் மரங்களில் வீழ்ந்து ஒலி செய்தல்—உழவினால் மலர்ச் செடிகள் அழிந்ததால் தமக்கு வானின்றி வேறிடம் இல்லை என்று புலம்புதல் போலிருத்தல்—

மலர்நிறை நீர்க்கிடங்கிற் பதிந்துள்ள எருமையின் கரிய காலிற் பதிந்துள்ள சங்குகள், பாம்பினால் கவ்வப்பட்ட மதிபோன்று இருத்தல்.

அ) நெல் விதைப்பு : க்திரவன், குலதெய்வம், நிலமகள் ஆகியோர் வணக்கம்—பொன்மழை பொழிவது போல் விதை நெல் தூவுதல்.

ஆ) பாலும் தேனும் பாய்தல்: எருமைகள் தாமாகச் சொரிந்த, பாலும் வாழை கனிந்து உகுத்த சாறாகிய தேனும், பலாவின் தேனும் வரப்பினைத் தகர்த்துப் பாய்தல.

இ) நாற்று நடல்: பண்புடையோர் குடியொடு கிளைத்திருத்தல் போல விதைகள் முளைவிடல்— உழத்தியர் நாற்றினைப் பறித்து முடிகட்டல்—மார்பிற் சேறு தெறிக்க வரிசை வரிசையாக நாற்றுநடல்.

ஈ) குலவியிடல்: மரகதமாலை புறங்கழுத்தில் அசைய இதழில் கைகுவித்து குலவையிடல்.

உ) அறுவடை செய்தல் : பூச்சூடி அரையாடை இறுக்கிக் கட்டி மதுப்பருகி, அரிவாளை எடுத்துப் பயிரை அரிதல்—அரிந்த பயிரைக் கட்டாகக் கட்டி உழத்தியர் தூக்கிச் செல்லல்—சூட்டி களத்திற்குக் கொண்டு செல்லல்—வானளாவிய மலைகள் போல் நெற்போர் குவிந்திருத்தல்—களிறொத்த காளைகளைப் பூட்டிச் சூட்டித்து நெல் அரித்தல்—வண்டிகளில் ஏற்றி நெல்லை வீடுகளில் சேர்த்தல் — கடலைப் போலப் பேரோசை எழல்.

8) மருதநில இயற்கைப் புனைவு அல்லது புலவரின் கற்பனையாற்றல்

தாமரையின் தேனருந்தி வண்டுகள் பாடல்—மயில்கள் நீல ஆலவட்டமெனத் தோகை விரித்தாடல்—மகளிர் காற்சிலம்பொலி கேட்டுப் பெடை அன்னம் மருளல்—சேவற் குரலென மயக்கம்—தாமரைமுகமாகக் குவளை விழியாக அரும்புகள் மார்பாக, பச்சிலைகள் ஆடையாகக் குளங்கள் மகளிரை ஒத்தல்—கரையில் உதிர்ந்த பாடலம் சண்பக மலர்கள் மேல் வண்டுகள் கிடந்தமை பொற்கரையினைப் பற்றி அறைந்த சுள்ளாணி போல் தோன்றல்—குளத்தில் தெரியும் நிலவின் பிம்பம் நீரில் ஓடமெனத் தோன்றல்—நீராடும் மகளிரின் முகம் தாமரையும் குவளையுமெனத் தோன்றல்—நீர் மேல் விரிந்து கிடந்த கூந்தல் கடலிடை மேகமெனத் தோன்றல்— வண்டினை நாவற் கனியெனப் பறித்து அது பறந்தோட அஞ்சியவள் உண்மைக் கனியையும் பறிக்காது விடல்—தான் பற்றிய பலாவின் கனி, காம்பொடிந்ததால் தானும் கீழே விழுந்த மந்தி அஞ்சி கடுவனை அணைத்துக் கொள்ளல்—முக்கனிகள் உகுத்த சாறு சேறாய்க் கிடக்க அதிற் புரண்ட எருமை நிறம் மாறிப் பொன்மேதிக் குலமெனத் தோன்றல்—மரத்துப் பறவைகள் கலையுமாறு நீர் மேல் துள்ளும் கயலுண்டு நாரைகள் தூங்கும்—அன்னங்கள் தம் சேவலின் நிழலில் தூங்கும்—மகளிர் கூந்தலுக்கு இடும் புகை மேகமெனப் பரவும்—கருப்பஞ்சாறு ஆறாக ஓடும்—குளங்கள் கடலென நீர் நிறைந்திருக்கும்.

9) உவமையணி அமைந்துள்ள பாடல்கள் சிலவற்றை விளக்குக.

1) நயினார் கீர்த்தி போல் மேகம் வானிற் பரவுதல். (1)

2) முத்தும் மாணிக்கமும் உதிர்வது போல் ஆலங்கட்டிகளும் இந்திர கோபப்பூச்சியும் அமைதல் (3)

(3) விலைமகள் போல நதி மலை விளை பொருள்களைக் கொண்டு வரும் (9)

4) நதி, மகளிரைப் போலிருக்கும் (11)

5) நதி வாணிகனைப் போன்றது (12)

6) வேற்றரசரைப் போல் நீர் ஊரின் வளம் கவரும் (14)

7) நீரைக் குளத்தில் பாய்ச்சல் யானையைக் குழியில் பிடிப்பது போலும் (16)

8) நீர்நிலைகள் பலவற்றில் நீர் இருப்பது, பல உடல்களில் உயிர் நிற்பதை ஒக்கும (17)

9) எருமையின் காலிற்பதிந்த சங்குகள் பாம்பினாற் கவ்வப்பட்ட மதி போலும் (25)

10) நெல் தூவுதல் பொன்மழை பொழிவது போலும். (26)

11) பண்புடைச் செல்வர் சுற்றத்தோடு கூடியிருத்தல் போல் நாற்றுகள் பல்கி வளரும் (28)

12) உழத்தியர் முகத்தில் படிந்த சேறு மதியின் மறுரொக்கும்.

நந்திக் கலம்பகம்

முன்னுரை

'நந்தி' என்பது ஒரு பல்லவ மன்னனின் பெயர். 'கலம்பகம்' என்பது ஒரு தமிழ் நூலின் பெயர். நந்திக் கலம்பகம் என்னும் தொடர் 'நந்தியானது கலம்பகம் 'என விரியும். அது ஆறாம் வேற்றுமைத் தொகைச் செய்யுட்கிழமை. செய்யுட்கிழமை பாடியவனது கிழமையும் பாடப்பட்டவனது கிழமையும் (கிழமை— உரிமை) இத்தொடரை 'நந்தியைப் புகழும் கலம்பகம்' என விரிப்பின் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையாம். 'நந்தியின் மேல் பாடப்பட்ட கலம்பகம்' என விரிப்பின் ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையாம்.

நந்திக் கலம்பகம் கி.பி. 9—ம் நூற்றாண்டில் காஞ்சியில் அரசாண்ட மூன்றாம் நந்திவர்மன் என்ற பல்லவ மன்னன் மீது பாடப்பெற்ற ஒரு தனி நூலாகும். 'இந்நூல் பல' வகையிலும் சிறப்புடையது. முதற்சிறப்பு இது தமிழ்மொழியில் முதன்முதலாகத் தோன்றிய கலம்பகம் என்பது. பாட்டியல் கூறும் இலக்கணமே இதைக் கொண்டு எழுந்ததுதான். 2—வது சிறப்பு இக்கலம்பகத்துத் தோற்றுவாயாக நெடுங்காலமாய் இலக்கிய உலகில் வழங்கிய கதையாகும். மூன்றாவது இந்நூலின் பாட்டுடைத் தலைவனான நந்திவர்மனின் சிறப்பாகும். நான்காவது இச்சிறு நூலின் இணையற்ற கவிச்சுவையாகும் என இந்நூலின் நலம் பாராட்டுவர் அறிஞர் மு.அருணாசலம்.

நூல் – முதற் கலம்பகம்

பிரபந்த இலக்கணம் கூறும் நூல்கள் பாட்டியல் எனப்படும். கிடைக்கின்ற பாட்டியல் நூல்களுள் காலத்தால் பழமையானது பன்னிரு பாட்டியல். இது 10—ம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர் அறிஞர். இந்நூலின் 'இனவியல்' என்னும் பகுதியில் 81 பிரபந்தங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள் ஐந்தாவது கலம்பகம். அதன் இலக்கணம் இரண்டு நூற்பாக்களில் சொல்லப்பட்டுள்ளது.

சொல்லிய	கலம்பகம்	சொல்லில்	ஒருபோகு
முதற்கண்	வெண்பாக்	கலித்துறை	புயமே
அம்மனை	ஊசல்	யமகம்	களிமறம்
சிந்துக்	காலம்	மதங்கு	வண்டே
கொண்டல்	மருள்சம்	பிரதம்	வெண்துறை
தவசு	வஞ்சித்	துறையே	இன்னிசை
குறமே	அகவல்	விருத்தம்	எனவரும்
செய்யுட்	கலந்துடன்	எய்திய	அந்தம்
ஆதி	யாக	வரும்என	மொழி (213)

நூறு	தொண்ணூற்	றைந்துதொண	ணூறே
ஒப்பில்	எழுபது	அமைச்சிய	லோர்க்குச்
செப்பிய	வணிகர்க்கு	ஐம்பது	முப்பது
வேளா	ளர்க்குளன	விளம்பினர்	செய்யுள்

முதல் நூற்பா கலம்பக உறுப்புகளையும் இரண்டாவது நூற்பா பாடல் தொகைகளையும் வரையறுக்கின்றன. உறுப்புகள் என்ற இடத்துப் பொருளும் யாப்பு விசேடமும் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளன. புயம், அம்மனை, ஊசல், களி, மறம், சித்து, காலம், மதங்கு, வண்டு விடு தூது, மேக விடு தூது, சம்பிரதம், தவம், குறம் என்னும் பதினேன்றும் பொருளால் வந்த உறுப்புகள். ஒருபோகு, வெண்பா, கலித்துறை,யமகம், வெண்துறை, வஞ்சித்துறை, இன்னிசை வெண்பா அகவல் விருத்தம் என்பன யாப்மமைதிகள் (ஒரு பாட பேதத்தில் மடக்கும் சொல்லப்பட்டுள்ளது) பொதுவாக கலம்பகங்கள் யாவும் ஒரு போகு கொச்சகக் கலிப்பாவில் தொடங்கி அந்தாதியாக மண்டலித்து வருவதையே இயல்பாகக் கொண்டவை. யாப்பமைதி கலம்பகம் என்ற பெயருக்கேற்ப பல்வகைப் பாக்களும் பாவினங்களும் தொகுத்து அமைக்கப் பெறுவதாகும். ஆகவே, அவற்றை உறுப்பு எனக் கருதுதல் பொருந்தாது.

நெருங்கிய கலம்பமாகிய மாலை' (பெரும்பாண் 174, நச். உரை) என்பவற்றைக் காண்க. கதம்பமென்பது இங்ஙனம் திரிந்தது போலும். "இப் பிரபந்தத்தில் பலவகைப் பொருள்களும் அகப்புறத் துறைகளிற் பலவும் பல வகை யாபுக்களும் விரவிக் கலந்தமையின் இப்பெயர் வந்தது என்பது அறிஞர் உ.வே.சா அவர்களின் கருத்து. 'கதம்பம் என்பது இப்பொழுதும் உலக வழக்கில் திரியாமல் வழங்க, நூல் வழக்கில் மட்டும் திரிந்து வழங்கியது என்பது பொருந்தியதன்று.

இதனைக் கலம்ப அகம் எனப் பிரித்துக் கலப்பு என்பது கலம்பு என மெலித்தல் விகாரம் பெற்றது எனக் கூறுவர் சிலர். 5. 'மென்தொடர் குற்றியலுகரச் சொற்கள் வன்றொடர் குற்றியலுகரமாகத் திரியும் என்பது விதியே அன்றி வன்தொடர்க் குற்றியியலுகரச் சொல் மென்தொடர்க் குற்றியலுகரமாகத் திரிதற்கு விதி இல்லை. (கலப்பு - வன்தொடர்க் குற்றியலுகரம்) கலம்பகம் என்ற சொற்றொடரில் மெலிந்தல் விகாரம் வருவதற்கு இடமே இல்லை. இனிக் கலப்பு - பல உறுப்புக்களும் கலந்தவை : அகம் - தன்னிடத்தே உடையது என்றால் அது இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும் வேறு எந்தத் தொடரிலும் பொருந்தியதாக இல்லை. இனி இச்சொற்களை முன்பின்னாக மாற்றி அகம் - தன்னுள்ளே, கலப்பு - பல உறுப்புக்களும் கலந்தவை உடையது என்றால் கலப்பு என்பது தொழிற் பெயரே அன்றி வினைமுற்று அன்று : சொற்கள் முன்பின்னாக மாறியதற்குக் காரணம் வேண்டும்.

இனிச் சிலர் காலம், பன்னிரண்டு மரக்கால் கொண்டது பகம் கடவுளின் ஆறு குணங்களைக் குறிக்கும். ஆதலால், கலம்பக உறுப்புக்கள் 18 என்று பின்வந்த இலக்கணங்கள் கூறும்.

'வைக்கும் புயதவம்வண்டு அம்மனை பாண்மதங்கு
கைக்கிளை சித்துஊசல் களிமடர்க்கூர் — மிக்கிமறம்
காலைம் தழைஇரங்கல் சம்பிரதம் கார்தூது
கோலும் கலம்பகத்தின் கூறு'

என்ற வெண்பா பாட்டியல் 18 உறுப்புகளையும் கூறுகிறது. இதில் உள்ள பாண், கைக்கிளை, மடக்கு, தழை, இரங்கல் என்னும் உறுப்புகள் பன்னிருபாட்டியலுள் சொல்லப் பெறவில்லை. இங்கும் மடக்கு என்பது ஒரு செய்யுட் சொல்லேயன்றிப் பொருளாள் வரும் உறுப்பன்று. மடக்கை நீக்கியே 18 உறுப்புகள் உள்ளன. பன்னிரு பாட்டியல் கூறும் குறம் என்பது பிற்காலத்தில் குறவஞ்சி என்ற பிரபந்தமாகப் பெரிதும் வளர்ந்து விட்டது; வெண்பாப் பாட்டியல் இதைக் குறிப்பிடவில்லை. இன்னும் பிற்காலத்தில் புலவர்கள் தத்தம் மனம்போல் மிகுதியான உறுப்புகளைச் சேர்த்து பாடியிருக்கிறார்கள்.

இரண்டாவது நூற்பர்; கலம்பகம் எத்தனைப் பாடல்கள் உடையது என்பதைக் கூறுகிறது. தெய்வம் 100; முனிவர் 95; அரசர்90; அமைச்சர் 70; வணிகர் 50; வேளாளர் 30; ஆனால், இவ்வெல்லை என்றும் ஆட்சியில் இருந்ததில்லை. கலம்பகத்திற்குரிய பாட்டியல் விதிமுறைகள் பல கலம்பகங்களில் செம்மையாகப் பின்பற்றப்படவில்லை என்பதைக் காண்கிறோம் என்பர் ந.வீ.செயராமனி.

கலம்பகம் என்ற சொல்

கலம்பகம் என்ற சொல் பல பொருட் கலப்பை உணர்த்தும் அது 'கதம்பம்'என்ற வடசொல்லின் திரிபு எனக் கூறுவர். "கலம்பகமென்பதற்குப் பல வகைப் பொருள் கூறப்படினும் பலவகை மலர்களும் கலந்தமைந்த கலம்பக மாலையென்று பொருள் கொள்வதே பொருந்தும் 'களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த அலங்கலத் தொடையில் (திவ். திருப்பள்ளி 5) பல பூக்கள் கலந்து பன்னிரண்டும் ஆறும் பதினெட்டு என்பதைக் குறிப்பதால் உணர்த்தி பதினெட்டு உறுப்புக்களை உடைய நூலுக்குக் காரணப்பெயராயிற்று. கலம்பகம் என்பது என்பர் 6) அவ்வாறே பார்க்கின், பிற்காலத்து எழுந்த கலம்பகங்களில் பதினெட்டு உறுப்புகள் உள்ளன. மிகப் பழமையான நந்திக் கலம்பகத்தில் பத்து உறுப்புகளே உள்ளன. பழைய பாட்டியல் நூலான பன்னிரு பாட்டியலிலும் பன்னிரண்டு உறுப்புக்களே சொல்லப்பட்டுள்ளன. பதினெட்டு உறுப்புக்களைக் கொள்ளாத காலத்திலேயே 'கலம்பகம்' என்று பெயர் வழங்கிற்று என்றால், அப்பெயர் பதினெட்டு உறுப்புகளை குறித்தது என்றால் பொருந்தாது.

வித்துவான் சோ. அருணாசல தேசிகர் (கலம்பகம்) என்னும் சொல்லுக்குக் கூறும் பொருள் விளக்கம் வருமாறு பாட்டியலில் சொல்லப்படும் நூல்களில் இரண்டு ஒன்றின் பெயர் மட்டுமே பொருள் எளிதில் விளங்காத நிலையில் உள்ளது பலவகைப் பொருளும் பாடல்களும் கலத்தல்' என்னும் பொருளில் புலவர்கள் ஆக்கிய ஒரு திரிசொல் என இதனைக் கொள்ளலாம். அல்லது, 'கலம் - அணிகலன்களின் பகம் - அழகு அல்லது தொகுப்பு' என்னும் பொருளில் இடுகுறியாக வைத்த பெயர் என்றும் கொள்ளலாம். 7.

பாடல் தொகை

நந்திக் கலம்பகத்தின் பாடல் வரையறை குறித்துச் சில சொல்லத்தக்கன. பின் வந்த இலக்கணத்தை வைத்துப் (தேவருக்கும் என்ற பாடல்) பாதிப்பாளரான கோபாலையர் (1927) இதில் பாடல்கள் 90 இருக்க வேண்டும்: 89,90 இரண்டும் இல்லை. பழைய பதிப்பிலும் கையெழுத்துப் படிகளிலும் மிகைப் பாடல்கள் பல உள்ளன; என்று எழுதியிருக்கிறார். 90 என்ற பாடல் வரையறையை எஸ்.ராஜம் பதிப்பும் ஒப்புக்கொண்டே

பேசுகிறது. 1872 பதிப்பில் எந்த வரையறையும் கணக்கிடப்படவில்லை : ஏட்டில் கண்டபடி தொடர்ந்து 110 பாடல்கள் அச்சிடப்பட்டுள்ளன. பழம் பதிப்பில் உள்ள வாழும் நாளிலை' என்ற ஒரு பாடல் கலம்பகத்துக்கு உரியதன்று. இதை விலக்கி, இறுதியில் 'வாரூரும் மென்முலை என்ற ஒரு பாடலை ஐயர் சேர்ந்திருக்கிறார். வேறுபாடு இவ்வளவே. மிகை என்று ஒரு பாடலை சிலவற்றில் அந்தாதித் தொடையும் காணப்படுகின்றது. நந்திக் கலம்பகம் பாடியவருக்கு 90 எனறு வரையறை பொருந்தாது. மிகை என்று சொல்லப்படும் பாடல்களின் சிறந்த கவிச்சுவையைப் பார்க்கும்போது இவையும் நூலுக்கு உரியன என்றே கருத வேண்டும். 110 பாடல்களும் ஆசிரியரே பாடியிருக்கலாம். ஒருகால் சில இடங்களில் அவரே அந்தாதி முறையை மேற்கொள்ளவில்லை போலும்.

நூலை 88 பாடல்களில் முடித்து முற்கூறியபடி ஏனையவை மிகைப்பாடல் என்றே பதிப்புகளில் காட்டப்பட்டுள்ளன. பாயிரத்தில் 'மும்மைப் புவனம்' (பொருப்பரையன மடப்பாவை 'கரியின் முனம் வரும்' 'திருவாணியை குருவை' எனத் தொடங்கும் நான்கு பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றுள் இரண்டாம் பாடலில்தான் நந்தியின் பெயர் சுட்டப் பெறுகிறது; மற்றவற்றில் இல்லை.

பிற்காலப் பிரபந்தங்களில் 100-க்கு மிகுதியான செய்யுள் உடையனவும் உள்ளன. உதித்தேவர் இயற்றிய திருக்கலம்பகம் 110 பாடல் உடையது. (15ம் நூற்றாண்டு) ஆமாத்தூர் (14—ம் நூற்றாண்டு) முதலியனவும் 100-க்கு மிகுதியான பாடல்கள் உடையன; முனிவர்க்கு 95 என்று கூறியிருக்க சிவஞானபாலைய தேசிகர் கலம்பகம் 63 பாடலே பெற்றிருக்கிறது பாட்டுடைத் தலைவர்.

நந்திக் கலம்பகம் வரலாற்று நாயகனான ஓர் அரசனை நேரே உடன்காலத்தில் புகழ்ந்து பாடப்பட்ட ஒரு கலம்பகம். பிற்காலத்தில் தெய்வத்தை புகழ்ந்து பாடப்பெற்ற கலம்பகங்கள் மிகுதி. சமயத் தலைவர்களையும் ஆசாரியரையும் தெய்வமாகக் கருதி பாடப் பெற்ற பிரபந்தங்களும் உள்ளன. இவையும் 100 பாடல்களே கொண்டவை. எடுத்துக்காட்டு; ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் (11—ம் நூற்றாண்டு) தத்துவராயர் பாடிய ஞானவினோதன் கலம்பகம் (15—ம் நூற்றாண்டு) மீனாட்சி சுந்தரம்பிள்ளை பாடிய அம்பலவாண தேசிகர் கலம்பகம் முதலியன. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் அபூர்த்தியான நூல் 49 முதலியன தெய்வத்தின் மீது பாடப்பெற்றவை. பாடப்பெற்ற தெய்வங்கள் ; சிவபிரான், திருமால், முருகன், அருகன், ஆகியோர் 17-18 நூற்றாண்டுகளில் அரசியல் தலைவர் மீது பாடப்பெற்ற கலம்பகங்களும் பல.

கலம்பக உறுப்புகள்

நந்திக் கலம்பகமே முதற் கலம்பகமாதல் பற்றி உறுப்புகளைக் குறித்த சிறு விளக்கமும் இங்கு தரப்படுகின்றது. பின்வரும் உறுப்புகள் நந்திக் கலம்பகத்தில் காணப்படும் உறுப்புகள்.

1. **ஒரு போகு :** இது உறுப்பன்று, யாப்பு விகற்பமே.

2. **தூது :** பிரிவு நிலையில் தலைவி தன் ஆற்றாமையை தலைவனுக்கு உணர்த்துமாறு உயர்நிலை பொருளையும் அஃறிணை பொருளையும் விடுத்தல். பிற்காலத்தில் இப்பெயரால் தனிப் பிரபந்தங்கள் எழுந்துள்ளன. தூது விடுவதற்குரிய பொருள்கள் பத்து என்பது பிற்கால இலக்கணம். அவற்றுக்கும் மிகுதியான பொருள்களும் பிரபந்தங்களும் காணப்படும் இங்கு குருகுவிடு தூது (பா.3) மேகவிடு தூது (மிகை. 17) இரண்டு காணப்படுகின்றன.

3. **புயவகுப்பு :** தலைவனுடைய புயங்களின் ஆற்றலை வருணித்தல்: அவை இன்னின்ன வெற்றிகளைக் கொண்டன என்று சுருக்கியுரைத்தல் (பா.7)

4. **இரங்கல் :** தலைவனைப் பிரிந்து தனித்துறையும் தலைவி ஆற்றாமையால் கடல், சுழி, புள் முதலியவற்றை நோக்கி இரங்கிக் கூறுவது. இங்கு வாடை கண்டு இரங்கல் (பா.8,9,59,72,73,88)

5. **மடல் :** தலைவி மீது காதல் கொண்ட தலைவன் மடல் கொண்டுதான் அந்நோயை வெற்றிகொள்ள முடியும் என்று முடிவு செய்தல் (பா.18) இதற்குமுன் மடற் பிரபந்தங்கள் தனியே இருந்தன. இருப்பினும் பின்னை இதை ஒரு கலம்பக உறுப்பாக கருதியில்லை.

6. **ஆற்றுப்படை :** பாடல்—23 இவ்வாறு கருதத்தக்கது.

7. **ஊசல் :** 'ஆடாமோ ஊசல்' என்று மகளிர் பாடுவது (பா—29) இந்நூற்றாண்டிலேயே மாணிக்கவாசகர் திருவாசகத்தில் 'திருப்பொன்னூசல்' என்று ஒரு பதிகமே பாடியிருக்கிறார்.

8. **காலம் :** பருவ நிகழ்ச்சிகளைக் கண்டு அவற்றின் தன்மை நோக்கி பிரிந்திருக்கின்ற தலைவி 'காலம்' என்ற அடிதோறும் பாடி இரங்குகின்ற பாடல். இளவேனிற் காலம் (பா.56) கார்காலம் (மிகை 11) முதுவேனில் (மிகை 12).

9. **சம்பிரதம் :** இந்திர சால வித்தை வல்லவன் ஒருவன் தன் பெருமையை தானே பாடுதல் (பா.64)

10. **மதங்கு :** இசைக்கும் கூத்துக்கும் உரியது மதங்கர் குலம் இரு கையிலும் வாளேந்தி இக் குலமகளிர் சுழன்று ஆடுவர். மதங்கியின் கூத்தைக் கண்டு காமுற்ற ஒரு தலைவன் பாடுவது. (பா.70)

11. **மறம் :** ஒரு மறவர் குலப் பெண்ணை மணம் புரிய விரும்பி அரசன் ஒருவன் தூது அனுப்ப அம் மறவர் குடியினர் மணம் மறுத்து அரசனை இகழ்ந்து பேசி தூதனை அனுப்பி விடுவது. (பா.70)

12. **பாணன் :** தலைவனது தூதாக வந்த பாணனைத் தலைவி பழித்தல். (மிகை 13)

இவ்வாறு ஆராயும்போது இக்கலம்பகத்தில் காணலாகும். உறுப்புகள் 10 (ஒரு போகு நீங்கலாக) பிற பாடல்கள் அகத்துறையிலும் நந்தியின் வெற்றி, கொடை, புகழ் ஆகியவற்றைக் கூறுவன புறத்திணையிலும் அமைந்துள்ளன. பிற்காலத்தில் எண்ணற்ற

புது உறுப்புகளைப் புலவர்கள் படைத்துள்ளனர். எவ்வுளூர் ராமசாமி செட்டியார் தாம் இயற்றிய திருவிடை மருதூர் கலம்பகம் திருக்காளத்திக் கலம்பகம் முதலியவற்றில் மிகுதியான உறுப்புகளை அமைக்கிறார். யாவும் ஒரு பெண்மீது காதல்கொண்ட தலைவன் கூற்றாகவே இருக்கும். பிற்கால உறுப்புகளில் சில; இடைச்சியார், கீரையார், கொற்றியார், பிச்சியார், யோகினியார், வலைச்சியார் முதலியன. சிலேடைகளும் பல காணப்படும். 'கலம்பகத்திற்கு இரட்டையர்கள்'எனப் பெயர்பெற்ற இரட்டைப் புலவர் தமது தில்லைக் கலம்பகம். திருவாமாத்தூர்க் கலம்பகம் என்ற இரண்டிலும் கீரையார் தவிர ஏனைய உறுப்புகளைப் பாடியிருக்கிறார்கள்.

நூலின் வரலாறு

தொண்டை மண்டல சதகத்தை உரை எழுதிப் பதிப்பித்த சி.கு. நாராயணசாமி முதலியார் இரண்டு சதகப் பாடல்களை விளக்குமிடத்து நந்திக் கலம்பகத்தின் தோற்றுவாய் பற்றிய இரு வரலாறுகளைக் குறிப்பிடுகின்றார். இரண்டிலும், தமிழ்ச்சுவை தேருகின்ற சிறந்த கலைப்பண்புடைய நந்திவர்மன் தமிழுக்காகவே தெரிந்து தன் உயிரைக் கொடுக்கிறான் என்பதே பொருள்.

நந்திவர்மன் சக்கரவர்த்தியாய் இருந்த காலத்தில் அரசைப் பறிக்க வேண்டும் என்ற தீய ஆசை கொண்ட தம்பி ஒருவன் இருந்தான். போரிட்டு அரசைப் பெற முடியாத போது அவன் சூழ்ச்சியினால் தமையனை மாய்க்கக் கருதினான்.'அறம் பாடுதல்' (பாட்டுடைத் தலைவன் அழிதலைக் கருதி தீய சொற்களை புணர்த்தும் தீய பொருத்தங்களை அமைத்தும் பாடும் பாடல்) என்று சொல்லுகின்ற முறையில் வசைக்குறிப்புகளுள் தன்னகத்தே கொண்ட பல பாடல்களைக் கொண்டு ஒரு கலம்பகம் பாடுவித்தான். அதை இசையோடு பாடவல்ல ஒரு புலவனுக்கு கற்பித்து நந்தியின் அந்தப்புரச் சுவர் ஒன்றில் துளை செய்து வெளியே இருந்து புலவன் இனிமையாகப் பாட நந்தி கேட்குமாறு முழுவதையும் கேட்கும் எண்ணம் உடையவன் ஆனான். மறுநாள் இரவு வீதியில் சென்றபோது இதே பாட்டை அத்தம்பி தன் தாசியைக் கொண்டு பாடிக் கொண்டிருக்க செய்தான். கேட்டுக் கொண்டே சென்ற நந்தி மறுநாள் அவரை தன் அவைக்கு அழைத்து விசாரித்த போது அவள் இது கலம்பகப் பாட்டில் ஒரு பாட்டு என்றும் கலம்பகம் நூறு பாடல் கொண்டது என்றும், கேட்பதனால் மயானத்தளவும் நூறு பந்தர் அமைத்து மயானத்தில் சிதையடுக்கி சிதையின் மேல் நந்தியின் தம்பி சொல்லிக் கொடுத்திருந்தபடி சொன்னான். அப்படியே அரசன் அதற்கு ஆவன செய்து அமைச்சர் ஆகியோர் தடுத்தும் கூடக் கேளாமல் சிதை மேலிருந்து கேட்டான். அவன் ஒவ்வொரு பாடலாகப் பாடிவர ஒவ்வொரு பந்தராக எரிந்து சாம்பலாயிற்று: 100-வது பாடல் நந்திவர்மன் உலகத்து பொருள்கள் அனைத்தையும் கடைபோகப் பெற்று விட்டான் . தனக்கு இனி யாது கதி என்று கேட்பது போல் அமைந்திருப்பது.

வானுறு மதியை அடைந்தது உன் வதனம்
வையகம் அடைந்தது உன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுஉன் வீரம்
கற்பகம் அடைந்தது உன் கரங்கள்

தேனூறு மலராள் அரியிடம் சேர்ந்தாள்
செந்தழல் புகுந்ததுஉன் மேனி
யானும் என் கலியும் எவ்விடம் புகுவேம்?
எந்தையே நந்தி நாயகனே!

இதைக்கேட்ட நந்தி இவ்வளவு சிறந்த கவி இன்பம் அனுபவித்த பின் வாழ்க்கை நிறைவு எய்தியதாகக் கருதி சிதைக்கு தீயிடுமாறு கட்டளையிட்டான். சிதை பற்றியெறியவே மன்னன் இறந்து போனான். இந்த வரலாற்றை தொண்டை மண்டல சதகம் (31) "செஞ்சொற் கலம்பகமே கொண்டு காயம் விட்ட தெள்ளாறை நந்தி" எனக் குறிப்பிடுகிறது. சிவஞான சுவாமிகள் இக்கதையை தமது சோமேசர் முதுமொழி வெண்பாவில் 'வில்லேருழவர் பகை கொள்ளினும்" சொல்லேருழவர் பகை கொள்ளற்க" என்பதற்கு உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார். 'நந்திக் கலம்பகத்தால் மாண்டகதை நாடறியும்" என்பது அவர் வாக்கு.

மற்றொரு வரலாறு பின்வருவது ; நந்திவர்மன் தந்தையாகிய நந்திவர்மனுடைய முறை மகன் அல்லன்; பரத்தையால் பிறந்த மகன் என்பர். இவனிடம் இருந்த அன்பால் அரசன் இவனை தனக்குப் பின் அரசன் ஆக்கினான். இதுகண்டு கோபமுற்ற மக்களும் இவனைக் கொல்ல முயன்றனர். நந்திவர்மனது முறை புதல்வன் குலமகன் என வழங்கப் பெற்றான். அவன் நந்தியைக் கொல்லும் பொருட்டு மறைமுகமான வசை நிறைந்த நூலைப் பாடினான். இந்நூலின் தன்மையறிந்து இதை யாரும் பாடலாகாது என்று அமைச்சர் தடுத்து வைத்தனர். ஒருநாள் இரவில் குலமகன் இதைப் பாடிக் கொண்டிருந்த போது நந்தி கேட்டான். கேட்ட பாடல் 'செந்தழின் சாற்றை' (மிகை 15) எனத் தொடங்குவது. முதல் பாதியை இவன் கேட்டு அதன் சுவையில் ஈடுபட்டுக் குலமகனை அழைத்து முழுமையும் பாடி முடிக்கும்படி கூறினான். அவனும் முறையாகப் பாடி நூறு பாடல்கள் கொண்ட நூல் என்று சொன்னான். உயிர் போகும் தருணத்தில் குலமகனை அழைத்து தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி அணிந்து கொள்ளும்படி பணித்துவிட்டு உயிர் விட்டான். உயிர் போகும் தருணத்தில் குலமகனை அழைத்தான். தன் குலமகன் முடிசூடி அரசனானான். இந்த வரலாற்றை தொண்டை மண்டல சதகம் 'நந்திக் கலம்பகம் கேட்டபின் நற்றுணைக்கு கொல்லாபுரிச் சந்திரன் மாமுடி சூட்டக் குடை கவித்து' என குறிப்பிடுகிறது. இரண்டு பாடல்களிலும் வரும் கதையின்படி கலம்பகத்தைக் கேட்டு நந்தி உயிர் விட்டான் என்பதே பொருள். 'தம்பியர் எண்ணமெலாம் பழுதாக வென்ற தலைமான வீரதுவசன்' என்னும் கலம்பக பாடல், நந்திவர்மனுக்கு தம்பி இருந்து அரசரைக் கவர முயன்றான் என்ற வரலாற்றுக்கு ஆதரவு தருவது என்பர்.

'வானுறு மதியை' என்ற பாடலுக்கு இரண்டு வகையான பொருள் கூறுவர். 'உன் வதனத்தின் பொலிவு சந்திரனுக்குத்தான் உண்டு'என்பது ஒன்று: இனி அப்பொலிவு சந்திரனிடமே போய்விட்டது; உன்னிடம் இல்லை என்பது மற்றொன்று. உன் வீரம் புலியை ஒத்தது. உன்னை விட்டு நீங்கி காட்டுப் புலியிடமே போய்விட்டது. உன் கைகள் கற்பகம் போல் வழங்குபவை. வழங்கும் தன்மை கற்பகத்திடமே போய்விட்டது. உனது அரசாளும் திரு திருமாலுக்கு உரிய இலக்குமியை ஒத்தது. இனி அவள் திருமாலிடமே சென்றுவிட்டாள். உன் மேனியின் பொலிவு நெருப்பு போன்ற

ஒலியுடையது. அது இப்போது நெருப்பிடமே சென்றுவிட்டது. உன்னிடம் இல்லை என இதற்கு இரு வகையாகப் பொருள் கொள்ளுதல் உண்டு.

எனினும் நூலை மேலெழுந்தவாரியாக பார்த்தாலும் கூட இது நந்தியிடம் நல்லாசி சிறப்பும் பெற்ற ஒரு புலவன் தனது உள்ளத்து உவகை மிகுதியாலும் நன்றியறிவினாலும் நந்தியை அளவுபடாது புகழ்ந்து பாடிய நூல் என்பது நன்கு புலப்படும். முதற்கலம்பகம் இதை ஒத்த கவிதைச் சிறப்பு அமைந்த நூல் அரசரைக் கவர வேண்டும் என்ற வஞ்ச எண்ணத்தை நெஞ்சில் ஒளித்து ஒருவன் கரவாகப் பாடினான் என்பதும் சிறிதும் நடைபெறாதது: கதைகள் பொய்கதைகளே கோபலையர் பதிப்பில் வசைக் குறிப்புகள் என்று 12 இடங்கள் சுட்டப்பெற்றுள்ளன.

கழகப் பதிப்பில் வசைக்குறிப்புகள் என்று 16 இடங்கள் சுட்டப் பெற்றுள்ளன; தேடிப் பார்த்தால் எந்த நூலிலும் இப்படி வலிந்து குற்றம் காணமுடியும்; ஆகவே அவை பொருத்தமுடையனவாகா.

நூல் நயம்

கவிதைச் சுவையில் மிகச் சிறந்த நூல்களோடு ஒருங்கு வைத்து எண்ணத்தக்க சிறு நூல் நந்திக் கலம்பகம் அறிஞர் சிலர் கூறியுள்ளது போல இதன் பாடல் ஒவ்வொன்றுமே கடைந்தெடுத்த முழுமணி போல்வது எடுத்துக்காட்டாகச் சில பாடல்கள் மட்டும் இங்கே காணலாம்.

தலைவி நந்தியைக் கண்டு காமுற்ற போது அவளது வளையும் கலையும் சுழல்கின்றன. அவள் கூற்றாக அந்த நிலையில் வரும் பாட்டு:

‘எனதே கனவளையும் என்னகத்தே மன்னர்
சின்வேறு சிந்தனைகோல் நந்தி - இனவேழம்
கோமறுகில் சீறிக்குருக் கோட்டை வென்றாடும்
பூமறுகில் போகாப் பொழுது’

“நந்தி வீதியில் செல்லாமலும் அவனை நான் பார்க்காமலும் இருந்தால் கலையும் வளையும் என்னதே பார்த்தால் தானே தாபம் மேலிடுகிறது?” என்று சொல்லுகிறாள் தலைவி.

தலைவியின் காதல் விரகத்தைக் கண்ட தோழியர் உபசாரம் எல்லாம் செய்கிறார்கள்; வெப்பம் தணிக்கச் சந்தனத்தைப் பூசுகிறார்கள். அது அவளுக்கு தழலாய் இருக்கிறது.

செந்தழின் சாற்றைப் பிழந்து செழுஞ்சீதச்
சந்தனம் என்று ஆரோ தடவினர் - பைந்தமிழை
ஆய்கின்ற கோன்நந்தி ஆகம் தழுவாமல்

வேகின்ற பாவியேன் மீது

'நந்திக்கு உரிய காவிரி நீர் ஆட்டினால் அல்லவா எனது தாபம் தீரும்?' என்கிறாள் தலைவி.

'மாட்டாதே இத்தனைதான் மால்நந்தி வான்வரைந்தோள்
பாட்டாதே மல்லையர்கோன் பரியானைப் பருவச்சுவடு
காட்டாதே கைதைப் பொழில்உலவும் காவிரிநீர்
ஆட்டாதே வைத்துஎன்னை ஆயிரமும் செய்தீரே!

'ஆயிரமும் செய்தீரே' என்பதில் அவளுடைய பெரு ஏக்கம் வெளிப்படுகிறது.

தலைவனது பிரிவாற்றாமையால் வருந்தும் பிறிதொரு தலைவி நிலாவைப் பார்த்து

'மண்ணெல்லாம் உய்ய மழைபோல் வழங்கும்கரத்
தண்ணுலா மாலைத் தமிழ்நந்தி நன்னாட்டில்
பெண்ணிலா வே! இந்த வேகம் உனக்கு ஆகாதே!

பெண்ணிலா ஊரில் பிறந்த வெண்ணிலா'என்ற கருத்து பிற்காலத்தில் பல புலவர்களால் எடுத்து விரிக்கப்படுகிறது. பெண்ணுடன் பிறந்ததுண்டோ வெண்ணிலாவே' (திருக்குற்றால குறவஞ்சி பா.32) என்று ஒரு புலவர் கேட்பது அனைவரும் நன்கு அறிந்தது. பெண்ணினமே அல்லாத ஊரில் (அப்படி ஒன்று இருக்குமானால்) பொருட்சிறப்புடையது.

இதே தலைவியின் நிலை நந்தியின் காதலைப் பெற்ற பின்பு முழுதும் வேறாய் மாறிவிடுகிறது. ஊடல் காலத்தே நந்தி இவள் காலில் விழுந்து வணங்குகிறானாம். அவன் முடிவில் உள்ள தொண்டை மலர் மாலையின் மணம் அவன் இவள் காலில் விழுந்தமையால் இவளது காலுக்கு ஏறிக்கால் பிடிக்கும் சேடியர் கையில் இன்னமும் வீசுகின்றதாம்.

'என்னையா னேபுகழ்ந்தேன் என்னாதே எப்புவிக்கு
மன்னர்கோன் நந்தி வரதுங்கன் - பொன்முடியின்
மேல்வருடும் தொண்டை விரைநாறும் இன்னமும்என்
கால்வருடும் சேடியர்தம் கை'

பிரிந்து சென்ற தலைவன் தலைவியிடம் விரைந்து வருகின்றான். மீள்கின்ற தேர் ஓடுவதாகவே அவனுக்கு தெரியவில்லை. மனம் அவ்வளவு விரைகிறது. உயிர் தலைவியிடம் முன்னமே சென்றுவிட்டது. தேரில் வருவது உயிரற்ற வெறும் கூடுதான் என்பதை மேகங்கள் வாயிலாக சொல்லியனுப்புகிறான் தலைவன்.

'ஓடுகின்ற மேகங்காள் ஓடாத தேரில்வெறுங்
கூடு வருகுதுஎன்று கூறுங்கோள் - நாடியே
நந்திச்சீ ராமனுடைய நன்னகரில் நன்னுதலைச்
சந்திச்சீ ராமாகில் தான்'

ஒரு தலைவன் தலைவியின் கண் வீச்சில் சிக்கி மீள அறியாது அவள் அன்பையும் பெற இயலாது மடலேறத் துணிகிறான்;

'ஆட்குலாம் கடற்படை அவனிநாரணன்
தோட்குலாம் மதுமலர்த் தொண்டை வாய்ச்சியார்
வாட்குலாம் கண்ணினால் வளைத்த மம்மர்நோய்
மீட்கலாம் மடல்கையில் விரவும் ஆகிலை' (பா—18)

மிகச் சிறந்த நகைச்சுவையும் இளிவரலும் நிறைந்தது ததும்பும் பாட்டு. தலைவி கூற்றாக உள்ள ஒரு வெண்பா. நகைச்சுவையைப் பற்றிய பேச்சில் இப்பாடலை குறிப்பிடாதார் இரார்.

'ஈட்டு புகழ்நந்தி பாணநீ எங்கையர்தம்
வீட்டிலிருந்து பாட விடிவளவும் — காட்டில் அழும்
பேய்என்றாள் அன்னை பிறர்நரி என்றார்தோழி
நாய் என்றாள் நீஎன்றேன் நான். (மிகை 13)

'தொள்ளாறு எறிந்தவன்' என்று புகழ்பெற்ற நந்தி பற்றிய ஆகமப் பாடல்கள் சிறப்பாக அமைந்திருத்தலில் வியப்பன்று. புறப்பொருளாய் உள்ள பாடல்களும் இவற்றை ஒத்த கவிச்சுவை கொண்டவையாம். எடுத்துக்காட்டாகச் சில நயமான புறப்பாடல்களை இங்கே காணலாம்.

நந்தியின் போர் யானையின் மருப்புக்கு பூண் அணிந்த நிகழ்ச்சி எந்த நகரம் அழியப்போகிறதோ என்ற அச்சத்தை தோற்றுவிக்கிறது.

'அதிர்குல மணிநெடுந்தேர் அவனிநாரணன் களிற்றினஅ
கதிரொளியே வெணமருப்புக் கவையிரம் செறிந்தால்;
மதுரைகொலோ அடுபுலக்கோன் நகரிலோ மாளிகைசாய்ந்து
எதிர்எதிரே கெடநின்றது எவ்வூர்கொல்? அறியேமால்
நந்தியானது வீரத்தை வியந்து கூறும் பிறிதொரு (பா.14)

புறப்பாடல் வருமாறு

திருவின்	செம்மையும்	நிலமகன்	உரிமையும்
பொதுவின்றி	ஆண்ட	பொலம்பூண்	பல்லவ
தோள்துணை	யாக	மாவெள்	ளாற்று
மேவலர்க்	கடந்த	அண்ணால்	நந்திநின்!
திருவரு	நெடுங்கண்	சிவக்கு	மாகில்
செருநர்	சேரும்	பதிசிவக்	கும்மே!
நிறங்கிளர்	புருவம்	துடிக்கில்	நின்புகழ்

இறைஞ்சா	மன்னர்க்கு	கடந்துடிக்	கும்மே
மையில்	வாளுறை	கழிக்கு	மாகில்
அடங்கார்	பெண்டிர்		
பூண்முலை	முத்தம்	பூண்கழிக்	கும்மே;
கடுவாய்	போல்வனை	யதிர	நின்னொடு
மருவா	மன்னர்	மனம்துடிக்	கும்மே;
மாமத	யானை	மண்ணின்	
உதிரம்	மன்னும்நின்	எதிர்மலைந்	தோர்க்கே (பா.61)

நந்தியின் வீரமும் வெற்றியும் இப்பாட்டால் விளங்கும்.

நந்தி சீறு முன்னும் சீறிய பின்னும் பகைவர் நாடு எப்படி இருந்தது என்பதைப் படம்பிடித்துக் காட்டும் பின்வரும் பாடல் சிலேடை நயம் பொருந்தியதாகும்.

'ஊரும் அரவமும் தாமரைக் காடும் உயர்வனமும்
தேரும் உடைத்து என்பர் சீறாதநாள் நந்திசீறியபின்பு
ஊரும் அரவமும் தாமரைகக் காடும் உயர்வனமும்
தேரும் உடைத்து என்பரே தெய்வர் வாழும் செம்பழுதியே' (மிகை 6)

ஆசிரியர்

பெயர் தெரியவில்லை. குலமகன் என்றும் கொல்லாபுரிச் சந்திரன் என்றும் பலவாறாகச் சொல்வர். இவற்றுக்கான கதைகள் முன் சொல்லப்பட்டுள்ளன. இவை பொருந்தா. இவர் புலமை மிக்கவர்; கவிதை உள்ளம் கொண்டவர் இலக்கிய மரபில் நன்கு தோய்ந்தவர் அகப்பொருளும் புறப்பொருளும் நன்கு அறிந்தவர் தமிழை நன்கு சுவைத்து இன்புறுவர்: சிவ பக்தி மிக்கவர் நந்தியோடு நெருங்கிப் பழகித் தோழமை பூண்டவர் என்றும் கருதலாம். வேறு செய்திகள் விளங்கவில்லை. பாடல்களை நன்கு பயிலும் போது இவ்வாசிரியர் அறம் வைத்தே பாடவில்லை. அரசன் மீது பகையுணர்ச்சியோடு பாட்டுக்கள் எழுதவில்லை என்பது நன்கு விளங்கும். நூலைப் பொறுத்தவரையில் கதைகள் பொய்க்கதைகளே. எப்படியோ, இக்கதைகளுக்கு வழக்கு உண்டாகி, சிவஞான சுவாமிகள் குறிப்பிடும் அளவுக்குக் காலப் போக்கில் வளர்ந்துவிட்டன.

நந்திவர்மன்

முன்குறித்த கதைகளின் உண்மை எப்படி இருந்தபோதிலும் நந்திக் கலம்பகத்தில் பாட்டுடைத் தலைவனான நந்திவர்மன் வரலாறு கண்ட ஒரு பேரரசன் ஆவான். பட்டங்களோடு தெள்ளாறு எறிந்த பல்லவன் மல்லன் நந்திப் போத்தரையன் என்பது இவன் முழுப்பெயர் ஆகும். இவன் பல்லவமரபில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை ஆட்சி புரிந்த நந்திவர்மன் (கி.பி. 785-825) என்ற அரசன் புதல்வனான மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 825-850) இனி இவனைக் குறித்த வரலாற்றுச் செய்திகள் சிலவற்றைக் காண்போம்.

இவன் தாய் கதபோர் குல மன்னன் மகளான அக்கள நிம்மடி என்பவள். இவன் சாசனங்கள் பல தமிழ்நாட்டுக் கோயில்களில் கிடைக்கின்றன. அவற்றால் இவனது ஆட்சிக்காலம் நன்கு தெரிகிறது.

நந்தியின் 10—ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஆனது பெரும் வெற்றிச் செயலாகிய தெள்ளாற்றுப் போரைக் கூறுகிறது. ஆகவே தெள்ளாற்றுப் போர் கி.பி. 831-835-க்கு இடையில் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று வரலாற்று ஆசிரியர் கருதுவர். நந்தி தெள்ளாற்றிலும் பிற இடங்களிலும் போர் நிகழ்த்தித் தமிழ்நாட்டு வேந்தரை வென்றது போல, குருக்கோட்டைப் போர் நிகழ்த்தி, இராட்டிரகூட மன்னனை வென்றது தன் தந்தையின் காலத்தில் பல்லவ நாடு அம்மன்னனுக்கு அடங்கி இருந்த காலத்தில் பல்லவ நாடு சிறப்புக் குன்றியிருந்தது. அவனோடு போரிட்டவன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் என்ற பாண்டியன். சோழரையும், சேரரையும் தனக்குத் துணையாக அழைத்துக் கொண்டு அவனுடைய போர்ப்படை மிக விரைந்து வந்தவாசி தாலுக்காவில் உள்ள தெள்ளாறு வரையிலும் வந்துவிட்டது. நந்திவர்மன் மிக வலிமையோடு பாண்டியன் படையை எதிர்த்துப் போரிட்டு அவனைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான் துரத்திச் சென்று கடம்பூர் வெள்ளாது பழையாறு முதலான இடங்களிலும் போரிட்டு வென்றான் பாண்டியனுடைய தொண்டையையும் கைப்பற்றினான். நந்தி மதுரைக்கு மட்டும் தான் போகவில்லை. அவன் பாண்டியனுடை யானைகள், குதிரைகள், கொற்றக்குடை முதலியவற்றையெல்லாம் கைப்பற்றினான். உறையூரும் சோழநாடும் நந்திக்குப் பணிந்தன தெள்ளாறு எறிந்த நந்தியினுடைய கல்வெட்டுக்கள் புதுக்கோட்டை வரை காணப்படுகின்றன. இவனுக்குக் கடற்படையும் இருந்தது.

நந்திவர்மனுக்குப் பிறகு நிருபதுங்கவர்மன் பட்டமெய்தி சோழ மன்னனான ஆதித்தனுக்கு உதவி செய்து வரகுண பாண்டியனை முறியடித்தான். அடுத்து பாண்டியர் ஆதிக்கம் வலியற்றுப் போயிற்று. சோழப் பேரரசு ஓங்கலாயிற்று. அடுத்த பல்லவனான அபராசிதன் காலத்தில் சோழர் எழுச்சியின் விளைவாய்ப் பல்லவ அரசு முழுமையும் ஒடுங்கிவிட்டது.

நூற்கருத்துக்கள்

நந்திவர்மன் ஆட்சிக்கு வந்த காலத்தில் (கி.பி. 825) சிறப்பான சோழர் யாரும் தலைதூக்கி நிற்கவில்லை. சோழ நாட்டில் பெரும்பகுதி இவனுக்கு உட்பட்டிருந்தது. ஆதலால் எங்கும் நந்தியே காவிரி நாடான புனல்நாடன் சோணாடன் எனறு போற்றப் பெறுகின்றான். இவனது கல்வெட்டுக்கள் திருநெய்த்தானம் திருக்கடைமுடி நிலையை மாற்றினான். இக்குரு கோட்டைப் போர் நிகழ்த்தி இராட்டிர (பா.2,16,35,84) குறிப்பிடப்படுகிறது. இது தெள்ளாற்றுப் போருக்கு முன் நிகழந்தது.

நந்திக்கு மனைவியர் இருவர் இருவரும் இலக்குமி போன்றவர்கள் குடிகளைப் பாதுகாப்பவர்கள். பக்திமிக்கவர்கள் என்று சாசனத்தால் அறிகிறோம்.

நந்தி சிறந்த வள்ளல் என்பதைக் கலம்பகம் எடுத்துக் கூறும் சிவாலயத்துக்கு இவனால் நிகழ்த்த திருப்பணிகள் நிபந்தனைகள் எண்ணற்றவை. திருக்காட்டுப்பள்ளி, களத்தூர்,திருவள்ளம், திருநாகேச்சரம், திருவிடைமருதூர். தீண்டிச்சுரம் நியமம்

குன்றாண்டார் கோவில். திருநெய்த் தானம் செந்தலை திருவெள்ளறை, திருப்பராய்த்துறை முதலான கோயில்கள் இவனது ஆட்சி காலத்தில் பயனடைந்தது. திருவெள்ளம் கோயிலில் திருப்பதிகம் ஓதுவாருக்கும் பிறருக்கும் நெல்லும் பொன்னும் தரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சாசனத்தில் இவனுக்கு நந்திப் போத்தரையன் அவனி நாராயணன் கோநந்தி விக்கிரவர்மன், குமார மார்த்தாண்டன் விடேல்விடுகு என்ற பெயர்கள் வழங்குகின்றன. இப்பெயர்கள் கலம்பகத்துள்ளும் பயில்கின்றன. நந்திக்கு உரியனவாகக் கலம்பகம் கூறும் நகர்கள் கச்சி, மல்லை, மயிலை என்னும் மூன்று. இவை பொய்கையார் பூதத்தார் பேயார் என்ற மூன்று.

நந்தி, நந்திக் கலம்பகம் பற்றிய கதை பொய்க் கதையானாலும் கூட, நந்திவர்மன் வரலாறு உண்மையானது. தெள்ளாற்றுப் போர் உண்மையிலேயே மிக வரலாற்றுச் சிறப்புக் கொண்டது. அவனுடைய தந்தை நந்திவர்மன் (சன்னம் — பூண்டி) செந்தலை முதலான சோழநாட்டுப் பகுதிகளில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது தெள்ளாற்றுப் போரைக் கலம்பகம் மிகவும் சிறப்பித்து மிகுதியான இடங்களில் குறிப்பிடுகிறது. பின்னும் வெள்ளாறு கடம்பூர் வெறியலூர் புழையாறு என்ற இடத்தில் பகைவரை முறியடித்தான் என்றும் சொல்கிறது. நந்தி 'அவனி நாராயணன்'என்று பாராட்டிச் சொல்லப் பெறுகிறான். கடற்படையும் இவனிடம் இருந்தது. 'ஆட்குலாம் கடற்படை அவனி நாராயணன் எனக் குறிப்பிடுகிறார் புலவர். இதற்கு ஏற்ப இவன் சயாம் நாட்டில் ஒரு குளம் வெட்டி அதற்கு 'அவனி நாராயணன் குளம்' என்று அதற்கு பெயரிட்டான். குறுக்கோட்டைப் போர் பலமுறை செய்யப்படுகிறது. இது இராட்டிரகூடரோடு நடத்திய போர். இவன் சந்திரகுல பிரகாசன். அங்க நாடும் இவனுக்கு உட்பட்டிருந்தது. விடேல்விடுகு என்பது இறைவனுக்கு உரிய ஒரு சிறப்புப் பெயர். நந்தி மனோதயன் தேசபண்டாரி குவலயமார்தண்டன் உக்ரகோபன் என்ற பெயரும் இவனுக்கு உரியனவாக நூல் குறிப்பிடுகிறது. தொண்டிற்கு உரியவன். கொங்கன் என்று கூறுகிறது. 'வட வேங்கட நாடுடை மன்னர் பிரான்' என ஒரு பாடலில் நந்தி குறிப்பிடுகிறான்.

நந்திக்குத் தமிழன் மேலுள்ள ஈடுபாட்டையும் புலவர் நூல் எங்கும் போற்றுகிறார். 'தொல்லை நூல் வரம்பு முழுது கண்டான் (பா.3) பைந்தமிழை ஆய்கின்ற கோன்' (மிகை 15) . நமிழ் நந்தி' (மிகை 18) 'நூற்கடல் புலவன் (பா.26) 'பெரும் புலவர்தம் கவியைத் தீர்க்கும் தமிழாகரன்' 'தமிழ் தென்றல் புகுந்துலவும் தண்சோணாடா(பா.74) எனவரும் தொடர்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை. பல்லவர் மிகுந்த வடமொழி மோகம் கொண்டவர்கள். அதற்கு மாறாக நந்தி தமிழை ஆதரித்த வள்ளலாக இருந்தமையால் புலவர் இந்த இயல்பைப் பெரிதும் போற்றிப் பாடுகிறார்; 'தியாகி ஏகத்தியாகி' என்றும் கூறுகிறார். இவனை பெருந்தேவனாருக்கு ஆதரவு அளித்து பாரத வெண்பாப் பாடுவித்தவன் என்று அறிகிறோம்.

'ஒரு மறைவாணர்' (பா.15) என்ற பாடல் பிற அரசர் முடியில் அணிந்த பூ நந்தியின் கழலடியில் காணப்படும் என்று கூறும் இதே கருத்தை முத்தொள்ளாயிரம் சிவபெருமானுக்கும் திருவாய் மொழி திருமாலுக்கும் ஏற்றிச் சொல்வது கருதத்தக்கது ஒரு பாடல் (மிகை 9) மலைபடுகடாம் என்ற சங்கற்பாடற் பெயர் தொனிப்பது போல் அமைந்துள்ளது. 'படர்ந்த மலைகடாம் பட்டனை மால்யானை நந்தி' என்பது

அப்பாடலில் வரும் அடியாகும். மடல் என்ற உறுப்பு இங்கு காணப்படுகிறது. (பா.18) கடுவாய் என்று ஒரு பறை பலமுறை சொல்லப்படுகிறது. கடுவாயப் பறை என்றும் இது சொல்லப்பெறும் கடுவாய்ப்பறை பல்லவருக்கு மட்டும் உரிய பறை என்று கருதுமாறு உள்ளது. கச்சி ஏகம்பரை ஒரு பாடல் (பா 50) குறிப்பிடுகிறது. 'செப்பேட்டே' என்ற வினைமுற்றும் ஒரு பாடலில் (பா.74) காணப்படுகிறது. இது பிற்கால மலையாள வழக்கு.

இந்நூல் ஒரு வரலாற்று நாயகன் மீது பாடப்பெற்றமையால் உண்மைச் செய்திகள் போர்ச் செய்திகள் மிகுதியாக இங்கு காணப்படுகிறது. பிற நூல்களில் காணப்படாத அளவு இங்கு புறத்துறைகளும் காணப்படுகின்றன.

சமயம்

பல்லவ மரபினர் மாறிமாறிச் சைவரையும் வைணவராயும் இருந்திருக்கின்றனர். அவர்களுள் இந்த அரசன் சைவன் ஆவான். புலவரும் சைவரும் ஆவார். இவ்விருவருடைய சிவ பக்திச் சிறப்பு நூல் முழுவதும் காணப்படுகிறது. நூலின் முதற்பாடமாகிய ஒரு போகு கொச்சக கலிப்பா பிற்காலக் கலம்பக மரபுக்கு வழிகாட்டியாகத் தேவர்ப் பரவுதலாகவே உள்ளது. இது தேவபாணி எனப்படும். இப்பாடல் மிகவும் சிறப்பான சிவபிரான் ஆதியாக அமைந்துள்ளது. முதல் தரவு அர்த்தநாரீசுவர வடிவை உளமாரப் போற்றுகின்றது.

'மண்டலமாய் அம்பரமாய் மாருதமாய் வார்புனலாய்
ஒண்டகுராய் ஒளிஎன்னும் ஒருளுவம் என்உருவம்
மைவடிவோ வளைவடிவோ - மரகதத்தின் திகழ்வடிவோ
செவ்வடிவோ பொன்வடிவோ சிவனேறின் திருமேனி'

மூன்றாம் தரவு நந்தியின் சிவபக்திச் சிறப்பை அருமையாக உரைக்கிறது.

'இலகுஒளிய மூவிலைமேல் இறைவாறின் இயல்கலைக்
குலகிரியும் அருமறையும் குளிர்விசும்பும் வறிதாக
அலைகதிர் வேற்படைநந்தி அவனிநா ராயணன்இவ்
உலகுஉடையான் திருமுடியும் உள்ளமும் உவந்தனையே'

'சிவனை முழுது மறவாத சிந்தையான் (மிகை 3) என்று ஓரிடத்தில் நந்தி போற்றப்படுகிறான்.

'பனிமலர் செறிந்த செந்நிற் கோவை ஏய் நந்தி காக்கும் குளிர் பொழிற் கச்சி (பா.78) என்னும் பாடலில் ஆசிரியர் முருகனைக் குறிப்பிடுகிறார். இந்நூலாசிரியரும் நந்தியும் சிறந்த சைவர் என்று அறியலாம்.

காலம்

மூன்றாம் நந்திவர்மன் காலம் 825-850. ஆகவே இந்நூலும் அதே காலமாகும்.

நந்திக் கலம்பகம்

பாயிரம்

விநாயகர் வணக்கம்

'கரியின் முகவனை'
அரியின் மருகனை
உருகி நினைபவர்
பெருமை பெறுவரே'

'யானையின் முகத்தை உடையவனும் திருமாலின் மருமகனும் ஆகிய விநாயகனை மனம் உருகி நினைக்கும் அன்பர்கள் பெருமையை அடைவார்கள்.

நூலின் முதற்கண்ணே இச் செய்யுளால் புலவர் விநாயகர் வணக்கம் கூறியுள்ளார். எடுத்த காரியம் இனிதே முடிதற்பொருட்டு சைவசமயத்தார் வணங்கும் மரபின்படி புலவர் தாம் தொடங்கிய நூல் இனிது முடிதற் பொருட்டு முதலில் விநாயகர் வணக்கம் கூறியுள்ளார்.

இச்செய்யுள் சில பாட பேதங்களோடு திருமால் வணக்கமாகப் பண்டிதர் திரு. அ.கோபால அயயர் பதிப்பில் காணப்படுகிறது. அது வருமாறு;

'கரியின் முனம்வரும் அரியின் மலர்பதம்
உருகி நினைபவர் பெருமை பெறுவரே'

கஜேந்திரன் எனும் யானைக்கு முன்னே வந்த திருமாலினது மலர்ந்த திருவடிகளை மனமுருகி எண்ணுபவர் பெருமையடைவர்' என்பது பொருள் ஆகும்.

இந்நூலுக்கு குற்றம் கூறுவாரது சார்பில் பார்த்தால் முதலில் 'கரி' எனத் தொடங்கியது அமங்கலம் ஆகும்.

வேறு பிரதிநிதிகளில் உள்ளனவாக அ.கோபாலையர் காட்டும் பாடல்களாவன சில அவை;

1. *மும்மைப் புவனம் முழுதீன்ற தேவி யோடும் விடைப்பாகன்*
அம்மை தருக முத்தம்என அழைப்ப ஆங்கே சிறிது அகன்று
தம்மின் முத்தம் கொளநோக்கிச் சற்றே நகைக்கும் வேழமுகன்
செம்மை முளரி மலர்த்தாள் எம் சென்னி மிசையில் புனைவாமே.

மேலுலகம் இடையுலகம் கீழுலகம் என்னும் 3 வகையான உலகங்களையும் பெற்ற தலைவியாகிய அம்மையிடத்து எருதை ஊர்தியாக உடைய சிவபெருமான் அம்மையே முத்தம் தருவாயாக என்று சொல்லி அழைக்க அவ்விடத்து அவர்களுக்கு இடையேயிருந்த வேழமுகன் சிறிது நீங்கிச் சிவபெருமானும் அம்மையும் தனக்குள்ளே ஒருவரையொருவர் முத்தமிட்டுக் கொள்ள அதனைப் பார்த்து சிறிதே புன்னகை செய்யும் யானைமுகனது சிவந்த தாமரை மலர் போன்ற திருவடிகளை எமது தலையின் மேல் அணிந்து கொள்வோம்.

2. திருவாணி யைக்குருவை தென்முனியைப் போற்றத்
திருவாணி ஆண்மைஇறை சாரும் — உருவாணி
ஓனானைச் சங்கரனை ஆறுமுகத் தோன்உமையைப்
பங்கில் வைப்பார்க்கு இல்லைப் பவம்.

அழகிய கலைமகளையும் குருவையும் அகத்திய முனவரையும் புகழ்தல் செய்ய நன்மை தரும் வாக்கும் வீரமும் தலைமையும் உண்டாகும். ஆணிப் பொன்போலும் நிறம் அமைந்த உடைய விநாயகனையும் சிவபெருமானையும் ஆறுமுகங்களை உடைய முருகனையும் உமாதேவியையும் தமது பங்கிலே (மனத்தில்) கொள்பவர்க்குப் பிறவி இல்லை ஆகும்.

நூல்

பாடல் – 1

'சிவி பெருமானே நின்னுடைய திருவுருவம் இந்த நிலம் ஆகியும், ஆகாயம் ஆகியும், காற்று ஆகியும், ஒழுகுகின்ற நீராகியும் ஒளியுடைய தீ ஆகியும், ஒளி என்று சொல்லப்படும் ஓர் உருவம் ஆக உனது உருவம் உள்ளது. அவ்வடிவம் கருமை நிறமானதோ சங்கு வெண்மை நிறமானதோ மரகதமணியானது விளங்குகின்ற பசுமை வடிவமானதோ செந்நிற வடிவமானதோ, பொன்னின் நிறமான மஞ்சள் வடிவமானதோ? (எவ்வண்ணமானதோ சொல்வாயாக).

அருமையான மேருமலையின் உள்ளிடம் வருந்த வில்லாக வளைத்து தீயை உடைய அம்பைத் தேர்ந்தெடுத்து அசுரர்களது போர் செய்யும் இயல்பு அமைந்து மூன்றுகோட்டைகளையும் அழியச் செய்த தூய்மையானவரும் சிறந்த கங்காநதி வந்து தங்கத் திருமுடியைத் தந்தவரும் ஆகிய சிவபெருமானுக்கும் நிறமுள்ள முத்து போன்ற அழகிய பற்களை உடைய அம்பிகையினாலே உடம்பிலே சரிபாதி பெண்ணாக மாறிற்று;

விளங்குகின்ற ஒளியை உடைய மூன்று இலைவடிவமான சூலாயுதத்தை உடைய இறைவனே உனது நல்ல இயற்கை அழகு அமைந்த திருக்கைலாய மலையும் அருமறையான வேதமும் குளிர்ச்சியான ஆகாயமும் வெறிது ஆகும்படி ஒளி வீசுகின்ற வேற்படையை உடைய நந்தியும் இவ்வுலகில் இருக்கும் நாராயணனும் இந்த உலகத்தை தனக்குச் சொந்தமாக உடையவனும் ஆகிய நந்திப் பல்லவ மன்னனது திருமுடியும் அவனது மனத்தையுமே நினக்கு இருப்பிடமாக விரும்பினாய் (இஃது என்ன அதிசயமோ!)

இமயமலை அரசனது இளம்பெண் ஆகிய பார்வதியினது நெருங்கிய கொங்கைகளின் உச்சி அழுந்தியதால் தனது தீ வடிவம் வெளியே தோன்றும்படி திருநீற்றை அணந்த மாலை போன்ற மார்பை உடையனே கழுத்துக் கயிற்றை அணிந்த பெரிய மதயானையை உடைய பல்லவர்க்கு மன்னனான நந்திக்கு நினது அழகிய தாமரை மலரைப் போன்ற சிவந்த திருவடிகளை வணங்குவதற்காகச் செல்வம் பெருகும்படி அருள் செய்வாயாக!

செழிந்த மலர்களாக நிறைந்த ஆராய்ந்து எடுக்கப்பட்ட அம்பை உடைய மன்மனது அழகிய உடம்பு எரிந்து சாம்பலாகத் தீயைத் தோற்றுவித்த நெற்றிக் கண்ணை உடையாய்;

அருமையான கைலாய மலையானது அடியோடு பெயரும்படி விரைந்து பெயர்த்தெடுத்த இராவணனது ஒப்பற்ற பத்துத் தலைகளும் அற்றுப் போகும்படி அம்மலையின் மேல் ஒரு கால் விரலை ஊன்றினாய்;

சிவபெருமானே உனது சிறந்த சடையிலே கொன்றை மலரும் வெள்ளெருக்கு மலரும் கலந்து கொடுத்த பூமாலையின் இடையே வெண்மையான பிறைமதியை அணிந்தாய்;

பாயும் புலியானது தோலை ஆடையாக அணிந்து பல புள்ளிகளை உடைய வடிவம் முழுவதும் தீயைக் கக்கும்படி ஆயிரம் வாய்களை உடைய பாம்பாகிய கரிய கச்சையை இடையிலே அணிந்தாய்;

ஒழுகுகின்ற மதநீரோடு கூடிய ஒழுகுகின்ற செந்நீர் மலைச்சாரிவில் பெய்யும் மழைநீர் போலத் துளிக்க அழகிய மதத்தை உடைய யானையினது தோலை மேலாடையாக அணிந்தாய்;

சிவபெருமானே நீ உண்டு அருளிய வலிமைமிக்கவிடம் எட்டுத்திக்கில் உள்ளவர்கள் எல்லாம் அஞ்சி நடுங்கும்படி தோன்றியது. சிவபெருமானே நீ காலனால் உதைத்த கொடிய எமன் (கண்டார் அல்லது மார்க்கண்டேயனின்) உயிர் நடுக்கம் கொள்ளும்படி தோன்றியது.

எல்லா உலகத்திலும் உயிர்களுக்குப் பிறந்தலைத் செய்பவனும் நீயே; எல்லா உலகிலும் உயிர்களுக்கு இறத்தலைச் செய்பவனும் நீயே! எல்லா உலகிலும் உயிர்களின் தீவினைக்கு ஏற்பத் துன்பத்தை தருபவனும் நீயே; எல்லா உலகிலும் உயிர்களின் நல்வினைக்கு இன்பத்தை தருபவனும் நீயே; தேவர்களுக்கு தந்தையும் நீயே; நின்னிடத்து அடைக்கலமாக வந்தவருக்கு தந்தையும் நீயே; (தேவர்கள் அடைக்கலம் அடைந்தோர் அல்லாத) மற்றவர்களுக்கு முதல்வனும் நீயே; எல்லா உயிர்களுக்கும் கடவுள் நீயே ஆவாய்;

ஊழிக் காலமாக இருப்பவனும் நீயே; எல்லா உலகங்களாக இருப்பவனும் நீயே; உருவப் பொருளும் நீயே; அருவப் பொருளும் நீயே கடலும் நீயே; அக்கடலில் தோன்றிய அமுதமும் நீயே; தருமமாக இருப்பவனும் நீயே; விரோதமாக இருப்பவனும் நீயே;

என்று சொல்லப்படும் ஒப்பற்ற பெரிய கடவுளே எமது அரசனும் மாமல்லபுர்து மன்னனும் மயிலாப்பூருக்குத் தலைவனும் பல்லவர் குலத் தலைவனும் பசுமையான மாலையை அணிந்தவனுமான நந்தி விடைக்கொடியோடு மங்களகரமான வெற்றிபெற்று வடக்கே இமயமலை அளவாகவும் தெற்கே பொதியமலை அளவாகவும் செல்ல ஒப்பற்ற பெரிய ஒரு வெண்கொற்றக்குடையின் நிழலிலே அரசனாக வீற்றிருக்கும்படி அருள் செய்வாயாக என்று நினைத்துப் போற்றுவோம்.

எட்டுப் பிரதிகளில் இச்செய்யுள் பலவிதமாக காணப்படுகிறது. அதனை ஒருவாறு ஊகித்து இவ்வாறுதான் நடக்க வேண்டும் தரவு ஒன்று தாழிசை மூன்று, அராகம் இரண்டு, மீண்டும் தாழிசை மூன்று நாற்சீரடி இரண்டு அம்போதரங்கம், இருசீரடி எட்டு அம்போதரங்கம் தனிச்சொல் ஆசிரியச் சுரிதகம் என வித்துவான் சோ. அருணாசல தேசிகர் தம் விளக்க உரையுள் அமைத்துள்ளார்.

பாடல் – 2
தலைவி கூற்று

எனதே கவலையும் என்னதே மன்னர் சின ஏறு செந்தனிக்கோல் நந்தி இனவேழம் கோமாறுகில் சீறிக்குருக்கோட்டை எவன்நாடும் பூமறுகில் போகாப் பொழுது.

அரசர்களுக்குள்ளே கோபமுள்ள ஆண்சிங்கம் போன்றவனான ஒப்பற்ற செங்கோலையுடைய நந்தி மன்னனின் நல்லினத் தாவாக் களிறு பகை மன்னரது வீதியிலே வெருண்டு சென்று குருக்கோட்டை என்னும் கோட்டையை வென்றதால் அந்த வெற்றியைக் கொண்டாடுகின்ற அழகிய வீதியிலே நான் செல்லாத பொழுது யான் அணிந்த ஆடை என்னுடையதாகவே இருந்தது யான் கையில் அணிந்திருந்த வளையலும் என் கையினிடந்ததாகவே இருந்தது அவை நந்தியின் விழாவைக்கண்ட பின்பு நீங்கள் இது செய்யுள் தலைவி தனது மெலிவு கண்டு இரசிகன் இதில் நந்தி குருக்கோட்டை வென்ற வரலாறு கூறப்பட்டுள்ளது நந்தியின் வெற்றி விழாவைக் கண்டதால் ஆடையும் வளவியும் என்னுடைய அவ்வாயின் என்பது குறிப்பு.

பாடல் – 3
தலைவி கூற்று நாரைவிடுதூது

அழகமைந்த சிறகையுடைய பசுமையான நாராயே மாலைப் பொழுதைக் கண்டு எனது தாய் உரத்துப் பேசுகின்றது போக பழமையான நூல்களின் எல்லை முழுவதும் அறிந்தவணான நந்தியினது மாமல்லபுரத்தில் உள்ள அழகிய காலையுடைய தலைவனுக்கு உண்டான குற்றத்தைக் கண்டாய் அவரிடத்தே சென்று இதனைச் சொல்லுவாயாக அன்றியும் நமது கள வொழுக்கத்திற்கு வரும்படி தொழுது கொண்டேன் என்றும் சொல்லுவாயாக.

இது தலைவ கூற்று நாரை விடு தூது ஈண்டுத் தலைவி தலைவனிடத்துத் தன் குறையைக் கூறும்படி நாரையைத் தூதாக விடுக்கிறாள் இச்செய்யுளில் தொல்லை நூல் வரம்புமுழுது கண்டான நந்தி என நந்தியின் கல்விப்பெருக்குப் போற்றப்பட்டுள்ளது.

பாடல் – 4
தோழிகூற்று தலைவனை வேண்டல்

மாறுபட்ட கோபத்தையும் மதத்தையும் உடைய மானையும் செங்கோலையும் உடைய நந்தியே பாண்டிய மன்னனது இருக்கையினிடத்தே போய் தன்னைச் சுற்றிய வாட்போரை உடைய பகைவரது உடம்பு துண்டாகும்படி கண் விழித்துப் பார்த்த வலிய வீரத்தையுடைய தொண்டை நாட்டு மன்னனே நாரைகள் பனி உதிர்ந்து விழுகின்ற முன்பனிக் காலத்திற்காக ஓரிடத்தே தங்கி அஞ்சுகின்ற இரவிலே குளிர்ந்த பனி நீர்த்துளியிலே மூழ்கி எழுந்து வற்ற நல்ல குளிர்ச்சியான வாடைக்காற்று தன் பக்கத்திலேயே பனிநீர்த்துளிகள் பார்த்து விழும்படி வர அதனைக் கண்டு பயன்படுகின்றவனை அஞ்சாதே, அஞ்சாதே என்று சொன்னால் அதனால் கெடுதி உண்டோ கூறுவாயாக இச்செய்யுள் நந்தி பாண்டியய் அரணிற சென்று அழிந்ததைக் கூறுகின்றது. இது வாடைக்காற்றைக் கண்டு வருந்தும் தலைவியின் நிலையைத் தோழி தலைவனுக்குக் கூறி அவளுக்கு அருள் செய்யும்படி வேண்டுதல் இதில் தொண்டைவேந்தே எனச் சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப்பட்டமையால் இது அகம்புறம் ஆகும்.

இச்செய்யுளில் வரும் நறுந்தண் வாடை அருகுமணி சிதறவர அஞ்சுவானை அஞ்சல் அஞ்சல் என்று உரைத்தல் அழிவதுண்டோ என்னும் பகுதி சுவையானதாகும்.

பாடல் – 5
வெற்றிமுரசச் சிறப்பு

தொண்டை நாட்டிற்கு அரசனும் சோழநாட்டை உடையவனும் பழமையான தன்மையுள்ள அலை வீசுகின்ற கடலையும் தன்னுடையதாகக் கொண்ட அரசர்க்கு அரசுறுமாகிய நந்தி மன்னனது வெற்றியை உடைய அரண்மனை வாயிலின் முற்றத்தே பகைத்த அரசர்களது நாட்டையும் அவர்களது வீரமிக்க செல்வத்தையும் எமது அரசனான நந்தியைக் கண்ட அரசர்கள் பெற்றுக்கொள்ளுங்கள் என்று அவனது அழிவற்ற சடுவாய் என்னும் பறை கூறும் திளை பாண்டான் துறை. பாடாண் பாட்டு இச்செய்யுள் நந்தியினது ஆற்றலையும் கொடையையும் புகழ்ந்து கூறுகின்றது. சுடுவாய் என்பது பல்லவரது ஒருவகைப் பிறை நந்தி பகையரசுரது நாட்டையும் செல்வத்தையும் கைப்பற்றித் தலைவி வணங்கிய அரசர்க்குக் கொடுத்தான் என்பதாம் கடுவாய் சொல்லும் என்பது பேசாததைப் பேசுவது போலக்கூறுவது.

பாடல் – 6
செவிலிகூற்று

எனது மகனே கடுவாய் என்னும் பறை முழங்க சங்கு ஒலிக்க அரசர்கள் தன் அடிகளை வணங்க அழகிய இடகன்ற தெருவிலே பகைவரைக் கொல்லுகின்ற நீண்ட கொம்புகளை உடைய ஐராவதம் என்றும் யானையின் மேல் கொல்லுகின்ற போரைச் செய்யும் நந்தி மன்னன் வருவான். அதனால் உன் மேல் ஐயங்கொண்டு நீண்ட தினைப்புனத்திலே நகை செய்பவரான வேற்படை போலும் கண்களையுடைய மகளிர்க்கு உள்ளே நீ இங்கே விளையாடுவது அவர்கள் மனத்திலே குற்றமாக இருக்கும் ஆகையால் இந்த முற்றத்திலே மணிகள் பதித்த ஊசலின் அமர்ந்து ஆடுதலை மறந்துவிடுவாயாக.

பாட்டுடைத் தலைவனாக நந்தியையே கிளவித் தலைவனை கூறுவதால் இது அகம்புறத்தீவணம் பாடல் தலைவியைச் செவிலி ஆயிடம் விடுத்துக்கொண்டு அகறல் அல்து தலைவியை இச்செறித்தல் ஆம் ஆயிடம் விடுத்துக்கொண்டு அகறவாவது செவிலி ஊரவர் தலைவி மேல் கூறும் அவரை அறிந்து அவளை அவள் விளையாடும் இடத்தைவிட்டு அழைத்துக் கொண்டு போய் வீட்டை அடைதலாகும்.

இதில் நந்தி யானை மேல் ஏறி வருதல் கூறப்பட்டுள்ளது. பூந்தியின் யானைக்கு ஐராவதம் என்பது பெயராக இருக்க வேண்டும் அல்லது ஐராவதம் போன்ற யானையில் என்னும் ஆம் ஐராவதம் இந்திரனது வெள்ளை யானையின் பெயர்.

பாடல் – 7
புயவகுப்பு

நீதியான மேம்பட்டவனே நினது இரு தோள்களும் வீரத்தையும் மதத்தையும் உடைய யானைகளை எட்டுத் திக்குகள் தோறும் நிலை நிறத்தின் முகத்தைப் போன்ற பற்களை

உடைய மகளிரது மனம் களிக்கும் தன்மையின் வலிமையுடைய அரசர்களது மனம் தளரத்தக்கள மணமுள்ள மலர்களும் மகளிரது களிப்பைத்தரும் கொங்கைகளும் பொருத்துவன திறடையுள்ளன பாமகளாகவே புகழப்படுவன விளக்குகின்ற ஒளிமையுடையன புகழ் நிறைவன நல்ல மலரை அணிந்த அழகியமுடியை உடையன புய வகுப்பாவது அரசனது தோளின் பெருமையை வகை செய்து கூறுதல்.

இச்செய்யுள்களில் வரும் மணிநகையவர் மன நகுவன விறலரசர்கள் மன நெகிழ்வன என்னும் பகுதி நயமானதாகும்.

பாடல் – 8
தலைவி வாடைக்கு வருந்துதல்

'புயங்களில் பூவையார் பொங்கு கொங்கையின்
நயங்கொளத் தருபுகழ் நந்தி கச்சிசூழ்
சமங்களில் கடியவர் தழாவி காமுகர்
பயங்கொளட் புகுந்தது பருவ வாடையே'

விடைப் பருவக் காற்றானது நந்தோர்களில் மகளிரது மேல் மேலும் வார்கின்ற கொள்கையின் இன்பத்தைக் கொள்ளத்தக்க நந்தி மன்னனது காஞ்சிபுரத்தைச் சூழ்ந்துள்ள தடாகங்களில் உள்ள மணமுள்ள மலர்களிலே மகரந்தத்தை அணைந்து காதலர்கள் அஞ்சும்படியாக ஊரிலுள்ளே புகுந்தது.

இது வாடைக்காற்று வந்ததைக் கண்டு தோழி வருந்திக் கூறியது கண்டோர் கூற்று. எனினும், ஆம் காமுகர் அஞ்சும்படி வாடை வந்தது. இனி நம் தலைவி இவ்வாடைக்கு என்ன செய்வாளோ என்று தோழி எண்ணினாள் என்பது குறிப்பு. வாடை கூடியவர்க்கு இன்பத்தையும் பிரிந்தவர்க்குத் துன்பத்தையும் தரும் ஆதலால் காமுகர் பயம் கொள்ளாமல் பருவ வாடை புகுந்தது என்றார்.

பாடல் – 9
தலைவன் இரங்கல்

மனம் நிறைந்த மலர்மாலை போன்ற தோழியே வாடை காற்றானது என் மனம் வருந்தும்படி வீசுகின்றது. அந்த மன்மதனோ மலரம்புகளை என் மேல் இறைக்கின்றான். வெற்றியையுடைய கடலேழு முழங்கும் பூவிதழ் விளங்கும் மாலையை அணிந்த அரசனான நந்தி மன்னனது தோளை சேர்ந்தால் அதனால் பழிச் சொல் உண்டாகாது. அவன் எனது உயிரைக் காப்பாற்றுவதற்கு வல்லவன் ஆவானோ நீ கூறுவாயாக. இது ஒரு தலைவி நந்தி மன்னனைக் கண்டு காமுற்றுக் கூறுதலாக இருப்பதால் பாடாந்தீனைஞ் கைத்திளை அல்லது பெருந்தினையில் பெண்பால் பொழுது கண்டிராங்கனுமாம்.

பாடல் – 10
தலைவன் தன் நெஞ்சோடு கிளத்தல்

எனது அறியாமையை உடைய மனமே வாழ்வாயாக பகைவரைக் கொல்லுகின்ற நீண்ட மேற்படையை உடைய கண்டனான நந்தி மன்னனது காஞ்சிபுரமாகிய வளமுள்ள

நாட்டிலே உள்ள இம்மங்கையரோடு நீ சேர்கின்றாய். ஆகையால், அவரது பூமாலை வாட்டமுற்றால் நீயும் வாட்டமடைவாயாக. அவரது கொக்கைகள் பூரித்ததால் நீயும் பூரிப்பாயாக. அவரது புன்னகையின் ஒளி வெளுத்துத் தோன்றுமாயின் நீயும் வெளுத்துத் தோன்றுவாயாக அவரது இடை துவளுமானால் நீயும் துவளுவாயாக.

இது தலைவன் நெஞ்சோடு புலந்து உரைத்தல். தலைவியின் மேல்தீராக் காதல் கொள்ளான் மடநெஞ்சே என விளிக்கிறார். தலைவி இப்பாடலில் வரும் கோதை சோரில் சோர் கொங்கை விம்மில் விம்மி, முறுமுறுவல் சோதி வெளுக்கில் வெளு மருங்குதல் துவளின் நீயும் துவள் கண்டால் என் மட நெஞ்சே என்னும் பருதி நெஞ்சை அள்ளுவதாகும்.

பாடல் – 11
தோழி கூற்று

செந்நெற் பயிரை உடைய வயலில் சென்று பாயும் நீரை உடைய காவிரி ஆறு சூழ்ந்த அழகிய சோழ நாட்டையுடைய நந்தியும் கோபத்தையுடைய களியினது கொடிய நிழல் குடிகளின் மேல்படாது மறைந்த ஒப்பற்ற குடையை உடையவனும் காளை வடிவமான குறி மன்மேல் பதிக்கப்பட்ட ஞலைமைச் செலுத்தும் விடேல் விடுகும் ஆகிய மன்னனே மனக்கலக்கம் உற்று இவ்வண்ணமாக வட்டமுற சந்திரனது நீலம் நீண்ட தீப்போலப் பரவ உறங்காத கண்ணோடு சோர்வடைகின்ற இந்த தலைமகளுக்கு நீ கொடுக்காமல் விட்டிருப்பது இந்தத் தொண்டை மாலையையோ.

நந்தி சோழநாட்டையும் கைப்பற்றி ஆண்டான். ஆதலால் காவிரி சூழ்நாட்டை உடையான் என்றும் அவன் குடிகள் துன்பமுறாமல் காத்தான். ஆதலால் அவனது குடை சினக்கவியின் கொடிய நிழலை மறைத்தது என்றும் அவன் ஞலை மண் மேல் விடைப்பொறி பொறித்தாள் என்றும் புலவர் பாடுகின்றார். விடேல் விடுகு என்பது நந்திக்கு ஒரு சிறப்புப் பெயர் எனத் தோன்றுகிறது.

தன் நாட்டு மக்கள் மேல் கொடுங்கவியின் நிழல்படாதபடி இனிதே காக்கும் நந்தி மன்னவன் இத்தலைவி அவனை விரும்பி ஆருலமுற்று. இங்ஙனே வாடவும், உறங்காத கண்கள் சோரவும் அவளுக்கு அருள் செய்யாதிருப்பது தகுமோ. அவள் வேண்டுவது வயிர மாலையன்றோ காட்டிலே செடிகள் மேல் படரும் கோவையின் மலர் மாலைதானே. அதனை இவளுக்குக் கொடாது இருக்கின்றானே. இஃது அவள் நீதிக்கு ஏற்றதன்றே எனச் செவிலி கூறினாள் தோழி என்னும் ஆம்.

இதில் நந்தி கிளவித் தலைவனும் பாட்டுடைத் தலைவனும், ஆதலாலும் நந்தியின் மாலையை வேண்டலாலும் பாடாண்திணைக் கைக்கிளை ஆகும்.

இந்நூலுக்குக் குற்றம் கூறுவார். நந்தி சினக்கவி என்ற பிரிந்து நந்தி சின்னச்சனி என்றும் பொருள்படுகின்றது என்பர்.

நெஞ்ச ஆதவன் உற்று இங்ஙனே மேவிய நிலவின் கதிர் நீன் எரியாய் வீசிய துஞ்சாதயளைத்தோடு சேரும் இவன் என்னும் வரிகள் தலைவியின் நினைவை சொல்லோவியம் ஆக்குகின்றன.

பாடல் – 12

ஒரு படைவீரன் தன் மன்னன் மாண்பை எடுத்துக் கூறல்

விடுதி கொல்லோவன நாடு உடைவீர் அரசுக்கு முன்நின்று இடுதிச் சொல் லோபண்டு இறுக்கும் திணறஞரி காளத்து உம்மை அடுதீர் கொல் லோதிறல், நந்தினங் கோல் அபிராவத்தில் படுதிர் கொல் லோபடை மன்னீர் எண்ணாம் உங்கள் பாவனையே.

சேனையை உடைய அரசர்களே நீவிர் எம் அரசனுக்கு முன்னே எதிர்த்தாள். தோற்றுப்போனீர் ஆகையாலே உம்முடைய வளமான நாட்டைக் கைவிடுவீர்களோ அல்லது எம் அரசனுக்கு எதிரே நின்று முன்னாளிலே நீங்கள் எம் அரசர்க்குக் கொடுக்கும் நிறைய பொருளைக் கொடுப்பீர்களோ அல்லது தீ எரிகின்ற காட்டிலே சென்று உங்களை உயிரை விடுவீர்களோ அல்லது வலிமையை உடைய நந்தியாகிய எம் மன்னனது ஐராவதம் என்னும் யானையினிடத்து அகப்பட்டு இறப்பீர்களோ உங்களுடைய கருத்து இவற்றுள் யாது ஆகும். இச்செய்யுள் ஒரு படைவீரனது கூற்று இது கொடுமொழி வஞ்சி.

இச்செய்யுளில் பகையரசர் ளைப் பார்த்துப் பண்டு இறுக்கும் திறை இடுதிர் கொல்லோ என்றிருப்பது முன்னே பல்லவருக்குக் கட்டிய மன்னர்கள் அப்பொழுது திறைகட்ட மறுத்தனர் என்பதைக் காட்டுகின்றது.

பாடல் – 13

தலைமகனை தோழி ஆற்றுவித்தல்

மேகத்தின் முழக்கமானது போர்க்கு உரிய நீண்ட வீரக்கழலை அணிந்த நந்தியாகிய விடேல் விடுகினது செறிந்த யார்க்கட்டை உடைய முரசினது ஒலியை ஒத்தத் தோன்றியது. ஆதலால், அலங்கரிக்கும் நீண்ட கூந்தலில் உண்டான சடையும், வாடையைக் கண்டு உண்டான கண்ணீரால் நனைந்த நீண்ட ஆடையும் ஆகிய இவைகள் இனி நாள்தோறும் இருக்கமாட்டா.

மகளிர் அழகுற அலங்கரிக்கும் கூந்தல் தலைவனது பிரிவால் எண்ணெய் பெறாது சடையாய்த் திரண்டது. வாடைக்காற்று காரணமாக; தலைவனை நினைத்து உண்டான கண்ணீரால் அவள் ஆடை எப்பொழுதும் நனைந்திருந்தது அப்பொழுது தலைவன் மீண்டு வருவதாகக் குறித்த கார் காலம் வந்துவிட்டதை மேகத்தின் முழுகத்தி தான் அறிந்து தோழி தலைமகளுக்கு அதனைக் கூறி அவளது துயரை ஆற்றினான். இது கார்ப்பருவம் கண்டு தோழி ஆற்றுவித்தாள்.

“கனைவார் முரசு ஒத்தது கார் அதிர்வே” என்பது இப்பாடலில் வந்துள்ள உவமையாகும்.

பாடல் – 14

யானை மறம் : கண்டோர் கூற்று

(அதிர்கின்ற ஓசையை உடைய மணிகள் கட்டிய நீட்டிய தேரை உடைய பூவுலகத்தில் உள்ள திருமாலான நந்தி மன்னவனது ஆண் யானையிநுடைய மிக்க ஒளியை

உடைய வெண்மையான தந்தமானது உறுதியான வயிரப் பூண் கட்டப்பட்டது: அதனாலே மாளிகைகள் இடிந்து கண்ணுக்கு நேர் நேராக அழிய இருந்தது மதுரையோ? கொல்லுகின்ற புலிக் கொடியை உடைய சோழனது நகரமோ? (புகார் அல்லது உறையூர்) அந்த ஊரோ நாம் அறிந்திலோம்:

யானையின் தந்தத்திற்குப் பூண் கட்டினால் அது போர்க்கு உரிய குறிப்பு ஆகும். ஆதலால், நந்தி யானையின் தந்தத்திற்குப் பூண் அணிந்ததைக் கண்டு கூறிய கூற்று இது. இச்செய்யுள் யானை மறத்தைச் சார்ந்தது.

இதில் புலவர், தெரிய, இவனை 'அவனி நாரணன்' என்கிறார். இவ்வாறு நந்தியைத் திருமாலாகக் கூறுதலைப் பின்னரும் பல இடங்களில் காணலாம்.

பாடல் – 15
நந்தி மன்னன் திருவடிச் சிறப்பு

'ஓம் மறைவாணர் ஒண்பொன் கழல்வேந்தர்
தாம முடிக்கு அணிநத் தாளிப்புல்—கோமறுகில்
பாவடக்கீழ்ப் பல்யானைப் பல்லவர்கோகோன் நந்திதன்
சேவடிக்கீழ்க் காணலாம் சென்று'.

'பலல யானைகளை உடைய பல்லவ மன்னான நந்தியானது சிவந்த திருவடியின் கீழும், அரச வீதியிலே பட்டுள்ள அவனது அச்சுவட்டின் கீழும் யாகத் தீயை வளர்க்கும் அந்தணர்கள் ஒளியுள்ள பொன்னாலான வீரக்கழலை அணிந்த அரசர்களது மாலையை அணிந்த முடிக்கு (முடிசூட்டு விழாவில்) அணிந்த தாளிப் புல்லை நாம் போய் பார்க்கலாம்.

முடிசூட்டு விழாவிலே அந்தணா அரசரது முடியில் சூட்டிய தாளிப் புல்லை, நந்தியின் காலின் கீழும் அவன் வீதியில் நடக்கும் போது பட்ட காற்சுவட்டில் கீழும் காணலாம். என்பதால், நந்திமை மற்றைய அரசர்கள் வணங்கியது விளங்கும். நந்தியின் அடிக்கீழ் மட்டும் அரசரது முடித் தாளிப் புல்லைக் காணலாம். என்னாது அவனது காலடிச் சுவட்டின் கீழும் காணலாம் என்பது, நந்தியின் உயர்வையும், மற்றைய அவர்களது தாழ்வையும் காட்டும். இதனால் நந்தி மன்னர் மன்னன் என்பது போதரும்.

பாடல் – 16
யானை மறம் : கண்டோர் கூற்று

'நந்தி மன்னர் திருவஞ்சைக்கனத்தின் மேல் படையெடுத்து சென்று, தனது யானை கோபம் கொண்டு அதனது சிவந்த கண்கள் மேலும் சிவக்க, மற்றும் சிலர் மனமயங்கப் பகைத்த பகைவரது கூட்டத்தை அழித்தனர் போலும்! அது அப்படியே ஆம். 'மலை போன்ற தோளை உடைய நந்தி மன்னனது நோக்கம் குருக்கோட்டை என்னும் கோட்டையின் மேல் குறிப்பாகச் சென்று அந்த வஞ்சிக்களம் பட்ட துன்பம் எல்லாவற்றையும் இனிப் பகைவரது வலிமையான ஊர்கள் எல்லாம் அடையும்;

இது அரசனது புகழைச் சொல்லப் பகைவரது நாட்டின் அழிவைக் குறித்து இறக்கியது. ஆதலால், இது கொற்றவள்ளை என்னும் துறை.

இதில், 'வஞ்சி' என்பது சேர நாட்டுத் திருவஞ்சைக்களமும், 'குருக்கோட்டை' என்பது அங்கிருந்த கோட்டையின் பெயரும் எனத் தெரிகின்றன.

பாடல் – 17
நந்தி மன்னன் வீரம்

'ஊர்கள் தோறும் மேகங்கள் சொரிகின்ற மணிகளையும், மூங்கில்கள் தந்த பெரிய முத்துக்களையும் கொடுத்து நெற்கதிரைத் தொகுத்துக் கொண்டு வருகின்ற நீர் கரையோடு மோதி வழியும் காவிரியினது வளமமைந்து நாட்டை உடையவனே! செல்வத்தைத் தருகின்ற குடையும் பூமிதேவியின் உரிமையும் ஆகிய இவ்வவைகள் உடைய நந்தி மன்னவனே! அறிவில்லாதவரான அரசர் நின்னுடைய தாமரை மலர் போன்ற பாதங்களை வணங்காதவராய்த் தேவர் உலகத்தை ஆள்பவர் ஆவர்'.

காவரி ஆறு, வீயாபாரம் செய்பவரைப் போல மேகத்தில் உண்டான முத்தையும், மூங்கிலில் உண்டான முத்தையும் ஊர்தோம் கொடுத்து அவ்வூர்களில் உள்ள நெற்கதிர்களைக் கொண்டு வந்தது. முத்துக்கள் பிறக்கும் இடங்களில் மேகமும் ஒன்று மூங்கிலும் ஒன்று:

இது நந்தியின் வீரச் செயலைப் புகழ்வது ஆகையால் பாடாண் திணைப் பாட்டு நந்தியைப் பணிந்தவர் மண்ணுலகு ஆள்வர் பணியாதவர் வானுலகம் ஆள்வர் என்றது பணியாதவர் இறப்பர் என்றதாகும்.

நந்தி, மதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர்
வானகம் ஆள்வாரே'

சிலர், 'நந்தி மதியிலி' எனப் பிரித்து நந்தி அறிவில்லாதாவன் எனப் பொருள்படுகின்றது என்பர்.

பாடல் – 18
தலைவன் மடலேறத் துணிதல்

வீரர்கள் விளங்கும் கடற்படையை உடைய நந்தி மன்னவனது தோளில் விளங்கும் தேனுள்ள மலர் மாலையான தொண்டையினது கனியைப் போன்ற வாயையுடைய மகளிர் வாள் போன்ற கண்களினாலே நம்மை மயக்கிய மயக்க நோயிலிருந்து தமது கையிலே கண்களினாலே பொருந்துமானால் நம்மை மீட்கக் கூடும்.

'ஆட்குலாம் கடற்படை' என்பதனால், நந்தி கடற்படையும் உடையவனாக இருந்தான் எனலாம். அல்லது, கடற்படை என்பதற்குக் 'கடல் போன்ற படை' என்றும் ஆகும்.

இப்பாடலில் 'வாட்குலாம் கண்ணினால் வளைத்த மம்மர்நோய், என வரும் தொடர் ற்பனை நலமும் அழகும் பொருந்தியதாகும்.

பாடம் – 19
தோழி தலைவனை இயற்பழித்தல்

'பகையரசர்கள் எல்லோரும் விண்ணுலகத்தை அடையும்படி வெள்ளாறு என்னும் இடத்திலே கோபம் கொண்டவனான 'நந்தியினது கொண்டை மலர் மாலைக்கு இரத்தத்திற்கு ஏலாத விதங்களில் எல்லாம் வேண்டிக் கேட்கும் மகளிர்கள் இரவலே வருத்துகின்ற வாடைக்காற்று வர துன்பம் அடைந்திருந்து எந்நாளிலும் வருந்துபவர் பலர் ஆவர். பகைவரை வருந்தும் நந்தியினது நீதி இத்தன்மையது. ஆனால், நாம் அத்தொண்டை மாலையை எதிர்நோக்கி இருக்கும் தன்மை நல்லது (நல்லதன்று என்பதாம்) மனமே நீ வாழ்வாயாக! நீ வாழ்வாயாக!'

நந்தியினது மாலையை வேண்டி வருந்தும் மகளிர் பலர். ஆனால் நாம் அவனது தொண்டை மலர் மாலையை எதிர்நோக்கி இருக்கும் தன்மை நன்றன்று என்பதாம். இது பாடாண் திணையில் கைக்கிளை.

'எதிர்நோக்கும் பரிசு நன்றோ' என்பது நன்றன்று என்னும் பொருளை தந்தது. ஆதலால், புகழ்வது போலப் பழித்தல்; இது 'புகழாப் புகழ்ச்சி;

வீரவாத மன்னர் எல்லாம் விண்ணேற வெள்ளாற்று வெகுண்டோன்' என்று நந்தியின் வீரத்தைப் புகழ்கின்றார் புலவர்.

பாடல் – 20
தலைவன் பிரித்துழி இரங்கல்

"இரவோ மிகவும் நீண்டதாக விளங்குகின்றது; தென்றற் காற்றின் மிகுதி வருத்துகின்றது; என்னையே குறித்து இந்த நிலவு என்று சொல்லப்படும் இளமையான 'அன்று இந்நிலம் ஏழும் அனந்தபிரான், அடல் உக்ரமகோபன் அடங்கலர் போல, இன்று என் உயிர் அன்னவள் கொங்கையை விட்டு எங்ஙன் துயில்கின்றனன் ஏழையனே, 'என இப் பாடலில் தலைவன் கூறக் காண்கிறோம்.

நந்தியைத் திருமாலாகப் பாவித்துத் திருமால் உலகளந்த வரலாற்றை நந்திமேல் ஏற்றுக் கூறுகின்றார் புலவர்.

பாடல் – 21
வாழ்த்து

'ஏழை மார்துணை வாழி நந்திதன்
நீழல் வெண்குடை ஊழி நிற்கனவே'

'நந்திப் பல்லவனது குளிர்ந்த நிழலைத் தரும் வெண் கொற்றக் குடையானது உலகமுள்ள அளவும் நிலைபெற்று நிற்பது ஆகுக. ஏழையர்களுக்குத் துணையாக உள்ள அவன் வாழ்வானாக!'

இச் செய்யுள் குடைமங்கலம். (நாற்றிசையும் புகழ் பெருக வீற்றிருந்தான் குடை புகழ்ந்தன்று'(புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண் 35) என்பது சூத்திரம். குடை நிழலாவது, அரசனது தண்ணளியே ஆம் வலியோர் வருத்தாமல் எளியவரை நந்தி காத்தலால் 'ஏழைமார் துனை' என்கிறார் புலவர், ஊழி, உலகம் தோன்றி அழியும் காலம்.

பிறையும் தீயையே பொழிகின்றது. அறிவிலியாகிய நான் என்ன செயகுவேன்? அந்த நாளிலே இந்த ஏழுலகங்களையும் அளந்த திருமால் போன்றவனும் வலிய கொடுங்கோபத்தை உடையவனும் ஆன நந்தி மன்னனது பகைவர்கள் மனைவியைப் பிரிந்து வருந்தத் துயிலுதல் போல இப்பொழுது எனது உயிர் போன்ற மனைவியின் கொங்கை மேல் துயிலுதலை விட்டு அறிவிலியாக நான் எவ்வண்ணம் தூங்குகின்றேன்? தூங்கிலேன்!"

தலைவியை விட்டு பொருள்வயிற் பிரிந்த தலைவன், வினைமுற்றிய பின்பு தலைவியை நினைந்து இரங்குகிறான். ஆதலால், இது கற்புத் திணையில், தலைவன் பொருள் வயிற் பிரிந்து இரங்கல் துறை.

பிரிந்து இருப்பார்க்கு, ஒரு நொடிப் பொழுது ஓர் ஊழிக்காலம் போல் தோன்றும். ஆதலால், 'இரா நன்றும் நெடிதாய் அவர்கின்றது'. என்கிறான் தலைவன். எல்லோரும் 'நிலவு' என்று கூறுகின்றனர். ஆனால் தலைவனோ அது தனக்குத் தீமை விளைவிக்கின்றது என்பதை விளக்க 'நிலவு' என்னும் இளம்பிறை எனக்கு என்று எரியே சொர்கின்றது' என்கிறான்.

'நன்றும் நெடி தயிர்அவிர் கின்றதுஇரா,
நலிகின்றது மாருத சாவம், எனக்கு
என்றுஇந் நிலவு என்னும் இளம்பிறையும்
எரியே சொரி கின்றது, யாது செய்கோ?'

அகப்பொருள் துறையில் கிளவித் தலைவனது துன்பத்தைப் பாட்டுடைத் தலைவனது பகைவர் துன்பத்தோடு ஒப்பிட்டுக் கூறுதல் மரபு.

பாடல் : 22
தலைமகள் வருத்தம் கண்ட செவிலி கூற்று

'அரசர்கள் காண்பதற்குக் காத்துக் கொண்டிருக்க, அதனால் அவரது வரிசையான வெண்குடைகள் நெருங்கிய நீண்ட தலைவாயிலை உடைய பரியோனும், வில்லை ஒத்த நல்ல புருவத்தை உடைய மகளிர் மிகத் தழுவுகின்ற தோளை உடைய காஞ்சிபுரத்தில் இருக்கும் நந்தி மன்னனானவன் என்னுடைய மகனானவன் நன்மையைக் கொண்ட அந்த மன்னவனது தொண்டை மலர்மாலையின் மேல் தனக்கு உண்டான் தளர்ச்சியைச் சொன்னதற்குப் பின்போ அவளுக்கு இவ்வுலகத்தைக் கொடுப்பான்? இந்த செய்தியைத் தோழியே, நீ அவனுக்கு சொல்வாயாக!'

அரசர்கள் காத்து நிற்கும் வாயிலான் என்பது, நந்தி மன்னர் மன்னன் என்பதைக் காட்டும்.

‘ஒருவர் தமது குறையைச் சொல்லி கேட்பதற்கு முன்னே குறிப்பறிந்து கொடுப்பவர் வள்ளல். ஆதலால், நந்தி என் மகளின் குறையைக் குறிப்பால் அறிந்து அருள் செய்யாது, அவள் தன்குறையை சொன்ன பண்போ அவளுக்கு அரசைக் கொடுப்பான்? என்று செவிலி கூறுகின்றாள்.

இது அகப்புறத் திணையில் தலைவி வருத்தம் கண்டு செவிலி வருந்திக் கூறியது.

பாடல் – 23

பாண் : கண்டோர் கூற்று

‘உரைவரம்பு இகந்த உயர்புகழ்ப் பல்லவன்
அரசர் கோமான் அடுபோர் நந்தி
மாவெள் ளாற்று மேவலர்க் கடந்த
செருவேல் உயர்வு பாடினான் கொல்லோ
நெடுதல் துணி அரைச் சுற்றிப்
பாடு திறப்பத் தன்னால் பல்கண்ட
திரிந்த பாணன் நறுந்தார் பெற்றுக்
காஅர் தளிர்த்த காணக் கொன்றையின்
புதுப்பூப் பொலன் கலன் அணிந்து
விளங்கு ஒளி ஆனனன் இப்போது
இளங்கனி யானை எருத்தமிசை யன்னே!’

‘நேற்று, காலின் பரடு வெளிப்படத் துண்டாகிய ஆடையை இடையிலே சுற்றி, தனது கால் நடையினால் வீட்டு வாயில்கள் பலவற்றிலே சென்று அலைந்த பாணன், இப்பொழுது நல்ல மாலையை அணிந்து கார்காலத்தில் தளிர்ந்த காட்டில் உள்ள கொன்றை மரத்தினது புதுமலரைப் போன்ற நிறத்தை உடைய பொன்னாலான அணிகலத்தை அணிந்த கொண்டு மிக்க விளக்கத்தைப் பெற்றவனாய், மதிமயக்கத்தைக் கொண்ட இளம் யானையின் பிடரியின் மேல் இருப்பவனானான், சொல்லின் அளவைக்கடந்த, உயர்ந்த புகழை உடைய பல்லவனும், மன்னர்க்கு மன்னனும் ஆகிய கொல்லுகின்ற போரைச் செய்யும் நந்தி மன்னவன் பெரிய வெள்ளாறு என்னும் இடத்திலே பகைவரை வென்ற போர்க்குரிய வேலினது மேன்மையை அப்பாணன் புகழ்ந்து பாடினாளோ?’

பாணன் ஆடையின் துண்டு ஒன்றை இடையிலே சுற்றிக் கொண்டு அந்த ஆடை அகலம் இன்மையால் காலின்பாடு (கணைக்காலின் கீழ் உள்ள ஓர் உறுப்பு) ஆடையால் மறையாது வெளிப்படத் தன் காலாலே நடந்து வீடு வீடாகத் திரிந்தவன். அவன் நந்தி மன்னவனைப் பாடிப் பரிசு பெற்று மாலையும், பொற்காலமும் அணிந்து, இளயானையின் மேல் ஏறி அழகான தோற்றத்தோடு வருதலைக் கண்ட புலவர் இச்சிறப்பு இவனுக்கு எப்படிக் கிடைத்தது? நந்தி மன்னவனைப் பாடிப் பெற்றான் போலும்’ என வியந்து கூறுகின்றார்.

பாடல் – 24

இயலிடம் கூறல் : தலைவன் கூற்று

வறியவர்க்கு அன்னமிடும் மடங்களை உடைய மயிலாப்பூரை ஆள்பவனும், மதயானையை உடைய நந்தியும் ஆகிய, ஏழையர்கள் கேட்ட பொருளைக் கொடுக்கும் வள்ளளது நிறைந்து நீரை உடைய வளமான தொண்டை நாட்டிலே அன்னம் போன்ற நடையை உடையவரும் பெரிய அல்குலை உடையவளும் அழகிய இடமகன்ற வானத்தில் உள்ள மின்னலைத் தனது உடம்பின் அழகால் இளைக்கச் செய்பவளும், நூல் போன்ற மென்மையான இடையை உடையவளும் ஆகிய அம்மங்கையை மயிலே ஒப்பன ஆகும்;

இது தலைவன் பாங்கற் கூட்டத்திலே தோழனுக்குத் தான் கண்ட மங்கையின் இயல்பையும், அவள் இருக்கும் இடத்தையும் கூறல் ஆகும். ஆதலால், இது, இயல் இடங்கூறல் என்னும் துறை.

மயிலே நேர்வ' என்பதற்கு 'மயிலோ ஒப்பாவன்' என்று கூறி மயில் ஒப்பாகா எனவும் கொள்ளலாம். அன்ன நடையாளை, அலகுல் பெரியாளை, அங்கை அகல்வான் மின்னை மெலிவாளை, நூலின் இடையாளை' என்னும் வரிகள் தலைவியின் அழகுக்கு அழகு செய்வனவாம்.

இப்பாடலில், நந்தியின் கொடைச் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. வறியோர் சொன்ன பொருள் நல்கு வள்ளல்' என்பது புலவர் நந்திக்குச் சூட்டும் புகழாரம்.

பாடல் – 25

தலைவன் தன் நெஞ்சோடு கிளத்தல்

'மயில் கண்டால் மயிலுக்கே வருத்தி ஆங்கே
மான்கண்டால் மானுக்கே வாடி மாத
கொடுஞ்சுரம் போக்கு ஒழிநெஞ்சே !கூடாமன்னர்
எயில்கொண்டான் மல்லையங்கோன் நந்தி வேந்தன்
இகல்கொண்டார் இருங்கடம்பூர் நந்தி வேந்தன்
அயில்கொண்டான் காவிரிநாட்டு அன்னப் பேடை
அதிசயிக்கு நடையாரை அகல நூற்றேன்'.

பாடல் – 26

நந்தி மன்னன் வீரச் சிறப்பு

'வேலை ஏந்திய கடல் போன்ற சேனையை உடைய அரசர்களது ஆண்மையானது நூலாகிய கடலை அறிந்த புலவனும், சொல்லப்படும் வெண்மையான அலைகளை உடைய நான்கு கடலுக்கும் ஒரு தலைவனும் ஆகிய நந்தி மன்னவனது வளைந்த கடைப்புருவம் கோபத்தால் துடிககும் அளவிற்கு ஏற்ற அளவினது ஆகுமோ?"

நந்தி கோபத்தால் கடைப்புரவும் துஷப்படுதற்கு முன்னே பகை வேந்தரது ஆண்மை அழியும் என்பதாம். பகைவேந்தரது ஆண்மை, நந்தியின் கடைப்புருவம் துடிக்கும் அளவினது ஆகாது என்பது குறிப்பு. 'நூற்கடற் புலவன்' என்பது, நந்தியின் கல்வியை உணர்த்துகின்றது. 'நூற்கடற்கு ஒரு நாயகன்' என்பது அவனது ஆட்சி நாற்றிசைக் கடல் வரையில் பரவியுள்ளது என்பது விளக்குகின்றது.

இது நந்தியின் ஆற்றலைப் புகழ்வது. ஆதலால் பாடாண் பாட்டு.

பாடல் – 27

‘மிக்க ஆண்மையும் வலிமையும் உள்ளவனும் வெற்றி விளங்கும் சட்டையை அணிந்தவனும், வெறியலூர்ப் போரை வென்றவனும் ஆகிய நந்திக்கும் மனம் அன்பாக இருந்த மன்னவர்கள் திறை தந்திலர். அல்லாமல் சேரமன்னரும், சோழ மன்னரும், பாண்டிய மன்னரும், வடநாட்டு அரசரும் நிறைப்பொருளாகக் கொடுத்த வீரத்தையும், பெரிய மதத்தையும் உடைய யானைகள் இவை ஆகும். குதிரைகள் இவை ஆகும். அவற்றைப் பரிசிலர் கைக்கொள்வர்.’

இதில், நந்தி வெறியலூரை வென்றது கூறப்பட்டுள்ளது. நந்தியினது வெற்றிக் கஞ்சுகம் அணிந்த கோலம் வியந்து கூறப்பட்டுள்ளது. அவனுக்கு நட்பானவர் திறை தந்திலர். அவனைப் பகைத்த சேரர், சோழர், பாண்டியர் வடநாட்டரசு திறை தந்தனர் என்பதால், நந்தி தமிழ்நாட்டை மட்டுமின்றி, வடநாட்டையும் வென்று ஆட்சிபுரிந்தான் என்பது தெரிகின்றது. இது வெற்றிச் சிறப்பு. நந்திக்கு அரசர்கள் திறையாகக் கட்டிய அவனது கொடைச் சிறப்பும் விளங்குகின்றது. ஆகையால், இது பாடாண் திணைப் பாட்டு ஆகும்.

‘சேர சோழரும் தென்னரும் வடபுலத்து
அரசரும் திறைதந்த
வீர மாமத கரிஇவை பரிஇவை
இரவலர் கவர்வாரே’

என்னும் வரிகள் நந்தியின் வீரத்தையும், ஈரத்தையும் ஒருங்கே புலப்படுத்துவனவாம்.

பாடல் – 28

உடன்போக்கு செவிலி அறிந்து செவிலி இரங்கல்

கவரிச் செந்நெல்லையும் காடு போன்ற அழகிய பூஞ்சோலையும் உடைய வளமான காவிரி நாட்டை உடையவனும் குமரியாற்று தலைவனும் கங்கை நதிக்கு கணவனும் ஆகிய ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த வெற்றியுடை நந்திக்கு தெள்ளாற்றுப் போரிலே பயந்த மனத்தை உடைய அரசரது கூட்டம் செல்லும் இந்த தீயை உடைய காட்டிலே அழகான பற்களை உடைய என் மகள் இந்த ஆண்மகனோடு சென்ற விதம் என்ன?”

தலைவி தலைவனோடு உடன்போக்காகச் சென்ற பின்பு அதனை அறிந்த செவிலித்தாய் இந்த கொடிய வனத்திலே என் மகள் இவனோடு எப்படி சென்றாள்” என இரங்குகிறாள். இது செவிலி இரங்கல்.

பாடல் – 29

ஊசல்

‘ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ ஊசல்
உத்தரியப் பட்டாட ஆடாமோ ஊசல்
ஆடகப்பூண் மின்னாட ஆடாமோ ஊசல்
அம்மென்மலர்க் குழல்சரிய ஆடாமோ ஊசல்

கூடலர்க்கு தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த
கோழ்ற்றுப் படைநந்தி குவலமார்த் தாண்டன்
காடவர்க்கு முன்தோன்றல் கைவேலைப் பாடிக்
காஞ்சிபுர மும்பாடி ஆடாமோ ஊசல்'

செவ்வரி பரந்த கண்களை உடைய இளமையான மங்கையீர் ஊசல் ஆடுவோமோ? மேலாடையான பட்டு அசடையும்படி ஊசல் ஆடுவோமோ? ஆடகம் என்னும் பொன்னாலான அணிகலன்கள் ஒளி வீச ஊசல் ஆடுவோமோ? அழகிய மென்மையான மலரை அணிந்த கூந்தல் அவிழ்ந்து வீழ ஊசல் ஆடுவோமோ? தெள்ளாறு எனும் இடத்திலே பகைவர்க்கு வானுலகத்தை தந்தருளிய அரசர்கள் தங்கிய முற்றத்தையும் சேனையையும் உடைய நந்தியும் புகழினால் உலகத்திலே தோன்றிய சூரியன் போன்றவனும் காடவர்கோனுக்கு தமையனும் ஆகிய நந்தியினது கையிலுள்ள வேலாயுதத்தைப் பாடி' ஊசல் ஆடுவோமோ? அவனது தலைநகரான காஞ்சிபுரத்தையும் பாடி ஊசல் ஆடுவோமோ?

இச் செய்யுள் மகளிர் ஊசலாடுதலைக் கூறுவது. இது கலம்பக உறுப்பில் ஒன்று. நந்திக்கு காடவர் தம்பி எனத் தெரிகின்றது.

பாடல் – 30
செவிலி கூற்று

போரிலே விளங்குகின்ற இலை வடிவமான வேலை ஏந்திய பொன்னாலான வீரக்கழலை அணிந்த நந்தி மன்னனே! எனது பெண்ணான மென்மைத் தன்மையை உடையாள் ஊசலாடுதலை மறந்தாலும் ஒளியுள்ள கழலாடுதலையும் அம்மானை ஆடுதலையும் மறந்தாலும் உன்னுடைய பசுமையான இலையை உடைய அழகிய தொண்டை மலர் மாலையைப் பாடுதல் அல்லது வேறொன்றையும் பாடாள்.

இது தலைவி தன்பால் மேற்கொண்டுள்ள காதல் மிகுதியை செவிலி தலைவனுக்கு அறிவிப்பது பாட்டுடைத் தலைவனே **** தலைவனாகச் சுட்டி ஒருவர் பெயரை சொல்லப் பெறுவதால் அகப்புறத்திணை.

மங்கையர்கள் ஊசல் ஆடும் போதும் கழற்காய் ஆடும் போதும் அம்மானை ஆடும்போதும் பாட்டுப்பாடிக் கொண்டு ஆடுவர். அப்பாடல்களில் இடையிடையே தம் தலைவனைப் புகழ்ந்து பாடுவர். அப்படிப்பட்ட பாட்டையும் விளையாட்டையும் மறந்தாலும் தன் மகள் நந்தி மன்னனது தொண்டை மாலையைப் புகழ்ந்து பாடுதலை மறக்க மாட்டாள் என்று செவிலி கூறுகிறாள். அது அத்தலைவி நந்திமேல் கொண்ட காதல் மிகுதியை காட்டுகிறது.

'மெல்லிய என்பேதை
பூசல் இலங்குஇலைவேல் பொற்சுழல் நந்தியின்
பாசிலை யந்தொண்டை அல்லது பாடாளே'

பாடல் – 31
நந்திவர்மன் அரண்மனைச் சிறப்பு

பகைவரது படை வழியிடையே கெட பழைய பாறையிலே நடந்த குதிரை போன்ற நந்தி மன்னவனது அரண்மனை வாயிலின் வழியே பல குதிரைகளோடு பெருமை அணிந்த பெருமை உடையவராய் மயிலிறகினால் ஆன குடையை உடையவராய் சேர்ந்து வந்தவர். அந்த நந்தி மன்னனது பாடிய புலவர்களோ அல்லது அரசர்களோ?

இது நந்தியை பாடிய புலவர்கள் யானை குதிரை முதலியவற்றைப் பரிசாக பெற்றுக் குடை நிழலில் வருதலை உணர்த்துகின்றது. யானை மீது ஏறிக் குடை நிழலில் வருபவர் அரசர். ஆனால், நந்தியின் அரண்மனை வாயிலிலே அரசர்கள் யானையும் குடையும் இன்றி அடங்கிச் செல்வர். புலவர்கள் நந்தியைப் பாடி பரிசு பெற்று யானை மீது ஏறிக் குடை நிழலில் செல்வர். இதில் நந்தியினது கொற்றமும் கொடையும் கூறப்பட்டுள்ளது. இது பாடாண் திணைப் பாட்டு.

'கூடாற் படையாறு சாயப் பழையாறு வென்றான்' என்னும வரி நந்தியின் வீரத்தை வியந்து கூறுகின்றது.

பாடல் – 32
தலைவன் தலைவியின் நலம் பாராட்டல்

(கப்பலைக் கொண்ட மலர்மாலையை அணிந்த, வேலைத் தாங்கிய நந்தியாகிய, காஞ்சிபுரத்தை உடைய மன்னனது கழலை அணிந்த பாதத்தைத் தமது அறிவிலே கொண்ட புகழுள்ள நல்லவர்களுக்கும், அவனது திருவடியின் புகழைச் சொல்கின்றவர்களுக்கும் பொன்மாலை கிடைக்கும். ஆனால் நல்வினையை உடைய எனக்கு இந்த மின்னல் போல்வாள் நன்மையைக் கொண்ட புன்னகையை உடைய முகத்தைப் பிடர்க் கண்ணே சாய்த்து: வெட்கமுற்று நின்று, மென்மையாக, குறுக்காகப் பார்த்த பார்வையை விட மேலும் பெற வேண்டுவது யாதும் உண்டோ? (இல்லை)

இச்செய்யுள், தலைவியின் காதற்குறிப்பைத் தலைவன் உணர்தல்.

களவொழுக்கத்தில் கண்ணினால் உறவு கொள்ளுதல் காமத்திற் செம்பாகத்தினும் பெரிது ஆகும். அன்றியும் சிறக்கணித்து நோக்குதல் தன் காதலை வெளிப்படுத்தியதும் ஆகும். தலைவியின் குறிப்பை அறிய விரும்பி நின்ற தலைவனுக்கு அவளது புன்னகை நன்மை தந்தது. ஆதலில் 'நலங்கொள் முறுவல்' என்றான். அவளது அன்பைப் பெற்றமையால் தன்னை நல்வினை உடையவனாகக் கருதி, வினையேற்கு என்றான். தலைவியின் நோக்கமே. தனக்குப் போதுமானதாகும்! 'அதைவிட வேறாக வேண்டுவது ஒன்று இல்லை என்றான். நந்தியைப் புகழ்பவர் பொன்னாரம் பெற்று மகிழ்தல் போலத் தலைவன் தலைவியின் அருள் நோக்கம் பெற்று மகிழ்ந்தான்.

(நலங்கொள் முறுவல் முகம்சாய்த்து நாணாநின்று மெல்லவே விலங்கல் வைத்த முன்னோர்க்கு' எனத் தலைவியின் காதற் குறிப்பை, ஆசிரியர் பாடியுள்ள திறப் பாராட்டுக்கு உரியதாகும்.)

பாடல் – 33

தோழி தலைவன் சிறப்புறத் தானாகத் தலைவியை இற்செறிப்ப அறிவுறுத்தல்

'தன்னை மீறிய, தெள்ளாறு என்னும் இடத்தில் இருந்த பகைவரது முனைப்போரும் அந்நாளிலே அழியும்படி கோபித்தவனான நந்தியினது மலையுச்சியிலே பெரிய தேனிக்கள் தேனடையைக் கட்டும்; வட வேங்கட மலையில்உள்ள குளிர்ந்த மலைச் சாரலிலே உள்ள நீண்ட புனத்தினிடத்து தினையும் விளைந்தது. இனி நல்ல முயற்சியை உடைய தலைவனது துன்பமும், இத்தலைவியினது வாட்டமும் வாழ்க! (இனி என்னவாக விளையுமோ?)'

களவொழுக்கத்தால் தலைவியைக் கூடி இன்புற்றிருந்த தலைவனுக்குத் தோழி தினை விளைந்து விட்டதைப் பார்த்து இனி தலைவி தினைப்புனக் காவலுக்கு வாரான்; இனித் தலைவனது துன்பம் எவ்வாறாகுமோ' என தினைப்புனத்தைப் பார்த்துக் கூறுதல் போலக் கூறினாள். இதன் கருத்து அத்தினைப்புனத்து வேலிப் புறத்தே இருந்த தலைமகனுக்கு 'இனிக் களவொழுக்கத்தால் இவளை அடையமுடியாது; தினை விளைந்துவிட்டால் இனித் தலைவியைத் தாயார் இச்செறித்து விடுவர்; ஆகையால், நீ இவளை விரைவில் வரைந்து கொள்வாயாக எனக் கூறியது ஆம்.

பாடல் – 34

தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் செய்வது தினைப்புனத்திலே நின்ற வேங்கை மரத்தின் மேலே கோபித்து எழுந்த யானையினது கோபத்தை அந்நாளிலே போக்கிய வில்லைப் பிடித்த கையை உடைய வீரரது ஆண்மையைப் பற்றியதோ? மனத்தினுள்ளே இருந்த நெடுங்கோபம் தன்னோடு போரிடுதலைப் பார்த்து கலங்கிய மான் போன்ற தலைவி காட்டினிடத்தே செல்ல அது கண்டு முழங்கியதோ? (இது எது பற்றியதோ?)

தலைவி தலைவனோடு உடன்போகிய பின்பு ஊரார் கூறும் அரலைக் கேட்டுச் செவிலித்தாய் தோழியை வினாவிய போது தோழி செவிலிக்கு களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.

அறத்தொடு நிற்றலாவது களவொழுக்கத்தால ஒரு தலைவனைக் காதலித்த தலைவிதான் காதலித்த தலைவனைக் கைக்கொள்ளாதபடி தாய் தந்தையர் வேறொருவனுக்கு தன்னை மணமுடிக்க துணிந்த போது அவள் தான் ஒரு தலைவனை காதலித்ததற்கு உரிய காரணங்களை தோழியின் வாயிலாக கூறித் தன் கற்பு கெடாமல் காத்துக் கொள்வது ஆகும். அறம்—ஒழுக்கம்; அறத்தொடு நிற்றல்— ஒழுக்கத்தோடு நிற்றல், அறத்தொடு நிற்றல், எளித்தல் முதலாவதாக ஏழு வகைப்படும். அவற்றுள் இது ஏதீடு கூறி அறத்தொடு நின்றது; ஏதீடு—காரணம் காட்டுதல்.

"தலைவி தினைப்பனம் காத்து நின்ற போது அப்புனத்திலே நின்ற வேங்கை மரத்தை ஒரு களிறு கண்டு அதைப் புலி என்று எண்ணி அதன் மேல் பாய்ந்து கலங்கிற்று. அதனைக் கண்டு தலைவி நடுங்கி நின்றபோது அவ்வழியே வந்த ஓர் ஆண்மகன் தன் கை அம்பு ஒன்றினால் அந்த யானையால் உண்டான அச்சத்தால் அவளும் அவனைத் தழுவி நின்றாள். அன்று முதலாவதாக அவள் 'அவனுக்கே தான் உரியவள்' என்றும்

'அவனை அன்றி வேறொருவனை மணந்தால் கற்புக் கெடும்' என்று எண்ணி இருந்தாள். அவள் கருத்திற்கு தாய் தந்தையார் ஒவ்வாமையால் தன் கற்பைப் பாதுகாக்க வேண்டி அவள் தன் நாணத்தை விட்டு அவனுடன் சென்றாள். ஆதலால் அவள் தீங்கற்றவள்" எனத் தோழி செவிலிக்கு கூறினாள்.

'மனத்திலே நின்ற வெஞ்சினம் மலைத்த'லாவது தாய் தந்தையர் தனது கருத்திற்கு இசையாமையால் எழுந்த சினம் வருந்துதல் ஆகும்.

பாடல் – 35
தலைவி கூற்று

குருக்கோட்டையில் இருந்த பகையரசரது போர் செய்கின்ற யானையின் முகத்திலே தைத்த அம்பு பூமியிலே போய்ப் பதியும்படி நின்ற வில்லை உடையவனான பூமிக்கு பொருந்திய செம்மையான ஒப்பற்ற நீதியை உடைய பசுமையான மாலையை அணிந்த குளிர்ந்த கடல் ஒலிக்கும்படியும் காணலாம்; அசைகின்ற இளந் தென்றற்காற்று வீசும்படியும் பார்க்கலாம்; நிலவை மிதக்கின்ற இளம்பிறை நிலைவை மிகுக்கும்படியும் காணலாம்.

நந்தியின் அருளைப் பெறாத தலைவி கடல் ஒளியும் தென்றலும் இளமதியும் தன்னை வருத்துதல் கண்டு நந்தி மன்னனது அருளைப் பெற்ற போது அவை வருந்தாது இன்பம் தருதலைக் காணலாம் என்றாள். இது தலைவி இரங்கல்.

பாடல் – 36
தோழிக் கூற்று : தலைவன் சிறைப்புறமாகச் செறிப்பு அறிவுறுத்தல்

'மழையினின்று ஒழுகுகின்ற வெண்மையான அருவியே! தினைத் தாள்களே! எங்களது பொன் போன்ற தலைவன் வந்தால் ஒளியுள்ள சூரியன் சந்திரன் போன்ற அரசனான நந்திப் பல்லவனது மலையினிடத்தே மலர்களைத் தோற்றுவித்த வேங்கை மரமாகிய பெரிய சோதிடனது தந்திரத்தை சொல்லுங்கள்.

இது தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி அவனுக்குத் தலைவி இச்செறிக்கப்பட்டதை அறிவுறுத்தியது.

குறிஞ்சி நில மக்கள் வேங்கை மரம் பூத்தால் அக்காலத்தை தங்கள் மணத்திற்குரிய காலமாகக் கொள்வர். ஆகையால் வேங்கை மரத்தை மணநாள் கூறும் சோதிடனாகக் கூறியுள்ளார் புலவர்.

"தலைவி" தினைப்புனக் காவலை விட்டு வீட்டு அடைந்துவிட்டாள். வேங்கை மரமானது பூத்து மணநாளை உணர்த்திவிட்டது. இனி அவளது தாய் தந்தையர் அவளை வேறொருவருக்கு மணம் பேசுவதற்கு முன்பே நீ அவளை வரைந்து கொள். இனிக் களவொழுக்கத்தால் அவளைக் காணமுடியாது" என்பது இதன் குறிப்பு ஆகும்.

நந்தி சூரியன் நாள்தோறும் தோன்றி மறைதலில் தவறாதது போலத் தவறாத நீதியை உடையவன் என்பதும் சந்திரன் போலக் குளிர்ந்த அருளை உடையவன் என்பதும் 'ஒண்சுடர் போன்ற மன்னவன் நந்தி' என்னும் தொடரின் பொருளாகும்.

பாடல் – 37
மன்னன் உலாக் கண்ட தலைவி கூற்று

ஆணைச் சக்கரத்தை உடைய அரசனே! பல்லவர் குலத்தலைவனே! உனது காலில் காணப்படும் இத்தழும்புகள் முகபடாத்தை அணிந்த வலிய மத யானையின் பிடர் பட்டதினால் உண்டாகிய தழும்புகள். அந்த தழும்பிற்காக கீழாக இந் நிலவுலகத்தில் உள்ள அரசர்கள் வந்து நாள்தோறும் வணங்கியதால் உண்டான தழும்பைப் பார்த்தோம். வாழ்வாயாக! உனது தாயாரான இடைச்சியர் அடிக்கும் கயிற்றினது அடிபட்ட வலிய நிலைபெற்ற நீண்ட தோளின் தழும்பை பார்த்திலோம். அது தோன்றாமைக்கு காரணத்தை நீ சொல்வாயாக:

இச் செய்யுள் புறத்திணையில் பாடாண் திணைப் பாட்டு. இதில் புலவர் நந்தி மன்னனைத் திருமாலாகக் கருதி கூறுகின்றார். திரு'மாலின் அவதாரமான கண்ணன் இளமையில் குறும்பு செய்ததால் அவளது தாயான இடைச்சி அவனை அடித்தாள். அதனை உட்கொண்டு ஆசிரியர் 'பல்லவனே நீ கண்ணபிரானானால் உன் மேல் ஆய்ச்சியர் கயிற்றால் அடித்த தோள்வடுக் காணவில்லயே? அதன் காரணத்தைச் சொல்லுவாயாக' என்கிறார்.

'ஆழி மன்னவ அன்னையர் ஆய்ச்சியர்
அடுங்கயிற்று அடிபட்ட
பாழி மன்னெடுத் தோள்வடுக் கண்டிவம்
பல்லவ பகர்வாயே!'

பாடல் – 38
தோழி கூற்று

'பகையரசரது யானைகள் மலைச்சிகரங்களைப் போல இறந்து வீழத் தென்னாறு என்னும் இடத்திலே கண்கள் சிவந்தவனும், பாண்டியனாகிய தொண்டி என்னும் நகரத்தைக் கைப்பற்றிய பிரானும், நந்தி என்னும் பெயருடையவனும் அரசர்கள் வணங்கும் கோவும் எங்கள் மன்னனும் ஆனவனே. முன் நாளில் மூன்று வகையான நீரை உடைய மகர மீனைக் கொண்ட நீண்ட பாற்கடல் சொல்லப்படும் அழகைக் கொண்ட பெரிய நீர்த்துளிகளைக் குளிர்ந்த ஆகாயத்திலே எடுத்து எறியும்படி மந்தரமலையை மத்தாக வைத்து கழற்றிய திருமால் என்று அறஞர்கள் கூறுவார்கள்.

இச்செய்யுளில் 'நந்தியை திருமாலாகக் கூறுவர்' என்கிறார் புலவர். இதில் நந்தி, பாண்டியனது தொண்டி நகரை வென்றது கூறப்பட்டுள்ளது. இது புறத்திணையில் பாடாண் பாட்டு ஆகும்.

'..... மன்னர் யானை
சிகரங்கள் போல்மடியத் தெள்ளாற்றுக்
கண்சிவந்தான் தென்னன் தொண்டி
நகரம்கைப் படுத்தபிரான் நந்தி'

என்னும் வரிகள் நந்தியின் 'போரடு திரு' வினைப் புலப்படுத்துவனவாம்.

பாடல் – 39
தலைவி கூற்று

'நங்கள்கோத் தொண்டை வேந்தன்
நாமவேல் மன்னர்க்கு எல்லாம்
தங்கள்கோன் அங்க நாடான்
சந்திர குலப்ர காசன்
செய்யகோல் செலுத்தும் என்பர்
எங்கள்கோல் வளைகள் நில்லா
விபரீதம் இருந்த வாறே'

எங்களது மன்னனும் தொண்டை நாட்டிற்கு அரசனும் அச்சகத்தை தரும் வேலை உடைய அரசர்களுக்கு எல்லாம் அரசனும் அங்கநாட்டை உடையவனும் சந்திர குலத்திற்கு ஒளியை செய்பவனும் ஆகிய நந்தி மன்னவன் சந்திரனைப் போன்ற குடையின் நிழலிலே செங்கோலை செலுத்துவான் என்று கூறுவர்; ஆனால் எங்களது கையில் அணிந்த வளைந்த வளையல்களோ கையிலே நிற்க மாட்டா. மாறுபட்ட நிலை இருந்த விதம் இதுவாகும்.

இது நந்தியைக் கண்டு காமுற்று மகளிர் கூறிய கூற்று, உலகில் எல்லோரையும் இனிதே காக்கின்ற நந்தி நாங்கள் மட்டும் அவன் மேல் கொண்ட காதலால் கை வளையல்கள் கழன்று வருந்தும்படி செய்கின்றானே! அவனது அருளின் இப்படிப்பட்ட ஒரு மாறுபாடு இருப்பது என்னே! என இரங்கி மகளிர் கூறுகின்றனர்.

காதல் கொண்ட மகளிர்க்கு உடல் இளைத்தலால் கை வளையல் கழலும் எனப்பாடும் இலக்கிய மரபு.

இஃது அகப்புறத் திணையில் தலைவி தலைவனது இயற்பித்தல். இதில் நந்தி சந்திர வம்சத் தலைவன் என்றும் அவன் அங்க நாட்டை ஆண்டான் என்றும் புலவர் கூறியுள்ளார்.

பாடல் – 40
தோழி ஐயம் தீர்த்தல்

இந்த தலைவி குறையாத வெற்றியைப் பெற பகைவரைக் கொலலும் போரினது வலிமையினாலே போர் செய்து போர் முடித்த பின் பருந்துகள் சுற்றும் களிற்றின் மேல் ஏறி உயர்வடையும் பல்லவர்க்கு அரசனானது நந்தி மன்னனது மாமல்லபுரத்தைக் கூறுதல் அல்லாமல் வேறொரு நகரையும் கூறான்; இவளது இளமையான கொங்கை அந்நந்தியின் தொண்டை மலர் மாலை மணக்குமேயன்றி வேறு மலரின் மணம் வீசாது; அன்றியும் இவளது உடம்பும் அவனது வளர்கின்ற தொண்டை மலரின் மணம் வீசுதலன்றி வேறு மலர் மணம் வீசாது. நாம் இதனைச் சொல்வதற்கு வெட்கமுறுவது எதற்கு?

இயற்கைப் புணர்ச்சியில் தலைவனைக் கூடிவந்த தலைவியைக் கண்ட தோழி அவளது தோற்றத்தையும் அவள் மேலும் கமழும் மணத்தையும் அவர் ஒழுக்கத்தையும் கண்டு ஐயுற்று அவற்றினாலேயே பயம் நீங்கினாள். இச்செய்யுளில் தலைவி நந்தியினது

நகரமான மாமல்லென புகழ்தலையும் அவள் கொங்கை மீதும் உடல் மேலும் வனது தொண்டை மலர் மணம் கமழ்தலையும் கண்டு தோழி ஐயம் நீக்கி 'இவள் நந்தியைக் கூடி வந்தவன்; நாம் ஏன் நாண வேண்டும்' என்று தன்னுள்ளே கூறினான்.

..... பல்லவர் கோன் நந்தி மல்லையன்றிக் கூறாள்; இவள் இளங் தொங்கை அவன் வளர் தொண்டையல்லால் நாறாது; இவள் திருமேனியும்; நாம் என்கொல் நாணுவதே?" என்பது தோழிகூற்று ஆகும்.

இதில் நந்தி வெற்றி பெற்றுக் களிற்றின் மேல் வருதல் கூறப்பட்டுள்ளது. அஃது இரண்டாவது செய்யுளிலும் வந்துள்ளது.

பாடல் 41
தோழி கூற்று

'போர் இல்லாவிடில் தன் வாழ்நாளைப் பயனற்றது எனக் கோபிக்கும் மத மயக்கத்தை உடைய யானைப்படையையும்; வெற்றி தரும் வேலையும் கொண்ட பகைவரது குலத்திற்கு எமனே! கொங்கு நாட்டை ஆள்பவனை! இந்த அழகிய மாந்தர்களுக்கு எதிரே உனது நல்ல பொன்னாலான வீரக் கழலை அணிந்த இரண்டு அடிகளையும் வணங்கியவரைப் போல் அணிகலத்தை அணிந்த மார்பிலே விளங்குகின்ற பொன்னினாலே செய்யப்பட்ட புதிதான மென்மையாகிய தொண்டைமலர் மாலையை வெட்கமுறாது தந்தருள்வாய்; நீ அப்படி செய்யாவிட்டால் உனது நீதி வளையாதிருத்தலுக்கு ஒரு குறை உளதோ? (இல்லை) நீ இதற்கு மறுமொழி சொல்வாயாக!

'நந்தி மன்னனே! இம்மகளிர்க்கு முன்பே நாணமுறாது உனது தொண்டை மலர் மாலையை எனக்குத் தருவாய். நீ அவ்வாறு தராவிட்டால் உனது நீதி தவறாமைக்கு ஒரு குறை உண்டோ இல்லையோ நீ சொல்வாய்' என்று தலைவி கூறுகிறாள். 'குறை இன்றோ' என்று இருப்பின் சிறந்திருக்கும். குறை — குற்றம், குறைவு. நந்தியைக் 'கொங்கன்' என்றது நாட்டை ஆளுதல் முற்றியது.

'நந்தியே! உனது பாதங்களை வணங்கியவர் அருள் பெறுதல் போல, எனக்கு மாலையை அருள்வாய்' என்பது உவமையணி.

பாடல் – 42
தோழி கூற்று

'தமது செங்கோலை வளையச் செய்த, விளங்குகின்ற சேரரும் சோழரும் பாண்டியரும் அரசாட்சி செய்கின்ற நாட்டின் மேல் சென்று அவரது செங்கோலைச் செம்மை செய்து அந்த அரசர்களையும் கோபித்த வெற்றியை உடைய நந்தி மன்னனே! செம்மையான வளைத்த வளையலை அணிந்த கையை உடைய இம்மங்கையும் வாட்டமுற்று உடம்பில் நிறைந்த அழகு குறையவும், மற்றைய இளம் பருவ மகளிர் தமது கையில் உள்ள அழகிய வளைவான வளையல்களை இழக்கும்படியாகவும் நீ அரசாட்சி செய்வது என்ன முறையோ? இனி நீ இதைச் சொல்வாயாக'.

நந்தியே, நீதி தவறிய மன்னர்களைக் கோபித்து நீதி செலுத்திய நீ இம்மங்கையர் வாட அரசாள்வது நீதி ஆகுமோ? ஆகாது. ஆதலால் அவர்களுக்கு விரைந்து அருள் செய்வாயாக! என்பது கருத்து.

'செங்கோல் வளைக்கை இவளும் துவண்டு
செறிமாமை வாட ழிலார்
அங்கோல் வளைக்கை இளையோர் இழப்ப
அரசாள்வது என்ன வகையோ?'

இதில், தமிழ்நாட்டு மூவேந்தரையும் நந்தி வென்ற வரலாறு கூறப்பட்டுள்ளது.

பாடல் – 43

தலைவன், கார் கண்டு பாகனொடு கிளத்தல் 'ஒலியை உடைய கடல் சூழ்ந்த உலகத்திலே ஒப்பற்ற நீரைக் கொடுக்கும் பண்புடைய மேகமே! கடல் நீங்காத கொடையும், குளிர்ந்த அருளையும் உடைய நந்திப் பல்லவனது ஊரின் அளவு வரையிலோ உனக்கு வழியாகும்? உன்னைக் கண்டால் எந்த நாளிலும் புகழ் நிறைந்த தொண்டையின் பல மலர்கள் நிறைந்து கிடக்கும். வீதியினிடத்தே வந்து கண் திறந்து பார்க்காதவளான என் தலைவி, உடம்பு வெளுத்து முகவாட்டம் அடைவாளே? தான் சென்ற போரை முடித்து மீளும் தலைமகன், மீண்டு வரும்போது, தலைவியரிடத்துத் தான் வருவதாகக் குறித்த கார்காலத்திற்கு கரிய மேகம் தனக்கு முன்னே வானத்தில் செல்லுதலைக் கண்டு வருந்தி, "மேகமே நீ செல்வது என் தலைவியின் ஊர் வரையிலுமோ இடை வழி மட்டுமோ சொல், நீ எனக்கு முன்னே என் ஊர்க்குச் சென்றால் தலைவி, "கார்காலம் வந்துவிட்டது. தலைவர் வந்திலா' என எண்ணி உடம்பு வெளுத்து விடுவாள்" என்கிறான். (ஆகையால் எனக்கு முன்னே நீ செல்லாதே' என்பது குறிப்பு) இவ்வாறு மேகத்தைக் கண்டு கூறினும் அது 'விரைவில் தேரைச் செலுத்து' எனப் பாகனுக்கு அறிவித்தது ஆகும்.

இப்பாடலில் வரும், 'ஒழியா வண்கைத் தண்ணருள் நந்தி' என்னும் தொடர் நந்தியின் கொடைப் பண்பை சுட்டுவதாகும்.

பாடல் – 44

தலைவி இரங்கல்; நிலவை வெறுத்து உரைத்தல் 'மேலான நீண்ட வட்ட வடிவமான இவ்வுலகத்திலே உயர்ந்த வாளை மீனோடும் சங்கோடும் நீர்ப்பறவையோடும் வயலிலே செல்லும் காவிரி ஆற்றிலே விளங்குகின்ற மேகத்தைக் கண்டு ஒப்பற்ற அரசனும் உறையூராருக்குத் தலைவனும், கடற்கரை மணலிலே பெருகி ஓடுகின்ற நீண்ட உப்பங்கழிகள் சூழ்ந்த மயிலாப்புரி பெருமானும் ஆகி நந்தியின் உயர்ந்த முடிமேல் 'அணிந்துள்ள தொண்டைமலர் மாலையை நினைத்துச் சோர்கின்ற நான் வாட்டமுறக் குளிர்ச்சியுள்ள சந்திரரே, நீ தீயை வீசுதல் தக்கதாகுமோ? "என்கிறாள்; மதி சந்திரன் இது நிலவை வெறுத்தல்.

'மயிலைப் பெருமானது பேரணி நீள்முடிமேல்
தருகோதை நினைத்து அயர் வேன்மெலியத்
தழல் வீசுவ தோகுளிர் மாமதியே'

எனத் தலைவி நிலவை வெறுத்துக் கூறுவதாக வரும் பகுதி குறிப்பிடத்தக்கதாகும்.

பாடல் – 45
தோழி கூற்று : தன் நெஞ்சொடு கூறியது

'மதியம் எரிசொரியும் மாலை அம் மாலை:
மறந்ததும் புலராது கங்குலாம் கங்குல்:
கதிர்செய் அணிவண்டு காந்தாரம் பாடக்
களிவண்டு புகுந்து உலவும் காலமரம் காலம்:
பதியின் வளர்ந்த நறுந் தொண்டையங்கோன் நந்தி
பல்லவர்க்கு நேராத பாவையர் தம் பாவை
விதியின் விளைவுகண்டு யாம், இருப்பது அல்லால்,
வினைமற்றும் உண்டோரும் மெல்லோத மாட்டோ?'

'அந்த மாலைக் காலமோ, சந்திரன் தீயைப் பொழியும் மாலைக் காலமாகும். இரவோ, மறதியுள்ள விடியாத இரவாகும்; இக்காலமோ ஒளி வீசுகின்ற அழகிய வண்டு காந்தகாரம் என்னும் பண்ணைப் பாடக் களிப்பை உடைய வண்டுகள் புகுந்து உலாவுகின்ற காலம் ஆகும். ஊரிலே வளர்ந்த நல்ல தொண்டைமலர் மாலையை அணிந்த அழகிய அரசனான நந்திப் பல்லவனுக்குக் கொடுக்க மனம் இசையாத மாதர்களினது மகளிரின் ஊழ்வினையின் விளைவைப் பார்த்து தாம் இருப்பதே அல்லாமல் நமது மென்மையான கூந்தலையுடையவனிடத்து வேறாகச் செய்யத் தக்க செயலும் உண்டோ(இல்லை)

பெண் வண்டு காந்தாரம் பாட, ஆண் வண்டு புகுந்து உலவும் வசந்த காலத்திலே, விடியாத இரவில், நெருப்பான மதியால் வருந்தும் தலைவியைக் கண்டு, தோழிகூறியது.

'நந்திப் பல்லவனுக்கு மகளைக் கொடுக்க மனம் நேராத மாதர்களது மகளிர் படும் துன்பத்தைப் பார்த்து நாம் இவளைப் பல்லவனுக்கு கொடுக்க இசைந்துவிட்டோம்; இனி நாம் அவளுக்காகச் செய்ய வேண்டியது என்ன? அவன் அவளை மணந்து கொள்வான்' என எண்ணிக் கூறினாள் தோழி.

காந்தாரம் - ஒரு வகைப் பண். பெண் வண்டு காந்தாரம் பாட, ஆண் வண்டு அதனிடத்தே புகுந்து உலவும் காலம் என்பது, தலைவியின் இன் குரலைக் கேட்டு தலைவன் அவளிடத்தே வந்து சேர்ந்து வாழும் காலம் என்ற பொருளை உள்ளுறையாகக் கொண்டது ஆகும்.

பாடல் – 46
தலைவி கூற்று

'மாட்டாதே இத்தனைநாள், மால்நந்தி வான்வரைத்தோள்
பாட்டாதே, மல்லையர்கோன் பரியானைப் பருச்சுவடு
காட்டாதே, கைதைப் பொழில் உலவும் காவிரிநீர்
ஆட்டாதே வைத்து என்னை ஆயிரமும் செய்தீரே!

தோழிகளே, இவ்வளவு நாளாக என்னை அம்மன்னனோடு கூட்டாமலும், திருமாலான நந்தி மன்னனது பெரிய மலை போன்ற தோளைப் பாடாமலும், மல்லையர்க்குத் தலைவனது குதிரைக் காற்சுவட்டையும் காட்டாமலும், தாழைச்

சோலையினிடத்தே உலாவுகின்ற காவிரி ஆற்றின் நீரிலே அன்னை நீராட்டாமலும் சும்மா வைத்து வேறு பல காரியங்களையும் செய்தீர்களே? (ஏன் அவ்வாறு செய்தீர்கள்)

இது, தலைவி தோழியரிடத்துத் தன் துயரம் கூறி இரங்கியது, இதில் தலைவி தன் துயரம் தீர்வதற்கு வழி கூறுகிறாள்.

பாடம் – 47
பாங்கன், தலைவனை வியத்தல்

'கொடிய கோபம் தணியாத யானையை உடைய நந்தி மன்னனுக்கு உரிய நாட்டைச் சார்ந்த இந்தத் தலைவிக்குச் சிவந்த வாய்; மிக கருமையான கண்; அழகிய கொங்கைகள் நெருங்கி வளர்வதனால் ஒடியும் இடை பூங்கொம்பு போன்றது. இவனது அல்குல் மிகவும் அழகிய அணிகலத்தை உடையது. தேன் ஒழுகும் மலரை அணிந்துள்ள கூந்தல் என்று புகழந்து கூறினால் அவை யாராலும் விரும்பப்படுவன அன்றே? நாம் அங்கே சென்று மனம் கசிய அவனது நகரத்தை வணங்கினோம்; நம்முடைய உயிர் அதற்கு ஏற்ற அளவுடையது அன்று.

தலைவன் தலைவியை வருத்திய இயல்பைக் கூற கேட்டுப் பாங்கன் கூறுதல்.

இச்செய்யுளில் பின் இரண்டு அடிகளின் பொருள் பொருத்தமாக இல்லை: வேறு சரியான பாடமும் கிடைக்கவில்லை.

பாடம் – 48
இயலிடங் கூறுதல்

அரசர்கள் புகும் அரண்மனையைக் கட்டியவனும், பெருமையோடு தோன்றியவனும் ஆகிய நந்திப் பல்லவனது நாட்டிலே நகைக்கின்ற முல்லை அரும்பைக் கண்டது போன்ற வெண்மையான பற்களினாலே தனித்தவனான எனது மனத்தைக் களவு செய்து தலைவியினது முகத்திலே உள்ள கண்களாகிய கெண்டை மீன்களது அளவைப் பார்த்தால் அவை உள்ளங்கையின் அளவே ஒக்கும்!

தனது உடல் மெலிய காரணம் கேட்ட பாகனுக்கு ஒரு மங்கையைக் கண்டு அறவு கலங்கினதாகக் கூறினான். பின்பு பாகன் அவனைத் தேற்றி, "உனது அறிவை கலங்கச் செய்த அம் மங்கை எங்கே உள்ளாள்? அவள் இயல்பு சொல்? நான் அவளைத் தேடி உனக்கு உரியவன் ஆக்குவேன்? என்ற போது தலைவன், தான் கண்ட பெண்ணின் இயல்பு, இடம் கூறினான். இது இயலிடம் கூறல் ஆகும்.

பெண்களின் கண்களுக்கு குடங்கையை - உள்ளங்கையை அளவாகக் கூறுதல். 'குடங்கையின் அகன்றவழி' (நைடதம்) என்பதனால் அறிப்பப்படும். 'அரசர் புகும் வளவு கண்டான்' என்பதால் நந்தி ஒரு பெரிய அரண்மனையைக் கட்டினான் எனத் தெரிகின்றது. (எந்த இடம் கூறப்படவில்லை, காஞ்சிபுரமாக இருக்கலாம்)

'கண்கள் ஆய கயற்குலம்' — உருவக அணி.

பாடல் – 49
பாட்டுத் தலைவன் பெருமை கூறல்

குலத்தின் முறைமையும், அக்குலத்திற்குப் பொருந்தாமல் தாங்கள் பழகி வந்த குடி வாழ்க்கையின் தொழிலையும், தாங்கள் கொண்டுள்ள படையின் குறைவையும், வெற்றியின் சிறுமையும், நினைத்துப் பாராத பகைவர் அழியும்படி தெள்ளாறு என்னும் இடத்திலே போர் செய்து வென்ற செங்கோலை உடைய நந்தியே! வேற்றுப் புலத்து அரசரைத் தோற்று ஓடச் செய்த புகழ் பொருந்திய மன்னவனே, இந்த மண்ணில் வெற்றிக்கு சாட்சியாக நின்ற மன்னவனே! தொண்டைநாட்டு வேந்தனே! சொல்வதற்கு அரிய பெரும்புகழ் உன்னதே அல்லாமல் வெறொருவர்க்கும் பொருந்துமோ நீ சொல்வாயாக!

இச்செய்யுள் நந்தியின் வெற்றி புகழ் எடுத்துக் கூறுவதால் புறத்திணையில் பாடாண் தினைப் பாட்டு ஆகும்.

இச்செய்யுளில் இடம்பெற்ற 'தெவ்வர் தேயத் தெள்ளாற்றில் செருவென்ற செங்கோல் நந்தி" என்னும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிலர், 'பூ வலயந்தனில் கரியாய் நின்ற மன்னா! என்பது அமங்கலப் பொருள் (எரிந்து சாம்பலாகப் போன அரசே) தந்தது என்பர்.

பாடல் – 50
தோழி, தலைவியின் நிலை கிளைத்தல்

நீண்ட முடியிலே கோவைமலர் மாலை தாங்கி, வெற்றியுள்ள நந்தி மன்னவனே! காஞ்சிபுரத்தாரது அரசனே! எப்பொழுதும் முறைமையை நினைக்கும் எங்களது தலைவனே! பூங்கொம்பு போன்ற தலைவி, சந்திரனையும் மாலைப் பொழுதையும் கண்டு, மயக்கமாக அன்பையும் வண்டையும் ஒத்த கரிய ஒளியுள்ள கண்கள் கண்ணீர் மாலை மாலையாக ஒழுகும்படி கொண்டால், அவளுக்கு ஆறுதல் கூறும் வழியை அறியேன்'

இது, தோழி தலைவனுக்குத் தலைவியின் துயரம் கூறி வரைவு கடாயது.

இச்செய்யுளுக்குச் சரியான பாடபேதம் கிடைக்காமையால் கிடைத்தது கொண்டு ஒருவாறு பொருள் கொள்ளப்பட்டுள்ளது.

பாடல் – 51
தோழி கூற்று

உடம்பிலே பசலை உண்டாகுக; உடம்பின் அழகு அழிக; அயலவர் எல்லோரும் பழிச்சொல் சொல்லுக; கை வளையல்கள் கழன்று போக; ஊரில் உள்ளவர்கள் புறங்கூறுக; கரையோடு அலைமோதுகின்ற கடல் சங்கும்; இளைய பெண்சங்கும்; எடுத்தெறியும் உப்பங்கழியை உடைய மயிலாபுரியை ஆள்பவனும் நீதியில் மேம்பட்டவனுமான நந்திமன்னனும் எங்களுக்கு மட்டும் நீதி வழங்காது கொடியவன் ஆகுக. இவைகள் அனைத்தும் பொருந்திய தலைவி உலகத்தில் வாழ்ந்திருப்பது இனி உண்டோ? (இல்லை)

தலைவன் அருளர் செய்யாமையால், தலைவியுற்ற துன்பங்கண்ட தோழி வருந்தி, எல்லோருக்கும் நீதி வழங்கும் மன்னவன் எங்களுக்கு நீதியற்றவனான். ஆதலால், இனி இவள் உலகில் வாழ்வது இல்லை. அதனால் இவள் உடல் பசலை பூத்தாலென்ன? அயலோர் அலர் தூற்றினாலென்ன? வளையல் கழன்றால் என்ன? ஊரவர் புறங் கூறினாள் என்ன? என்கிறாள்.

இது, அகப்புறத்திணையில் தோழி தலைவியின் தவினழிவு கண்டு இரங்கல் 'எங்களவே கொடியனாக' என்று வருவதால், தலைவனது இயற்பழித்தல் துறையாகவும் கொள்ளலாம்.

பாடல் – 52

தலைவன் தலைவியை வியத்தல்

மனமே! விளங்குகின்ற ஒளியையுடைய அழகிய இலை வடிவமான வேல் போன்ற கண்களை உடையவளும் தெள்ளாறு என்னும் இடத்திலே பகைவரை வென்ற நந்தியினது மயிலாப்பூரை ஒத்தவளுமான இவளுக்குப் பூங்கொடி போன்ற இடை உண்டு; இடை இல்லை என்றால் இளமையான கொங்கைகள் எவ்வண்ணமாக மார்பில் இருக்கும்?

இனி, இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைக் கூடிய தலைவன் புணர்ச்சியின் பின்பு தலைவியின் நலம் பாராட்டல் தலைவிக்கு இடை உண்டு என்பதைத் தருக்கம் கூறி நிலை நாட்டுகிறான் தலைவன். 'இவளுக்கு இடை இல்லை என்று கூறுகிறார்கள். இல்லாத இடையின் மேல் எதுவுமில்லை இருத்தல் இயலாது; இவளுக்கு இடை தெரியாவிட்டாலும், மேலே இளங்கொங்கைகள் இருக்கின்றன; ஆதலால் இவளுக்கு இடை உண்டு' என்பது தலைவன் துணிவு.

மங்கையரை ஊருக்கு ஒப்பிடுதல் நூல் வழக்கு. இங்கே மயிலை அன்னாள்' எனத் தலைவியைக் குறிப்பிடுகிறார் புலவர்.

பாடல் – 53

தலைவன் புறந்தொழுக்கத்தைத் தலைவி கூறி வருந்தல்

'தனக்குஉரிய என்கொங்கை தான்பயந்த
மடிகளிற்றுக்கு ஆக்கித் தன்பால்
எனக்கு உரிய வரைமார்பம் எங்கையர்க்கே
ஆக்கினான் இகல்வேல் மன்னர்
சினக்கரியும் பாய்மாரும் தெள்ளாற்றில்
சிந்துவிக்க செங்கோல் நந்தி
மனக்குஇனியான் அவன்இட்ட வழக்கு அன்றோ
வழக்கு இந்த வையத் தார்க்கே'

'பகையைக் கொண்ட வேலையுடைய அரசர்களது கோபத்தையுடைய யானையையும் பாய்ந்து செல்லும் குதிரையையும் தெள்ளாறு என்னும் இடத்திலே அழியச் செய்த செங்கோலை உடைய நந்தி மன்னன் தனக்கு (நந்திக்கு) உரியதான தனது கொங்கையைத்

தான் பெற்ற இளங்களிறு போன்ற மகனுக்கு உரிமையாகச் செய்து நந்தி எனக்கு உரியதான மலை போன்ற மார்பை எனது தங்கையர்க்கே உரியதாகச் செய்தான்; இந்த உலகத்தவர்க்கு மனத்துக்கு இனியவனான அந்தப் பல்லவன் வைத்த நீதியன்றோ நீதியாகும்'.

தோழிக்கு தலைவி தலைவனது புறத்தொழுக்கத்தினை உணர்த்தினாள்.

தலைவனுக்குரிய தனது கொங்கையைத் தன்மைந்தனுக்கே உரிமையாக்கியது. மைந்தன் பாலுண்ணக் கொடுத்தது தலைவிக்குரிய தலைவனது மார்பைத் தன் தங்கையர்க்கு உரிமையாக்கியது. தலைவன் பரத்தையோடு கூடி ஒழுகுதல், உலகத்தார்க்கு நந்தி இட்டதே வழக்காவது அவன் கருதிய வண்ணமே ஒழுகுதல், அவனது புறத்தொழுக்கத்தை எவரும் தடுப்பாரில்லை என்பதாம். அவனிட்ட வழக்கே வையத்தார்க்கு வழக்கு என்பது 'அரசன் இட்ட நீதி' என்பதைக் காட்டிற்று.

இதில் இடம் பெற்ற 'மனக்கு இனியான்' என்னும் தொடருக்கு 'மனத்திற்கு இனிக்க மாட்டான்' என்றும் பொருள் கூறுவர் சிலர்.

பாடல் – 54
தோழி கூற்று

'போருக்குரிய வளைந்த வில், உடைந்த வாள், பிடித்த தரையோடு அலைமோதும் கடற்கரையில் உள்ள மல்லையில் வாழும் அரசனே! இப்பூமி வட்டத்திலே மதங்கொண்ட யானைப் படையை உடையவனே! வலிய ஆண் சிங்கம் போன்றவனை! கிளி ஒத்த சொல்லைப் பேசுகின்ற, சோர்ந்த இடையை உடைய பெண்ணிற்கு, இப்பொழுது அழகிய வட்டமான ஒப்பற்ற சந்திரன் போன்ற வெண்மையான குடை கொடுமையாக உள்ளது என்றால், அது உனக்குக் குற்றம் அன்றோ!

இது, தோழி தலைவனுக்குத் தலைவி துயரை எடுத்துக் கூறி வரைவு கடாயது.

நந்தியே! எல்லோருக்கும் இன்னிழல் தரும் நின் வெண்குடை இவளுக்கு மட்டும் துன்பம் தரும் என்றால் அது குற்றமன்றோ? ஆகையால் இவளுக்கு அருள் செய்து இவளை மணம் செய்வாயாக! எனத் தோழி வரைவு கடாயது ஆகும்.

குடையின் தன்மையை விளக்குவதற்காகப் புலவர் 'தனிமதி வெள்ளிக்குடை' என்கின்றார். மதிக்கு உள்ள தன்மை குடைக்கும் உண்டு என்பது குறிப்பு. ஆனால், 'பிரிந்தோரை மதி வருந்துதல் போல, இங்கே குடையும் உன்னை வேண்டியிருக்கும் தலைவியை வருத்துகிறது! என்ற பொருளை விளக்குவதாக உள்ளது.

பாடல் – 55
தோழி கூற்று

'இந்தச் சிறந்த சந்திரனானது, வலிய இடபக் கொடியை வலத்தே உயர வைத்த உபகாரியும், வலிய கொடுங்கோபத்தை உடையவனும், பகைவர்கள் மடலேறும்படி வெற்றிமாலை அணிந்தவனும், வடக்கே உள்ள வேங்கட நாட்டைத் தன்னதாக

உடையவனும், பெண் பறவைகள தங்கிய நீண்ட உப்பங்கழிகள் சூழ்ந்த மயிலாப்புரியில் உள்ளவனுமான நந்தி மன்னனது பேரழகு வாய்ந்த நீண்ட திருமுடியின் மேலே உள்ள வெற்றி மிக்க தொண்டைமலர் மாலையை நினைத்து வருந்துகின்ற இவள் வாடும்படி தீயைப் பரப்பும்.

தலைவி நிலவால் வருந்துதல் கண்டு தோழி கூறியது.

பகைவர் மடலேறுதலாவது ; நந்தி மன்னவனது அருளைப் பெறத் தவம் செய்தல்; அல்லது தோற்று ஓடுதல் நந்தி விடைக்கொடி உடையவன் என்பதை 'அடல் ஏறு வலத்து உயர் வைத்த பிரான்' என்னும் தொடர் விளக்குகின்றது.

'அடல் உக்ரம் கோபன்' 'அடங்கலர்தாம் மடலேறிட வாகை புனைந்த பிரான், 'வடவேங்கட நாடுடை மன்னர் பிரான்' என்னும் தொடர்கள் நந்தியின் வீரம், வெற்றியை உணர்த்துவதாம்.

பாடல் – 56

'மலர்ச்சூழல் அமர்ந்து இனியவண்டு ஆர்க்கும் காலம்;
வரிக்குயில்கள் மாவில் இளந் தளிர்கோதும் காலம்;
சிலிர்க்கெல்லாம் செழுந்தென்றல் அழுது அளிக்கும் காலம்;
தீவினையேற்கு அத்தென்றல் தீ வீசும் காலம்;
பலர்க்கெல்லாம் கோன்நந்தி பன்மாடக் கக்கிப்
பனிக்கண்ணார் பருமுத்தம் பார்த்து ஆடும் காலம்;
மலர்க்கு எல்லாம் ஐங்கணைவேன் அலர் தூற்றும் காலம்;
அகன்றுபோ னவர்நம்மை அயர்த்துவிட்ட காலம்;'

வண்டுகள் மலருள்ள இடத்தில் தங்கி இசைபாடும் காலம்; குயில்கள் மாமரத்தின் செந்தளிர்களைத் தம் அலகால் மோதும் காலம்; தென்றற் காற்றானது சில மகளிர்க்கெல்லாம் இனிமையைத் தருகின்ற காலம்; கொடிய பாவத்தை உடைய அந்தத் தென்றற் காற்று அனலை வீசுகின்ற காலம் எனக்கு. பல மனிதர்க்கெல்லாம் அரசனான நந்தி மன்னனது பல மாடங்களை உடைய காஞ்சிபுரத்திலே, குளிர்ந்த கண்களை உடைய மகளிர் நந்தியின் அருளைப் பார்த்துப் பெரிய முத்துக்களை எறிந்து விளையாடுகின்ற காலம்; ஐந்து வகையான மலர் அம்புகளை உடைய காமன் அந்த மலர்களை எடுத்து நம்மை மறந்து கைவிட்ட காலமாக இப்போது ஆயிற்று. மாமரம் தளிர்ப்பதும், மலர்கள் மிக மலர்வதும் இளவேனிற் காலத்திலே உண்டாகும். தலைவி குறித்த காலம் இன்பம் தரும் இளவேனிற்காலம், தலைவனது பிரிவால் தனக்குத் துன்பம் தரும் காலமாகவும் தன்னைத் தலைவர் மறந்துவிட்ட காலமாகவும் ஆயிற்று எனத் தலைவி பொழுது கண்டு இரங்கினாள்.

முல்லை, அசோகு, கருங்குவளை, மாம்பூ, தாரை மலர் என்பன மன்மதனது ஐந்து அம்பகளாகும். தென்றல் கூடினார்க்கு இன்பமும், பிரிந்தார்க்கு துன்பமும் தரும்; ஆதலால் தென்றல் சிலருக்கு அழுது அளிக்கும் என்றும், தனக்கு தீ வீசும் என்றும் கூறினாள் தலைவி.

பாடல் – 57
தோழி கூற்று

'காலத்தை ஆராய்ந்தறியும் செயலுடையவர்கள் வாழ்கின்ற காவிரியும் நல்லநாட்டை உடையவனை! உலகத்தை தனது ஒரு செங்கோலினால் செலுத்தும் புகழையுடைய நந்தியே! நீல மயில்போன்ற மாலையை அணிந்த இத்தலைவி உனது அருளைப் பெற்றிலள் என்றாள் அவளது கையில் உள்ள அழகிய வளையலை நீ கொள்ளுதல் ஆகிய இச்செயல் அரசர்க்குப் புகழன்று ஆகும்.

தலைவி நந்தி மேல் கொண்ட அன்பினால் கை வளையல் கழன்று வீழப் பெற்றாள். தோழி அதனைத் தலைவனான நந்தி மேல் ஏந்தி, அவளுக்கு அருள் செய்யாது அவள் வளையலைக் கைக்கொள்வது தக்கது அன்று எனக் கூறினாள். காலத்தை ஆராய்பவர் சோதிடர் அன்னோர் இப்பாடலில் 'காலவினை வாணர் 'எனச் சுட்டப் பெறுகின்றனர். 'கோவலனை கோடல் இது மன்னர் புகழன்றே' என்பது, 'நீ அவளுக்கு அருள்புரிவாய்' என வேண்டியதாகும்.

பாடல் – 58
தலைவன் கையுறை புகழ்தல்

'எங்களது நந்தி என்னும் பெயருடைய மன்னனது நல்ல காவிரி நாட்டிலே உள்ள மேலான மயில் போன்ற மென்மையும், ஒளியுள்ள நெற்றியையும் உடைய தோழிகளே! குராமலர் மலர்கின்ற சோலையிலே அழகிய மரத்தினது கிளையிடத்தே இரவி மலரும் மலர்கள் இல்லாவிட்டால் உலகத்தில் எவ்விடத்திலும் இரவில் மலரும் மலர்கள் இல்லையோ? நான் உங்களுக்கு இரவில் மலரும் மலரைத் தருவேன்.

இது, தலைவன் தோழிக்கு 'இரவில் மலரும் மலரைத் தருவேன்' என்று கூறியதால், தலைவன் இரவுக்குறி விரும்பிக் கூறியதாகும். தலைவன் கையுறை புகழ்ந்தது என்று கூறுவர்.

பகற்குறியிலே வந்தொழுகும் தலைவன், பகற்குறிக்கு இடையூறு நேர்தலால் இரவுக்குறியை விரும்பிக் குறிப்பாக, இரவில் மலரும் மலரைத் தருவேன்' என்றான். இரவுக்குறியாவது களவொழுக்கத்திலே தலைவன் இரவிலே வந்து தலைவியைக் கூடுவதற்குக் குறிப்பிட்ட ஓர் இடத்தைக் கூறுதலாம்.

பாடல் – 59
தலைவி இரங்கல்

'இரவலர் வேண்டியதைக் கொடுப்பவனும், இந்த நால் வகையான நிலத்தையுடைய பூமிக்குத் தலைவனும், அழகினால் மன்மதனை ஒத்தவனும், குளிர்ந்த முத்துக்கள் மிகுந்த வெண்மையான குடையையுடைய பல்லவர்களுக்குள் வளய ஆண்சிங்கம் போன்றவனும் ஆகிய நந்திப்பல்லவன் தனது வளமான அழகிய உறுதியான தோளின் மேலே மென்மையாக அணிந்து இருக்கும் தொண்டைமலர் மாலையும் கொடுத்து அருள் செய்திலன். காளையின் கழுத்தில் உள்ள மணிகளின் ஓசையோடும் விடிவு பெறாத

இரவோடும், வெண்மையான சந்திரனோடும் உள்ளேன். நான் பிழைக்கும் வித்தை அறிந்திலேன் ?

இது, தலைவி இரங்கல்

பிரிந்திருப்பார்க்கு இரவும் சந்திரனும் விடைமணியும் துன்பம் தரும். இதனை விடைமணியொடும் விடியதா அல்லினொடும், வெண்திங்களினொடும் உளன் உய்வகை அறியேனே என்றும் தலைவியின் கூற்றால் உணரலாம்.

பாடல் – 60
தலைவன் உற்றது உரைத்தல்

'அந்த மங்கையரது ட'வளம் போன்ற வாயிதழ், தருமம் மிக்க ஒப்பற்ற செங்கோலை உடைய திருமாலான நந்தி மன்னவனது மாலைக்கு உரியோ தொண்டையானது அழகிய பழத்தைப் போலச் சிறப்புற்று, அவரது அழகிய முகத்திலே உண்டாகிக் குறுக்காக உள்ளது. அவரது இடை சோலையின் இடையிலே துவள்கின்ற கொடி போன்றதாகும். அவரது அழகிய பற்கள் முத்துப் போன்றதாகும். அவரது கருமையான கூந்தல் மிகச் செறிந்துள்ளது. கண்கள் குவளை மலர் போன்றன ஆகும். வளையலை அணிந்த அவரது தோள் நீண்ட மூங்கிலைப் போன்றதாகும். அவரது கொங்கைகள் ஒன்றோடொன்று சமமாய் விருப்பம் நிறைந்துள்ளன. அவரது புருவம் வில்லைப் போன்றதாகும். இப்படிப்பட்ட இயல்பினை உடையவராகி அவர் நம்மை மனநோய் கொள்ளச் செய்தார்.

இது, தலைவன் தனது வேறுபாடு கண்டு வினவிய பாங்கனுக்குத் தன்னை வருத்திய தலைவியின் இயல்பைக் கூறியது.

'அவர் நம்மைச் சிந்தைநோய் திருத்தினாரே' என்னும் பாடலின் இறுதி வரி காதலின் இயல்பைக் காட்டுவதாகும்.

பாடல் – 61
பாட்டுடைத் தலைவன் வீரச் சிறப்பு

'திருவின் செம்மையும் நிலமகள் உரிமையும்
பொதுவின்றி ஆண்ட பொலம்பூண் பல்லவ!
தோள்துணையாக மாவெள் ளாற்று
மேவலர்க் கடந்த அண்ணால் ! நந்தி ! நின்
திருவரு நெடுங்கண் சிவக்கு மாகில்
செருநர் சேரும் பதி சிவக் கும்மே;
நிறங்கிளர் புருவம் துடிக்கின், நின்கழல்
இறைஞ்சா மன்னரக்கு இடந்துடிக் கும்மம்
மையில் வாளுறை கழிக்கு மாகில்
அடங்கார் பெண்டிர்
பூண்முலை பூண்கழி க்கும்;

கடுவாய் போல்வளை யதிர, நின்னொடு
மருவா மன்னர் மனந்துடிக் கும்மே;
மாமத யானை பண்ணின்
உதிர மன்னுநின் அதிர்மலைந் தோர்க்குக'

'திருமகளது செல்வத்தையும் பூமிதேவியினது ஆட்சி உரிமையையும் பலர்க்கும் பொது என்பது 'இல்லாமல் தனக்கே உரிமையாகக் கொண்ட பொன்னாலான அணிகலன்களை அணிந்த பல்லவனே! நினது தோள்களையே துணையாகக் கொண்டு பெரிய வெள்ளாறு என்ற இடத்திலே பகைவரை வென்ற பெரியோனே! நந்தி என்னும் பெயருடையோனே! உனது அழகமைந்த நீண்ட கண்கள் சிவக்குமானால் பகைவர் இருக்கும் ஊர் தீயினால் செந்நிறமடையும். நின் புருவம் துடிக்குமானால் நினது பாதங்களை வணங்காத அரசர்க்குத் தீமை வருவதற்கு அறிகுறியாக இடப்புறம் துடிக்கும். குற்றம் இல்லாத வாள் உறை நீக்கப்படுமானால் பகைவரது மனைவியின் அணிகலத்தை அணிந்த கொங்கைகள் முத்தாபரணம் கழிக்கப்படும். கடுவாய்ப் பறை போலச் சங்கு முழங்குமாயின் நின்னோடு சேராத அரசரது உள்ளம் பதைபதைக்கும் உனது பெரிய மதயானை அலங்கரிக்கப்படுமானால், உனக்கு எதிரே நின்று போர் செய்யப் பகைவர்க்கு உடம்பில் இரத்தம் உண்டாகும்.

இது கொற்றவள்ளை! 'மன்னவன் புகழ்கிளந்து ஒன்னார் நாடழிபு இரங்கின்று' என்றபடி பகைவர் அழிவு கூறுவதால் ஆகும்; அல்லது நந்தியானது வீரத்தை வியந்து கூறியது எனின், பாடாண்திணைச் செய்யுள்களாகும். கண் சிவத்தல், புருவம் துடித்தல், கோபக் குறிப்பாகும் செருநர் சேரும்பதி சிவத்தலாவது, பகைவர் ஊரைத் தீயிட்டுக் கொள்ளுதல் பகைவர் பெண்டிர் பூண் கழித்தலாவது, அவர் கணவர் போரில் இறந்து பட அவர்கள் அணிகலன்களை நீக்கிவிட்டு விதவை நோன்பு இயற்றல், சங்கொலி, கடுவாய்ப் பறையொலி போலக் கேட்குமாயின் அதனைப் போர்ப்பறை ஒலி என எண்ணிப் பகைவர் மனம் அடிக்கப் பெறுவர். மதயானையை அலங்கரித்தல் கேட்ட அளவிலே, பகைவர் பயத்தால் இரத்தம் கக்குவர் என நந்தியினது வீரத்தை வியந்து கூறுகிறார் புலவர்.

'பூமி வலிமையுடையவர்க்கு உரியது' என்பது நீக்கி நந்தி தனக்கே உரியதாய்க் கொண்டது. பொதுவின்றி ஆண்டதாகும். திருமகளின் செல்வம் தனக்கே உரியதாகக் கொண்டதும் அது போலவே ஆகும்.

பாடல் – 62
செவிலி கூற்று

பகைவர்கள் தமது படை வலிமையால் கைப்பற்றிய அகன்ற பூமி முழுவதையும் நந்தி தனது தோளின் வலிமையால் மீட்டுக் கொண்ட சோர்வை அறியாமல், தலைவரை வருத்தியவள் இவள் என என் மகளைக் குறித்துச் சொன்னீரே, அவளுக்கு உமது தொண்டை மலர் மாலையின் மேல் பெரிய ஆசையை வைக்கக் கூடிய பருவமோ இது? இஃது அப்பருவம் அன்று.

நந்தி மன்னவனை வருத்தியவள் இவள், என அயலார் கூறிய போது, செவிலி 'இவள் இளம் பருவத்தினள்; காதற் குறிப்பை அறியாள், எனக் கூறி மறுத்தாள். இஃது இளமை கூறு மறுத்தல் என்னும் துறை அகப்புறம் ஆதலால் 'என் மகள்' என்பது கொண்டு செவிலி கூறியதாக ஆயிற்று.

'ஓராதே என்மகளைச் சொன்னீரே தொண்டைமேல், பேராசை வைக்கும் பிராயமோ?' என்பது செவிலி கூறும் மறுப்புரை.

பாடல் – 63
தோழி, செவிலிக்கு அறத்தொடு நிற்றல்

நந்தியாகிய பெருமையுடையோன் இவளைச் சோரும்படி செய்தான் தூக்கத்தைப் போகும்படி செய்தான். முன்னே தூங்கச் செய்து மயங்கச் செய்தான்; அவள் மனத்தைத் தன் வசமாகும்படி செய்தான்; மலர்ச்சோலை சோலையினிடையே வஞ்சக செயலால் தன்னைக் கூடும்படி செய்தான்; அவன் தந்த ஆடையை வாங்கிக் கொள்ளும்படி செய்தான்: எதிரே நின்று இவன் மயங்கும்படி செய்தான் என்று நான் திறம்படக் கூறுவேன்.

பாடல் – 64
சம்பிரதம்

வட்டன்றே நீர் இதனை மிகவும் காண்மீன்
மற்றைக்கை கொட்டினேன் மாவின்விந்து ஒன்று
இட்டன்றே பழம் பழுப்பித்து உண்ணக் காண்மின்
இவையல்ல சம்பிரதம் இகலில் தெள்ளாற்று
அட்டன்றே பொன்னும் வகை முனிந்த நந்தி
அவனிநா ராயணன்பார் ஆளுங் கோமான்
குட்டன்றே மழைநீரைக் குடங்கை கொண்டு
குரைகடலைக் குடிக்கின்றேன் குடிக்கின் றேனே!

வலிமையால் தெள்ளாற்றுப் போரிலே பகைவரைக் கொன்று மற்றைய பகைவரும் அழியும் வண்ணம் கோபித்த அவனி நாராயணன் ஆகிய நந்தி மன்னனே! பூமியை ஆளும் அரசனே! நீங்கள் இதனை நன்றாகப் பாருங்கள்; இது சூதாடு கருவி அன்றோ! இதனை ஒரு கையில் வைத்து மறுகையில் வரும்படி செய்தேன். மாமரத்தின் விதை ஒன்றை நிலத்தில் புதைத்து, அன்றைக்கே அவ்விதை முளைத்து வளர்ந்து பூத்து காய்த்துப் பழம் பழுக்கச் செய்து அதனைப் பறித்து உண்ணுதலைப் பாருங்கள். இது நமது சித்து அல்ல; மழைத் தண்ணீரை உள்ளங்கையினால் குடிக்கின்றேன். அது ஒரு சிறிய குட்டை அன்று. ஒலிக்கின்ற கடல் நீரையே குடிக்கின்றன.

ஒரு கையில் வைத்த பொருளை மற்றொரு கையில் போகச் செய்தலும்; மாமரத்தின் விதையை நட்டு அன்றே முளைத்து வளர்ந்து பழம் பழுக்கச் செய்தலும்; குடம் தண்ணீரைக் குடித்துக் காட்டலும் சித்தர்கள் செய்யும் கண்கட்டு வித்தையாகும்.

பாடல் – 65
தலைவி இரங்கல்

மேற்றிசை நாட்டை உடைய அரசனும், தென்திசையில் உள்ள நாட்டை உடைய மன்னனும் கிழக்குத்திசை நாட்டோடு வடக்குத் திசையில் உள்ள நாட்டை உடையவனும், நந்தி மனோதயன் என்னும் பெயருடையவனும், இந்த உலகமெல்லாம் தன் நிழலில் அடங்கும்படி வெண்குடை தாங்கிய பல்லவனும் ஆகிய நந்தி மன்னனோடு இவ்வுலகத்தவர் அறியத் தொடர்பு உடையவரை அல்லாமல் மற்றவரை இந்த ஒளியுள்ள பிறை சுடுமோ? (சுடாது)

இது, தோழி தலைவியின் வேறுபாடு கண்டு, 'பிறையானது நந்தியோடு தொடர்புடையோரை அல்லாமல் மற்றோரைச் சுடாது; நீ அவனோடு தொடர்புடையவன்; ஆதலால் பிறை உன்னைச் சுடாது' என்று கூறி அவளது ஒழுக்கத்தால் ஐயம் தீர்த்தாள். இது தோழி ஐயம் தீர்த்தது.

இது நந்தி நாற்றிசை நாட்டிற்கும் அரசனாக இருத்தல் கூறப்பட்டுள்ளது.

சிலர், வையம் எல்லாம்பட என்பது உலகமெல்லாம் அழிய என அமங்கலப் பொருள் தந்தது என்பர்.

பாடல் – 66
தோழி கூற்று

'இளம்பிறை தங்கிய செஞ்சடையை உடைய திருக்கைலாய மலையில் இருக்கும் சிவபெருமானது ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த திருவடிகளைச் சிரத்தில் தாங்கியவனும், அவனி நாரணன் என்று புகழத்தக்கவனும் தேனொடு விளங்குகின்ற தொண்டமாலையை அணிந்தவனும் ஆகிய நந்தி மன்னவனது தொண்டை மாலையைப் பார்த்த பின்பு, அந்த மாலை இவளுக்கு முன்கையில் விளங்கும் வளையலையும், உயிரையும் கொடுத்தது.

'நாரணன்'என்னும் பெயர் சிவனைக் குறித்தது. நாரணன் என்பது சிவன் பெயரேயாம்; தன்னைத் தவத்தால் வழிபட்ட தொண்டர்க்குக் காவல் தொழிலையும் நாரணன் என்னும் பெயரையும் சிவபெருமான் கொடுத்தார்.

'பிறைதவழ் செஞ்சடைப் பிறங்கும் நாரணன் அறைகழல் முடித்தவன் அவனி நாரணன் ! என்று கூறியதால், நந்தி சைவ மதத்தினை என்பது புலனாகிறது.

இது தலைவியின் வேறுபாடு கண்டு வினாவிய செவிலிக்குத் தோழி பூத்தரு புணர்ச்சியில் அறத்தொடு நின்றது.

பாடல் – 67
தோழி தலைவன் சிறைப்புறத்தானாகச் செறிப்பறிவுறுத்தல்

'நாம் காக்கும் தினைப்புனமும் தினைக் கதிரை ஈனுகின்றது. காலமோ நாமும் நம் ஊரை அடையக் கூடிய நாளாக ஆகின்றது. நிலை பெற்றுள்ள புகழை உடைய நந்தி

மன்னவனது வடதிசையில் உள்ள வேங்கடமலையினிடத்து, நாளும்நாளும் இளைக்கின்ற ஒரு வடிவத்தோடு திரிகின்றவரது தன்மை இனி ஆகும் வழியை நான் அறிந்திலேன்.

தலைவன் சிறை (வேலி)ப் புறத்தானாகத் தோழி, தினை விளைந்து விட்டது. தலைவி இனி இல்லிலே செறிக்கப்படுவாள்' எனக் கூறி வரைவு கடாயது.

பாடல் – 68

மன்னன் வீரத்தை படைவீரன் பகர்தல்

பகை அரசர்களே! நந்தி மன்னனுக்குக் கொடுக்கும் திறைப் பொருளைக் கொடுங்கள். அல்லது மதிலின் உள்ளே இருந்து செய்யும் போரை ஒழியுங்கள். உங்களது போர் நீங்கும்படி கொடிய கண்ணையுடைய முரசு அடித்தலை விடுங்கள். இந்தப் பூவுலகத்திலே எவ்விடத்தும் அந்த நந்தியினது தொண்டை நாட்டு ஆளுகையே உள்ளது. உங்களது அடக்கத்தை விடுங்கள்: நந்திப் பல்லவனது கழலை அணிந்த பாதத்திலே அடைக்கலம் புகுங்கள்; உங்களது நீண்ட முடிகள் வந்து விளங்க, உங்களிடத்தை விடுங்கள்: அல்லது நீங்கள் வாழும் ஊரை விட்டு வந்து நந்தியை வணங்குங்கள்: இவ்வாறு செய்தால் அல்லாமல் நீங்கள் அவனிடமிருந்து தப்பிப் பிழைத்துப் போதல் அருமையானது ஆகும்.

இதில் வரும், 'திறையிடுமின், அன்றி மதில்விடுமின்! 'இந்த' அவனிதனில் எங்கும் அவனுடைய தொண்டை அரசே! நந்தி கழல் புகுமின். உறைபதி அகன்று தொழுமின் அல்லது உய்தல் அரிதே! என்னும் தொடர்கள் குறிப்பிடத் தக்கவை.

பாடல் – 69

தலைவன் தலைவியை வியந்துரைத்தல்

'அரிபயில் நெடுநாட்டத்து அஞ்சனம் முழுதுஉளட்டிப்
புரிகுழல் மடமானைப் போதர விட்டாரால்
நரபதி எனும் நந்தி நன்மயிலா புரியில்
உருவுடை இவள் தாயர்க்கு உலகொரு பகையுண்டோ?'

'சுருண்ட கூந்தலை உடைய இளமான் போன்ற இப்பெண்ணுக்கு செவ்வரிகள் பொருந்திய நீண்ட கண்ணிலே முழுவது மையைபூசி இவ்வீதியிலே செல்லும்படியாகத் தாய்மார் அனுப்பினர். காலாட்படை உடையான் என்று சொல்லப்படும் நந்தி மன்னவனது நல்ல மயிலாப்பூரிலே நல்ல அழகுடைய இவனது தாய்மார்க்கு, இவ்வுலகத்தாரோடு பகைமையும் உள்ளதோ?

சுருண்ட அல்லது புரியான கூந்தலையும் இமைரன் போன்ற பார்வையையும் உடைய இம்மங்கை, கண்டார் விரும்பும் கட்டழகினள்: அத்தகையாளுக்கு மேலும் அழகு செய்து கண்ணிற்கு மை பூசி விட்டதால் இவரது இயற்கையழகோடு செயற்கையழகும் ஒரு சேரக் கண்டால் மயங்காதவர் உளரோ?

'ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ; பேடியர் அன்றே பெற்றியில் நின்றிடின்' என்று மணிமேகலை கூறியபடி இவள் அழகில் ஈடுபட்டாரால் உலகில் என்ன தீமை விளையுமோ என்று எண்ணி, இவள் தாயர்க்கு உலகொடு பகை உண்டோ? என்று கூறினர்.

இவ்வண்ணமே, அழகு மிக்காள் ஒருத்தியை கண்டு மயங்கிய ஒருவன் கூறியதாக

'நீயும் தவறிலை, நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட றுமரும் தவறிலர்
நிறையழி சொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க என்னா
இறையே தவறுடையன்'
எனக் கலித் தொகையிலும் வரும்'

தாயர், நற்றாய், செவிலித்தாய் முதலானவர் ஆவர்: ஆதலால் தாயர்க்கு எனப் பன்மையில் கூறினார்.

பாடல் – 70
மதங்கியார்

'பகைவர் இல்லாமல் பூமியைக் காப்பாற்றுகின்ற பல்லவர் கோமானது செங்கோலினுடைய ஒளியையும், அவனது வாட்போரின் திறத்தையும் பாடி நன்றாக ஆடும். இந்த மதங்கியர்க்குப் பொருந்திய நுட்பமான இடை அதிர, பாரமான கொங்கைகளால் குற்றப்பட்டு இந்த இடை ஒடிவதற்கு முன்னே இந்தக் கூத்தை நாம் விலக்க வேண்டுவதில்லையோ?'

மதங்கியின் கூத்தினைக் கண்டோர் கூறியது. அவளது ஆட்டத்தினால் அவளது உடல் அதிர்தலால் அவளது நுட்பமான இடை கொங்கைகளின் பாரம் தாங்காமல் முறிந்துவிடும். அக்குற்றம் உண்டாகும் முன்னே நாம் இக்கூத்தை விலக்க வேண்டும் என்று கண்டோர் கூறினர். இது கலம்பக உறுப்பினுள் ஒன்று.

'பகையின்றிப் பார்க்கும் பல்லவர் கோன்' என இப்பாடலில் நந்தி போற்றப்படுகிறான்.

பாடல் – 71
செவிலி, நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்

மங்கேயே! மிக்க பகை கொண்டவர் தெள்ளாற்று நீரினுள்ளே மூழ்கிப்போக, கோபம் தணிந்து திரும்பியவனான நந்தி மன்னனுக்கு என்னுடைய மகள் தன் கையில் உள்ள வெண்மையான சங்கிலான வளையல்களை இழக்கின்றான்; அந்நாளில் இம்மகள், பகைவேந்தர் நாளும் நினைக்கும் அரசர் தலைவர்க்கே உண்மையான அன்பைக் கொண்டவள் என்று சொன்னால், அது தீங்கானதோ?

செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றது. தலைவியின் கைவளையல் கழலுதல் முதலிய வேறுபாடு கண்டு வினவிய நற்றாய்க்குச் செவிலி, அந்நாளிலே தலைவி நந்தியைக் கண்டு காதல் கொண்டமையைக் கூறி அறத்தொடு நின்றாள்.

இதில் நந்தி மன்னனை 'வேண்டார் எண்ணும் வேந்தர் பிரான்' எனச் சுட்டுகிறார். வேண்டார் எண்ணுதலாவது பகையரசர் நாள்தோறும் நந்தியின் வீரச் செயலை மனத்தில் நினைத்தல்.

பாடல் – 72
தலைவி இரங்கல்

'வெண்மையான சங்குகள் தூங்குகின்ற பெரிய அழகிய வீட்டு முற்றத்தினிடத்தே பொழுது விடிதலும், சிறந்த வளமான வளையல்கள் ஒலிக்க மகளிர் விளையாடுகின்ற மாமல்லபுரத்திற்குத் தலைவனான குளிர்ச்சியான செங்கோலை உடைய நந்தி மன்னவனது ஒப்பற்ற குடை நிழலின் கீழே வாழாத பகைவரைப் போல கண்ணை மூடி உறங்காத நோயை நாமே அடையத்தக்கவராவோம்?'

இது தலைவனது பிரிவிலே தலைவி இரங்கிக் கூறியது. ' நந்தியின் குழை நிழலில் வாழாதவர் உறக்கமின்ற வருந்தியிருத்தது போல, நாமும் தலைவனது பிரிவினால் கண்ணுறமிக்கமின்றி வருந்துகிறோம்: நாம் இந்நோய் அடையத்தக்கவர்களா? என எண்ணித் தலைவி இரங்கினாள்.

'தண் செங்கோல் நந்தி தனிக்குடைக்கீழ் வாழாரின்
கண் சிம் புளியாநோய் யாமோ கடவோமோ?'

பாடல் – 73
தலைவி இரங்கல்

'கடலின் குளிர்காற்றுச் சூழ்ந்த உப்பகங்கழியில் உள்ள பனைமரத்தினது மடலின் பகுதிகளெல்லாம் நாரை என்னும் பறவை மிகுதியாய் வாழும் மல்லையிலே, இவ்விரவு வருத்தலுக்கு இடையே, பேசுந்துணை இல்லாமல், அப்பரத்தையர் திட்டுதலுக்கு அமைந்த எனக்கு ஏதேனும் உயிர் உண்டோ? இல்லை.

இது, தலைமகன் பரத்தையிற் பிரிந்துழித் தலைவி இரண்டு ஆண்டு வருந்திக் கூறியது.

கடற்குளிரால் நாரைகள் பனைமடற்பகுதிகள் தோறும் தங்கியிருத்தல் போல, பரத்தை மகளிர் தலைவன் மேல் உள்ள விருப்பினால் ஊரில் எங்கும் நிறைந்துள்ளனர் என்பது உள்ளுறை பொருள்.

பாடல் – 74
தோழி கூற்று

'இனிய தென்றற்காற்று, எல்லோரும் நீருண்ணும் அலையை உடைய செங்கழுநீர் மலர்ந்த தடாகத்திலும் ஒளியுள்ள சோலையிலும் நுழைந்து சண்பக மலரைத் தடவிச் சென்று, பூஞ்சோலையில் பூவையுடைய கமுக மரத்தினது பாளையிலே தாவி, உலாவுகின்ற குளிர்ந்த சோனாட்டை உடையவனே! வானத்தைத் தொடுகின்ற உறுதியான இமயமலை வரையும் ஆண்மை நடாத்தும் விடேல்விடுகு என்னும் பெயருடையவனே! தெருக்கள் தோறும் நீ செலுத்தும் திண்ணிய அஞ்சாமை உடைய யானையை வணங்கிய மகளிர்க்கு நீ நீதியையுடையாய் அல்லையோ? சொல்லுவாயாக!

'வீடேல் விடுகு என்பது நந்தியின் சிறப்புப் பெயருள் ஒன்று. நந்தி யானை மேல் வருதலைக் கண்ட மகளிர் காதல் கொண்டு வருந்துவதால் 'அவர்கள் வருந்தும்படி நீ செய்கின்றாயே, எல்லோரையும் வருந்தாமல் காக்கும் நீ, அவர்கள் வருந்தாமல் செய்யாதிருக்கின்றாய்; நீ அவர்களிடத்தில் மட்டும் நதியுடையாயல்லையே; சொல்லுவாயாக' என்று தோழி தலைமகனிடத்துக் கேட்டாள். இது அகப்புறம்.

'உண்திரையின் செங்கழுநீர் இலங்சி மாடே
ஒண்பொழிற் சண்பகத்தார் தடவி ஓடித்
தண்டலையில் பூங்கமுகம் பாளை தாவித்
தமிழ்த்தென்றல் புகுந்துலவும் தண்சோணாடா!'

இப்பாடலில் வந்துள்ள ஓர் அழகிய வருணனைப் பகுதியாகும்.

பாடல் – 75
தோழி தலைவியின் உறுப்பு நலனை எழுதுதல் அரிதெனல்

'நீண்ட தெள்ளாறு என்னும் இடத்திலே வளைவான கொடிய வில்லில் நாண் பூட்டிப் பட்டத்தை அணிந்த அரசர்களது அணிகலன்களோடு அவர் மனைவியரது மங்கல நாணையும் போக்கிய நந்தி மன்னவனது மயிலாப்பூரிலே உள்ள மயில் போன்ற தலைவியின் பின்னித் தொங்கவிட்ட கூந்தலும், கண்களும், நல்ல புன்னகையும், நெற்றியில் அணிந்த பொட்டும், இளமையான கொங்கைகளின் இன்பமும் கிழியில் எழுதற்கும் முடியாதனவாகும்.

நந்தி, தனது வில்லுக்கு நாண் பூட்டப் பகைமன்னரது மனைவியரின் மங்கல நாணைக் கழித்தவன் எனவும் பொருள்படும். தலைவியைப் பெறும் பொருட்டுத் தோழி இரந்து பெறாத நிலையில் தலைமகன், 'இனி இவளை அடைவதற்கு மடலே பொருள்' என எண்ணிக் கூறுதலும் இதனைக் கேட்ட தோழி மடன்மாவின் முன்னே கட்டத்தலைவியின் உருவத்தைக் கிழியில் எழுதமுடியாது என அவள் அழகைப் பற்றிக் கூறினாள்.

இது, எழுதவரிது என்னும் துறை.

பாடல் – 76
"ஆகாது போக மயில்விளைத் தகன்ற லவன்கை

போகாத சங்கு மருளான ரென்ற போது வண்டோ —"

இச்செய்யுள் முழுவதும் இல்லை.

பாடல் – 77
மறம்

'அம்பு ஒன்று, வில் ஒடிதல், நாண் அறுதல்
நான் கிழவன், அசைந்தேன், என்றோ
வம்பு ஒன்று குழலாளை மணம் பேசி
வரவிடுத்தார் மன்னர், தூதர்?

செம்பொன் செய் மண்மாடத் தெள்ளாற்றில்
நந்திபதம் சேரார் ஆனைக்
கொம்புஅன்றோ நம் குழலில் குறுங் காலும்
நெடுவளையும் குனிந்து பாரே!

'தூதுவனே! என்கையில் இருப்பது அம்பு ஒன்றே; எனது வில்லோ முறிவு பட்டது: அந்த வில்லின் கயிறோ அறுபட்டது ; நானோ வயது சென்றவன்: அதனால் சோர்வு அடைந்துள்ளேன்: என்று எண்ணியோ உனது அரசர் மணம் பொருந்திய கூந்தலையுடைய என் மகளை மணம் பேசி வரும்படி உன்னை அனுப்பினார்? நமது குடிசையிலே உள்ள குறுகிய காலும் நீண்ட வளைமரமும், செம்பொன்னினாலே செய்யப்பட்ட மணிகள் பதித்த மாடங்களை உடைய தெள்ளாறு என்னும் இடத்திலே நந்தி மன்னனது பாதத்தை அடையாத பகையரசரது யானையின் கொம்புகள் அல்லவே! எம் குடிலினுள்ளே அவற்றைச் சற்றே குனிந்து பார்ப்பாயாக!

மறம், மறவரது வீரச் செய்கையைக் கூறுவது. இது கலம்பக உறுப்பினுள் ஒன்று.

இது மறவனது மகளை விரும்பி வேற்றரசன் அனுப்பிய தூதுவனைக் கண்டு, அவனுக்குத் தன் மகளைக் கொடுக்க மனமிசையாத மறவன், தனது வீரச் செயலைக் கூறி மகட் கொடேன் என மறுத்து அத்தூதுவனை அனுப்புதல் ஆகும். புறத்திணையுள்ளே காஞ்சியில் மகன் மறுத்துரைத்தல் என்னும் துறை:

'ஏந்திழையாள் தருக என்னும்
வேந்தனொடு வேறு நின்றன்று' (பு.வெ.மா. காஞ்சி 24)

பாடல் – 78
செவிலி தன்னை நொந்து உரைத்தல்

'மகளிர்கள் அன்பு கொண்டு அணியும் குளிர்ச்சியான மலர்கள் நிறைந்த திருச்செந்தூரில் உள்ள முருகனை ஒத்த நந்தி மன்னவன் காப்பாற்றுகிற குளிர்ந்த சோலையை உடைய காஞ்சிபுரத்தை ஒத்த என் மகள், தான் வளர்த்த மைனாவையும் பந்தையும் என்னிடம் கொடுத்து நேற்று என்னைத் தழுவினாள்: அறிவில்லாதவனான நான் விலங்குகள் தங்கியிருக்கும் காட்டிலே அவள் சென்றதை அறிந்திலேன்: அவள் செய்த செயல் எத்தன்மையது?

கலைமகள், தலைவனுடன் செல்வதற்கு முதல் நாள், தான் வளர்த்த பூவையையும், பந்தையும் கொடுத்து செவிலித் தாயைத் தழுவிக் கொண்டான்; மறுநாள், தலைவனுடன் தலைமகள் சென்றதை அறிந்து அவள் முதல் நாளில் தன்னைத் தழுவியதன் குறிப்பை அறியாமல் போனதைக் குறித்துச் செவிலி தன்னைத் தானே நொந்து கொண்டாள்.

பூவையையும், பந்தையும் தந்து செவிலியைப் புல்லியதன் குறிப்பு, நாளைக்கு நான் இவற்றை விட்டுப் போகப் போவதால், இப்பூவையை நீ காப்பாற்றுவாய். இப்பந்தை வைத்திருப்பாய்' என்று குறிப்பினால் கூறியதாகும்.

'செந்தில் கோவை ஏய் நந்தி காக்கும் குளிர்பொழில் கச்சி அன்னாள்' என இப்பாடலில் வந்துள்ள உவமைகள் குறிப்பிடத் தக்கவை.

பாடல் – 79
தோழி கூற்று

'தெள்ளாறு என்னும் இடத்திலே கூடிய அரசர்களது குதிரைகளையும், தேர்களையும் தனது இரண்டு கைகளினாலேயும் வென்று, ஒரு துதிக்கையுடைய யானையைச் செலுத்தியவனான நந்தியே! இந்தத் தொண்டை நாட்டையுடைய அரசனே! தலைவிக்கு இராப் பொழுது மிக நீண்டதாக ஆயிற்று; எவ்விடத்திலும் நிறைந்ததாகிய வடகாற்று மிகுந்து, சந்திரனோடு வளர்ந்ததாம்; ஆகையினாலே அவளைக் கூடுவாய்; உனது தொண்டைமாலையையும் அவளுக்கு கொடுப்பாய்.

இது, வாடைக் காற்றாலும் இரவாலும், மதியாலும், தலைவி படும் துன்பத்தைத் தலைவனாகிய நந்திக்கு எடுத்துக் கூறித் தலைவி வரைவு கடாயது.

பாடல் – 80
நற்றாய் இரங்கல்

'அழகிய பூங்கொடி போன்ற உழத்தியர், நீண்ட வயலிலே களை பறித்த, தேன் ஒழுகும்படி மலர்ந்த குவளை மலர்கள் விடியற்காலத்திலே எழுகின்ற இளம் பெண்களின் கண்ணினது வடிவத்தைக் காட்டுகின்ற காஞ்சிபுரத்தினிடத்து, பகைவர் மயங்கத் தெள்ளாறு என்னும் ஊரை அழிக்க பெருமையோடு தோன்றிய நந்தி மன்னனது குடை நிழலின் கீழே, நான் தவத்தால் பெற்ற நல்ல பூங்கொம்பு போன்ற மகளே, நீ கொண்டுள்ள இச்செயல் உலக ஒழுக்கத்தோடு ஒத்தது ஆகுமோ?'

இது தலைவியின் களவொழுக்கத்தைக் குறிப்பால் அறிந்த நற்றாய், தலைவியைக் கடிந்து, இது உலக ஒழுக்கத்துக்குத் தகாது எனக் கூறியது.

உழத்தியர் வயலில் களைந்தனவான தேனொழுக மலர்ந்த குவளை மலர்கள், காலைப் பொழுதில் எழுகின்ற கன்னியர்களின் கண்ணின் படியைக் காட்டுதலாவது, இரவிலே தலைவனது கூட்டம் பெறாது வருந்திய மகள், காலையில் அழுத கண்ணுடன் எழுகின்றாள் என்பதாகும், இது உள்ளுறை பொருள்.

பாடல் – 81
தோழி கூற்று

"போரில் கொம்புகள் மேலெழுந்த கரிய யானைக்கு முன்னே வந்த நந்திப் பல்லவனும் சிறந்த வீரர்களது உடம்பு அழியவும், நம்பியார்களுடைய எண்ணங்கள் எல்லாம் பிழைபடவும் அவர்களை வென்ற தலைமையான பெருமையும் உடைய வீரமும் கொண்ட கொடியை உடையவனும் சோழரும் பாண்டியரும் சேரரும் போரில் எதிராக வந்து இறக்கும்படி அவர்களது போரை வென்ற பாரியும் ஆகிய நந்திவர்மன், தனது முடியின்மேல் உள்ள மணமுள்ள உயர்ந்த தொண்டைமலர் மாலையைப் பார்க்கும் இளமையான பெண்களது கை வளையலைக் கவர்ந்து கொண்டது என்ன வல்லமை ஆகும்?"

"கொம்புயர்வாம் மைநாகம் எதிர்வந்த நந்தி' என்பதற்குக் கஜேந்திரன், ஆதிமூலமே என்று அழைத்தபோது அதன் எதிரே வந்த திருமாலாகிய நந்தி என்றும் கூறுவர்.

பாரி, கடையெழு வள்ளல்களில் ஒருவன், 'அவனை ஒத்த வள்ளளாகிய நீ, இம்மகளிரது கை வளையலைக் கொண்டது என்ன வெற்றியாகும்?' என்று தோழி கூறினாள்.

இது, தோழி தலை மகனின் துயரம் கூறி வரைவு கடாயது.

"செம்பியர் தென்னர் சேரர் எதிர்வந்து மாயச் செரு வென்ற பாரி" என இச்செய்யுளில் நந்தியைப் பாரியாகக் கூறியிருப்பது ஆராயத்தக்கது. பாரி கடையெழு வள்ளல்களில் ஒருவன்; அவனைச் சேர சோழ பாண்டியர் எதிர்த்து வஞ்சகத்தால் கொன்றனர். ஆனால், நந்திப் பல்லவனோ சேர சோழ பாண்டியர் மாயப்போரிலே வென்ற பாரியாவான். அம்மூவேந்தரும் பாரியைப் போரில் வெல்ல முடியாது. மாயத்தால் வென்றனர். நந்தியோ, அவரை வஞ்சத்தால் வெல்லாது போரில் வென்றான். என் அப்பாரிக்கும் இப்பாரிக்கும் வேறுபாடு தோன்றக் கூறியிருப்பது போற்றத்தக்கது. இது வேற்றுமை அணி.

'கூற்றினும் குறிப்பினும் ஒப்புடசை இருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை அதுவே!
(தண்டி..... பொரு .49)

நந்திக்குத் தம்பியர் பகைவராகி, அவனை வெல்ல அல்லது கொல்ல எண்ணமிட்டிருந்தனர் என்பதும், நந்தி அவர்களது எண்ணம் கெட அவரை வென்றான் என்பது இச்செய்யுளால் விளங்குகின்றன.

'தம்பியர் எண்ணமெல்லாம் பழுதாக வென்ற தலைமான வீரதுவசன்'

பாடல் – 82

தலைவனது சிறப்பு

'திருமாலின் வலக்கரத்தேயுள்ள சக்கரமும், அவரது இடக்கரத்தேயுள்ள சங்கும், மேகத்தினிடையே தோன்றும் மின்னற்கொடி போல நற்குணத்தில் பிறந்த மயில் போன்ற சாயலையுடைய மனைவியும், அலை வீசுகின்ற கடல் போன்ற சீரிய வடிவமும் ஆகிய இவ்விவைகளைத் திருமாலுக்கு ஒப்பாகக் கொண்டாய்.

திருவுடை மன்னரைத் திருமாலாகக் கூறுதல் முறைமையாதலால் புலவர் இப்பாடலில் நந்தியைத் திருமாலாகக் கூறியுள்ளார். நந்தி திருமாலின் அவதாரம் என்பதற்கு ஏற்ப, வலக்கரத்தே ஆணைச் சக்கரத்தையும் இடக்கரத்திலே வெற்றிச் சங்கையும், திருமகள் போன்ற மனைவியையும் மேகம் போன்ஹ கரிய உருவத்தையும், கொண்டுள்ளான் என்பதாம்.

'மழை தவழ் கொடிபோல' உபமானம்; மேகம் அவனது வடிவிற்கும் மின்னல் அவன் மனைவியின் வடிவிற்கும் ஒப்பு.

இச்செய்யுளில், புலவர் தலைவன் பெயரைக் குறிப்பினால் கொள்ள வைத்துள்ளார்.

பாடல் – 83
தோழி கூற்று

'மேகங்கள் தங்கிய சோலையிலே வண்டுக் கூட்டங்களையும், சிறந்த மணிகளைச் சேற்றோடு கொண்டு வந்து ஒதுக்கும் கடலையும் உடைய மாமல்லையின் தலைவனே! முன்னாளில் மராமரங்கள் ஏழையும் ஓரம்பினால் துளைத்த இராமனான பல்லவனே! இவள் உனது தொண்டை மலர் மாலையை நினைத்திருப்பான்; ஆகையால் நீ இவளது தோளையும் தழுவுவாயாக!

இது, தலைவியின் துயரம் கூறித் தோழி தலைவனிடத்து வரைவு கடாயது.

பாடல் – 84
தலைவி கூற்று

'பேசும் திறமையற்ற தோழியர்களே! பகையரசர்களது யானைப்படை கெட, குருக்கோட்டைகள் எல்லாவற்றிலும் அழகிய அம்புகளை நிறைந்த நந்தி மன்னனது அருளை, நமது தோள்கள் இளைக்காமலும் ஆழ்ந்த கடலினது ஒலியினாலே சோர்வடையாமலும், யாதொரு வருத்தமும் இன்றிப் பெற்றுவிடலாமே. (அவ்வாறு செய்யாமற் போனீர்களே?)

இது, தலைவி தோழியர்களை நோக்கிக் கூறியது! தோழியர்களே! நீங்கள் நந்தி மன்னனிடம் என் துயரை எடுத்துச் சொன்னால், அவனது அருளை யாதொரு துன்பமும் இன்றி எளிதிலே பெற்று விடலாமே?' அவ்வாறு செய்யாது செய்யாமற் போனீர்களே? என்பது குறிப்பெச்சம்.

பாடல் – 85
தோழி கூற்று

'அந்நூலில் தெள்ளாறு என்னும் இடத்திலே செய்தி போரில் இருள் போன்ற கரிய மத யானைகளையும், பாய்ந்து செல்லும் குதிரைகளையும், தேரையும் கொண்டு, எதிர்த்த பகைவர்களுக்கு முன்னே மயங்காது, நல்ல கடம்பூரை முற்றுகையிட்டு, பகைவர்கள் மேலுலகு அடையும்படி வென்ற அரசர்களுக்குள்ளே ஆண்சிங்கம், போன்றவனே! நந்தி மன்னவனே! எமது மகள் தாயே கேட்பாயாக, எமது தங்கையர்க்கே உனது அருள் உள்ளது என்று சொல்லுவாள்; அவளது செஞ்சொல்லை ஆராயாது நீ அருள் செய்வாயாக.

தோழி, தலைவியின் ஊடலின் காரணம் கூறித் தலைவனை அருள் செய்யுமாறு வேண்டுதல், அகப்புறத்திணை.

பாடல் – 86
தோழி கூற்று

'கச்சை அணிந்த குங்குமம் இட்ட கொங்கைகளினது பெருமிதம் தன் மேல் பாய அதற்கு மகிழ்ந்து ஏறுகள் பூட்டி உழுதலால் விளைந்த பொருள்களை எல்லாம் தருகின்ற

ஆண்மகன் எந்நாட்டவரது அரசன் என்று சொல்லுகின்றீர்; பகைமை பொருந்திய படையையுடைய அரசர்களது குதிரையும் தேரும் தெள்ளாறு என்னும் இடத்தில் ஆற்றில் விழுந்து இறக்கும்படி கோபித்த இரண்டு தோள்களை உடைய காவிரி நாட்டை ஆளும் மன்னனாகிய நந்தி மன்னவனே!

இது, நந்தி மன்னவனது கொடைச் சிறப்பைக் கூறிற்று.

பாடல் – 87
தோழி கூற்று

இடையர்கள் வாயால் ஊதும் புல்லாங்குழலின் தனது காதல் நோயைப் பொறுக்காதவளாய் உலகத்தில் நிறைந்த புகழையுடைய தேசங்கள்தோறும் பொருட்சாலையை உடையவனான நந்தி மன்னவன் தன்னுடைய பாயின்மேல் வருவதலை எதிர் பார்த்து நின்றவளுக்கு பொருந்திய மாமரத்தில் உள்ள குயிலின் குரலுக்கு உண்டாகும் துன்பம் யாதோ?

தலைவனைப் பிரிந்திருப்பார்க்கு ஆயர் குழலோசையின் குயிலின் குரலும் துன்பம் செய்யும். 'ஆயர் குழலோசைக்கு ஆற்றாது வருந்துகின்றவன் அக் குழலோசையின் சிறந்த குரலோசையைக் கேட்டால் என்ன துன்பம் அடைவானோ? எனத் தலைவியின் துயர் கண்டு தோழி கூறினாள்.

பாடல் – 88
தலைவி கூற்று

துளவுகண் டாய்பெறு கின்றிலம் சென்றுஇனிச் சொல்லவல்ல
அளவுகண் பாய்வந்த தாதிகண் டாய்அடல் வேழம்உண்ட
விளவுகண் டால்அன்ன மேனிகண் டாய்விறல் மாரன்செய்த
களவுகண் டாய்நந்தி மல்லையங் கானல் கழிக்கம்புளே

'நந்தி மன்னனது மாமல்லையில் உள்ள சோலையில் செல்லும் உப்பங்கழியில் வாழும் நாரையே! திருமாலான நந்தியின் துளசி மாலையை நாம் அடைந்திலோம். இதனை அறிவாயாக! தூது சென்று பயனின்றி வந்த தாதியைப் பார்த்தாய்; வலிமை உள்ள யானை உண்ட விளாம்பழத்தை கண்டது போன்ற எனது உடம்பைப் பார்த்தாய்; வெற்றியையுடைய மன்மதன் மலரம்புகளை என் மேல் எய்த வஞ்சகத்தை பார்த்தாய்; தூது சென்று இனி என் நிலையைச் சொல்லத்தக்க அளவையும் நீ அறிந்தாய்; ஆகையால் இனி நீ தூது சென்று வருவாயாக!

நந்தி மன்னனைத் திருமாலாகக் கொண்டு அவர் மாலையினது துளசியைப் பெற்றிலோம் எனத் தலைவி கூறினாள் என்றும் திருமால் பிருந்தையைப் பிரிந்து வருந்திய சோகத்தைப் போக்கியது துளசி அது போலத் தனது பிரிவுத் துன்பத்தைப் போக்கத் துளசி போன்ற மருந்தைப் பெற்றிலேம் என்றாள் என்றும் பொருள் கொள்ளலாம்.

யானை உண்ட விளாங்கனி உள்ளீடு இல்லாமல் இருக்கும். யானை என்பது விளாம்பழத்திற்கு வரும் ஒருவகை நோய் என்றும், யானை உண்ட விளாம்பழம்

உடைபடாமலிருக்க அதன் உள்ளுள்ள பொருளை யானையின் குடல் இழுத்துவிடும் என்றும் கூறுவர். யானை உண்ட விளாம்பழம் போலத் தன் மனம் அவனிடம் சென்றுவிடத் தான் வெற்றுடம்போடு இருப்பதாகத் தலைவி கூறினாள்; இஃது உவமையணி. மன்மதன் தன் தலைவன் மீது மலரம்புகளை எய்து காதலை உண்டாக்காது, தன் மீது மட்டும் மலரம்புகளை எய்து காதலை வளர்த்தான் என்று எண்ணிய தலைவி 'மாரன் செய்த களவு கண்டாய்' என்றாள்; இவற்றை எல்லாம் நாரை அறிந்திருந்தாலும் நீ தூது சென்று வருவாய் என வேண்டினாள். வந்த தாதி என்பது, தூது சென்று பயனன்றி வந்த தாதி எனப் பொருள்படும்.

இது நாரை விடு தூது

குறிப்பு : மீதி இரண்டு பாடல்கள் கிடைக்கவில்லை

மிகைப் பாடல்கள்

பாடல் – 1
மன்னன் மாலையின் மாண்பு

என்னையோ னேபுகழ்ந்தேன் என்னாதே எப்புவிக்கும்
மன்னர்கோன் நந்தி வரதுங்கன் -— பொன்முடியின்
மேல்வருடும் தொண்டை விரைநாறும் இன்னமும் என்
கால்வருடும் சேடியர்தம் கை.

தோழியே!

என்னை நானே புகழ்ந்து கொண்டேன் என்று என்மேல் குற்றம் சொல்லாதே; இப்பொழுதும் என்னுடைய கால்களைப் பிடிக்கும் என் தோழியரது கையிலே எல்லாம் பூக்கும் அரசர்க்கரசரான நந்தி மன்னவனது பொன்னாலான முடியின் மேல் புரளும் தொண்டை மலர் மாலையின் மணம் மணக்கும்.

'நந்தி மன்னனது பாதத்திலே ஊடலை நீக்கும் பொருட்டு வணங்கிய போது பட்ட தொண்டை மலர் மாலையின் மணம் அவளது பாதத்தைத் தடவுகின்ற தோழியர் கையில் மணக்கும் என்று தலைவி கூறுகிறாள்.

பாடல் – 2
தலைவன் தலைவியின் இடையை வியத்தல்

மூங்கிலில் நுழைந்து வரும் காற்றினாலே மேம்பட்ட மிகுந்த புகழ் விளங்குகின்ற வீரத்தன்மையுள்ள நந்தி மன்னவனது பெரிய மலையில் ஈ பறக்கும்போது உண்டாகும் சிறகுக் காற்றையும் பொறுக்காத இம்மங்கையின் இடை இவளது மார்பின் இருபக்கத்தும் எழுந்த கொங்கையாகிய இரு குடங்களும் தண்ணீர் கொண்டு வரும் பொன்னாலாகிய ஒரு குடமும் ஆக மூன்று குடங்களையும் தாங்கினால் முறிந்து போகாதோ?

"ஈக்காற்றுக்கு ஆற்றா இடை" என இடையின் நுட்பம் ஈ பறக்கும் காற்றுக்கும் ஆற்றாது முறியும் தன்மையது என்கிறார் புலவர்.

பாடல் – 3

நந்தியின் கொடைப் பெருமை

'இந்தப்புவியில் இரவலர்உண்டு என்பதெல்லாம்
அந்தக் குமுதமே அல்லவோ? — நந்தி
தடங்கைப்பூ பாலன்மேல் தண்கோவை பாடி
அடங்கப்பூ பாலர் ஆவார்'

புலவர்கள் எல்லோரும் நந்தியாகிய பெரிய பகையை உடைய அரசன் மேல் இனிய கோவை நூலைப்பாடி பூமியைக் காக்கும் அரசரானார்கள். ஆகையால் இனி இந்த உலகத்திலே இரவலர் உண்டு என்று சொல்வதெல்லாம் புலவர்களைக் குறிக்காது. இரவில் மலரும் மலரான அந்த அல்லி மலரையேயன்றோ காட்டும்!

தன் கோவை பாடி என்பதற்கு குளிர்ச்சியான தொண்டை மலர் மாலையைப் பாடி எனலாம். இரவலர்—இரப்பவர்; இரவில் மலரும் மலர் என இருபொருள்படும். அவற்றுள் ஒரு பொருளை விலக்காமல் இது காரண ஒழிப்பு அணி.

பாடல் – 4

நந்தியின் நாட்டில் முத்துச் சிறப்பு

பாதத்தினவளாக நின்று பாதத்தை விளக்கின்ற ஆகையால் விளங்கும் அரசர்களது வரிசையிலே பிடிக்கப்படும் விளக்கும் எங்கள் ஊரவரது விளக்கும் தனது பெரிய புகழினாலே உலகத்தை விளக்குகின்ற நந்தியாகிய எம் அரசனது பெரிய மாடி வீடுகளுக்கு எல்லாம் இரவு விடியும் வரையில் எரியும் விடிவிளக்கும் இந்த மதியே ஆகும். நாங்கள் அணிந்து கொள்வதும் வெண்மையான முத்துக்களே ஆகும்.

இது தோழி தலைவனுக்கு தன் நாட்டு அணியையும் இயல்பையும் சொல்லியும் இரவுக்குறி நேர்ந்தது.

பாடல் : 5

நந்தி மன்னனின் வருகைச் சிறப்பு

'நமது நினைவில் உள்ள மான் போன்ற தலைவியை விட்டுப் போர் செய்தலில் நந்தி மன்னவன் பிரிந்து சென்ற பொழுது பொன்மலையான மேருவும் சோருவும் அடையும். ஏழு கடலும் கலக்கமடையும்; மன்மதனாகிய பகைவன் கோபிப்பான்; சந்திரனும் உதயமாகி வருவான; நந்தியின் பிரிவினால் தலைவிக்கு உண்டாகும் துன்பத்தைத் தோழி எடுத்துக் கூறினாள்.

பாடல் : 6

நந்தி மன்னன் வீரம்

'ஊரும் அரவமும் தாமரைக் காடும் உயர்வனமும்
தேரும் உடைத்துஎன்பர் சீறாத நாள்; நந்தி சீறியபின்
ஊரும் அரவமும் தாமரைக் காடும் உயர்வனமும்
தேரும் உடைத்துஎன்ப ரேதெவ்வர் வாழும் செம்பழுதியே'

'நந்தியின் பகைவர் வாழும் செழுமையான நாடு நந்தி பல்லவன் அவர் மேல் கோபம் கொள்வதற்கு முன்பே ஊர்களையும் மக்கள் மிகுதியால் உண்டாகும் பேரொலியையும் தாமரை மலர்கள் நிறைந்த நீர்நிலைகளையும் உயர்ந்த சோலைகளையும் தேரையும் உடையதாக இருந்தது என்றும் சொல்வர்; நந்திப் பல்லவர் அவர் மேல் கோபம் கொண்ட பின்பு அப்பகைவர் நாடு ஊர்ந்து செல்கின்ற பாம்புகளையும் தாவி ஓடுகின்ற மான் குதிரை புலி கரடி போன்ற பலவகை விலங்கையும் செறிந்துள்ள காடுகளையும் பேய்த் தேராகிய கானல் நீரையும் தனக்கு உரிமையாகக் கொண்டிருக்கும் என்றும் கூறுவர்.

இச்செய்யுள் பகைவரது காட்டின் அழிவைப் பற்றி இரங்கிக் கூறியது. இது வஞ்சித் திணையில் கொற்றவள்ளை.

பாடல் – 7

தலைவன் தன் தேர்ப்பாகனுக்கு கழறல்

'அழகிய தேரால் புகழ் பெற்றவனும் தேசங்கள் தோறும் பொருட்சாலை உடையவனும் ஆகிய நந்திப் பல்லவனது தெள்ளாறைப் பதியில் உள்ள மலையிலே மணம் விளங்கும் கூந்தலையுடைய என் மனைவிக்கு புலப்பட நமது தேருக்கு முற்பட்டு மேகம் செல்லுமானால் கொடி போன்ற அவள் 'மணிகள் பதித்த முடியையுடைய குதிரை பூட்டிய தேரும் அதனைச் செலுத்தும் பாகனும் அப்போர்க்களத்திலே என்ன துன்பத்தை அடைந்தனரோ என்று எண்ணி தனது தாமரைமலர் போன்ற கையை நெரித்து வயிற்றில் வைத்துக் கொண்டு ஏங்கி நிற்பாளே!

இது வினைமுற்றி மீளும் தலைமகன் தான் தலைவிக்கு குறித்த கார்காலம் வருதலைக் கண்டு பாகனோடு கூறுதல் 'தலைவி மேகத்தை கண்டால் வருந்தி நிற்பாள்; ஆகையால் பாகனே தேரை விரையச் செலுத்துவாய் என்பது குறிப்பு.

பாடல் – 8

தலைவி கார்ப்பருவம் கண்டு வருந்துதல்

'நாள் முழுவதிலும் சிவபெருமானை மறவாத மனத்தையுடையவனும் வெற்றியில் கொண்ட உறவு நீங்காத நந்தியும் ஆகிய பல்லவனது ஊரிலே குவளை மலரில் தேனை உண்ணும் வண்டுகளே! உலகத்தல் மழை பெய்யும் கார்காலமும் வந்துவிட்டது; என் தலைவர் மீண்டு வருவதாகக் குறித்து எல்லையாகச் சொன்ன நாளும் வந்துவிட்டது; எனது கவலையோ மிகப் பெரியதாகிவிட்டது. பழியைச் செய்பவரான என் கணவர் வந்திலர்; எனது கணவரது நட்பு கதையாகவே முடிந்துவிட்டதே!

இச்செய்யுளில் தலைவி கார்ப்பருவம் கண்டு தலைவர் வாராமை குறித்து புலம்புவதாக வரும் பகுதி நெஞ்சைத் தொடுவதாகும்;

அவனி மழைபெய் குளிர்காலம் வந்ததே
அவரும் அவதி சொனநாளும் வந்ததே
கவலை பெரிது பழிகாரர் வந்திலார்
கணவர் உறவு கதையாய் முடிந்ததே'

இதில் நந்தி மன்னனின் சிவபக்தி சிவனை முழுதும் மறவாத சிந்தனையான் என விளக்கப்பட்டுள்ளது.

கணவர் உறவு கதையாய் முடிதல் குறித்த காலத்தில் அவர் வாராமையால் தலைவி உயிர்விடத் துணிதல் அப்பழி கணவனைச் சேரும் எனக் கருதியே கணவனை 'பழிகாரர்' என்கிறாள் தலைவி.

பாடல் – 9
நந்தி மன்னன் மாலைச் சிறப்பு

'நடக்கின்ற மலையில் மதம் ஒதுங்கியது போல மதம் ஒழுகுகின்ற பெரிய யானையையுடைய நந்தி மன்னனது பலர் பின்தொடர்ந்து வேண்டிய தொண்டைமலர் மாலை எங்களது கொங்கைகள் தோனறி அசைவதற்கு முன்னே நாங்கள் நடந்த வழிகள்தோறும் மணம்வீசும்.

இது தங்களது கொங்கைகள் தோன்று முன்னே தங்களைப் பின் தொடர்ந்த நந்தி இப்பொழுது அரியன் ஆனான் எனத் தலைவி இரங்குதல்.

'நடக்கின்ற மலை மதம் பட்டதுபோல்' என்பது இல் பொருளுவமை.

பாடல் – 10
தலைவி வருந்துதல்

செவ்விய மாலையை அணிந்த நந்தி மன்னனது சிறுகுடி நாட்டில் வாழும் அன்னமே! நம்முடைய உயிர் நமது கணவரிடத்ததாக நம் கணவரது உயிர் தம்மிடத்தாக இருக்கும் தன்மையினாலே அத்தலைவர் நம்முடைய உயிரைத் தாமுடையவர் அல்லர்: என் உயிரை யானும் உடையேன் அல்லேன்; ஆகையால் (இப்பிரிவினால்) நாங்கள் இருவரும் இறவோம்.

பிரிவினால் வருந்தும் தலைமகள், தாங்கள் பிரிவினால் இறந்துபடாமைக்குக் காரணம் கூறி, அன்னத்தோடு இரங்கினாள். தலைவர் உயிர் அவரிடத்து இல்லை என்றதால், இவள் உயிர் இவளிடத்து இல்லை என்பதும் பெறப்பட்டது.

பாடல் – 11
காலம்

'மங்கையற்கண் புனல்பொழிய மழைபொழியும் காலம்
மாரவேள் சிலைகுனிக்க மயில்குனிக்கும் காலம்
கொங்கைகளும் கொன்றைகளும் பொன்சொரியும் காலம்
கோகனக நகைமுல்லை முகைநகைக்கும் காலம்
செங்கைமுகில் அனையகொடை செம்பொன்பெய் ஏகத்
தியாகிஎனு நந்தி அருள் சேராதகாலம்
அங்குஉயிரும் இங்கு உடலும் ஆனமழைக் காலம்
அவர் ஒருவர் நாம் ஒருவர் ஆனகொடுங் காலம்.'

'இக் கார்காலம் பிரிந்த மகளிரது கண்கள் நீரைச் சொரியும்படி மழை சொரியும் காலம்: மன்மதன் வில்லை வளைக்க அது கண்டு மயில்கள் கூத்தாடும் காலம். பிரிந்த மகளிரின் கொங்கைகள் பொன் போன்ற பசலை மிகும் காலம். கொன்றை மரங்கள் போன்ற நிறத்தையுடைய பூக்களை மலர்ந்து உதிர்க்கும் காலம்; செந்தாமரையும் ஒளியுள்ள முல்லைக் கொடிகளும் அரும்புகொண்டு விளங்கும் காலம்; மேகம் போன்ற கொடைத் தொழிலை உடைய செங்கையினால் செம்பொன்னைப் பொழியும் ஒப்பற்ற கொடையாளி என்னும் நந்தி மன்னனது அருளை நாம் பெறாத காலம்; தலைவரிடத்தே உயிரும் இங்கே உடலுமாக இருக்கும் மழைக்காலம்: அந்தத் தலைவர் தனித்த ஒருவரும், நாம் தனித்த வேறு ஒருவரும் ஆன கொடிய காலம்.

இது பிரிவின்கண் தலைவன் மீண்டு வருவதாகக் கூறிய கார்க்காலம் கண்டு தலைவி இரங்கியது.

தியாகி வடசொல்: கொடையாளி:

பாடல் – 12
காலம்

'தோழியே! எனது தாய்மார்களும் தோழியர்களும் என்னை நெருங்கி போரிடும் காலம்: இந்த ஆனிமாதம் சென்று ஆடி மாதம் முடியும் எல்லையில் வருவது கார்க்காலத்திற்கு உரிய ஆவணி மாதத்தின் காலம். புன்னை மரங்களும் பிச்சி என்னும் மல்லிகையும் தங்களுக்குள்ளே மகிழ்ச்சியுற்றுப் பொன்னுள்ள பவளம் போன்ற வாயைத் திறந்து மலர்களைப் பொழியும் காலம். செந்நெற் பயிர்களை உடைய வயலில் பறவைக்கூட்டங்கள் சூழ்கின்ற காஞ்சிபுரமாகிய வளநாட்டை உடையவனான, கொடையாளி என்று சொல்லப்படும் நந்திப் பல்லவனது பெரிய தோளைச் சேராத காலம்; எனது எளிமையைக் கண்டு சந்திரன் மிக்க ஒளி வீசி எரிகின்ற காலம்; இந்தக் காலத்தில் அத்தலைவர் என்னை முற்றிலும் மறந்து போய்விட்டாரே! (இதற்கு என் செய்வேன்?)

புன்னை மலர் வெண்மையான இதழ்களும் பொன் போன்ற துய்யும் பவளம் போன்ற காயும் பெற்றிருக்கும். ஆதலால் 'பொற்பவள வாய் திறந்து' என்கிறார் புலவர். 'புன்னை மகிழ்ந்து பொற்பவள வாய் திறக்கப் பிச்சி மலர் சொறியும் காலம்' எனலுமாம்.

இது, 'இரவலர் வாய் திறந்து கேட்க மனமகிழ்ந்து நந்தி பொருளைக் கொடுப்பவன்' என்பதை உள்ளுவையாகக் கொண்டுளளது.

இளந்தலை—எளிமை. இச்செய்யுளில் ஆனி, ஆடி, ஆவணி என்ற மாதங்களின் பெயர்கள் வந்துள்ளன.

இது மேற்செய்யுளைப் போன்றது.

பாடல் – 13
தலைவி, பாணனைப் பழித்துரைத்தல்

'ஈட்டுபுகழ் நந்தி பாணநீ எங்கையர்தம்
வீட்டுருந்து பால விடிவனவும் காட்டில்அழும்
பேய்என்றால் அன்னை பிறர்நரிஎன் றார்தோழி
நாய் என்றாள் நீ என்றேன் நான்?'

‘தேடிய புகழையுடைய நந்தி மன்னனது பாணனே! நீ நேற்று எமது தங்கையரான பரத்தையர் வீட்டிலே இருந்து விடியும் வரையும் பாட, அதனைக் கேட்டு எனது அன்னை. அவ்வொலி காட்டிலே அழுகின்ற பேயினது குரல் என்றாள்: மற்றையவர்கள் அது நரியின் குரல் என்றார்கள். எனது தோழியோ அது நாயின் அழுகைக் குரல் என்றாள். நான் அது உனது பாடலே என்று சொன்னேன்.

பரத்தையரிடத்துச் சென்ற தலைவன் தலைவியிடத்து பாணனைத் தூதாக அனுப்பிய போது தலைவி அப்பாணனுக்கு கூறியது தலைவனைப் பரத்தையர் வீட்டிற்கு அழைத்துச் சென்றவன் பாணனே யாதலால் தலைவி அவனது செயலைக் குறிப்பாக கூறி இருக்கிறாள்.

பாடல் – 14
செவிலி இரங்குதல்

கோட்டையை இடித்து அகழியை மலை போல் மேடாகத் தூர்த்து மலை போல் உயர்ந்த இடங்களை அகழி போலப் பள்ளமாக்கிப் பகைவரது நாட்டை மிதித்துச் செல்லும் ஆண் யானையை உடைய நந்தி மன்னவனது நாட்டிலே காதில் அணிந்த பொன்னாலான தோட்டை மிதித்து அந்த தோட்டினிடையாகச் சென்று சுருண்ட கூந்தலாகிய காட்டை மிதிக்கின்ற கெண்டை மீன் போன்ற கண்களை உடைய மகளே, இச் சுரத்தில் கால் வைத்து நடந்து செல்வது?

இது தோழி தலைவியை அழைத்துக் கொண்டு செல்லும்படி உடன்போக்கை உணர்த்திய வழி தலைவன் உடன்போக்கை மறுத்துரைத்தல் ஆம். அல்லது தலைவி தலைவனுடன் உடன்போகிய வழி அவளது தன்மை நினைந்து நற்றாய் புலம்பல் ஆம்.

தலைவியின் கண் பார்வை காது தோட்டை மிதித்து அதன் வழியே சென்று கூந்தற் காட்டை மிதிக்கும் என்றதால் அவள் பாலைவனத்தையும் அதற்கு அப்பாற்பட்ட காட்டையும் மிதித்து நடக்க வல்லவளாவாளோ என எண்ணியதாம்.

பாடல் – 15
தலைவி வருதல்

‘செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனம்என்று ஆரோ தடவினார்—பைந்தமிழை
ஆய்கின்ற கோனநந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மெய்’

பசுமையான தமிழை ஆராய்கின்ற நந்தி மன்னவனது மார்பைத் தழுவாமல் வேகின்ற பாவியேனது உடம்பின்மேல் செம்மையான தீயினது சாற்றைப் பிழிந்து செழுமையான குளிர்ந்த சந்தனம் என்று சொல்லித் தோழியரில் யாரோ தடவினார்.

தலைவனது பிரிவால் தோழி ஆற்றுவிக்கவும் ஆற்றாது தலைவி இரங்கல். பிரிவுத் துன்பத்தால் தோழியர் தன் மேலே பூசிய சந்தனமும் தலைவிக்குத் தீப் போன்றிருந்தது.

பாடல் – 16
பாலனைப் பழித்தல்

திறமாக நந்தி மன்னனைக் கூடிய மகளிரை எனக்கு எதிராகச் செய்து என்னை எளிமையாக்கி என் உறுப்புகளை எல்லாம் நடுங்கச் செய்து எனது ஆடையும் அழுக்காகச் செய்து எனது உடம்பை அங்காடி கடைக்கு இட்ட பதர் போல் ஆகச் செய்து என்னையும் தகுதி இல்லாமல் செய்த மைந்தன் இவனே ஆவான்!'

அங்காடியில் பதரை இட்டால் ஒதுக்கித் தள்ளப்படுதல் போல தலைவனால் நீக்கப்பட்டாள் தலைவி என்பது குறிப்பு 'பாலகன் இவனே' என்பது இசை எச்சம்.

இது தலைவன் பரத்தையிற் பிரிந்தது கண்டு வருந்திய தலைவி தன் மைந்தனோடு வெறுத்துக் கூறியது.

பாடல் – 17
மேக விடு தூது

'ஓடுகின்ற மேகங்காள் ஓடாத தேரில்வெறும்
கூடு வருகுது என்று கூறுங்கோள்—நாடியே
நந்திச்சீ ராமனுடை நன்னகரில் நன்னுலகைச்
சந்திச்சீ ராகில் தான்'

எனக்கு முன்பாக வானத்திலே ஓடுகின்ற மேகங்களே!

நீங்கள் சிறந்த இராமனான நந்தி மன்னனது நல்ல நகரத்தில் உள்ள நல்ல நெற்றியை உடைய என் மனைவியை எதிர்பட்டீரானால் உங்களுக்கு ஒப்பாக ஓடாத இத்தேரில் உயிரற்ற உடம்பு வருகின்றது என்று சொல்லுங்கள்.

வினைமுற்றி மீளும் தலைமகன் தன் எதிர்ப்பட்ட மேகத்தைப் பார்த்து தான் தலைவிக்கு மீண்டு வருவதாகக் குறித்த கார்காலம் வந்துவிட்டதை உணர்ந்து மேகத்தை விளித்துக் கூறினாள். பாகனே! விரைந்து தேரைச் செலுத்துவாயாக! என்பது இதன் குறிப்பு. தன்னுயிர் தலைவியிடத்தே முன்னதாகச் சென்றுவிட்டதாக எண்ணித் தலைவன் தன்னை 'வெறுங்கூடு' என்று கூறினான்.

'கூறுங்கள்' என்பது 'கூறுங்கோள்' என ஆயது,
'மலைகிழவானே, என்றது போல.

பாடல் – 18
நிலவைப் பழித்தல்

'மண்ணெல்லாம் உய்ய மழைபோல் வழங்குகரத்
தண்ணுலா மாலைத் தமிழ்நந்தி நன்னாட்டில்
பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போலவரும்
வெண்ணிலா வேஇந்த வேகம் உனக்கு ஆகாதே'

'உலகமெல்லாம் பிழைக்க மழை போலக் கொடுக்கும் கையையுடைய குளிர்ந்த உலா மாலையைப் பெற்ற தமிழை உணர்ந்த நந்தி மன்னனது நாட்டிலே பெண் இல்லாத ஊரிலே பிறந்தவர்களைப் போல என் மேல் கொடுமையோடு வருகின்ற வெண் நிலாவே! உனக்கு இந்தக் கொடுமை ஆகாது.

இச்செய்யுள் தலைவி தலைவனது பிரிவிலே கண்டு வருந்திக் கூறியது. பெண்ணிலா வீட்டில் பிறந்தார் என்னாது ஊரில் பிறந்தார் என்றது சந்திரனது கொடுமை மிகுதியைக் காட்டிற்று. உலக இயல்பிலே ஒருவர் கொடுமை செய்தால் நீ ஆணுடன் பெண்ணுடன் பிறக்கவில்லையா? என்று கேட்பது வழக்கு. அதனை ஒட்டி உள்ளது இச்செய்யுள்.

பாடல் – 19
தலைவி இரங்கல்

'மன்மதன் அம்பாலாகிய நீலோற்பல மலர் பலவற்றை எடுத்தான் கையில் வில்லாகிய கரும்பை எடுத்தான். மேலும் அம்புகளை விரும்பிப் பல சோலையினுள்ளே புகுந்தான. இனி நம் உயிரை வேட்டையிடத் துவங்குவான். நமக்கு அவன் வேட்டைக்குத் தப்புதற்கு உயிர் பல உள்ளனவோ? இல்லை ஆகையால் என் உடலை உயிர் விட்டு நீங்குமுன்னே எனது நிலையை தெய்வத் தன்மை பொருந்திய நந்திக்கு ஓடித் தெரிவிப்பவர் யாவர் உள்ளனர்?

இது வேனிற்காலம் கண்டு தலைவி இரங்கிதக் கூறிற்று. மன்மதனுக்கு கரும்பு வில்லும் முல்லைப்பூ தாமரைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, நீலோற்பல மலர் ஆகிய 5 மலர்களும் 5 அம்புகள் ஆகும். அந்த அம்புகளின் செயலும் வெவ்வேறாகும். தாமரை மலரம்பு தலைவன் நினைவை உண்டாக்கும் அசோக மலரம்பு உணவைப் போக்கும் முல்லை மலர் அம்பு மயங்கி கிடக்கச் செய்யும். நீலோற்பல மலரம்பு உயிரைப் போக்கும்.

பாடல் – 20
நந்தி மன்னன் கொடைச் சிறப்பு

செய்ய கமலத் திருவுக்கு முன்பிறந்த
தய்யல் உறவு தவிர்த்தோமே — வையம
மணக்கும் பெரும்புகழான் மாணபரன் நந்தி
இணக்கம் பிறந்தநாள் இன்று.

உலகத்திலே விளங்கு பெரும் புகழை உடையவனும், மானத்தை மேலாகக் கொண்டவனும், ஆகிய நந்தி மன்னனது நட்பு உண்டான நாளாகிய இன்று சிவந்த தாமரை மலரில் இருக்கும். திருமகளுக்கு முன்னே பிறந்த மூதேவியில் உறவு நீங்கப் பெற்றோம்'.

நந்தியின் கொடையைப் புகழ்ந்தது. பாடாண் திணைப் பாட்டு. 'தையல்' எனின், எதுகை பொருந்தாது. ஆகையால் புலவர், 'தய்யல்' என எழுத்துப் போலி கொண்டார்.

பாடல் – 21

தலைவன் கூற்று : இயலிடம் கூறல்

'அர்ச்சுனனுக்குத் தேர்ச்சாரதியாய்த் தேரைச் செலுத்திய திருமாலான நந்தியும், தேச பண்டாரியும், ஆகிய நந்திப் பல்லவனது, தெள்ளாறை என்னும் ஊரில் உள்ள மலையில் மேகம் போன்ற கூந்தலை உடைய தலைவிக்கு மென்மையான கொங்கைகள் கச்சைக்கு அடங்காது மேற்படும்; அவளது சொற்கள் கற்கண்டிலும் சுவை மிகும்: மீதி போன்ற முகத்தில் வியர்வை தோன்றும்: அவளது உடம்பு சிறந்த மாந்தளிரிலும் மேம்படும்; அவளது கடைக்கண்கள் காதளவாகச் செல்லும்;

இயற்கைப் புணர்ச்சியின் பின், தலைவியின் கூட்டம் இனி எவ்வாறு கிடைக்கும் என ஏக்கமுற்றிருந்த தலைவனைக் கண்டு தோழன் இவ்வருத்தத்திற்குக் காரணம் என்ன? என வினாவிய போது, தலைவன் தோழனுக்குத் தான் கலங்கிய வரலாற்றைக் கூறி, அவளின் இயல்பையும் இடத்தையும் கூறினான். ஆகையால், இஃது இயலிடங் கூறல் என்னும் துறை.

பாடல் – 22

கையறு நிலை

(நந்தி இறந்த பின்பு பாடிய செய்யுள்)

'வானூறு மதியை அடைந்ததுஉன் தட்பம்
மறிகடல் புகுந்தது உன் பெருமை
கானுறு புலியை அடைந்ததுஉன் சீற்றம்
கற்பகம் அடைந்தது உன் கொடைகள்
தேனூறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுஉன் மேனி
யானும் என்கலியும் எவ்விடம் புகுவேம்
நந்தியே எந்தை பிரானே!'

'நந்தி மன்னனே! எனது தந்தையே!உபகாரியே! உனது குளிர்ந்த தன்மை வானத்தில் உள்ள சந்திரனிடத்தே சேர்ந்தது. உன் பெருமை அலை மடங்குகின்ற கடல் சூழ்ந்த உலகத்தில் பரவியது. உனது கோபம் காட்டில் இருக்கும் புலியினிடத்தே புகுந்தது: உனது கொடுக்கும் தன்மைகள் கற்பக விருட்சத்தை அடைந்துவிட்டன; உன்னிடத்திருந்த தாமரை மலரில் இருப்பவளான திருமகள் திருமாலினிடத்தே புகுந்தாள். உனது உடம்பு சிவந்த தீயிலே புகுந்தது: உன்னை அடுத்திருந்த யானும் எனது வறுமையும் இனி எவ்விடத்தே சென்றடைவோம்?'

தட்பம் —குளிர்ச்சி : இரக்கம்

நந்தியினது இனிய தன்மை அவன் இறந்தால் இவ்வுலகத்தில் இல்லாமல் மதியினிடத்தே போய்ப் புக்கது. ஆதலால் அது கழிந்தது. இனித் தண்மை என்பது சந்திரனிடத்திலன்றி மற்றையோரிடத்தில் இல்லை. அவன் பகைவர் மேல் கொள்ளும் கடுங்கோபம் அவன் இறந்ததால் மக்களை விட்டுப் புலியினிடத்தே புகுந்தது. இனி எதிரியை வெல்லக் கொள்ளும் விடாப்பிடியான கோபம் புலியினிடத்தே அன்றி

மனிதர்களிடத்தில் இல்லை. அவனது கொடை அளவிறந்தது. அவன் மற்றவர்க்கு வேண்டுவதே அளவிக்கும் இயல்பினள். அவனது கொடைதன்மை அவன் இறந்ததால் இவ்வுலகத்தை விட்டு வானுலகில் சென்று கற்பக விருட்சத்தை அடைந்தது. இனி கொடுக்கும தன்மைக் கற்பகத்தினன்றி மற்றையோரிடத்துக் காண முடியாது. நந்தியினிடத்தே தங்கியிருந்த திருமகள் அவன் இறந்ததால் இவ்வுலகத்தை விட்டுத் திருமாலிடத்திற்கே சென்றுவிட்டாள். இனித்திருவைக் காணமுடியாது. நந்தியின் அழகமைந்த உடம்பு தீயினால் எரிக்கப்பட்டது. இனி இவ்வாறமைந்த உடம்பைக் காணுதல் அரிது. செல்வத்தாலும் கொடையாலும், வீரத்தாலும் தண்மையாலும் நந்தி பெற்ற 'புகழ்' அவன் இறந்ததால் அவனுக்குப் புகழுடம்பாய் இவ்வுலகம் முழுவதும் பரவி நின்றது. நந்தியின்

தன்மைகள் எல்லாம் நந்தி இறந்த பின் தத்தமக்கு ஓர் இடம் தேடி அடைந்ததை அறிந்த புலவர், அவ்வண்ணமே தாமும் சென்று அடைவதற்கு வேறொரு இடம் இல்லாமையை அறிந்து நந்தியை விளித்து இனித் தாமும் தம் கலியைப் போக்க எவ்விடம் செல்வது என்று இரங்கிக் கூறினார். தமக்குப் புகலிடம் வேறு இல்லை என்பதை அறிந்த புலவர் தம்மை அடைந்த கலிக்கும் தம்மை விட்டுச் செல்லும் இடம் வேறு இல்லை என்பதை உணர்ந்து, 'யானும் என் கலியும் எவ்விடம் புகவேம்' என்று கூறினார்.

இச்செய்யுள் கையறுநிலை 'செய்கழல் மன்னன் மாய்ந்தெனச் சேர்ந்தோர், கையறவுரைந்துக் கைசோர்ந்தன்று! 'சுழிந்தோன் தன் புகழ் காதலித்து உரைப்பினும் மொழிந்தனர் புலவர் அத்துறை என்ன' (புறப்பொருள் வெண்பா மாலை, 14—15)

இப்பாடல் சில பிரதிகளில் கீழே கண்டவாறு உள்ளது.

வானுறு மதியை அடைந்தது உன் வதனம்
மறிகடல் புகுந்தது உன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததும் உன்கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்தது உன் தேகம்
நானும் என்கலியும் எவ்விடம் புகுவேம்
நந்தியே நந்தையா பரனே'

தமிழ்விடு தூது

அறிமுகம்

பிரபந்தங்கள் பலவற்றுள் தூது இலக்கியமும் ஒன்று. தலைவனது வரவினை எதிர்நோக்கும் தலைவி. அவன்பால் தன் மனத்தினைத் தெரிவித்து வருமாறு தூதுப் பொருளிடம் கூறுதல். இதன்பொருள் கலிவெண்பாவினால் இவ்விலக்கியம் அமையும். இதன் இலக்கணம் - "பயிறருங் கலி வெண்பாவினாலே உயர்திணைப் பொருளையும், அஃறிணைப் பொருளையும் சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப் பாட்டியற் புலவர் நாட்டினர் தெரிந்ததே" (இ.வி.சூ.874) என்னும் சூத்திரத்தினாலும் உரையாலும் உணரப்படும். தமிழ் மட்டுமேயன்றி வடமொழியிலும் தூது இலக்கியம் உண்டு. காளிதாசருடைய மேகதூதம் இதற்குச் சான்றாகும்.

தமிழ் மொழியிலுள்ள தூது இலக்கியங்கள் இரண்டு வகைகளாகப் பகுக்கலாம். 1. புறத்தூது 2. அகத்தூது 1. ஓர் அரசன் மற்றோர் அரசனிடம் அனுப்பும் தூதும், ஒரு புலவர் ஓர் அரசனிடம் அனுப்பும் தூதும் புறத்தூது ஆகும். 2. தலைவன் தலைவியிடமோ தலைவி தலைவனிடமோ அனுப்பும் தூது அகத்தூது ஆகும்.

பிரபந்தங்கள் பலவற்றுள் ஒன்றான தூது. இவ் அகத்தூது முறையைப் பின்பற்றியது. தலைவனுடைய அழகில் ஈடுபட்டுத் தலைவி, அன்னம் முதலான அஃறிணைப் பொருள்களையோ, தோழி முதலான உயர்தினண மாந்தரையோ தலைவனிடம் தூதாக அனுப்பி, அவனுடைய உடன்பாட்டிற்கு அறிகுறியாக அவனது மாலையை வாங்கி வருமாறு வேண்டுவதாக இது அமையும். இது கவி மரபு. அகநானூற்றில் (பாடல் 170) நண்டையும், நற்றிணையில் 70 நாரையையும் கிளியையும்(54) குறுந்தொகையில் வண்டையும் (392) ஐங்குறுநூற்றில் பாணனையும்(140) நெஞ்சையும் (317) திருக்குறளில் நெஞ்சையும் (1200) தலைவி தூது விடுத்தலாக அமைந்த தனிப் பாடல்கள் உள்ளன. தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம், ஆகிய நூல்களிலும் அவ் அகப்பொருள் மரபு ஆளப்பட்டது. கலம்பகம் அந்தாதி ஆகியவற்றிலும் இத்துறைப் பாடல்கள் உண்டு.

அன்னம், மயில், கிளி, மேகம், நாகண வாய்ப்புள் தோழி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு என்ற பத்துமே தூது விடுக்கப்படும். பொருள்கள் ஆகும்? வேறு தூதுப் பொருள்களும் பிற்காலத்தில் புலவர்களால் ஆளப்பட்டன. வேறு தூதுப் பொருள்களும், பிற்காலத்தில் புலவர்களால் ஆளப்பட்டன. நெல் துகில், தாமரை, நெல், அன்றில், இருவாட்சி, குவளை, சண்பகம், பாரிசாதம், பிச்சி, புறவு, பொன், புகையிலை, கழுதை, காக்கை என்பன அவற்றுள் சில.

மதுரை சொக்கநாதர் மேல் காதல் கொண்ட தலைவி ஒருத்தி தமிழ் மொழியினை அவர்பால் தூது அனுப்புவதாக அமைந்தது. 'தமிழ் விடு தூது' என்ற நூலாகும். இது 268 கண்ணிகளை உடையது. இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. இதனை முதலில் 1930 இல் டாக்டர் உ.வி.சாமிநாதய்யர் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டார்கள்.

கருத்து (கண்ணி – 4) தமிழைத் தேவராகப் போற்றுதல்

சிறப்புப் பொருந்திய கூடல் என்ற சிவராசதானி என்னும் மதுரையை ஆண்டு சங்கப் புலவர்களில் ஒருவராக இருந்தவர் சிவபிரான். எல்லாத் திசைகட்கும் சென்று போர் செய்து வெற்றி கொண்டு, தமிழரசி என்று அனைவரும் துதிக்க நின்றவள் தடாகத்தைப் பிராட்டியார் சிவஞானத்தை உணர்த்தும் ஏடுகளுள் ஒன்றினைக் கையில் எடுத்தவர் விநாயகர். உக்கிரகுமாரப் பாண்டியன் என்ற பெயரோடு மதுரையை ஆண்டு உருத்திரசன்மன் என்ற பெயருடன் சங்கப் புலவர்க்கெதிரே பாடலை அறிவித்து இருந்தவர் முருகப்பிரான்.

குறிப்பு

கூடற் சிவராசதான்; கூடலாகிய சிவராசதானி, சிவராசதானி என்பது மதுரையின் திருப்பெயர்களுள் ஒன்று. பின், தடாதகைப் பிராட்டியார்.

கருத்து (கண்ணி 5–16) தமிழைச் சான்றோர்களாகப் போற்றுதல்

மூன்று வயதிலேயே உமாதேவியாரின் திருமுலைப் பால் உண்டு வடகலையும், தென்கலையும் உணர்ந்தவர் திருஞானசம்பந்தர். முதலையுண்ட பாலனை உயிருடன் வருவிக்கப் பாடியவர் சுந்தரர். திருநல்லூரில் சிவபிரானுடைய திருவடியைத் தன்முடியின்மீது பதிக்கப்பாடியவர் அப்பர். சிவபிரானே ஏடெழுதுபவராக இருந்து எழுதிக் கொள்ளுமாறு பாடல் இசைத்தவர் மாணிக்கவாசகர். முத்தமிழும் ஓதியருளியவர் அகத்தியர். தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர். பதியை நோக்குவதாகிய பசுவைப் பற்றிய செய்திகளைப் பன்னிரண்டு சூத்திரங்களினால் சிவஞானபோகம் என்ற பெயரால் செய்தவர் மெய்கண்டார். குற்றமற்ற கவிதைகளைப் பாடியவர்கள் திருமாளிகைத் தேவர் முதலியோர். நீக்குதற்குரிய வினைகளைத் தம் திருமந்திரத்தினால் ஒழித்தவர் திருமூலர். பொய்யடிமையில்லாத புலவரென்று (சுந்தரரால்) புகழப்பட்டவர்கள் கபிலர் முதலான சங்கப் புலவர்கள், கல்லாதவர்கட்குச் சிங்கமென விளங்கியவர்கள் ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் நாயனார், திருவள்ளுவர் முதலான பெருமக்கள். இங்ஙனம் இவர்கள் எல்லோருமாகத் தமிழாகிய நீ வடிவு கொண்டிருக்கின்றாய். நீ வேறு அவர்கள் வேறு என்ற தன்மையின்றி நீயே இவர்களாக விளங்குகின்றாய். எனவே, தமிழாகிய தலைவனே, உன்னை வணங்கினால் என் துன்பங்கள் நீங்கும் என்று உன் திருவடிகளை அடைக்கலமாகக் கொண்டு போற்றினேன்.

கருத்து : (கண்ணி : 17–22) தமிழின் பிறப்பினைப் போற்றுதல்

பஞ்சினால் நூற்கப்படாத நூலே, பலரால் நெருடப்படாதே பாவே கிழிந்து அழுக்கேறாத கலையே நிறம் தேயாத செந்தமிழே, சொல்லொருவராகிய புலவரது உள்ளம் தீயாமல் சொல்லை (நெல்லை) விளைவிக்கும் செய்யுளே. நீ ஒரு குலத்திலும் பிறவாமல் உயிர்க்குயிராய் நின்றாய். ஆயினும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐந்து குலத்தினும் வந்தாய்.

உன் தோற்றமும் வளர்ச்சியும் பின்வருமாறு அமைவன: உந்தியிடத்தில் காற்றுத் தங்கி, வாக்காகிய சூல் கொண்டு தலை மிடறு, மூக்கு, மார்பு, எண்ணம் நான்கிடத்தும் சார்ந்தும் இதழ், நா, பல், அண்ணம் என்பவையே கருவியாகக் கொண்டு முப்பது முதலெழுத்துக்களாகவும், இருநூற்று நாற்பது சார்பெழுத்துக்களாகவும் நீ பிறந்தாய்.

கருத்து : (கண்ணிகள் : 23–29) தமிழின் வளர்ச்சியைப் போற்றுதல்

பின்னர், எண்பெயர் முறை பிறப்பு முதலான பன்னிரண்டு பருவங்கொண்டு உன்னை மக்கள் வளர்கின்றனர். சுவடி தூக்கும் பலகையாகிய தொட்டிலிட்டுச் சிறுவர்கள் தாலாட்டுகின்றனர். சுவடிகளுக்கு மஞ்சள் பூசி மைக்காப்புச் சாத்துகின்றனர். அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலும் புகட்டுகின்றனர். பிள்ளைத் தமிழினால் சிறுவர்களுக்குப் பத்துப் பருவங்களிட்டு நீ வளர்த்தாய்? உன்னை ஒருவர் வளர்க்க இயலுமோ? பல்வேறு கலைகளையும் படிக்க நினைப்பவர்கள் உன்னைப் படிப்பார்கள். உனக்குக் கற்பிப்பவரும் உண்டோ? இயற்சொல் முதலான செய்யுள் சொற்கள் நான்கும் அகப்பொருட் புறப் பொருட்கள் முறையே எழும், எழுத்து முதலான யாப்பு உறுப்புக்கள் எட்டும் உவமை முதலான அணிகள் முப்பந்தைந்தும் ஆகியவை வேறுபடாத மாப்பிள்ளையாக விளங்குபவன்.

கருத்து : (கண்ணிகள் : 30–62) தமிழை அரசனாகப் போற்றுதல்

செப்பலோசை முதலான ஓசைகள் நான்கும் உன் பட்டத்தரசியாகவும், தோற்கருவி முதலான இசைக் கருவிகள் ஐந்தினாலும் பிறக்கின்ற நூற்று மூன்று பண்களும் உனக்குப் பின்முறை வதுவை மகளிராகவும் கொண்டு நகை முதலான ஒன்பது சுவையாகிய பிள்ளை நீ பெற்றாய்; பெருவாழ்வு பெற்றாய், பணகளாகிய மனைவியரொடும், சுவைகளாகிய மக்களொடும் நாடக அரங்கமாகிய பெண்ணினது கொலுவில் இருந்தாய்.

பெருங்காப்பியங்களுக்குரிய பதினெட்டு வருணைகள் என்ற வாழ்வு கண்டு மகிழ்ந்தாய். பிட்டுக்கு மண் சுமந்தபோது சிவபிரான் பாண்டியனால் அடிபட்ட பிரம்பையே செங்கோலாகக் கொண்டாய். திசைகள் பத்திலும் விளங்குபவர் சிவபிரான். அங்ஙனமே உன் செங்கோல் செல்லாத திசையும் உண்டோ? ஐம்பத்தாறு தேசங்களிலும் உன் திசைச்சொல் பதினேழும் உன் குறுநில மன்னர்களன்றோ?

மேலைக்கடலும், கீழைக்கடலும் வேங்கடமும் தென்குமரியும் ஆகிய எல்லைகளைக் கொண்டாய். தென்பாட்டி முதலான பன்னிரண்டு நாடுகளும் அதன் உட்பிரிவுகளோ? வையைக்கும், கருவூருக்கும் இடையிலுள்ள பகுதியே நீ வாழும் அரண்மனையோ? மூவேந்தர்கள் மூலமாக எல்லா உலகங்களுக்கும் சென்று வெற்றி கொண்ட நீ உலகிலேயே பெரிய வேந்தனோ? வேதங்களெல்லாம் உனக்குப் புரோகிதரோ? பெருங்காப்பியங்களும், நாடக அலங்கார நூல்களும் உன்னுடைய தோழர்களோ? மெய்கண்ட சாத்திரம் முதலியவை உனக்குச் சேனாதிபதிகளோ? பாரதம், பதினென் புராணங்கள் ஆகியவை உன் சேனைகளோ? எனவே பூலோக சக்ரவர்த்தியும் நீ தானோ?

சக்கரம் ஏந்தி, தேர்மேல் ஏறி, சுழிக்குளம் நீந்தி, கூடசதுக்கம் புகுந்து, மாலை மாற்று அணிந்து, சதுரங்கம் சூழ முரசம் முழங்கச் சங்கத்தின் மீதிருந்து நீ வாழ்ந்தாய் (இவையனைத்தும் சித்திர கவிகள்)

சம்பந்தர் முதலான மூவரும் பாடிய தேவாரப்பதிகங்களும், மணிவாசகர் பாடிய திருக்கோவையாரும், காரைக்காலம்மையார் பாடிய இரட்டைை மணிமாலையும், ஐந்து பெருங்காப்பியங்களும், சேரமான் பெருமாள் பாடிய பொன் வண்ணத்தந்தாதியும் மும்மணிமாலையும், பட்டினத்தார் பாடிய திருவிடைமருதூர் மும்மணிக்கோவையும்,

சங்கத்தார் பாடிய பத்துப் பாட்டும், எட்டுத்தொகையும், பதினென் கீழ்க்கணக்கும், இரட்டைப் புலவர்கள் பாடிய திருவாழித்தூரக் கலம்பகமும், செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியும், ஒட்டக்கூத்தர் பாடிய மூவருலாக்களும், குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழும் ஆகிய மெய்க்காப்பாளர்களோடு இராசகாரியம் செய்யும் கவிதை அரசனே! இவ்வுலகில் உனக்கு சரியாசனம் கிட்டுமானால் தமிழே உனக்கு நிகராவார் யாருமுண்டோ?

குறிப்பு

அவலம், நலிவு, நடுநிலை, உருத்திரம் அட்டதாச வருணனைகள்; பெருங்காப்பியத்தற்குரிய பதினெட்டு வருணனைகள்: மலை, கடல், நாடு, நகர் சிறுபொழுது 6, பெரும்பொழுது 6, சூர்யோதயம், சந்திரோதயம், திசைச்சொல் பதினேழு தமிழ் ஒழிந்த பதினேழு மொழியும், குறுமன்னியர்: சிற்றரசர்கள்.

கருத்து : (கண்ணிகள் 63–70) தமிழைப் பயிராகப் போற்றுதல்

வெண்பா முதலான நான்கும் வயற்பரப்பாக, விருத்தம் முதலான மூன்றும் மடைப்போக்காக, அந்தக் கரணங்கள் நான்கினையும் ஏராகப் பூட்டிப் புலவர்களாகிய உழவர்கள் அறம் முதலிய நான்கு பொருள்களையும் விதைப்பர்.

பிள்ளைப்பாண்டியன், வில்லிபுத்தூராழ்வார், ஒட்டக்கூத்தர் முதலியோர் குற்றங்கள் வாராமல் பாதுகாவல் செய்வர். பால் போலவும் திராட்சை போலவும், வாழை, கரும்பு, தேங்காய் போலவும் விளங்குகின்ற சுவைகளுடன் நீ விளைந்தாய். தித்திக்கும் அமுதமாய் அமுதினும் மேலான முத்துக்கனியாய் முகிழ்ந்தாய். முத்தமிழே! அறிவினால் உண்ணப்படுகின்ற தேனே: உன்னோடு மகிழ்ந்து சொல்லுகின்ற என் வேண்டுகோள் ஒன்று உண்டு. அதனை நீ கேட்பாயாக.

கருத்து : (கண்ணிகள் : 71–88) மற்றப் பொருள்களினும் உயர்ந்த தென்றல்

உன் இலக்கியங்களில் குலம் என்றும், பள் என்றும் கொள்வார்கள். ஆயினும் உனக்கு உறவு என, தாழிசை துறை விருத்தம் என்ற மூன்றிலும் உன்னைச் சிந்து என்று (சிதறுதல், சிந்து என்னும் பாட்டு வகை) சொல்லிய நாக்கு அழியும். தேவர்களுக்கும் சத்துவம் முதலான மூன்று குணங்களே உண்டு. நீயோ செறிவு, தெளிவு முதலான குற்றமில்லாத பத்துக் குணங்களைப் பெற்றாய். வெண்மை முதலான எண்ணங்கள் உலகில் ஐந்தே உண்டு. ஆயின் நீயோ தூங்கிசை வண்ணம் முதலான நூறு குணங்களை உடையாய்.

இனிப்பு முதலான சுவைகள் ஆறு மட்டும் நாவிற்கு உண்டு. ஆயின் நீயே, நகை, அழுகை முதலான ஒன்பது சுவைகளை உடையாய். உலகில் வனப்பு என்பது ஒன்றே உண்டு. ஆயின் நீயோ அம்மை, அழகு முதலான எட்டு வனப்புகளை உடையாய். அரசர்கள் வரிப்பொருள் முதலான மூன்று வகைப் பொருள்கோள் உடையவர். ஆயின், நீயோ யாற்றுநீர்ப் பொருள்கோள் முதலாக எட்டு வகைகளையுடையாயா. இவையன்றி, அறம், பொருள், இன்பம் என்ற முப்பால்களையும் கொண்டாய். ஆண்பால், பெண்பால் முதலான ஐம்பால்களை உடையாய். உலகத்துச் சீர்கள் (செல்வங்கள்) எட்டு உனக்கோ (செய்யுள்) சீர்கள் முப்பது.

சேரமான கணைக்காளரும் பொறைக்கு இட்ட விலங்கினைக் 'களவழி நாற்பது' என்ற நூலின் மூலம் நீ விலக்கினாய். ஏழு தளைகள் (விலங்குகள்) உண்டு என்று சொல்வது பொருந்துமோ? செந்தமிழ் என்று மூன்று யுகத்திலும் இருக்கும் உன்னைக் கலிப்பா என்பது பொருந்துமோ? கற்பவருடைய மயக்கத்தைப் போக்குகின்ற உன்னை மருட்பா என்பது பொருந்துமோ? பத்துப் பொருத்தமும் (மங்கலம் சொல் முதலானவை) உடைய உன்னை விருத்தம் (ஒரு வகைச் செய்யுள், பொருத்தமில்லாதது) என்று கூறுதல் தகுமோ?

ஞாயிறு, திங்கள், நெருப்பு எண்ணும் மூன்று இருளை நீக்கும் என்பார்கள். ஆயினும், அவை உன்னைப் போல் மனத்திருளை மாற்றுமோ? கொடை யிற் சிறந்தது சிந்தாமணி என்பர். அப்புகழ் அதற்கு வந்தது உன் காப்பியங்களில் ஒன்றன் பெயரை அது கொண்டிருப்பதனாலன்றோ? ஆரம்; கண்டசரம் முதலான எத்தனை அணிகள் சேர்ந்தாலும் உன் அலங்காரம் (அணியிலக்கணம்) ஆகுமோ? பொன்னைப் பொருள் என்பார்கள். ஆயின் உன்னைப் போல் உரைக்குந்தோறும் (சொல்லுந்தோறும், தோய்க்குந்தோறும்) வளர்தல் பொன்னுக்கு உண்டா? அரசர்களால் கொள்ளப்பட்டும், கள்வரால் கவரப்பட்டும், மற்றப்பொருள்கள் குறையும். ஆயின், உன்னைக் கன்னிடமிட்டால் (காதில் வாங்கினால் எப்பொருளும் வளரும்) எனவே மற்றப் பொருளினும் நீ உயர்ந்தாய்.

நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை, கணக்கோ: நியாயமோ, பாப் பொருத்தமொடு பத்து: மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம், உரைத்தல், சொல்லுதல், கன்னமிட்டு; காதனுள் வாங்கி.

கருத்து

(கண்ணிகள் 89-95) தமிழுக்கு தேவரோடுள்ள தொடர்பு: இவ்வுலகில் புகழோடு வாழ்வதற்கும், தேவராய் சேர்வதற்கும் உன்பாடலைக் கொண்டவர்க்கே இயலும். உன்னால் புகழ் பெறாத கீழ்மக்கள் எம்திசையே சேர்வார்கள். தமிழே உனது சங்கத்தினால் (சேர்க்கையால், தமிழ்ச் சங்கத்தால்) ஈசர் உயர்ந்தாரோ, அவரால் நீ உயர்ந்தாயோ, நீ கலைவாணியின் மீது சுவடியாக இருந்து உயர்ந்தாயோ? உன்மேல் கலைமகள் இருந்து உயர்ந்தாளோ? திருமால் பாய் சுருட்டிச் சென்றபோது நீ அவரைத் தொடர்ந்தாயோ? அவர் பாயோடு உன்னைத் தொடர்ந்தாரோ? அகத்திய முனிவர் கேட்க உன்னை முருகர் உபதேசித்தாரோ? நீ முருகரைப் பற்றி அகத்தியருக்குச் சொன்னாயோ? மதுரைச் சொக்கநாதர் தமிழராகிய உனக்குப் பொருளாய் வந்தாரோ? நீ அவருக்கு பொருளாய் வந்தாயோ?

கருத்து

(கண்ணிகள் 96-106) தனக்குத் துணைபுரியுமாறு தமிழை வேண்டுதல்.

இவ்வளவு பெருமை வாய்ந்த நீ என்னைக் கண்டு இரங்குவதே நீதி, உன்னுடைய செயல்களை என்னால் உரைக்க முடியுமோ? நீ இனிய சொல்லினை உடையாய், 'கற்க

கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்று எல்லோர்க்கும் புத்திச் சொல்லிக் கரையேற்ற வல்ல உனக்கு நான் அறிவுரை சொல்ல முடியுமோ? உன் ஈரடிக்குள்ளே உலகமெல்லாம் அடங்கும். அங்ஙனமிருப்ப நாலடிக்கு வேறு இடமுண்டோ? ஓரடிக்கு ஆயிரம் பொன் கொடுத்த திருவாரூர்த் தியாகேசரையே பரவையாரிடம் ஆரூரருக்காத் தூது கொண்ட பெருமையுடைய உன்னை இப்போது நான் (எனக்காகச் சொக்கநாதரிடம் தூது சென்று வா' என்று வேண்டுகின்றேன். என் அறிவின்மையைக் காணாமல் என் வருத்தத்தையே நீ நோக்குவாயாக.

தமிழே, உன் பாடலால் திருவோத்தூரில் ஆண்டின் பனையை பெண்பனையாக ஆக்கினாய். காரைக்காலம்மையார், ஔவையார், திலகவதி, மங்கையர்க்கரசி, ஞானசம்பந்தர், சிங்கவனப்பகை என்னும் பெண்களின் வளர்ப்புத் தந்தையாகிய சுந்தரமூர்த்தியாகவும் தோன்றிச் சிறப்புற்றாய். இங்ஙனம் பெண்கள் எல்லாம் வாழ நீ பிறந்தாய். எனவே, என் மனத்தின் புண்களெல்லாம் மாற நீ வழி செய்வாயாக.

கருத்து

(கண்ணிகள் 107-114) புற பொருள்கள் தூதிற்சிறவா என்றால்

அன்னத்தை இறைவனிடம் நான் தூதுவிடுப்பேன். ஆயினும் சிவபெருமானை அன்னம் கண்டறியாது என்பர்.

வண்டைத் தூது விடுப்பேன். ஆயினும், அவர் 'காமம் செய்யாதே! என்றால் அது திகைக்கும். மானைத் தூதாக அனுப்புவேன். ஆயின், புலித்தோலை அணிந்த இறைவர்பாற் செல்ல அது அஞ்சும். குயிலை தூது அனுப்பினால் அது காக்கை இன்பமாதலின், கரிக்குருவி என்னும் வலியான் அச்சிவபெருமானுடன் கலந்திருத்தலால் அதனைக் கண்டு அஞ்சும் மனத்தைத் தூதாக விடுவேன். ஆயினும், மனங்கடந்தவராகிய இறைவரை தூதாக அனுப்பினால் மனங் கடந்தவராகிய இறைவரை அது சென்று நெருங்க முடியாது. எனவே, இப்பொருட்களெல்லாம் தூது சொல்லத்தக்கனவல்ல. இங்ஙனம் இருப்ப என்கவலை தீர்வது எவ்வாறு என்று எண்ணி இறுதியில் உன்னிடம் சொல்கிறேன்.

தமிழாகிய நீ 19, 20 ஆகிய (செய்யுள்) தொடைகளை உடையாய். எனவே எம்பெருமானிடத்து ஒரு தொடை (மாலை) வாங்கி நீ உதவுவாயோ? எம் பெருமானும் நீயும் வேறுபட்டவர்களோ?

கருத்து

(கண்ணிகள்115-133) தமிழன்பால் சொக்கநாதர் கொண்ட அன்பு

கொங்கு தேர் வாழ்க்கை என்று தொட்ங்கிப்பாடி, தருமிக்கு வாழ்வளித்தவர் சிவபெருமான் உன் பொாருட்டு, பொருந்தாவாகை பேசினான்" என நக்கீரனோடு வாதாடினார். பாணபத்திரருக்காகச் சேரமான் பெருமாளுக்குச் சீட்டுக்கவி விடுத்தார். இறையனார் அகப்பொருள் என்னும் களவியலை 60 சூத்திரங்களால் பாடினார். இங்ஙனம் உன்னோடு அவர் விளையாடியது பல முறையன்றோ?

இடைக்காடன் பாடலுக்காக வடமதுரைக்குச் சென்றவர், அச்சிவ பெருமானேயன்றோ? காரியர், நாரியர், பாப்பகுந்த திருவிளையாடல் நிகழ்த்தியவர் அவரன்றே? பாண பத்திரனுக்காகக் கிழ உருவில் தோன்றி விறகு சுமந்தவர் அவரேயன்றோ? பாணபத்திரருக்குப் பொற் பலகையிட்டவரும், அவன் மனைவிக்கு எதிராக இலங்கையிலிருந்து வந்த விறலியை வென்றவரும் மதுரைச் சொக்கரேயன்றோ? எனவே, அவர் உனக்குள் அடக்கமானவரன்றோ?

வடமொழியிலுள்ள வேதங்கள் ஈசர் மொழிந்தவை என்பர். ஆயின் தமிழ் மொழியாகிய நீ வைகையில் வேதகாமத்தை நிலை நிறுத்தினாய். இதற்குத் திருவேங்கடமே சான்றாகும். வேதவனம் என்னும் திருமறைக்காட்டில் தமிழாகிய நீ அடையுண்ட கதவினைத் திறந்தாய். வேதத்தினைக் கேட்டவராகிய அகத்திய முனிவரைத் 'தமிழ் முனிவர்' என்றன்றோ வழங்குகின்றோம்? திருவள்ளுவர் தம் திருக்குறளில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் சொன்னார். அதன் பெருமைக்குத் 'திருவள்ளுவ மாலை' என்ற பகுதியில் இறையனார் அருளிய 'என்றும் புலராது' என்னும் பாடலே சான்றாகாதோ? நீ சங்கப் பலகையின் மேலிருக்கச் சிவபெருமான் உனக்கு அண்மையில் கீழே நின்றார் என்பது உன் பெருமையைக் காடடுகிறதே. எண்ணற்ற நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி நீ கொண்டு வரச்செய்தாய். இறைவர் வேதமாகிய குதிரையின் மேல் ஏறி அப்போது ஊர்ந்து வந்த செய்தி உன் பெருமையைத் தெரிவிக்கும் அன்றோ?

தில்லை அம்பலவத் தெற்கு நோக்கி ஆடுவது உன்னிடத்திலே வைத்த அன்பிலனாலன்றோ? திசாச் சொல்லார் தமிழ் என்றும் உன் பெயரைச் சொல்ல மாட்டாமல் வாய் குழறித் திராவிடம் என்பார்கள்.

கருத்து

(கண்ணிகள் :134-151) சொக்கநாதர் பெருமை.

சிவபெருமான் முத்தியினைத் தருகின்ற திருவாலவாயில் விளங்குபவர். மதுரையில் அரசு புரிந்த போது மீனக்கொடியை உயர்த்தியவர்: உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டு மகிழ்ந்தவர்: முத்திபுரத்தில் முளைத்தெழுந்தவர். எட்டு யானைகள் தாங்குகின்ற விமானத்தையுடைய மதுரைக்கோயிலில் எழுந்தருளியவர். இந்திரன் வந்து வணங்குகின்ற இடமும் கோயிலுமாக எழுந்தருளியவர்: இந்திரன் வந்து வணங்குகின்ற இடமும் கோயிலுமாக விளங்கும். கடம்பவனத்தில் உறைபவர் திருமாலுக்கும் அறியவர்! அரசராகி உலகத்தைக் காப்பவர்.

பூசலார் நாயனார் இரவெல்லாம் தமது நெஞ்சினால் அமைத்த கோயிலைக் கொண்டவர். சிவபெருமான் கங்கை சூடிய தமது முடி குளிரும்படி கண்ணப்பர் உமிழ்ந்த திரு மஞ்சனம் கொண்டவர் திருக்குறிப்புத் தொண்டர். நீர்த்துறையில் அன்பாகக் கொடுத்த கோவணத்தைக் கொண்டவர்: மானக்கஞ்சாறர் சாத்துகின்ற பஞ்சவடி அணிந்தவர்: மூர்த்தி நாயனார் அன்போடு தமது முழங்கையை அரைத்துச் சேர்த்த சந்தனத்தைக் கொண்டவர். திருமால் அன்போடு சாத்திய கண்மலரும், சாக்கி நாயனார் எறிந்த கல்மலரும் உடையவர்: இளையாங்குடி மாறர் படைத்த உணவும், சிறுதொண்டர்

படைத்த பிள்ளைக் கறியும், அறிவாள் தாயார் இட்ட மாவடுவும் கொண்டவர்: கணம்புல்ல நாயனார் தம்முயிர் முடியினால் ஏற்றிய தீபத்தை உடையவர். இவ்வாறெல்லாம் சிவபெருமானுக்குப் பூசை செய்து வணங்குதல் யாரால் இயலும்.

சுந்தரிடம் சிவபெருமான், அர்ச்சனைப் பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் தம்மைச் சொற்றமிழில் பாடு என்று கூறினார். அப்படியே நீயும் பாடினாய். நான்கு வேதங்களும் திகைக்க, 'பித்தா பிறைசூடி" என்று இறைவரை நீ வைதாய், நீ வைதாலும் அது வாழ்த்தாகும் அன்றோ?

சிறப்புப் பொருந்திய தமிழே, நீ இருக்கின்றாய் என்னும் நினைப்பால் நான் உயிர் வாழ்ந்து வருகிறேன். உன்னைவிட்டு எனக்குத் தேவருடைய புதிய அமுதம் கிடைப்பதேயானாலும் அவ்வமுதத்தினை நான் விரும்பேன்.

கருத்து

(கண்ணிகள் 152-183) தலைவி தன் துன்பங்கள் கூறுதல்

'சொக்கநாதராகிய தலைவரிடத்துக் கொண்ட காம மயக்கத்தால் நான் வருந்தினேன். அம்மயக்கம் என்ற யானை உண்ட விளங்கனி போல் ஆனேன். பிரிரு என்னும் கல்லானை நின்ற கரும்பானேன். நல்லவரை நாடுகின்ற சிந்தனையினால் உடல் வருத்தினேன. (அவரைப் பந்தலின் நிழலில் தங்கியவரின் அறிவு குறைதல் போல் நானும் (குறைந்தேன்) பனியில் வாடிய செந்தாமரை மலர் ஆனேன்.

திருக்கொள்ளம்பூதூரில் தமிழ்ப் பதிகம் பாடி, ஞானசம்பந்தர் ஆற்று வெள்ளத்தைக் கடந்தார். நீயும் என்னுடைய மயக்க வெள்ளத்திலிருந்து என்னைக் கடத்தலாகாதா? நீ சமணர்களை மதுரையில் கழுவேறச் செய்தாய்: என்னை வருத்துகின்ற மன்மதனையும் அவ்வாறு அழிக்க மாட்டாயா? பாண்டியனுடைய முதுகிலுள்ள கூனை ஒழித்தாய். அவ்வாறே மன்மதன் எடுத்த கரும்பு வில்லின் வளைவையும் நீக்கமாட்டாயா? பாண்டியனுடைய சுர நோயைத் தீர்த்தாய்: அங்ஙனமே, என்னுடைய காம நோயையும் தீர்க்கமாட்டாயோ; சமணர்கள் இட்ட நஞ்சினை நீக்கி, நாவுக்கரசரைக் காத்தாய். அங்ஙனமே. எனக்கும் இன்று நஞ்சு போல் தோன்றுகின்ற உணவினை இனிமையுடையதாகச் செய்தாயோ?

ஞானசம்பந்தர் பதிகமாக நீ நெருப்பினால் கிடந்தும் எரியாமல் நின்றாய். அங்ஙனமே என்னையும் காமமாகிய நெருப்புச் சுடாமல் இருக்கும்படி செய்யாயோ? கொங்குநாட்டில் மக்கள் பனித்துயரால் வாடாதபடி நீ செய்தாய். அப்படியே இப்போது பனியினால் நான் துன்புறாதபடி செய்யமாட்டாயோ? நாவுக்கரசைக் கல்லோடு மிதப்பித்தாய். அப்படியே தன் ஓசையால் கடல் என்னைத் துன்புறுத்தாதபடி உறவாக்க மாட்டாயோ?

நீ ஆண்பனையை பெண்பனையாக மாற்றினாய். அப்பனையின் மேலிருந்து வருந்துகின்ற அன்றிற்பறவையை வேறொரு பறவையாக ஆக்காயோ? பொதிய மலையிலிருந்து தோன்றிச் சந்தனமும் தென்றலும் ஆகியவற்றை உறவாகக் கொண்டாய்; எனக்கு துன்பம் தரும் அச்சந்தனம், தென்றல் இவற்றை என்னோடு உறவாக்க

மாட்டாயோ? இசைகளையெல்லாம் உனக்கு மனைவியாக்கிக் கொண்டாய். அவ்விசைகள் என்னை வருந்தாதபடி செய்யமாட்டாயோ?

உன் தமிழ் பாடலால் முத்தினாலாகிய திருக்கின்னமும், சிவிகையும், பந்தலும், தாளமும் ஆகியவற்றை ஞானசம்பந்தர் பெறச் செய்தாய்; அம்முத்துக்கள் என்னைச் சுடாமலிருக்கும்படி நீ செய்யாயோ? முன்பு இறந்து போனவனது எலும்பினைப் பூம்பாவை என்ற பெண்ணாக ஆக்கினாய்; இப்போது பொலிவிழந்திருக்கும் என்னுடைய உறுப்புகளையும் பழையபடி அழகிய வடிவம் உடையனவாக ஆக்காயோ?

முதலையுடைய பாலகனைச் சுந்தரர் திருவாக்கினால் மீண்டும் உயிர் பெறச் செய்த பாடற்றமிழாகிய நீ நான் மாய்ந்தாலும் என்னை உயிர்ப்பிக்க வல்லாய். இத்தலைவி என்று என்னுடைய சொல்லை ஏற்று சொக்கநாதர்பால் செல்வாயாக. திரும்ப என்பால் வராமல் அங்கேயிருந்து விடாதே.

ஒளிமிக்க சொக்கநாதரிடம் தூது செல்ல உன்னைத் தவிர பிறர் உண்டோ? பிறரால் சுட்டிக்காட்ட அரியவராகிய சிவபெருமான் தம் தந்தைக்கும், பொம்மான் இவனன்றோ' எனச் சுட்டிக் காட்டியவர் திருஞான சம்பந்தர். கயிலை மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைக் கண்டு வழிபட முற்பட்டுத் திருவையாற்றில் 'கண்டுற' கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியா தன கண்டேன்' என்று பாடியவர் அப்பர். திருமுதுகுன்றில் தாம் பெற்ற பொன்னை மணிமுத்தாறில் இட்டுக் கமலாலயக் குளத்தில் திருவாரூர் எடுத்தவர் சுந்தரர். 'கயிலை பாதி காளத்திபாதியந்தாதி' என்ற நூலின் வாயிலாகக் கயிலைக் காட்சியை காளத்தியில் கண்டவர் நக்கீரர். தமக்குத் தாயற்றவரும் தாமே திருச்சிராப்பள்ளியில் தாயாக இருந்தவரும் சிவபெருமானே. அம்மையே என அழைக்குமாறு விளங்கியவர் சிவபெருமான்.

உவர் மண்ணால் மூடப்பட்ட வண்ணானை வெண்ணீறு தரித்த சிவனடியார் என விரும்பி, அடியேன் அடிச் சேரேன்' என்று பணிந்தவர் சேரமான் பெருமாள் நாயனார். இவர்களால் பாடப்பட்ட நீ கயிலாயமலைச் செல்வராகிய சிவபெருமானைச் சேர்ந்தவன் என்பதையறிவேன். எனவே, உன்னால் ஆகாதது ஒன்று உண்டோ?

தடாதகைப் பிராட்டியும், சோமசுந்தரப் பெருமானும் உக்கிர குமாரராகிய முருகப்பெருமானும் அமர்ந்த மதுரைக்குச் செல்லவும் வழியினைக் கேட்பாயாக. நீ செல்லும் வழியெல்லாம் வெல்வாய். வேயுறு தோளி பங்கன் என்ற கோளாறு பதிகம் பாடினவர்க்கு எல்லாக் காரியமும் சித்திக்குமோ திருவையாற்றில் சுந்தரர் தமிழ்ப்பதிகம் பாடியபோது காவிரியாறு விலகி வழிவிட்டதோ திருநனிபள்ளியென்ற பாலை நிலத்தைச் சம்பந்தர் தமிழ்ப் பாடல் நெய்தல் நிலமாக்கியதே. அப்பர்காகத் திருப்பஞ்சலி என்ற தளத்தில் சிவபெருமானே பொதிசோறு கொணர்ந்து தந்தாரே.

எனவே செல்லும் வழிகளெல்லாம் நல்ல வெற்றி கிடைக்கும். ஆறு விலகிடும். சோலை நிழல் தரும், பொதிசோறு கிடைக்கும். நீ தடையும் சிரமமின்றிச் செல்லலாம்.

கருத்து

(கண்ணிகள்: 184-198) கீழ்மக்களைச் சேராதிருக்குமாறு தமிழை வேண்டுதல்.

தமிழைப் பெருமிதமாகக் கற்பார்கள் சிலபேர். ஆயின், ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார். காசு பணம் கண்டால் உன்னையே விற்கத் துணிவார்கள் அவர்களிடும் நீ சேராதே.

தமிழ் கற்ற புலவர்களை உபசரிக்காமல் இகழ்வார்கள் சிலர். சொற்பொருள் கேட்டு இன்புறமாட்டார்கள். புலவர்கள் மீது நாய் போல் எரிந்து விழுவார்கள். நீ அவர்களிடம் சேராதே. பாடல்களைப் படிக்கும் பொழுது மாணவர்கள் படிக்க வேண்டிய முறையில் படிக்காமல் பிறழ்ந்து ஆயிரமும் சொல்வார்கள். அவர்கள் பால் நெருங்காதே; நூல்களை ஓதறியாத பேதையருடன் நீதி நூல்களைப் பேச முற்பட்டால் உன்னுடைய அறிவுடைமை தவறிப்பாகும். காணாதற் காட்டுவான் தான் காணான் என்பது திருக்குறளன்றோ? எனவே, அப்பேதையரோடு சேராதே. அவர்களோடு பேசாதே. அளவறிந்து கல்லாத அவையச்சமுடையாரைச் சேராதே. தமிழ் பகைவரை நாடாதே; அவர்கள் பால் ஒரு பொருளையும் கேளாதே: 'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்றபடி நீயே சிறந்ததொரு பொருளன்றோ?

தமிழரசனே! உன் தமிழ்ப்பாவே திருவாவடுதுறையில் உலவாக்கிழி பெற்றது. நீயே சுந்தரமூர்த்தியார்பால் செங்கல்லைப் பொன்னாக்கினாய். நீ விரும்பினால் இவ்வுலகத்தையே பொன்னாக்கி விடுவாய். பட்டினப் பாலையைப் பாடிய உருத்திரங்கண்ணனுக்குப் பதினாறு லட்சம் பொன் கொண்டது உன் வெற்றியல்லவோ?

நல்லார்கண் பட்ட வறுமையிலும் கல்லார் கண்பட்ட செல்வம் கொடியது. எனவே, தமிழே கல்லாதவர்பால் சேராதே. உன்னிடத்தில் அன்பில்லாதார் இந்திரன் போல் வாழ்ந்தாலும் அவர்களிடம் போகாதே; அவர்கள் இடும் உணவைப் புசியாதே. தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்' என்று தெய்வப் புலவர் கூறினார். அப்பெருமை சேர்ந்தது உன்னிடமன்றோ? அமுதம் உண்டவர்க்கன்றோ பசி முழுமையாகத் நீங்கும்; அதுபோல் உன்னை அடைந்தார்க்கன்றோ இன்பம் முழுமையாகச் சேரும்.

தமிழனை விரும்பி மதியாதவர்களடைய தெருவையும் சென்று சேராதே. நல்லவர்களிடமே தங்கியிருந்து மதுரைச் சொக்கநாதரை நாடிச் செல்வாயாக.

கருத்து

(கண்ணிகள் : 198-218) சொக்கநாதரைக் காணும் வகையைக் கூறுதல்.

யமவாதனையை நீக்கும் வைகை நதியில் மூழ்கி, இலக்கண நூல் கற்றவர்கள் உள்ளம்போல ஆழ்ந்திருக்கின்ற மதுரையின் அகழியைக் கடந்து செல் ஸ்மிருதி புராணம் கலை முதலியன போல வெவ்வேறாக விளங்குகின்ற தெருக்களை கடந்து செல். முத்திக்கு வித்தாக விளங்குகின்ற திருக்கோயிலுளள் புகுந்து செல்; அபிடேக முனிவருடைய அன்பு போல் விளங்குகின்ற உயர்ந்த தேரும், சிவனடியார் திருக்கோலம் செல்வதற்கு நிறுத்திய ஏணி போல் உயர்ந்திருக்கிற கோபுரமும், மேகங்கள் சேர்ந்தது போல் விளங்குகின்ற நான்கு மண்டமும், மாளிகையின் பல்வேறு கட்டளைகளும் கண்டு மகிழ்வாயாக. சொக்கநாதப் பெருமான் தமது சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்ற அக்காட்சி வேறெங்கும் காணக்கிடைக்குமோ?

சொக்கநாதரைச் சூழ்ந்து பல்வேறு தேவர்களும் வணங்கி நிற்பர்: மலர் குறையக் கண்டு தன் கண்ணையே மலராக அருச்சித்த திருமால் அங்கே வணங்கி இருப்பார். தன் கபாலத்தைச் சிவபெருமான் கையில் கொடுத்தவராகிய பிரமனும் அங்கேயிருப்பார்: தானே வந்து கடம்பவனமாகிய மதுரைக்கு விமானத்தை வழங்கிய இந்திரனும் அங்கேயிருப்பான்: இவர்களனைவரும் வணங்க, கணநாதர் முதலான முனிவர்கள் சொக்கநாதரைப் புடைசூழ்ந்து இருப்பார்கள்.

அட்டதிக்குப் பாலகர்கள் சொக்கநாதருக்குக் கண்ணாடி முதலியன தாங்கி ஏவல்புரிவர்; அசுவினி தேவர்களும், பதினொரு உருத்திரர்களும், பன்னிரண்டு சூரியர்களும் பணிசெய்வார்கள்: வெள்ளம் போல் வருகின்ற திருக்கூட்டத்தை விலக்குவதற்கு நந்தியெம் பெருமான் பிரம்பினை ஓங்குவார். பதினெட்டுத் தேவ கணத்தோர் நிலத்தில் வீழ்ந்து வணங்குவர். சொக்கநாதற் அங்கயற்கண்ணியுடன் திருக்கோயிலில் இந்நிலையில் எழுந்தருளியிருப்பார்.

கருத்து

(கண்ணிகள் : 219-229) சொக்கநாதரது உருவம் கூறுதல்

அவர் இடைக்காடன் பாடலுக்காக அவன் பின் சென்ற செந்தாமரை மலர் போன்ற பாதங்களையுடையவர் பாண்டிய மன்னன் தன்னை வேண்டியமையினால் மாறியாடிய தொடைகளையுடையவர். போர் வீரனுக்கு எதிராக உடைவாள் எடுத்துக் கச்சில் சார்த்திய இடையினை உடையவர். கிழவியாகிய வந்தியிட்ட பிட்டினை அள்ளி உண்டு பசி தீர்க்க வயிற்றினையுடையவர்: தலை முலைப்பால் உண்டறியாத பன்றிக்குட்டிகளுக்கு தாமே பன்றியாகத் தோன்றிப் பாலூட்டிய திருமார்பினையுடைய தோள்களையுடையவர் கரிக்குருவிக்கு உபதேசம் செய்த திருமார்பை உடையவர். குற்றமில்லாத வழியாக இருந்து வாழும்படி தமிழாகிய உனக்கு இருப்பிடமாகத் தந்து திருக்காது உடையவர். வணிகப் பெண்ணினது கண்ணீரைக் கண்டு உருகி, தாம் நீர் கொடுத்த கண்களையுடையவர். திருவாசகப் பாடலுக்கும் வந்தி தந்த பிட்டுக்கும் மண் சுமந்த திருமுடியுடையவர்.

கருத்து

(கண்ணிகள்: 230-245) பூசனை முறைகளைக் கூறுதல்.

இத்தகைய திருக்கோலத்தினையுடைய சொக்கநாதரை நீ கண்டு மகிழ்ந்து மனம் கசிந்து உள்ளம் உருகி, அவருக்குத் தொண்டு செய்து அவருடைய திருவடியை உன் தலைமேற் கூடுவாய். பல்வேறு தீபங்களை அவருக்கெதிராக எடுப்பாய். சூரியன் போல் தங்க தீபமும் சந்திரன் போல் ஆரத் தீபமும், நான் எங்கிருப்பேன் என்பது போல் விளங்குகின்ற ரிஷப தீபமும், புருஷாமிருக வடிவமுள்ள தீபமும் ஆகியவை சொக்கநாதர் எதிரே ஒளிவிட்டு அசையும் அட்சர ஆரத்தியும், கும்பதீபமும், கற்பூர தீபமும் ஒன்றன்பின் ஒன்றாக ஒளிவிடும். கண்ணாடி குடை, முரசு, தாமரை ஆலவட்டம், விசிறி ஆகியவை தொடர்ந்து காட்டப்பெறும். திருப்பள்ளியெழுச்சி, தேவரும் புரோகிதரும் வணங்க நிகழும். அந்நிலையில் அவரை நீயும் துதிப்பாயாக!

கருத்து

(கண்ணிகள் : 246-268) தன் குறை முடிக்க வேண்டுதல்.

ஓர் ஆதிசைவர்பால், உரிய மங்கலப் பொருட்களைத் தந்து இறைவரை வழிபடுவாயாக; தேவாரம் முதலிய பஞ்சபுராணங்களைப் பாடுவாயாக. பின்வருமாறு அவற்றைப் போற்றுவாயாக! மதுரைப் பாண்டியனே, யானைகள் தாங்கிய திருக்கோயிற் கண்மணியே, உமாதேவியைப் பிரியாத முக்கட்கனியே, முழுமுதலே, கங்கைத்தலைவனே, கன்னியாகுமரித்தலைவனே, சிங்காதனத்து அரசனே, செல்வமே, எம் அரசனே, அடியார்களுடன் திருவிளையாடல்கள் 'புரிந்தவனே, உம்மிடத்தில் அன்புடையவர்கள் தேடிய நாளில் அவர்களுக்கெதிரே காட்சி தந்த விளையாட்டு இனி நிகழாதோ? பழிக்கஞ்சியவர் என்ற சிறப்புப் பெயர் முன்பு உமக்கு இருந்தது! அது இனியும் உமக்குப் பொருந்த வேண்டாவோ? உம்மை வணங்கும் ஆவலினால் வந்து கண்டு மகிழ்ந்தவரைச் சொக்கு பொடி போட்டு அவர் தம் உள்ளத்தை நீர் மயக்கினால் உமக்குச் சொக்கலிங்கம் என்ற பெயர் பொருந்தாதோ? கரும்பு வில்லுடை மன்மதனை அரசாளவிட்டு நீர் இச்சிறு பெண்ணை வருத்துதல் தகுமோ? இவளுடைய கண்ணிலிருந்து வரும் கங்கை போன்ற கண்ணீரை நீர் மாற்றாவிடில் எல்லாம் வல்ல சித்தர் என்று உம்மை எங்ஙனம் கூறுவாள்?

இவளுடைய வளையலைக் கரம் வருத்தத்தினால் கழலச் செய்து கவர்ந்து கொள்ளும் நீர் வளையல் விற்கும் திருவிளையாடல் செய்வது பொருந்துமோ? உம்முடைய தோளில் விளங்குகின்ற வேப்பமாலையை விரும்புகின்றவர்கள் மற்றவர்களால் வெறுக்கப்படுகின்றார்களோ? மன்மதனை எரித்த உமக்கு பிறர்க்கு மயக்கம் தருதல் இயலுமோ? இவள் போலும் பெண்களின் ஆடைகளைக் கவர்தல் கண்ணனிடமிருந்து கற்றீரோ?

நாரைக்கு முக்தி கொடுத்த நீர் இந்நரிக்கு முத்தி கொடுத்தல் ஆகாதோ? கௌரி என்னும் பெண்ணினது இல்லத்தில் விருத்த குமாரபாலரான நீர் எம் இல்லத்திலும் வந்து நீங்குதல் கூடாதோ? என்றெல்லாம் சொக்கநாதருடைய திருச்செவிகளில் ஏறும்படி நீ உரைக்க வல்லாய். இங்ஙனம் உரைத்தல் மற்றயார்க்கு வாய்க்கும்? அங்கையற்கண்ணி அம்மையோடு ஆவலாய் அண்ணல் மதுரையில் வீற்றிருத்தல் நாம் செய்த புண்ணியமே. தேன் போன்ற தமிழே' தேவருலகத்திலும் சிறந்ததாகிய மதுரே மாநகரத்தில் அரசு புரிகின்ற சுந்தர பாண்டியராகிய சொக்கநாதருடைய திருமுன் சென்று அவர் கூறும் சொற்களைக் கேட்டு எனக்குச் சுகானந்தம் தர நீ அவரிடம் மறவாமல் தூது சொல்லி வருவாயாக!

வினா – விடைகள்

1. 'தமிழ்விடு தூது' என்ற நூலில் தமிழை ஆசிரியர் தேவரோடு தொடர்புபடுத்தி எவ்வெவ்வாறு புகழ்கின்றார்?

தமிழ்விடு தூது ஆசிரியர் தமிழ்மொழியைத் தேவரோடு தொடர்புபடுத்திப் பின்வருமாறு புகழ்கின்றார். மதுரையை ஆண்டு தமிழ்ச்சங்கத்தில் தலையேற்றுப் புலவராகவும் விளங்கியவர் சோமசுந்தரப் பொருள். தமிழரசியாக மதுரையில் விளங்கி, திக்குவிசயஞ் செய்தவள் தடாதகைப் பிராட்டியாகிய உமாதேவியார்.

"சீர்கொண்ட கூடற் சிவராசதானி புரந்
தேர்கொண்ட சங்கத் திருந்தோறும் — போர்கொண்
டிசையுந் தமிழரசென் றேத்தெடுப்பத் திக்கு
விசையஞ் செலுத்திய மினீனும் [கண்ணி 1-2)]

வேதாகமச் சுவடிகளாகிய சிவஞான ஏடுகளைக் கையில் எடுத்தவர் விநாயக பெருமான். உத்திரபாண்டியராகி மதுரையை ஆட்சி புரிந்து உருத்திரசன்மர் என்ற புலவராகி மதுரைச் சங்கப் புலவர்கட்குப் பாடி அறிவித்தவர் முருகப் பெருமான்.

"செய்ய சிவ ஞானத் திரளேட்டி லோரேடு
கையி லெடுத்த கணபதியும் — மெய்யருளாற்
கூடல் புரந்தொரு காற்கூடற் புலவரெதிர்
பாடலறி வித்த படைவேளும்' [கண்ணி 3-5)]

இவ்வெல்லோராகவும் நீ இருந்தாய்

மற்றோரிடத்தில் ஆசிரியர் கூறுவது: உனது சங்கத்தால் சிவபெருமான் உயர்ச்சி பெற்றாரா: அவரது தொடர்பால் நீ பெருமை பெற்றாயா? தாமரை மலரில் வீற்றிருக்கும் கலைவாணியின் திருக்கரத்தில் நீ ஏற்றம் பெற்றாயா? திருமழிசையாழ்வார் "கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி மணிவண்ணா நீ கிடக்கவேண்டா" எனக்கூற, அதனைக் கேட்டுத் திருமால் தம்முடைய அரவப் பைந்நாகப் பாய் சுருட்டிச் சென்றாரே அத்திருமாலைத் தமிழராகிய நீ தொடர்ந்தாயா, அவர் தம் பாயுடன் உன்னைத் தொடர்ந்தாரா?

"தண்டமிழே
ஈங்குனது சங்கத்தா லீசர் உயர்ந்தாரோ
ஓங்குமவ ரால்நீ யுயர்ந்தாயோ - பூங்கமல
வீடாளும் வாணியங்கை மேலே யிருந்தாயோ
ஏடாக வுன்மே லிருந்தாளோ - ஆடரவத்
தாழ்பாய லாளரை நீ தானே தொடந் தாயோ
சூழ்பாயோ ருன்னைத் தொடர்ந்தாரோ. [கண்ணி 90-99)]

மேலும், அகத்திய முனிவருக்கு முருகப்பெருமான் உன்னை அறிவுறுத்தினாரோ. நீ அப்பெருமானை அகத்தியருக்குக் காட்டினாயோ? சோமசுந்தரர் தமிழாகிய உனக்குப் பொருளாக வந்தாயோ என்கிறார் ஆசிரியர்.

பின்னும், திருவாரூர் வீதிவிடங்கர் தமிழ்ப் பாடலின் ஓரடிக்கு ஆயிரம் பொன்வீதம் பரிசு கொடுக்கும் தியாகேசர் என்பர். அத்தியாகேசரையே சுந்தரருக்காகப் பரவை நாச்சியாரிடம் இருமுறை திருவாரூர் வீதியிலே தூது நடக்குமாறு செய்வித்தாய் நீ.

"ஓரடிக்கோர்
ஆயிரம் பொன்னிறைக்கும் ஐயரை வீதியிலே
போயிரத்து தூது செல்லப் போக்கினோய்" [கண்ணி 99-100)]

என்று புகழ்கின்றார்.

சிவபெருமான், சிற்றம்பலத்தில் தெற்கு நோக்கி பாடுவதற்கு அவர் தமிழின்பால் வைத்த பற்றே காரணம் என்கிறார் ஆசிரியர்.

"அண்ணலார்
தென்பா லுக்கந்தாடும் செய்தியெல்லாம் உன்னிடத்தில்
அன்பாலென் றப்பாலும் ஆரறியார்'

இங்ஙனம் தமிழ்விடுதூது ஆசிரியர் தேவர்களோடு குறிப்பாகச் சிவபெருமானோடு தொடர்புபடுத்தித் தமிழைப் போற்றுகின்றார்.

2. தமிழைத் தூது விடுக்கும் தலைவி பிறபொருள் தூதிற் சிறவா என்றார். எவ்வாறு?

மதுரைச் சொக்கநாதர்பால் தமிழ்மொழியைத் தூதாக விடுக்கிறாள் தலைவி. சொக்கநாதருக்கும் தமிழ்மொழிக்கும் உள்ள தொடர்புகளை விவரிக்கின்றாள். பிற தலைவியர் தூது விடுக்கும் பொருட்கள் இச்சொக்கநாதர்பால் அனுப்புவதற்கு எவ்வகையிலும் ஏற்றனவல்ல என்பதை இத்தலைவி சுட்டுகின்றாள்.

தாமரையில் தங்கும் இயல்பினதாகிய அன்னத்தைத் தூதாக விடுப்பேன். ஆயின், அன்னமோ இவரைக் கண்டறியாது என்பர் பெரியோர். (பிரமன் அன்னமாகவும் திருமால் பன்றியாகவும் உருக்கொண்டு சிவபெருமானுடைய முடியையும், அடியையும் அறிய முற்பட்டுத் தோற்ற புராண வரலாற்றை ஆசிரியர் இங்ஙனம் திறமையுடன் பயன்படுத்துகின்றார்?

பின்னை, ஒரு வண்டைத் தூதாக அனுப்புவேன். ஆயின், அச்சொக்கநாதர் "காமம் செய்யாதே" என்றால் அவ்வண்டு திகைக்கும். ("கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி, காமம் செப்பாது கண்டது மொழிமோ")

குயிலைத் தூதாக விடுப்பேன்; ஆயின், குயில் காக்கையினம், மதுரையில் சோமசுந்தரப் பெருமானை வழிபட்ட கரிக்குருவி வலிமை பெற்று வலியான் என்ற பெயருடன் சுவரொடு ஐக்யமாயிற்று என்பர். வலியாரைக் கண்டு காக்கையே அஞ்சுமென்றால், அக்காக்கையினத்தைச் சேர்ந்த குயில் அஞ்சும் என்பது சொல்ல வேண்டா. எனவே, அதுவும் அச்சத்தால் தூது சொல்லாது.

அவர்பால் அன்பு வைத்த இந்த மனத்தையே தூதாக அனுப்புவேன்: ஆயின், சொக்கநாதரோ மனத்திற்கு எட்டாதவர் என்பர். எனவே, மனோ தீதராகிய அவரை இதுவும் நெருங்க முடியாது.

"ஒண்கமலத்
தன்னந் தனைவிடுப்பேன் அன்னந்தான் அங்கவரை
இன்னந்தான் கண்டறியா தென்பரே - மன் னெந்தாய்
அப்பாலோர் வண்டை அனுப்பின் அவர் காமம்
செப்பாதே என்றால் திகைக்குமே - தப்பாது
மானைப் போய்த தூது சொல்லி வாவென்பேன் வல்லியப்பூம்

தானைப் பாரம்பாற் சாராதே - ஏனைப்பூங்
கோலித்தை நான்விடுப்பேன் கோகிலமுங் காக்கையினம்
ஆகி வலியானுக் கஞ்சுமே - ஆகையினால்
இந்த மனத் தைத்தூதாய் ஏகென்பேன் இம்மனமும்
அந்தமனோ தீதர்பால் அண்டதே"

இப்பொருள்களையெல்லாம் தூதுவிட முடியாதபோது என் கவலையை எவ்வாறு சொக்கநாதருக்கு தெரிவிப்பது என்று ஏங்கினேன. எனவே, அவர்பால் நெருக்கமான உன்னிடம் என் துயரைக் கூறலுற்றேன். நீயே அவரிடம் தூது செல்லத்தக்கதாய் என்று தலைவி தமிழினை நோக்கிக் கூறுகின்றாள்.

3. தமிழை அரசனாக உருவகஞ் செய்து தலைவி புகழும் வகையைக் கூறுக :

தமிழைச் சொக்கநாதரிடம் தூது விடுவிக்க முற்பட்டாள் தலைவி. அத்தமிழினைப் பல்வேறு வகைகளில் புகழ்ந்து அதன் மேன்மைகளைக் கூறுகின்றாள். தமிழின் பிறப்பு முதலாகச் சொல்லத் தொடங்கி, அதனை அரசனாக உருவகஞ் செய்து காட்டுகின்றாள்.

பிறப்பு : கொப்பூழினிடாக உதான வாயுவாகப் புறப்பட்டு வாக்காம கருப்படைந்து தலை, மிடறு, மூக்கு, உரம் என்னும் நான்கிடத்தையும் சார்ந்து இதழ், நா, பல், அண்ணம் உச்சி ஆகியவற்றில் பொருந்தி, முப்பது முதலெழுத்தாகவும், இருநூற்று நாற்பது சார்பெழுத்தாகவும் நீ பிறந்தாய்.

"இருநிலத்துப்
புண்ணிய ஞ்சே குந்திப் புலத்தே வளிதரித்துக்
கண்ணிய வாக்காங் கருப்பமாய் - நண்ணித்
தலையிடறு மூக்குரத்திற் சார்ந்திகழ்நாத் தந்தம்
உலைவிலா வண்ணத் துவொய்த் - தலைதிரும்பி
ஏற்பமுன் முப்பதெழுந் தாய்ச்சார் பிருநூற்று
நாற்ப தெழுத்தா நனிபிறந்தாய்" [கண்ணி 19-22)]

வளர்ப்பு : எண் முதலாகப் பன்னிரண்டு பருவங்களாகப் பெற்று நீ வளர்ந்தாய். சுவடி தூக்கும் பலவகையாகிய தொட்டிலில் ஏட்டுச் சுவடியாகிய உன்னை இட்டுப் பிள்ளைகள் தாலாட்டுவர். ஏட்டுச் சுவடியாகிய உனக்கு மஞ்சள் குளிப்பாட்டி, மையிட்டு (அறம், பொருள், இன்பமென்னும்) முப்பாலும் ஊட்டுவர்.

"பள்ளிக்கூ டத்தசையாம் பற்பலதொட்டிலிற் இடத்தித்
தள்ளிச் சிறார்கூடி தாலாட்டி - உள்ளிலகு
மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
பிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்" [கண்ணி 24-25)]

தலைமை : செய்யுள் சொல் நான்கு, செந்தமிழ்ச் சொல் நான்கு, திணைகள் ஏழு, யாப்பு எட்டு, அணிகள் முப்பந்தைந்து ஆகியவற்றுடன் கூடிய மணமகனாக நீ

தலைமையேற்றாய். செப்பல் முதலான பணிகள் நான்கும் உன் பட்டத்தரசியாயினர். தோற்கருவி முதலான ஐந்து கருவிகளும் ஈன்ற நூற்று மூன்று பண்களும் பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியர் ஆயினர். இத்தேவிமாரோடும் கூடி ஒன்பது சுவையாகிய பிள்ளைகளை நீ பெற்றாய். நாடகமாகிய பெண் கொலுவில் இம் மனைவியரோடும் பிள்ளைகளோடும் நீ வீற்றிருந்தாய்.

"செய்யுட் சொன் னான்குமுயர் செந்தமிழ்ச்சொல் லோர்நான்கும்
மெய்யுட் பொருளேழ் விதத்தினையும் மையிகலதே
தாகியாப் பெட்டு மலங்கார மேழைந்ததும்
பேதியாய் பேரெழின்மாப் பிள்ளையாய்ச் சாதியிலே
ஆங்கமைசெப் பற்பண் ணகவற்பண் டுள்ளற்பண்
தூங்கற்பண் பட்டத்துத் தோகையரா - ஏங்குமனத்
தெண்கருவி யைந்தின் றிருநூற்று மூன்றின்
பணிகளும்பின் கல்யாணப் பாவையரா - எண்கொளும்
நற்றா ரகமா நவரசமாம் பிள்ளைகளைப்
பெற்றாய் பெருவாழ்வு பெற்றாயே - உற்றகலாப்
பண்கள் முதற் பெண்களோடும் பாலரொடு நாடகமாம்
பெண் கொலுவில் வீற்றிருக்கப் பெற்றாயே' [கண்ணி 28 - 33)]

அரசகோலம் : பதினெட்டு வருணைகள் என்னும் வாழ்வு பெற்றாய். வையையில் சொக்கநாதர் முதுகில் பட்ட பிரம்பையே உன் செங்கோலாகக் கொண்டாய். மேல்கீழ் என்பன உள்ளிட்ட பத்துத் திக்குகளிலும் உன் செங்கோல் செல்லாத இடம் உண்டோ? திசைச்சொல் பதினேழும் உன் சிற்றரசர்கள். கீழ்க்கடலும், மேற்கடலும் வேங்கடமும் குமரியும் உன் நாட்டெல்லையாகக் கொண்டாய். வையை, கருவூர், மருதாறு, மருவூர் ஆகியவற்றின் இடைப்பட்ட பகுதி உன் அரண்மனை, சேர, சோழ, பாண்டியர் மூலமாக நீ மூவுலகம் போய் வளைத்தாய்.

"மண்புகழத்
தாழ்விலா வட்டா தசவன் னைமகளெனும்
வாழ்வெலாங் கண்டு மகிழ்ந்தாயே - ஆஅடி
நெடுங்கோல வையையிலென் னேசர்மேற் பட்ட
கொடுங்கோல் செங் கோலாலக் கொண்டாய் - அடங்காத
எங்கோவோ பத்தென் றியம்புதிசைக் குள்ளேநின்
செங்கோல் செலாத திசையுண்டோ - இங்கேயுள்ள
தேசமைம்பத் தாறிறி திசைச்சொற் பதினேழும்
மாசற நீ வைத்தகுறு மன்னியரோ - வீசு
குடகடலுங் கீழ்கடலுங் கோக்குமரி யாறும்
வடவரைய மெல்லை வகுத்தாய் - இடையிரந்த
முன்னுறுந்தென் பாண்டி முதற்புன்னா டோன

பன்னிரண்டு நாடுமப் பானாடோ - அந்நாட்டுள்
வையை கருவைமரு தாறுமரு வூர் நடுவே
ஐயநீ யாழு அரல்மனையோ - செய்யபுகழ்
மூவேந்தர் வாகனமா மூவுலகும் பொய் வளைந்த
பாவேந்தே நீபெரிய யார்வேந்தோ" [கண்ணி 34 - 41]

அரசேற்றம் : வேதாகமங்களெள்லாம் உன் புரோகிதர் காப்பியங்களும், நாடகங்களும், அலங்கார நூல்களும் உன் தோழர்கள் சமயசாத்திரங்கள் உன்சேனாபதிகள் பாரதமும், பதினெண்புராணங்களும் உன் சேனைகள் எனவே, பூலோக சக்கரவர்த்தியும் நீயே.

"வேதா சுமங்களெலாம்

புண்ணியனே யுன்றன் புரோகிதரோ - எண்ணியே
நல்லபெ ருங் காப்பியங்க னாடகா லங்காரம்
சொல்லரசே யுன்னுடைய தோழரோ - தொல்லுலகிற்
சார்புரக்குஞ் கோவேந்த சாத்திரங்க ளெல்லாமுன்
பார்புரக்குஞ் சேனாபதிகளோ - வீராதிர்
போர்ப்பா ரதமும் புராணம் பதினெட்டும்
சீர்ப்பாவே யுன்னுடைய சேனைகளோ - பார்ப்பவர்கள்
அக்கர வர்த்தியென லாமென்பார் பூலோக
சக்கர வர்த்தியும்நீ தானன்றே" [கண்ணி 42-46)]

அரச வாழ்க்கை : நான்கரைச் சக்கரம், ஆறரைச்சக்கரம் முதலான சொல்லணிகளாகிய சக்கரம் ஏந்தினாய். இரத பந்தம் என்ற சொல்லணியாகிய தேர் ஏறினாய். மற்றொரு சொல்லணியாகிய சுழிகுளம் நீந்தினாய். கூடசதுக்கம் அடைந்தாய். மாலைமாற்று அணிந்தாய். சதுரங்க பந்தம் (நாற்படை) விளங்க நின்றாய். முரசபந்தம் (பேரிகை) ஒலிக்க இருந்தாய். முடிவேந்தர் மூவரும் சூடி நீ உயர்ந்த சங்கப்பலகையில் வாழ்ந்தாய்.

"சக்கரமுன்
பேந்தி நெடுந்தேர்மே லேறிச் சுழிகுளம்
நீந்தியோர் கூட நிறைசதுக்கம் - போந்து
மதுரங் கமழ்மாலை மாற்றணிந்து சூழும்
சதுரங்க சேனை தயங்கச் - சதுராய்
முரசங் கறங்க முடிவேந்தர் சூழ
வரசங்க மீதிருந்து வாழ்ந்ததே". [கண்ணி 46-49)]

மெய்க்காப்பாளர்: தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், காரைக் காலம்மையார், திருவிரட்டை மணிமாலை, ஐந்து காப்பியங்கள், சூளாமணிமாலை முதலிய நூல்கள், சேரமான் பெருமாளுடைய பொன்வண்ணத்தந்தாதி திருவாரூர் மும்மணிக்கோவை, பட்டினத்தாருடைய, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, முன்னோர் பாடிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினென்கீழ்க்கணக்கு, இரட்டைப்புலவர் பாடிய திருவாமாத்தூரிக் கலம்பகம், செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணி, ஒட்டக்கூத்தர் இயற்றிய இராசராசசோழனுலா, குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் என்ற இந்நூால்களே வீரர்களாயிருந்து உனக்கு மெய்க்காப்பாளர் தொண்டு புரிந்தனர்.

இவ்வாறு பலரும் உனக்கு ஏவல் செய்ய அரச காரியம் நடத்தும் கவிதையரசனே, உனக்குச் சிங்காதனம் அமையுமானால் இவ்வுலகில் உன்னை ஒப்பார் யாவர்?

"உள்ளத்து
வீரியஞ் செய்து வினையொழிய வேராச
காரியஞ் செய்யுங் கவிதையே - பாரில்
அரியா சனமுனக்கே யானால் உனக்குச்
சரியாரு முண்டோ தமிழே [கண்ணி 60 - 62)]

தமிழனுடைய பிறப்பு முதலாக அதன் அரசாட்சி வரையில் தலைவி இங்ஙனம் சிறப்பாக எடுத்தோதுகின்றாள். இப்பகுதியில் இலக்கண இலக்கிய வகைகளும் அழகுடன் கூறப்பட்டிருத்தல் அறிந்து இன்புறத் தக்கது.

4. தமிழ்விடு தூது கையாளப்படும் திருக்குறள் கருத்துக்களும் பாக்களும் யாவை?

தமிழைத் தூது விடுக்கும் தலைவி திருக்குறள் கருத்துக்கள், பாக்கள் ஆகியவற்றை ஆங்காங்கே எடுத்தாளுகின்றாள். அவற்றை இங்கே காணலாம். "இன்சொல் உடைய தமிழ்மொழியே, உலகில் வாழும் எல்லா மாந்தர்க்கும்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள் 391)

என்று அறிவுரை கூறிக் கறையேற்றவல்ல உனக்குச் சொல்லத்தக்கது உளதுமுண்டோ? எனத் தலைவி ஓரிடத்தில் கூறுகின்றாள்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக - சொற்குள்ளே
எல்லோர்க்கும் புத்தியியம்பிக் கரையேற்ற
வல்லா யுனக்குரைக்க வல்லேனோ" [கண்ணி 97-100)]

பிறிதோரிடத்தில் தலைவி தமிழ்மொழிக்கு மதுரை செல்லும் வழியினைக் கூறும்போது பின்வருமாறு கூறுகின்றாள்.

"காணாதாற் காட்டுவான் தான் காணான் கண்ணெதிரே
நாணா திராதே நவிலாதே வீணாக
ஆற்றி ளைவறிந்து கல்லா தவையஞ்சும்
கூற்றினர்பால் ஏகாதே கூடாதே - போற்றாகரை
வேண்டாதே கேடில் விழுச்செல்வங் கல்வியென்று
பூண்டாய் நீ தானே பொருளன்றோ" [கண்ணி 188-193)]

இப்பகுதியில் மூன்று குறள்களின் சொற்களும், கருத்துக்களும் கூறப்படுகின்றன.

அறிவற்றனுக்குத் தெளிவுபடுத்த முற்படுபவன் தானே இறுதியில் குழப்பமடைவான்; அறிவற்றவனோ அதன் பொருளைத் தான் விரும்பியவாறே எண்ணிக் கொள்வான். எனவே, அத்தகையோனே நீ நெருங்காதே அவனோடு உரையாடவும் முற்படாதே என்ற முதல் கண்ணியில்

"காணாதாற் காட்டுவான் தான்காணான காணாதான்
கண்டானாற் தான்கண்ட வாறு (குறள் 849)

என்ற குறள் கருத்தும் சொற்களும் இடம் பெறுகின்றன.

ஒருவன் கற்கத் தக்கவற்றைக் கற்கும் முறையறிந்து கற்கவேண்டும். அறிஞர் பலரும் கூடிய அவையில் அஞ்சாமல் வினாக்களுக்கு மறுமொழி கூறும் தெளிவிற்காக இவ்வாறு கற்றல் அவசியம் என்ற பொருள் உடைய.

"ஆற்ற னளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு". (குறள் 725)

என்ற குறட்பா இரண்டு கண்ணியில் குறிக்கப்படுகின்றது.

தன்னை மதியாரை அடைந்து அவர்பால் யாதொரு பொருளையும் இரத்தல் கூடாது என்று கூறும் தலைவி, "அழிவற்ற சிறந்த செல்வம் கல்வியேயெனப் புகழ் பெற்றவனன்றோ நீ" என்கிறாள். இம் மூன்றாவது கண்ணியில்,

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றையவை".

என்ற குறளின் முதற்பகுதி இடம் பெறுகின்றது.

இங்ஙனமே கற்றோருடைய வறுமையும், கல்லாதவருடைய செல்வமும் பற்றி ஓரிடத்தில் தலைவி கூறும் போதும் குறட்பாவை எடுத்தாளுகின்றாள். நல்லவர்க்கு (கற்றவர்க்கு) வறுமை வந்தாலும் அவைகளை அது கெடுக்காது; அவர்கள் அவ்வறுமையினால் பிறர்க்குத் தீங்கு புரியார். கல்லாதவரிடம் செல்வம் சேரும் போது, அவர்களை அது கெடுக்கும். அவர்கள் அச்செல்வத்தினால் பிறரையும் கெடுப்பர். எனவே, கல்வியறிவற்றவரிடம் சேராதே, என்று தலைவி தமிழை நோக்கிக் கூறுகின்றாள்.

"நல்லார்கட்பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட்பட்டதிருக் கண்டாயே - கல்லார்பால்
ஏகாதே" *[கண்ணி 194-195)]*

இப்பகுதியில் 'நல்லார் கட்பட்ட' என்ற குறள் (408) இடம் பெறுகின்றது.

தமிழானது தன்னைக் கற்பாரையும், கற்றவர்பால், அரிய செய்திகளைக் கேட்பாரையும் இன்புறச் செய்விக்கும் இயல்புடையது. இதனைத் தலைவி எடுத்துரைக்கும் இடத்தில் 'தாமின்புறுவது' என்ற குறட்பாவை (399) அமைக்கின்றார்.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தாரென்னும் - மாமகிமை
சேர்ந்ததுன் பாலன்றே". *[கண்ணி 196-198)]*

இங்ஙனம் திருக்குறட்பாக்களும் கருத்துக்களும், தமிழ்விடு தூதில் காணப்படுகின்றன.

5. சொக்கநாதருடைய திருவடிவத்தினை தலைவி தமிழுக்கு எவ்வாறு எடுத்துரைத்தாள்?

அவருடைய அருமை பெருமைகள் பின்வருமாறு எடுத்துரைக்கிறாள்.

சிவபெருமான் பின்வரும் உறுப்புக்களையுடையவன்:

1. இடைக்கோடன் என்ற தமிழ்ப் புலவனுக்காக அவன் பின்னே சென்ற செந்தாமரை போன்றிருந்தான்.

2. இராசசேகர பாண்டியன் தன் வேண்டுகோளை இறைவர் நிறைவேற்றாவிடில் தன் கழுத்தை அரிந்து கொள்வேன் என முற்பட்ட போது அவனுக்காக இடத்தாளையூன்றி வலத்தாளை உயர்த்திக் கால் மாறியாடிய திருத்தொடையினை உடையவன்.

3. தன் குருவிக்குத் துரோகம் புரிந்த பணிக்கனுக்கும் (யுத்த முறை கற்பிப்பவனுக்கு) எதிராகத் தாமே படைகளும் உடைவாளும் சேர்த்துக் கட்டிய இடையினை உடையவன்.

4. தம் அடியவளாகிய வந்தியென்னும் பிட்டு வாணிச்சி கொடுத்த பிட்டினை உண்டு பசி தீர்த்த வயிற்றினை உடையவன்.

5. தாய் முலைப் பால் உண்டறியாத பன்றிக்குட்டிகளுக்குத் தாமே தாய் பன்றியாகத் தோன்றிப் பாலூட்டிய மார்பினை உடையவன்.

6. பாண்டியனுடைய பொன்முடியில் அழுத்துவதற்கேற்ற மாணிக்கத்தை விற்ற கரங்களை உடையவன்.

7. அரசு உரிமைக்காக, ஆத்தி மலரைப் புனையாமல் வேப்பமாலையைச் சூடிய பருத்த தோளினை உடையவன்.

8. கரிக்குருவிக்கு உபதேசம் புரிந்த திருவாயினை உடையவன்.

9. குற்றமற்ற சொல்லே வாயிலாகத் தமிழ்மொழி' தங்குவதற்கு இடமாகத தநத திருச்செரியானை உடையவன்.

10. ஆதரவற்ற வணிகப் பெண்ணின் கண்ணீரைத் துடைப்பதற்காக, தாமே அவளது மாமனாகத் தோன்றி நீதிமன்றத்தில் வழக்குரைத்து, வெற்றிதந்து அவள் கண்ணீரை மாற்றிய திருக்கண்கள் உடையவன்.

11. மணிவாசகருடைய திருவாசகத்திற்காகவும், வந்தியிட்ட பிட்டிற்காகவும் மண் சுமந்த திருமுடியினை உடையவன்.

இவ் உறுப்புக்களையுடையவன் என்று அடிமுதல் முடிவரை (பாதாதி கேசமாக)த் தலைவி கூறுகின்றாள். தலைவி தன் துன்பங்களை எவ்வாறு வெளியிடுகின்றாள்?

சொக்கநாதராகிய தலைவரிடத்துக் காம மயக்கத்தினால் நான் வருந்தினேன். அம்மயக்கம் என்ற யானை உண்ட விளாங்கனிபோல் ஆனேன். பிரிவு என்னும் கல்லாதின்ற கரும்பானேன். நல்லவரை நாடுகின்ற சிந்தனையினால் உடல் வருந்தினேன். பனியால் வாடிய செந்தாமரை மலர் ஆனேன்.

திருக்கொள்ளம்புதூரில் தமிழ்ப்பதிகம் பாடி ஞான சம்பந்தர் ஆற்று வெள்ளத்தைக் கடந்தார். நீயும் என்னுடைய மயக்க வெள்ளத்திலிருந்து என்னைக் கடத்தலாகாதா? நீ சமணர்களை மதுரையில் கழுவேறச் செய்தாய்: என்னை வருந்துகின்ற மன்மதனையும் அவ்வாறு ஒழிக்க மாட்டாயோ? பாண்டியனுடைய முதுகில் கூனை ஒழித்தாய். அவ்வாறு மன்மதன் எடுத்த கரும்பின் வளைவையும் நீக்க மாட்டாயா? பாண்டியனுடைய அர கருமபு வில்லின் வளைவையும் நீக்கமாட்டாயா? காமநோயை தீர்க்க மாட்டாயோ? நாவுக்கரசைக் காத்தாய்: நஞ்சு போல் தோன்றுகின்ற உணவினை இனிமையுடையதாகச் செய்யாயோ?

ஞானசம்பந்தர் பதிமாக நீ நெருப்பாக கிடந்து எரியாமல் நின்றாய். அங்ஙனமே என்னையும் காமமாகிய நெருப்புச் சுடாமல் இருக்கும்படி செய்யாயோ? கொங்கு நாட்டில் மக்கள் பனித்துயரால் வாடாதபடி நீ செய்வித்தாய்: அப்போது இப்படியும் பசியினால் நான் துன்புறாதபடி நீ செய்யமாட்டாயோ? நாவுக்கரசைக் கடல் கொள்ளாதபடி கல்லோடு பித்தாய்; அப்படியே தன் ஓடையால் கடந்து என்னை துன்புறுத்தாதபடி உறவாக்க மாட்டாயோ?

நீ ஆண்பனையைப் பெண்பனையாக மாற்றினாய். அப்பனையின் மேலிருந்து என்னை வருந்துகின்ற அன்றிப் பறவையை வேறொரு பறவையாக ஆக்காயோ? பொதிய மலையிலிருந்து தோன்றிச் சந்தனமும் தென்றலும் ஆகியவற்றை உறவாகக் கொண்டாய்; எனக்குத் துன்பஞ் செய்கின்ற அச்சந்தனத்தையும், தென்றலையும் என்னோடு உறவாக்க மாட்டாயோ? இசைகளையெல்லாம் உனக்கு மனைவியராகக் கொண்டாய்? அவ்விசைகள் என்னை வருத்தாதபடி செய்ய மாட்டாயோ?

உன் தமிழ்ப்பாடலால் முத்தினாலாகிய திருச்சின்னமும் சிவிகையும், பந்தலும், காளமும் ஆகியவற்றை ஞானசம்பந்தர் பெறச் செய்தாய். அம்முத்துக்கள் என்னைச்

சுடாமலிருக்கும்படி நீ செய்யாயோ? முன்பு இறந்துபோன வலது எலும்பினைப் பூம்பாவை என்ற பெண்ணாக ஆக்கினாய். இப்பொழுது பொலிவிழந்திருக்கும் என் உறுப்புக்களை, அழகிய வடிவம் உடையதாக ஆக்காயோ?

முதலையுண்ட பாலனைச் சுந்தரர் திருவாக்கினால் மீண்டும் உயிர் பெறச் செய்த பாடற்றமிழாகிய நீ, நான் மாய்ந்தாலும் என்னை உயிர்ப்பிக்க வல்லாய். பொருத்தமாகச் சொன்னால் இத்தலைவி என்று என்னுடைய சொல்லை ஏற்று நீ சொக்கநாதர்பால் செல்வாயாக. திரும்ப என்பால் வருதற்கு நினையாமல் அங்கேயிருந்து விடாதே.

ஒளிமிக்க சொக்கநாதரிடம் சென்று தூது சொல்லி வருதற்கு உன்னைத் தவிர பிறர் உண்டோ? பிறரால் சுட்டிக் காட்டற்கு அரியவராகிய சிவபெருமானைத் தன் தந்தைக்கும் 'பெம்மான் இவனன்றே' எனச் சுட்டிக் காட்டியவர் திருஞானசம்பந்தர். கயிலை மலையில் எழுந்தருளியுள்ள சிவபிரானைக் கண்டு வழிபட திருவையாற்றில் கண்டு 'கண்டேனவர் திருப்பாதம்' கண்டறியாதன கண்டேன்' என்று பாடியவர் அப்பர். திருமுதுகுன்றில் மணிமுத்தாற்றில் இட்டுக் கமலாலயக் குளத்தில் திருவாரூரில் எடுத்தவர் சுந்தரர். 'கயிலை பாதி, காளத்திபாதி யந்தாதி' என்ற நூலின் வாயிலாகக் கயிலைக் காட்சியைக் காளத்தியில் கண்டவர் நக்கீரர். தமக்குத் தாயற்றவரும், தாமே திரிச்சிராப்பள்ளியில் தாயாக இருந்தவரும் ஆகிய சிவபெருமானே, அம்மையே என அழைக்குமாறு விளங்கியவர் காரைக்காலம்மையார் . உவர் மண்ணால் மூடப்பட்ட வண்ணானை வெண்ணீறு வரித்த சிவனடியார் என விரும்பி 'அடியேன் அடிச்சேரன்' என்று பணிந்தவர் சேரமான் பெருமாள் நாயனார். இவர்களால் பாடப்பட்ட நீ கயிலைமலைச் செல்வராகிய சிவபெருமானைச் சேர்ந்தவன் என்பதையறிவேன். எனவே, உன்னால் ஆகாதது ஒன்றுண்டோ?

தடாதகைப்பிராட்டியும், சோமசுந்தரப் பெருமானும் உக்கிர குமாரராகிய முருகப்பெருமானும் அமர்ந்த மதுரைக்குச் செல்லும் வழியினைக் கேட்டாயாக. நீ செல்லும் வழியெல்லாம் வெல்வாய். 'வேயுறு தோளிபங்கன்' என்ற கோளறு பதிகம் பாடினவர்க்கு எல்லாக் காரியமும் சித்திக்குமே. திருவையாற்றில் சுந்தரர் தமிழ்ப்பதிகம் பாடியபோது காவிரியாறு விலகி வழிவிட்டதே. திருநனிப்பள்ளியென்ற பாலை நிலத்தைச் சம்பந்தர் தமிழ்ப்பாடல் நெய்தல் நிலமாக்கியதே அப்படுக்காகத் திருப்பைஞ்ஞீலி என்ற தலத்தில் சிவபெருமானே பொதிசோறு கொணர்ந்து தந்தாரே. எனவே, செல்லும் வழிகளெல்லாம் நல்ல வெற்றி கிடைக்கும். ஆறு விலகி வழிவிடும். நீ தடையும் சிரமும் இன்றிச் செல்லலாம் என்று தன் துன்பங்களைத் தலைவி கூறுகிறாள்.

7. மற்றப் பொருள்களிலும் தமிழ் உயர்ந்தது எவ்வாறு?

உன் இலக்கியங்களில் குறம் என்றும், பண் என்றும், கொள்வார்கள். ஆயினும் உனக்கு உறவு எனத் தாழிசை, துறை, விருத்தம் என்ற மூன்றினும் உண்டோ? எக்காலத்திலும் சிதறாத மணியென்று விளங்கும். உன்னை சிந்து என்ற நாக்கு அழியும். தேவர்களுக்கும், சத்துவம் முதலான மூன்று குணங்களே உண்டு. நீயோ செறிவு தெளிவு முதலான குற்றமில்லாத பத்துக் குணங்களைப் பெற்றாய்.

வெண்மை முதலான வண்ணங்கள் உலகில் ஐந்தே உண்டு. ஆயின், நீயோ தூங்கிசை வண்ணம் முதலான நூறு குணங்களை உடையாய். .

இனிப்பு முதலான சுவைகள் ஆறுமட்டுமே நாவிற்கு உண்டு. ஆயின் நீயோ நகை, அழுகை முதலான ஒன்பது சுவைகளை உடையாய். உலகில் வனப்பு என்பது ஒன்றே உண்டு. ஆயின் நீயோ அம்மை அழகு முதலான மூன்று வகைப் பொருள்கோள் உடையவர். ஆயின் நீயோ, யாற்றுநீர்ப் பொருள்கோள் முதலாக எட்டு வகைகளையுடையாய். இவையன்றி அறம், பொருள், இன்பம் என்ற முப்பால்களும் கொண்டாய். ஆண்பால், பெண்பால் முதலான ஐம்பால்களை உடையாய். உலகத்துச் சீர்கள் எட்டு (செல்வங்கள்) உனக்கோ (செய்யுட்) சீர்கள் முப்பது.

சேரமான் கணைக்காலிரும்பொறைக்கு இட்ட விலங்கினைக் 'களவழி நாற்பது' என்ற நூலின் மூலம் நீ விலக்கினாய். உனக்கு ஏழு தளைகள் (விலங்குகள்) உண்டு என்று சொல்வது பொருந்துமோ? செந்தமிழ் என்று மூன்று யுகத்திலும் இரக்கும் உன்னைக் கலிப்பா என்பது பொருந்துமோ? கற்பவருடைய மயக்கத்தைப் போக்குகின்ற உன்னை மருட்பா என்பது பொருந்துமோ? பத்துப் பொருத்தமும் (மங்கலம், சொல் முதலானவை) உடைய உன்னை விருத்தம் (ஒருவகைச் செய்யுள், பொருத்தமில்லாதது) என்று கூறுதல் தகுமோ?

ஞாயிறு, திங்கள், நெருப்பு என்னும் மூன்றும் இருளை நீக்கும் என்பார்கள். ஆயினும், அவை உன்னைப் போல் மனத்திருளை மாற்றுமா? கொடையிற் சிறந்தது சிந்தாமணி என்பர். அப்புகழ் அதற்கு வந்தது உன் காப்பியங்களில் ஒன்றன் பெயரை அது கொண்டிருப்பதனாலன்றோ? ஆரம், கணீடசரம் முதலான எத்தனை அணிகள் சேர்ந்தாலும் உன் அலங்காரம் ஆகுமோ? (அணியிலக்கணம்) பொன்னப்பொருள் என்பார்கள். ஆயின், உன்னைப் போல் உரைக்குந்தோறும் (சொல்லுந்தோறும், தேய்க்குந்தோறும்) வளர்தல் பொன்னுக்கு உண்டோ? அவர்களால் கொள்ளப்பட்டும், கள்வரால் கவரப்பட்டும் மற்றப் பொருள்கள் குறையும். ஆயின் உன்னைக் கன்னமிட்டால் (காதில் வாங்கினால்) எப்பொருளும் வளரும். எனவே, மற்றப் பொருளினும் நீ உயர்ந்தாய்.

முக்கூடற்பள்ளு

முன்னுரை

தொல்காப்பிய வாகைப் படலத்தில் வரும் 'ஏரோர் களவழி'. சிலப்பதிகாரத்தில் வரும் 'ஏர்மங்கலம்', பன்னிரு பாட்டியலில் வரும் 'உழத்திப் பாட்டு' முதலிய துறைகளை நினைத்தும் திணை நிலை வரிப் பாடல்களாகவும், கூத்துக்கேற்ற துள்ளல்களாகவும் நாட்டில் நெடுகிலும் வழங்கி வரும் பாடல்களின் சுவை கருதியும் இவற்றைப் பின்பற்றி அமைந்த இயலிசை நாடக முத்தமிழ் நூலாகப் 'பள்ளு' என்ற நூல் தோன்றியது. இதில் குறிப்பிடத்தக்கது முக்கூடற்பள்ளு.

ஆசிரியர் மற்றும் நூல் தோன்றிய வரலாறு

முக்கூடற்பள்ளு இலக்கியத்தின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. கவிதை நலன்களையும் கவிக் கூற்றாக இவர் பாடியுள்ள கொச்சகக் கலிப்பாக்களின் கவிதைச் சுவை நலத்தையும் உணர்ந்து நோக்கினால் இவர் கம்பர் போன்ற பெருங்கவிஞருடன் சேர்த்து எண்ணத்தக்கவர் என அறுதியிட்டு உரைக்கலாம். முக்கூடற்பள்ளு நாடகத்தை இயற்றிய என்னயினாப் புலவரே முக்கூடற்பள்ளு ஆசிரியர் என இக்காலத்தில் பலர் தவறாகக் கூறுகின்றனர் என்கிறார் வித்துவான் ந. சேதுரகுநாதன்.

முக்கூடற்பள்ளு நூல் அகப்பொருள் நூலைப் போன்று கிளவித் தலைவன் தலைவியர்களின் சிறப்புப் பெயர் கூறாமல் பொதுப் பெயர் கூறியே நடக்கின்றது. முக்கூடற் பள்ளனின் சிறப்புப் பெயர் ஏதும் சுட்டப்படவில்லை. பாட்டுடைத் தலைவனாகிய திருமாலின் பெயராகிய வடிவழகன் என்ற பெயர் அவனுக்கு ஏற்றப்பட்டு வழிவழகக் குடும்பன் எனக் கூறப்படுகிறான். அவன் மனைவி இருவருள் மூத்தபள்ளி முக்கூடற்பள்ளி எனவும் இளையபள்ளி மருதூர்ப்பள்ளி எனவும் குறிப்பிடப்படுகின்றனர்.

முக்கூடல் என்னும் ஊர் திருநெல்வேலிக்குச் சிறிது வடகிழக்கில் தண்பொருநையும் சிற்றாறும் மற்றொரு காட்டாறும் கூடும் இடத்தில் வடக்கே அமைந்துள்ளது. பொருநையின் வடக்கே அமைந்த முக்கூடல். ஆசூர் வடகரைநாடு என்ற பெயர் பெற்றது. தென்பால் உள்ள நாடு சீவல் மங்கைத் தென்கரைநாடு எனப்பட்டது. 'தென்கரை நாட்டில் மருதீசர் வீற்றிருக்கும் மருதூர் உண்டு. சீவலப்பேரி என்ற ஏரியின் பெயர் ஊருக்கும் அமைந்து முக்கூடல் இப்போது சீவலபபேரி என்ற பெயரால் விளங்குகின்றது. முக்கூடலில் அழகர் திருமால் திருக்கோயில் உண்டு.

இந்நூலில் இடம்பெறும் ஆறை அழகப்ப முதலியார், திருமலைக் கொழுந்துப் பிள்ளையன் ஆகிய இருவரும் வாழ்ந்த காலமே இந்நூலின் காலம் என்பர். ஆகவே கி.பி 1676 முதல் 1682க்குள் இந்நூல் இயற்றப்பெற்றதாகக் கூறுவர்.

கதைப் பொருள்

பள்ளர் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் புனைந்துரையாகப் பாடும் நூல்கள் பள்ளு நூல்கள் ஆகும். பள்ளு நூல்களில் பிற நூல்களுக்கு வழிகாட்டியாக அமைவது முக்கூடற் பள்ளு முக்கூடல் என்னும் ஊரில் திருமால் திருக்கோயில் உண்டு. முக்கூடற்பள்ளு, முக்கூடலிலுள்ள திருக்கோயிலில் வீற்றிருக்கும் அழகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது.

இந்நூலில் இருமனைவியருடைய பள்ளனின் குடும்ப வாழ்க்கை சித்தரிக்கப்பட்டுள்ளது. அவன்தன்மூத்த மனைவி முக்கூடற்பள்ளி, இளைய மனைவி மருதூர்ப்பள்ளி, தன் கணவனான பள்ளன் இளைய பள்ளியிடம் மிகுதியாக அன்பு பாராட்டுவதாகத் தன் குடும்பத்துப் பண்ணைக்காரனிடம் முறையிடுகிறாள் மூத்தபள்ளி. இளையபள்ளியோ மூன்று நாட்களாகத் தன் கணவனைக் காணவில்லை என்று அப் பண்ணைக்காரனிடம் முறையிடுகிறாள். இளையபள்ளி பள்ளனை ஒளித்துவைத்துக் கொண்டு இவ்வாறு நாடகமாடுவதாகப் பண்ணைக்காரன் சீறும்போது பள்ளன் அவளது குடிசையினின்றும் வெளியே வருகிறான்.

மீண்டு ஒருமுறை மூத்தபள்ளி, தன் கணவன் இளையவளிடம் மிகுதியாக மயக்கம் கொண்டிருப்பதாயும் உழுதொழிலை நினையாது இருப்பதாயும் கூறி அவனைச் சவுக்கால் அடிக்குமாறும். தொழுமரத்தில் இறுக்குமாறும் குட்டையில் அடைத்து விடுமாறும் கூறுகிறாள். வயல்களில் ஆட்டுக்கிடை (எரு) வைத்துவிட்டு வருவதுபோல் பள்ளன் பாசாங்குசெய்து கொண்டு வரும்போது அவள் பொய் கூறுவதைக் கேட்ட பண்ணைக்காரன் பள்ளன் காலில் மரக்குட்டையைச் சேர்த்துக் காவலில் வைக்கிறான். பள்ளன், தன்னை வேண்டிக் கொண்டதன்படி பண்ணைக்காரனிடம் தம் கணவனை விடுவிக்க வேண்டுகிறாள் மூத்தபள்ளி. பண்ணைக்காரனால் விடுவிக்கப்பட்ட பள்ளன் உழுவதற்கு முற்பட, அவை மாடு முட்ட இரு பள்ளியரும் வருந்துகின்றனர். உடல் தேறிய பள்ளன் பயிர் விளைந்தபின் நெற்கணக்கைப் பண்ணைக்காரனிடம் கூறுகிறாள். தன் பங்கினையும் கணக்கையும் கூறாமல் விட்ட பள்ளனின் ரஞ்சகத்தை அறிந்த மூத்தபள்ளி, பிற பள்ளியரிடம் முறையிடுகிறாள். பிறகு மூத்தபள்ளிக்கும் இளையபள்ளிக்கும் வாய்ப்பூசல் ஏற்படுகிறது. பள்ளியர் ஏசல் என்பது பள்ளு நூல்களில் அமையும் விறுவிறுப்பான பகுதியாகும். இவ்வேசல் பகுதி பிற்காலத்தில் ஏசல் இலக்கிய வகை உருவாகக் காரணமாயிருந்தது. பள்ளியர்தம் சண்டை இறுதியில் சமயச் சண்டையாக மாறுகிறது. வைணவ சமயத்தைச் சார்ந்த மூத்தவள் இளையவள் வணங்கும் சைவசமயக் கடவுளைச் சாடுகிறாள். இறுதியில் இருவரும் ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொண்டு கூடிவாழ இசைகின்றனர்.

காப்புச் செய்யுள்

"செந்தாமரை மலர்கள் பொருந்தியுள்ள கருநீல மலை நடுவே பொன்னிறம் உண்டு என்னுமாறு தாமரை மலர்மீது அமைந்த திருமகள் வீற்றிருக்கும் மார்பினையுடைய திருமுக்கூடலில் எழுந்தருளியவர் திருமால், அவ்வழகரது பள்ளு நூலாகிய இசை நாடகத் தமிழைப் பாடுதற்கு', பாடற்கேற்ற சொற்களை ஆட்சிசெய்து புரக்கும் பாவலரும் திருமாலின், திருமந்திர எழுத்தாம் எட்டு எழுத்தினையும் நாவின்கண் நீங்காது ஓதும் பக்தரும் நாவலருமாகிய பத்து ஆழ்வார்களும் துணையாகும்".

"பூமருவு நீலவெற்பிற் பொன்னிறமும் உண்டெனப்பூ" என்று தொடங்கும் இப்பாடல் 'பூ' என்ற மங்கலச் சொல்லுடன் தொடங்குவது சிறப்பாகும்.

இறைவணக்கம்

(திருமால், கருடாழ்வார், சேனை முதலியார், நம்மாழ்வர்) (1–4)

"முக்கூடலில் உறைந்திருக்கும் அழகர் சிவந்த மாணிக்கமும், பசிய மரகதமும் கலந்த ஒலி வடிவினராகிய முதல்வர்; மன்னர் குலத்தில் தோன்றி அரசு துறந்து கால் சிவப்ப நடந்த காவலர்; கோவலர் குலத்தில் பிறந்தவர்; வேத முதல்வர்; நுண்ணிய இதழ்விரிந்த நறுமணத் துளசிமாலை உடையவர்; அழகிய பாம்பணையில் அறிதுயில் புரிந்த மாசற்றவர்; மாயவர்; அடியவர் தம் மனத்தில் இன்பம் நிறைவிப்பவர்; அவ்வாறு இன்புறுதற்குக் காரணமானவ்; அவர்தம் பள்ளிசை நூலின் பாடல் வளத்தை நாவளமாகத் தருபவர். அந்தத் திருமாலே, துணிவுடன் தம் தாள், தோள்வலிமையே துணையாகுமென்று முன்பே கூறிய தெளிவுடைய தேவர்; தேவர்தம் நாட்டின் பகைமைக்கு அழிவு ஏற்படும்படியான வலிமையும் அறிவும் கூர்ந்த திறனுடன் அசுரரும் தேவரும் பணிவிடை செய்யும் திறத்தவர்; இந்திரனுடைய பெருந்தன்மையினையும் புகழ்த்தன்மையினையும் உலகம் சிறப்பிக்கக் காரணமான தம்பி முறையான உபேந்திரன் என உலகினர் சொல்ல வான நாட்டு நல்ல அரசு முறையைக் காப்பவர்".

"மனைவியர் இருவர் விருப்புற்றுக் கலவியின்பம் தரும் அச்சால்பு நிரம்பிய நிலமடந்தை திருவடியைப்பிடிக்கவும், ஆரமணிந்த பருத்த கொங்கைகளுடைய திருமகள் தன் துடைகளைத் தலையணையாகக் கொடுத்து விருப்பம் கொள்ளவும், ஓசைமிகு நீண்ட கடலில் பொருந்திய பாம்பணைமேல் ஊழியில் துயில்கின்றார் திருமுக்கூடல் அழகர். அவர்தம் பள்ளிசைப் பாடலுக்கு அசை, சீர், தளை ஆகியவற்றை நிரம்பிப் பொருந்த அருளிக் கூறுவாரை நினைத்துத் திசைதோறும் தேடி ஓடி அலைய என்னிடத்துத் திறமில்லை. அவற்றை அருள் அச்சந்தரும் சிறகினையும் விரப்புயத்தினையும் உடைய திருமுக்கூடலில் உள்ள திருக்கோயிலில் எழுந்தருளிய வலிய கருடாழ்வராகிய தலைவரைப் பெரிய திருவடி என்ற பெயருடையாரை வழிபட நமக்குக் குறைவில்லை.

"முக்கூடல் அழகனானவர் உலகத்தார் வாழ் இவ்வுலகிற்குக் காவலன்; காயாம் பூவின் நிறத்தைப் போன்று காட்சி தருபவன்; உந்தித் தாமரையில் வீற்றிருக்கும் பிரமனாலும் அறியப் படாதவன். பொய்யா மறை நூற்பொருளை உணர்ந்த தமிழ்ப் பாவலனாகிய நம்மாழ்வாருக்கு விருப்பம் உடையவன். பாமாலையாகிய தீரினை அவனுக்கு அணியாகச் செய்யும் என் பாடலினையுடைய அம்முக்கூடல் அழகனின் பள்ளேசலில் சொற்கள் வலிமையற்றுப் பொருந்தா நிலையடையினும், பொருந்திய பொருள்களில் மெலிவு காணப்படினும் புலவர் இகழ மாட்டார். கோயில் கூட்டத்தை விலக்கும் பொருட்டு அடிக்கும்போது தேவர்களின் முடி மேலுள்ள பூவில் அடித்ததனால் தோய்ந்த தேனானது மணிக்கற்கள் பதித்த கோயிலில் அழகுடன் விளங்க, அத்தகு கோல்கொண்ட சேனை முதலியாரை நினைத்து வழிபடின் பிறர் யாது செய்ய வல்லார்?"

"சிறந்த செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் குற்றமற்ற திருமகளை உடம்பாகிய கோயிலின் உட்புறத்தின் மேலும், மார்பாகிய வெளிப்புறத்தின் மேலும் விருப்புடன் சுமப்பவரும், அவளை அகக்காட்சியானும் புறக்கட்சியானும் நோக்குபவரும், வேதத்தில்

சிறப்பிக்கப்பட்ட வாலறிஞரும், இந்திரன், பிரமன், திருமால் ஆகிய மூவருள் பெரியவரும், கரிய திரு உருவினரும், படைத்தல் காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலினரும் ஆனவர். திருமுக்கூடலில் எழுந்தருளியுள்ள அழியா இளமையும் அழகும் உடைய அழகர். அவர்தம் பள்ளேசலாகிய முத்தமிழ் நூலுக்குச் சிறந்த பக்தர்களாகிய பத்து ஆழ்வார்களுள், ஞாயிறுபோல் முதன்மையாக விளங்குபவரும், மறையுணர்ந்தவரும், சிறந்த ஓலையில் எழுதற்கரிய மெய்ப்பொருள் நலம் முழுதுணர்ந்தவருமாய் மொழிப் பாடல்களை வகுத்துரைத்த வருமானவர் நம்மாழ்வார். அவர் சங்கொலிக்கும் ஆழ்வார் திருநகரில் தோன்றியருளியபோது, விருப்பமாகத் திருஉறங்காப் புளியமரத்துப் பொந்தின் நடுவில் தோன்றும் நல்ல பேரறிவு தரும் அருள்பொழியும் அவர்தம் திருக்கண்கள் எனக்கு மெய்ப்பொருளை உணர்த்தும் ஞானவித்தாகும்".

இந்நான்கு பாடல்களிலும் முறையே திருமால், கருடாழ்வார், சேனை முதலியார், நம்மாழ்வார் ஆகியோர்தம்சிறப்பியல்புகள் இனிதே சுட்டப்பட்டுள்ளன.

பள்ளியர் வரவு (5–9)

காவலராந் தேவரைக் கைத்தொழுது மேலும் ஆவலால் முக்கூடலழகரின் ஆசூர் வளநாடாகிய வடகரை நாடு பற்றியும் சீவலமங்கை நன்னாடாகிய தென்கரை நாடு பற்றியும் இசைத் தமிழ் ஆராய்ந்துரைக்க, முக்கூடல் நகர்ப் பண்ணைகளில் பயிரிடக் கட்டளை பெற்றுள்ள பள்ளியர்கள் வந்து சேர்ந்தது பற்றிக் கூறுவேன்.

"திருமுக்கூடலுக்குச் சிறப்பாக வாய்த்த மூத்தபள்ளியானவள் நெற்றியில் மஞ்சணைப் பொட்டும், அதற்கு மேலே வேறாகத் திருமண் காப்பினால் இட்ட பொட்டும், பின்னால் நெகிழ்ந்து தொங்கும் கருமையான கொண்டையும், உச்சியில் இரண்டாய் வகிர்ந்த வகுப்பும், கையில் விளங்கும் இரும்புக் காப்பும், அந்தக் கையில் பிடித்த வெற்றிலையும், வாயில் பாக்கு ஒதுக்கிய தோற்றமும், வாயில் படித்து வைக்கும் ஒவ்வொரு வெற்றிலைச் சுருளுக்கும் ஒவ்வொரு மூலை நெளிந்து ஒதுங்கி விலகும் வாய் இதழ்களும், விழிகளை நோக்கியதால் கருமையுற்ற கொங்கைகளின் உச்சி இன்னும் நோக்கினால் விரிந்திடும் என எண்ணிச் சற்றே சாய்ந்த கொங்கைகளும், சிறிய இடையும், எடைக்கெடை தங்கத்தின் விலைபெறும் பொற்பட்டும் ஆகிய இவை விளங்கத் தோன்றினாள்".

" நெற்றியி லிடும் அஞ்சனப் பொட்டு
மற்றொரு திருநாமப் பொட்டும்
நெதிழ்ந்த கருங்கொண்டையும் ரெண்டாய்
வகிர்ந்த வகுப்பும்
பற்றிய கரும்பொற் காப்பும் கையில்
வெற்றிலையும் வாயில் ஒதுக்கிய
பாக்கும் ஒரு சுருளுக் கொருக்கால்
நீக்கும் இதழும்
.....
.....
திரு முக்கூடல் வாய்த்த பள்ளி
தோன்றினாளே "

“கண்டோர் மனத்தில் ஊஞ்சலாடும்படி உலாவிய பார்வையுடைய அம் மூத்தபள்ளியது விழியின் கவர்ச்சியால் இரும்பும் கல்லும் கரையும். பாற்கடல் வெள்ளத்தில் துயிலும் கருமேனி அழகரின் திருமுக்கூடலில் தோன்றிய பள்ளத்தியரின் அழகை வேறு எங்கும் காணமுடியாது.

“மருதூருக்குச் சிறப்பாய் வாய்த்த இளையபள்ளி, சிவந்த கால்களில் அழகாகப் பூசப்பட்ட கொச்சி மஞ்சளும், பூம்பச்சை இலையும் எங்கும் மணம் வீச, சிறிய நெற்றியாகிய பிறைநிலாவில் இட்ட திருவெண்ணீற்றுக் குறி ஒளி வீச, மை தோய்ந்த விழிகள் பஞ்சவைக் கெண்டைகளைப் போலப் பிறழ்ந்து பக்கத்துக் கொண்டையிலும் குண்டலங்களிலும் ஒளி தைக்கும்படி குதிக்க, நெஞ்சைக் கவரக்கூடிய பருத்த கொங்கைகளாகிய மதயானையின் இணைந்த கோடுகள் அசைய, நீலக்கடல் வடத்துடன் கோவையாகக் கோத்த தாலியும் விளங்க வஞ்சிக்கொடி போன்ற இடையில் அணிந்த பட்டும் அதன் ஐவகை வண்ணமும் இலங்க வந்து தோன்றினாள்.

“ செஞ்சரணப் படமிடுங் கொச்சியின்
மஞ்சளும்பூம் பச்சையும் மணக்கச்
சிறயநுதற் பிறை வெண்ணீற்றுக்
குறி யொளி வீசப்
பஞ்சலை மீன் கெண்டைகள் எனவே
அஞ்சனந்தோய் கண்கள் இரண்டும்
பக்கக் கொண்டையினும் குழையினுந்
தைக்கக் குதிக்க
நெஞ்சுகவர் கன தன மாமதக்
குஞ்சரவிணைக் கோடுகள் அசைய
நீலவடக் கல்லுடன் கோர்வைத்
தாலியும் இலங்க
வஞ்சிமருங்கி லணிதரும் பட்டும்
பஞ்சவர்ணத்தழகு துலங்க
மருதூர்க்கு வாய்த்த பள்ளி
தோன்றினாளே ” (8)

“முதல்வராம் மருதசீசருக்கும் அடிமைப்பட்டுப் பின்பு முக்கூடலழகராகிய திருமாலுக்கும் பாதி அடிமைப்படுவாளா அந்த மருதூர் இளையபள்ளி? தன் ஒளி முகம் மள்ளருக்குத் தோன்ற அவள் வயலையடைந்து நடுகை நட்டபோது ஒரு பூவில், ஐந்து பூவிற்கும் சேர்த்துப் பயிர் உண்டாகும்”.

பள்ளன் வரவும் அவன் தனது பெருமை கூறலும் (10, 11)

“பள்ளனாகிய வடிவழகக் குடும்பன், சீற்றமுறும் ஆட்டுக் கடாவின் கொம்பு போன்ற முறுக்கு மீசையுடனும் அழகிய கத்தரிக்கோலால் வெட்டிவிட்ட அழகான கன்னத்துப் பக்கத்தின் எழிலுடனும், இடுப்பில் வழுதடி என்ற படைக்கலம் சேர்த்து இறுக்கிக் கட்டிய கச்சையும், செம்பொன் புள்ளியடைய உருமால் என்ற அணியும், நீலநிறக் கொண்டையும்

கொண்டு காலில் ஏதேனும் இடறிச் சறுக்குந்தோறும் குதித்தலும் சுறுக்கென்று ஏதேனும் தைக்குந்தோறும் தலையசைத்தலும் உடையவனாகித் தடியைச் சுற்றி ஏப்பமிட்டு மெதுவாக கட்டிவைத்து, அறிவை மறுதலைப் படுத்தும் கள்வெறி கொண்டு காரணமின்றி உட்கும்படி செய்கின்ற சிரிப்புத் தோன்ற மன்றத்தில் தோன்றினான்".

" கறுக்குங் கடாய் மருப்பின்
முறுக்கு மீசையும் சித்ரக்
கத்தரிகை யிட்ட வர்ணக்
கன்னப் பரிசும்
குறுக்கில் வழுதடி சேர்த்
திறுக்குங் கச்சையும் — செம்பொற்
கோலப் புள்ளி யிருமாலும்
நீலக் கொண்டையும்
சறுக்குந் தொறுங் குதிப்பும்
சறுக்குந் தலை யசைப்பும்
தடிசுற்றி ஏப்ப மிட்டே
அடி வைப்பதும்
மறுக்கும் மதுவெறி கொண்
டுறுக்குஞ் சிரிப்புத் தோன்ற
வடிவழகக் குடும்பன் வந்து
தோன்றி னானே ". (10)

தன் பெருமைகளைக் கூற வந்த பள்ளன், "ஒப்பற்ற செந்தாமரை மலர் போன்ற அழகரின் திருவடிகளை நினையாதவர் மனத்தை முரம்பு நிலத்தில் உழுதற்குரிய தரிசு நிலமென்று கருதிக் கொழுவினைப் பாய்ச்சி உழுவேன்; அரிய நூல்களின் மதிப்பிற்குரிய இலக்கிய உண்மையை எங்கள் பெரிய நம்பியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாத தீயோருடைய செவிகளைத் தரிசு நிலத்துப் புற்றுக்களை வெட்டுவதுபோல் மண்வெட்டிக் கொட்டால் வெட்டுவேன்; பெருமாளுடைய நூற்றெட்டுத் திருப்பதிகளையும் மனத்தில் மருவி வலஞ்சுற்றி வராதவருடைய பேய்த் தன்மை வாய்ந்த கால்களை வடம் பூட்டி ஏர்காலிற் சேர்ப்பேன்; திருவாய்மொழியைப் படியாதவரை இரண்டு கால் மாடுகளாகக் கொண்டு தீத்தீ எந்ற அதட்டித் தார்க்கோலால் சாத்துவேன் நயினாலே" என்று கூறுகின்றான்.

பள்ளியரும் பள்ளனும் குடித்தரங்கூறுதல் (12–15)

வீரமள்ளர் குலத்தில் தோன்றினும் இரு பள்ளியர்க்கு ஒரு பள்ளக் கணவன் எனில் அவ்விருவருக்கிடையே இயல்புகள் மாறாதிருக்குமோ? கொக்கு உருவத்தில் குத்திக் கொல்ல வந்த கள்ளப் பறவையின் வாயைக் கிழித்த கருமேக நிறமுடைய அழகரின் திருமுக்கூடலில் பள்ளியர்கள் பொருத்தமாகத் தம் பழமையான குடும்பத்தின் இயல்புகளைக் கூற முற்பட்டனர்.

மூத்தபள்ளி "வடபாகமான சித்திராநதி சிற்றாற்றுக்குத் தெற்கே ஓடும் பொருநையாற்றுடன், அச்சிற்றாறு வந்தடையும் காலத்திலேயே அவ்வாறு காலந்தொட்டு இவ்வளவு காலம் வரை வாழையடி வாழையாய் வரும் பழங்குடியில் நான் தோன்றினேன்; குடும்பன் பத்துப் பெண்களோடு பதினோராவது பெண்ணாக என்னைக் கொணர்ந்து வைப்பாக வைக்கவில்லை; என்னை முன்னரே தாலி கட்டித் தன் மனைவியாகக் கொண்டான்; முத்தமிழ் நாடாகிய இந்தத் திருமுக்கூடலில் எழுந்தருளியிருக்கும் அழகருக்குக் கொத்தடிமையானாகிய என் தலைவனுக்குப் பொருத்தமான முக்கூடல் மூத்தபள்ளி நானே ஆண்டே" என்றாள்.

" .....

அடியடி வாழையாய் நான்
குடியில் வந்தேன்
பத்திலே பதினொன்றாக
வைத்தானில்லைக் குடும்பன்
பண்டே சரடு கட்டிக்
கொண்டான் என்னை
முத்தமிழ் நாட் டழகர்
கொத்தடி யானுக் கான
முக்கூடல் மூத்தபள்ளி
நானே யாண்டே "

(13)

இளையபள்ளியானவள், "செஞ்சி, மதுரை, தஞ்சை ஆகிய இடங்களில் தன் ஆணை செல்லும்படி செங்கோல் முறை வழுவாத வடமலையப்பப் பிள்ளையன் எங்கள் ஊரினரே. அவர் மனத்தில் குறிப்பிட்டுத் தோண்டிய ஐந்து குளத்திற்கும் திருவாழிக் கல் நட்டுக் கால்கொண்ட நாளிலேயே நான் இப் பண்ணையில் வந்து சேர்ந்தேன். அவனிடத்தில் கஞ்சிக்காக வந்து கெஞ்சிப் புகுந்தவளல்லள்; அவன் பார்த்து விருப்பங் கொண்டு மணந்து கொள்ள அவனுக்கு மனையாட்டியானவள். மேகம் போன்று கருநிற அழகரைத் தஞ்சமாக அடைந்த இந்த முக்கூடற் பள்ளனுக்குப பொருத்தமான மருதூர் இளையபள்ளி நானே யாண்டே" என்று கூறினாள்.

" .....

கஞ்சிக்குந் தன்னிலே தான்
கெஞ்சிப் புகுந் தவளல்ல
கண்டாசைப் பட்டே கொள்ளும்
பெண்டா னவள்
மஞ்சிற் கறுப் பழகர்
தஞ்சையப்பள் ளனுக் கேற்ற
மருதூர் இளையபள்ளி
நானே யாண்டே "

(14)

பள்ளனானவன் "சுக்கிராச்சாரியாரின் தாயைச் சக்கரத்தாழ்வார் கொன்றதனால் உண்டாகிய துடுக்கான பிரமகத்தி என்னும் பாவம் நீங்குமாறு தெற்கே திருமுக்கூடலில் மாலழகராய் எழுந்தருளி, அவர் திருவடி வைத்த அன்றே வழிவழியாக வரும் அடியேன்; உண்மையைத் தெரிந்து கொள்ளாதவர் 'பள்ளர் பள்ளா விலகு' என்பர். அவ்வாறு தூர விலகிப் போனாலும், நாங்கள் அவர்களுக்கு நெருக்கந்தான்; எவ்வாறெனில் இவர்களுக்கு உண்ணத்தக்க சோறு யான் பயிரிட்ட வேளாண்மைத் தொழிலாலே வந்ததுதான்; கருங்கடலிலே தோன்றிய முத்துக்கு ஒப்பாக மிகுந்த முத்துச் சம்பா முதலிய முத்துப் போன்ற அரிசி தரும் நெல்லை உண்டாக்கும் வடிவழகக் குடும்பன் நானே ஆண்டே" என்றான்.

இரு பள்ளியர் தம் நாட்டு வளமும் நகர் வளமும் (16–26)

வெள்ளிக்க மலைக்கு ஒப்பான திருமேனியுடைய திருமுக்கூடல் அழகரின் திருநாட்டு வளத்தைப் பேசப் பள்ளியர்கள் இருவரும் அழகிய நாவினை அசைக்கத் தொடங்கினார். பாட்டுவளம் பொருந்த நம்மாழ்வாரின் திருமாளிகைப் பூவாகிய மகிழம் பூங்காட்டு வளமெனச் சொல்லுமாறு நெற்களம் மலிந்த மருத நிலம், ஊர் இவற்றின் வளத்தைக் கூற முற்பட்டனர்.

"வளமை நிரம்பிய ஆசூர் வடகரை நாட்டின்கண் தோகை விரித்த பீலிமயில் மேடையின் மேல் ஏறித்தனக்குரிய கார்காலம் வரப்போவதை அறிந்து வானவெளியை நோக்க அதையறிந்து மாங்குயில் பேடை தமக்குத் துன்பம்தரும் கார்காலம் வந்தது எனக் கூறிய வாய்மையைக் குயிற்சேவல் மனத்திற்கொண்டு கார்காலம் வந்ததோ என அதனிடம் கேட்பதற்குத் திறந்தவாயை மூட, கோடை போய்விட்டதனால் ஏற்பட்ட மங்கல அடையாளங்களை அறிந்து குளிர்ந்த கொன்றையானது இளந்தளிர் தளிர்க்கத் தொடங்க, கார்காலத்திற்குப் பின் வாடை வரும் என்பதை அறிவிப்பன போன்று கோழி கூவும்" என்று மூத்தபள்ளி கூறுகின்றாள்.

"சீவல மங்கைத் தென்கரை நாட்டின்கண் மன்மதனின் கரிய யானையாகிய இருள் அவனது நிலவாகிய குடையை வென்றுவிடுவதாகத் தாவி வளைக்க, அந்த இருளாகிய யானைக்கு அஞ்சிய ஆடவர் மறைந்து கொள்ள மலையெல்லாம் தகுதியல்ல என்று பெண்களின் மார்பகங்களாகிய குன்றில் பதுங்குவர். மணமிகு இளவேனிலை விரும்பும் புறாக்களுக்கும், மாங்குயில்களுக்கும் இளவேனில் வரப்போவதைக் கட்டியங்கூறித் தென்றல் வரப்போவதை முன்னறிவிக்கக் கோழி கூவும்" என இளையபள்ளி கூறுகின்றாள்.

"திருமுக்கூடலில் மேகக்கூட்டம் அந்நகர்க் கோபுரங்களின் பக்கம் வந்தடையும்; கொடிகளோ மேகக்கூட்டங்கள் கீழ்வந்து படியும்படி மேற்சென்று அசைந்து மூடும்; சோலைகளோ அண்ட பேரண்டங்களை அடைய விரும்பி மேலும் வளரும்; பொன் வண்ண முற்றங்களில் அன்னப் பறவைகள் விளையாடும்: இதழ்விரி மலரினின்று ஒழுகும் தேன் 'வெள்ளமாகிப் பூந்தாதாகிய வண்டலினால் திரடு செய்துகொண்டு ஓடும்; கதிரவன் அங்குள்ள பொன்வண்ணக் கோட்டைகளில் உள்ள அம்பு எய்வதற்குரிய துளை வழியே நுழைய வழி தேடும்; தேவர்க்குத் தலைவரும் செண்டு என்ற படைக்கலக் கருவியைக் கைபிடித்த அழகருமாகிய அம் முக்கூடலழகரின் திருமுக்கூடல் ஊர் எங்கள் ஊராகும்" என மூத்தபள்ளி உரைக்கின்றாள்.

திருமருதூரின்கண் சங்குகள் மேடைகளெங்கும் உலாவித் திரியும்; நீரலைகளிலுள்ள மீன்கள் பொன்னரங்கங்களில் தாவிப் பாயும்; நிலவானது சோலையிலுள்ள மரங்களை அராவிச் செல்லும்; சோலைகள் தெருக்கள் தோறும் தாதுக்களைத் தூவும்; அச் சோலைகளினூடே பச்சைக் கிளிகள் துணையுடன் வீற்றிருக்கும்; அவற்றைக் கண்ணுற்ற நாகணவாய்ப் பறவைகளும் மாடப்புறாக்களும் தம் துணைப் பறவைகளைக் கூவும். மரக்கலஞ்சொல்லும் கடலில் தோன்றிய வெப்பமான நஞ்சினை உண்ட மருதீசரின் அத் திருமருதூர் எங்கள் ஊர்" என இளையபள்ளி உரைக்கின்றாள்.

வளப்பம் மிகுந்த அஞ்சூர் வடகரை நாட்டின் கண்ணே வெள்ளிய கலையையுடைய மதிதான் கறையாகிய கருமையைக் கொண்டுள்ளது. (மக்களின் ஒள்ளிய கலைமதியில் அக் குற்றம் இல்லை). கம்பத்தறி யானைகள் மதநீர் பொருந்தியுள்ளன (யானை போன்ற மக்கள் மதம் கொள்ளவில்லை). விண்ணில் எழும் பறவைகள் சிறகாகிய சிறையிடைப் பட்டுள்ளன (அந்நகர் மக்கள் குற்றமிழைத்துச் சிறைப்படுதல் இல்லை). நெய்யிலுள்ள தீபமே திரி பொருந்தப் பெற்றுள்ளது. (அங்கு வாழும் அறிவுச்சுடர் உடையாரது அறிவு திரிவு படுதல் இல்லை). கல்லுளித் தச்சரால் அடிக்கப்பட்ட அம்மிதான் குறைபட்டுள்ளது. (தொழில் செய்வோரிடம் எத்தகு குறைபாடும் இல்லை) அந்நாகரில் பூங்கொடிகளும் அவற்றால் தழுவப்பட்ட பூங்கொம்புகளுமே குழைகளைப் பெற்றுள்ளன. (பெண் கொடிகளும் அவர்களால் தழுவப்பட்ட கொம்புபோன்ற தலைவர்களும் துன்பத்தால் மனங்குழைந்து மெலிதல் இல்லை) அங்கே செய்யுளாகிய பாடலின்கண் அருமையான பொருள்கள் மறைபட்டிருக்கும். (செய்யுள் எனப்படும் வயலினிடத்து விளைந்த அரிய பொருள்களைப் பிறருக்கு ஈயாமல் மறைத்து வைத்தல் இல்லை)" இவ்வாறு அந்நாட்டு வளம் கூறுகிறாள் மூத்தபள்ளி.

" கறைபட் டுள்ளது வெண்கலத் திங்கள்
கடம்பட் டுள்ளது கம்பத்து வேழம்
சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு
திரிபட் டுள்ளது நெய்படுந் தீபம்
குறைபட் டுள்ளது கம்மியர் அம்மி
குழைபட் டுள்ளது வல்லியங் கொம்பு
நறைபட் டுள்ளது அரும்பொருட் செய்யுள்
வளமை ஆஞ்சூர் வடகரை நாடே " (21)

சீவல மங்கைத் தென்கரை நாடடின்கண் சூரியனின் வெயில்தான் காயக் காணப்படும். (ஞாயிறு போன்ற நடுநிலையாளர் காய்வது — சீற்றங்கொள்வது இல்லை). வெண்ணிறமான தயிர்க்கண்டமாகிய தயிர்த் துண்டுகளே கலங்கக்கூடியன. (நோய்க் கண்டங்களினால் கலங்குபவர் இலர்). வாரமும் நாழிகையான காலமே மாய்ந்தது என்று கூறப்படும். (மனிதர் மாய்ந்தனர் என்பது இல்லை) நீர்ச் சுழி வெள்ளந்தான் சுழன்று ஓடிவரக் கண்டோம் (படைச் சுழி வெள்ளம் திரண்டு வருவதலைக் காணவில்லை). காய்ந்த நெற்குலைச் செந்நெல் கதிர்கள் தாம் சாயக் கண்டோம். (காயப்பட்டு ஈரற்குலை குலைந்து சாய்பவரைக் கண்டிலோம்). அங்கே தவத்தோரது உள்ளமே பற்றஒற்றுந் தனித்திருப்பக் கண்டோம். (இல்லத்தாரின் உள்ளம் பற்றற்றுப் பிரிந்திருப்பக் கண்டோமில்லை). உரைத்திடும் சந்தனந்தான் தேயக் கண்டோம். (தூதுரைத்திடும் அன்னம் போன்ற பெண்கள் தேய்ந்து மெலிவது இல்லை).

“ காயக் கண்டது சூரிய காந்தி
கலங்கக் கண்டது வெண்தயிர்க் கண்டம்
மாயக் கண்டது நாழி கை வாரம்
மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்க்குலைச் செந்நெல்
தனிப்பக் கண்டது தாபதர் உள்ளம்
தேயக் கண்டது உரைத்திடு சந்தனம்
சீவல மங்கைத் தென்கரை நாடே ” (22)

“முக்கூடல் நகரின் கண் ஒளமிகு மாணிக்கம் முதலியன விற்கும் மணிக்கடை வீதி கூட்டமுடன் (மக்கள் கூட்டம், பொருள் கூட்டம்) நெருங்கியிருக்கும்; வண்டினம் இசைபாடி இரும்பையும் உருக்கும்; நால்வகை நிலத்து (குறிஞ்சி, முல்லை, முருதம், நெய்தல்) மக்களினமும் நால்வகை வளத்தையும் நிதியையும் பெருகச் செய்யும்; நீர்த்தடாகத்து வாளைமீன்கள் மொய்த்துத் தண்ணீர் முசுக்கும்போது குடத்தினா நெருக்கும்; நீர்ப்பூக்களை மேய்ந்த இளமையான எவுமை மாடுகள் செருக்கடைந்திருக்கும்; மேட்டு நிலங்கள் எல்லாவற்றினும் குளிர்ந்த மலர்கள் இதழ் விரித்துக் காட்சியளிக்கும். ஆதி நாதரும் அனாதி ஒருத்தருமாகிய அழகர் வாழ்கின்ற அத் திருமுக்கூடல் ஊர்தான் எங்கள் ஊர்” என்று மூத்தபள்ளி இயம்புகின்றாள்.

“திருமருதூரின்கண், கரையினைத் தத்துவதும் பாய்வதுமாகிய நீரானது முத்துக்களால் அடைக்கப்படும்; பாகு காய்ச்சும் சாலைகளில் கருப்பங்கழிகளைக் கரும்பாலை உடைத்துச் சாறு பிழியும்; முழங்குகின்ற பேரிகை முழக்கப்பட்டுக் கடலின் ஆரவாரத்தைத் துடைத்துவிடும்; நாள்தோறும் திருவிழா நடத்தும் சிறப்பு வளரும்; பல்வேறு மணிவகை முதலிய செல்வங்கள் தன் ஊரிலே வேண்டிய அளவு கிடைக்கும். எளிய ஊமத்தம் பூவையும் அணிந்து கொண்டு களிப்பும் மயக்கமும் உடைய மருதீசருடைய அத்திருமருதூர்தான் எங்கள் ஊர்” என்று இளையபள்ளி இயம்புகின்றாள்.

ஆசூர் வடகரை நாட்டின்கண், மேல்நோக்கி வளரும் தென்னையின் இளநீர்க் குலைகளை அடுத்து வளர்ந்து நெருங்கிய கமுகுகள் சுமந்து தாங்கிக்கொண்டு தம் காய்களை மாமரக் கிளைகள் அணுகி நின்று சுமக்கக் கொடுக்கும்; அம் மாமரத்துக் கனிகள் பலாமரத்தின் காம்புகளில் தங்கித் தொங்கும்; அப் பலாமரக் கனிகளை அருகிலுள்ள வாழையானது வளையுமாறு சமந்து தன் ஒள்ளிய குலையைச் சாய்க்கும்; அதற்கடுத்து நிற்கும் மாதுளையின் கொம்புகள் அவ் வாழையைத் தாங்கும் இத்தகைய வளமிகு ஆசூர் வடகரை நாடு “எங்கள் நாடு” என்று மூத்தபள்ளி கூறுகறாள்.

“நீர்த்தடாகத்துத் தாமரை, தன்தலையை நீட்டி வரப்பினில் வளர்ந்த இஞ்சியின் பச்சை இலையான பருத்த சடையைத் தீண்டும்; இஞ்சியின் அருகிலுள்ள மஞ்சளின் கழுத்தைத்தன் இலையாகிய கையால் மெதுவாகத் தொடும்; மஞ்சளும் தன்னருகே அசைந்துகொண்டு இருக்கும்; காய்ந்த செந்நெற் கதிர்களுடன் அளவளாவி நிற்கும்; செந்நெற் கதிர்கள் அருகில் வளர்ந்த செங்கரும்புக்குக் கைகொடுப்பதுபோல் வளர்கின்ற வளம் பொருந்திய நாடு சீவலமங்கைத் தென்கரை நாடு” என்கிறாள் இளையபள்ளி.

" பங்க யந்தலை நீட்டிக் குரம்பினிற்
பச்சை இஞ்சியின் பார்சடை தீண்டும்
தங்கும் இஞ்சியும் மஞ்சட் கழுத்தைத்
தடவி மெள்ளத் தொடும் அந்த மஞ்சள்
அங்க சைத்திடும் காய்க்கதிர்ச் செந்நெல்
அளாவி நிற்குமச் செந்நெலு மப்பால்
செங்க ரும்புக்குக் கைதரும் போல்வளர்
சீவல மங்கைத் தென்கரை நாடே " (26)

பெண்டிர் குயிலைக் கூவுமாறு வேண்டல் (27–30)

நறுமணமிக்க அழகு செய்த கூந்தலையுடைய பெண்கள் பூங்குயிலை நோக்கி இன்னின்னவாறு கூவுமாறு வேண்டி அக் குயிலின் இசையால் பாடுவதற்கு முற்பட்டார்.

"மேகமானது செந்தாமரையைப் பூத்தாற்போன்ற திருமேனியும் முகம் கை கால்களும் ஒளிர்பவரும், கண்ணாக இலங்குபவருமான திருமுக்கூடல் அழகரின் திருக்கோயிலின்கண் அமுதுபடி வழங்குதல் 'அறக்கட்டளைகள் உயரும்படி கூவுவாயாக குயிலே! பெருமையாகிய பலர் பூத்த திருமுக்கூடல் நகரின்கண் சிறந்த இராமானுசப் பீடம் நன்கு விளங்கக் கூவுவாயாக குயிலே! உலகெங்கும் பரந்த புகழுடைய வைணவர்களும், அறம் காக்கும் தானிகரும் பரிசனமாகிய அடியார் கூட்டங்களும் வாழும்படி கூவுவாயாக குயிலே! புகழாகிய வெள்ளருவி வருதற்கிடமாகிய திருமலைக் கொழுந்து முகிலின் செங்கோன்மை ஓங்கும்படி கூவுவாயாக குயிலே!

"சீவலப் பேரியாகிய திருமுக்கூடல் நகரின்கண் இயல் இசை நாடகம் என்னும் மூவகை முத்தமிழ்க் கல்வியும் செல்வமும் பொருந்தக் கூவுவாயாக குயிலே! அழகரின் மருத நில மக்கள் வளமுடன் வாழ மருதூரை வாழ்த்திக் கூவுவாயாக! தமிழ்ப் பாவலர்க்கு உதவும் காலை அம்பலவாணனின் பல கிளைகளுந் தழைக்கக் கூவுவாயாக! காவலராகிய பாண்டவர்க்கு உயர் பெருமை அடையச் செய்த தோப்பாலழகர் கட்டளைகள் தழைக்கக் கூவுவாயாக குயிலே!

" சீவலப் பேரிதமிழ் மூவகைக் கல்வியும்
செல்வமும் பெருகவே கூவாய் குயிலே
மாவளத் துடன் அழகர் தாவளக் குடிவாழ
மருதூரை வாழ்த்தியே கூவாய் குயிலே
பாவலர்க் குபகாரி காவையம் பலவாணன்
பலகிளையுந் தழைக்கவே கூவாய் குயிலே
காவலர்க்குயர் பெருமை மேவுதேர்ப் பாலழகர்
கட்டளைகள் தழைக்கவே கூவாய் குயிலே " (29)

அழகிய பொருநையாற்றின் இருகரைப் பக்கமுள்ள நிலப்பரப்பு முழுவதும் இரு பூவும் பஞ்சாலி நெல் விளையும்படி கூவுவாயாக குயிலே! திருமாலின் திருவருள் பெறும் தருமச் செல்வமாகியவரும், சாத்தூரில் தோன்றியவருமாகிய பெரிய நம்பி ஐயங்கார்

வாழக் கூவுவாயாக! பெருவளம் தரும் நாட்டில் திங்கள் மும்மாரியும் பெய்யவேண்டிக் கூவுவாயாக! கரிய புயல்போன்ற நெடுமாலாகிய அழகர் வீற்றிருக்கும் திருக்கோயிலின் திருமுன்பு ஊழிக் காலத்திலும் விளங்கும்படி கூவுவாயாக!

முக்கூடற் பள்ளர்கள் தெய்வநிலை போற்றுதல் (31–33)

"காரி பிரான் புதல்வராகிய நம்மாழ்வார் அருளிய கல்வியில் சிறந்த தமிழ் வேதமாகிய திருவாய் மொழியினைப் பரப்பிய திருமுக்கூடலில் பள்ளரெல்லாம் சேரி முழுவதும் குலவை ஒலி ஒலிக்க மழையின் பொருட்டு வரம்பெறுதல் குறித்துத் தெய்வநிலை போற்றினர்.

"உலகெங்கும் மாதம் மும்மாரி பெய்யும்படி தெய்வத்தை போற்றின் அது உதவிடும்; ஆதலால் பூலா உடையாருக்குப் பொங்கலுமிட்டுத் தேங்காயும் கரும்பும் நிரம்பப் படையுங்கள்; குங்குமமும் சந்தனமும், கலந்து விரைவாக உடையாராகிய ஐயனார்க்குச் சாத்தங்கள். ஏழு செங்கடாய்களுக்கும் மாலையிட்டுக் காப்புக் கட்டிக் கரையடிச் சாத்தாவின் திருமுன்பே விரைவாக வெட்டுங்கள்.

"சிவப்பாக உச்சியின் பூப்பூத்த தலையையுடைய சேவலை சாத்திர முறைப்படி புலியுடையார் கொள்ளும்படி பலியிடுங்கள்; வாய்ப்பான சாராயமும் பனங்கள்ளும் வடக்கு வாசற் செல்லி உண்ணும்படி குடித்துடன் படையுங்கள்; பள்ளர் எல்லோரும் வாருங்கள், வழிபாடு செய்யுங்கள்; மழை பெய்யும் பொருட்டு அழகர் பெயரை வாழ்த்தி வாழ்த்திப் பாடுங்கள்; பண்ணுக்கிசையக் கூத்தாடித் தொழுது தொழுது வேண்டுங்கள்".

மழைக்குறி தோன்றலும் பள்ளர் மகிழ்வுறலும் (34–36)

"உயிர்களுக்கு முத்தி கொடுக்கும் பொருட்டுத் தோன்றிய திருமுக்கூடலில் உள்ள திருமகள் தலைவனாம் திருமாலின் திருவடிமேல் வைத்த பற்று மறவாப் பண்ணையைச் சார்ந்த பள்ளரெல்லாம் அறிவுடன் தெய்வநிலை போற்றிய பின்பு வானத்து மேகம் எல்லாத் திசையும் மழையைப் பொழிய இனிய அறிகுறி உண்டாயிற்று.

"நாளை ஆற்றில் வெள்ளம் வரற்குரிய அறிகுறி காணப்படுகிறது. தென்மேற்குத் திசை மின்னலாம் மலையாள மின்னலும், இலங்கைப் புறத்துத் தென்கிழக்குத் திசை மின்னலாகிய ஈழ மின்னலும் சூழ வளைந்து மின்னுகின்றன. நேற்றும் இன்றும் பூங்கொம்புகளை வட்டமாகச் சுழற்றிச் சுழற்றிக் காற்று அடிக்கின்றது; கேணி நீரில் உண்டாகிய சொறித்தவளை கூப்பிடுகின்றது; சேற்று நண்டு தன் குழிக்குள் மழைநீர் தாக்காவண்ணம் சேற்றினால் வளையை அடைக்கின்றது. நீர்த்துளியை உண்ணும் ஒருகோடி வானம்பாடிப் பறவைகள் மழையைத் தேடிப் பாடி ஆடுகின்றன; அடியாரால் போற்றப்படும் திருமால் அழகர்க்குற்ற சிறந்த பண்ணையைச் சேர்ந்த சேரிப் பள்ளரெல்லாம் ஆடிப்பாடித் துள்ளுவோம்".

" ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்று தேகுறி — மலை
யாள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே

நேற்று மின்றும் கொம்புசுற்றிக்
காற்ற டிக்குதே — கேணி
நீர்ப்படு சொறித்த வளை
கூப்பிடு குதே
சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்றடைக்கு தே — மழை
தேடியொரு கோடி வானம்
பாடி யாடுதே
போற்று திரு மாலழகர்க்
கேற்ற மாம்பண்ணைச் சேரிப்
புள்ளி பள்ளர் ஆடிப்பாடித்
துள்ளிக் கொள்வோமே" (35)

"பொருநையாற்றின் இக்கரைக் கால்வாயினின்று அக்கரைக் கால்வாயிடத்தில் மழைக்குப் பாதுகாப்புக்கென்றும் நீடு இரவு என்றும் நாமல்லவா போவோம்! அதனால் வரும் மழை வெள்ளம் தோணியை அடித்துக் கொண்டு போய்விடாதபடி தகுந்த தோணியைத் துறையில் மேட்டுநிலத்தில் உள்ள முளையுடன் சிக்கென இறுக்கிக் கட்டுங்கள்; காற்று மோதும் போது ஒதுக்காக உதவும் படலையும் காற்றில்லாதபோது பிடிக்க உதவும் தாழைக் குடையும், குளிரினின்று காக்க உதவும் கொங்காணியும் நேரத்திற்கேற்ப வேண்டப்படும்; மதகுப் பலகையாகிய சீப்பின் இடைவெளியாகிய சுழுக்கு வாய்களில் கூர்மையாகச் செதுக்கிய ஊசிக் காம்புகளை இட்டு நீர் பாயாதபடி அடையுங்கள்; சீலைத் துணியால் கட்டிய பந்தமும் விளக்கெண்ணையும் முதலில் தேடிவையுங்கள்; திருமுக்கூடலில் அழகரின் பண்ணையைச் சேர்ந்த சேரியிலுள்ள பள்ளர்களெல்லாம் குரவையிட்டு இந்த மழைவாரத்தை ஆடிக்கொண்டாடுங்கள்".

மழை பொழிதல் (37–38)

"கருப்பானது முதிர்ந்தால் பிள்ளைப்பேறு தோன்றாமலா போய்விடும்? செந்தாமரைக் கண்ணுடைய திருமாலின் ஆசூர் நன்னாட்டில் மழை பெய்வது அவ்வண்ணமன்றோ? உலகத்தின் வேலியாக அமைந்த கடலில் மேய்ந்து கருக்கொண்டு மேகம் காலூன்றி அந்தக் கார்கால முறையைக் காட்டியது.

"கற்பகக் காவிற்குத் தலைவனாம் இந்திரனின் ஏவல் கட்டளையை மேற்கொண் டெழுந்த மேகம், கடலில் படிந்து அழகிய வானவில்லை வானத்தில் வளைத்திட்டுக் காட்டித் திருமுக்கூடல் நகர்த் திருமாலாகி, தாமரை மேல் உயர வீற்றிருக்கும் மின்போன்ற கலைமகளுடன் பொருந்திய பிரம தேவனுமாகி, மின்னலாகிய கனலையும் நீராகிய புனலையும் தாங்கி மலையிலேறிய சிவனுமாகி, தாவிப் பறந்து சென்று பணிகளாகிய பாம்பு பதுங்கி நடுங்குமாறு சினந்து இடி முழக்கம் செய்து எழுந்து இவ்விரண்டு செயலும் உள்ள கருடனுமாகி, உலகிற்கு உரிமையான ஊனும் உயிரும் தானேயாகி மன்னர்களில் பெரிய வடமலையப்பப் பிள்ளையனின் யானையைப் போல் நிறம் கருத்து மழை பொழிந்தபின் வானம் குலிரும் இயல்புடையதாகி, அந்த வடமலையப்பரின் கழுத்து முத்தாரத்தின் நிறம் போன்று வெளிறும் இயல்புடையதுமாயிற்று".

ஆற்றின் வரவு (39)

"பாய்கின்ற கருடனை ஊர்தியாகவுடைய அழகரின் திருமுக்கூடலின் கண் கலவைக் குழம்பு பூசப்பட்ட மார்பாகிய மலைகளே, நீங்கள் காய்கின்ற மலைகள் ஆயினமைக்குக் காரணம் யாது? சாய்கின்ற மேகங்கள் பொழியும் அமுதமான நீர்த்தாரைகள் குளிரக் குளிர அதில் தோயும் தலைவர் கலைக் கடலில் தோய்ந்து ஈரம் தோயாதவராயினரே".

ஆற்று வெள்ளம் நிலங்களில் பாயுந் தன்மை (40–49)

"வெள்ளமானது இந்திரனாகிய வள்ளலை ஒத்தும், (இந்திரன்) மலையின் சிறகரிந்து அதன்கண் உள்ள வளங்களைக் கவர்ந்ததுபோல் மலையரசனிடம் தானும் கவர்தலை ஒத்தும், கவர்ந்தவற்றை நானிலத்து மக்களுக்கு வழங்க (ஆறாகப்) புறப்பட்டும், (கொடைமுரசுபோல்) முழங்கும் முறையில் சிறப்புற்றும், மதயானைகள் வெள்ளத்தில் படிந்து மூழ்கவும், கொலைத் தொழில் புரியும் ஆண்பன்றிகள் வெள்ளத்தில் படிந்து மூழ்கிச் சாகவும், இலைகளுடன் கூடிய சந்தன மரங்களை மோதித் தள்ளிக்கொண்டும், பசிய மூங்கில் முத்துக்களைச் சிதறிக்கொண்டும், காட்டு மல்லிகை அலையுமாறும், தேனைப் பருகும் குளவிகள் கலையுமாறும், காட்டுச் சாதிமரவேர்களை ஊடறுத்துக் கொண்டு சென்றும், மேட்டுநிலக் குறவர் தம் ஊர்களில் மோதியும், குதிரைச் சேனையுடைய திருமாலழகரின் மருமகனாகிய திருமுருகக் கடவுளை வணங்கியும், அழகிய பூந்தினையைக் காட்டில் உதிர்த்தும் பாலைவனத்தை எதிர்த்தும் சென்று மோதியது.

"இரவுக்குறியில் வந்து நீங்குந் தலைவனை அவ்வாறு வராமல் விலக்கப் பாங்கி ஆற்றின் அருமையை இவ்வாறு கூறுகிறாள்; பால்வெள்ளம் நிரம்பிய பாற்கடலில் ஆறுதலாகத் துயில் செய்யும் அழகரின் திருமுக்கூடலின்கண் எம் ஊருக்கு வரும் வழியோ வேல மரங்களும் வெள்ளமும் உடைய வழிகாலமோ மின்னல் நிறைக்கும் காலம் கால்வாய் ஆறு ஆகிய வெள்ளத்தினிடத்தில் கரைகளைக் கண்டும் காதல் வெள்ளத்து ஆற்றின் கரை காணாமல் இரவு வருவதை நீங்குவாய்.

"ஆற்றுவெள்ளம் பாலை நிலத்தே வெண்கடம்ப மரத்தினையும் மூங்கிலின் தொகுதிகளையும், பாலை, குரா, இலுப்பை, ஈஞ்சு, கள்ளி ஆகிய இவற்றையும் கரையாகிய மலையுடன் அறுத்துத் தள்ளிக்கொண்டு போனது முதிர்ந்த கழுகு சிறகு நனைந்து குளிர் தாங்காமல் நடுங்கித் துணை தேடிக் கூவவும், கழுகு மரத்திலிருந்து நனைந்து நடுங்கி விழுந்த தன் குஞ்சுகளின் மேல் சிறகிட்டு அணைத்துக் காக்கவும், முள்ளம் பன்றிக் கூட்டம் மேட்டு நிலத்திற் பரவவும், ஒளியுள்ள வேல் பிடித்த வேட்டுவர் கூட்டம் பெயர்ந்தனர், வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்படும் வழி பிதுங்கும் காளை மாட்டுடன் குடல் நடுங்கக் கூவியழைக்கும் காளைப் பருவத்தினன் கூக்குரலுடன் வலிய மறத்தியர் மேட்டு நிலம் அடைந்தனர். செங்கதிரும் யமனும்போல் பரந்து குருதியைக் கக்கும் முத்தலை வேலையுடைய கன்னியாகிய கொற்றவையின் கொங்கையிற் சுரந்து விசைத்துத் தெறிக்கும் பால்போல் முல்லை நிலத்தே சென்று பரவியது.

"கார்ப்பருவத்தே வருவதாகக் கூறிப் பிரிந்த தலைவன் வராமையினால் தலைவி அக்காலத்தை ஐயுற்றுத் தோழியரிடம் இவ்வாறு வினாவுகிறாள்; நமது பாலை நிலத்தில் நல்ல நீர்மையுடைய மருத நிலம் போல் நால்வகை வளனும் உண்டாகி விட்டதே; காரணம்

கடலை வற்றச் செய்த தீக்கணையுடையாராகிய அழகரின் திருமுக்கூடல் மாநகருக்கு உரிய பெரிய மலையினின்று பளீரென வெள்ளம் வந்தமையோ? அதன் இயல்பினை ஆய்ந்து இது கார்காலம் அன்று என ஆறுதல் கூறிரோ தோழியரே.

"ஆற்றுவெள்ளம் முல்லை நிலத்தைச் சார்ந்தது. வளமுள்ள தோட்டக் கால்களிற் புகுந்து அங்குள்ள கொன்றையை முட்டிச் சாய்த்துத் தோன்றி மல்லிகை ஆகியவற்றை அலைத்து அவற்றின் தேனைக் கொட்டிக் கொடிய அலைகளுடன் கொந்தளித்தது. வீட்டை மோதி அங்குள்ள எண்ணெயையும் அயல் எல்லையில் மோதி வெண்ணெயையும் கவர்ந்துகொண்டு, எள் அவரை துவரையுடன் தங்கியிருந்தோரையும் துன்புறுத்திக் குண்டுக் கற்களின் கீழுள்ள மண்ணைப் பறித்துச் சாய்த்தது. காயா மரத்து உச்சியைத் தொட முயன்று அதன் மலர்களை உதிர்த்துத் தள்ளி, துளசிக் காடெல்லாம் நீர் பெருகித் தேங்கச் செய்து திருமாலுக்குரிய பாற்கடலாக்கியது. மதயானையைப் போன்று வரம்பழித்துச் சென்று மருத நிலத்து மீன்கள் துள்ளும் தடாகத்தில் பாய்ந்தது.

" முல்லைக் கோடி யடுக்கையின் — மலி
கொல்லைக் கோடி கடுக்கையின்
முட்டித் தோன்றி மவ்வலை — மது
கொட்டித் தோன்றி வெவ்வலை
இல்லைச் சாடி எண்ணெயும் — அயல்
எல்லைச் சாடி வெண்ணெயும்
எள்ளும் அவரை துவரையும் — உறை
கொள்ளும் அவரை எவரையும்
தொல்லைப் பாடு பண்ணியும்...
துள்ளுங் கயத்தில் பாய்ந்ததே " (44)

கார்ப்பருவம் வந்தும் தலைவர் வராதிருக்கப் பொறாத தலைவிக்கு இரவின் தேற்றுவார் எவர் எனத் தோழி வருந்து அவ்வாறு கூறுகிறாள். மலையைக் குடையாகக் கவித்த கண்ணனின் திருமுக்கூடலின்கண். இன்றிரவு அவளை எவர் தேற்றுபவர்? கன்றுகளைக் கழுத்துடன் அணைத்து அக்கன்றுகளையுடைய தாய்ப் பசுவைக் கூப்பிடும் ஆயர்கள் அவை வருமாறு ஊதும் கொன்றைப் பழங்குழலின் ஓசை இவள் செவிக்கு ஆகாதே!

"வெள்ளமானது பாய்கின்ற மருதநிலம், செழிக்க, வானத்தைத் தோய்ந்த கிளைகளையுடைய மருத மரங்கள் தளிர்க்க, மாடுபூட்டிய கமலை நீர் பாயும் வட்டங்களிலும் தாமரை பூக்கும் நீர்க் குட்டங்களிலும் போய்ப் பாய்ந்தது. எருமை பதற, கிடையாக வைக்கப்பட ஆட்டுக் கூட்டமும் சிதறப் புழுதிச் சால்வழி நனைத்தும், சாலை அனைத்தும் குளிர்கோக்கச் செய்தும் அவ்வெள்ளம் ஓடியது. உரலும் கரும்பும் சாயவும், அதல் பாயும் வண்டினம் முரலவும் முதலைகளை முடுகுகியும் வாழை மூடுகளை வேரொடு பறித்துத் தள்ளியும் வெள்ளம் மோதியது. இந்திரனது வெள்ளை யானையைக் காய்ந்து கீழ்நோக்கி இழுத்தும் வெண்சங்குகள் எதிர்த்தோட முயன்று ஆயவும், மருத நிலக் குடிசைகளை மோதியும் நெய்தல் நிலத்து நர்வாழ் பறவை ஒலி மலிந்த குடிசைகளிற் புகுந்தது.

" பாயும் மருதஞ் செழிக்கவே — பணை
தோயும் மருதந் தளிர்க்கவே
பகட்டுக் கமலை வட்டத்தில் — புனல்
தகட்டுக் கமலக் குட்டத்தில்
போயும் எருமை பதறவே — உர
மீயும் எருமை சிதறவே
..... " (46)

தலைவனைப் பிரிந்த தலைவி அன்றில் பறவைகளை நோக்கி இவ்வாறு கூறுகிறாள். "முற்றத்தில் குடம்போன்ற பருத்த சங்கின் கூட்டம் ஊர்கின்ற திருமுக்கூடல் ஊரராகிய தலைவர் செய்த நன்றிக்கு இணையில்லை. (என்னைத் தரமாக அவர் ஆக்கி விட்டதால்) நான் நெடுமால் ஆகிவிட்டேனே அவருக்கு வென்றியுள்ள திருப்பெயர் நெடுமால் என்பதன்றி வேறொன்றோ? பொருநைநதி அன்றிற் பறவைகளே அவர்க்கு இது சொல்வீரோ".

"ஆற்று வெள்ளம் தான் புகுந்த நெய்தல் நிலத்தைக் கலக்கியும் மிகுந்த நெய்தற் பூக்களைக் கசக்கியும் பக்க மணல் மேடுகளைச் சரித்தும் விரைய, அம் மேட்டு நடுவிலிருந்த பறவைக்கூட்டம் விலகி ஓடியது. தான் வகுத்துகொண்டு நுழையும் அப் பட்டினத்தைத் திரையால் முகந்து அதற்கு மேலும் அவ்வலையால் தாக்கி இனி அப்பட்டினத்தைப் புதுப்பிக்க இயலாதபடி செய்தது. நீரில் நிலைக்கும் இடம் கிடைத்திடாமையினால் வெள்ளத்தை அங்குள்ளோர் இகழ்ந்தனர். மழையினால் மலர் உதிர்ந்த சோலைகளை அழித்தும், கடல்நீரை வகிர்ந்து அங்கிருந்து படையாக எதிர்த்து வரும் அலைகளைத் தாக்கியும், உப்பளத்தாரை ஓடச் செய்தும், கடற்பாங்கான அளத்திலுள்ளோரை மேடுகளில் கூடச் செய்தும் விரைந்து கடலிறைவனாம் வருணனுக்கு மகிழ்ந்து இடும் பொருள்கள் போன்று நானிலத்துப் பொருளையும் கொணர்ந்து கடன் முறைப்படி செய்யவும், அவ்விறைவன் சுறாவின் மேல் காட்சி கொடுக்க வந்த அடையாளம் போல் சுறாமீன்கள் வந்து காட்சியளிக்கக் கடலினுள் நெடிதாகப் பாய்ந்து ஊர்ந்தது அவ் வெள்ளம்".

தலைவனைப் பிரிந்த தலைவி தலைவன் காலம் நீட்டிக்க இவ்வாறு புலம்பி இரங்குகிறாள்; "கருடனை ஊர்தியாகக் கொண்ட கடவுளாம் திருமாலின் திருமுக்கூடலிலிருந்து பொருள்தேட என்னைப் பிரிந்த என் காதலர் வந்து சேர்ந்திலரே! மரக்கலங்களே, என் அங்கமெல்லாம் அனலிலிட்ட ஈயம் போல் ஆனேன். சங்குகளே, நலனழிந்து தோள் மெலிந்தமையால் சரியும் சங்கு வளையல்களையும் தாங்க முடியாதவளாயினேனே".

பொருநையாறு பாய்ந்து சிற்றாறாகப் பெருகுதல் (50–51)

"கடலினை எதிர்த்து உதைத்து விசையுடன் வயிற்றைக் கிழித்து அதிரும் வெள்ளம் கடலுக்கு அப்பால் உள்ள கதிரவன் தோன்றும். உதயவரைக்கும் இப்பால் ஆற்றிற்குப் பிறப்பிடமாகிய பொதிய மலைக்கும் ஒத்துப்போகுமாறு முற்றும் போனது. வெள்ளத்தில் மோதல் பொறாமல் பதைத்து நெளியும் துதிக்கை, மூக்கன் பண்ணை, சாளை, எண்ணெய், பாலி, திருக்கை, காலி, கெளுத்தி, பண்ணாங்கு, பழம்பாசி, மீன்கள், உயிரை வதைக்கும்

மகர மீன், குதிக்கும் சள்ளை, மத்தி, உல்லம், பொத்தி, மடந்தை, கடந்தை, செம்பொன்னொறுக்கி, மலங்கு, பஞ்சலைக் கெண்டை கருங்கண்ணி ஆகிய இவற்றை அலைக் கைகளால் வாரி மேட்டு நிலத்து மணலிற் புதைத்தும் ஒதுக்கியும் கடலை ஒத்த நம் அழகரின் கருணை வெள்ளம் போல் பொருநை வெள்ளம் பெருகி வரும் புதுமையைப் பாரும் பள்ளீரே!".

" .....
..... கடலைப்
பொருநம் அழகர் கருணைபோல் பொருநை யாறு பெருகி வாரப்
புதுமை பாரும் பள்ளீரே"

"குற்றாலத்தைத் தன்பால் கொண்ட பெரிய திரிகூடமலையின்மேல் மேகங்கள் கூடிப் பொழிந்த நீர் ஒன்று சேர்ந்து பொருநையைத் தேடி திருமுக்கூடற் பதியை வலங்கொண்டு வரவம் மடுக்களிலுள்ள பரளை, குரவை, வாளை, கோளை, தேளி, மயிந்தி, உழுவை, அயிந்தி, கூனல், மணலி, ஆரால, ஓரா, அயிரை, கெண்டை கெளிறு, பருத்த வரால் ஆகியன அணையிலும் அதிலிருந்து கால்வாயிலும், அதிலிருந்து குளத்திலும், அதிலிருந்து வயலிலும் பாயவும், சிற்றாறு என்ற பெயரைப் பெறினும் இணையற்ற குறுமுனியாம் அகத்தியருடைய மனப்பெருமை போல் சித்திராநதி பெருகிவரும் அழகைப் பாரும் பள்ளீரே!" என ஒருவருக்கொருவர் சுட்டினர்.

" .....
..... அணையிலே
பாயக் காலிற் பாயக் குளத்தில்
பாய வயலிற் பாயவே
சிற்றா றென்பது பெற்றாலும் ஒரு
சிறிய வாமனப் பெருமைபோல்
சித்ராநதி பெருகி வார
சித்திரம் பாரும் பள்ளீரே" (51)

பண்ணைக்காரன் வரவு செய்யுள் (52–54)

ஆற்றிலே வெள்ளம் பெருகிக் கரைகடந்து, அதற்கப்பாலும் பெருகியது; அதனால் அக்கரையில் உள்ளார் இக்கரைக்கோ, இக்கரையில் உள்ளார். அக்கரைக்கோ செல்ல முடியாததாயிற்று. இப்போது, பெருகிய அவ்வெள்ளம் தரை காணும்படி வற்றிவிட்டது. அப்படித் தரை தெரிந்தபின், எம்பெருமானாகிய அழகரின் திருமுக்கூடலில் உள்ள, சிறப்புத் தரும் அழகரின் பண்ணையை விசாரிக்கும் பண்ணைக்காரன் வந்தான்.

இப்பண்ணைக்காரன் தோற்றம் எத்தகையது? இதோ கவிஞர் கூற்று.

" மாறுகண்ணும், பருத்திப்பைக் கூறுவயிறும் — கீரை
மத்துப்போல் தலையும், சுரைவித்துப்போல் பல்லும்
நீறுபோல் வெளுத்தவுளை யூறு நாசியும் — தட்டி
நெரித்தமாங் கொட்டை போல்ஈ அரித்தவாயும்,
தாறுமாறாய் மீசையில் அஞ் சாறுமயிரும் — தூங்கற்
சண்ணைக் கடாபோல் நடையும், மொண்ணைமுகமும்
வேறுகீறி ஒட்டவைத்த ஏறு காதுமாய் — நேமி
வீரனார்முக் கூடற்பண்ணைக் காரனார் வந்தார்! " (53)

கோணற்பார்வையுள்ள மாறுகண்; பருத்திப்பஞ்சைத் திணித்து வைத்த கோணிப்பை போன்ற வயிறு; கீரை மத்துப் போன்ற வழுக்கைத் தலை; சுரைவிதை போன்ற பல்; நீறுபோல் வெண்மையாயிருக்கும் ஊளை ஊறும்மூக்கு தட்டி நெறித்த, மாங்கொட்டைபோல் வடிவமுள்ள ஈ அரித்த வாய்; தாறுமாறாக அமைந்த ஐந்தாறு மீசை மயிர்; மெலிந்த பிட்டியையுடைய எருமைக்கடா, போன்ற நடை; முடிமுளைக்காததால் மொட்டையாயிருக்கும் மழமழப்பான முகம்; அறுத்து ஒட்டவைத்தாற் போலிருக்கும் ஏறு காதுகள். இத்தகைய தோற்றங் கொண்டவர் பண்ணைக்காரர்? இவர் சக்கரப்படை ஏந்திய திருமாலின் திருமுக்கூடல் அழகரின் பண்ணைக்காரர் ஆவார்.

இப்பாடல் நகைச்சுவை தரும் உவமைகளையும் இளிவரற்சுவை தரும் கூறுபாடுகளையும் கொண்டு விளங்குதல் காணலாம்.

இம்முக்கூடல் பண்ணைக்காரர், மூத்தபள்ளியின் முகத்தைப் பார்த்துத்தான் பேசுவார். அவள் சொல்வன கேட்டுப் பெருமூச்சு விட்டுக்கொண்டு இளைய பள்ளி கூறும் பேச்சைக் கேட்பார். 'சாத்தி' என்பாளின் மகள் 'காத்தி'யைப் பேத்தி என்பார். அவளிடம் குறிப்பாகக் 'களத்திற்கு வா' என்பார் தனக்குரிய தடிக்கம்பை ஊன்றிக் கொண்டு சாய்த்துப் பார்ப்பார்; புகை பிடிக்க விரும்பித் தீ இருக்கும் இடத்திற்குப் போவார்; தன் மனைவியைப் பாதுகாவாத பள்ளனிடம் 'நீ ஒரு பரமார்த்தி' (உலகியலறியாதவன்) என்பார். பின்பு குடிசையில் சலைசாய்த்துக் கொஞ்சம் உறங்குவார்.

மூத்தபள்ளி முறையிடுதல் செய்யுள் (55–57)

எண்ணெய் கலந்த பூந்தயிலத்தை நிறையத் தடவியிருக்கும் கூந்தலையுடைய மூத்த பள்ளி (மூக்கூடற்பள்ளி), தன் கணவனாகிய பள்ளனின் மனக்கள்ளம் எல்லாவற்றையும் பண்ணைக்காரனிடம் சொல்லிவிட்டாள்! இவள் செயல், வெண்ணெய் திருடி உண்டு, குழலிசைத்த கண்ணனின் அரசியற் சூழ்ச்சி போன்றது, இவ்உலகில், புறங்கூறாதபடி ஒரு பெண்ணை அடக்கி வைப்பவர்களும் உண்டோ? எனவே, மூத்த பள்ளி, பண்ணைக்காரரிடம் தன் கணவனைப்பற்றிப் பின்வருமாறு சொன்னாள்.

"இந்த மானம்கெட்ட பள்ளன், ஏய்க்கின்ற ஆட்டத்தைக் கொஞ்சம் கேளுங்கள்! ஒரு முறைக்கு மூன்று முறை சொன்னேன். கேட்டானில்லை. அவன், பாதுகாக்க வேண்டிய கால்வாய் அணையைப் பார்க்கவும் இல்லை. காலம் செய்வது கோலம் செய்யுமா? அந்தந்தக் காலத்தில் அந்தந்த வேலையைச் செய்வது போல் சிறப்பு வேறு

உண்டா? அவனிடத்தில் ஒரு போக்கு நீக்கு இல்லை. மூக்கிற்குமேல் கோபம் வரும். நான் சொல்லும் புத்தியும் கேட்கமாட்டான். 'சத்துரு நீலனா'க இருக்கிறான். 'வாய்ச் சண்டை உண்டாக்கினாள் இவள்' என்று என்னை நீர் வைதாலும் வையும்! ஆனால் இவையெல்லாம் உண்மையே. மேலும் சொல்லுகின்றேன் கேளுங்கள்;

"கட்டின மாட்டை அதன், கயிற்றைத் தொட்டு ஒரு நாளும் அவிழ்த்ததில்லை. அவன் உழுவதற்குத் தார்க்கோலைக் கையினால் கூடத் தொட்டதில்லை. நான் சோறு ஆக்கி வைத்தாலும் கண்ணால் ஏறிட்டுப் பார்க்கவும் மாட்டான்; அதற்கு மாறாகக், காலையிலேயே ஊர் ஊராகச் சுற்றித் திரியும் தொட்டியருடைய காளைமாடுபோலக் கோபத்தோடு என்னைப் பார்ப்பான். அதேநேரத்தில் இளையபள்ளியாகிய மருதூராள், அவனுக்குச் சோறு படைக்கும் போதே கோபித்தாலும் சட்சியைத் தூக்கி அவன் தலையில் அடிக்க ஓங்கினாலும் அவள் மீது கோபங் கொள்ளாமல், பெருமையாகவே கருதுகின்றான். பட்டறைச் சாக்கில் கிடந்த நெல் எல்லாம் பெட்டி பெட்டியாக வாரிக்கொண்டு போய்க் கள்ளுத் தண்ணீருக்குக் கொண்டு கொடுத்துத் தொலைத்து விட்டான்!"

" கட்டின மாட்டைத் தொட்டவிழான் ஒருக்
காலுந்தான் உழக் கோலுங்கை தீண்டான்
தொட்டியயர் காளை மட்டிபோல் வெந்துநான்
சோறிட்டாலுங்கண் — ஏறிட்டும் பாரான்,
வட்டில் வாய்வைக்கில் சட்டிகொண் டோங்கும்
மருதூ ராளை விருதுக்கே வைத்தான்
பெட்டி யால் வாரிப் பட்டடை நெல்லெல்லாம்
பேய்த் தண்ணீருக்குத் தேய்த்தான் கா ணாண்டே! " (57)

இளைய பள்ளி கூறுதல் செய்யுள் (58–60)

பண்ணைக்காரனுக்கும் பள்ளனுக்கும் கருத்து வேறுபாடு உண்டாகி இரண்டுபடின், அந்தப் பகைமையால் விளையும் தீங்கினைப் பொறுத்துக் கொள்பவர் யார்? அதனைத் தேற்றுதல் அரிதல்லவா? சிறுமை வராமல் பெருமைப் பண்பினை விளைவிக்கவல்ல பெண்கள். அழகரின் திருத்தோளிலும் திருமார்பிலும் வீற்றிருக்கும் திருமகளோடு ஒத்த சிறப்பினரல்லவா? ஆகையால், மருதூர்ப் பள்ளி — தன் மாற்றாளாகிய முக்கூடற் பள்ளியின் சொல்லைக் கேட்டுத்தானும் அவ்வாறு சொல்லாமல், பள்ளனுக்குக் குற்றம் வாராமல், பொருத்தமானவற்றைச் சொன்னாள்.

இளையபள்ளி, பண்ணைக்காரரிடம் பின்வருமாறு சொன்னாள் :

நயினாரே! முந்தாநாள் குடிசையிற் படுத்துக்கிடந்த பள்ளனை முக்கூடற்பள்ளி எழுப்பி, விடியற்காலம் 'வேலைக்குப் போ' எந்று சொன்னாள். அவனும் போனான். 'ஆற்றில் வெள்ளமும் அதிகமாக வருகின்றது கடினமாக வேலை எதுவோ தெரியவில்லை. உங்கள் அடிமையாகிய எனக்கோ இரவெல்லாம் தூக்கமில்லை. அவன் நிலைமை அந்த அழகருக்குத்தான் தெரியும்.

"நயினாரே! முப்பழமும் சோறும் உண்ணவேண்டி, அவனிடம் வேலை வாங்கிக் கொண்டீர்! அவனும் போய்விட்டான். போன இடத்தில் அவனுக்கு ஏதாவது கேடு நேர்ந்தால் தங்கட்குத்தான் சேதமாகும். எனக்கென்ன? பெரிய கலுங்கில் வெள்ளம் ரீழ்கின்ற மறுகால் காலுக்கு நிலையாதென்று சொன்னார்கள் என்ன நடந்தது என்று அறியேன். இனி, அழகர் திருவுளச்செயல் என்ன என்பதைக் காணலாம்! நான் என் செய்வேன்?"

பண்ணைக்காரன் சீறுதல் செய்யுள் (61–63)

இளையபள்ளியாகிய மருதூர்ப்பள்ளி இங்ஙனம் கூறியதைக் கேட்டதும் பண்ணைக்காரனுக்குச் சினம் வந்தது. அவளைப் பார்த்து,

"எல்லாத் திக்குகளிலும் பரவிய வஞ்சனைகளையெல்லாம் கல்லாமலேகற்ற, தென்மருதூர்ப்பள்ளியே! கள்ளியே! நீ உன் பள்ளனைக் கொஞ்சமும் அசையாதபடி உன் குடிசைக்குள்ளே வைத்துக் கொண்டு, என்னிடம் பொருத்தமில்லாப் பொய்களைச் சொன்னாய்! உன்னைச் சவுக்கால் அடிப்பேன், இதோபார்!" என்று கண்சிவக்கக் கூறினான்.

" திசைபோன சூதுகற்ற தென்மருதூர்ப் பள்ளி! கள்ளி!
அசையாமற் பள்ளனை யுள்ளாக்கிவைத்துக் கொண்டெனுடன்
இசையாத வார்த்தை சொன்னா யென்றுபண்ணை யானெழுந்து
கசையால் அடிப்பனென்று கண்சிவந்து கூறினனே? " (61)

பண்ணைக்காரன் மேலும் கூறினான் ஏ, மருதூர் அக்கிரமப் பள்ளி நீ, முக்கூடற்பள்ளியைப் போல் துணை நெருங்கிய சொந்தக்காரி இல்லையே! அப்படியிருந்தும் நீ எதற்கு இந்த வக்கணையெல்லாம் பேசுகின்றாய்? ஏ 'மருதூர்ப்பள்ளியே! கசப்புள்ள எட்டிக்காய் போன்றவளே! நீ உன் குடிசைக்குள் பள்ளனை வைத்துக்கொண்டு வீணாக வாயடிக்காதே' உன் வாயைத் தைத்துப் போடுவேன்!"

பள்ளன் – பண்ணைக்காரன் உரையாடல் செய்யுள் (64–74)

இவ்வாறு பண்ணைக்காரன் கடுமையாகப் பேசியதைக் குடிசைக்குள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்த வடிவழகக் குடும்பன், அரை நொடியில் வெளியே வந்துவிட்டான். அவனைக் கள்ளமாய்ப்பார்த்த பண்ணைக்காரன் 'பள்ளா! கள்ளத்தனமாய்த் துள்ளாதே! என்னிடம் பண்ணைச் செய்திகளைச் சொல்!" என்றான்.

உலகத்தில் பத்துத்திருவவதாரங்களை எடுத்து அருள்செய்த பத்துத்திருவடிகளையுடைய திருமால் அழகரின் பண்ணைக்காரன் இப்படிக்கேட்டதும் வித்து வகைகள், மாடு, மேழி ஏர்க்கால் வகைகள் எல்லாவற்றையும் தொகுத்து வரவு—செலவு—இருப்பு ஆகியவற்றைத் தவறாமற் கூறத் தொடங்கினான் பள்ளன்.

நயினாரே என்னுடன் பழகிய நீர் என் திறமையை நன்கு அறிவீர். நான் பயிர்செய்யாமல் ஏமாற்றுகிற கள்ளன் அல்லேன். நான் உழும் உழவுக்கோ என்றால், ஒரு பன்றி உழும் தரையளவான ஒன்றுமட்டுமின்றி அதற்கு மேல் இரண்டாவதாக

நிலம் இல்லை; அழகரின் கட்டளையால் இலங்கையை அழித்து நீண்ட அனுமான் உள்ள காலம்வரைக்கும், கிழமை தோறும் கதிர் முளைக்கும்படி கணக்கிட்டுப் பயிரேற்றினாலும் மனம் சும்மா சோம்பி இருக்க விடுமா?

" பழகி னீர்அறி வீரென் சமர்த்துப்
பயிரி டாக்கள்ளப் பள்ளல்ல வேநான்
உழவு தானொரு பன்றி உழுந்தரை
ஒனறல லாமல இரண்டெனக் கில்லை
அழகர் ஏவலி னாலே இலங்கை
அழித்து மீளுங் குரங்குள்ள மட்டும்
கிழமை தோறும் கதிர்முளைத் தாலும்
கிடக்க வேயொட்டுமோ, பண்ணை யாண்டே! " (67)

குறிப்பு : சமர்த்து - திறமை; ஒருபன்றி - ஒப்பற்ற பன்றி வடிவெடுத்த திருமாலாகிய பன்றி அஃது உலகினையே தன் கொம்பால் ஒரு குத்தில் உழுது தூக்கி வந்தது. ஆகவே நிலவுலக முழுவதும் உழுகின்றேன் என்று தனக்குப் பெருமையாகவும் அதற்குமேல் நிலமுமில்லை இருந்தால் அதனையும் உழுவேன் என்று வீறாகவும் கூறினான் என்பதாம். அனுமன் சாகாவரம் பெற்றவன் ஆதலின் அவனுள்ள காலம் வரையிலும் சோம்பியிருக்கமாட்டேன் என்று கூறினான்.

இங்ஙனம் கூறிய பள்ளன், பின்வருமாறு வித்து வகைகளைக் கூறத் தொடங்கினான்.

"நயினாரே! பலவகை வெள்ளாண்மை பயிரிட்டேன், 'மணல்வாரி' என்ற நெல்லை, முன்பு, நம் பெருமான் கட்டளைக்குச் (திருவிழாச்) செலவு செய்துவிட்டனர், இனிப் 'பூம்பாளை' நெல்லில் செலவானது போக மிஞ்சியிருக்கும் கொஞ்ச நெல்லும் சண்டலங்காரராகிய அழகருடைய தொண்டர் கூட்டத்திற்குத்தான் காணும்! 'திருமங்கையாழ்வான் நெல்' லானது வேல் போன்ற கூரிய நுனை கொண்டது; அதுவும், திருமங்கையாகிய திருமகளின் விழாவிற்குச் செலவிடப்பட்டுவிட்டது மிச்சமில்லையே தேவதாசிகள் நெல் வாங்க வந்துள்ளார்கள். அவர்களுக்கு 'மச்சுமுறித்தான்' என்ற நெல்லைக் கொடுப்பதாக முதலில் சொல்லப்பட்டது. ஆனால் அவர்கள் உரிய பொருளைக் கொண்டுவந்து கேட்பதற்குள் அந்த நெல் இல்லாமையால், 'சொரிகுரும்பை' நெல்லை விற்றார்கள்!"

" பலவெள் ளாண்மையிட்டேன்; மணல் வாரியைப்
பண்டு நம்பெரு மாள்கட் டழித்தார்;
செலவு போனதும் போய்ச்சில பூம்பாளை
சண்ட லங்காரர் தோப்புக்கே காணும்;
கலக வேற்கைத் திருமங்கை யாழ்வானைக்
காணேன்; மச்சு முறித்தானைக் காட்டிச்
சொலவொண் ணாத்தெய்வ தாசிகளுக்கே
சொரி குரும்பை விற்றார்பணிராண்டே! " (68)

பள்ளன், மேலும் கூறுகின்றான் :

"நயினாரே! எங்கும் சிறப்பாகப் போற்றப்படும் பெரு வெள்ளைச் சம்பாமுன்பு இராமருடைய சேனைத் திருவிழாவுக்கு 'அமுதுபடி' யாகச் செலவாகி விட்டது. புகழ் தங்கிய தென் திருப்பேரையிலிருந்து கொண்டு வந்த குலைவாழை நெல் காய்த்தது. ஆனால் நெல்லரிசி கொஞ்சமே காணாது வைக்கோற் போர் அருகிலேயே மறுவில்லிச் சம்பா, நீலச் சம்பா வில்லூன்றிச் சம்பா ஆகிய இவையனைத்தும் செலவாய்விட்டன. பருத்த கடுக்கன் சம்பா நெல் மட்டுந்தான், அங்கும் இங்கும் எல்லாச் செலவுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டிருக்கிறது!"

" எங்கும் போற்றும் பெரு வெள்ளை முன்னம்
இராமர் சேனைக்குண் டாம்படி யாச்சு;
தங்கும்பேரைக் குலைவாழை காய்த்தது
சற்று மோநெல் லரிசிகா ணாது;
பொங்கும் போரில் மறுவில்லி, நீலப்
புயவில் லூன்றிப் புஹஞ் சாய்ந்த துண்டோ?
அங்கு மிங்குங் கொண்டாடுவ தெல்லாம்
அறிவேன் பாரக் கடுக்கன்கா ணாண்டே! " (69)

பள்ளன், மேலும் சொல்லத் தொடங்கினான் :

"நயினாரே! மகராசநயினார் ஈடுசெய்ய முடியாத மற்ற வகைகளுக்கெல்லாம் இன்று கொடுக்க வேண்டியவற்றைக் கொடுத்துக் கணக்கு எழுதி வைத்துள்ளார். மேலும், 'இராசவாணன்' என்ற நெல்லை இரண்டு பங்கு வைத்தார்; முதற் பாதியைத் தமக்குரிய முறையில் சேர்த்துக் கொண்டு பிற்பகுதியை அம்பலவாண நயினார் பேரில் சேர்த்து விட்டார்! இன்னும் மிச்சமிருக்கும் வித்து வகைகளைத் தெரிய வேண்டுமானால், குருகைமாறனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்"

" ஈடி லாவகைக் கின்னம் எழுதி
இராச வாணனைஇரண்டு பங்கிட்டு
நாடி யேகாவை யம்பல வாண
நயினார் பேரிற்பின் பாதியுங் கூட்டித்
தேடி னாலவர் முன்னின்ற பாதியுஞ்
சேர்த்துக் கொள்வர் மள்ளர் தாமே
கூடினாற் கூட்டும் வல்வித்தை யெல்லாங்
குருகை மாறனைக் கேளுங்கா ணாண்டே! " (70)

நெல் வித்து வகைகள் குறித்து இவ்வாறு கூறிய பள்ளன், மாடுகளின் வகைகள் குறித்துப் பண்ணைக்காரனிடம் பின்வருமாறு கூறத்தொடங்கினான்:

"நயினாரே! அழகருடைய பண்ணைக்கு உழவுமாடு எங்கே? என்று கேட்பீர்களா? கூறுவேன் கேளுங்கள். விதிவசமாக 'ஆயிரமல்லி என்ற ஊரிலிருந்து வாங்கிக் கொண்டு வந்த 'ஆயிரமல்லியன்' என்ற காளை, அந்த ஊரிலிருக்கும் மேற்றிசை நோக்கிப்

போய்விட்டது! யார் செய்த சூழ்ச்சியாலே செப்பறை என்ற ஊருக்குப் போய்ச் சேர்ந்த மாட்டைத் தேடிப்போய்க் குறிப்பிட்ட அடையாளத்தைக் கொண்டு ஒத்துப் பார்க்க வேண்டும். ஒப்பில்லாத 'மயிலை'க் காளையும் செட்டியார் மிக்க விருப்பத்தால் வாங்கிக்கொண்டு போய்விட்டான்!"

" அதிசயந் தன்னைக் கேட்கில் முக்கூடல்
அழகர் பண்ணைக் குழவுமா டெங்கே?
விதிவசந் தன்னில் ஆயிர மல்லியன்
மேற்றி சைமுகஞ் சேர்ந்தது காணேன்;
சதியிலேசெப் பறைபுகு மாட்டைச்
சடையடை யாளம் போய்ப்பார்க்க வேணும்!
எதிரில்லாத மயிலையும் செட்டிகொண்
டேகினான் பேட்டை என்றார் காணாண்டே! " (71)

பள்ளன், மேலும் பேசலானான் :

"நயினாரே! 'ஒற்றைக்கொம்பன்' என்ற காளையைத் தாண்டவராயன் என்பவர் (பயிரை மேய்ந்துவிட்டது என்பதால்) உள்ளூர் கோயிலுக்குள் அடைத்து விட்டார். பிற காளைகள் எல்லாம், வடமலையப்ப நயினார் பேரிட்டு நிற்கின்றன. வயலைக் காத்துக்கிடக்கும் 'செம்பருந்துக் காளை', பாரம் இழுக்கமுடியாமல் தளர்ந்து விட்டது. மேலும் அது புற்றைக் காத்துக் கிடக்கும் பாம்பு கடித்துவிட்டதால், அதைப் பொறுக்கமாட்டாது இறக்கும் நிலையில் உள்ளது!"

இங்ஙனம் மாடுகளின் வகைகளைக் கூறிவந்த பள்ளன், ஏர்க்கால் வகைகளைக் கூறத் தொடங்கினான்.

'நயினாரே! திருமுக்கூடலில் எழுந்தருளியிருக்கும் அழகருக்கு இளைய பெண்ணாகிய நீலியைத் தேவியாக மணந்துகொண்டமருதீசர், மாணிக்கவாசகரிடமிருந்த 'கொழு' (ஏர்) நானூறும் வாங்கிக் கொண்டார். 'காரைகட்டு வேளாளர்', வழக்கிட்டு மேழிகள் அனைத்தையும் வாங்கிக் கொண்டார்கள். 'காமன்' என்னும் பெயருள்ள நம்மூர்க்காரன் ஆண் பெண் என்று வந்தவர்க்கெல்லாம் கலப்பைகளைக் கொடுத்துவிட்டான்."

பள்ளன், மேலும் சொல்லலானான் :

" அனக னாறை வருநயி னாத்தை
அழகர் மண்டபத் தூண்சாரம் ஏற்றக்
கனக நீள்வடம் கோடி கொடுத்தேன்!
கார்வரைக்கு முழுவடம் ஒன்றே
எனச் சொல் வேனுகம் எண்ணிக்கை நாலுக்
கிருந்த தொன்றுழத் தன்னுகந் தன்னைத்
தினமும் நான்பகற் காணேன் இராத்திரி
தேடிப் பூரம் மொடுங்குங்கா ணாண்டே! " (74)

"நயினாரே! குற்றமிலா ஆறை அழகப்ப நயினார், நமது திருமுக்கூடல் அழகரின் மண்டபம் கட்டும் போது, தூண்களைச் சாரங்காட்டி ஏற்றுவதற்காக அழகான நீள்வடம் ஒருகோடி கொடுத்தேன்! கார்ப்பயிரிடும் வரை உழுவடம் ஒன்றுதான் உள்ளது. நான் வேறென்ன சொல்வேன்? நுகம் (நோக்கால்) நாலுக்கு ஒன்றுதான் உழுதற்கு இருந்தது. அந்த நுகத்தை நாள்தோறும் பகல்முழுதும் தேடிப்பார்த்தும் காணேன். இரவு நேரத்தில் அதனையடுத்து பூரம் (பூரான்) என்ற சிறுபூச்சி உறங்கிக்கிடக்கும்!"

இடையன் வருகை செய்யுள் (75–83)

'நான் என்ன' செய்வேன் நயினாரே என்று பாசாங்குடன் சொல்லிய பள்ளனின் ஏமாற்றச் சொல்லைக் கேட்டு அந்த அறியாமையுடைய பண்ணைக்காரன், அவனைப் பார்த்துப் "பள்ளா! இனி அரைகுறை கேட்பதும் ஆராய்ந்து பார்ப்பதும் பின்பு பார்த்துத் தீர்த்துக் கொள்ளலாம். ஆதிவயல், நாட்கதிர் அறுக்கும் வயல், வீதி (பெரிய) வயல் கண்ணாற்றுப்பாய்ச்சல் வயல் ஆகிய எல்லாவற்றிற்கும் ஆட்டுக்கிடைவைத்து, மேடும் திருத்த வேண்டும். முதலில் நீ விரைவாகச் சென்று, குற்றமில்லாத அந்தச் சிறந்த இடையனை அழைத்துக் கொண்டுவா!" என்றான்.

இவ்வாறு பண்ணைக்கார நயினார் சொல்லியபடியே, பள்ளனும் மகிழ்ச்சியடைந்து, கரியமேகம் போல் நிறமுடைய, திருந்திய வடிவம் உடைய அழகருடைய பண்ணைகளில் ஆட்டுக்கிடைவைக்க வேண்டுமென்று (இடையனைத்தேடி) ஆயர் வீடுகளை நோக்கி நடக்கலானான்.

அப்படிப்போகிறவன், "நயினாரே சிறப்பான முக்கூடலில் விளங்குகின்ற பண்ணைகளில் ஆட்டு உரம் ஏற்ற மாறாமல் ஆடுகளைக் கொண்டு வருவேன் உம்மை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, நீர் சொன்னபடி ஆடுகளைத் திரட்டிக் கொண்டு, பொழுது தாய்வதற்கு முன்பே, தங்களிடம் வந்து செய்தி கூறிவிட்டு, வயலுக்குப் போவேன்! ஆட்டுக் குட்டிகளையும் ஆட்டுத்தறிகளை அடைத்துக் காக்கும் ஓலைக்குடில் களையும், ஆட்டுமந்தைகளையும் கொண்டு, இன்று பகலில் திரும்பி வருவேன்! நம் அழகருடைய திருவுள்ளம் போல், பண்ணை நயினாராகிய உமக்கு, நல்ல மனம்வர உழவு வயல் முழுதும் உரம் வைப்பேன்! என்று சொல்லிச் சென்றான்.

கண்டவர்கள் அஞ்சும்படியாகத் தன்கையிலுள்ள தடியைச் சுழற்றிக் கொண்டு, சிலம்பம் அடிப்பதுபோல் அங்குமிங்கும் வீசி ஆடிக்கொண்டும் சென்ற பள்ளன், இடையனைக் கண்டு அழைத்தான். என்றும் குறையாத சங்கத் தமிழ் அழகர் வாழ் திருமுக்கூடலில் எல்லாரும் கொண்டாடும் கோனேரிக்கோன் என்ற இடையனும், பள்ளன் சொற்படியே வந்து சேர்ந்தான்.

கோனேரிக் கோனின் தோற்றம் இவ்வாறு இருந்தது:

உடம்பிலே, பால், தயிர் இவற்றால் தோய்ந்த மணம் வீசிக்கொண்டிருக்கும்; நெற்றி உட்ம்பு எனப் பதினெட்டு இடங்களில் 'பட்டைநாமம் இட்டிருக்கிறான்; நூல்களில் சொல்லப்பட்ட அழகிய் வெள்ளைக் குதிரையின் வால் முடி போன்ற நரைத்த முடியுடையவன்; வாய் என்ற குளத்தில் 'அலை' போல் தோன்றும் நுரை; ஆடு மேய்க்கும் கோலினை ஒரு கையிலும் பால் கறக்கும் கடைகாலை ஒரு கையிலுமாக

வைத்திருப்பவர்க்கு இத்தகையான், திருமுக்கூடல் வடிவழகர் வயலில், புழுதி உழவு உழுத இடத்தில், ஆட்டெருவைப்பதற்காக ஆட்டுக்கிடை கொண்டு வந்தான்.

இடையன் பள்ளனைப் பின் வருமாறு பேசலானார்;

"குடும்பா! பூதக்கோனாருடைய பொது ஆட்டை அவர்தம் தாயத்தாருக்குள்ளே நடந்துவரும் சண்டையினாலே (அதனை யாரும் பாதுகாக்காமையால் பாம்பும் புலியுமே பாதுகாக்கும்.) (எனவே அது உங்கட்கு உதவாது!) அதற்குக் காரணம் என்ன? இது கலிகாலமல்லவா? இனி வேதக் கோனார், கிடைத் தொழிலைக் கையாண்டது ஏன் தெரியுமா? அவர் இனத்தான், வீதிதோறும் கிடந்த கிடையைப் பெயர்த்தடிக்கமாட்டார்கள் என்பதால்! (எனவே அவர் ஆடும் உங்கட்கு உதவாது!) தாதக்கோனாரின் ஆட்டைப் பற்றி ஆராய்ந்தேன். அவர், பணத்துக்கு ஆசைப்பட்டவர். எனவே உள்ளெண்ணம் கொண்டு, கிடைதராமல், தனதாக நிறுத்தி வைத்திருப்பதை உன்மனமே அறியும்! எனவே, (பூதக்கோனோ, வேதக்கோனோ, தாதக் கோனோ கிடை வைக்க வரமாட்டார்கள்! திருமுக்கூடல் ஆதித்தலைவரின்பண்ணை வயல்கட்கு உரமேற்ற நான்தான் வரவேண்டும்.

" பூதக்கோன் பொதுவாட்டை வாதுக்கே ஒருபாம்பும்
புலியுங்காத் திருக்குமது கலிகண்டாய்குடும்பா!
வேதக்கோன் கிடையாண்ட தேதுக்கா யவன்சாதி
வீதிதொறுங் கிடந்தகிடை போதியான் குடும்பா!
தாதக்கோன் ஆட்டைமுதல் சோதித்தேன் பணத்துக்கே
தனதாக நிறுத்தினதுன் மனதறியுங் குடும்பா!
நாதக்கோன் முக்கூடல் ஆதிக்கோன் பண்ணைவயல்
நானடா உரமேற்றுங் கோனடா குடும்பா! " (83)

முத்தபள்ளி முறையீடு செய்யுள் (84–90)

இடையரை அழைத்துக் கொண்டுவந்த பள்ளன், வயலில் கிடை வைக்க ஏற்பாடு செய்துவிட்டு, அதன் அருகே இருந்த இளையவளாகிய மருதூர்ப் பள்ளியின் குடிசைக்கு வந்து இவளுடன் தங்குவதாகிய கிடையே நமக்கு நல்ல கிடை, என்று கருதி அங்கேயே அடைந்து கிடந்தான். இதனையறிந்து கொண்ட மூத்தபள்ளியாகிய முக்கூடற்பள்ளி பண்ணைக்கார நயினாரிடம் வந்து முறையீடு செய்யத் தொடங்கினாள்.

'நயினாரே! அண்டை வீட்டாருங்கூடச் சொல்லிக் கொடுக்கமாட்டார்கள். இவனுக்குக் கிடை (தாங்குதல்) ஆட்டுக்கிடையிலேயா? அல்லது இளைய பள்ளி வீட்டுக் கிடையிலேயா? அவள் வீட்டிலேயே படுத்துறங்கும் பள்ளன் வேலையைக் கெடுக்கும் கள்ளன்! என்னைக் கண்டதும் பதறி விழுந்து, கைகால் உதறி எழுந்தான் இளையவளுக்காக மடலேறவும் செய்வான். காமமயக்கம் எனும் பேய் பிடித்த உடம்பினை - அவனின் திருட்டுத்தனத்தை நீர் அறியீர்! அடியேன் சொன்னதையும் பொருட்படுத்தாமலுள்ளீர். அழகரும் இவனிடமிருந்து என்னைப் பிடித்து ஆட்கொள்ளவும் மாட்டார் (அஃதாவது சாவு வரவில்லை. மேலும் நியாயத்தையும் அழகர் கேட்கின்றாரில்லை. இனி அவனைக் கொடிய சிறைச்சாலையில் போட்டால் தான் ஒழுங்குக்கு வருவான்.

'நயினாரே! வரவுக்கு மீறிச் செலவு செய்தால் வறுமைதானே வளரும். இவனோ. பேய்க் கோயிலுக்குக் கொடுக்கும் கொடைவிழாவில் அளவின்றிச் செலவு செய்கின்றான். கூத்து, கொட்டுமுழக்கில் விருப்பமுடையவன் வலிய காளை என்று, சுழிக்காளை ஒன்று, நரைத்தளைக்காளை ஒன்று மோழைக் காளை ஒன்று இவற்றை இளையவளின் கோயில் கொடைக்குக் கொடுத்துவிட்டான். மேலும் வில்லுப்பாட்டுக்கு 'மொய்' எழுதிவிட்டான். பரத்தியிடம் வாங்கிய சுள்ளுக்கருவாட்டிற்கும், 'அக்கரைத்திருத்து' என்ற ஊரிலுள்ளோர் விற்கும் கள்ளை வாங்கியதற்குமாக ஐந்து பசுவை விற்றுவிட்டான். இப்படிச் 'செய்கிறோமே' என்ற நாணம் கொஞ்சமும் இல்லாதவன், புதிதாகச் செய்த தொழுமரத்தில் கையும் கையுமாகக் கட்டிக் காலிலும் விலங்குமாட்டிவிடும்.

"நயினாரே! அவன் செய்யும் செயல்களுக்கு இந்த இளையவளும் உடந்தை! 'பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும்' என்ற பழமொழியைப் போல (விலாங்கு மீன் போல்) அவன் என்னிடமும் அவளிடமும் உறவு வைத்தவன் போல் வெளியிற் காட்டுவான்; உண்மையில் அவளிடம்தான் முழுஉறவும் வைத்துள்ளான். தேனோடு பால் கலந்தாற்போல் அவளொடு அவன் உறவாடுகிறான். அவள் மஞ்சள் மேனி கண்டு மயங்கிவிட்டான்; பணம் அனைத்தும் செலவு செய்துவிட்டான். என்னை நடுத்தெருவில் விட்டுவிட்டான். அவனது ஈனத் தொழிலைச் செய்ய நான் இருக்கிறேன். ஆனால் விளைபொருள் பெறும் வெகுமானத்திற்கு அவள் இருக்கிறாள், அவன் இங்கே கால்கூட வைப்பதில்லை; கனவிற்கூட அவளை விட்டுப் பிரிவதில்லை. உடலுக்கு உயிர்போல - நிலத்துக்குப் பயிர்போல விளங்கும் அழகரின் பண்ணைக்கு உதவும் பள்ளன், நுமக்கு வேண்டுமானால் அவனைக் கருத்துடனே இருக்கச் செய்வீராக!

"நயினாரே! அவன், யாருக்கும் பணிந்து போகான், இந்தச் சீவலப்பேரி ஊரில் கண்யான் ஆட்டம் (ஒருவகைக் கூத்து), வில்லுப்பாட்டு என்ற அரிப்பு ஏற்படும்படியாகச் செய்துவிட்டான். அதற்காகப் பள்ளர்களிடம் வரிப்பணம் கேட்டான். இந்த ஊருக்குள் அவனுக்கு ஏற்றந்தான். ஆனால் இந்தச் சேரிக்குள் நாற்றந்தான்! குடும்பத் தலைமை பெற்றும் குடும்பத்தை கவனித்தானில்லை; ஊராருக்கு உழைத்தான். அழகரின் செல்வத்தைத் தன் விருப்பப்படி செலவு செய்தான்; உழுவதற்குரிய மாடுகளும் முந்தின காருக்கு அறுத்த வைக்கோற் போரும், தன் கிளையில் உள்ள அனைவர்க்கும் பொது நம்மை ஆட்கொள்ளும் அழகருக்கும் அதில் உரிமை உண்டு. இவன், பணத்தை மண்ணுக்குள் புதைத்து வைத்துவிட்டான். பலபேருக்கும் வீணாகச் செலவழித்துவிட்டான். மிகவும் காதற் பைத்தியக்காரனாக ஆகிவிட்டான். இவனை நன்றாகச் சவுக்கினால் அடியுங்கள்.

"நயினாரே! யானைக் குட்டிபோல் இருக்க எருமையை, ஞானிச் செட்டியாருக்குப் பதினைந்து பணத்திற்கு விற்றுவிட்டான். அந்தப் பணத்தையும், தன் கொழுந்தியாளின் பெண்பிள்ளைகள் சீர்வரிசைக்குச் செலவழித்தான். இளையவளுக்கு மீனைக்கொண்டு போய் அன்பாகக் கொடுப்பான். எனக்கோ கருவாடுகூடக் கொடாமல் ஒளித்து விடுவான். நான் எதுவும் கேட்டால் வாயடி அடிப்பான். ஆனால் அவள் சொன்னால் பாம்பைக்கூடப் பிடிப்பான். அவன் கோனாரைப் பார்த்தானா? இல்லைக் கோனார்தலைப்பேனைப் பார்த்தானா? இளையவள் குடிசையில் போய் விழுந்தான். அவன் வயலுக்கு எருப்போட்டு இனி வாழ்ந்தான்! (வாழமாட்டான்!) பூனைக்குட்டி போலப் பதுங்கி, உறுதியான சொல்லுடன் முழுக்கப் போய் கொண்டு வருவான். அவனை நன்றாகத் தொழுமரத்திலே இறுகக் கட்டிவையும்;

"நயினாரே! அவன் ஏச்சுக் கேட்கவே பிறந்துள்ளான். வரவர, நாணயத்தையும் வெட்கத்தையும் அடியோடு மறந்தே போனான். இளையவளின் இளமைதான் அவனுக்குப் பெரிது! என் வளப்பம் எல்லாம் பறித்துவிட்டான்; நீந்தும் ஆழத்திற்கும் மேலாகத் தண்ணீர் பெருகிபின் பேச்சென்ன? (அது போல் அவன் திருந்தாத நிலைக்கு வந்த பின்பு திருந்துவான் என்பதில் பயனில்லை!) கையினாலே கலப்பையைத் தொட்டு உழும் எண்ணமே இல்லை. என்னைத் தேடிக் கனைப்பது கூடக் கிடையாது. என்னைத் தீயினாற் சுட்டாலும் மனம் ஆறுதல் அடையும்; ஆனால், என்னை நாவினாலன்றோ சுடுகின்றான். எனவே, அது என் மனத்தில் ஆறாமல் வளர்ந்து கொண்டே போகிறது. முன்பே, அவனைச் சீ, என்று வெறுத்துவிட்டேன். இனி, வாய் கொடுத்தும் பேசேன்! அவன், உம்மைப் பார்க்க வருவான்! பேசிப்பாரும் மார்க்கணுவைச் செதுக்கி வாய்ச்சியாலே தான் (அரிவாள் போன்ற கருவி) செதுக்கமுடியும் (அதுபோல் அவனை அடித்துமொத்தினாலே திருந்துவான்!) எனவே அவன் அஞ்சும்படியாகப் பிடித்த பிடியிலே கொண்டு போய்க் குட்டையில் அடித்துவிடும்!"

பள்ளன் வரவும், நிலவகை கூறுதலும் செய்யுள் (91–92)

உலகிற்கு முதற் காரணராகிய திருமுக்கூடலில் எழுந்தருளியிருக்கும் கண்ணராகிய திருமாலின் பண்ணையாளரிடம், அவர் மனம் கொள்ளும் வகையில் மூத்தபள்ளி சொல்லவேண்டியவற்றைச் செப்பமுறச் சொல்லிச் சென்றுவிட்டாள். பின்பு பொய்சொல்லப்போன பள்ளன், மீண்டும் வயலுக்குச் சென்று ஆட்டுக்கிடை என்னும் எரு வைத்துவிட்டு வருவதுபோல் பாவனை செய்துகொண்டு வந்தான்.

வந்தவன், பண்ணைக்காரரைப்பார்த்துப் பின்வருமாறு பேசலானான்.

"நயினாரே! மழையினால் பெருகக்கூடிய 'சீவன் பேர்' ஏரியிலிருந்து நீர்பாயும் இந்திரனால் வணங்கப்படும் திருமுக்கூடல் அழகர் பேர்' உள்ள கேசவன் திருத்து வயல்கள்' கார் நெல் பயிரிடும் காலத்தில் பயிரிடப்பெற்று, ஊரில் மற்றவர்க்கு விளையும் விளைச்சலைவிட மிகுதியான 'கதலி வாழை, என்ற நெல்விளைந்த வயல்கள்; புகழ் பொருந்திய முதலியார் திருத்து வயல்கள் சாரல் மழைக்காலத்திலேயே நாற்று பவுவதற்கேற்றபடி தண்ணீர்! வரும் 'சன்ன வெட்டியான்' வாய்க்காற்போக்கில் உள்ள வயல்கள் வன்னிமரத்துப் பக்கத்தில் உள்ள மேட்டு வயல்கள் கோரைப்பு வளரும் குண்டு வயல், ஓடை யோரத்துப் புரவாகிய வயல் எல்லைக்காக நடப்பட்ட குத்துக் கல்லின் பக்கத்து வயல், குளத்துப் பற்று வயல்கள், முத்தன் வகையறா வயல்கள், நாச்சியார் திருவிடையாட்ட வயல்கள், தடியால் அளந்து வரையறுக்கப்பட்ட வயல்கள், தென்மருதூரில் உள்ள பெரிய பண்ணை வயலுக்கும் அ"கராச்சிப் படை வயலுக்கும் தெறிகில் உள்ளனவும் குளம், கலமடை இவற்றிற்கு வடக்கில் உள்ளனவும் ஆகிய உட்கடைப் பற்று வயல்கள், வட்டமாய் அமைந்த வரிசை வயல்கள் ஆந்தைகுளத்து வயல்கள் தோணித்துறையடி வயல்கள் ஆகிய இவற்றிலும், இவை போன்ற பிற வயல்களிலும் ஒன்றாக ஆட்டுக்கிடையாகிய எரு வைத்து, இப்போதுதான் திரும்பி வந்தேன். தாங்கள் இடும் கட்டளையைச் செய்ய ஆயத்தமாய் இருக்கிறேன்."

பண்ணைக்காரன் செயல் செய்யுள் (93)

இவன் கூறுவது கேட்ட பண்ணைக்காரன், "என் தந்தையாகிய திருமாலின் திருமுக்கூடலேரி வயற்காட்டில், நீ ஆட்டுக்கிடை வைத்துத் தந்த வகை எது என்றால், மருதூர்ப பள்ளியாகிய உன் காதலியின் வீட்டில் நீ கிடந்து உறங்கிய உறக்கந்தானோ? உன் மனச்சான்றினோடு பொருத்தமாக ஆராய்ந்து பார்" என்று கண் சிவந்து, அப் பள்ளனது காலில் மரக்குட்டையைக் கட்டிக் காலில் வைக்கான்!.

இளையபள்ளி வருத்தமும் பள்ளனின் தேறுதலும் செய்யுள் (94–95)

பண்ணைக்காரன் செய்த செயலையறிந்த இளைய பள்ளியாகிய மருதூர்ப்பள்ளி, பள்ளனைப் பார்த்து, "அழகர் திருப்பெயர் தாங்கியவடிவழகக்குடும்பா! அந்த முக்கூடற்பள்ளி, தனக்குத் தாலிகட்டிய கணவன் என்று கூட முகம் பார்த்து இரங்காமல், எவரோ செய்த எங்கோ வழியில் போகிற களவுகளையெல்லாம் உன் தலைமேல் போட்டு விட்டாள் 'முனைமுறியாத கொழியலரிசி இட்டாலும் கோழி குப்பையைக் கிண்டும் என்பது பழமொழி. இந்தப் பழமொழிக்கு இவள் புத்துயிர் கொடுத்து விட்டாள். இப்போது செல்லாத காசு செல்லவா செய்யும்? நான் என் செய்வேன்! என்று புலம்பினாள்.

அது கேட்ட பள்ளன், "மருதூர்ப்பள்ளியே! விரைவாக என் பக்கத்தில் வா! ஒரு இரகசியம்! புறங்கூறும் அந்த மூத்த பள்ளி என்னைப் பார்க்க வந்து விடுவாள். ஐயோ நம் வாழ்வுக்கு நடுவே தெய்வம் சோதித்துவிட்டது. பண்ணை நயினாருக்குக் காதுதான் கண். எனவே விரைந்து போய்விடு. சேற்றிலே கல் எறிந்த கதைபோல அவளோடு எதிர்த்து நமக்குக் கெடுதலை உண்டு பண்ணி விடாதே வடுவந்தால் மறைக்க முடியுமா? வருவது வந்தே தீரும்" என்றான்.

மூத்தபள்ளி வருதலும், பள்ளன் வேண்டுதலும் செய்யுள் (96–101)

தன் கணவனுக்குச் சோறு கொண்டுவந்த மூத்தபள்ளியாகிய முக்கூடற்பள்ளி பண்ணைக்காரனைக் கண்டு, "நயினாரே! என் பள்ளன் எங்கே இருக்கிறான்? உங்களிடம் பணிவாக நான் வேண்டுவது ஒன்று உண்டு. என் அண்ணன் 'செங்கரன்' ஏதோ நேர்த்திக் கடனுக்காகத் தெய்வத்திற்குப் படைத்த கறிசோறு இவற்றை ஒரு சட்டியில் கொடுத்தனுப்பியுள்ளான். அதை நான்மட்டும் எப்படித் தனியாக உண்பேன்" உங்கள் அடியானுக்கு நான் கொடுத்தால், உண்பானா! மாட்டானா?" என்றாள்.

தன் கணவனுக்கு மனைவியர் இரண்டுபேர் என்றாலும், முக்கூடற்பள்ளிதான் அவன்மீது, கொண்ட பாசத்தினால் உள்ளன்புடன், மிகவும் தந்திரமாகப் பண்ணைக்காரனிடம் வேறு ஒரு காரணத்தை (அஃதாவது தன் அண்ணன் கொடுத்த கறியும் சோறும் என்று) சொல்லி, மனக்கள்ளத்துடன் சோறு கொண்டு வந்தாள்.

இவ்வாறு சோறு கொண்டு வந்தவள், பள்ளனைப் பார்த்து, 'முக்கூடற்பள்ளா! உன்னை மயக்குவதற்கு மருந்திட்ட அந்தக் கள்ளியாகிய மருதூர்ப்பள்ளி, தன் ஊர்த்தொடர்பு விட்டு விட்டு வடகைக்கு உனக்கு மனைவியாக வந்துவிட்டாள். அதன் பிறகு, நீ திருந்த வேண்டும் என்று எண்ணி நான் சொன்னதும் கேளாது போனாய்.

நான் தெற்கே பார்த்தால், நீ வடக்கே பார்ப்பாய். என்னைப் பருந்தாட்டம் கண்டாய்; அதனால் இப்போது நீயும் பருந்தாட்டங் கொண்டு, கொப்பத்தில் (யானையைப் பிடிக்குமிடம்) யானை அகப்பட்டாற் போலத் தொழுமரத்தில் அகப்பட்டுத் தவிக்கின்றாய். 'தன்வினை தன்னைச் சுற்றும்' என்பது பொய்யாகுமா? நீயே சொல்லு?" என்றான்.

அதற்கு அவன், அவளைப் பார்த்து, முக்கூடற் பள்ளியே!" கடந்து போனதைப் பற்றி ஏன் பேச்சு? ஒருவருக்கு விருந்து செய்த பிறகு அவரை வெட்டினவர் உண்டா? கொஞ்சுவதுபோல், என்னைக் கொத்தும் பேச்சினைப் பேசாதே! வாயில் உள்ள தண்ணீரைக் குடிக்கவும் செய்யலாம்; கொப்பளிக்கவும் செய்யலாம் அதுபோல் நீ என்னை ஏற்றுக் கொண்டு காக்கவுஞ் செய்யலாம்; தூற்றிக் கொண்டு போக்கவுஞ் செய்யலாம். பஞ்சில் நெருப்பைப் பற்றவைப்பதுபோல் இன்னமும்பழம்பரை பற்றவைக்காதே. என்னை மன்னித்து அருளும்படி பண்ணை நயினாரிடம் கெஞ்சிக் கேட்டுப் பாரடி!" என்று மன்றாடினான்.

" மிஞ்சிப் போனதை என்சொல்ல வேணும்?
விருந்து விட்டபின் வெட்டினா ருண்டோ?
கொஞ்சப் பேச்சுகள் சொல்லாதே! வாய்த்தண்ணீர்
குடித்தா லுங்கொப் புளித்தாலும் ஆமே;
பஞ்சில் பற்றும் நெருப்புப்போல் நெஞ்சில்
பழம்பகை இன்னும் பற்றவை யாதே!
கெஞ்சிப் பண்ணை நயினாரே மன்னிப்புக்
கேட்டுப் பாரடி முக்கூடற் பள்ளி " (99)

இதனைக் கேட்ட முக்கூடற் பள்ளி, "வடிவழகர் திருப்பெயர் கொண்ட குடும்பா! கெட்டி! மனம் தடுமாறி முட்டிவிட்டுப் பின்பு குனியும் பழங்கதையை மெய்ப்பிக்கின்றாய்! இளையபள்ளி சொல் தவிர, இந்தக் கிழட்டுப் பள்ளி கூறும் சொல், நம் பண்ணையார் காதில் ஏறுமா? நானாக இல்லாததைப் புனைந்து பேச முடியுமா? அரண்மனைக் காரியம் என்கையிலேயா உள்ளது? அவள் சோறு உண்ணும் கலத்தில், வாய் வைத்ததெல்லாம் முறைமையுடைய செயல் ஆனது போல, அவள் தலையிடும் காரியம் எல்லாம் ஒழுங்காகவே முடியும்!" என்றான். (இவ்வாறு, மூத்த பள்ளி குறிப்பாக இகழ்ந்து பேசினாள்.)

அப்போது பள்ளன் அவளைப் பார்த்து, "அடி முக்கூடற் பள்ளி! நீ இவ்வாறு பக்குவம் சொல்லிக் கொண்டிருப்பது முறையாகுமா? நான் இந்தப் பாடுபட்டும் இனி அறிவு வாராதா? உனக்குச் சக்களத்தி அவள் என்றும் அவள் உனக்கு ஒப்பானவள் என்றும் நீ சொன்னால், அந்தத் தாழ்வு உனக்குத்தான்! என் மக்கள் ஆணை என் ஆணை, உன் ஆணை நீ ஊற்றிய கஞ்சியைக் குடித்துக் கிடப்பேன். அந்த விக்கல்வாய் நயினாரைக் கேட்டு என்னை மீட்டுக் கொள்ளடி!" என்றான்.

மூத்தபள்ளி வேண்டுதலும் பள்ளன் விடுதலையும் செய்யுள் (102–107)

'மக்கள் ஆணை, என் ஆணை, உன் ஆணை, என்று ஆணையிட்டதனால், வீடுபேறு தரக்கூடிய திருமாலழகரின் திருமுக்கூடல் மூத்தப்பள்ளியானவள், அவன் சொல்லை

ஏற்று அவன் மனம் கோணாதபடி அவனுக்கு அறிவுரை சொல்லி, "உன் தலையை அவிழ்ப்பேன் என்று சொல்லி எழுந்து பண்ணைக்கார நயினாரிடம் சென்று, பின்வருமாறு பேசலானாள்;

"ஐயா! நயினாரே! எங்கே பார்த்துக் கொண்டிருக்கிறீர்? எங்கே பராக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்? நயினாரே, உம்மைத்தான் கும்பிட்டேன். நயினாரே உம்மையல்லவாதேடி, உங்கள் அடியாள் இங்குவந்திருக்கிறேன். கையாரக்கண்ட களவையும் பொறுப்பீரே! பள்ளன் படும் காவல் துன்பத்தை என் கண்ணாலே பார்க்க முடியவில்லையே நயினாரே!

"நயினாரே! தருமத்துக்காகவேண்டி, இவன் செய்த பிழையைப் பொறுத்துக்கொள்ளும் கொங்கை சாய்ந்தால் வயிறுதானே தாங்கவேண்டும். அதுபோல் நாங்கள் தவறு செய்தால் நயினார்தானே பொறுக்கவேண்டும். வன்மத்தைப் பார்த்தால், அதற்கு இவன் பொறுப் பாளியில்லையே! அந்தத் தென்மருதூர்ப் பள்ளியால் வந்த பொல்லாப்புத்தான் நயினாரே!

" தன்மத்துக் கிந்தப் பிழையைப் பொறும் எங்கள்
ஆண்டே; — முலை
சாய்ந்தால் வயிறல்லோ தாங்கவேணும் பண்ணை
ஆண்டே!
வன்மத்தைப் பார்த்தால் அவன்இலக் கல்லவே
ஆண்டே! — தென்
மருதூரிற் பள்ளியால் வந்தபொல் லாப்புக்காண்
ஆண்டே! (104)

"நயினாரே! ஆடிமரத்துக் கால எல்லையில் வேளாண்மை பயிரிட வேண்டிய நாள் வந்துவிட்டதே! இந்தப் பள்ளனன்றி வேறுயார் பயிரிடுவார். பண்ணை நயினாரே! உழைத்துப் பொருள்தேடிக் கொண்டுவந்து இடக்கூடிய பள்ளு, பெற்ற பிள்ளைக்குச் சமமாகும் நயினாரே! இனி, தேவரீர் மனம் இரங்குவதே என் நல்வினைப் பேறு!

"நயினாரே! ஒழுங்குக்குமேல் ஒழுங்குகளை எல்லாம் மீறித் தவறு செய்தாலும் (நான்) பெண் பிள்ளைதானே? (ஆதலால் பொறுத்துக் கொள்ளவேண்டும்) பொல்லாத கள்ளுத் தண்ணீர் குடித்த வெறியினால் முன்பு என் பள்ளனைப் பற்றிக் குற்றஞ் சொல்லிவிட்டேன் நயினாரே, எனவே, இவன் காலில் மாட்டிய மரத்தை வெட்டி, இவனை விடுவிக்க வேண்டும் நயினாரே!"

இதனைக் கேட்ட பண்ணைக்காரன் மனம் இரங்கி, அவள் சொல்லியவாறே, முக்கூடற் பள்ளனின் காலில் சேர்த்துக் கட்டிய தொழுமரத்தைக் கழற்றி, அவனை விடுவித்து அவனுக்குச் செய்யவேண்டிய முறைகளைச் செய்தான். விடுதலை பெற்ற பள்ளனும், சமயம் பார்த்துப் பண்ணைக்காரனிடம் வித்துவகைகள் மாடுகளின் வகைகளை மெய்யாகச் சொல்லத் தொடங்கினான்.

வித்து, மாடு, ஏர்கால் வகைகள் செய்யுள் (108–111)

பண்ணைக்காரரிடம் பள்ளன் கூறிய வித்துவகைகள்

"நயினாரே! சித்திரகாலி, வாலான் நெல், சிறைமீட்டான், மணல் வாரி, செஞ்சம்பா, கருஞ்சூரை, சீரகச்சம்பா, முத்துச்சம்பா, விளங்கி நெல், மலைமுண்டன், பொற்பாளை, நெடுமூக்கன், அரிகிராவிக் மூங்கிற்சம்பா, கத்தூரிச்சம்பா, வாணன்நெல், காடைக் கழுத்தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை, பூம்பாளை, கடுக்கன் சம்பா, வெள்ளைச் சம்பா, புத்த நெல், கருங்குறுவை, புனுகுச்சம்பா ஆகிய நெல் வகைகளும் இரண்டு பூவுக்கும் காணுமளவு விதை பேரில் போட்டேன்.

இனி, மாடுகளின் வகைகளைக் கூறினான்:

"நயினாரே! குடைக் கொம்பன், செம்மறையன், குத்துக்குளம்பன், மேழை, குடைச்செவியன், குற்றாலன், கூடுகொம்பன், கருப்பன், மஞ்சள் வாலன், படைப்புப் பிடுங்கி, கொட்டைப் பாக்கன், கருமறையன் பசுக்காத்தான், அணிற்காலன், படலைக் கொம்பன், விடத்தலைப்பூ நிறத்தான், வெள்ளைக்காளை என இவ்வாறெல்லாம் ஆயிரக்கணக்கில் உண்டு.

அடுத்து, ஏர்க்கால் வகைகளைக் கூறினான்:

"நயினாரே! (நம் ஏர்க்கால்கள் புகழ் பெற்றவை) தசரதமன்னனின், மைந்தரும், இராமரும் ஆகிய தாமரை மலர் போன்ற கண்ணழகராகிய முக்கூடல் அழகர், சுக்ரீவனுக்குத் தன் வல்லமையைக் காட்டும் பொருட்டு, வில் வளைத்து மராமரம் ஏழினையும் எய்து சாய்த்தாரே அத்தகைய மரங்களில் ஒன்றில் கசமரங்களும், ஒன்றில் வள்ளக்கைகளும், ஒன்றில் நுகக்கால்களும்; ஒன்றில் ஏர்க்கால்களும், ஒன்றில் கைக்கோல்களும், ஒன்றில் வயல் உழும்குத்திகளும், ஒன்றில் வளைந்த மேழிகளும் ஆகிய இந்த ஏழு வகைகளைச் செய்துள்ளோம். இவற்றைப் பேணி வைத்துள்ளோம். இவற்றை எண்ணி அறிபவர் யார்?

இங்ஙனமே வித்து மாடு, ஏர்க்கால் வகைகளைக் கூறிய பள்ளன், பண்ணைக்காரனைப் பார்த்து மேலும் பேசலுற்றான்:

"நயினாரே! இங்கே வடக்கயிறுகளும், கொழுக்களும் ஆயிரக்கணக்கில் உள்ளன. (இவை எவற்றால் ஆனவை என்று அறிந்தால் வியப்படைவீர்கள்!) இலங்கை மாநகரில் முன்பு, எங்கள் அழகருடன் போர் எதிர்த்த இராவணணின் மகன் இந்திரசித்து, 'நாகபாசம் விடுத்துப் பகைவரைக் கட்டிக் கலங்கச் செய்து விட்டோம் என்று மகிழ்ந்திருந்தான். அப்போது அவன் கலங்கும் படியாக வந்தான் சிறகுகளையுடைய கருடன், அக்கருடனைக்கண்டு, கட்டுக்கள் கழன்றன. அவைகளே இங்குள்ள வடக் கயிறுகள்! இராவண அரக்கர்கள், தம்குலத்துடன் மடிந்தனரே, அவர்களின் வேலும்வாளும் ஆகியவற்றால் ஆனவேயோ கொழுக்கள். இப்படி வகைவகையானவற்றை யெல்லாம் மயக்கமில்லாமல் தேடி வைத்துள்ளேன். எனவே வயலிலே நாளேரிட வாரும்!"

" இலங்கா புரியில் முன்னாள் எங்கள் அழகருடன்
எதிர்த்த ராவணன்மகன் இந்திர சித்து
கலங்கவே வந்தசிறைக் கருடனைக் கண்டு, கட்டுக்
கழன்ற பாசவடக் கயிறாயிரம்
குலங்க ளுடன்மடிந்த கொலைவா ளரக்கர்வேலும்
கூர்வாளும் சேர்த்தடித்த கொழுவாயிரம்
மலங்காமல் இந்தப்படி வகையெல்லாம் தேடிவைத்தேன்
வயலிலே நாளேரிட வாரீ ராண்டே! " (111)

நாட்பார்த்தலும் நாளேருழுதலும் செய்யுள் (112–114)

'சீரைத் தேடின் ஏரைத் தேடு' வது சிறப்பாகலான் ஏர்வகை, வித்து வகை, ஏர்க்கால் வகை முதலான சீர்களையெல்லாம் வடிவழகக் குடும்பன் சொல்லிய பிறகு எல்லோராலும் வழிபடப்படும் அழகரின் பண்ணைக்காரன் கேள்வியில் மிகுந்த ஒளிநூல் வல்லோன் (சோதிடன்) கூறிய நல்ல வேளையை நாளேர் கட்டுவதற்குக் குடும்பனிடம் கூறினான்.

"பள்ளா! ஏழாம் பக்கமும், புதன்கிழமையும், சோதி நட்சத்திரமும், தைதுலக் கரணமும் தவறாத நல்ல யோகமாகிய தகுந்த ஐந்து திறங்களும் பொருந்திய வேளையே நாளேர் இடுவதற்கு மிகவும் நல்லது என்று பார்த்துச் "சிறந்த ஒளிநூற் பயிற்சியுடைய வேதியர்கள், மேன்மையான துலாஓரை முகூர்த்தத்தை இன்று வதுத்துரைத்தார்கள். அன்பரெல்லாம் பணிந்து வணங்கும் திருமுக்கூடற்பரமனமாகிய அழகரின் பண்ணைக்கு நாளேர் இட வேண்டும்!" என்று பண்ணைக்காரன் கட்டளையிட்டான். இதனைக்க கேட்டதும் பள்ளனும், ஏர் எடுத்துக்கொண்டு உழுவதற்குச் சென்றான்.

அப்போது அவனுடன் சென்று ஏர் பூட்டிக் குரவையிட்டுக் கொண்டு உழுத பள்ளர்கள்:

சாத்தன், பெரியான், கொன்னைத் தாண்டி, அரியான், சடையன், உடையான், தட்டைச் சங்கன், புங்கன், போத்தன், அருகன், கோணப்பூவன், மருதன், பூலான், வயித்தி, வேலான், புலியன், கலியன், காத்தன், வெருகன், சுப்புக்காலன், முருகன், கண்டன், கருத்தமுண்டன், கங்கன், சிங்கன், கூத்தன் முதலானோர்.

கருத்தமைப்பு (115–175)

மாடு முட்டியதால் பள்ளன் (வடிவழகக் குடும்பன்) மயங்கி விழுகின்றான். பள்ளியர் இருவரும் (மனைவிமார்) வந்து ஏக்கத்துடன் அழுகின்றனர். பள்ளன் எழுந்து அவர்களை நோக்கிச் சிரிக்கின்றான். நன்றாக உழுது நடுகின்றனர் பள்ளியர்கள். நடுகையின் போது, உண்டாட்டின் மயக்கத்தால் காதல் விளையாட்டுகள் நிகழ்கின்றன. விளைந்த நெல்லை அடித்துக் குவிக்கின்றனர் பள்ளர்கள். பண்ணையாரிடம் எல்லாவகை நெற்கணக்குகளையும் ஒப்புவிக்கின்றான் வடிவழகக் குடும்பன், அவன் மூத்தபள்ளிக்குச் சரியானபடி பங்கு தரவில்லை. அதனால் சினங்கொண்டு அவள் பண்ணையாரிடமும் ஏனைய பள்ளியரிடமும் முறையிடுகின்றாள். இதன் அடிப்படையில், அவளும் இளைய

பள்ளியும் ஒருவரையொருவர் ஏசிக்கொள்கின்றனர். அப்போது மூத்தபள்ளி, இளைய பள்ளியின் ஊராகிய தென் மருதூரில் வீற்றிருக்கும் சிவபெருமானைப் பழிக்கின்றாள். இதற்கு மாறாக இளைபள்ளி, மூத்த பள்ளியின் ஊராகிய திருமுக்கூடலில் வீற்றிருக்கும் திருமாலைப் பழிக்கின்றாள். பின்பு அமைதியாகி இருவரும் தம் சுற்றத்தாருடன், இறைவனை வாழ்த்தி வணங்குகின்றனர். இத்தகைய செய்திகளுடன் நூல் முடிவடைகின்றது.

பள்ளனை மாடு முட்டலும் பள்ளியர் வரவும் (1145, 116)

"புதுக்காளைகளை உழரில் பழக்குவதற்காக வடிவழகக் கடும்பன், வழக்கமாகப் பூட்டும் காளைகளை விடுத்துப் புதுக்காளைகளை ஏரில் பூட்டினான். அப்போது வயலிலிருந்து பெரியவரால் மீன் ஒன்று காளை (புல்லைக்காளை) ஒன்றின் முகத்தில மோதியது. அதனால் அக்காளை, தன் முகத்தை மாறிக் கொண்டு (சீறிக்கொண்டு) ஓடியது; தன்னை விரட்டி மறிக்க வந்த ஆட்களையும் முட்டித் தள்ளிக் கொண்டு ஓடியது. (இந்நிலையில் வடிவழகக் குடும்பன், 'மாட்டின் குறும்பு அடங்க மறிப்பேன்' என்று கூறிக்கொண்டு வந்து அம்மாட்டினை மறித்தான். அது, சீறித் தன் கொம்பு முனையால் அவனைக் குத்தியது. அதனால் மயங்கி விழுந்த அவனது சோர்வினைக் கண்டு, சிறிதும் காலம் தாழ்த்தாமல், பள்ளியர் இருவரும் வந்து சேர்ந்தனர்."

பள்ளியர் இருவரும் வருந்துதல் (117, 118)

திருமுக்கூடற் பள்ளியாகிய மூத்தபள்ளி, வடிவழகக் குடும்பனை நோக்கி, மதயானை, முதலியவற்றையும் பிடிக்கும் வலிமையுடையாய் இந்த மாட்டைப் பிடிக்க முடியாமல் போனது என்ன! முன்பு மலை போன்றவற்றையும் முறித்தாய். அது வெறுங்கதையோ? 'அத்தகைய வலிமையை இப்போது நான் உடையேனா என்று ஆராய்ந்து பார்த்திலேன்' என்று எண்ணியவனவாய்க் காளையை மறித்தாயோ? இது (காளையை மறித்து விழுந்தமை) நான்கு மறைகளையும் தோற்றுவித்த நான்முகன் விதித்த தலைவிதியோ? அல்லது மருதூர்ச் சக்களத்தி இட்ட மருந்தின் வெறியோ? முதன்முதலாக இது யாரால் விளைவிக்கப்பட்ட துன்பமோ? யான் ஒன்றும் அறியேனே" என்று உரைத்தாள்.

அடுத்து, இளையபள்ளி, "வடிவழகர் பாதமறவாத பண்ணைக் குடும்பா? உன் வடுப்படாத மேனியும் இவ்வாறு வடுப்படுமோ? என் வல்லாளன் (வலிமையுடைவனின்) திறமையும் இப்படிப் போய்விடுமோ? எதற்காக அந்த மாட்டை மறித்தாய்? முக்கூடற் சதுரி பார்த்துச் சிரிக்கவோ இங்ஙனம் மயங்கிக் கிடந்தாய் (முன்பு குட்டையில் அடிபட்டுக் கிடந்தாய், அதனை அடுத்து), இத் துன்பமும் உனக்கு வருதல் முறையாகுமோ? மலைமேல் விளங்குகின்ற ஐயா பூலாவுடையார்க்கு நம் கடமையைச் செய்யாமையால் ஏற்பட்ட குறையோ? படுத்த நிலையிலிருந்து எழுந்து கொள்வாயாக" என்று இயம்பினாள்.

பள்ளன் மயக்கந் தெளிந்து வேலை செய்ய முற்படுதல் (119–124)

"ஏங்கி மனமிரங்கிக் கூறிய பள்ளியர் இருவரின் துன்பம் நிறைந்த வார்த்தைகள், தன் செவியிற்புகவே, தான் படட்ட துன்பமெல்லாம் நீங்கியவனாய்த தலையசைத்துத் தோளைக் குலுக்கிக் கொண்டு எழுந்தான் குடும்பன்; தனக்காக வருந்தி நின்ற பள்ளியரை

நோக்கிச் சிரித்தான்; புருவத்தை வளைத்து நெரித்து நெட்டுயிர்ப்பு விட்டு ஆறுதல் அடைந்தான்; மீண்டும் காளைகளை ஏரில் பூட்டி உழத் தொடங்கினான்; உழவினைப் பார்த்து மகிழ்ந்து, அம்மகிழ்ச்சியை அங்குள்ள ஏனைய பள்ளர்களோடும் பகிர்ந்து கொண்டான்; முன்பு உழுத தொளியில் நாற்றுப் பாவினான்; நாற்று முறைப்பதற்காகத் தண்ணீர் பாய்ச்சினான்; உழ முடியாத தோட்டக் கால்களையெல்லாம் மறுநாள் வெட்டிப் பண்படுத்தினான்; வயல்களுக்கு வேலியிட்டான்; நாற்று வளர்ப்பதற்காக, நாள்தோறும் தண்ணீர் பாய்ச்சுதல், எருவிடுதல் முதலிய வேலைகளில் முழுமையாக ஈடுபட்டான்; வளர்ந்தநாற்றின் தோற்றப்பொலிவினைக் கண்டுமகிழ்ந்தான்; அம்மகிழ்ச்சியினால் ஏனைய பள்ளர்களோடும் சேர்ந்து மதுவுண்டு களித்தான்; பண்ணைக்காரர்க்கும், நடுவதற்குப் பருவமான அச்செய்தியைத் தெரிவித்தான்; நறுமணம் பொருந்திய துளதிமாலையணிந்த அழகருடைய (திருமாலுடைய) திருமுக்கூடலிலுள்ள வயல்களிலெல்லாம் இன்றைக்கு நட்டுவிடவேண்டுமென்று தெளிவாகப் பண்ணையாரிடம் தெரிவித்தான்; பண்ணையார் இட்ட கட்டளைகளையும் ஏற்றுக்கொண்டு திரும்பினான்"

நடுகைத் தலைவி நாற்றுநடுமாறு ஏனைய பள்ளியர்க்குக் கட்டளையிடுதல் (125, 126)

"மூன்று முறை உழப்பட்டு நாற்று நடுவதற்கு வேண்டிய பக்குவத்தில் நிலம் செப்பம் செய்யப்பட்டிருந்தது. வேறொரு நிலத்தில், நடுவதற்காகப் பாவுதல் செய்யப்பட்டிருந்த நாற்றினைப் பிடுங்கி, வேர் உலராமல் நன்றாக அடுக்கி முடிந்து வட்டவட்டமாக அடைந்து வைத்தனர் பள்ளியர்; பின்பு, திருமுக்கூடலழகரின் திருவடிகளை வணங்கி, முன்பு அடைத்து வைத்திருந்த நாற்று முடியை எடுத்து நெற்றியின்மேல் வைத்து நான்கு திசையையும் நோக்கிச் சுற்றிவந்து வாழ்த்தி வணங்கினார். நடுபவர்களை வரிசைப்படுத்திக் கடலொலிபோல் நாவினால் ஒலியெழுப்பிய பள்ளியர் தலைவி 'பயிர் நெருங்காமலும் கலந்து போகாமலும் நடுவீர்களாகப் பள்ளியேரே', என்று மொழிந்தாள். பின்பு அவன் சின்னி, குருந்தி, அருதி, மருதி, முதலிய பெயருடைய பள்ளியரை அழைத்து, "நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஒருவர்க்கொருவர் விரைவாக நடுவீர்களாக" என்று கட்டளையிட்டான்.

உழத்தியர் ஊடல் (127)

"காம்பெல்லாம் கொத்தாகப் பூத்துள்ள பூந்துளசி மாலையணிந்த அழகரது திருமுக்கூடலிலுள்ள சேறு தோய்ந்த காலினையுடைய பளர்களுக்குத் தென்றற்காற்றானது எத்தன்மைத்தோ! (காரணம்) ஆற்றுக் காலாட்டியராகிய பள்ளியரின் மனத்துள் ஊடல் எழுந்தமையால் (ஆட்டெழுங்கால்) வயலில் அவர்கள் நாற்றுப் பிடுங்குதலை விடுத்து நடுவதற்கு முன்வந்தாரல்லர். (பள்ளர்களோடு கூடி மகிழ்வதற்கும் உடன்படாரல்லர் எனவே, பள்ளர்களுக்குத் தென்றற்காலென்னாமோ?")

பள்ளியர் அழகு (128–134)

128-ஆம் பாடல் முதல் 134 வரையுள்ள பாடல்களில் அகப்பொருள் கருத்துக்கள் மிகுந்துள்ளன. இவை, பள்ளியர் கூற்றாக அமைந்துள்ளன. வயலில் வேலை செய்யும்போது நடைபெறும் காதல் விளையாட்டுக்கள் பேசப்படுகின்றன!

இப்பாடல்கள், பெரும்பாலும் எளிமையானவை. எனவே, இன்றியமையாச் செய்திகள் மட்டும் விளக்கப்பட்டுள்ளன.

128-ஆம் பாடலில் குருந்தி என்பவளின் உறுப்புநலன் வருணிக்கப்படுகிறது.

“ படைகொண் டேவருங் கரனையம் பொரு
விடையஞ்சேர் திரி சிரனையும்
பண்டுமுடித்த கணையினார் குகன்
கண்டு பிடித்த துணைவனார்
குடைகுன் றாய்ப்பசுக் கிடைநின்றார்—முக்
கூடலழகர் ” (128) என்று பாட்டுடைத் தலைவர்

(திருமால்) போற்றப்படுகின்றார். கரன் தூடணன், திரிசிரன் என்போர் இராவணின் தம்பியர். இராமரது தம்பி, சூர்ப்பநகையின் மூக்கு முதலியவற்றைக் கொய்தமை அறிந்து பொருது இராமரது கணையால் தாக்கப்பட்டு அழிந்தனர் அம்மூவரும். இத்தகைய ஆற்றல் படைத்தவரான திருமால் (இராமர்) குகனுக்குத் தோழராக விளங்கியவர்; மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்துக் கொண்டு, பசுக்கிடையின் இடையில் நின்று கல்மழையைத் தடுத்தவர் ஆவார்.

“ கடிக்கும் அரவில் நடிக்கும் இறைவர்
கஞ்சனார்க்கொரு நஞ்சனார்
கடையும் அமுதம் உடையுந் திரையிற்
காட்டி அண்டருக் கூட்டினார்
அடிக்கு ளடங்கும் படிக்கு முதல்வர்
அழகர் ”

என்று திருமால் போற்றப்படுகின்றார். காளிந்தியாற்றில் நீந்திக் கொண்டு வருவோரைக் கடிக்கும் பாம்பின் தலையில் நின்று நடிக்கும் இறைவன் திருமால் ஆவார். அவர் (தமக்குப் பூதகியின் மூலம் நஞ்சூட்டிய கஞ்சனராகிய மாமனார்க்கு நஞ்சு போன்றவவ்; கடலில் கடையும் அமுதத்தினைத் தேவர்க்குக் காட்டி ஊட்டியவர். மாவலியினிடத்து நிலம் இரந்து பெற்று உலகை அளக்கும் போது தமது ஓரடிக்குள் அளந்தவர். அவர் இவ்வுலகத்திற்கு முதல்வரும் திருமுக்கூடல் அழகரும் ஆவார்.

130-ஆம் பாடலில், இறைவனாகிய சிவபெருமான், ‘புங்கவர் தமிழ்ச் சங்கம் மருவும் புலமைத் தலைமை அழகனாக்” என்று போற்றப்படுகின்றார். “தமிழ்ச் சங்கப் புலவரோடு பொருந்தியிலிருந்தது தமிழாய்ந்த சிறந்த வரும் புலமைக்குத் தலைவராக விளங்கியவரும் ஆகிய அழகனார் (சிவபெருமான்)” என்றமையால் தமிழுக்கு முதற்புலவர் சிவபெருமான் என்பது புலனாகின்றது. எனவேதான் பாரதியாரும், “ஆதிசிவன் பெற்றுவிட்டான் என்னை” (தே.கீ.21) என்று குறிப்பிடுகின்றார். தமிழ்த் தாய், தன் வரலாற்றைக் கூறும் வாயிலாகத் தனக்குத் தந்தையாக விளங்கியவர் சிவபெருமான் என்று குறிப்பிடுகினறாள். இதனால் தமிழின் தொன்மை புலனாகின்றது.

இப்பாடலில் மருதூரின் வளப்பத்தினை, "பொருநை ஆற்றனை பெருகுங்கால் — புனல் பொருத மருதூர்" என்னும் தொடர் உணர்த்துகிறது. புங்கவர்: சிறந்தவர் (சிவபெருமான்); 'தமிழ்ச் சங்கம் மருவும் புங்கவர் என இணைத்துப் பொருள் காணலாம்.

131-ஆம் பாடலில் திருமால், வெள்ளானைக்கிறை போற்றுவார் ஒரு புள்ளாடற் கொடி ஏற்றுவார் வேதம் பரவும் பாதர் வைகுண்டவீரர் அழகா" என்று சிறப்பிக்கப் பெறுகின்றார்.

வெள்ளானை: அயிராவதம் என்னும் பெயருடைய இந்திரனது பட்டத்து யானை.

132-ஆம் பாடலில் "சிறுகண் வேழ முறு வெந்துயரந் தீர்த்து முன்னின்று காத்தவர்" என்று திருமால் சிறப்பிக்கப்படுகின்றார். திருமால், சுயேந்திரன் என்னும் யானையின் துன்பத்தைத் தீர்த்த செய்தி கூறப்பெறுகிறது. சிறுகண் வேழம்: கயேந்திரன் என்னும் யானை.

133-ஆம் பாடலில் திருமால், "பத்துத் தலையும் அரக்கன் புயமும் தத்தக் கணையொன்றேவிய பருவப் புயலில் உருவத் தழகா" என்று சிறப்பிக்கப் பெறுகின்றார். திருமாலின் அவதாரமாகிய இராமர், தம் வில்லாற்றலால் இராவணனை அழித்த செய்தி இயம்பப் பெறுகிறது. ஏர்க்காலை விட்டு நேர்க்காலை எடுக்கிறாப்போல (134); ஏரோடு ஏர்க்காலைச் செலுத்தி நேர்க்காலைப் பற்றி விலக்குபவன் (மூத்தக் குடும்பன் மகனாகிய பொத்தாணி) மொண்டிச் சோரன்) போல நடவு நடுபவளாகிய நூவி என்பவளின் பக்கம் வந்தான். மொண்டிச் சோரன்; நொண்டித் திருடன்.

134-ஆம் பாடலில் "செழுந்திருப்பதம் தொழுந்தவத்தினர் சித்தம் உருகி நித்தமும் தேடிவரும் முக்கூடலழகர்" என்று திருமால் சிறப்பிக்கப்படுகின்றார். தம்முடைய செழுமையான திருவடிகளை வணங்குவோர், மனமுருகி நாள்தோறும் தம்மைத் தேடிவரும்படியான திருமுக்கூடலழகர்.

முன்பே உழுது பக்குவப்படுத்தியிருந்த வயலில் ஓர் அளவாகப் பரந்து நீர் நிற்கும்படி செய்து பின் நடும் வழக்கத்தினை, "உழுந்தொழிற்படு பழந்தொளிப் புனல் உடைச்சு முடங்கல் நடச் செய்தே" (134) என்னும் தொடர் உணர்த்துகிறது.

இந்நூலில் பெரும்பாலும் இறைவன், ஒவ்வொரு பாடலின் முதற் பகுதியிலேயே போற்றப்படுகின்றார். இம்முறையானது, செயல்தொடங்கும்போது இறைவனை எண்ணும் மரபோடு ஒத்து நிற்கின்றது.

பயிர் விளைந்து நெல் அளத்தல் (135–139)

"பிறர் பசிக்கு உண்ண அமுது வழங்குவோர், தம் செல்வ நிலையினின்று குன்றித் தாம் நின்ற நிலையினின்றும் மாறுபட்டாலும் அவர் தம் நிலை மேலும் மேலும் பெருகுவதற்குச் சான்று பகர்வது போன்று மேகம் போன்ற உருவத்தையுடைய வேத முதல்வரின் திருமுக்கூடல் வயல்களில் நட்ட நாற்று ஓங்கி வளர்ந்தது. (135)

"நட்ட நடவானது தெளிந்து பசுமையும் ஏறப்பெற்று மேன்மேலும் குருத்துவிட்டுப் பரவி நின்றது. தமிழிசைக்குத் திருமுடியசைக்கும் முதல்வராகிய திருமாலின் நிறத்தைப்

போன்று நிறம் பெற்றுப் பயிர்கள் தளைத்தன. அவற்றின் நுனி குழைந்து வளைந்து நின்றன. பயிர்களில், கதிர்கள் வெளிப்படாமல் உள்ளே பொதிந்திருந்தன; பின்பு, வெளியே வந்தன. இந்நிலையில், இரப்போர்க்குப் பொருள் வழங்குவோர், தம்கையில் பொன்னைப் பிடித்துக்கொண்டு கொடுக்கும் கைபோன்று அக்கதிர்கள், முற்றிய நெற்கதிர்களாகத் தோன்றின.

"நெற்கதிர்கள், முற்றி வளைந்த நிலைமையினை வடிவழகக் குடும்பன், பண்ணையாரிடம் தெளிவுபடுத்தினான். ஏனைய பள்ளரும் அவன் கூறிய முறை நல்லதென்று எண்ணினர். பின்பு எல்லோரும் சேர்ந்து தெய்வ வழிபாடு நடத்தினர்; வழிபாட்டிற்குரிய பொருள்களும் படைத்தனர்; ஓங்கி வளர்ந்திருந்த கதிர்களைக் கொய்து மகிழ்வெய்தினர். பின்பு, கதிர்களைத் தத்தமக்குப் பங்கிட்டுக் கொண்டு அவற்றை அரிந்து வயற்பரப்பெங்கும் பரப்பினர் கதிர்க்கட்டுக்களையெல்லாம் நெல்லடிக்கக் களத்தில் சேர்த்தனர். நெல்லடித்துப் பொலியைக் குவித்தனர்; பொலியைத் தூற்றியாற்றிப் 'பொலி' என்று கூறி நெல்லை அளந்தனர்.(138)

"பண்ணைக்காரரின் முன்னிலையில், நாள்தோறும் அடியார்க்கு உண்டி வழங்குஞ் சத்திரத்திற்கு என்று சில பகுதி நெல்லை அளந்து கொடுத்தனர் பள்ளர்; வெளியூர் ஆட்கள் ஏற்படுத்திய ஏழு திருப்பதிக் கட்டளைக்கும் உள்ளூரார் ஏற்படுத்திய படித்தரங்களுக்கும் சில பகுதி நெல்லை அளந்து கொடுத்தனர்; காவை வடமலையப்பபிள்ளையன் மடத்துக்கு என்று நெல்லை வாரிக்குவித்தனர். பின்பு, விளிம்பின் பக்கம் இடக்கையை வளைத்துப் பிடித்து நெல்லை மிகுதியாகக் கட்டி அளந்தனர்" (139).

வடிவழகக் குடும்பன் தன் பண்ணையாரிடம் நெல் கணக்குக் கொடுத்தல் (140–148)

வடிவழகக் குடும்பன், நன் பண்ணையாரிடத்து, "வளம் பொருந்திய தென்முக்கூடல் மாயவனாராகிய அழகரின் பண்ணையில் அளந்த நெல் இவ்வளவு" என்று ஆதாயத்தையும் செலவையும் உள்ளவாறு உரைத்தான்; பின்பு பண்ணையாரை நோக்கித்தான் சொன்னவற்றை மறவாமலிருக்குமாறும் வேண்டிக் கொண்டான்.

மூத்தபள்ளியின் முறையீடு (149–151)

"வில்லாளராகிய அழகரின் முக்கூடலிலுள்ள மூத்தபள்ளி பண்ணையாரிடம், தன் கணவனாகிய வடிவழகக் குடும்பனைப்பற்றி முறையிடத் தொடங்கினாள். எனவே அவள் பண்ணையாரை நோக்கி, "எல்லாக் கணக்குகளையும் கூறியும் என் பங்கினையும் கணக்கையும் கூறாமல் விட்ட பள்ளனின் சூதினை நான் கூறுகின்றேன். நீர் கேட்பாயாக" என்று ஏனைய பள்ளியர் முன்னிலையில் உரைத்தாள்.

மூத்த பள்ளியின் முறையீடுகளைப் பண்ணையார் கேட்காமல் சென்று விட்டார் போலும். அதனால், 'முட்டிக்கால் தட்டி' என்றும், 'ஆந்தை மூக்கு மூஞ்சி' என்றும், 'மட்டிவாய்' என்றும், 'கருமந்தி முகம்' என்றும், 'சட்டித் தலை' என்றும், 'தண்ணீர் சால்போல் பருத்தவயிறு' என்றும் பண்ணையாரைச் சினத்துடன் பழித்துரைத்தாள்

மூத்தபள்ளி. பின்பு, ஏனைய பள்ளியரிடம் முறையிட முற்பட்டாள். அப்போது அவள், "இரண்டு பெண்ணை மனைவியாகக் கொண்ட குடும்பன் செருக்கையும் வஞ்சகத்தையும் (இனி) நீங்கள் கேட்பீராக! பள்ளியரே,' (150) என்றாள்.

மீண்டும் பள்ளியரை நோக்கிப், 'பள்ளனுக்கு மருதூர்ப் பள்ளியின் (இளைய பள்ளியின்) மீதுள்ள ஆசை இன்னும் விட்டபாடில்லை. முன்பு இதனால் தான்பட்ட துன்பத்தை யெல்லாம் இன்னும் அறியாமல் இருக்கின்றன. பிள்ளையார் திருவடியிற் படைத்த நெல்லையும், உறைநெல்லையும் எடுத்துக்கொண்டு போய் அவள் பங்குக்குரிய நெல்லுடன் கலந்து பெட்டியில் வைத்துக்கொண்டான், உள்ள பங்கையும் எனக்கு தருவதற்குக் கைவராமல் என்னை அதட்டவும் செய்தான்; மண்ணும் கல்லும் கலந்த நெல்லைத் தந்தோம் என்று பேருக்குத் தந்தான்" என்று முறையிட்டாள் (151).

இளைய பள்ளியின் ஏசல் (152)

"முக்கூடற்பள்ளியே! இங்ஙனம், நீ முறையிட்டது எப்படி? உங்கள் பழஞ் செல்வத்திலிருந்து ஏதாகிலும் எனக்குக் கொடுத்திருந்தால் மெய்ப்பித்துக் காட்டுவாயாக! தொண்டை கட்டும்படிக் கத்தாதே. மேற்கொண்டு கூவினால், நீ பண்ணையாரை வைதவற்றையெல்லாம் (முட்டிக் காள் முதலிய சொற்களால் வைதவற்றையெல்லாம்) சொல்லிவிடுவேன்" என்றாள்.

பள்ளியர் சண்டை (152–172)

153-ஆம் பாடல் முதல் 173-ஆம் பாடல் வரையுள்ள இருபத்தொரு 'பாடல்களிலும், முற்பாதி மூத்த பள்ளியின் ஏசுதலும் பிற்பகுதி இளையபள்ளியின் ஏசுதலும் அமைந்துள்ளன — மூத்தபள்ளி, "மருதூர்ப் பள்ளியே! பண்ணையாரிடம் வைதவற்றையெல்லாம் சொன்னால் எனக்கென்ன பயம்? நீ சொன்னாலும் உன் வார்த்தை செல்லாக்காசு (உன் வார்த்தை எடுபடாது). எனவே நீ சொல் போடி" என்றாள். உடனே இளையபள்ளி,, 'முக்கூடற்பள்ளியே! என்னால் நடக்காத காரியங்களும் உண்டோ? பள்ளன் இப்போது வந்தால் உன் செல்வாக்கெல்லாம் என்ன என்று தெரிந்துவிடும்" என்றாள் (153).

மூத்தபள்ளி, 'மருதூர்ப்பள்ளியே! செல்வாக்கில்லாமல் என்ன? உன்னைப்போலத் தன்னூரை விட்டு ஓட்டுச் சாய்ப்பில் (உரிமையில்லாமல் ஓட்டுறவு கொண்டு) வந்தவளா" என்றாள். அதற்கு மருதூர்ப்பள்ளி "முக்கூடற்பள்ளியே? வலுச்சலுகை யெல்லாம். (இல்லாத சலுகைகளை இருப்பதாக வலியக் கூறிக்கொள்ளும் (சலுகைகள்) பேசாதே. உன்னைப்போல் கணக்கு வழக்குப் பேசிக் கொண்டா நான் வந்தேன்?" என்றாள் (154).

மூத்தபள்ளி, "மருதூர்ப்பள்ளியே வழக்கிட்டா நான் வந்தேன். பள்ளன், மாமன் மகள் என்று உரிமை கொண்டாடி என்னைக் கட்டிக்கொண்டான்" என்றாள்! அதற்கு இளைய பள்ளி, "முக்கூடற்பள்ளியே! உழக்கல் கிழக்கு மேற்குப் பார்ப்பது போல நம் உறவுக்குள் நெருக்கம் வேறு விலக்கம் வேறா? உன்னைக் கண்ட இடத்தில் மறித்து மணந்து கொண்டான். ஆனால், என்னைக் கண்டதும் என் ஊர்க்கே வந்துவிட்டான்" என்றாள் (155).

மூத்தபள்ளி, "மருதூர்ப் பள்ளியே! உன் ஊர்க்கு வந்தாலென்ன? உன்னைப்போலப் பெண்டிரின் கணவரைத் தொடர்ந்து வந்தவள் வேறு யாரடி!" என்றாள். அதற்கு இளையபள்ளி, முக்கூடற் பள்ளியே! நான் எங்கே வந்தாலென்ன? வீட்டிற்குள் வந்துவிட்டால் காட்டு நாவி (காட்டிலுல்ள கத்தூரிப்பூனை) வீட்டுப் பூனையைப் போல் இழிவாக ஆகி விடுமோ?" என்றாள் (156).

மூத்தபள்ளி, "மருதூர்ப்பள்ளியே! என்னை அஞ்சிப் பேசச் சொன்னது எதற்கு? உனக்கு ஆசைப்பட்ட பள்ளனை அஞ்சும்படி சொல்" என்றாள். அதற்கு இளையபள்ளி, "முக்கூடற்பள்ளியே! உன்னைப் போன்ற கொஞ்சக்காரிக்கு (சிறுமைத் தன்மையுடைவளுக்கு அஞ்சுவேனோ? மீண்டும் அவனைக் (வடிவழகக் குடும்பனை) குட்டையில் அடித்துப் போடச் செய். அப்போது அவன் உனக்கு அஞ்சிக் கும்பிடுவான்" என்றாள் (157).

மூத்தபள்ளி, "மருதூர்ப்பள்ளியே! நான் அவனைக் குட்டையிற் போட்டதற்கு நீ பிணைக்கப்பட்டுக் கொண்டு (பொறுப்பேற்றுக்கொண்டு) மீட்டாயோ? (நீ மீட்கவில்லையாகையால்) நீ அவனுக்கு உரிமையுடையவள் அல்லள்" என்றாள். அதற்கு இளையபள்ளி, "முக்கூடற்பள்ளியே! எவரையும் பொருட்படுத்தாமல் ஏசி உன் திறமையை வெளிப்படுத்திக் கொள்வாயாக, நீ அவனைக் குட்டையில் போடுவாய், மீட்பாய் இவையெல்லாம் உனக்குரிய தந்திரம்" என்றாள் (159).

மூத்தபள்ளி, "மருதூர்ப் பள்ளியே! மந்திரமும் உன்னைப்போல் எனக்கு வகையாக அமைந்திருந்தால் பள்ளன் எனக்கு வசப்பட்டிருக்கமாட்டானா? (உனக்குத்தான் வசப்பட்டான். எனவே, நீயே மந்திரம் தந்திரம் உடையவள்)" என்றாள். அதற்கு இளையபள்ளி "முக்கூடற்பள்ளியே உன்னைப்போல் என்னையும் சாரங்கெட்டவள் (சாதிக்கும் சக்தியற்றவள்) என்று சாதிக்க வருகின்றாயோ? (உன்னால் எதையம் சாதிக்க முடியாது)" என்றாள் (160).

மூத்தபள்ளி, "மருதூர் பள்ளியே! சாதிப்பதெல்லாம் உனக்குத்தான் முடியும், நரியைக் குதிரையாக்கியது உங்கள் சிவபெருமானல்லனோ? அதனால் நீயும் எதையும் சாதிப்பாய்" என்றாள். அதற்கு இளையபள்ளி "முக்கூடற்பள்ளியே போதிக்கச் சாதிக்க (தவறு உண்டாகும்படிச் சாதிக்க வருகின்றவள் நீ கல்லைப் பெண்ணாகச் சாதித்தவன் உங்கள் கண்ணன் அல்லனோ?" என்றாள் (161).

மூத்தபள்ளி, ஏடி தனக்கு மருமகன் என்று எண்ணாமல் சினந்து காமனைக் (மன்மதனை) கண்ணிவேறுபடச் (கண்ணேறுபட, தாங்குதல்பட) செய்தவன் உங்கள் சிவன் அல்லனோ?" என்றாள். அதற்கு இளையபள்ளி "ஏடி! மாமன் என்று பாராமல் முன்பு கம்சனைக் கொன்று, தன் கண்களில் மாறாத பூ ஏற்படுத்திக கொண்டவன் உங்கள் மாயவன் அல்லனோ?" என்றாள் (163).

மூத்தபள்ளி, "அடியே! பெண்ணொருத்திக்காக (உமையம்மைக்காக) இமயமலை ஏறிப்போனவன் உங்கள் சிவன் அல்லனோ?" என்றாள். அதற்கு இளைய பள்ளி, "அடியே! சீதையை மீட்பதற்காகத் தன் தம்பியுடன் கடலேறிச் சென்றவன் உங்கள் கண்ணன் அல்லனோ?" என்றாள் (164).

மூத்தபள்ளி, "அடியே! பசு உருவாகிக் கன்றைத் தேர்க்காலில் விழும்படிச் செய்து, மனுச்சோழன் மகனைக் (வீதி விடங்கனை) கொன்றவன் உங்கள் சிவன் அல்லனோ?" என்றாள் இளையபள்ளி. "அடியே! வான் பழிக்கு (பெரிய பழிக்கு) உள்ளானவனாய்த் தவசிபோல் மறைந்து நின்று வாலியைக் கொன்றவன் உங்கள் மாயனல்லவோ?" என்றாள் (166).

மூத்தபள்ளி, "அடியே! சுந்தரமூர்த்தி நாயனார் திருமணத்தின் போது, (சுந்தரர் பாட்டனார் எழுதிக் கொடுக்காத ஓலையை எழுதிக் கொடுத்ததாகக் கூறி நீ என் அடிமை தான் என்று வழக்கினை வலியப் (மாறுபட) பேசி, சுந்தரர் வாயால் வையவும் கேட்டுக் கொண்டவன் உங்கள் சிவன் அல்லனோ?" என்றாள். அதற்கு இளைய பள்ளி, அடியே! சிசுபாலனை புலிபோல் எழுந்து நின்று வையும்போது ஏழைபோல் நின்றவன் உங்கல் நெடுமால் அல்லனோ?" என்றாள் (166).

மூத்தபள்ளி, "அடியே! சுந்தரமூர்த்தி அடியாரையும் சிவபெருமானையும் தொண்டராகிய விறல்மிண்ட நாயனார் தள்ளிவிட்டார். இச்செயலைச் செய்யவைத்தவன் உங்கள் முதல்வனாகிய சிவபெருமான் அல்லனோ?" என்றாள். அதற்கு இளையபள்ளி, "அடியே! அடுத்துத் தான் திருமுடி சூடிக் கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் போது கைகேயி சூழ்ச்சியினால் முடியும் சூடிக்கொள்ளாமல் நெடுந்தொலைவு (காட்டிற்கு) தள்ளிப் போனவன் உங்கள் திருமால் அல்லனோ?" என்றாள் (167): மூத்தபள்ளி, "அடியே! கட்டிக் கொள்வதற்கு நான்கு முழத்துண்டும் கிடைக்காமல் புலித்தோலை உடுத்தியவன் உங்கள் ஒளிவடிவமான சிவபெருமான் அல்லனோ?" என்றாள். அதற்கு இளையபள்ளி, "அடியே கற்றைச் சடையையும் மரவுரியையும் (ஆடையாக) கட்டிக் கொண்டவன் உங்கள் திருமால் அல்லனோ?" என்றாள் (168).

மூத்தபள்ளி, "அடியே! ஊருக்குள் இரந்து திரிந்தும் பசி பொறுக்க மாட்டாமல் வாரியில் (கடலில்) தோன்றிய நஞ்சை உண்டவன் உங்கள் சிவபெருமான் அல்லனோ?" என்றாள். அதற்கு இளையபள்ளி,"அடியே மாடு மேய்த்துக்கொண்டு மாட்டின் பின்னே திரிந்துஞ் சோறின்றி வெறும் மண்ணை உண்டவன் உங்கள் முகில்வண்ணன் அல்லனோ?" என்றாள். (169)

மூத்தபள்ளி, "அடியே! ஏறுதற்கு வாகனமில்லாமல் மாட்டின் மேல் ஏறித்திரிந்தவன் உங்கள் சிவபெருமான் அல்லனோ?" என்றாள். அதற்கு இளையபள்ளி, "அடியே! மாடும் இல்லாமல் பறவைமேல் ஏறிக் கொண்டவன் உங்கள் குழலிசைக் கண்ணன், அல்லனோ!" என்றாள் (169).

மூத்தபள்ளி, "அடியே! ஏறுதற்கு வாகனமில்லாமல் மாட்டின் மேல் ஏறித்திரிந்தவன் உங்கள் சிவபெருமான் அல்லனோ?" என்றாள். அதற்கு இளையபள்ளி, "அடியே! மாடும் இல்லாமல் பறவைமேல் ஏறிக் கொண்டவன் உங்கள் குழலிசைக் கண்ணன் அல்லனோ!" என்றாள் (169).

மூத்தபள்ளி, "அடியே! பெருமாள் அடியானுக்கு (வடிவழகக் குடும்பனுக்கு) நீ மனைவியாக இருந்தும் எங்கள் பெருமாளைப் பழிக்கலாமோ?" என்றாள். அதற்கு

இளையபள்ளி, கணவனைத் திருமாலின் அடிமை என்றாய் (மிகவும் நன்று) மிகவும் பசித்தால் தின்னாத உணவும் உண்டோ? (இல்லையல்லவா?) அதுபோல் சினத்தால் சொல்லாத சொற்களும் உண்டோ?" என்றாள் (171).

மூத்தபள்ளி, "மருதூர்ப் பள்ளியே! ஆண்மைமிக்க (அழுத்தமான) சொற்களை நன்றாகச் சொன்னாய், சினம் ஏற்பட்டாலும் சீரழியப் பேசலாமா?" என்றாள். அதற்கு இளையபள்ளி, "முக்கூடற்பள்ளியே! எனக்குச் சீற்றம்வாரதா? முதலில் வைதவரை வாழ்த்தியவர் இவ்வுலகில் உண்டா?" என்றாள் (172)

மூத்தபள்ளி, மருதூர்ப்பள்ளியே? "முதலில் வைதால் யானும் வைவேன் என்கிறாய். சிறிது மூப்பிளணை பார்த்துப்பொறுத்துக் கொள்பவர் இல்லையோ?" என்றாள். அதற்கு இளையபள்ளி, "முக்கூடற்பள்ளியே! இந்த வார்த்தையை நீ முன்பே சொல்லியிருந்தால் சண்டை இவ்வளவு உண்டாகியிருக்குமோ? எனக்கு அறிவில்லையோ? (பொறுத்துக் கொள்ள மாட்டேனோ?)" என்றாள். (173).

பள்ளியர் இணக்கம் (174)

"நீயும் நானும் பொறுமையை மேற்கொண்டு உறவினர் எல்லோருடனும் கூடித் திருமுக்கூடலழகரின் திருவடி மலரை வாழ்த்தி ஆடிப்பாடுவோம்" என்று மூத்த பள்ளி கூறினாள்.

இறைவாழ்த்து (175)

"செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் அன்னை வாழ்க. முதலையைப் பற்றிய போது, முகபடாம் அணிந்த யானையாகிய கயேந்திரன் கூவி அழைத்த திருப்பெயர் வாழ்க. திருமுக்கூடல் அடியார்கள் வாழ்க" என்றும் இறைவாழ்த்தோடு நூல் முடிவடைகிறது.

பொதுக்கட்டுரைகள்

1. முக்கூடற்பள்ளின் நாடக அமைப்பினை விளக்குக.

முக்கூடற் பள்ளு நாடக இயல்புகளைக் கொண்டுள்ளது. முக்கூடற்பள்ளு அண்மைக் காலம் வரை நடிக்கப்பட்டுள்ள செய்தியையும் அறிகிறோம்.

திருவரங்கக் கோயிலில் பள்ளு நடிக்கப்பட்டுள்ள செய்தியையும், கதிரை மலைப் பள்ளு பல முறை அரங்கேறியிருக்கும் செய்தியையும், இலங்கையில் முல்லைத்தீவுப் பெண்கள் இன்னும் பள்ளுப் பாட்டுக்களைப் பழைய இசையோடு பாடி வருகின்றனர் என்ற குறிப்பையும், திருநெல்வேலியில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் முக்கூடற்பள்ளு நடிக்கப்பெற்றது என்ற செய்தியையும் காணும்போது பள்ளுகள் எல்லாமே பொது மக்களின் மன்றங்களில் அரங்கேறுவதற்காக எழுந்த நாடகங்களே என்பதை அறியமுடிகிறது.

அரங்கேறுதற்கேற்ற முறையில் பள்ளில் நாடகக் கூறுகளும் நிரம்ப அமைந்துள்ளன

பாத்திரங்கள்

நாடகங்களில் பாத்திரங்களே கதையை நடத்திச்செல்வர். முக்கூடற்பள்ளியில் மூத்தபள்ளி. இளையபள்ளி, பள்ளன், பண்ணைக்காரன் இடையன் ஆகியோர் தலைமைப் பாத்திரங்கல் மற்றவர்கள் எல்லோரும் துணைப்பாத்திரங்களேயாவர்.

பாத்திர அறிமுகம்

பாத்திரங்களை அறிமுகம் செய்யும் இயல்பில் முக்கூடற்பள்ளு நாடகப்பாங்கினையே பின்பற்றுகிறது.

கூத்தின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து: காவலர் வாழ்த்து; தேவர் வாழ்த்து அமைதல்போல, முக்கூடற்பள்ளிலும் திருமால், கருடாழ்வார், சேனை முதிலாயர், நம்மாழ்வார் ஆகியோரைக் குறித்த வாழ்த்துக்கள் அமைகின்றன. அதன்பின்னரே பாத்திர அறிமுகம் இடம்பெறுகிறது.

“ சீவல நன்னாடுமிசை சேர்ந்துரைக்கப் பண்ணைதனில்
ஏவலுறும் பள்ளியர் வந்து எய்தியது சொல்வேனே. ”

என்று தொடங்கி.

‘ திரு முக்கூடல் வாய்த்த பள்ளி தோன்றினாளே ’

என்றும்,

‘ மருதூர்க்கு வாய்த்த பள்ளி தோன்றினாளே ’

என்றும்,

‘ வடிவழகக் குடும்பன் வந்து தோன்றினாளே ’

என்றும்,

‘ நேமி வீரனார் முக்கூடற்பண்ணைக்காரர் வந்தார் ’

என்றும், ஒவ்வொரு பாத்திரமாக, நாடக மாந்ர் அறிமுகமாகின்றனர்,

கவிக்கூற்று

நாடக நிகழ்ச்சிகளை இடையிடையே தொடுத்துத் தருவதற்காகக் கவிக்கூற்று பயன்படுகின்றது. அக்கவிக்கூற்றுகளைக் கட்டியக்காரனின் கூற்றுக்களாகக் கொணடால் முக்கூடற்பள்ளு முழுமையான நாடகமாகத் திகழ்வது புலனாகும்.

“ தண்டாத சங்கத் தமிழழகர் முக்கூடல்
கொண்டாடும் கோனேரிக் கோன்வந்து தோன்றினனே ”

என்று இடையனையும், அவனை யொத்த பிற பாத்திரங்களையும் அறிமுகம் செய்துவைக்கும் பாடலை மேலோட்டமாகப் பார்த்தால் கவிக்கூற்றுப்போலத் தோன்றும். அதனையே கட்டியக்காரனின் கூற்றுக்கள் என்றே உணரத் தோன்றும்.

'சிந்தை தொட்டுப்பார் எனக் கண்சிவந்து பண்ணைக்காரன்' அங்கே வந்த பள்ளன் தன் காலில் மரக்குட்டை சேர்த்தானே? என்பது பள்ளனைப் பண்ணைக்காரன் தொழுவிலடித்த நிகழ்ச்சியை விவரிக்கும் பாடல். இதனையும் கட்டியக்காரன் கூற்று என்று கொள்ளலாம்.

குழுக்கூற்று

கிரேக்க நாடகங்களில் 'Chorus' என்று சொல்லப்படும் குழுக்கூற்றும் இடம் பெறும். அதனை ஒப்பவே.

" புதைத்து மணலில் ஒதுக்கிக் கடலைப்
பொருதநம் அழகர் கருணை போல்
பொருநையாறு பெருகி வார
புதுமைபாரும் பள்ளீரே "
" அங்குமிங்கும் செங்கை நீட்டி
அருதியும் சின்ன மருதியும்
அரியாளும் கட்டைப் பெரியாளும் — கும்மி
அடிப்பதைப் பாரும் பள்ளீரே "

என்று பல இடங்களில் முக்கூடற்பள்ளில் பள்ளியர் சேர்ந்துபாடும் குழுக்கூற்று முறை உள்ளது. கட்டியக்காரனின் கூற்று எவ்வாறு நிகழ்ச்சிகளைத் தொடுத்து உதவமோ, அதேபோன்று இக்குழுக்கூற்றுகளும் நிகழ்ச்சிகளை விளக்கி நாடகத்தின் கருத்துத் தொடர்பைப் பாதுகாக்கின்றன.

கூத்து இயல்பு

தெருக்கூத்துக்களில் ஒரு நிகழ்ச்சியைச் சொல்லும்போது அதனை மிக விளக்கமாகக் கூறலுண்டு ஒரு பயணத்தை விளக்கும்போது அப்பயணத்தின் வழியிலுள்ள ஊர்களையெல்லாம் சொல்லி விளக்குதல், ஒரு திருணம் நடந்தது என்று சுட்டும்போது, அதன் கூறுகளையெல்லாம் விளக்கமாக விளக்குதல் கூத்தின் இயல்பு.

முக்கூடற்பள்ளில், சித்திரக்காலி, வாலான், சிறை மீட்டான், மணல் வாரி, செஞ்சம்பா, கருஞ்சூரை சீரகச்சம்பா, முத்து விளங்கி, மலை முண்டன், பொற்பாளை, நெடுமூக்கன், அரிக்கிராவி, மூங்கிற்சம்பா, கத்தூரி வாணன், காடைக்கழுத்தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை, பூம்பாளை, பாற்கடுக்கன், புனுகுச்சம்பா முதலிய நெல் வகைப்பெயர்களும், ஏர்க்கால் வகைப்பெயர்களும், மாட்டுவகைப் பெயர்களும் வரிசையாகக் கூறப்படுகின்றன.

நிகழ்ச்சியின் விசையேற்றம்

கூத்தில் நிகழ்ச்சிகள் விரைவின்றி நிதானமாக வளர்ந்து செல்லும் பல பாடல்கள். மிகையான விளக்கம் ஆகியவற்றால் விளைவு குறைக்கப்பட்டு விடுகிறது. முக்கூடற்பள்ளில் நிகழ்ச்சிகள் மிக மிக விசையேற்றத்துடன் அமைகின்றன. விசையேற்றமானது 'tempo' - அதுவே ஒரு நாடகத்தின் உயிரோட்டமான கூறு.

முடுக்கிவிடப்பட்ட கடிகாரம்போல் ஓட்டம் இருந்து கொண்டே இருக்க வேண்டும். அவ்வோட்டம் உச்சநிலையை நோக்கியதாக இருக்க வேண்டும். அவ்வமைப்பு முக்கூடற்பள்ளில் உள்ளது.

நாடக வளர்ச்சி நிலை

நாடகத்தில் தொடக்க நிலை, குழப்பம், உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு என்று ஐந்து படிகள் உண்டு. முக்கூடற்பள்ளில் தொடக்க நிலையாகப் பள்ளியர் பள்ளன் அறிமுகம் நிகழ்கிறது. பள்ளியரிடையே உள்ள மனவேறுபாடும், மூத்தபள்ளி பள்ளனைக் காட்டிக்கொடுத்தல், பள்ளனுக்குத் தண்டனை இவை சிக்கல் அல்லது குழப்பமாக அமைகின்றன. அச்சிக்கல் அல்லது குழப்பம் உச்சநிலை அடையும் போது பள்ளியர் ஏசல் நிகழ்கிறது. இருவரும் சமாதானம் ஆகி ஒத்துப்போதலில் வீழ்ச்சியும், இருவரும் அழகரை வாழ்த்துதலில் முடிவும் உள்ளன.

ஒப்பனை

தெருக்கூத்தில் இன்னின்னாருக்கு இன்னின்ன ஒப்பனை என்பது அவரவர் தம் அறிமுகப் பாடலிலேயே வெளிப்பட்டுவிடும். எனவே, ஒரு பாத்திரத்திற்கு என்ன ஒப்பனை என்று வினாவே எழாது. முக்கூடற் பள்ளிலும் ஒவ்வொரு பாத்திரமும் வரும்போதும் அவ்வப்பாத்திரத்திற்குரிய ஒப்பனை எவ்வாறு இருந்தது என்பது விளக்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, மூத்த பள்ளி மஞ்சளும், திருநாமப்பொட்டும், கருங்கொண்டையும், கரும்பொன்காப்பும் வகையில் வெற்றிலையும், வாயில் பாக்கும் இடம்பெற இடையில் கொண்டு பொன்பட்டும் அணிந்திருந்தாள் என்கிறது முக்கூடற்பள்ளு.

இளையபள்ளியோ மஞ்சள் பட்டு, பச்சை, திருநீறு, நீலவடக்கல், கோவைத் தாலி ஆகியன அணிந்திருந்தாள்.

பள்ளன் கடாய் மருப்பின் முறுக்கு மீசை, கன்னப்பரிசு வழுதடி சேர்த்த கச்சை, உருமால், நீலக்கொண்டை ஆகியவற்றோடு கண்ணில் கள்வெறியோடு தோன்றினான்.

இவற்றால் முக்கூடற்பள்ளு நாடக அமைப்பும் நாடக இயல்பும் நிரம்பியது என்பதையும், நடிப்பதற்குரியது என்பதையும் நன்கு அறிய முடிகிறது.

2. முக்கூடற்பள்ளில் உணர்த்தப்படும் சமயக் கருத்துக்களை உணர்த்துக.

முக்கூடற்பள்ளில் வைணவசமயச் செய்திகள் தலைமை பூண்டுள்ளன. சைவ, வைணவப் பூசலை நூலாசிரியர் கடிந்து எள்ளினாலும் முடிவில் ரைணவத்தை நிலைநாட்டியே முற்றுப்புள்ளி இடுகிறார்.

நூலின் தொடக்கமும்,

“ மணி மரகதச சோதியர் ஆதியர்
மனு மரபினிற் காவலர் கோவலர்
மறை முதல்வர் முக் கூடலவர் ”

என்று திருமாலை ஏத்தியே தொடங்குகிறது அடுத்து,

“ கோரச் சிறை வீரப் புய முக்
கூடற் பதி ஆடற்கருடக்
கோனைப்பெரி யோனைப் பாரக் குறைவிலை நமக்கே, ”

என்று கருடாழ்வார் போற்றப்படுகிறார். பின்னர்ச் சேனை முதிலயார் வாழ்த்தப்படுகிறார். பின்னர்,

“ நத் தோலக் குருகையில் வருகையில்
நட்பாகப் புளி நடு வெளிபடு
நற் போதத் தருள் பொழி திருவிழி ஞானவித்தெனக்கே, ”

என்று நம்மாழ்வாரும் போற்றப்படுகின்றார்.

வைணவ மதப் பற்று

பள்ளன் தன் குடிப்பெருமை கூறும்போது, ‘வணங்காதார் மனத்தைத் தரிசென்று கருதி உழுவேன்; எட்டெழுத்து உண்மையைக் கேளாச் செவியைப் புற்றெனக் கருதிக் களைக் கொட்டால் வெட்டுவேன். 108 பதிகளையும் வலம் செய்யாதாரின் பேய்க்காலை வடம் பூட்டி ஏர்க்கால் சேர்ப்பேன். திருவாய் மொழி கல்லாதாரை இருகாலுடைய மாடுகளாகக் கருதி ஏரில் பூட்டி உழக்கோலால் சாத்துவேன் என்கிறான். இதிலிருந்து அவனது சமய உணர்ச்சி ஊற்றம் புலப்படுகிறது.

குயில் கூவுமாறு வேண்டும் பகுதியில் மூத்தபள்ளி, ‘இரமானுசப்பீடம் மிக விளங்கவே கூவாய்,’ குயிலே, ‘வைணவரும் தானிகரும் பரிசனமும் வாழவே கூவாய் குயிலே.’ ‘தருமநிதி சாத்தூரில் பெரியநம்பி அய்யங்கார் வாழவே கூவாய் குயிலே’ என்று கூறுவதிலும் வைணவ சமயப் பற்றே மேலோங்கியுள்ளது.

புராண இதிகாசச் செய்திகள்

சமயப்பற்றை உணர்த்தும் செய்திகளேயன்றிப் புராண, இதிகாசச் செய்திகளும் முக்கூடற்பள்ளில் உள்ளன.

“ படைகொண்டே வரும் கரனையும்
பொருவிடையஞ்சேர் திரிசிரனையும்
பண்டு முடித்த கணை”
“ கள்ளப்புள் வாய் கிழித்த காரழகர்
கடிக்கும் அரவில் நடிக்கும் இறைவர்”

என்பன ஒப்பப் பல புராண இதிகாசக் கதைகள் குறிக்கப்படுகின்றன.

கஞ்சனையழித்தது, சிசுபாலனோடு போரிட்டது, கைகேயியின் வரத்தால் காடுசென்றது, கடல் கடந்து இலங்கை வென்றது, முதலிய கண்ணன் இராமன் கதை நிகழ்வுகளோடு, மனுநீதிச் சோழனுக்கு நீதி செய்தது, சுந்தரனிடம் வழக்கிட்டது, புலித்தோலை, உடுத்தது, நஞ்சுண்டது முதிலய சிவபெருமான் கதைகளும் விரவி வருகின்றன.

பள்ளன், வித்துவகை, மாட்டுவகை, சொல்கின்ற இடத்திலும் நம்மாழ்வார், திருமங்கையாழ்வாரைப் பற்றிய குறிப்பு, சிவபெருமான் திருக்கூத்து, முருகன் மயிலேறியது, யானைமுகன் சிவனோடு இருப்பது ஆகிய செய்திகள் இடம் பெறுகின்றன.

கிராம தேவதைகள்

சைவ, வைணவப் பெருங்கடவுளரேயன்றிக் கிராமத்துத் தேவதைகளும் விளக்கமாகப் பேசப்படுகின்றன. பூலா உடையாருக்குத் தேங்காய் கரும்பு, பொங்கல் படைத்தல், குமுக்காடையாருக்குச் சந்தனம் குங்குமம் சாத்துதல் கரையடிச் சாத்தனுக்குக் கங்கணம் கட்டி ஏழுகடாய் வெட்டுதல், புலியூருடையாருக்குச் செஞ்சேவல் பலியிடல், வடக்குவாய்ச் செல்லிக்குச் சாராயம், கள் படைத்தல் என்பன விளக்கப்படுகின்றன.

கிராம மக்கள் ஏர் உழும் போதும், விதை விதைக்கும் போதும் அறுவடை செய்யும் போதும் இறைவனைத் தொழுதே தொடங்குவர் என்பது கூறப்படுகிறது.

ஏசலும் ஏத்தலும்

ஏசியாயினும் இறைவனை நினைத்தல வேண்டும் என்பதற்கொப்பப் பள்ளியர் ஏசலில் திருமால், சிவன் இருவர் புகழும் ஏசல் முறையில் ஏத்தப்பட்டுள்ளன.

முடிப்பின் போது, 'கூடலழகர் திருப்பாதமலர் வாழ்த்தி ஆடிப்பாடுவோமே' என்றும், 'அழகர் திருத்தாள் வாழி, வாழி திருமுக்கூடல் வைணவர்கள் வாழியவே' என்றும் வாழ்த்தி முடிக்கின்றார் ஆசிரியர்.

3. முக்கூடற் பள்ளின் மூலம் அறியவரும் சமுதாய வாழ்வைச் சித்திரிக்க.

பள்ளு நாட்டுப்புறப் பாமரமக்களின் இலக்கியமாதலின் பள்ளல் சமுதாய வாழ்வு நடப்பியல் தன்மையோடு நலமுறச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

பள்ளர்குடி பழங்குடி

" சுக்கிரத் தேவர் தாயைச்
சக்கரத் தாழ்வார் கொன்ற
துட்டப் பிரமகத்தி
விட்டுப் போகத்
தெக்கண விட்டுணுவான
முக்கூடலுற்றழகர்
திருவடி வைக்குமன்றே
வரும் அடியேன் "

என்று பள்ளன் குடித்தரம் கூறுவதால், பள்ளர் குயிடின் பழமையை உணரலாம். மூத்த பள்ளியும், 'அடியடி வாழையாய் நான் குடியில் வந்தேன் என்பதால் இக்குடியின் பழமையை அறியலாம்.

பள்ளர் பெயர்கள்

சாத்தன், போத்தன், காத்தன், கூத்தன், அரியான், பெரியான், சடையான், உடையான், சங்கன், சிங்கன், கங்கன், புங்கன், முருகன், வெருகன், அருதன், மருதன், கண்டன், முண்டன், புலியன், கலியன், கப்புக்காலன், கோணப்பூவன், கொன்னை ஆகியன பள்ளரில் ஆண்பாற் பெயர்கள்.

அடிமை வாழ்வு

பள்ளர்கள் தங்கள் உடமையையும் உயிரையும் தேய்த்து, 'வரப்பே தலகாணி', 'வயக்காடே பஞ்சு மெத்தை' என்று உழைத்தாலும் அவர்கள் வாழ்வு உரிமை நிறைந்தாக அமையவில்லை.

பண்ணைக்காரனை 'ஆண்டே' என்றழைப்பதிலிருந்து பள்ளரின் அடிமை வாழ்வு புலனாகிறது.

பள்ளன் தனக்கென ஒரு சிறிதும் நிலம் இல்லாமையைத் தெரிவிக்கிறான். ஊருக்கே உழைக்கும் அவனுக்கு உழைப்பின் முடிவிலே கிடைப்பதெல்லாம் ஓரளவு நெல்தான்.

இந்த உழைப்பில் பள்ளர் தம் உயிரை இழந்தாலும் கூட இழக்கலாம். 'கலுங்கலில் வெள்ளம் வருகிறது. பள்ளன் போயிருக்கிறான். அவன் உயிருக்கு ஒன்று ஆனால் நயினாருக்கு சேதம் ஆகுமே அடியாளுக்கு என்ன' என்று இளையபள்ளி கூறும்போது அடிமை வாழ்வின் முத்திரையைக் காண்கிறோம்.

பள்ளனை மாடுமுட்டி மயங்கி விழுகிறான். இருப்பினும் அவனுக்கு ஓய்வில்லை. 'தாங்கு துயர் நீங்கித்தலையசைத்துத் தோள் குலுக்கிப் பாங்கினோடு முக்கூடற்பள்ளன் எழுந்தானே, மெள்ளப் புருவங்கோடி நெரித்தான். மாட்டை மீளவும் பூட்டி உழத் தரித்தான்' என்பதில் அவன் மீண்டும் பணிச்சுமையைத் தன்தோளில் ஏற்பதைப் பார்க்கிறோம்.

'சாகாவரம் பெற்ற அனுமன் உள்ளவரையும் நான் உழைத்துக் கொண்டே இருப்பேன் சோம்பி இரேன்' என்கிறான் பள்ளன். 'பயிரிடாத கள்ளப்பள்ளன் அல்ல நான் என்று தன் உழைப்பை மட்டுமே உயர்வாக நினைப்பவன்.

'உங்கல் அடியானுக்கு'

'அடிமைக்கு நேற்று ராவெல்லாம் தூக்கமில்லை'

என்ற சொற்கள் அடிமை வாழ்வின் சின்னங்களாகக் காணப்படுகின்றன.

தீண்டாமை

இவ்வளவு பாடுபட்டும் பள்ளனை உள்ளபடியே பரிவோடு அரவணைப்பாரில்லை. 'நாங்கள் சேற்றில் கால் வைக்காவிட்டால் நீங்கள் சோற்றில் கை வைக்க முடியாது,' என்று புதுக்கவிஞன் பாடியது போல், வடிவழகக் குடும்பனாகிய பள்ளனும்,

“ பக்கமே தூரப் போயும்
தக்க சோறு என் வெள்ளாண்மை
பள்ளா பள்ளா என்பார்
மெய் கொள்ளாதவர் ”

என்று மனம் வருந்தி உரைக்கிறான்.

பண்ணைக்காரனின் ஆட்சி

பல பள்ளருக்கும் தலைவனாயிருந்த பண்ணைக்காரனே பள்ளர்களை ஆளுபவனாக இருந்தான். அவன் தன் அடிமைப் பள்ளர்களைக் குட்டையில் அடித்தல், சவுக்கால் அடித்தல், காலில் மரக்குட்டை சேர்த்தல் முதலிய தண்டனைகள் தரவும் அதிகாரமுடையவனாய் இருந்தான்.

முதலாளி வர்க்கத்துக்கு உரிய ‘அனைத்தும் தமதே’ என்ற உடைமை உணர்வும் அவனுக்கிருந்தது.

“ சாத்திமகள் காத்தி தன்னைப்
பேத்தி என்பாராம் — மெள்ளச்
சன்னையாய்க் களத்திலே வா
பின்னை என்பாராம் ”

என்பது அதனைக் காட்டும்.

பணியாட்களைக் கண்டபடி ஏசுதல் என்பதும் அதிகாரவர்க்கத்தை அடையாளம் காட்டும்.

“ வக்கணை ஏன் மருதூர்
அக்கிரமப்பள்ளி’
வாய், தைச்சுப் போடுவேன் மருதூர்க்
கச்சற்காய்ப்பள்ளி ”

என்பன சான்றுகள். இதனாலேயே பள்ளர்களிடையே வழக்கு வந்தால் அதனைத் தீர்க்கும் நடுவனாகவும் பண்ணைக்காரன் இருந்திருக்கிறான். பள்ளரின் குடும்ப விவகாரங்களைத் தீர்த்து வைப்பவனாகவும் கூச் சில சமயம் செயல்பட்டிருக்கிறான்.

பொருளாதாரமும் குடும்பவாழ்வும்

உழைக்கப் பிறந்த பள்ளர்களின் பொருளாதாரநிலை உகப்பிற்குரியதாக அமையவில்லை. நில உரிமை இல்லாமல் அற்றைக்கூலியாகப் (அத்தக்கூலியாக) பணிபுரிந்த அவர் வாழ்வில் பொருளாதாரம் ஒரு வினாக்குறியாகவே இருந்தது. அதிலும் வடிவழகக் குடும்பனைப்போல் இரு மனைவியர் கொண்டவனின் பாடு திண்டாட்டம் தான்.

முக்கூடற்பள்ளி, தனக்குப் போதிய அளவு பொருள் தருவதில்லை என்று பள்ளனைப் பற்றிப் பண்ணைக்காரனிடம் முறையிடுகிறான். நெல்லளந்து தரும்போதும் தன்னை வஞ்சனை செய்துவிட்டதாக வருந்துகிறாள்.

'பட்டடை நெல்லையெல்லாம் பெட்டி பெட்டியாய் வாரிப் போய்த் தண்ணீருக்குத் தேய்த்தான்; வரவினை மீறும் செலவு செய்கிறான் தரித்திரம் ஏறுகிறது. பேய்க் கோயிலுக்குக் கொடை கொடுப்பதில் வல்லவன்; கூத்து கொட்டு, ஊட்டு, வில்லுப்பாட்டு, இவற்றுக்குச் செலவு செய்வதில் கருத்தாக இருக்கிறான். இவற்றின் பொருட்டு மாடுகளை விற்று விட்டான். மீன் கருவாட்டிற்கும் கள்ளுக்குமாக அஞ்சு பசு விற்றான். பள்வரி கேட்பான், பலருக்கும் பணத்தை வாரி இறைத்தும் விட்டான்; மீதிப் பணத்தைப் புதைத்து வைத்திருக்கிறான் என்ற குற்றச்சாட்டுக்களால் பள்ளரின் வாழ்வு எத்தகைய பொருளாதார இடர்ப்பாட்டில் இருந்ததென்று அறியலாம்.

பழக்க வழக்கங்கள்

மழைவேண்டல் : மழைதான் வான்பார்த்த பிழைப்புடைய பள்ளர்க்கு உயிர். எனவே,

" மாரிப் பொருட்டால் வரங்குறித்து மள்ளரெல்லாம்
சேரிக் குரவையெழத் தெய்வநிலை போற்றினரே "

என்று பள்ளர் குரவையிட்டுத் தெய்வம் போற்றினர். மழை வந்ததும் குரவையிட்டுப் பள்ளர்கள் கூடிப்பாடி ஆடினர்.

தெய்வ நம்பிக்கை

பூலாஉடையார், குமுக்காவுடையார், கரையடிச்சாத்தா, புலியூருடையார், வடக்குவாய்ச் செல்லி முதலிய பல சிறு கிராம தேவதைகளையும் நம்பி வழிபடுபவராக இருந்தனர். அழகரையும், சிவனையும் வழிபடும் பெருஞ்சமயங்கள் இருந்தபோதிலும், அவற்றைப் பின்பற்றியதோடு நில்லாமல் சிறு தெய்வங்கட்குக் கள், சாராயம் படைத்தல், சேவல் அறுத்தல் கடாவெட்டுதல் முதலிய செய்கைகளிலும் ஊன்றிய நம்பிக்கை உடையவராயிருந்தனர்.

தொழில் கருவிகள்: வயலோடு தொடர்புடைய வாழ்க்கையர். ஆதலின் கசமரம், (பாம்புச் சட்டம்), வள்ளக்கை, நுகக்கால், ஏர்க்கால், கைக்கோல் வயலுழும் குத்தி, மேழி, பாசவடக் கயிறு, கொழு, முதலிய உழவுக் கருவிகள் வைத்திருந்தனர்.

வெள்ளத்திற்கு எச்சரிக்கையாக, தோணி, படல், தாழங்குடை கொங்காணி, ஊசிக்காம்பு, சீலைப்பந்தம், விளக்கெண்ணெய் ஆகியவற்றையும் கொண்டிருந்தனர்.

விழாக்கள், கொண்டாட்டங்கள்

பேய்க் கோயிலுக்குக் கொடை கொடுத்தல், வரி வசூலித்துக் கணியான் கூத்து, தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, கொட்டு ஏற்படுத்துதல், பலியிட்டுப் பொங்கலிடல், கள், சாராயம் படைத்தல் ஆகியன பள்ளர்களின் விழாக்களாகவும் கொண்டாட்டங்களாகவும் அமைந்தன.

நாளேர், நாட்கதிர்

நல்லநாள், நல்ல நேரம் பார்த்து ஏருழத் தொடங்குதல் 'நாளேரிடுதல்' எனப்படும் பண்ணைக்காரன் பஞ்சாங்கம் பார்த்துக் குறித்த நாளன்று பள்ளர்கள் குரவையிட்டு ஏர் பூட்டி உழுதனர்.

அதனையொப்பவே.

" உறு தெய்வநிலை போற்றி உரிமை சாற்றி
ஓங்குநாட்கதிர் கொய்தார் உவகை செய்தார் "

என்பதன் மூலம் நாட்கதிரறுப்பினையும் அறிகிறோம். அறுத்த நெல்லை முதலில் தெய்வங்கட்கும் திருவிழாவிற்கும் வழங்கும் வழக்கமும் இருந்தது.

கும்மியடித்தல்

பெண்கள் கூடிக் காப்புகள் ஒலிக்க, சங்கிலி அதிர, அணிகள் அசைய அங்குமிங்கும் செங்கை நீட்டிக் கும்மியடித்தனர். வயல்வேலை தாமதப்பட்ட வேளையிலும், விழாக்காலத்திலும் கும்மியடிக்கும் பழக்கமுடையவராய் இருந்தனர்.

குரவையிடுதல்

மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் குரவையொலியை மங்கல வேளைகளில் எல்லாம் எழுப்பினர்.

" பறவை யொலிபோல் குரவை எழுப்பி
பயிர் நெருங்காமல் கலந்து போகாமல்
பதியும் பள்ளீரே "

என்றும்,

" குரவையிட்டோரைப் பூட்டிக்
கூடி எழுந்தார் "

என்றும் குரவையிடுதல் குறிக்கப்படுகிறது.

உரிமைகள் எதுவும் இல்லையெனினும்கூட உழைப்பே உவகையென்றும், தோளின் உரமே உயர்வு என்றும் வாழ்ந்தனர் பள்ளர்.

4. முக்கூடற்பள்ளின் இலக்கியச் சுவையை மதிப்பிடுக

முக்கூடற்பள்ளு பாமரக்கருப் பொருளுடையதாய், பள்ளரின் வாழ்வைச் சித்திரிப்பதாய் நாடக அமைப்பில் அரங்கேறுவதாய் எழுதப்பட்டிருப்பினும் ஒரு சிறு காப்பியம் என்று கருதுமளவு அதன் இலக்கியத்தரம் உயர்வாகப் படைக்கப்பட்டிருக்கிறது.

காப்பியச்சுவை

வெள்ளம் பெருக்கெடுத்து வருவதைப் பாடும்போது, அது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து நிலங்களையும் கடந்து வந்து என்று பாடும் முறை முக்கூடற்பள்ளில் உள்ளது. இது காப்பிய முறை ஆகும்.

களவு கற்புப்பாடல்கள்

மேற்சுட்டிய வருணனைப் பாடல்களின் இடையிடையே கூடுதல், பிரிதல், இருத்தல், இரங்கல் முதலிய உரிப்பொருளை உணர்த்தும் களவு கற்புப் பாடல்களும் உள்ளன. இவையும் காப்பியக் கூறுகளேயாம். இவ்வகையில் ஒரு நாடகம் எழுத்துவடிவில் எழுதப்பட்டுக் காப்பியமாய் ஆக்கப்படும் முயற்சியை உணரமுடிகிறது.

இருபொருள் படப் பாடுதல்

இது சிலேடை எனப்படும்

" சதியிலே செப்பறை புகுமாட்டைச்
சடையடையாளம் போய்ப் பார்க்கவேணும்
எதிரில்லாத மயிலையும் செட்டிகொண்
டேகினான் பெட்டை என்றார்கண் ஆண்டே"

" ஒற்றைக் கொம்பனைத் தாண்டவராயன்
உள்ளூர்க் கோவிலுக்குள் ளேயடைத்தான்"

" பல வெள்ளாண்மையிட்டேன் மணல்வாரியைப்
பண்டுநம் பெருமாள் கட்டழித்தார்"

முதலிய பல அடிகள் நயம்பட (இருபொருள்பட) அமைந்துள்ளன.

உவமைகள்

'சிறியவர் (அகத்தியர்) மனப்பெருமை போல சித்ரா நதி பெருகியது.

' பருத்திப்பை கூறு வயிறு '
' கீரைமத்துப் போல் தலை '
' சுரை வித்துப் போல் பல '
' சண்ணைக் கடாப் போல் நடை '
' பஞ்சில் பற்றும் நெருப்புப்போல் '
' கொப்பத்தில் ஆனை அகப்பட்டாற்போல் '
' ஆனைக்குட்டியைப் போல் எருமை '
' பூனைக் குட்டியைப்போல் பதுங்கி '

முதலிய எண்ணற்ற எளிய உவமைகள் இடம் பெற்றுள்ளன.

பயிர் தலையசைந்து, தழைத்திருப்பதற்கு உவமையாக,

“ முதிர்ந்த தமிழிசைக்கு முடியசைக்கும்
முதல்வர் எனத் தழைத்து ”

என்று கூறுமிடம் உயரியது.

ஓசை நயம்

பாடலின் வடிவம் சந்தம் மிகுந்ததாக இருப்பின் பாடல் மனத்தில் நிலைபெற்றுச் சாகாவரம் பெறும்.

“ புகுந்த நெய்தலை மயக்கியே — மலர்
மிகுந்த நெய்தலைக் கயக்கியே
புடையிற் புளினஞ் சரியவே — அதன்
இடையிற் புளினம் இரியவே
பகுந்து நுழையப் பட்டினம் — திரை
முகந்து நுழையப் பட்டினம்
படைத்திடாமை நிகழவே — நிலை
கிடைத்திடாமை இகலவே
உகுந்து தண்டலை நீக்கியே — புனல்
வகுந்து தண்டலை தாக்கியே
உப்பளத்தாரை ஓட்டியும் — புனல்
அப்பளத் தாரை ஈட்டியும்.....”

என்பது ஒருவகைச் சந்தம். வெள்ளம் நெய்தல் நிலத்தில் பாய்வது போன்ற ஓசை எழுகிறதல்லவா?

“ சாத்தி மகள் காத்தி தன்னைப்
பேத்தி என்பாராம் ”

என்பது பண்ணைக்காரனின் நடவடிக்கைக்கான சந்தம். இப்படி ஓசை நயமுள்ள பாடல்கள் பல உள்ளன.

எளியநடை

எல்லோர்க்கும் விளங்குவது போலவும், பள்ளர் வாழ்வின் நடப்பியலுக்கேற்றபடியும் ஆசிரியர் எளிய பேச்சு நடையையும் சேரி மொழியையும் தாராளமாகப் பயன்படுத்துகிறார்.

‘ வெள்ளமும் மேல் வரத்தாச்சு’ ‘நேற்று ராவெல்லாம்
‘ வக்கணை ஏன், ‘குச்சுக்குள்ளே வைச்சுக் கொண்டு ’
‘ தைச்சுப் போடுவேன்’ ‘முக்காலுஞ் சொன்னேன் ’
‘ போக்கு நீக்கில்லை’ ‘தூக்குணிப் பள்ளன் ’
‘ துக்குணிலக்கேளும்’ ‘ வைதாலும் வையும் ’
‘ அசுவையும் அற்றான்’ ‘உண்டாம் படியாச்சு ’

‘ தெய்வம் சோதிச்சுதையோ’ ‘பராக்கு பராக்கு ’
‘ நோக்காளை எடுக்கிறாப்போல்’ ‘ஊரார் அமக்களை ’
‘ மூப்புச் சொம்மெனக்கிருந்தால் முதலியடி ’
‘ முடுகவா ரகசிய முண்டு குண்டுணிக்காரி ’
‘ வீவியாட்டம்’ ‘ஓட்டுச் சாய்ப்பில் வந்தேனா? ’
‘ களஞ் செய்து’ ‘தெரிப்பிட்டுக் கேட்டான் ’
‘ பேச்சிட்டுப் பாரும்’ ‘சிக்கென வையம் ’
‘ நயினாத்தையார்’ ‘ஏதுக்கோ ’

என்பன பேச்சு வழக்குகளாய் அமைந்து பாடலின் வடிவத்திற்குள்ளே தங்கப்பதக்கத்தில் முத்துப்பதித்தது போலே — பொருந்த அமைந்துள்ளன.

பழமொழிகள்

‘ வைதவரை வாழ்த்தினவர் வையகத்துண்டோ ’
‘ நான் தெற்கே பார்த்தால் நீ வடக்கே பார்ப்பாய் ’
‘ தன் வினை தன்னைச் சுற்றும் விதி ’
‘ முலை சாய்ந்தால் வயிறல்லவோ தாங்க வேணும் ’
‘ காலம் செய்வது கோலம் செய்யுமோ ’
‘ மீனுக்கு வாலும் பாம்புக்குச் தலையும் காட்டி ’
‘ கோனைக் கண்டானோ கோன் தலைப் பேனைக் கண்டானோ
‘ நீச்சுக்கு மேலே நிலைப்பென்ன? ’
‘ தீச்சுட்டத்தாறும் பழித்திடும் நாச் சுட்டதேறம் ’
‘ சகதியிலே கல்லெறிந்த கதையாக்காதே ’
‘ அழியாத காசு அழியுமோ? ’
‘ கொழியலரிசிட்டாலும் குப்பைகிண்டும் கோழி ’
‘ தண்ணீர் குடிதாதலும் ஆம்; கொப்பளித்தாலும் ஆமே ’
‘ முட்டி விட்டுக் குனியும் பழங்கதை ’
‘ உழக்கிற் கிழக்கு மேற்கோ ’

முதலிய பழமொழிகள் இடம் பெற்றுப் பேச்சுவழக்கினை உறுதி செய்கின்றன. நூலின் நயத்திற்கு மெருகூட்டுகின்றன.

அங்கதம்

பள்ளின் ஆசிரியர் பள்ளியரிடையே முரணை ஏற்படுத்தி, அவரிடையே சமயப்பூசலை உருவாக்கியுள்ளமை ஒரு வகையில் சமூக அங்கதமாகும். இந்நாட்டில், ‘எச்சண்டையும் ஒன்று சாதிச் சண்டையில் முடியும் அல்லது சமயச்சண்டையில் முடியும்’ என்ற சமூக அங்கத்தை இவ்விலக்கியத்தில் சுவையுறப் படைத்து ‘வாக்குவாதம், அல்லது ஏசல், என்ற புதிய இலக்கியவகை தோன்றவும் ஆசிரியர் விதையிட்டுள்ளார்.

5. முக்கூடற்பள்ளில் அமைந்துள்ள ஒன்பான்சுவை நலங்களை விளக்குக.

ஒன்பான் சுவை நலம்

நாடக இலக்கியத்திற்கு வேண்டிய ஒன்பது சுவைகளும் பள்ளு இலக்கியத்திலும் அமைந்திருக்கின்றன. இதனை திரு. ந. சேதுரகுநாதன் அவர்கள் எடுத்துக்காட்டுடன் விளக்குவார்.

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம, வெகுளி, உவைக என மெய்ப்பாடுகள் எட்டு வகையாகத் தொல்காப்பியர் பகுப்பார். வடநூலார் கூறும் சமநிலையையும் சேர்த்து ஒன்பது என்று உரைப்பாரும் உளர்.

நகை

முக்கூடல் வாழும் பண்ணைக்காரனின் தோற்றத்தை ஆசிரியர் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார். கோணற் பார்வையுள்ள மாறுகண், பருத்திப்பஞ்சைத் திணித்து வைத்த பெரிய கோணிப்பையின் கூறுபாடமைந்த வயிறு, கீரை மத்துப் போன்ற வழக்கைத் தலை; சுரைவித்துப் போன்ற பல; நீறு போல் வெளுத்த ஊளை ஊறுகின்ற மூக்கு; தட்டி நெரித்த மாங்கொட்டை போன்ற வடிவுல்ள ஈ அரித்த வாய்; தாறுமாறாக அமைத்து 'அஞ்சாறு' மீசை மயிர்; தூங்கலாகச் சவண்ட சளித்த பிட்டியுடைய எருமைக்கடா நடப்பது போன்ற நடை; மண்டைப் பக்கம் மீசைப் பக்கம் தாடிப் பக்கமெல்லாம் முடிமுளையாமற்போன மொட்டைத் தன்மையடைய மழமழப்பான முகம்; வேறாக அறுத்து ஒட்ட வைத்தாற் போன்ற ஏறுகாது ஆகிய தோற்றமுடைய பண்ணைக்காரன் வந்தான் என ஆசிரியர் தந்துள்ள வருணனை அமைந்த பண்ணைக்காரனைக் கற்பனையாக மனக்கண்ணில் நிறுத்தி பார்ப்பதே மிகுந்த நகைப்புக்குரிய ஒன்றாக இருக்கிறதல்லவா. இத்தகைய தோற்றமுடைய ஒருவரை நேரில் கண்டால் சிரிப்பு வராதவரும் மிகுதியாகச் சிரிப்பர்' இதோ பாடல்:—

" மாறுகண்ணும் பருத்திப்பைக்
கூறுவயிறும் கீரை
மத்துப்போல் தலையும் சுரை
வித்துப் போல் பல்லும்
நீறுபோல் வெளுத்த வூளை
யூறு நாசியும் — தட்டி
நெரித்தமாங் கொட்டை போல் ஈ
அரித்த வாயும்
தாறுமாறாய் மீசையில் அஞ்
சாறு மயிரும் — தூங்கற்
சண்ணைக்கடாப் போல் நடையும்
மொண்ணை முகமும்
வேறுகீறி ஓட்ட வைத்த
ஏறு காதுமாய்; நேமி
வீரனார்முக் கூடற் பண்ணைக்ட
காரனார்வந் தார்."

அழுகை

இலக்கியச் சுவைகளில் மிகுந்த இன்பம் பயப்பது அழுகைச் சுவையாகும். வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் அழுகை மிகுந்த துன்பத்தைத்தரும். ஆனால், இலக்கியத்தில் அமையும் அழுகையோ மிகுந்த இனப உணர்வைத் தரும். அவலப் பாடல்களை மீண்டும் மீண்டும் படிக்குமாறு மனந் தூண்டப்பட்டு நிற்கும். இராமாயனத்தில் அமைந்துள்ள தாரை புலம்பல மண்டோதரி புலம்பல் கவிமணியின் ஆசிய சோதியில் அமைந்துள்ள குழந்தையை இழந்த தாய் புலம்பல் ஆகியன இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

துள்ளி வந்த காளை பள்ளனைத் தொடர்ந்து பாய்ந்து தள்ளி விடுகிறது பள்ளன் மயங்கி விழுந்து விடுகிறான். அவனது இரண்டு மனைவியராகிய மூத்தபள்ளியாம் முக்கூடற்பள்ளியும் இளையபள்ளியாம் மருதூர்பள்ளியும் இச்செய்தி கேட்டு பள்ளன் விழுந்த இடத்திற்கு ஓடி வருகின்றனர்; மயங்கிக் கிடக்கும் பள்ளனைக் காண்கின்றனர்; கண்ணீர் வடிக்கின்றனர்; மூத்தபள்ளி முதலில் புலம்புகிறாள்.

மதயானை முதியவற்றையும் பிடிக்க வல்லமையுடையவனே! இந்த எளிய மாட்டைப் பிடிக்காமற் போன காணமென்ன? சொல்வாயாக. இதற்கு முன் மலைபோன்ற வன்மையான பொருள்களையெல்லாம் முறித்தாயே; அதுவெல்லாம் பெறுங்கதையா? அவ்வன்மையைச் சோதித்துப் பார்ப்பதற்காக நீ போய்க் காளையை மறித்தாயா? நான்கு மறைகளையும் தோற்றுவித்த நான்முகன் விதித்த தலைவிதியோ? அல்லது மருதூர்ச் சக்களத்தியிட்ட நச்சுப் புலால் சேர்ந்த மருந்தின் வெறியோ? யாரால் தோற்றுவிக்கப்பட்ட துன்பமோ? நான் ஒரு பாவமும் அறியேனே பண்ணைக் குடும்பா' என அழுகிறாள்.

" மதயானை முதற்பிடிக்க வல்லாய் — இந்த
மாட்டுக்கு மாட்டால் போனதென்ன சொல்லாய்
கதையோமுன் மலைகளையும் முறித்தாய் அந்தப்பலங்
கண்டிலேனா னென்றோடி மறித்தாய்
சதுர்வேதன் விதித்தலைப் பொறியோ — மருதூர்ச்
சக்களத்தி புலைமருந்தின் வெறியோ
முதலேயீ தார்விளைத்த இடும்போ தெரிந்திலேன்
முக்கூடல் அழகர் பண்ணைக் குடும்பா,"

இப்பாடலின் முக்கூடற்பள்ளியின் முழு அவலத்தையும் நாம் உணரமுடிகிறது.

இளிவரல்

பார்ப்பதற்கு அருவெறுப்பான தோற்றத்தைச் சொற்களால் உருவாக்கிக் காட்டுவதால் இளிவரற்சுவை படிப்போர்க்கு ஏற்படுகிறது. இளைய பள்ளியுடன் சேர்ந்து கொண்டு பள்ளன் தன்னைப் புறக்கணிப்பதை உணர்ந்த மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் சென்று முறையிடுகிறாள். ஆனால், பண்ணைக்காரன் தனக்கு வேலையிருப்பதால் இதைக் கேட்க முடியாது என்கிறான். உடனே மூத்தபள்ளி

பண்ணைக்காரனின் தோற்றத்தைப் பலவாறு விளக்கித் தனது முறையீட்டைக் கேட்குமாறு வலியுறுத்துகிறாள்.

" முட்டிக்காற் பண்ணையாண்டே
நடுக்கேளாரோ — ஆந்தை
மூக்குமூஞ்சிப் பண்ணையாண்டே
நடுக்கேளாரோ
மட்டிவாய்ப் பண்ணையாண்டே
நடுக் கேளாரோ கரு
மந்திமுகப் பண்ணையாண்டே
நடுக் கேளாரோ
சட்டித்தலைப் பண்ணையாண்டே
நடுக்கேளரோ — தண்ணீர்ச்
சால் வயிற்றுப் பண்ணையாண்டே
நடுக்கேளாரோ."

இப்பாடலைப் படிக்கும் போது பண்ணைக்காரனின் தோற்றம் நம் மனக்கண்முன் வந்து இளிவரற்சுவை பயப்பதை உணரலாம்.

மருட்கை

இதை வியப்புச்சுவை என்றும் கூறுவர்.

குருந்தி என்பவள் தன் பருவம் வரும் முன்பு சிறு பெண்ணாகத் தான் இருந்தாள். ந்திய ஆண்டு நடுகை நடும்போது அவளை யாரும் பொருட்படுத்தவில்லை. ஆனால், ிந்த ஆண்டு அவள் பருவமடைந்த பெண்ணாக நாற்று நட வந்துள்ளாள். ஓராண்டு டைவெளியால் அவளது தோற்றப் பொலிவில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை உடன் நாற்று நம் பெண்கேளே வியந்து பாடுகின்றனர்.

" கொண்ாடிக் கொண்டு நடச் செய்தே — இன்று
கண்டோமிதென்ன புதுமையோ
தொடையென்றால் வாழைத்தண்டைப் போல் — விழிக்
கடையென்றால் கணை ரெண்டைப் போல்
.....
இடையென் றால்வஞ்சிக் கொடியைப் போல் — வரும்
நடையென் றாலிளம் பிடியைப் போல்
இருந்த சாயலுக் கிப்பால் குருந்தி
திருந்தி னாளடி பள்ளீரே"

இப்பாடலைப் படிக்கும்போதே பள்ளியரின் வியப்புச்சுவை நம்மையும் ட்கொள்வதை உணரலாம்.

அச்சம

மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் பள்ளனின் குறைபாட்டைக் கூறி முறையிடுகிறாள். பண்ணைக்காரன் பள்ளனைக் குட்டையில் அடைக்கிறான். குட்டையிற் கிடக்கும் பள்ளன் தன்னைப் பார்க்க வந்த இளையபள்ளியை நோக்கி "மருதூர்ப்பள்ளி! விரைவாக இங்கே வா! ஒரு ரகசியமிருக்கிறது. அந்தக் கோட்காரி மூத்தபள்ளி பார்க்க வருவாள். ஐயோ! நம் வாழ்வுக்கு இடையில் தெய்வம் சோதித்ததுவே! பண்ணை நயினார்க்கும் செவி கண்ணாச்சே. நீ சும்மா விரைந்து போய்விடு. சேற்றிலே கல்லெறிந்த கதை போலே அவளோடு எதிர்த்து மோதிக் கெடுதல் வரவழைத்து விடாதே. வடு வந்தால் மறைக்க முடியுமா?" என அச்சத்துடன் கூறுகிறான்.

" முடுகவா ரகசிய முண்டு குண்டுணிக்காரி
மூத்தபள்ளி பார்க்க வருவாள்
நடுவே தெய்வஞ் சோதிச்சுதையோ பண்ணை
நயினார்க்குஞ் செவி கண்ணாச்சே
கடுக நீ போய்விடு சும்மா — சகதியிலே
கல்லெறிந்த கதையாக் காதே
வடுவந்தால் மறைக்கப் போமோ வருவதெல்லாம்
வந்து தீரும் மருதூர்ப்பள்ளி"

என்ற இப்பாடலில் பள்ளனன் அச்சம் புலப்படுகிறது.

பெருமிதம்

பள்ளியர்கள் தம் நாட்டுவளம், நகர்வளம் கூறும் பகுதிகளில் பெருமிதச் சுவையை நன்கு காண முடிகிறது. (சான்று தந்து விளக்குக) பள்ளன் திருமாலைத் தொழாதவர்களை இன்னின்ன செய்வேன் என்று கூறும் பகுதியிலும் வீரச்சுவை மேலோங்கியுள்ளமை காணலாம்.

துட்டர் செவிப் புற்றெனவே
கொட்டால் வெட்டுவேன்',
பேய்க்காலில் வடம் பூட்டி
ஏர்க்கால் சேர்ப்பேன் '

உவகை

உவகைச் சுவையாவது இன்பச்சுவை. வயலில் நாற்று நடவின் போது பள்ளரும் பள்ளியரும் கள்ளருந்தி நிலை தடுமாறி வரம்பு கடந்து காதலை வெளிப்படுத்தும் களிப்புக்காட்சிகளில் இன்பச்சுவை புலப்படப் பாடியுள்ளார் புலவர்.

வெகுளி

வெகுளியானது சினம். பள்ளனைக் குச்சுக்குள் வைத்துக்கொண்டே பொய் சொல்லும் இளைய பள்ளியைப் பண்ணைக்காரன் சினந்து கூறுமிடத்திலும், பள்ளியர் இருவர் ஏசலிலும் வெகுளிச்சுவை தீப்பொறி பறக்கக் காணலாம்.

வினாக்கள்

1. தேவாரம் என்றால் என்ன?
2. தேவாரம் பாடியவர் எத்தனைபேர்? அவர்கள் யாவர்?
3. மாணிக்கவாசகர் இயற்றிய நூல் எது?
4. குலசேகரர் எந்த நாட்டைச் சேர்ந்த மன்னன்?
5. குலசேகரரின் காலம் எது?
6. குலசேகர ஆழ்வார் எழுதிய நூல்கள் எவை?
7. குலசேகர ஆழ்வார் எழுதிய நூல் எதைப் பற்றியது?
8. பெருமாள் திருமொழி என பெயர் வரக் காரணம் யாது?
9. 'கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணோ' என்கின்றது எது?
10. பரமாத்மாவிற்கும் ஜீவாத்மாவிற்கும் உள்ள தொடர்பை உவமைகளாக்கி விளக்குபவர் யார்?
11. 'சீவக சிந்தாமணி' என வழங்கப்பெறும் நூலை எழுதியவர் யார்?
12. சமணத் தத்துவஞ் சார்ந்த காவியம் எது?
13. சச்சந்தனின் மகனின் பெயர் என்ன?
14. சச்சந்தனை கொன்றவன் யார்?
15. சிந்தாமணி யாருடைய கதை சொல்கிறது.
16. சிந்தாமணி என்பதன் பொருள் என்ன?
17. சுரமஞ்சரி என்பாளைச் சீவகன் மணந்து கொண்ட நிகழ்ச்சிகளைக் கூறுவது எது?
18. சச்சந்தன் மனைவி யார்?
19. நாமகள் இலம்பகம் யாருடைய கதை?
20. சீவகனின் நண்பன் யார்?
21. தங்களுக்கு ஒப்ப முகமுடைய ஒரு மடந்தை யார்?
22. ஐந்து மலர்க்கணைகளையுடைய காமன் யார்?
23. சீவகன் எத்தனை பேரை மணந்தவன்?
24. சீவகன் மணந்த பெண்களின் பெயர் என்ன?
25. சீவகன் சுரமஞ்சரியை மயக்க என்ன உருவம் பூண்டான்?
26. சீவகனை அடைய சுரமஞ்சரி நோன்பிருந்த இடம் எது?

27. சுரமஞ்சரி நடை எதற்கு ஒப்புமை?

28. சீவகன் பெற்ற பட்டம் என்ன?

29. சீவகனின் வளர்ப்புத் தந்தை யார்?

30. சீவகனின் தாய் சீவகனை எந்த இடத்தில் விட்டுச் சென்றாள்?

31. கம்பர் காலச் சமுதாயச் சூழலை விளக்குகின்ற காப்பியம் எது?

32. கம்ப இராமாயணத்தின் முரண்பாடு எந்த காண்டத்தில் வெளிப்படுகிறது?

33. யுத்தத்திற்கு முக்கிய காரணம் யார்?

34. இராமன் கும்பகர்ணனைக் கொன்ற செய்தியைக் கூறுவது எதில்?

35. இராமன் தம்பி யார்?

36. கும்பகர்ணன் தம்பி யார்?

37. சீதையை கடத்தியது யார்?

38. வானரப் படைக்குத் தலைவன் யார்?

39. இராவணனுடைய பாட்டன் யார்?

40. வாரைப்படையின் வில்வீரன் யார்?

41. பக்தி இலக்கியங்கள் பரவலாய்த் தோன்றிய காலம் எவ்வாறு போற்றப்படுகிறது?

42. திருத்தொண்டின் சிறப்பை உணர்த்தும் அடியார்களின் உண்மை வரலாறு எது?

43. சேக்கிழாரின் காரணப் பெயர் என்ன?

44. பெரிய புராணம் இயற்றியவர் யார்?

45. பெரிய புராணத்தில் இறைவனின் ஊர்தி எது?

46. காரிகாலர் எந்தக் குடியில் தோன்றியவர்?

47. தேவலோகச் சோலையில் பூக்ககூடிய பூவின் பெயர் என்ன?

48. கோலியாத் என்னும் அரக்கனை வென்றது யார்?

49. தாவீதின் வழியில் தோன்றியவன் யார்?

50. சகோபவனின் மனைவி பெயர் என்ன?

51. வாடாத அணியாகக் கருதி இறைவன் வாழ்த்திய அணி எது?

52. முகமதியர் தமிழுக்கு ஆற்றிய பணிகளுள் தலைசிறந்தது எனக் குறிக்கத்தக்க நூல் எது?

53. செய்கு முகம்மது அலியாரின் மகன் யார்?

54. உமறுப்புலவரின் தந்தை யார்?

55. உமறுப்புலவரின் காண்டம் எத்தனை? அவையாவை?

56. தமிழ் மொழியிலுள்ள தூது இலக்கியங்களை எத்தனை வகைகளாகப் பகுக்கலாம்? அவை யாவை?

57. அரசன் மற்றோர் அரசனிடமும், ஒரு புலவர் அரசனிடமும் அனுப்பும் தூது எது?

58. தலைவன் தலைவியிடமோ, தலைவி தலைவனிடமோ அனுப்பும் தூது எது?

59. தூது விடுக்கப்படும் பொருள் எத்தனை?

60. தூது விடுக்கப்படும் பொருள் ஏதனும் இரண்டு கூறு.

61. 'தமிழ்விடு தூது' எதன்பால் அமைந்தது?

62. முத்தமிழும் ஓதியருளியவர் யார்?

63. பசுவைப் பற்றிய செய்திகளைப் பன்னிரண்டு சூத்திரங்களினால் சிவஞான போதம் என்ற பெயரால் செய்தவர் யார்?

64. மணிவாசகர் பாடிய நூல் எது?

65. பட்டினத்தார் பாடிய நூல் எது?

66. செயங்கொண்டார் பாடியது எது?

67. ஒட்டக்கூத்தர் பாடியது எது?

68. பாக்கள் எத்தனை? அவை யாவை?

69. செய்யுட் சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

70. செந்தமிழ்ச் சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

71. எழுத்தாதியாப்பு எத்தனை வகைப்படும்? அவை யாவை?

72. நாற்கரணம் யாவை?

73. நெறிநாலு யாவை?

74. நாற்பொருள் யாவை?

75. மூன்றினம் யாவை?

76. தளைகள் எத்தனை வகைப்படும்? அவைகளில் இரண்டு கூறு?

77. பொருள்கோல் எத்தனை வகைப்படும்? அவைகளில் இரண்டு கூறு?

78. கவி எத்தனை வகை? அவைகளில் இரண்டு கூறு.

79. அகத்தினை எத்தனை?

80. புறத்தினை எத்தனை?

81. கருவி எத்தனை?

வினாக்கள்

ஒரு பக்க அளவில் விடையளி

1. தேவாரம் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
2. குலேசகரர் தம் பெருமாள் திருமொழியில் குறிப்பிடப் பெறும் இரு புராண வரலாறுகளைக் கூறுக.
3. உலக வாழ்க்கையில் குலசேகரர் வெறுப்புற்றமைக்குரிய காரணங்கள் யாவை?
4. குலசேகரர் தம் பெருமாள் திருமொழியில் திருமொழியில் கையாளப்படும் உவமைகள் இரண்டினை விளக்குக?
5. கண்ணன் அவதாரத்தில் ஆயர்குலப் பெண்கள் கண்ணனோடு ஊடல் கொண்ட இரு நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுக.
6. திருப்புன்கூர்ச் சிவனைச் சுந்தரர் போற்றித் துதித்தமை யாங்ஙனம்?
7. திருக்கச்சி ஏகம்பநாதனைச் சுந்தரமூர்த்தி நாயனார் ஏத்திப் பாடும் திறம் யாது?
8. சுந்தரர் தேவாரப்பதிகங்களில் காணலாகும் பிற மெய்யடியார்களின் வரலாறுகளைச் சுருக்கித் தருக.
9. சுரமஞ்சரியின் உள்ளத்து உறுதி, கருணை உள்ளம் கொண்டவள் - விளக்குக.
10. சீவகனின் பேச்சாற்றல், இசைக்கலைஞன் என்பதை விளக்கு.
11. சீவகன் ஒரு காமதிலகன் எவ்வாறு?
12. வீடணன் கண்ட கும்பகர்ணனின் மன இயல்புகளை விவரி.
13. கும்பகர்ணன் - வதைப்படலத்தின் முக்கியத்துவத்தை விவரி.
14. கும்பகர்ணன் - வீடணன் உரையாடலை விளக்குக.
15. இராமன் - கும்பகர்ணன் உரையாடலை விளக்குக.
16. இராவணனுக்கு மாலியவான் கூறும் அறிவுரைகள் யாவை?
17. மகோதரனின் வீரமொழிகள் இராவணனைப் போருக்கு தயாராக்கியது விவரி.
18. கும்பகர்ணன் - இலக்குவன் உரையாடல் விவரி.
19. இராமனது வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளின் இயல்புகளைப் புலப்படுத்துக?
20. கும்பகர்ணன் இராமனிடத்தில் வேண்டிக் கொண்ட விவரங்களை விளக்குக.
21. அரசனுடன் சென்ற படைகளின் ஆரவாரத்தைச் சேக்கிழார் எவ்வாறு புனைகிறார்?
22. சிவகாமி ஆண்டாரின் துயர்கண்ட எறிபத்தர் யாது செய்தார்?

23. இறைவந்த வரம் இவற்றை விவரி.

24. தாவீதின் நலன்கள் யாவை?

25. தாவீது - சவூர் உரையாடல் விளக்குக.

26. கோலியாத் சினவுரை கூறுக.

27. கோலியாத்தின் தோற்றம் விளக்குக.

28. நாட்டுப்படலம் அணி நயம் குறித்து விளக்குக.

29. நாட்டுப்படலம் வழி அறியலாகும் நாநில வருணனைகளை குறித்து எழுதுக?

30. தோழி - தலைவிக்கு தலைவன் வருதலை பற்றி யாது கூறினாள்?

31. தலைவியின் இரங்கல் செய்திகளைக் கூறுக.

32. செவிலி - நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல் விளக்குக.

33. தலைவனின் வீரச் சிறப்பு கூறுக.

34. தலைவன் தலைவியை வியந்து பாராட்டல் எங்ஙனம்?

வினாக்கள்

மூன்று பக்க அளவில் விடையளி

1. 'சிவபெருமானைத் தோழனாகக் கருதிப் பாடியவர் சுந்தரர்' என்பதனைத் திருநாகைக் காரோணப் பதிக வழி நின்று விளக்குக.

2. திருநொடித்தான்மலைப் பதிகத்தின் சிறப்பினைத் தொகுத்துரைக்க.

3. திருவரங்கத்துத் திருமாலிடம் அளவு கடந்த காதல் கொண்டவர். ஆய்க.

4. குலசேகரர் இராமனிடத்து கொண்ட தீராக் காதலால் தசரனாகவே மாறிப் புலம்பும் பாங்கினை விளக்குக.

5. பெருமாள் திருமொழியின் பத்தாம் திருமொழி சம்பூர்ண இராமாயணத்தின் சுருக்கமாக அமைகிறது - குலசேகரர் வழி குறிப்பிடுக.

6. கண்ணனுக்கும் இராமனுக்கும் தாயாய் இருந்து அவர்களை அனுபவிக்கத் துடித்தவர் குலசேகரர் - விளக்குக.

7. திருவாரூர் எம்பெருமானைக் கண்களாற் கண்டு களிக்கமுடியாமல் 'வாழ்ந்து போதீரே' என மனமுருகி நம்பியாரூரர் பாடிய பான்மையை விளக்குக.

8 சுரமஞ்சரியார் இலம்பகத்தினின்றும் அறியவரும் அக்காலப் பழக்க வழக்கங்களைக் குறிப்பிடுக.

9. சுரமஞ்சரியார் இலம்பகத்தில் காணப்படும் உவமைகள் குறிப்பிடுக.

10. சுரமஞ்சரி - சீவகன் மணத்திறங் கூறுக.

11. சுரமஞ்சரியின் பண்பு நலன்களை விவரி.

12. கும்பகர்ணனின் வதைப்படலத்தை விவரி.

13. கும்பகர்ணனின் வதைப்படலத்தில் காட்டப்படும் போர்க்களக் காட்சியை விவரி.

14. கும்பகர்ணனின் பாத்திரப் படைப்புகளை ஆய்க. கும்பகர்ணனின் பாத்திரப் பண்புகளை புலப்படுத்துக.

15. இராமனிடத்தில் தோல்வியுற்ற இராவணனின் மன இயல்பு அல்லது உற்றக்களை அல்லது புலம்பலை வரையறைப்படுத்துக.

16. கும்பகர்ணன் வதைப்படலம் காப்பியக் கட்டுக்கோப்பினை நெறிப்படுத்துகிறது விவரி.

17. கும்பகர்ணன் வதைப்படலத்தில் அனுமன் பாத்திரப் பண்புகளை விவரி.

18. சிவகாமி ஆண்டாரின் இறைப்பணியும் அதற்கு நேர்ந்த இடையூறும் குறித்து எழுதுக

19. திருத்தொண்டு தடைப்பட்ட சிவகாமி ஆண்டாரின் நிலை எவ்வாறிருந்தது?

20. சிவகாமி ஆண்டாரின் புலம்பலை விவரி.

21. எறிபத்தர் செயலின் எதிர்விளைவுகளாக தொகுத்துரைக்க.

22. தாவீது மன்னனின் சிறப்புகளை விவரி.

23. இறைப் பற்றாளனின் வெற்றிகளை தொகுத்துரைக்க.

24. சூசையின் பிறப்பு அல்லது சூசையை வாழ்த்திய முறையை விளக்குக.

25. சூசையின் தாயடைந்த சிறப்புகளை விளக்குக.

26. சீறாப்புராண நாட்டுப்படலம் - காப்பிய முக்கியத்துவம் பெறுமாவற்றை விளக்குக.

27. நாட்டுப்பட்ல வழி உமறுப்புலவரின் கற்பனைத்திறனை மதிப்பிடுக.

28. நந்திக் கலம்பகத்தில் வரும் தோழி கூற்றினை விவரி.

29. நந்திக் கலம்பகத்தில் வரும் தலைவன் கூற்றினை விவரி.

30. நந்திக் கலம்பகத்தில் வரும் தலைவி கூற்றினை விளக்குக.